பெரி. மலைமன்னன்
பேரூர் செயலர்
தி.மு.க. - அரிமழம்
புதுகை

# குமரன்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு —திருக்குறள்.

ங்கை ௯ 9 } காரைக்குடி பிரமோதூத-ௗு ஆடி-மீ { மணி க 1

1930 ஜூலை - ஆகஸ்ட்


## விடுதலை.

விடுதலை! விடுதலை! விடுதலை! விடுதலை!

பறையருக்கும் இங்குதீயர் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை
திறமைகொண்ட தீமையற்ற தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே.

ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே
வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே.

மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்து[வோம்
வையவாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே.

இது பாரதியார் கீதங்களுள் அமுதொழுகுங் கீதமாகும். முக்[தி]யென்பதும் மோக்ஷமென்பதும் விடுதலை யென்பதும் இறந்த[பின்னர்]கே கிடைக்குமென்ற பார்ப்பனக் கொள்கையை, "செத்த[பிறகு] சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணி[யிருப்]ப்பார் பித்தமனிதர், அவர் சொலும் சாத்திரம் பேயுரையாம் [என]று இங்கு ஊதேடா சங்கம்" என்று கூறி மறுக்கும் பாரதி[யார்], விடுதலையென்பது இந்திய நாட்டு மக்கட்கு எதனால் வரு[மெ]ன்பதை மேற்குறிப்பிட்ட பாட்டில் அழகாக விளக்குகிறார்.

எல்லாமக்களும் பேதமின்றித்தீமையற்ற தொழிலைத் திறமையா செய்வதாலும், அப்படியே தேர்ந்த கல்வி ஞானம் பெறுவதாலு விடுதலை பெறலாமென்கிறார்; ஜாதியினால் ஏழையென்றும் அடிமை யென்றும் கருதுவதொழிந்து மனிதர் யாரும் கல்வியும் செல் மும் பெற்று ஒருநிகர் சமானமாக வாழ்வதில் விடுதலை கிடைக் மென்கிறார்; மாதரை இழிவுசெய்யும் மடத்தனம் ஒழிந்து அவ கள் அடிமையென்ற எண்ணம் ஒழிந்து ஆணும்பெண்ணும் சரிநிக சமானமாக வாழ்வதில் விடுதலை பெறலாமென்கிறார். இம்மூன்றும் சேர்ந்தால் முழுவிடுதலை — அதுவே முக்தி — அதுவே மோக்ஷம் என்பது கவியின் கருத்து. செத்தபிறகு மோக்ஷமுண்டென்பது பித்தலாட்டமென்று பாரதி கூறுவது இந்த நாட்டிலுள்ள பல ருக்கு வியப்பாக இருக்கலாம். என்றாலும் உண்மை உண்மை தானே!

---

# சுயமரியாதை இயக்கம்.

---

சுயமரியாதை இயக்கமானது நாட்டிற் பரவி வருகின்றது. பல நாள் ஒரு வழியில் சென்று கொண்டிருந்து அது வழக்கமாகி விட்டமனிதர்கள் புதியதொரு இயக்கத்தைக்காணும்போது அச்ச முறுவது இயற்கையேயாகும். அவ்வாறே இன்று பரவிவரும் சுய மரியாதை இயக்கத்தைக்கண்டு பலர் அஞ்சுவதில் வியப்பொன்று மில்லை. ஆரியசமாஜம் பிர்மசமாஜ இயக்கங்கள் பரவும்போதும் பிர்மஞானக் கொள்கை பரவும்போதும் அவ்வியக்கங்களால் நமது சமயமே அழிந்து போகுமென்றும், ஆபத்து வந்துவிடுமென்றும் பலர் பயந்தனர். சுயராஜ்ய இயக்கந்தோன்றும்போது பயந்து அதனை அழிக்க முற்பட்டார் பலர். விதவாவிவாகம் சமபந்திபோ ஜனம் தீண்டாதவருடன் சமமாக இருத்தல் போன்ற பலவிஷய களைக்கைக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பரவ ஆரம்பிக்கும் போது இவற்றால் என்னென்ன கஷ்டங்கள் விளையுமோவென்று பயந்தோர் எண்ணற்றோராவர். என்றாலும், அக்கொள்கைகள் ந ளுக்கு நாள் அதிகப்பட்டே வளர்ந்து வருகின்றன. அவ்வளர்ச்சி யால் ஒரு தீமையும் நேரவில்லையென்பதை யாவருங்கண்டு வருகிறோம். எங்கே அநீதியுங்கொடுமையும் வளர்ந்தோங்கி முதிர

து நிற்கின்றனவோ, அவ்விடத்தில் அழிவுவேலை துவங்குகின்றது. யார் தடுத்தாலும் எத்தனை பேர் பயந்தாலும் அவ்வழிவு வேலை நிற்பதில்லை. மக்களின் சமூக வாழ்வில் சிலருடைய சுயநலம் புகுத்தப்பட்டு அவை பெரிதாகி சமூக வாழ்வின் நோக்கத்தையே குலைக்கும்படியான நிலைமை யேற்படுமானால் அவ்விடத்தில், இயல்பாகவே மாற்றம் தோன்றிவிடுகிறது. அம்மாற்றத்திற்கான வழிகளையும் அதற்கு முன் நிற்கும் மக்களையும் கண்டு பலர் பயப்படலாம்; எதிர்க்கலாம். என்றாலும், அக்கொள்கைகள் கடைசியில் வெற்றி பெறுதல் திண்ணமாகும்.

பல காலங்களில் பல ஆசாரியார்கள் பலவகையான திருத்தங்களைச் செய்ய முன்வந்தனர். சமய உலகிலும் சீர்திருத்தம் செய்ய எண்ணற்றோர் தோன்றினர். இயன்றவரை ஒவ்வொருவரும் திருத்தஞ்செய்தனர். ஒருவர் செய்த திருத்தத்தையாவது எல்லா மக்களும் சேர்ந்து ஒப்புக்கொண்டது கிடையாது. ஆனால் எல்லாருஞ் சேர்ந்து எதிர்த்து அழித்ததுமில்லை. எனவே சீர்திருத்த நெறிகளை உலகுக்கு அறிவுறுத்த முன் வருபவர் சாதாரண மக்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சி முடியாது. பொது ஜனங்கட்கு ஆராய்ச்சியறிவு அரும்பும் வரை இந்த எதிர்ப்பு இருந்துதான் தீரும். அவ்வறிவு தோன்றாதிருக்கும்படி வைதீகர்களும் ஏனைய சுயநலக்காரரும் அரும்பாடுபடுவரென்பதிலும் ஐயமில்லை. இம்மாதிரியான போராட்டத்திற்கிடையில் இன்று சுயமரியாதை இயக்கம் அகப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்திற்கு இன்றிருக்கும் சக்தியெல்லாம் இதிலுள்ள 'உண்மை' யொன்றிலேதா னிருக்கிறது. பல நூற்றாண்டுகளாக புராணம் ஆசாரம் வைதீகம் நம்பிக்கை மதம் கடவுள் என்னும் பேரால் வண்டிக்கணக்கான குப்பை கூளங்களைக்கொட்டி உண்மையறிவைப் புதைத்து விட்டனர். மேலும் மேலுங் குப்பை கொட்டப்பட்டே வருகின்றது. அதை வெட்டிப் பிரிப்பது பாவ மென்றும் அதன் மேல் இன்னும் குப்பையைக் குவிப்பது புண்ணியமென்றும் நம்பும்படி பொது ஜனங்கள் பயிற்றப்பட்டிருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும். தைரியமாகச் சிலர்சென்று குப்பையை வெட்டிப்பார்க்க முயலல் வேண்டும். இன்னும் குப்பை கொட்டிவருவது தடுக்கப்படவேண்டும். உள்ளே ஏதாவது இருக்கிறதா இல்லையா என்பதை அறிதல் அவசிய

மென்ற உணர்வைப் பொது ஜனங்கட்கு உண்டாக்கவேண்டும். 'உண்மைகாண்டல்' என்பது மக்களுக்கு இன்றியமையாததென்பதை மக்கள் உணரும்படி செய்தல்வேண்டும். மனிதன் இந்த நாட்டில் உண்மையறிவை இழந்து விட்டான். பலவகைப்பட்ட குப்பை கூளங்களால் அவன் அறிவு புதைந்து போய்விட்டது. அடிமையாகிவிட்டான். எந்த இடத்திலும் அவன் அடிமையாகவே வாழ்கிறன். புரோகிதனும் புராணமும் கடவுளும் கோவிலும் ஆசாரமும் வைதீகமும் மூடநம்பிக்கையும் மனிதனை இந்நாட்டில் பாழாக்கிவிட்டனவென்றல் அது மிகையாகாது. "இத்தனைக்கு மிடையில் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ந்து நல்வாழ்வு வாழ்" என்று சுயமரியாதை இயக்கம் சொல்கிறது. இதனைக்கண்டு மிரண்டு "மதம் போச்சு! கடவுள்போச்சு!" சாஸ்திரம்போச்சு!" என்று சத்தம் போடுவதாலும், "நாஸ்திகர்கள்! மதவிரோதிகள்! ஐயோ! அப்பா!" என்று கூச்சலிடுவதாலும், ஆம் பயனென்றுமில்லை. இவ்வியக்கக்காரர்கள் கூறுவதில் காணப்படும் தவறென்னையென்பதையும் தாங்கள் கூறும் சமாதானம் என்னவென்பதையும் அறிய நாமும் ஆசைப்படுகிறோம். சைவரோ வைணவரோ மற்றவரோ தாங்கள் கொள்பவைகளைப்பற்றிச் சுயமரியாதைக்காரர் தாக்கு மிடங்களில் தக்க காரணம் சொல்லிச்சமாளிக்க வகை இன்னும் கண்டாரில்லை. "எங்கள் மூதாதையர் வழக்கம்! அவர்கள் அறிவாளிகள்! அவர்கள் கண்டவற்றில் பொய்யிருக்கமுடியாது! நம்பவேண்டும்!" என்பதைத் தவிர நேருக்கு நேராகக்காட்டும் சரக்கு ஒன்றையுங்காண முடியவில்லை. மனிதன் முட்டாளாக இருக்கிறவரை இந்த வேலை நடைபெறக்கூடும். அறிவு வளர வளர உண்மைகாண முயல்வது இயல்பு. உண்மை காண விரும்பும்போது எதையும் வறிதே நம்பமுடியாது. விசாரிக்கவேண்டிநேருதல் திண்ணம். அப்பொழுது இந்தப் பொய்க்கட்டிடங்கள் மடமடவென்று இடிந்து தகர்ந்து போவதைத் தவிர வேறுவகையுண்டோ? "நான் சொல்வதைக்கேள்! எழுதிவைத்ததை நம்பு! விசாரியாதே!" என்னும் கதையை விட்டுவிடவேண்டியகாலம் வந்துவிட்டது. இனி ஒவ்வொன்றுக்கும் அநுபவ பூர்வமாகக்காரணம் காட்டினலன்றி முடியாதென்பதைப் பழய ஆசாமிகள் உணர்தல் அவசியமாகும்.

சுயமரியாதை இயக்கத்தினர் சொல்வதைச் சொல்லட்டும் கேட்பதால் ஒன்று முழுகிவிடாதென்ற பெருந்தன்மையான எண்ணம் ஏனையோர் மனத்தில் தோன்றவேண்டும். என்ன சொல்கிறார்களென்பதைக் கேட்பதற்குள்ளாகவே 'எல்லாம் போச்சு' ஓ வென்று சத்தமிடுவதில் நல்ல பயனொன்றும் விளைந்து விடாது. சுயமரியாதை இயக்கத்தினர் சொல்லுவதை ஏனைய சமயசமூக வாதிகள் கேட்டு அதற்குத் தக்கபதில் சொல்லுவதே நேர்மையாகும். நெடுநாளாக சீர்திருத்தப்பெறாது பல மாதிரியான மக்களுள் தலைவனின்றி வளர்ந்து வந்துள்ள எண்ணற்ற வழக்கங்கள் மக்களைத் துன்பக்கடலில் அமிழ்த்தியிருக்கின்றன. இதனை எவரும் மறுக்க முடியாது. சுயமரியாதை இயக்கக்காரர் சிறிது 'பச்சை வெட்டாகச்' சொல்லுகிறார்கள். அதனால் கடவுளால் ஏற்பட்ட கொள்கைகள் இடிந்து விழுந்து விடமாட்டாவென்பதை பழயவர்கள் நம்பவேண்டும். இந்த நம்பிக்கையின் மேல் அவர்கள் பேச்சைக்கேட்பதென்றால் பயப்படவாவது கோபப்படவாவது வழியிராதன்றோ?

---

# புராணம் உண்மை!

## முக்திக்குக் குறுக்குவழி.

அஞ்சா நெஞ்சன் எழுதுவது.

நாஸ்திகம் தோன்றிவிட்டது. ஆஸ்திகம் குன்றிவிட்டது. மதத்தைப் பலர் அழிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சைவ மடங்களும் வைணவ மடங்களும் மோன நிலை யெய்திவிட்டன. மதவாதிகள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு கிடக்கின்றனர். என்னால் சகிக்கமுடியவில்லை. நம்முடைய ஒப்புயர்வற்ற வேத சாஸ்திர புராண இதிகாசங்களில் கூறப்பட்டிருக்கும் அருமையான உண்மைகளை யெடுத்து மக்கட்கு விளக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டதென்பதில் தடையில்லை. இந்த சமயத்தில் புராணங்களிலுள்ள மேன்மைகளையும், முக்தி யடைவதற்கு நமது முன்னோர்கள் அரும்பாடு பட்டுக் கண்டுபிடித்துத் திரட்டி வெண்ணெபோல அளித்திருக்கும் ஞானாமிர்தத்தையும் வெளிப்

படுத்தி, ஆஸ்திக மக்களையும் நாஸ்திக மக்களையும் ஒருவழிப்படுத்தி நாட்டையும் சமயத்தையும் மேன்மையுறச் செய்யும் பணியில் நான் இறங்கிவிட்டேன். முதன்முதலாக திருவிளையாடற் புராணத்தில் என்னுடைய பார்வையைச் செலுத்த முனைவு கொள்கிறேன்.

மதுரையம்பதியானது சாதாரணமான ஸ்தலமல்ல. புண்ணியபூமி யென்றும் கர்ம பூமியென்றும், ஞானபூமியென்றும், ஞானிகளாலும் ரிஷீஸ்வரர்களாலும் புகழப்பட்ட அற்புத பூமியாகிய இந்தப் பாரததேசத்தில் மதுரைப் பழம்பதியானது இருப்பதே நாம் செய்ததும், நம் முன்னோர் செய்ததுமான தவப்பயனாகும். பூலோகத்திலுள்ள எல்லாத் தலங்களையும் உண்டாக்கும் பொருட்டு முதன்முதலில் இந்த மதுரைமாநகரை உண்டாக்கி, அதிலிருந்துகொண்டுதான் மற்ற தலங்களை உண்டாக்கினதாகத் திருவிளையாடற் புராணங் கூறுகிறது. இப்படிப்பட்ட தலபுராணத்தி லிருந்து நமது மக்கட்கு எளிதாக முக்தியடையும் மார்க்கத்தை முதலில் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

## தலவிசேடம் ௩-ம் பாட்டு.

“சைவதல மதிகம் அவற்றுள் அறுபத்தெட்
டதிகம் அவைதமில் ஈரெட்டுத்
தெய்வதல மதிகம் அவற்றதிகம் நான்கு”

## ஷை ௪-ம் பாட்டு.

அன்னமலி வயற்புலியூர் காசிநகர் காளத்தி
ஆலவாயாம்
இன்ன வளம்பதி நான்கில் திருவாலவாய்
அதிகம் எவ்வாறென்னில்
மின் அவிர் அம்பலம் காண, காசிநகர்
வதிந்திறக்க, வியன் காளத்திப்
பொன்னகரம் பக்தியினல் வழிபாடு
செய அளிக்கும் போகம் வீடு.

## ஷை ௫-ம் பாட்டு.

அறந் தழையுந் திருவாலவாய் கேட்டவுடன்
போகமளிக்கும் மீண்டு
பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும்.

என்று கூறுகிறது. தலங்களில் சைவதலம் சிறந்தது; அவற்றுள்ளும் 68 சிறந்தன; அவற்றுள் 16 சிறந்தன. அவற்றுள் 4 சிறந்தன. அவை சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை என்பனவாகும். இந்த நாலில் சிதம்பரமானது தன்னை வந்து பார்த்தவருக்கு மட்டுந்தான் முத்தியைக் கொடுக்கும். காசியானது அத் தலத்தில் இறந்தால்தான் அவருக்கு முத்தியைக் கொடுக்கக்கூடும். திருக்காளத்தியானது தன்னிடம் வந்து பக்தி செய்தால் முக்தி கொடுக்கும் பவருள்ளதாக இருக்கிறது. இவைகளால் முக்தி பெற விரும்புவோர்க்குக் கஷ்ட மதிகமாக இருக்கிறது. காசி நகரின் மூலமாக முக்தி பெறுவதென்றால் இங்கிருந்து நீண்ட தூரம் சென்று சாவை எதிர்பார்த்து வேற்றாருக்கும் செல்லாமல் காத்திருந்து இறந்து அப்பால் முக்தியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. மனைவி, மக்கள், சுற்றத்தார், வீடு, பொருள், மாடு, கன்று முதலிய எல்லாவற்றையும்விட்டு குளிர் தேசத்தில் குடியேறியிருப்பது பலருக்கும் கஷ்டமாக இருக்குமல்லவா? சிதம்பரத்திற்குச் செல்வதென்றால், மோட்டார் சார்ஜ், ரயில் சார்ஜ் கொடுத்து கஷ்டப்பட்டு S. I. R. ரயிலிலேறி அங்கு சென்று தீக்ஷிதர்க்குக் காணிக்கை செலுத்திப் பார்த்து முக்தி கிடைக்கவேண்டியிருக்கிறது. திருக்காளத்தி வெகு கஷ்டமானது. தமிழ் நாட்டுக்கு சமீபமில்லை. ரயில் சார்ஜ்வகையறாவோடுகூட பூஜை முதலிய வழிபாடுகள் தவறாமல் செய்ய வேண்டியிருக்கிறது. அது வெகு கஷ்டம். ஆதலால் இந்த வேலையெல்லாம் வேண்டாம். காசி நகர்க் கேகவேண்டாம்: காளத்தி நண்ணவேண்டாம்; சிதம்பரம் செல்லவேண்டாம்; வேறு எங்கும் போக வேண்டாம். உங்கட்கு வேண்டியதென்ன? "மதுரை" என்று கேட்டால் முக்தி சித்திக்குமென்று திருவிளையாடற் புராணம் சொல்லுகிறது. அன்பர்களே! இதை நம்ப வேண்டும். நீங்கள் உண்மையிலேயே முக்தியை விரும்பினால் 'மதுரை' யென்று ஒருவரைச் சொல்லச்சொல்லிக் கேட்டுவிடுங்கள். எளிதான வழியைக் காட்டிவிட்டேன். இச் சொல் நானாகப் புனைந் துரைத்ததல்ல.

புராண வரலாறு கச, கரு, சகூ-ம் பாட்டுகள்.

இன்ன வாறனுள் சங்கர சங்கிதை யென்று
சொன்ன நூலினை உணர்த்திடுன் சங்கரன் துணைவிக்கு
அன்ன போது அவள் மடியினில்இருந்து கேட்டு அதனை
மின்னு வேல்பணி கொண்டவேள் வெளிப்பட வுணர்ந்தான்

குன்றெ றிந்தவேள் வழிபடு குருமுனிக் குரைத்தான்
அன்று தொட்டஃது அகத்திய சங்கிதை யாகி
நின்றது அன்னது கேட்பவர்க்கு அரனடி நீழல்
ஒன்றும் இன்பவீடு அளிப்பதா ஒருதலன் உரைக்கும்

அதிக அப்பதி யாதெனில் ஆலவாய், கேட்கக்
கதியளிப்பது ... ... ... ... ... ... ... ... ...

இப்படிப் பரமசிவனுல் பார்வதிக்குச் சொல்லப்பட்டு, அம்மையாரின் மடியிலிருந்து பால் குடித்த குமரக் கடவுள் கேட்டுத் தமதுஉத்தமசிஷ்யனுன அகத்தியனுக்குச்சொல்ல,அகத்தியன்உலக மக்களிடம் கொண்ட பேரன்பினுல் வெளிப்படுத்தி யிருக்கிறுர். இந்த உண்மை நமக்குத் தெரிந்தபிறகு முக்திக்காக வேறிடம் செல்வதும், அலைவதும், கோவில்கட்குச் செல்வதும், பணத்தைச் செலவிடுவதும் பயித்தியக்காரத்தனமாகுமல்லவா? எனது நேயர்களே! புராணத்தை நம்புங்கள்! கடவுள் வாக்கை நம்புங்கள்! எல்லாத் தலங்களிலும் எப்படி மதுரைத் திருத்தலம் சிறந்ததோ, அப்படியே எல்லாப் புராணத்திலும் சிறந்தது திருவிளையாடற் புராணமென்பதை மறவாதீர்கள். முக்தி வேண்டுமானுல் காலணு செலவில்லை; கஷ்டமில்லை; அலைச்சலில்லை; சுயமரியாதைக்காரருடன் சண்டையில்லை. சாஸ்திரத்திற்கு விரோதமாகப் போகவேண்டியதில்லை. 'மதுரை' 'மதுரை' நம்முடைய காதிற் கேட்கும்படி வாயால் சொல்லிவிடுங்கள். ஒருதரத்திற்கு இரண்டு தரமாக. முடியாவிட்டால் நம்முடைய வேலைக்காரனைச் சொல்லச்சொல்லிக் கேட்டுவிட்டால் முடிந்தது வேலை. இதைவிடச் சுலபமாக முக்தி பெறமுடியாது. இது தான் குறுக்குவழி. இதை யாராவது மறுக்க முன்வந்தால் அவர்தான் நாஸ்திகர்; அவர்தான் வேத சாஸ்திர புராண இதிகாசங்களை நம்பாத பதி

தர்; அவருக்கு ஒருநாளும் முக்தி கிடையாது; எந்தச் சைவ சித்தாந்தியாவது நான் இந்தச் சுருக்கமான வழியை சாஸ்திர ஆதாரத்துடன் மறுக்க முன்வருமாறு அறை கூவி அழைக்கின்றேன். முன்வரட்டும். வர வலியில்லாது போனால் வாய்மூடிக் கிடக்கட்டும். உலகிலுள்ள எல்லாரும் ஏழை பணக்காரரென்ற பேதமின்றி எளிதாக முக்தியடையும் வழியைக் கடவுளே கூறியிருக்கும்போது சில சுயநலக்காரர் ஏமாற்றிப் பணம் பறிப்பதென்றால் அதைப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது.

# தேங்காய் மூடி.

மிஸஸ் ஜானகி எழுதுவது.

அடுத்த வீட்டு சுப்பம்மாளுக்கு வயது இருபத்தெட்டிருக்கும். எனக்கு வயது பத்தொன்பது ஆகிறது. கல்யாணமாகி அழைத்துவந்து ஆறுமாதந்தானகிறது. மாமியாளில்லை. வந்தது முதல் சுப்பம்மாள்தான் துணையாக இருந்துவருகிறாள். இதனால் நாங்கள் சிநேகமாக இருந்து வருகிறோம். வேலைகள் முடிந்தவுடன் இருவரும் ஓலைப்பெட்டி முடைவதுண்டு. இல்லாவிட்டால் பருப்பு அரிசி முதலியவைகளிலுள்ள கற்களைப்பொறுக்கிச் சுத்தஞ் செய்வோம். சில சமயத்தில் ஒரு வேலையும் பாராமல் ஊர்வம்பு பேசித் தீர்ப்பதுமுண்டு. ஒரு நாள் இருவரும் வம்பளந்து கொண்டிருக்கும்போது அதிர்வேட்டுக் கேட்டது. இன்று என்ன விசேஷம் என்று சுப்பம்மாளைக் கேட்டேன். சுப்பம்மாள் "இன்று வைகாசி விசாகம்; சுப்பிரமணியர் பிறந்தநாள்; கோயிலுக்குப்போய் சாமி கும்பிட்டால் அதிகமான புண்ணியமுண்டு; நான் போகப்போகிறேன்; நீயும் வருகிறாயா?" என்றாள். நான் தாயார் வீட்டிலிருக்கும்போது பெரியமனுஷி யாகுமுன் கோயிலுக்குப்போயிருக்கிறேன். பிறகு போகக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். இன்று நாம் இருவரும் போவோம் என்றேன்.

மாலை 5 மணிக்கு இருவரும் கோயிலுக்குப்புறப்பட்டோம். கோயில் வாசலுக்கருகில் ஒரு துலுக்கன் தேங்காய்க்கடை வைத்திருந்தான். அங்கு சுப்பம்மாள் சென்று தேங்காய் விலையென்ன

என்று கேட்டாள். கடைக்காரன் "அது ஒரு அணு; இது ஒன்றே காலணு; அப்பால் கிடப்பது முக்காலணு" என்றான். சுப்பம்மாள் ஒன்றேகாலணுக் காயை எடுத்துக்கொண்டு முக்காலணுவைக் கொடுத்தாள். கடைக்காரன் 'தரமுடியாதம்மா. ஒன்றே காலணுவுக்கு ஒரு தம்பிடி குறைந்தாலும் தரமுடியாது. இஷ்டமிருந்தால் வாங்குங்கள். இல்லாவிட்டால் போங்கள்' என்றான். சுப்பம்மாள் சரி நீ சொன்னபடி வாங்கிக்கொள் என்று ஒரு அணுவைக்கொடுத்தாள். கடைக்காரன் அதன்விலை ஒன்றேகாலணு இஷ்டமில்லாவிட்டால் கீழே வை என்றான். சுப்பம்மாள் அந்தக்குவியலில்தான் நான் எடுத்தேன். அது ஒரு அணு என்றுதான் நீ சொன்னாய். இப்பொழுது மாறிப்பேசுகிறாய் என்றாள். கடைக்காரன் அதெல்லாம் இல்லை இப்பொழுது வேறொரு காயை ஒரு அணு குவியலில் எடுத்துக்கொள் என்றான். சுப்பம்மாள் எல்லாவற்றையும் புரட்டிப்பார்த்து இருந்ததில் பெரிதாக ஒரு காயை எடுத்துக்கொண்டு ஒரு அணு கொடுத்தாள். அடுத்த கடையில் வந்து இரண்டு வாழைப்பழம் வாங்கினாள். அங்கும் இப்படியே சண்டை. அழுகலென்றும் பழுக்கவில்லையென்றும் சின்னமாக இருக்கிறதென்றும் அரைமணிநேரம் வழக்குப்பண்ணி இரண்டு பழத்தை 5 தம்பிடிக்கு வாங்கினாள். இப்படியே வெற்றிலைக்கடையிலும் கழித்துக் கழித்து அழுகலில்லாமலும் பெரிதாகவும் பார்த்து ஒரு தம்பிடிக்கு வாங்கினாள். பாக்கு கொண்டுபோயிருந்தோம். ஒரு தம்பிடிக்கு சூடம் வாங்கினாள். அதில் மட்டும் அவள் சண்டைபோடவில்லை. அவனும் கொஞ்சம் சூடம் வைத்து மடித்து வைத்திருந்தான். இவைகள் வாங்கிமுடிய மணி 6-30 ஆகிவிட்டது. கோவிலினுள்ளே சென்றோம். அங்குள்ள திருக்குளத்தில் கால் கைகளை சுத்தம் செய்துகொண்டு சன்னிதானத்திற்குச் சென்றோம். அதிகமான கூட்டம். உள்ளே யிருந்து ஒரு ஐயர் ஒருதாம்பாளத்தை நீட்டி இதில் அர்ச்சனை செய்கிறவர்கள் தேங்காயை வைக்கலாம் என்றார். சுப்பம்மாள் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு சூடம் ஆகியவற்றை அதில் வைத்தாள். அந்த ஐயரை இன்றைக்கு நினைத்தாலும் வாந்தியெடுக்க வருகிறது. கறுப்பிலுங் கறுப்பு எண்ணைக்கறுப்பு. காற்றில்லா இடத்தில் சூடப்புகையில் நின்று வெயர்வை வழிந்து ஓடு

கிறது. வேட்டிமுழுமையும் நனைந்து தண்ணீராக வடிகிறது. இந்த லட்சணத்தில் ஸ்நானஞ்செய்து சுத்தமாகவும் அழகாகவும் நிற்கிறவர்களைப்பார்த்து மேலே படாதே ஒத்திப்போ ஒத்திப்போ என்று சொன்னது எனக்கு வேடிக்கையாக இருந்தது. ஐயர் தட்டை எடுத்துக்கொண்டு உள்ளே போனார். சூடப்புகைதான் தெரிந்தது; சுவாமியுந்தெரியவில்லை ;உள்ளே போன ஐயரையும் தெரியவில்லை. கூட்டம் அதிகமாகிவிட்டபடியால் நாலுபுறமும் நெருக்கித்தள்ளினார்கள். தப்பிப்பிழைத்தது போதுமென்று வெளியில் வந்தோம். ஐயர் தயாராக ஒரு தூணுக்குப்பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். பல பெண்களும் புருஷர்களும் வந்து கூடினார்கள். ஐயர் ஒவ்வொருவருக்கும் தேங்காய்மூடி பழம் முதலியவற்றில் தமக்கொன்றெடுத்துக்கொண்டு ஒவ்வொன்றைக்கொடுத்தார். ஒரு புஷ்பச்சரம் தாம்பாளத்தில் இருந்தது. அதை ஒரு ஆண்பிள்ளை வாங்கிக்கொண்டார். மற்றொரு பெண் இந்தப்பூ நான் கொடுத்தது என்றாள். அதற்கு அவர் நான்தான் கொடுத்தேன் என்றார். ஐயர் இருவரும் பூச்சரம் வைத்ததாகத்தான் ஞாபகமிருக்கிறதென்றார். பெண்கள் கொண்டுவருவதை ஆண்பிள்ளைத் தடியன்கள் இப்படித்தான் எடுத்துக்கொள்வது வழக்கம் என்று பெண் சொன்னாள். அவர் அந்தப் பூச்சரத்தை அந்தப் பெண்ணின் முகத்தில் வீசியெறிந்துவிட்டு போ நாயே என்று சொல்லிக்கொண்டே சென்றார். இந்தச்சச்சரவு அரைமணி நேரம் நடந்தது. ஐயர் அவசரப்படுத்தினார். நானும் சுப்பம்மாளும் இதைப்பார்த்துக்கொண்டு திரும்புவதற்குள் மற்றவர்கள் தேங்காய் மூடிகளை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். எங்களுக்காக ஒரு தேங்காய் மூடியும் ஒரு வாழைப்பழமும் வெற்றிலை பாக்கும் தாம்பாளத்தில் இருந்தன. சுப்பம்மாள் அதைப்பார்த்துத் தான் வாங்க முடியாதென்றும், அவை தன்னுடையதல்லவென்றும் வாதாடினாள். ஐயர் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். சுப்பம்மாள் கேட்கவில்லை. நாளைமுதல் அர்ச்சனைக்குத் தன்னிடம் வரமாட்டாளென்று ஐயர் பயந்து தன்னுடைய பங்கிலிருந்து பெரிய வாழைப்பழமாக ஒன்றை எடுத்துக்கொடுத்தார். பெரிய நல்ல வெற்றிலையும் பாக்கும் கொடுத்தார். தேங்காய் மூடி மிகச்சின்னதாக இருந்தது. அவரிடமுள்ள மூடிகளை மாற்ற முடியவில்லை. காரணமென்

னவென்றால் அவையாவும் கண்மூடிகளல்ல. எல்லாம் தூர்ப்பக்கத்தி மூடிகளாகவே இருந்தன. கண்மூடிதான் வேண்டுமென்றும் அதுவும் பெரிதாக இருக்கவேண்டுமென்றும் சண்டை போட்டாள். வம்பு ஒழிவதாக இல்லை. அர்ச்சனைக்காசுகூடத் தனக்கு வேண்டாமென்றும் ஆளைவிட்டாற்போதுமென்றும் ஐயர்சொன்னார். அர்ச்சனைக்காசு கொடுக்காவிட்டால் பலன் தனக்குக் கிடைக்காதாதலால் அது முடியாதென்று சுப்பம்மாள் சொல்லி அர்ச்சனைக்குக் கூலியான அரையணாவைக் கொடுத்துவிட்டாள். ஐயர் சென்று யாரிடமோ அந்த சின்ன மூடியைக்கொடுத்து ஒரு பெரிய மூடியைக் கொண்டுவந்து கொடுத்தார். வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம். வழியில் வரும்போதே அந்த மூடியைக்கீறி எனக்கு ஒரு பங்கு தந்தாள். பழத்திலும் வெற்றிலை பாக்கிலும் ஒரு பகுதி தந்தாள். வாங்கிக்கொண்டு வீடு போய்ச்சேர்ந்தேன். என் கணவனுடன் நடந்ததெல்லாம் சொன்னேன். அவருக்குக் கோவில் என்றால் பிடிக்காது. இந்த ஒரு நாளைய வியாபாரத்தோடு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. மறுநாள் காலையில் சுப்பம்மாள் வந்தாள். ஒருநாளும் காலையில் வரமாட்டாயே இன்று என்ன அவசரம் என்று கேட்டேன். "ஒன்றுமில்லை; நேற்று சாமி கும்பிட்ட செலவு நீ தரவேண்டுமே; அதைக் கேட்கத்தான் வந்தேன்" என்றாள். எவ்வளவு என்றேன். ஒரு அணா ஒரு தம்படி என்றாள். செலவெல்லாம் இரண்டணா ஒருதம்படியானது எனக்குத் தெரியும். பங்கு பிரிக்கும்போது எனக்கு ஒரு தம்படி கூடக்கணக்குப் போடுகிறாள். தேங்காயும் பழமும் எனக்கு மூன்றில் ஒரு பங்குதான் தந்தாள். அர்ச்சனையில் எனக்குப்பாதி யென்று முதல் நாள் சொல்லவுமில்லை. ஐயரிடத்தில் அர்ச்சனைக்குப் பேர் சொல்லும்போது சுப்பம்மாள் என்ற பேருக்குச் செய்யச்சொன்னாள். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது எனக்குக் கோபம் அதிகமாக வந்துவிட்டது. 'போடி' வெளியே என்றேன். அவள் காசைத்தருகிறாயா இல்லையா என்றாள். பேச்சு வளர்ந்துவிட்டது. இப்படிப் பட்டியாக இவள் இருப்பாளா என்று சுப்பம்மாள் என்னைச் சொன்னாள். நான் அவள் கதைகளை அவிழ்த்தேன். அடுத்த வீட்டுச்சண்டை ஆறுமாதமென்றபடி நாள் தோறும் சண்டையாகவே இருந்தது. என் கணவன் சண்டைக்குப்பயந்து தேங்காய்

முடிக்கு உள்ள காசைக்கொடுத்துவிட்டார். என்றாலும் சண்டை ஒழியவில்லை. ஆதலால் வேறு வீடு பிடித்துக்கொண்டு போய்விட்டோம். சண்டையும் ஒழிந்தது.

---

# பெண்கள் இயக்கம்.

---

விருதுநகர் நாடார் பரிபாலன சங்கம் ஆண்டுவிழாவில் ஸ்ரீமதி மரகதவல்லியார் "பெண்கள் இயக்கம்" என்பதுபற்றிப் பேசியதின் சுருக்கம் பின்வருமாறு:—

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இன்று "பெண்கள் இயக்கம்" என்பது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டிலே "பெண்கள் இயக்கம்" ஒழுங்காக நடைபெறவில்லை மேல் நாட்டில் இந்த இயக்கம் நன்றாக நடைபெறுவதனால் அந்நாட்டுச்சகோதரிகள் முற்போக்கடைந்திருக்கிறார்கள். மேல் நாட்டில் ஒரு சகோதரியையும் நம் நாட்டில் ஒரு சகோதரியையும் கவனித்துப்பார்ப்போம். மேல்நாட்டுச்சகோதரிகள் ஆண்களைக்காட்டிலும் ஒவ்வொரு இயக்கத்திலும் முன்னேறியிருக்கிறார்கள். ஏரோப்ளேனில் பறக்கவும் மைல்கணக்காகக் கடலில் நீந்தவும் மோட்டார் சைக்கிளில் செல்லவும் துப்பாக்கியடிக்கவும் திறமையான சகோதரிகள் மலிந்திருக்கிறார்கள். இந்தியாவில் ஆண்கள் கற்றிருக்கமுடியாத அளவு மேலாகக் கற்றிருக்கிறார்கள். இன்னும் பல அரிய வேலைகளைச் செய்யச்சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். நமது இந்திய நாட்டுப் பெண்கள் இயக்கம் ஒழுங்கு பெற்று நடக்கவில்லை. அவர்கள் நிலைமை எப்படியிருக்கிறதென்று கவனிப்போம். ஒரு பெண்ணைப் பத்து வயது வரை படிக்கவைக்காமல் சில்லரை வேலைகளைப் பார்க்கும்படி பெற்றோர்கள்செய்துவிடுகிறார்கள். பின்னர் வீட்டிலுள்ள பாட்டன் பாட்டி இறப்பதற்கு முன்பு அவர்கள் கண்ணோடு கலியாணம் செய்து பார்க்கவேண்டுமென்று கலியாணத்தை முடித்துவிடுகிறார்கள். பதின்மூன்று வயதானதும் குழந்தை பிறக்கவில்லை என்று கவலைப்படுகிறார்கள். உடனே இராமேஸ்வரத்திற்குப் போவதற்குப் பட்டியல் தயாரா

கின்றது. இதிலிருந்து பல தொந்தரவுகள் ஆரம்பமாகின்றன. இவர்களின் தினசரி வாழ்க்கையில் அறியாமை மிகுந்திருக்கிறது. காலையில் எழுந்ததும் சாணியும் கையுமாக தெருவிற்கு வந்து விடுகிறார்கள். மாட்டுச்சாணியில் லெட்சுமியிருக்கிறதாம்! அங்கு லெட்சுமி என்ற பெண் பெயரைச்சொல்லிப் பெண்ணினத்தை இழிவு படுத்துகிறார்கள். சாணி வேலை முடிந்ததும் துடப்பம் பிடித்துக்கூட்டவேண்டும். பின்னர் பலகாரம் செய்து முடியும். கணவன் வெளியில் ஏதாவது வேலையாகச்சென்றிருந்து வர நேரமானாலும் கணவன் வரும்வரை தன்னுடைய பசியையும் பொறுத்திருந்து, கணவன் சாப்பிட்ட பின்னரே சாப்பிடவேண்டும். தன் வயிற்றுப்பசிக்குச் சாப்பிடமுடியாதபடி ஒரு பெண் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறாள். பகல் போஜனம் தயார் செய்யவேண்டும். கணவன் சாப்பிட்ட பின்னர் அவனால் ஆபாசப்படுத்தப்பட்டிருக்கும் எச்சில் இலையிற் சாப்பிடவேண்டும். இந்தியாவில் பெண்கள் கணவர்களிடத்திலிருக்கும் அன்பை இந்த எச்சில் இலை மூலமாகக் காட்டுவதாய்ப் பல புத்திசாலிகள் கூறுகிறார்கள். எச்சில் இலையில் சாப்பிடுவதற்கு யோக்கியதையுள்ள பிராணி எது என்பதை உணர்ந்து கொண்டார்களாகில் எச்சில் இலையில் சாப்பிடமாட்டார்கள். பெண்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் புருடர்களைச் சாப்பிடச்சொல்ல அதிகாரம் கிடையாது. சகோதரிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் இன்று முதல் எச்சில் இலையில் சாப்பிடுவதில்லை என்று உறுதி கொள்ளவேண்டும். இனி நமது நாட்டுச்சகோதரிகள் எவ்வாறு நகை அணிந்து கொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிப்போம். கழுத்திலும் காதிலும் மூக்கிலும் கையிலும் எண்ணமுடியாத படியும் அருவருக்கத்தகுந்த முறையிலும் அணிந்து கொள்ளுகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் காதில் பாம்படம் என்ற ஓர்வித ஆபரணம் அணிந்துகொள்ளுகிறார்கள். அதைப்பார்த்தால் பயமாக இருக்கிறது. அதனால் எவ்வளவு கஷ்டமிருக்கிறதென்று கூறமுடியாது. நகை மனிதவாழ்க்கைக்கு ஓர் முக்கியப் பொருளல்ல. ஒரு சிறிய அளவு அணிந்து கொள்தல் சிறப்பாக இருக்கும். சகோதரிகள் பன்னிரெண்டு மணி வெயிலில் வெளியே செல்லவேண்டுமானால் குடையும் மிதியடியும் இல்லாமல் செல்லவேண்டுமென்று கூறப்படுகிறது. இது மிகவும் வருந்தத்தக்கது. குடைபிடிப்பதனாலும்

மிதியடி அணிவதனாலும் யாருக்கும் குறைவுநேர்ந்துவிடாது. நமது சௌகரியத்திற்காகச் செய்யப்படுகிறதே தவிர இதிலொன்றும் குற்றமிருப்பதாகத்தெரியவில்லை. ஆதலால் இந்த விஷயங்களிலெல்லாம் சகோதரிகள் தைரியமாக முன்வரல்வேண்டும். பரிகாரமென்றும் நாகப்பிரதிஷ்டை செய்கிறதென்றும் தீர்த்தமாடுகிறதென்றும் இன்னும் இதுபோன்ற மூட வழக்கங்கள் நம் இந்திய சகோதரிகளிடம் நிரம்பியிருக்கின்றன. தீர்த்தமாடுகிற குளத்திலிருக்கும் அசுத்தத்தையும் துர்நாற்றத்தையும் அளவிட்டுக் கூற முடியாது. அதில் தீர்த்தமாடியதும் நோய் வருகிறது. 'நோய் வந்தவுடன் தீர்த்தமாடு' என்று புராணம் எழுதப்பட்டிருக்கிறது. இம்மாதிரி மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்கு சுயமரியாதை இயக்கம் இன்று தோன்றி உதவி செய்து வருகிறது.

பட்டினத்தார் என ஒருவர் இருந்தார். அவர் ஓர் பெரிய ஞானி. 'பெண்ணாகிய மாயப்பிசாசம் என்னைப்பிடித்து ஆட்டுகின்றதே' எனச் சொல்லுகிறார். பெண்ணை இழிவாகச் சொல்வதில் இவரைப்போல் வேறொருவர் இருக்க முடியாது. மேலும் இவர் நூல்களில் எழுதி வைத்திருப்பது பொறுக்க முடியாததாகும். தன் மனையாளின் மேல் வெறுப்பு வந்தால் உலகத்துப் பெண்களையே குறை கூறுவது எவ்வளவு அறியாமையாகும். "பெண்டாட்டி தனை அடிமைப்படுத்த வேண்டிப் பெண் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமா?" என்று திரு. சுப்பிரமணிய பாரதியார் கூறுகிறார். பெண்மக்கள் சீர்திருத்த வழியில் ஈடுபட்டு இயக்கமுண்டாக்கி நடத்தினால் இவையெல்லாம் ஒழிந்துபோகும். சீர்திருத்தத்திற்கு வருபவர்கள் ஜனங்கள் சொல்லுவதற்குப் பயப்படக் கூடாது. தைரியமாக முன்வரவேண்டும். ஜனங்கள் எல்லாவற்றிற்குந்தான் குறை சொல்லுவார்கள். ஒரு ஞானி எல்லாவற்றையும் துறந்து சந்நியாசியாய் ஓர் திண்ணையில் தலைக்குச் செங்கலை வைத்துக்கொண்டு படுத்திருந்தார். அவ்வழியே சென்ற ஒருவர் சன்னியாசியைப் பார்த்து முற்றுந் துறந்த சந்நியாசியின் தலைக்குச் செங்கல் வேறு வேண்டியதிருக்கிறதோ என்று பரிகாசஞ் செய்துவிட்டுச் சென்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சந்நியாசி கொஞ்சநேரம் யோசித்து "உண்மைதான், செங்கலை

தற்கு" என்று பக்கத்தில் போட்டுவிட்டு தரையில் தலையை வைத்துப் படுத்திருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் முன்னர் சென்றவர் திரும்ப அந்த வழியே வந்தார். சந்நியாசி செங்கலைப் பக்கத்தில் போட்டுவிட்டதைப் பார்த்து "ஆ! இவ்வளவுதானு இவர் சந்நியாசம்! நான் சொன்ன ஒரு வார்த்தையைப் பொறுக்க சக்தியில்லை. என்ன சந்நியாசி இவர்?" என்று கூறினர். உடனே சந்நியாசி யோசித்தார். "நமக்கு எது உசிதமோ அதைச் செய்ய வேண்டியதுதான் சரி. ஜனங்கள் எதைச் செய்தாலும் குறை கூறிக் கொண்டுதானிருப்பார்கள்" என்று முடிவு செய்து அவர் உசிதம்போல் செய்தார் என்று ஒரு கதை கூறுவதுண்டு. இது போல்த்தான் நமது நாட்டில் எதைச் செய்தாலும் ஜனங்கள் குறை கூறுவதென்றிருக்கிறார்கள். ஆதலால் நாம் செய்ய வேண்டிய ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்த்து வாழ்க்கைக்குப் பொருத்தமாக அமைத்து நடத்தி வரச் சிறிதும் பின்னடைதல் கூடாது. இங்கு அனேகம் பெண்கள் கூடியிருப்பதற்கு மகிழ்கிறேன். இன்னும் வீட்டிலிருக்கும் பெண்களையும் கூட்டி வந்து இம்மாதிரி பிரசங்கங்களைக் கேட்டு உண்மை உணர்ந்து மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

---

## ஒரு சம்பாஷணை.

சேருப்பு:— அண்ணே! பெண்களுடைய கால் எப்படியிருக்கும். உனக்குத்தெரியுமா?

விளக்குமாறு:— எனக்குத்தெரியாது. பெண்களுடைய கை மிருதுவாக இருக்கிறது.

சேருப்பு:— கால் அப்படி இராதாம். பித்தவெடிவு பாளம் பாளமாக வெடித்து வேட்டியைக்கூடக் கிழித்துவிடுமென்று பேசிக்கொள்கிறார்கள்.

விளக்குமாறு:— தம்பி! ஆண்மக்களுடைய கை எப்படியிருக்கும் உனக்குத்தெரியுமா?

சேருப்பு:— நன்றாகத்தெரியும். ஆண்களுடைய கை எருமைத்தோலைப் போலிருக்கும்.

விளக்குமாறு:— நான் ஆண்களுடைய கைக்குப்போகிறேன். நீ பெண்களின் காலுக்கு வருகிறாயா?

# பெண் மக்களும் சுயமரியாதைக் கொள்கைகளும்.

திருச்சி மிஸ். நீலாவதி எழுதுவது.

அன்பார்ந்த சுயமரியாதைச் சகோதர சகோதரிகளே! குமரன் வாசகர்களே!! நம தருமைக்குமரன் மாத(ப்பதிப்பின்) முதல் வெளியீட்டில் இக்கட்டுரை பொறிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றிப் பெரிதும் மகிழ்கின்றேன், அதோடு அருமைச்சகோதரர் குமரன் ஆசிரியர் உயர் திரு. முருகப்பர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். சுயமரியாதை இயக்கமென்பது சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன் ஈரோடு உயர் திரு ஈ. வெ. இராமசாமிப் பெரியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இவ்வியக்கத்தின் கொள்கைகள் யாவும் மக்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகும். ஆனால், இச் சுயமரியாதைக் கொள்கைகளின் பயனுகப் பலர் தம் சுய நலம் பாதிக்கப்படுவதால் அன்னூர் இவ்வியக்கத்தை நாத்திக இயக்கமெனப் பறைசாற்றுகின்றூர்கள். இவ்வியக்கத்தைச் சார்ந்தோர் 'நாத்திகர்' என்னும் பட்டமும் பெற்றுவிட்டார்கள். இந் நாத்திகப் பட்டத்தைக் கண்டு சுயமரியாதைக் காரர்களாகிய நாங்கள் சிறிதும் நடுக்குற்றேமல்லோம். இனிமேலும் நடுக்குறுவோமல்லோம். ஒருவர் தயவும் தாட்சண்யமும் எங்களுக்குத் தேவையில்லை. ஒருவர் புகழையோ போற்றுதலையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நிற்க, சுயமரியாதைக் கொள்கைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது 'தீண்டாமை ஒழித்தல்' 'பெண்கள் முன்னேற்றம்' 'விதவைகள் துயர் களைதல்' ஆகியவைகளாகும். இதனுல் மற்றவையெல்லாம் வேண்டப்படாதனவென்று கொள்ளுதல் வேண்டாம். என் அபிப்பிராயமும் அதுவல்ல; யாவும் வேண்டப்படுபவைகளே! ஆனுல், குறிப்பிட்ட மூன்றும் முக்கியமாக முதலில் வேண்டியதென்பதே எனது கருத்து. சுயமரியாதை இயக்கத்தில் ஆண்கள் ஈடுபட்டிருப்பதுபோல், பெண்கள் ஈடுபடுவது அரிதாய் இருக்கின்றது. இதனுல், அவர்களைக் குறை கூறுவது சற்றும் நியாயமாகாது. கல்வியில்லாக் குறையே எல்லாவற்றிற்கும் காரணம். நிற்க, சுயமரியாதைக் கொள்கை

கள் ஆண்மக்களிடத்தில் வெகுவாய்ப் பரவிவிட்டன. ஆனால், பெண் மக்களிடத்தில் அந்தோ! சிறிதும் இல்லை. சுயமரியாதைக் கொள்கைகள் துலங்க வேண்டியது பெரிதும் பெண் மக்களிடையே யாகும். சுயமரியாதைக் கொள்கைகள் வளர வேண்டுவது பெண் மக்களாலேயே யாகும். பெண் மக்களின்றேல் முன்னேற்றமில்லை யென்பது திண்ணம். பெண் மக்களை அடுப்பங்கரையில் வைத்துவிட்டு ஆண்மக்கள் வெளியிற் சென்று வீராவேசமாய் மேடைப் பிரசங்கம் புரிகின்றார்கள். பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் வரைகின்றார்கள். பிறர்க்கு உபதேசம் செய்கின்றார்கள். நாங்கள் சுயமரியாதைக்காரர்கள் என்று கூட்டங்களில் பிரசன்னமாகின்றார்கள். என் செய்தும் என்ன பயன்? பழக்க வழக்கத்தை நீக்கித் தம் வீட்டில் ஓர் காரியம் செய்ய வேண்டுமென்றால் பெண்கள் எதிர்ப்புப் பெரிதாய் இருக்கின்றது. மூடநம்பிக்கையை ஒழித்து ஓர் வேலை செய்யத்தொடங்கினால் மூலை வீட்டில் இருப்பவர் முட்டுக்கட்டை பலமாயிருக்கின்றது. என்? அவர் தம் குருட்டு நம்பிக்கையேயாகும். மூடஎண்ணங்களினின்றும் நீங்கிக்குருட்டு நம்பிக்கைகளை அறவே ஒழித்த பெண்கள் சுயமரியாதைக்கொள்கைகளுக்கு எதிரிகளாகத் தோன்றவே மாட்டார்கள். ஆனால் பெண்மக்களை அவ்வாறு பகுத்தறிவுடையச் செய்வது தற்போது ஆண்மக்களது முதற்கடமையாகும். பெண்மக்களுக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் நீண்டதூரமாய் இருக்கும் வரை, ஆண்மக்கள் சுயமரியாதைக் கொள்கைகளை வளர்க்க எவ்வளவுதான் அரும்பாடுபட்டாலும், அவையாவும் பயனற்று 'விழலுக்கிறைத்த நீராகவே' முடியும். வாழ்வில் பெரும்பகுதி பெண்மக்களையன்றோ சாருகின்றது. அங்ஙனமிருக்க, நமது புனித சுயமரியாதைக் கொள்கைகள் பெண்மக்களிடமன்றோ முதலில் பரவுதல் வேண்டும். ஆண்மக்கள் இதையேன் கவனிப்பதில்லையோ? அறிகிலேன். மற்ற விடயங்களில் தாங்கள் இதுகாறும் தனித்து நின்றது போலவே இவ்விடயத்திலும் இருக்கலாமென்றும் தாமே போதுமென்றும் எண்ணியிருக்கிறார்கள் போலும். அவ்வாறிருந்தால் அதை மாற்றிக்கொள்ளும்படி என் பிரிய சுயமரியாதைச் சகோதரர்களை வேண்டுகின்றேன். சுயமரியாதைக் கொள்கைகளைப் பெண்மக்கள் அறியாத காரணத்தால் எற்படும் இன்னல்கள் அள

விடற்கரிதாம். சுயமரியாதை உணர்ச்சியைப்பெண் மக்களுக்கு ஊட்டாத குற்றத்தால் ஆண்மக்கள் சுயமரியாதை உணர்ச்சி பல விதத்தில் பாழாகின்றது. சுயமரியாதைக் கொள்கைகள் நாட்டிடைப்பெரிதும்பரவப் பெண்களே முதல் வழி காட்டிகளாவர். பெண்மக்களிடம் சுயமரியாதைக்கொள்கைகள் தீவிரமாய்ப்பரவாத வரையில் ஆண்மக்கள் சுயமரியாதைக் கொள்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிவைக்க முடியாது. அதோடு சுயமரியாதைக் கொள்கைகள் வளர்ச்சியடையவும் முடியாது. பெண்மக்களிடம் சுயமரியாதைக்கொள்கைகள் முதலில் பரவினால், ஆண்மக்கள் அதிக சிரமம் அடையவேண்டுவதில்லை. சுயமரியாதை வீரர்கள் பெண்கள்மேல் சுமத்தும் பழியும் இல்லாமற்போகும். தற்போது சுயமரியாதைக்காரர்கள் தம் காரியங்களுக்குப் பெண்கள் பெரிதும் முட்டுக்கட்டை போடுகின்றார்களென்றும், அவர்களால் தம் சுயமரியாதை உணர்ச்சி பெரிதும் பங்கப்படுகின்றதென்றும் முறையிடுகின்றார்கள். முறையிடுவதைப்பற்றி யான் குறைகூறுகின்றேனில்லையாயினும் முறைப்பாட்டுக்குக் காரணமறிந்து ஆவன செய்யவில்லையென்றே, செய்தது ஒன்றுமில்லையென்றே அறைகின்றேன். தம்விருப்பத்திற்குப் பெண்மக்கள் மாறுபடுவதால் பலர் அன்னாரை நிந்திக்கின்றார்கள். உண்மையில் பெண்மக்களை நிந்திப்பதற்கு எள்ளளவும் காரணமில்லை. ஆனால் அதற்குப்பதில் ஆண்மக்களை நிந்திப்பதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. இதுபற்றி விஷயமறியாமல் சகோதரர்கள் என்மேல் சீறி விழுதல் வேண்டாம். உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால், சீற்றங்கொள்ளுவதற்கு இடமிருக்காது. பெண்மக்களை நிந்தித்துப்பெண்களுக்குச் சுயமரியாதை இல்லையென்றால் அது எப்படி உண்டாகுமென்றுதான் நான் கேட்கின்றேன். ஆதிகாரணம் கல்விக்கண்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. கண்களே அடைபட்டிருக்குமானால் அப்புறம் அதிகம் விவரித்துக்கூறவும் வேண்டுமோ? நிற்க, ஆண்கள் கூட்டங்களுக்கும், மகாநாடுகளுக்கும் செல்லுங்காலையில், பெண்களை உடனழைத்துச்செல்வதில்லை. கல்வி கற்காத பெண்களாயிருந்தால் பத்திரிகைகளைப் படித்துக்காட்டி உண்மை அறிவுச்சுடர் கொளுத்துவதில்லை. நடுத்தரவயதுப் பெண்களுக்குக் (கல்வி யில்லாமையால் உண்டாகும் தீமைகளை யுணர்ந்து) கல்வி கற்பிக்கப்படுவது

மில்லை. பெண்மக்கள் சுயமரியாதை பேருததற்கு ஆண்மக்களே காரணஸ்தர்கள் என்பதைக் காட்ட இன்னும் எத்தனை உதாரணங்கள் வேண்டும்? தங்கள் சுயமரியாதை உணர்ச்சியை செய்கையில் காட்டுவதற்குப் பெண்மக்கள் எதிரிகளாய்த்தோன்றித் தடைபுரிகின்றார்களென்று பெண்களைக் குறைகூறுவதில் தயாராயிருக்கின்றார்களேயொழிய, பெண்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டிப் பகுத்தறிவுச்சுடர் கொளுத்திச் சீர்திருத்துவதில் தயாராயில்லை. ஏதாவது சொல்லப்போனால் 'படிப்பில்லையே' என் செய்வது? என்கின்றார்கள். அப்படியே படிப்பில்லாமலே இருக்கட்டும். விஷயங்களை விவரித்து எடுத்துச்சொன்னால் சீர்திருந்தமாட்டேனென்கின்றார்களா? கொஞ்சங் கொஞ்சமாகக் கல்வியையளித்து வந்தால் உண்மை அறிவுச்சூரியன் அவர்தம் உள்ளத்தில் உதயமாகாமல் போவானா? அல்லது என்ன செய்தாலும் பெண்கள் தங்கள் கண்மூடித்தனத்தினின்றும் நீங்கி அறிவு விளக்கம் பெறமாட்டார்களென்று ஆண்கள் எண்ணி விட்டார்களா? உண்மையில் அவ்வாறு எண்ணியிருப்பார்களானால் அது அவர் தம் அறியாமையேயாகும். போகட்டும். இனி மேலாவது ஆண் மக்கள் பெண்களுக்கு முதலில் சுயமரியாதையை உண்டாக்கத்தக்க ஏற்பாடுகள் விரைவில் செய்ய முந்துவார்களாக? தம்புத்திரர்கள் கல்வியில் ஊக்கமில்லாதிருப்பதைக்கண்டு அவர்களுக்குக் கல்வியில் உற்சாகம் உண்டாக்கும் பொருட்டுத் தாமே படிக்கத் தொடங்கித் தம் ஐம்பத்துஆறுவது (56) வயதில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறிய அன்பரின் நன் முயற்சியை நம் நாட்டு ஆண்கள் பின்பற்றினால் எவ்வளவு நலமுண்டாகும். குறிப்பாகப் பெண்கள் பின்பற்றினால் பெண் கல்வி விடயத்தில் முயற்சியைக் கைக் கொண்டால் விளையும் நலன் இவ்வளவென்று விஸ்தரித்துச் சொல்லவும் வேண்டுமோ? கல்வி கற்காத, எழுதப் படிக்கத் தெரியாத பெண்கள் இருக்கத்தான் முடியுமா? இறுதியாகப் பெண்களுக்கு யான் கூறுவதென்னவென்றால், ஒவ்வொரு பெண்மணியும் கல்வியில் பேரூக்கங் கொண்டு 'நமக்கு இவ்வளவு வயதாய்விட்டதே! நமக்கு இனிமேல் கல்வி எப்படி ஏறப்போகின்றது, என்று தெரியாத்தனமாய் மலைத்துத் தமக்குத் தாமே தடை போட்டுக் கொள்ளாமல், சிறிது கல்வி கற்ற பெண்களாயிருந்தாலும் 'கற்றது கைம்மண்

ணளவு, கல்லாதது உலகளவு' என்னும் வாக்கியப்படி மேலும் கல்வி கற்க முன் வரல் வேண்டும். வாசகர்களே! இதுகாறும் சுயமரியாதைக் கொள்கைகளைப் பெண்மக்கள் முதலில் அறிவதால் ஆண் மக்கள் தமக்கு அதிக நலமேற்படுமென்றும் அதனுல் பெரும் பயன் உண்டாகுமென்றும் குறிப்பிட்டு வந்தேன். இனி பெண் மக்கள் நலத்தை உத்தேசித்துப் பெண்கள் முன்னேற்றத்தைப் பெரிதும்,கோரி சுயமரியாதைக் கொள்கைகள் முதலில் பரவ வேண்டுவதும் பெண்மக்களிடையே யென்று குறிப்பிடுகின்றேன். தற்போது பெண்ணுலகம் பெரிதும் மூட நம்பிக்கையில் ஆழ்ந்து நிற்கின்றது. பெண்கள் மனம் மிகவும் குருட்டு நம்பிக்கையில் குடிகொண்டிருக்கின்றது. பெண்களின் மூட நம்பிக்கையின் பயனுய் வாழ் நாளில் ஏற்படும்இன்னல்களுக்கு அளவேயில்லை. குருட்டு நம்பிக்கையும், மூட எண்ணமும் அறியாமையும், பழக்கப் பைத்தியமும், வழக்க வெறியும், பெண்களைப் பிடித்து வாட்டப் பெண்கள் முன்னேற்றம் தடைப்படுகின்றது. மூட நம்பிக்கைகளில் மூழ்கியிருக்கும் சமூகம் தற்போது பெண்கள் சமூகமே யாகும். பார்ப்பனீயப்படுகுழியில் பதிந்து நின்று பகுத்தறிவை இழந்து நிற்பதும் அதுவே யாகும். சுயநலக் குழுவினரின் நயவஞ்சகங்களையறியாமல் இன்னும் வேற்றுமைச் சட்டங்களுக்கு அடிமைப்பட்டிருப்பதும் பெண்கள் சமூகமேயாகும். ஆபாசம் நிறைந்தவேத, புராண, இதிகாசங்களுக்கு அறியாமையால் அடிமைப்பட்டு மூடபக்தியால் தம் அறிவை விசாலப்படுத்தாமல் குருட்டுக் கொள்கைகளில் மனத்தைச் செலுத்திப் பெண்கள் மிகவும் துன்புறுகின்றூர்கள். சுயமரியாதைக் கொள்கைகள் பெண்மக்களிடம் முதலில் பரவுவதால் பெண்கள் சமூகம் எவ்வளவோ முன்னேற்ற மடையக்கூடும். ஆண்கள் தன் சுயமரியாதை பங்கப்படுவதால் மட்டும் சுயமரியாதைக் கொள்கைகள் பெண்மக்களிடம் முதலில் பரவ வேண்டுமென்று கூரவரவில்லை. பெண்மக்கள் நன்மைக்கே சுயமரியாதைக் கொள்கைகள் முதலில் பெண்மக்கள் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்தல் அவசியமென்று கூறுகின்றேன். இதுபற்றித் தற்போது கூடும் கூட்டங்களையும், மகாநாடுகளையும் நிறுத்தி எங்கும் பெண்மக்கள் கூட்டங்களையே கூட்டி அதாவது ஆண்

மக்கள் இதுவரை அடைந்த சுயமரியாதையை அவ்வளவோடு வைத்துக்கொண்டு பெண்மக்களுக்குப் பிரசாரம், பெண்மக்களுக்கே கூட்டம், மகாநாடு ஆகியவைகள் நடத்தி முதலில் சுயமரியாதைக் கொள்கைகள் பெண்மக்களிடம் பரவத் தகுந்த முயற்சியை என் சுயமரியாதைச் சகோதரர்கள் செய்வார்களானல் அதுபற்றி யான் பெருமகிழ்வடைவேன். எனது தாழ்மையான வந்தனத்தையும் தயங்காமல் செலுத்துவேன். சுயமரியாதை இயக்கம் சுடர்விட்டெரியப் பெண்களே முதல் வழிகாட்டிகளென்பது சிறியாளது உறுதியான அபிப்பிராயமாகும். இது விடயத்தில் ஆண்மக்களுக்கே இன்னும் சரியான உணர்ச்சி ஏற்படவில்லையென்றே தோற்றுகிறது. ஆண்மக்கள் இனி வாளாவிருக்காமல் சுயமரியாதைக் கொள்கைகள் பெண்மக்களிடம் பரவத்தக்க ஏற்பாடுகளைக் கூடிய சீக்கிரம் செய்யவேண்டுமாய் மிகத் தாழ்மையுடன் வேண்டுகின்றேன். அன்புள்ள சுயமரியாதைச் சகோதரர்களே! உங்கள் சமூகத்திற்குத் தங்கள் சகோதரியாகிய யான் மிக வணக்கமாய் விண்ணப்பித்துக் கொள்ளுவதாவது.

நீங்கள் கூட்டங்களுக்குச் செல்லுங்காலையில் பெண்களை வீட்டுக் காவலாளர்களாக வைத்துவிட்டுப் போகும் வழக்கத்தை அறவே விட்டு அவர்களையும் அவசியம் உடன் கூட்டிச் செல்லுங்கள். கூட்டங் கூடும் சில சந்தர்ப்பங்களில் உங்களுக்கு வேறு அலுவல்கள் இருந்து நீங்கள் அவைகளுக்குச் செல்ல வியலாது போகும் பட்சத்தில் அச்சமின்றிப் பெண்களைமட்டும் அனுப்பி வையுங்கள். இது விடயத்தில் ஆண்கள் துணையின்றிப் பெண்கள் தனியே போகப் பெண்களுக்கு அவ்வளவு சுதந்தரமா? என்று நீங்கள் எண்ணி ஏங்குதல் வேண்டாம். பெண்களுக்கு அளிக்கும் மற்ற சுதந்தரங்களைவிட இச் சுதந்தரம்தான் முதலில் அளிக்கப்படவேண்டியது. ஆனல் தற்காலம் பெண்களை ஆண்கள் வைத்திருக்கும் நிலைமையில் இச் சுதந்திரம் வழங்குவது ஆண்களுக்கு மிகக் கடினமாக, என்? மிக ஆத்திரமாக இருக்குமென்பதில் ஐயமின்ரும். ஆயினும் இதனல் பெண்கள் பெரிதும் அறிவு விளக்கம் பெறுவதோடு, வீரமணிகளாய்த் திகழ்வதோடு ஊக்கம் மிக வாய்க்கப்பெற்று நாட்டு முன்னேற்ற விடயத்திலும் நாட்டங் கொள்வார். சகோதரர்களே! இதுவரை கூறிவந்த

யைக் கண்ணுற்றுவது உண்மை தெரிந்து ஆவன செய்து பெண் மக்களுக்கு முதலில் சுயமரியாதை இன்பத்தை ஊட்டுவீர்களா? சுயமரியாதை வீரர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு அவமரியாதை முறையில் காரியங்கள் செய்து பெண்மக்கள்மேல் குற்றத்தைச் சுமத்துதல் வேண்டாம். குற்றம் உமதே! உமதே!! இதில் ஒன்றும் தவறுஇல்லை; வீரச் சோதரர்காள்! உங்கள் நலத்திற்கும், எங்கள் முன்னேற்றத்திற்கும் பொதுவாக மக்கள் முற்போக்கிற்கும் சுயமரியாதைக் கொள்கைகள் முதலில் பரவவேண்டியது பெண்மக்களிடையே! என்று மீண்டும் ஈண்டு குறிப்பிடுகின்றேன்.

# சோசியருக்கும் சுயமரியாதை.

32-தலைக்கட்டுள்ள பிள்ளையவாள் குடும்பத் தாயாதிகளில் சில தலை முறையாகப்பிள்ளைகள் அதிகம் பிறக்காமலும் வயதான வாலிபர்கள் அடிக்கடி இறந்தும் குலம் நசித்து வந்தது. இதற்கென்ன செய்யலாமென்று தலைமைக்கார சித்திரபுத்திரபிள்ளை வெகு கவலையுடன் யோசித்தார். மிச்சமிருக்கிற தாயாதிகளுடன் ஒரு கூட்டமாக இருந்து பேசி வீணுமங்கலம் அந்தர தந்திர பால சோசியரிடம் சென்று குறைகளைச் சொல்லிப் பரிகாரம் தேடுவதென்பதாக முடிவு செய்தனர். சித்திர புத்திரபிள்ளையும் மற்றும் இரண்டு கிழவர்களும் சென்றார்கள். ராமசந்திரன் என்ற சிறுவனும்கூடச் சென்றான். சோசியர் வீட்டுக்குச் சென்று தங்கள் குறைகளை அவரிடம் எடுத்துச்சொன்னார்கள். அவரும் ஸ்நானம் செய்து அனுமாரின் தியானத்தில் அமர்ந்து எல்லாவற்றையும் தெரிந்து ஒன்பது ஓலைகளில் குறைநேர்ந்த வரலாற்றையும், அதற்குச் செய்யவேண்டிய பரிகாரங்களையும் மிக விரிவாக எழுதிக் கொடுத்தார். பரிகாரச் செலவு எவ்வளவு ஆகுமென்று கணக்குப் போட்டுப் பார்த்ததில் 10,000 ரூபாய்க்குமேல் ஆகுமென்று தெரிந்தது. இந்தப் பரிகாரத்தை ஷை சோசியருடைய மேற்பார்வையிலேயே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவரும் ஒப்புக்கொண்டார். சோசியம் பார்த்ததற்கும் பரிகாரங்களைச் செவ்வையாக நடத்துதற்கும் 300 ரூபா தருவ

தென்று முடிவு செய்து அன்று ரூபா 100 கொடுத்துவிட்டனர். கூட வந்திருந்த ராமச்சந்திரன் சோசியரை நோக்கி எனக்குச் சில விஷயம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது, கேட்கலாமா என்ருன். சித்திரபுத்திர பிள்ளை சோசியரைப் பார்த்து 'இந்தப் பையன் ரெம்ப புத்திசாலி, எங்களில் ஒரு பாகக்காரன். இவன் கேட்கிறதற்குச் சொல்லிச் சமாதானஞ் செய்யவேண்டியது அவசியம்' என்ருர்.

சோசியர்:—என்ன விஷயம்.

ராமச்சந்திரன்:—ஒன்றுமில்லை. தங்கள் குடும்பத்தின் க்ஷேம சமாசாரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளலாமோ என்பதுதான்.

சோசியர்:—ஓகோ இதுதானு! இப்போது சுயமரியாதைக் காரரென்று ஒரு கூட்டஞ் சேர்ந்து ஒன்றுமில்லையென்று வம்பு செய்கிருர்களே அப்படியோ வென்று நினைத்தேன். எங்கள் குடும்ப சங்கதியா; அதற்கென்ன ஆக்ஷேபம். நீங்களும் நாங்களுந்தான் நெருங்கிய சிநேகமாகிவிட்டோமே. இனித் தெரிந்து கொள்ளவேண்டியதுதானே.

ராமச்சந்திரன்:—தங்களுக்கு வயது 45 இருக்குமா?

சோசியர்:—சரியான மதிப்பு. அடுத்த மாதத்தோடு 45 ஆகிறது.

ராமச்சந்திரன்:— வெளியில் பசுத் தொழுவத்தில் நிற்கிருர்களே அவர்கள்...........?

சோசியர்:--உட்கார்ந்து பிசைந்துகொண்டிருக்கிருர்களே அவர்கள்தான் என் தாயார். எரு' முட்டை காய வைப்பவர்கள் என் தமக்கை. பக்கத்தில் மாவரைப்பது என் தஙகை.

ராமச்சந்திரன்:—உங்கள் சகோதரிகட்குப் பிள்ளைகளுண்டா?

சோசியர்;—கிடையாது.

ராமச்சந்திரன்:—உங்கட்கு எத்தனை பிள்ளைகள்?

சோசியர்:—இனிமேல்தான் கடவுள் அனுக்கிரம் செய்ய வேணும்.

ராமச்சந்திரன்:—உங்கட்கு வயது 45 ஆகியும்ஒரு பிள்ளைக்குக் கூட வழியில்லை. உங்கள் தங்கை தமக்கை இருவருக்கும் பிள்ளையில்லை. இருவருடைய புருஷன்மார்களும் இறந்து போனுர்கள். உங்களுடைய சோசியமும் பரிகாரமும் இவ்வளவுதானே? எங்கள்

பணத்தை ஏன் ஐயா வீணாகத் தொலைக்க வழி சொல்லுகிறீர்?

சோசியர் முகம் இறங்கிப் போய்விட்டது. பதில் சொல்ல வாய்வரவில்லை. சித்திரபுத்திரபிள்ளையும் மற்ற இருவரும் சோசியருக்கு சமாதானம் சொன்னார்கள்.

சோசியர்:—சமாதானஞ் செய்ய ஒன்றுமில்லை. என் பாட்டனார் காலத்திலிருந்து இப்படித்தான் சோசியம்பார்த்துக் கொண்டு வருகிறோம். தம்பியைப் போல யாரும் எங்களுக்குப் புத்திவரும் படி சொன்னதேகிடையாது. நியாயந்தான். எங்கள் சோசியம் சரியாக இருந்தால் ஏன் எங்கள் வீட்டில் விதவைகள் உண்டானார்கள்? நன்றாக சோசியம் பார்த்துத்தான் கலியாணங்கள் செய்தோம். என்றாலும் மாப்பிள்ளைகள் இறந்து போனார்கள். எவ்வளவோ பரிகாரம் செய்து பார்த்தும் எனக்குப் பிள்ளையே பிறக்கவில்லை. இனிமேல் இந்த சோசியத் தொழிலை நான் செய்கிறதில்லையென்று சத்தியம்செய்கிறேன். சுயமரியாதைக்கட்சியில் சேர்ந்தால்தான் இந்த உண்மை விளங்கும்போலிருக்கிறது.

ராமச்சந்திரன்:— இவர்கட்கு எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். கேட்க மாட்டேனென்றார்கள். ஜனங்கள் ஏமாந்துகிடக்கிறார்கள். பணத்தைப் பாழாக்குகிறார்கள். நல்வழியில் செலவிடுவதில்லை. இந்த நிலையைத்தான் நாங்கள் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறோம்.

சோசியர்:—சரி; மிகவும் சரி; நானும் உங்களுடன் இன்று முதல் சேர்ந்துவிடுகிறேன்.

# பெண்மக்கள் வாழ்வும் சில சீர்திருத்தங்களும்.

வாகீச பக்தன் எழுதுவது.

நமது நாட்டில் பெண்மக்கள் வாழ்வானது பெரிதும் சீர்குலைந்திருக்கின்றது. கல்வி யறிவின்மையால், பலர் அறியாமைக்களஞ்சியங்களாகவும், நாகரிக மற்றவர்களாகவும் விளங்குகின்றார்கள். ஆண்மக்கள் பெண்மக்களைப் பெரிதும் தாழ்த்தி அடிமை மக்களாக வைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். பெண்மக்கள் தம்மை...

பெரிதும் இழிந்தவர்கள் என நினைக்கும் வண்ணம் அடிமைத்தனம் வலுப்படுத்தப் பட்டிருக்கின்றது. ஆனால் அடிமைப்பெண்டிரோடு இன்பவாழ்வு வாழமுடியாது என்பதை எல்லோரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அடிமைப்பெண்டிரோடு வாழும் வாழ்க்கையில் உண்டாகும் இடையூறுகள் அளவில்லாதன. பெண்மக்கள் நல்வாழ்வு பெறல் வேண்டுமானால் அன்னார்க்குக் கல்வி யறிவும் சமஉரிமையும் நல்கப்படல் வேண்டும். இவ்விரண்டும் நல்கப்பட்டாலொழிய ஒரு நாளும் இன்பவாழ்வு வாழ முடியாது. இவ்விரண்டுமே பெண்மக்களது புது வாழ்விற்கு அடிப்படையாகும்.

## அன்புகலந்த வாழ்வு.

நாயகனும் நாயகியும் ஒத்த அன்பு உடையவர்களாக வாழ்தல் வேண்டும். நாயகி அறியாமையால் சில தவறுகள் இழைத்த போழ்து, அவளை நாயகன் அன்பால் இன்னுரைகள் கூறித் திருத்துதல் வேண்டும். ஒருவரும் கண்டபடி பெண்மக்களை மயிரைப் பிடித்து இழுத்து அடித்தல் கூடாது. இவ்வாறு பெண்மக்களை ஆண்மக்கள் மிருகங்களைப்போல் நடத்துதலாலேயே அவர்கள் எப்பொழுதும் மனமகிழ்வில்லாதவர்களாகக் குறைகூறிக்கொண்டேயிருக்கிறார்கள். உரையாடும் பொழுது முணுமுணுத்துக்கொண்டு சாடைகள் சொல்லுகிறார்கள். இவ்விடை யூறுகளெல்லாம் அகலுதல் வேண்டுமானால் அன்புகலந்த வாழ்வு அரும்புதல் வேண்டும்.

## கௌரவ வாழ்வு.

நாயகன் நாயகியைப் பெரிதும் கௌரவமாகப் பாவித்தல் வேண்டும். அழைக்கும் பொழுது. "அடியே! இந்தா! ஏ! ஏவளே! ஏங்கிறேன்! என்னங்கிறேன்" என்று அழைத்தல் கூடாது. அவள் பெயரைச்சொல்லி அன்புடன் அழைத்தலே சிறந்ததாகும். நம்முடைய நாட்டில் இன்னொரு கெட்டவழக்கம் இருக்கின்றது. அது யாதெனில் நாயகனும் நாயகியும் வெளிப்படப் பேசிக்கொள்ளக்கூடாதென்பது. இதனால் உறும் இடையூறுகள் பலவாகும். இதனாலேயே இருவருக்கும் அன்பு உண்டாக இடமில்லாமல் போகின்றது. வீட்டிலிருக்கும் தனது நாயகியோடு நேரே பேச வெட்கப்பட்டுக்கொண்டு, பிள்ளைகள் கிழவிகள் சமயற்காரன் கணக்குப்பிள்ளை முதலியவர்களின் மூலமாகப் பேசுவதைப்போல் கெட்ட [illegible]க்கம் வேறு ஒன்றும் இல்லை. நாயகனும் நாயகியும் ஒரு

இடத்தில் உட்கார்ந்து உரையாடுதல் கூடாது என்பது மற்றொரு கெட்டவழக்கம். நாற்காலி சோபா முதலியவைகளில் பெண்கள் உட்காருதல் கூடாது என்பது வேறொரு தீய வழக்கம். உட்காருவதற்கும் உரையாடுவதற்குங்கூட உரிமை இல்லாவிட்டால் பெண்மக்கள் எவ்வாறு உயர்வுபெறுதல்கூடும். நாயகியை நாயகன் கழுதை, நாய், மாடு என்று இழிவுரைகளால் ஒருநாளும் அலங்கரித்தல் கூடாது. நாயகியும் நாயகனை இந்தச்சனியன் என்று இகழ்தல் கூடாது. ஒருவரை யொருவர் கௌரவமாகவே எல்லாக் காரியங்களிலும் மதித்தல் வேண்டும்.

## மணமகனைத் தேர்தல்.

மணமகனை மணமகள் தேர்ந்தெடுக்கும் உரிமையானது நம்முடைய நாட்டில் பரவவேயில்லை. அதனாலேயே இல்லற வாழ்வானது பெரிதுந் துன்பமயமாக விருக்கின்றது. பால்யத்திலேயே விவாகஞ்செய்து விடுகின்றபடியால், பேற்றோர்களே மணமகனைத்தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் தத்தம் மனநிலைக்கேற்ப மணமகனைத்தேர்ந்து கொள்கிறார்கள். பெற்றோர்கள் பணம், தரம் முதலியவைகளைக் கருதிக் கிழவர்களுக்கு இளம் பெண்களையும், சிறு பையன்களுக்குப் பெரிய பெண்களையும், அழகில்லாதவர்களுக்கு அழகுள்ளவர்களையும், அறிவில்லாதவர்களுக்கு அறிவுள்ளவர்களையும், முரடர்களுக்குச் சாந்தகுண முள்ளவர்களையும், நோயுள்ளவர்களுக்கு நோயில்லாதவர்களையும் மணமுடித்துவைத்து விடுகிறார்கள். இப்பொருத்தமற்ற விவாகங்களினாலேயே துன்பவாழ்வு பெரிதும் தலைவிரித்து ஆடுகின்றது. இப்பொருத்தமற்ற விவாகங்களுக்குப் பெண்கள் சில வேளைகளில் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் பெற்றார் உற்றார் முதலியவர்கள் கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்து வைத்துவிட்டுப் பின்னர் கூத்துப்பார்க்கின்றனர். மணமகனை மணமகள் தானே தேர்ந்து கொள்ளுங்காலத்திலேயே இன்பவாழ்வு அரும்பும். பருவமடைந்த பின்னர் மணஞ்செய்யப்பெற்றால்தான் மணமகனைத் தேர்ந்து கொள்ளக்கூடிய உணர்ச்சி மணமகளுக்கு உண்டாகும்.

## அழகும் மனமகிழ்ச்சியும்.

பெண்கள் தம்மை அழகு செய்து கொள்ளுதலும் எப்பொழுதும் மனமகிழ்வுடன் இருத்தலும் கூடா வொழுக்கத்தின் பாற்

படும் என்று சில பெரியோர்கள் கருதுகிறார்கள். இது முற்றுந் தவறாகும். பெண்கள் அழுது கொண்டிருக்கும் முகமும், அழகின்மையும் உடையவர்களாக இருக்கின்றமையினாலேயே இளைஞர்களுக்கு நாயகியினிடத்துப்பிரியம் உண்டாகாமல் போகின்றது. எனவே இவ்விரண்டும் அவசியம் வேண்டற் பாலனவேயாம். பெண்கள் நாள்தோறும் வாச நீராடல்வேண்டும். உடல் முழுவதும் நன்றாகத்தேய்த்துக் குளித்தல் வேண்டும். தலையை நனையாமல் கழுத்தளவு மட்டும் நனைத்து மேல் குளித்தல் என்பது சரியில்லை. நன்றாக நீராடிக்கூந்தலைப் பின்னர் உலர்த்திக்கொள்ளுதலே சிறந்ததாகும். தலையை நனையாது மேல் குளித்தல் சுகாதார முறைப்படி உடலுக்கும் துன்பமாகும். தலையிலும் அழுக்குப் படிந்து துர்நாற்றம் உண்டாகும். சிறு பெண்கள் தலையை வாரி நன்றாகச்சடைபின்னி மலரணிந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் அவசியம் இரவிக்கை யணிதல் வேண்டும். இவ்வாறு அழகு செய்து கொண்டால்தான் மனமகிழ்ச்சி யுண்டாகும்.

### நல்ல உணவு.

பெண்களும் ஆடவர்களைப்போல் நல்லுணவு அருந்துதல் வேண்டும். நெய் பால் தயிர் காய்கறிகள் பழங்கள் முதலியவைகளைப் பெண்கள் நன்றாக உட்கொள்ளுதல்வேண்டும். "பெண் ஜென்மந்தானே, எதையாவது தின்றாற்போதும்" என்று நினைத்தல்கூடாது. உடல் வளத்திற்கு நல்லுணவு இன்றியமையாததாகும். நாயகன் உண்ட எச்சில் இலையில் உண்டல் என்பது ஒரு கெட்டவழக்கமாகும். சில பெண்கள் விசேட காலங்களிற்கூட நாயகன் உண்ட எச்சில் இலையைத்தேடி அதில் உண்கின்றார்கள். உணவருந்திய பின்னர் இலை காய்ந்து துர்க்கந்தம் வீசுகின்றது. அதில் சாப்பிடும் பெண்களுக்கு ஒருநாளும் நல்லபுத்தியுண்டாகாது. அடிமைப் புத்திதான் உண்டாகும். இவ்வாறு எச்சில் இலையில் உண்டலைக் கற்புநெறிக் கழகாகச் சிலர் கருதுகிறார்கள். இது பெரிதும் விந்தையே யாகும்.

### மிதியடியும் குடையும்.

கோடைகாலத்தில் பெண்கள் தெருவில் நடந்து செல்லும் பொழுது பெரிதும் தவிக்கின்றார்கள். வெயிலின் கொடுமையைப் பொறுக்கமுடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மழைகாலத்

தில் உடல் முழுவதையும் நனைத்துக்கொண்டு செல்லுகிறார்கள். ஆகவே, பெண்மக்கள் மிதியடியையும் குடையையும் அவசியம் உபயோகப்படுத்துதல் வேண்டும்.

### நகைகள்.

பெண்கள் நகைகளை அதிகமாக அணிந்து கொள்ளுதல்கூடாது. சில நாகரிகமான நகைகளையே உபயோகப்படுத்துதல் வேண்டும். கால் விரலில் கால்மோதிரங்கள் அணிந்து கொள்ளக்கூடாது. மூக்கில் சுவாசம் விடமுடியாதபடி மூக்குத்திகள் புல்லாக்கு முதலியவைகள் அணிதல் கூடாது. காதில் தோடுமட்டும் அணிதல் வேண்டும். ஒன்னைப்பூ, குருடு, பூடி, மாட்டல் முதலியவைகளை அணிந்து கொள்ளக்கூடாது.

### சண்டைகள்.

பெண்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை யடித்துக்கொள்தலும் சுவாமிகளை வேண்டிக்கொள்தலும், கண்டபடி திட்டிக்கொள்ளுதலும் சர்வ சாதாரணமாக இருக்கிறது. சதா சாடை சயிக்கினை சொல்லிக்கொண்டு முணு முணுப்பதும் ஒரு வழக்கமாக இருக்கிறது. இவை முற்றிலும் ஒழிதல் வேண்டும்.

### ஒப்பாரி வைத்தல்:

இறந்த வீடுகளில் பெண்கள் ஒருவரோடு ஒருவர் கட்டியழுது ஒப்பாரி வைத்தல் மிகவும் அநாகரிகமாகும். சில இடங்களில் இறந்து வெகு நாட்களாகும் வரையில் பிரயாசைப்பட்டு ஒப்பாரி வைத்தழுகின்றார்கள். ஒப்பாரி வைத்தழுதல் உடலிற்குப்பெரிதுங் கெடுதலைச்செய்வதாகும். துக்க காலத்தில் வருத்தம் பொறுக்கமுடியாமல் சில வார்த்தைகளைச்சொல்லி முறையிடலாமே யொழிய, வேண்டும் என்று பாட்டாகப்படித்து அழுது கதறுதல் கூடாது. சில பெண்கள் ஒருவரும் இறவாமலிருக்கும்பொழுது சாதாரண காலத்தில் ஒப்பாரி வைக்கப் பழகிக்கொள்ளுகிறார்கள். இது பெரிதும் அநாகரிகமாகும்.

### பொழுது போக்கு.

பெண்கள் நல்ல பொழுது போக்கிற்குச் சங்கீதம், சித்திரத் தொழில் முதலியவைகளைக்கற்றுக்கொள்ளுதல் வேண்டும். இனிய கதைகளை வாசித்து மகிழ்தல் வேண்டும். இராட்டினத்தில் நூல்

நூற்பதும் ஓலைப்பெட்டிகள் முடைதலும் நல்ல வேலைகளாகும்.

முடிவுரை.

மேற்கூறிப் போந்தவைகளை அன்பர்கள் ஆராய்ந்து தத்தம் வீடுகளில் சீர்திருத்தஞ் செய்வார்களாக. இல்லறவாழ்வு இன்ப வாழ்வாகத் திகழ்தற்குப் பெண்மக்கள் சீர்திருத்தம் மிகவும் முக்கிய மானதென்பதை எல்லோரும் நன்கு உணர்தல் வேண்டும்.

# விநோதக் குறிப்புகள்.

(ராம சுப்பிரமணியன்.)

பட்டிக்காட்டான்:— ஐயா தாங்கள் எந்த ஊர்.

நாகஸ்வரக்காரர்:— நாங்கள் கும்பகோணம், என் விசாரிக் கிறீர்கள்?

பட்டிக்காட்டான்:— இவ்வளவு சிறிய துவாரத்தில் காதை அடைக்கும்படியான சப்தத்தைக் கொடுக்கிறீர்களே அதைத்திருப்பி அடியிலுள்ள பெரிய துவாரத்தைக்கொண்டு ஊதினால் எவ்வளவு சத்தம் உண்டாகுமென்று ஆச்சரியப்பட்டு விசாரித்தேன்.

ஃ ஃ ஃ

தகப்பனார் தன் பையனைக்கூப்பிட்டு, ஒரு தபால் கார்டு எழுதச்சொல்லி, தபால் பெட்டியில் போட்டு வரும்படி கூறினார். அவ்வாறே பையன் தபால் பெட்டியில் போட்டுவிட்டு தகப்பனாரிடம் செய்தி தெரிவித்தான்.

தகப்பனார்:— கார்டில் மேல்விலாசமெழுதிப் போட்டாயா?

பையன்:— இல்லையப்பா மறந்து விட்டேன் என்று சொல்லிக்கொண்டே ஒரே ஓட்டமாக தபாலாபீசுக்குச்சென்று ஒரு கார்டு வாங்கி மேல் விலாசத்தை மட்டும் யெழுதித் தபாலில் போட்டுவிட்டான்.

ஃ ஃ ஃ

திருக்கைலாயத்திலிருந்தே திருவவதாரம் செய்ததாகச்சொல்லிக்கொண்டு அறுபத்து மூவர் மடங்களில் வயிறு நிமிரும்படி உண்டுவிட்டுப் படுத்துப் புரளும் சைவ மூட்டைகளிடம் எரிச்சல் கொண்டிருக்கிற கோமாளியை நோக்கி,

இராஜா:— அடே! நமது ராஜ்யத்தில் சைவாள் என்று ஒரு ஜாதி யிருக்கிறதாமே; அந்தச்சாதி வந்ததின் காரணத்தை நீ அறிவாயோ?

கோமாளி:— அறிவேன்.

இராஜா:— அப்படியாயின் விபரத்தைத் தெரிவி.

கோமாளி:— இங்கே இருக்கப்பட்ட சைவாள் என்றவர்களுக்கு ஆதியிலிருந்த ஒரு பெரிய சைவரே காரணராயிருந்திருக்கிறார். காரணராயிருந்த ஒருவர் ஆதிகாலத்தில் பகல் போஜனம் முடிந்ததும் எச்சில் இலையை வாயில்புறம் எறிந்து கையலம்பிக்கொண்டிருந்தார். எறிந்த எச்சில் இலையை ஒரு நாய் தின்றுகொண்டிருந்தது. அதைக்காணச்சகியாதவராய் ஒரு கல்லை எடுத்து, அந்நாயின்மீது சை என்று எறிந்தார். அந்தக்கல் நாயின்மீது பட அந்நாய் வாள் என்று கத்தினது. ஆக இரண்டையும் சேர்த்து அவர்களுடைய வம்சத்தாருக்கு சைவாள் என்று ஜாதிப்பெயர் வந்தது.

ஃ ஃ ஃ

திருவாரூர் ரயில்வே ஸ்டேஷனில் ஒருவன் "காலணுவடை" "காலணுவடை" என்று உரக்கக்கூவிக்கொண்டு சென்றான். வண்டியிலிருந்த ஒருவர்:— ஐயா! காலணு வடை என்ன விலை?

ஃ ஃ ஃ

தஞ்சாவூர் ஜங்ஷனிலிருந்து திருவாரூர் செல்லவேண்டிய வண்டி ஸ்டேஷனில் வந்து நின்றவுடன் அங்கு நின்ற ஒருவரிடம் பட்டிக்காட்டுப் பிரயாணி ஒருவர், ஐயா! நான் இந்த வண்டியில் தான் ஏறவேண்டியதோ?

அங்குநின்றவர்:— நீர் எந்த ஊர் போகவேண்டியவர்?

பிரயாணி:— திருவாரூர்,

அங்குநின்றவர்:— ஆம் இந்த வண்டியில்தான் ஏறவேண்டும்.

பிரயாணி ஏறிக்கொண்டார். வண்டியும் ஸ்டேஷனை விட்டு நகர்ந்தது. உடனே அங்கு நின்றவரை நோக்கி, ஓய்! உம்மை நான் ஏய்த்து விட்டேன். திருவாரூருக்குப் போகவில்லை. மதுரைக்குத் தான் போகிறேன்.

ஃ ஃ ஃ

தகப்பனார் பையன் இருவருமாக ஓர் ஊருக்குச்சென்றார்கள். அங்கு ஒரு சாப்பாட்டுவிடுதியில் சாப்பிட உட்கார்ந்தார்கள்

னே இருவருக்கும் இலை போடப்பட்டது. இலை போட்டு இருபது நிமிஷங்களுக்கு மேலாகிவிட்டது. தகப்பனார் சாமி! சாமி! என்று பலமுறை கூப்பிட்டுப்பார்த்தார்.

சிறுவன்:— அப்பா! வீட்டில் அம்மா ஒரு நிமிஷம் தாமதித்தாலும் அடி நொறுக்கி விடுகிறீர்களே, இவர்களைச்சும்மா விடலாமா.

ஃ ஃ ஃ

ஒரு பட்டிக்காட்டான் அச்சாபீஸ் சென்று மாரியம்மன் கோவில் திருவிழாப்பத்திரிகை முந்நூறு அச்சிட்டுத்தரவேண்டும்; அதற்கு எவ்வளவு கூலி என்று கேட்டான்.

அச்சாபீஸ்காரன்:— முதல் நூறு அச்சிடக் கூலிரூபா ஒன்றும், இரண்டாவது மூன்றாவது ஒவ்வொரு நூறுக்கும் அணா இரண்டாகவும் அச்சிட்டுத்தர முடியும்.

பட்டிக்காட்டான்:—ஓ! அப்படியா, இரண்டாவது நூறிலிருந்து அச்சிட்டுக் கொடும்! இதோ அணா ஆறு இருக்கிறது.

ஃ ஃ ஃ

ஒரு பட்டிக்காட்டான் தபாலாபீசுக்குச்சென்று கிளார்க்கைப் பார்த்து சிங்கப்பூருக்குக் கடதாசி எழுதப்போகிறேன்; ஒரு தலை கொடுங்கள் என்றான்.

கிளார்க்:— (இரண்டணா ஸ்டாம்பு ஒன்றைக்கொடுத்து) இரண்டணா கொடும்.

பட்டிக்காட்டான்:— முந்தி மதுரையில் ஒரு அணா தானே, ஐயா, விலை! இப்போது ஏன் கூடச்சொல்லுகிறீர்கள்?

கிளார்க்:— சரிதானப்பா, இரண்டணா விலை. வேணுமா வேண்டாமா? எனக்கு வேலையிருக்கிறது.

பாட்டிக்காட்டான்:— என்னய்யா கோவம்! நீங்கதான் கடுமையாகச் சொல்கிறீர்களே! நாலரைத்துட்டு வைச்சுக்கலாமா?

கிளார்க்:— என்னங்காணும், உம்மோடே பெரிய தொந்தரவாக இருக்கிறது. இங்கே குறைக்கிற வேலை கிடையாது. ஆறு துட்டு கொடுக்கவேண்டியதுதான்.

பட்டிக்காட்டான்:— ரெம்ப முறுக்கிறீரே! இந்தத் தபாலாபீசு ஒன்றுதானுக்கும். மதுரைக்குப் போகிறபோது வாங்கிக் கொள்ளுகிறேன். அந்த ஐயா சௌக்கியமாகத்தருவார்.

---

# பதில் ரசீது வருமா?

வல்லாளகண்டன் எழுதுவது;—

நான் எனது நண்பன் ஒருவனுக்குப் பல கடிதங்கள் எழுதினேன். அவனுடைய பதில் கடிதம் ஒன்றுவது கிடைக்கவில்லை. கடிதமெழுதி யெனக்கும் சலித்துப்போய்விட்டது. தபால் ஆபீசுக்குப்போய் போஸ்ட்மாஸ்டரிடத்தில் "ஐயா! உங்கள் தபாலாபீஸில் போடுகிற தபாலுக்கெல்லாம் பதில் வரவில்லையே; அந்தக் கடிதங்கள் போய்ச்சேருமா சேராதா?" என்றேன், அவர் சிரித்துக்கொண்டு, "சந்தேகமாக இருந்தால் பதில் கட்டி ஒரு ரிஜிஸ்டர் லெட்டர் அனுப்புங்கள்" என்றார். சரியென்று நாலணு ஸ்டாம்பு ஒட்டி ஒரு ரிஜிஸ்டர் செய்தேன். அந்தக்கடிதம் போய்ச்சேர்ந்ததற்கு என் நண்பனுடைய கையெழுத்துடன் பதில் வந்துவிட்டது. இருந்த சந்தேகம் தீர்ந்தது. நிற்க,

என் தகப்பனுருக்கு மாதந்தோறும் அமாவாசையன்று தர்ப்பணம் செய்து வருவதோடு, வருஷந்தோறும் திதியும் செய்து வருகிறேன். இப்படியே சுமார் 10 வருஷமாகத் தவறுமல் நடந்து வருகிறது. நான் செய்த தர்ப்பணமாவது திதியாவது என் தகப்பனுருக்குப் போய்ச்சேர்ந்ததற்கு ஒரு கடிதமாவது ஆள்மூலமான செய்தியாவது கிடைக்கவில்லை. இந்த நிலைமையில் ஒரு சுயமரியாதைக்கார நண்பர் வந்து, "நீங்கள் திதிசெய்யவேண்டாம்; அது வீண் வேலை; அது ஐயர் வயிற்றுக்குப் போகிறதே தவிர உங்கள் தகப்பனுருக்குப் போவதே கிடையாது. உங்களை ஐயர் ஏமாற்றுகிறுர்." என்று சொன்னுர். எனக்குக் குழப்பமாகிவிட்டது. பஞ்சாங்கக்கார ஐயர்வீட்டுக்குச் சென்றேன்." ஐயா, ஐயா, சுயமரியாதைக்காரர் இப்படிச்சொல்லுகிருரே, உண்மையென்ன? நான் செய்யும் தர்ப்பணமும் திதியும் என் தகப்பனுருக்கு ஒழுங்காகப்போய்ச்சேருகிறதா இல்லையா? தபாலாபீஸ் ஐயரைப்போல் நீங்கள் பதில் வாங்கித் தரவேண்டும். அதற்காக இன்னும் நாலு படி அரிசி கூடத்தருகிறேன்" என்று சொன்னேன். ஐயர் மேலுங்கீழுமாக விழித்தார். "என்னசேதி! சும்மா ஏமாற்றமுடியாது! பதில் வரவேண்டும். இல்லாவிட்டால் அன்றுமுதல் இன்றுவரை என்னிடம் வாங்கினதெல்லாம் வட்டியோடு திருப்பித்தரவேண்

டும். ஏமாற்ற முடியாது.'' என்றேன். "என்ன இப்படிச் சொல்றியள், உங்கள் முன்னோரெல்லாம் ம[illegible]பக்தாள், நீங்கள் என்ன யாரோ சொன்னார்களென்று இப்படி நினைக்கிறீர்கள். இதெல்லாம் சொல்லத்தக்கவிஷயமா?'' என்றார். எனக்குக்கோபம் வந்துவிட்டது. "சண்டை போடாதீர்கள், வீட்டுக்கு வந்து கண்டுகொள்கிறேன்'' என்றார். வருஷம் ஒன்றரை யாகிவிட்டது. என்கண்ணில் அகப்படுகிறாரில்லை. கண்டால் ஓடி ஒளிந்துவிடுகிறார். என்னை ஏமாற்றி மோசம் செய்து விட்டாரென்று வழக்குத்தொடர யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

---

## உனக்கு வாழ்வா?
## ஊருக்கு வாழ்வா?

ஒரு ஊரில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகனும் இருந்தான். அவர்கள் வீட்டில் ஒரு கழுதைதான் மிச்சமிருந்தது. மற்றெல்லா சாமான்களையும் விற்றுச்சாப்பிட்டுவிட்டார்கள். பசி அதிகப்பட்டது. வாங்கியிருந்த கடன் காரர்கள் கஷ்டப்படுத்தினார்கள். பொறுக்க முடியவில்லை. தகப்பனும் மகனுமாக கழுதையை ஓட்டிக்கொண்டு விற்பதற்காகச் சந்தைக்குப்போனார்கள். போகும் வழியில் எதிரே வந்த ஒருவன் கிழவனைப்பார்த்து, "அடே கிழவா நீ யென்ன பைத்தியக்காரனாக இருக்கிறாய்? சின்னப்பையனை நடக்கவிட்டுக் கழுதையை ஏன் சும்மா ஓட்டிக்கொண்டு போகவேண்டும்?'' என்றான். கிழவன் யோசித்துப்பார்த்தான். வழிப்போக்கன் சொல்லுவது வாஸ்தவந்தானே என்று நினைத்து மகனைக் கழுதையின் முதுகில் ஏற்றினான். கொஞ்சத்தூரம் போனார்கள். போகும்போது எதிரே இருவர் வந்தனர். அவர்கள் "இங்கே பாரடா இந்த முட்டாளை. தள்ளாத கிழவனை நடக்கவிட்டு இந்தப்பயல் கழுதைமேல் ஏறிக்கொண்டு போகிறான். இது பெரிய அநியாயம்.'' என்று பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்ட மகன் இவர்கள் சொல்வது நியாயந்தானே என்று கருதிக் கிழவனையும் கழுதைமேல் ஏற்றிக்கொண்டான். இருவரையும் சுமக்

கமாட்டாமல் கழுதை முதுகை நெளித்துக்கொண்டு சென்றது. எதிரே வந்தவர்கள் இதனைப் பார்த்து சகிக்கமுடியாமல் "அடபாவிகளா, பொறுக்கமுடியாத இந்த வெய்யிலில் இரண்டு தடியர்கள் ஒரு கழுதைமேல் ஏறிக்கொண்டு போகலாமா? உங்களைக் கழுதை சுமந்துசெல்வதைக் காட்டிலும் நீங்கள் கழுதையைச்சுமந்தாலும் புண்ணியமுண்டு" என்று சொன்னார்கள். நிசந்தான். நாம் கழுதையைத்தூக்குவோம். அநேகம்பேர் சேர்ந்து சொல்வது தெய்வ வாக்குமாதிரியல்லவா என்று கருதி கிழவனும் மகனும் தங்களிடமிருந்த கயிற்றினால் கழுதையின் கால்களைக்கட்டினார்கள். கையிலிருந்த கழியை கழுதையின் காலில் மாட்டி இருவருமாகத் தோளில் தூக்கிக்கொண்டு சென்றார்கள். ஒரு பாலத்தின்மேல் செல்லும் போது அங்கு கூடியிருந்த ஜனங்கள் இதனைப்பார்த்துக் கைகொட்டிச்சிரித்தார்கள். அதிகமான சத்தத்தைக்கேட்டுக் கழுதை உதைத்துக்கொண்டது. அதை மாட்டியிருந்த கம்பு முறிந்து கழுதை ஆற்றில் விழுந்து செத்தது. கிழவனும் மகனும் உட்கார்ந்து அழுதார்கள். இந்தக் கதை வெறுங் கதையல்ல. இப்படி இன்று எல்லாக் காரியங்களும் நடக்கின்றன. கையில் பணங்கிடையாது; கல்யாணச் செலவுக்கு இரண்டாயிரம் வேண்டும். இல்லாவிட்டால் நூறு வருஷம் பெண்ணுக்கு ஆனாலும் பிண்டமாக இருக்கவேண்டியதுதான். புருஷனும் மனைவியும் மகிழ்ச்சியாகப் பக்கத்திலிருந்து பேசிக் குலாவவேண்டுமென்பதில் இருவருக்கும் மூக்கு முட்டும்படியான ஆசை. ஊர் ஜனங்கள் கேலி செய்வார்களே என்று கவலை. அனேகமாக நமது ஜனங்களின் வாழ்வு முழுமையும் மற்றவர் சொல்வார்களே, கேலி செய்வார்களே மதிக்கமாட்டார்களே என்று எண்ணி எண்ணி அடங்கி வீணாகின்றது. ஊர் ஜனங்கள் தங்களைக் குறைவாகச் சொல்வார்களென்று பயந்து கடன் வாங்கியாவது செலவு செய்ய முன்வருகின்றனர். இதனால் ஒவ்வொருவரும் தன்னுடைய சௌகரியத்துக்கு இஷ்டம்போல வாழ முடிகிறதில்லை. வண்ணான் கழுதையைப் பறிகொடுத்தமாதிரி வழிப்போக்கர்களுடைய அபிப்பிராயத்தை எல்லாம் கேட்டு நடக்க ஆரம்பித்துக் கழுதையை இழந்து தெருவில் நின்ற மாதிரியாகவே பலர் சீரழிகின்றனர்.

---

# பலதிரட்டு.

## பூணூல் அபிவிருத்தி.

இப்பொழுது கலியாணஞ் செய்யாதவர்கள் மூன்று நூல் சேர்ந்த பூணூலும், கலியாணமானவர்கள் ஆறு நூல் சேர்ந்த பூணூலும் போட்டுக்கொள்கிறார்கள். இது போதாதென்றும், நாஸ்திகமும் பிராமண துவேஷமும் அதிகப்பட்டுவிட்டபடியால் இனிமேல் 'டபிளாக' கலியாணமாகாதவர்கள் அரை டசன் நூல் கொண்ட பூணூலையும், கல்யாணமானவர்கள் ஒரு டசன் நூல் கொண்ட பூணூலையும் போட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்து எங்கும் விளம்பரம் செய்யும்படி ஹாலாஸ்ய க்ஷேத்திரக் கள்ளுக் கடைக் கண்ட்ராக்டர் பிர்மஸ்ரீ கணேசய்யர் பிராமண மகா சபைக் காரியதரிசிக்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஒரு திருத்தம்.

ஷஷ்டி பூர்த்திக் கல்யாணம் 60-வது வயதில் நடப்பதை இனிமேல் 30-வது வயதில் நடத்தவேண்டுமென்று சாஸ்திரத்தில் ஒட்டி யெழுத வேண்டுமென்று வீரேசுவர அக்கிரகாரப் பிராமணர்கள் கருதுகிறார்களாம். வரவரமனிதர்கள் அதிகமாக அறுபதுவயது வரை உயிருடனிருக்கவில்லை யென்பதே அதற்குக் காரணமாம்.

## இனிக் கூடாது.

தஞ்சாவூர் ஜில்லாவில் பாய்ந்து செல்லும் நதியாகிய காவேரியானவள் ருதுவாகி சமுத்திரராஜனைக் கல்யாணஞ் செய்துகொண்டு விட்டபடியால் இனிமேல் ஆண்மக்கள் அதன்மேல் விழுந்து குளிக்கவோ அல்லது சௌசம் செய்யவோ கூடாதென்று ஒரு அறிக்கை கூறுகிறது.

## எழு கடல் தீர்த்தம்.

மதுரை எழுகடல் நாற்றம் பொறுக்க முடியவில்லை யென்றும், அது புழுமயமாகி ஆபாஸமாகிவிட்டதென்றும் கருதி உள்ளே ஆளிறங்க முடியாதபடி அடைக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்ததால் அதில் முழுகி முக்திக்கு நேரே செல்ல வேண்டிய பலர் தடைப்பட்டுவிட்டார்களென்றும் திறந்துவிட்டால் அதில் முழுகி அந்த நிமிஷமே கைலாசத்தைக் கண்ணால் பார்க்கக் கூடு

மென்றும் ஆதலால் நோட்டீஸ் கண்ட இருபத்துநாலு மணி நேரத்துக்குள் திறந்துவிட வேண்டுமென்றும் இல்லாவிட்டால் வழக்குத் தொடரப்படுமென்றும் மதுரை முனிஸிபல் சேர்மன் திரு ஆர். எஸ். நாயுடு அவர்கட்கும் வைஸ் சேர்மன் திரு பிச்சை முத்துக் கோனாரவர்கட்கும் வைதீகர்கள் நோட்டீஸ் கொடுக்கப் போவதாக வதந்தி உலாவுகிறது.

விபூதி அனுப்புதல்.

லோகோபகாரி, சிவநேசன் ஆகிய பத்திரிகைகளில் விபூதி மகிமையைப்பற்றி விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறது. விபூதி யின் மகிமை மிகப்பெரிது. அதனை அணிவோர் எல்லாப் பேறும் பெறுவர்; பாவமெல்லாம் போகும். புண்ணியமெல்லாம் வரும். அதன் பெருமையை உள்ளபடி உணர்ந்து அனுபவித்த இவ்விரு ஆசிரியர்களும், இனிமேல் இப்பத்திரிகைகளை அச்சிட்டனுப்பா மல் ஒப்பற்ற விபூதியை மடித்து வாரந்தோறும் சந்தாதார்கட்கு அனுப்பலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

---

## விக்கிரகங்களுக்கு அடி.

---

உண்மை பக்தன் எழுதுவது.

கடவுளுடைய பரிசுத்தமான திருவுருவங்களை விக்கிரக வடி வாக வைத்து ஆஸ்திக சிரோமணிகள் வணங்கி வருகின்றனர். இதையொட்டியே பிள்ளையார், சுப்பிரமணியர், பரமசிவன், பெரு மாள், கருப்பர், காளியம்மன் முதலிய பல தெய்வங்களின் உரு வங்களை பிளாக் செய்து பத்திரிகைகளில் அச்சிடுகிறார்கள். இது நியாயமாகுமா என்பதை எவரும் யோசிப்பதில்லை. விக்கிரகங்கட் குப்பள்ளியறையில் வங்கா போட்டுக் காற்று வீசுகின்றனர். காலை விழாக்காலங்களில் வெட்டிவேர் விளாமிச்சவேர் மயில்தோகை முத லிய விசிறி கொண்டு விசிறியும் பன்னீர் தெளித்தும் சுவாமியினு டைய களைப்பைப்போக்குகின்றனர். இப்படிப்பட்ட பக்தர்கள் சுவாமியின் விக்ரகங்களைப் பத்திரிகைகளில் போட்டு மூஞ்சிதேயும் படி வெள்ளைக்காரர் செய்த மெஷினில் கொடுத்து அடிப்பது தரு மமாகுமா? கொஞ்சமும் இரக்கமும் பக்தியுமில்லாமல் மூக்கு கண்

முதலிய எதையும் நோக்காமல் 1000-10,000 என்று பிரதிகளை மையைத்துவைத்துக் கொண்டு அடி அடியென்று அடித்துத் தீர்க்கின்றனரே. இவர்கள் எந்த நரகத்துக்குப் போவார்களோ? தெரியவில்லை. சைவசமயத்தையே பாதுகாக்கப்புறப்பட்டுள்ள பத்திரிகைகள் கூட இதைக்கவனிக்கவில்லை. அப்பத்திரிகைகளிலும் நடராஜா முதலிய சுவாமிகள் அகப்பட்டு அடிபட்டு மூக்குமுகமெல்லாம் நசுங்கித்தேய்ந்து தப்பி ஓடவும் முடியாமல் அழிந்து போகின்றன. அப்படிப்போனாலும் விடுகிறார்களில்லை. மறுபடியும் அந்த சுவாமிகளைச் செய்து வைத்து அடியடியென்று அடிக்கிறார்கள். இப்படியே கும்பாபிஷேகப் பத்திரிகைகளிலும் அடி செம்மைக் குவிழுகிறது. இப்படிச்செய்வது சரிதானா என்பதைப் பொது ஜனங்கள்தான் உணரவேண்டும். உண்மையில் இந்த சுவாமிகட்கு உயிரிருந்தால் இந்த அடியை ஒருநாளும் பொறுத்திருக்கமுடியாது. பத்திரிகை போடுகிற பக்தர்களை அந்த மிஷினில் கொடுத்து அவர்கள் மூஞ்சியில் ஒரு நசுக்கு நசுக்கினால் அந்த அருமை அப்போதுதான் தெரியும். இந்த சுவாமி விக்கிரகங்களைப் பத்திரிகைகளில் பார்த்தால் உண்மையான தெய்வபக்தனான என்போன்றவருக்கு சகிக்கமுடியவில்லை. எப்படி சகிக்கமுடியும்? இனிமேலாவது தெய்வவிக்ரகப் பொம்மைகளைப் பத்திரிகைகளில் போட்டு மூஞ்சிதேயும்படி அடித்துத்துன்புறுத்தாமல் இருக்குமாறு அந்த சுவாமிகளின் சார்பாக எல்லாரையும் கேட்டுக்கொள்கிறேன்.

---

## ஐய வினா.

---

### அண்ணாமலையார் துணையா? தபாற்காரர் துணையா?

அநேகர் தாங்கள் எழுதும் கடிதங்களில் அண்ணாமலையார் துணை, தண்டாயுதபாணி துணை, புதுக்கருப்பையா துணை, ஷண்முகநாதன் துணை என்று எழுதுகிறார்களே? இந்த சுவாமிகள் மனிதர்களுக்குத் துணையாக இருக்கிறார்களோ என்னவோ? எழுதுகிற கடிதங்களுக்கு யார் துணையென்று பார்த்தால் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தபால்காரர்தான் துணையாக இருக்கிறார்கள். கடதாசியை யெழுதும்போது எழுதுபவரும் பேனா மைக்கூடும் காகிதமும்

துணையாக இருப்பதைக் காணலாம். எழுதி முடிந்தால் உடன் தபாலில் போட்டுவிடுகின்றனர். பிறகு அதற்குத் தபால்காரர் தான் துணை. வேறு துணை யேது? அதைப் பக்குவமாக எடுத்து முத்திரை போட்டு மழையில் நனையாமலும் வெயிலில் காயாமலும் அழுக்குப்படாமலும் பையில் போட்டு பந்தோபஸ்தாகக் கட்டி வண்டி பிடித்தும் மோட்டாரேற்றியும் ரயிலேற்றியும் குறிப்பிட்ட இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். அந்த அந்த ஊர்த் தபாலாபீசுக்காரர்கள் உடைத்து விலாசம் பார்த்துக்கொடுக்கிறார்கள். இது தானே உண்மை? கடிதம் எழுதினது முதல் குறிப்பிட்ட மனிதரிடம் சேர்க்கப்படும் வரை தபாற்காரர் துணையாக இருக்கிறதே தவிர மேற்கண்ட சாமிகள் துணையாக இருப்பது தெரியவில்லையே? ஒரு கடிதத்துக்கு எழுதுகிறவர் ஒரு அணா செலுத்தி ஸ்டாம்பு வாங்கி ஒட்ட வேண்டும்; ஒட்டாமல் சும்மா போட்டுவிட்டால் கடிதத்தை வாங்குபவர் ஒரு அணா அபராதமும் சேர்த்து இரண்டணா கொடுக்க வேண்டும். இரண்டுமில்லையென்றால் எத்தனை சாமி துணை போட்டாலும் கடிதம் போய்ச் சேரவில்லை. இதனால் கடிதங்களுக்குத் தபாற்காரர் துணையா அல்லது அண்ணாமலையார் முதலிய சுவாமிகள் துணையா? என்பதை ஒவ்வொருவரும் ஆராய்ந்து தீர யோசித்து முடிவு செய்து என் சந்தேகத்தைத் தீர்க்கும்படி வேண்டுகிறேன்.

'உண்மை நாடுவோன்'

---

# கரன்ஸி நோட்டு பஹிஷ்காரம்.

இப்போது வழங்கிவரும் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நூறு ரூபாய் முதலிய கரன்சி நோட்டுகளிலும் காலணா முதல் ஒரு ரூபாய் வரை உள்ள நாணயங்களிலும் பிள்ளையார் சுழி சிவமயம் திருச்சிற்றம்பலம் ஆகியவை போடப்படவில்லை. அதனால் சைவ சமயத்தார் தொடமுடியவில்லை. ஆகையால் இனி வரும் நோட்டுகளில் முறைப்படி சைவ சமய அடையாளமான பிள்ளையார் சுழி சிவமயம் திருச்சிற்றம்பலம் ஆகிய மூன்றையும் போடச் செய்ய வேண்டும். நாணயங்களில் மூன்றும் போட இடமில்லாவிட்டால் பிள்ளையார் சுழி சிவமயமாவது, தீராதபக்ஷம் பிள்ளையார்சுழி மட்டு

மாவது போடவேண்டும். பழய நோட்டுகளை உடனே ஒழித்து விடவேண்டும். பழய நாணயங்களை உருக்கிவிடவேண்டும். இதற்கு இந்தியா கவர்ன்மெண்டார் ஒத்து வராவிட்டால் அவர்களுடைய நோட்டுகளையும் நாணயங்களையும் தொடுவதில்லை யென்று பஹிஷ்கரித்துவிடவேண்டும். அதுதான் உண்மையான சைவ சித்தாந்திகளின் செய்கையாகும். பொருளுக்கு ஆசைப்பட்டு பிள்ளையார் சுழி சிவமயமாகிய ஒப்பற்ற மகா மந்திரத்தைக் கைநழுவ விடுவது பெரும் பாதகமாகும். என்று அகில உலக சைவசித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி கைலாசத்திலிருந்து எழுதுகிறார்.

---

## டோல்கேட்டுக்கு ஆள் தேவை!

மோட்டார்கள் ஓட்டுபவர்கள் டோல்கேட்டுகளில் நிறுத்திப் பணந்தராமல் ஏமாற்றிவிட்டுப் பறந்து விடுவதைத் தடுக்கும் பொருட்டு ஒரு ஆள் தேவை! கார்காரர்கள் ஒழுங்குக்குக் கட்டுப்படவில்லை; அரசாங்கத்தார் காரை நிறுத்திப் பணங் கொடுக்க வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிற சட்டத்தையும் லட்சியஞ் செய்யவில்லை; சிவப்புக் கொடியான அபாயக் கொடியைக் காட்டித் தடுத்தாலும் நிறுத்துவதில்லை; கண்ட்ராக்ட்டுக் காரருக்கு நஷ்டம் வருமே என்று இரக்கப்படவுமில்லை. இம்மாதிரியான செய்கையால் ஒவ்வொரு கேட்டிலும் எங்கட்கு ஆயிரக்கணக்கான நட்டம் வருகிறது. இதைத் தடுக்க நாங்கள் சாஸ்திரப்படி ஆராய்ச்சி செய்ததில் பக்கா பிராமண வைதிகரை ஏற்படுத்தினால்தான் பண வசூல் ஆகுமென்ற முடிவுக்கு வந்துவிட்டோம். அவர்களுடைய வலக்கையில் நெருப்பு இருப்பதாகவும், அந்தக்கையைத் தூக்கிக்காட்டினால் எதிரே நிற்பவர் மேல் நெருப்பு பிடித்து எரிந்துவிடுமென்றும், அதனால்தான் யாராவது அவர்களைக் கும்பிட்டால் திரும்ப அவர்கள் கும்பிடாமல் இடது கையைத் தூக்குகிறார்களென்றும் தெரிகிறது. ஆதலால் டோல்கேட்டில் நிறுத்தாத காரை உடனே வலக்கையைக் காட்டி பெட்ரோல் டாங்கில் நெருப்புப் பிடிக்கும்படி செய்யக் கூடிய பிராமணர்கள்தேவை. ஒவ்வொருவருக்கும் மாதம் 250 ரூபா சம்பளங் கொடுக்கப்படும். வசிக்கவும் ஸ்நானம் பூஜை முதலிய ஜபதபாதிகட்கும் இடவசதி செய்துகொடுக்கப்படும். வேலைக்கு வரவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு மனுச் செய்து கொள்ள வேண்டியது.

ம. மீ. ச. சேகுமுகமது சாஹேப் பகதூர்,
அகில உலக டோல்கேட் கண்ட்ராக்டர், யமலோகம்.

---

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை கூ (9) | காரைக்குடி பிரமோதூத-ஹூ ஆவணி-மீ | மணி உ (2)

1930

## விடுதலை.

கும்மியடி தமிழ் நாடுமுழுதுங்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தா ரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி

கற்புநிலை யென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்

பட்டங்க ளாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

காதலொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி.

பாரத நாட்டின் பாதி உடலான பெண்ணுலகம் மிருக உலக மாக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஆக்கப்பட்டுவிட்டது. முன்னாளிலிருந்த குருடர்கள் பெண்களை உயரவிட்டால் தங்கள் குட்டு வெளியாகுமென்று பயந்தனர். அவர்கள் தங்கட்கு மேலேறி விட்டால் சாயம் வெளுத்துப் போகுமென்று கருதியே பெண்மக்களை அடைத்துப்பூட்டி அடிமைப்படுத்தி விட்டனர். அந்த அடிமைத்தனத்தின் ஆணிவேரில் வெந்நீர் விடப்பட்டு வருகிறது. வீறு கொண்டோடிவரும் புது வெள்ளத்தைப் பாழடைந்த பழய அணைகள் தடுக்க முடியா. ஏட்டைத் தொடக்கூடாதென்ற கட்டுப்பாடு ஒழிந்தது; வீட்டை விட்டு வெளியே வந்தால் கற்புக்கெடுமென்ற குருட்டெண்ணம் தகர்ந்துவிட்டது. "பட்டம் ஆள்வோம்: சட்டம் செய்வோம்; ஆணுக்குப் பெண் இளைப்பில்லை; தெரியுமா?" என்று பாரதிப்பெண் கெட்கிறாள். "பண்டைக்கால தருமத்தைக் காப்பாற்ற நாங்கள் இருக்கவில்லை, அதற்கு மேலாகச் செய்வோம்" என்று பாரதியார் கூறுவது கவனிக்கத்தக்கது.

---

# துவேஷிப்பது யார்?

சுயமரியாதை இயக்கத்தினரை பிராமணத்துவேஷிகள் என்று பல பார்ப்பனர் பிரசாரம் செய்து வருகின்றனர். பிராமணத்துவேஷம் என்றால் பூலோகமே கவிழ்ந்து விடுமென்ற உணர்ச்சி மற்றவருக்கு வரும்படி பாசாங்கு செய்யப்படுகிறது. சுயமரியாதைக் கட்சிக்காரர் கூறுவதன் அடிப்படையான நோக்கம் ஒருவனை யொருவன் கட்டாயப்படுத்தி அடிமையாக்கக் கூடாதென்பதாகும். தாழ்த்தி வீழ்த்திக் கொடுமை செய்தவர்களுள் பார்ப்பனரைவிடத் தீமை புரிந்தவர் இத்தேசத்தில் வேறுயாருமில்லை யென்று திட்டமாகக் கூறலாம். தங்கள் ஜாதியாரின் நன்மை யொன்றினை மட்டும் குறிக்கொண்டு நாட்டுமக்கள் அத்தனை பே

ரையும் தாழ்ந்தவர் என்று கருதி மேலேற வொட்டாது தளை யிட்டுவிட்டனர். பார்ப்பனர் இந்நாட்டு மக்களுக்குள் ஜாதிப்பிரி வினையைக் கற்பித்து ஒருவருக்கொருவர் ஏற்றமென்றும் தாழ்வெ ன்றுங் கருதும்படியான நிலைமையை ஏற்படுத்திவிட்டனர். பார்ப் பான், க்ஷத்ரியன், வைசியன், சூத்திரன், தீண்டாதவன் என்றின் ஞோரன்ன பலவித ஜாதிபேதங்களை உண்டாக்கி அதிலிருந்து இன் றிருக்கும் நாலாயிரஞ் சாதிகளைத் தோற்றுவித் திருக்கின்றனர். பார்ப்பனரல்லாத அத்தனைபேரும் தங்கட்குள் ஒருவருக்கு ஒரு வர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று சண்டையிட்டுக்கொள்ளும்படி யும் ஆனால் எல்லாரும் ஒரே அபிப்பிராயமாக 'பார்ப்பனர் உயர்ந் தவர்' என்று சொல்லும்படியும் ஏற்பாடு செய்து கொண்டிருக் கின்றனர். நான்கு ஜாதி வகுத்தகாலத்தில் பலமுள்ளவர்களை க்ஷத்திரியரென்றும் பணக்காரரை வைசியரென்றும் உயர்வு கொடுத்துத் தம் வசப்படுத்திச் சேர்த்துக்கொண்டு மற்ற தொழி லாளர்களையும் உழைப்பாளிகளையும் அடித்து அமிழ்த்தித் தாழ்த்தி விட்டதோடு இப்பொழுது தங்களைத்தவிர பாக்கியுள்ள அத்தனை பேரும் சூத்திரரென்று கூசாது கூறுவதுடன் அப்படியே சாத்திர மெழுதி முத்திரையிட்டும் வைத்திருக்கின்றனர். ஒரே தேசத்தில் ஒரே மாதிரியாகப்பிறந்துவரும் மக்களினுள் பெதமுண்டுபண்ணி உயிர்வாழ்ந்து வருகின்றனர். சூத்திரன், வேசிமகன், அடிமை, தீண்டப்படாதான் என்று சொல்லியும் எழுதியும், அவைகள் கட வுள் வாக்கென்று கதை கட்டியும் சூத்திரனும் தீண்டாதவனும் அடிமைத்தனத்திலிருந்து மீளக்கூடாதென்றும் மீண்டாலும் மீள நினைத்தாலும் மழை பெய்யாது வானம் இடிந்து விழுந்துவிடும் கடவுள் கோபம் வரும் என்றெல்லாம் ஏடுகளில் எழுதிப்படித்துப் பயமுறுத்தியும் மற்றமக்களை அடக்கி யொடுக்கிப்போட வழிகண் டிருக்கின்றனர். நூற்றுக்கு சுமார் 10 பேர் படித்திருக்கிற இந் தியாவில் பார்ப்பனர் முழுமையும் படித்துக்கொண்டனர். சூத் திரர் முதலியோர் படிக்கக்கூடாதென்று சட்டமிட்டுக் கடுமையா கத்தடுத்திருக்கின்றனர். இந்தியர்கட்குப்படிப்பில்லை; நூற்றுக்குப் பத்துப்பேர்தான் படித்திருக்கின்றனரென்று உலகெங்கும் பேச்சு. ஆனால் உண்மையைப் பார்க்கும்போது ஜெர்மனி, இங்கிலாந்து,

பிரான்சு, ஜப்பான் முதலிய தேசத்தினரைப் போலவே பார்ப்பனர் நூற்றுக்கு நூறுபேரும் படித்திருக்கின்றனர். பார்ப்பனரல்லாதாரில்தான் 100-க்கு 10 பேர் படித்திருக்கிறகணக்கு இருக்கிறது. ஏழைதேசத்தில் பிறந்த மக்களுள் பார்ப்பனர்மட்டும் முழுமையும் படித்துக்கொண்டு மற்றவர் சூத்திரர் அவருக்குப் படிப்பு வராது படித்தால் உலகமே முழுகிவிடும் கடவுள் கோபிப்பார் என்று கூறித் துவேஷித்திருப்பது யார்?

தீண்டாதவரென்று மனிதக்குலத்தில் ஏழுகோடிக்கதிகமான மக்களை ஒதுக்கி வைத்து அவர்கள் "நல்லஉடை உடுக்கக்கூடாது; தங்கநகையணியக்கூடாது; மேலே வேட்டி சட்டை போடக்கூடாது; செருப்பு அணியக்கூடாது; குடைபிடிக்கக்கூடாது; சாமி சாமியென்று மற்றவரைக் கும்பிட்டுக்கொண்டே திரியவேண்டும்; பார்ப்பான் குடியிருக்கிறவீதியில் அவர்கள் நடக்கக்கூடாது; அவர்களுடைய பச்சைக்குழந்தைகள் சாகக்கிடந்தாலும் வைத்தியன் கைபிடித்துப் பார்க்கமாட்டான்; உயர்ந்த விஷயங்களைப்பற்றிப்படிக்குமிடங்கட்கு அவர்கள் வரக்கூடாது; இந்து மதத்திலுள்ள அவர்கள் அவர்களுடைய கோயில்கட்குள் நுழையக்கூடாது; சிலவிடங்களில் இவர்களின் முகத்தைப்பார்த்தால் தீட்டு பேசினுல் தீட்டென்று கருதப்படுகிறது. இப்படிக் கொடுமையாக துவேஷிக்கப்படவில்லையா? இந்தக் குலத்தாரிடம் பார்ப்பனர் பல்லாயிரம் ஆண்டுகளாகக் காட்டிவரும் துவேஷம் கொஞ்சமா? இதைவிடமனிதன் துவேஷிக்கக்கூடிய வகை ஏதாவது இருக்கிறதா? இருக்கமுடியுமா? இந்தத்துவேஷம் வாய்ப்பேச்சில் மட்டுமல்ல. சாஸ்திரத்திலும் எழுதப்பட்டு அந்த சாஸ்திரம் கடவுள் வாக்கென்றும் சொல்லப்பட்டு இன்று அனுபவத்திலும் நடந்து வருகின்றது. இதே மாதிரி மற்ற ஜாதியாரிடத்தும் பார்ப்பனர் அளவிடமுடியாத துவேஷத்தைக்கொண்டிருக்கின்றனர். கோவில்களில் தாங்கள் நிற்குமிடத்துக்கு மற்றவர்கள் வரக்கூடாது; கடவுள் காரியத்துக்கும் வைதீக காரியத்துக்கும் தங்களைத்தவிர மற்றவர் தீண்டாதவரென்று பஹிரங்கமாகக் கூறி வருகின்றனர். மற்றவர் தடுமாறித் தங்கள் மேற்பட்டாலும் தலைமுழுகித் தீட்டைப் போக்கிக்கொள்ளவேண்டுமென்று கருதுகின்றனர், மற்றவர் தொட்ட பொருள் தீட்டாகி

விட்டதென்றும் பிறர் சாப்பிட்டு மிஞ்சிய பொருள் சேஷமாகிவிட்டதென்றும் கூறப்படுகிறது. எந்த இடத்திலும் தங்களைத்தவிர மற்றெல்லாரும் இழிந்தவர்களென்றும் உயர்வடையக்கூடாதவர்களென்றும் கூறி இன்றுவரை துவேஷித்து வருவதைச் சிறிதுசிந்திப்பாரும் உணர்வர். மற்றவர் கட்டிய கோயிலினுள்ளும் சத்திரங்கள் வேதபாடசாலைகளினுள்ளும் உரியவர்கள் போகக்கூடாதென்றும் போனால் தீட்டாகிவிடுமென்றும் கூறித் தடுத்திருப்பதொன்றே இவர்கள் மற்றவர்களை எவ்வளவுவரை துவேஷிக்கிறார்களென்பதை விளக்கப்போதியதாகும். உண்மை இவ்வாறிருக்க, பிரமணரைத்துவேஷிக்கிறார்கள் என்று கொஞ்சமும் அஞ்சாமல் கூற முன்வருவது பொறுக்கக்கூடியதன்று. சுயமரியாதை இயக்கக்காரர் பிராமணரை எங்கே தூஷிக்கிறார்கள்? "உன் உழைப்பைக்கொண்டு பிழை; உன் யோக்கியதைக்குத்தக்க கௌரவத்தை விரும்பு" என்று கூறுவது துவேஷமா? "உன்னைப்போன்ற மனிதர்களை உன்னைப்போல் வாழவிடு" என்பது துவேஷமா? "நீ உழைக்காமல் மற்றவன் ரத்தத்தைப்பிழிந்து சம்பாதிக்கும் பொருளைப் பொய்யும் புரட்டும் சொல்லிப் பிடுங்கி நீ சுகமாக உண்டு உடுத்து படித்து மேலேற இனிமேலும் விரும்பாதே! அதற்காகப் பொய்சாஸ்திரம் எழுதாதே! ஏமாற்றாதே!" என்று சொல்லுதல் துவேஷிப்பதா? பல்லாயிரம் வருஷங்களாகச் சம்பாதித்துப் பார்ப்பாரஜாதிக்குக்கொடுத்துவரும் ஜனங்களைப்பார்த்து "இதுவரை வீணுக்குழைத்தது போதும், இனி ஏமாறவேண்டாம்; உண்மையை உணருங்கள்; ஏமாற்றுவோருக்குக் கொடுக்கவேண்டாம், மனிதனுக்கு வேண்டிய காரியத்தைப் பாருங்கள்; பார்ப்பானும் உங்களைப்போல மனிதன்தான். அவர்களைப் போலவே உங்கட்கும் அறிவுண்டு; மேலேறிவரலாம்" என்று சொல்லுவது பார்ப்பன துவேஷமா? ஆதிமுதல் அந்தம் வரை துவேஷித்துவரும் பார்ப்பனர்களைக் கொஞ்சம் கீழே இறங்கச்செய்வதும் கீழே கிடப்பவரைச்சிறிது உயரச் செய்வதும் இடையிலிருப்பவருடன் எல்லோரும் சமமாக இருக்கச்செய்வதும் பிழையென்று கூறமுடியுமா? ஒருவனை உச்சியிலேற்றுவதும் ஒருவனைப் பாதாளத்தில் தள்ளுவதும் தருமமா? அப்படியிருப்பதுதான் பிராமண விசுவாசமென்றும் எல்லாரும் நன்று

க இருக்கவேண்டுமென்பது பிராமணத்துவேஷமென்றும் கூறுவதானல் அது ஒழுங்காகுமா? பார்ப்பனர் துவேஷித்துவருவனதப்போல சுயமரியாதைக்காரர், பார்ப்பானைத்தொட்டால் தீட்டு பார்த்தால் தீட்டு என்ருவது, அவர்கள் கோவிலுக்குள் செல்லக்கூடாது என்ருவது, குளங்களில் இறங்கினல் தீட்டாய்விடுமென்ருவது, அவர்கள் தொட்டபொருள்கள் தீட்டுப்பட்டுவிட்டதென்ருவது சொல்லவில்லை. அவர்கள் பள்ளிக்கூடத்தில் நுழைந்து படிக்கக்கூடாதேன்று சொல்லவில்லை. அப்படிச்சொல்லாதிருக்கும்போதே பிராமணத்துவேஷிகள் என்று சொல்ல முற்படுவதின் பொருளென்னை? மற்றவர்கள் இழந்திருக்கும் உரிமைகளைப் பார்ப்பனரும் இழக்கும்படி செய்தால்தான் அவர்கட்கு அதனலேற்படுங் கஷ்டம் விளங்கும்போ லிருக்கிறது. தாங்களே படிக்க வேண்டுமென்றும் உயர்ந்தவைகளை அனுபவிக்கவேண்டுமென்றும் விரும்புகின்றனர். அதோடுமட்டும் நில்லாது மற்றவர் படிக்கக்கூடாதென்றும் உயர்ந்தவைகளை அனுபவிக்கக்கூடாதென்றும் கருதிப் பெருமுயற்சி செய்து நூலெழுதிவைத்து அனுபவத்திலும் கொண்டுவந்துவிட்டனர். சுயமரியாதைக்காரர் உங்களைப்போல எல்லாருக்கும் இடங்கொடுங்களென்றும் மற்றவர்களைப் பார்த்து நீங்களும் அவைகளைப்பெறுங்கள் என்றும் கூறிவருகின்றனரேயன்றி பார்ப்பனருக்கு அவ்வுரிமைகளில்லாதபடி செய்யுங்களென்று கூற முன்வரவில்லை. இந்த நிலையில் துவேஷிக்கிருர்கள் பிராமணத்துவேஷிகள் என்று புலம்ப முன்வருதல் ஒழுங்கா என்பதைச்சிறிது உற்று நோக்குமாறு வேண்டுகிறோம்.

---

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே
பொய்யும், ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே
நல்லோர் பெரியரென்னுங் காலம் வந்ததே
கெட்ட, நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே.

— பாரதியார்.

# விதவைகளாவது தலைவிதியா?

திருச்சி, மிஸ். நீலாவதி எழுதுவது.

ஆணுக்கொரு நீதியும், பெண்ணுக்கொரு நீதியும் பேசுவதில் இந்தியா தலைசிறந்தது. இந்திய வைதீகர்கள் பெரும் பெரும் நிபுணர்கள். பிறவியிலேயே பெண்கள் தாழ்வாய்க் கருதப்பட்டு வரும்போது நீதியிலும் அவ்வாறுதானே அவர்களுக்கு ஓரவஞ்சமாய் முடியும். நிற்க, நம்மக்களுக்கு சாமிப்பைத்தியம், கோவிற் பைத்தியம், வெகுவாய்ப்பிடித்திருப்பதுபோல் 'தலைவிதி'ப் பைத்தியமும் ஒன்றுண்டு. எல்லாம் தலைவிதிப்படியே நடக்குமென்றும் தலையெழுத்துக்கு மாறாக நடப்பது யாதொன்றும் இல்லையென்றும், நமது மதியினால் நாம் என்ன செய்ய முயற்சித்தாலும் விதிப்படி நடப்பது நடந்தேதீருமென்றும், அதில் இம்மியளவும் குறையாதென்றும் கூறுகின்றார்கள். இந்தத் 'தலைவிதி' என்னும் ஒரு சொல் நம்மக்கள் வாழ்நாள் முழுவதையும் நாசப்படுத்தி விடுகின்றது. எடுத்ததற்கெல்லாம் பார்ப்பனர்கள் (வைதீகர்கள்) 'மதம்போச்' சென்னும் கூக்குரலை மறவாமற்போடுவது போலவே, யாவற்றிற்கும் நம்மக்கள் 'தலைவிதி' என்னும் கூப்பாட்டைத் தவறாது போடுகின்றனர். இத்தலைவிதியே என்றும் நம்மை அடிமைகளாக இருக்கச்செய்து விட்டதென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. சுயமரியாதைக் காரர்களாகிய நாம் மற்றப் பைத்தியங்களை ஓட்டுதற்குமுன் இத்'தலைவிதி' பைத்தியத்தைக் கண்டிப்பாய் முதலில் ஓட்டவேண்டும். நிற்க, நமது நாட்டில் பெண்கள் தம் கணவன் மார்களை இழந்தால் உடனே விதவைப்பட்டம் சூட்டி மூலையில் உட்கார வைக்கப்படுகின்றது. நல்ல உணவில்லை. நல்ல ஆடை இல்லை. நல்ல காற்று இல்லை. சந்தோஷமனவெழுச்சிக்குஇடமில்லை. என்றும் துக்கம், எப்போதும் ஏக்கம், வாழ்நாழ்முழுவதும் நரகம், மகிழ்ச்சி விழாக்களில் மறைவிடத்தில்தான் கிடக்கவேண்டும், எதிரில் வந்தால் அபசகுனம் அந்தோ? விதவைத்தன்மையால் பெண்கள் படும் துயரம் இவ்வளவவ்வளவென்று விவரிக்க வியலா. கணவனை யிழந்த பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளோ கொடிது! கொடிது!! அம்மம்ம! நஞ்சினும் கொடிது!!! இவ்வளவும் ஆண்களுக்கு உண்டோ

வென்றால் அது இல்லையென்பது எல்லோரும் அறிந்ததே? புருடனை இழந்த பெண்களுக்குக் கொடிய நிபந்தனைகள் கோடிக்கணக்கிலிருக்கும்போது, மனைவியையிழந்த ஆடவர்களுக்கு அவைகளில் கொஞ்சங்கூட இல்லாமல் போனதன் காரணம் யாதென்பதுதான் விளங்கவில்லை. ஆனாலும் பெண்பாலை இவ்வாறு அடிமைப்படுத்துதல் அடாது! அடாது!! இந்தியா தன்பெண்சமூகத்தை அடிமைப்படுத்தித்தான் என்னகண்டது? இந்திய சகோதரர்கள் தங்கள் சகோதரி சமூகத்தை அடிமைகொண்டு அடக்கியாண்டுதான் என்ன நன்மை கண்டார்கள்? ஒன்றுமில்லை. பெண்களைத்தாழ்த்தி பாதாளத்தில் தள்ளிவிட்டு ஆண்கள் முன்னேறப்பார்த்தால் அது முடியும் காரியமா? அதிலும் இந்த இருபதாம் நூற்றுண்டிலா? எங்களிடமா இனி அந்த செபம் பலிக்கப்போகின்றது? அது இல்லை. நிற்க, பெண்கள் தம் கணவனை யிழந்து விதவைகளானால் அது அவர்கள் 'தலைவிதி' என்கின்றார்கள். நாங்களென் செய்வோம்? எவ்வளவோ பொருத்தமாய்த்தானிருந்தது. வழக்கப்படி எல்லாம் செய்தோம். என்னமோ அவள் தலைவிதி அவ்வாறிருந்தது குறைக்கழுத்துப்பாவி! தாலிப்பாக்கியம் இல்லை; தட்டிவிட்டது என்று பெண்ணையே நிந்திக்கும் உலகமாயிருக்கின்றது. பெண்கள் விதவைகளாவது தலைவிதியினாலென்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. 'விதவை'களாவது தலைவிதியா? என்பதும் ஈண்டு ஆராயற்பாலது. விதியைப்பொறுத்தமட்டில் பெண்களுக்கு உண்டென்றும்ஆண்களுக்கு அது இல்லையென்றும் கொள்ளுவதற்கில்லை. ஏனென்றால் மற்ற எல்லா விடயத்திலும் ஆணுக்கொன்று பெண்ணுக்கொன்று சொன்னாலும், இவ்விடயத்தில் அவ்வாறு ஒரு பாலுக்கொரு பேச்சுப்பேசியதை இதுவரை யான் கேட்டதேயில்லை. 'தலைவிதி' என்பது இருபாலாருக்கும் உள்ளதென்றுதான் சொல்லக்கேட்டிருக்கின்றேன். அங்ஙனமே ஒருபெண் விதவை ஆகிவிட்டாளென்று வைத்துக்கொள்வோம். அப்பெண்ணின் சாதிக்கட்டுப்பாடு அவள் மறுமணம் புரிவதைத்தடுத்தாலும், அவள் சமயக்கட்டுப்பாடு தன் புனர் விவாகத்தை மறுத்தாலும், சாத்திரக்கட்டுப்பாடு அப்பெண்ணின் இரண்டாம் திருமணத்தைப் புறக்கணித்தாலும் எல்லாவற்றையும் மீறி அப்பெண் தன் மறுமணத்தை

முடித்துக்கொள்ளும் பட்சத்தில் அவளுக்குப் போட்ட 'தலைவிதி' என்பது எங்கே என்றுதான் கேட்கின்றேன். கேட்டுவந்தவரம் நீட்டப்பட்டதும், குறைக்கழுத்தாயிருந்தது நிறைக்கழுத்தானதும், பாக்கியமிழந்தவள் பெரும்பாக்கியம் அடைந்ததும் எதனால்? விதியின் பயனா? வினையின் விளைவா? மதியின் திறனா? என்று மீண்டும் கேட்கின்றேன். 'அன்றெழுதியவன் அழித்தெழுதப்போவதில்லை' என்பது பட்டுக்கோட்டை திரு. மரகதவல்லியார், கோபி. திரு. தாயம்மாள், குடந்தை திரு. சிவகாமியார் ஆகிய வீரப்பெண்மணிகள் விடயத்தில் எவ்வாறு பொருந்தும்? மேற்குறிப்பிட்ட பெண்மணிகளுக்கு 'பிரமன்' தலையெழுத்து எழுதும்போது இரண்டு விதமாய் எழுதினானா? அல்லது சுயமரியாதை இயக்கத்தின் தீவிரசமத்துவப்பிரசாரத்தைக்கண்டு நடுங்கி அப்பெண்மணிகள் மனமாறுதலை உணர்ந்து முதல் எழுதியதை அழித்துவிட்டு நடுவில் வேறு எழுதினானா? (ஓர் வேண்டுகோள், பிரமாவின் முகத்திலிருந்து வந்தோராகிய உயர்ந்த வகுப்பார் தம் தந்தையாரிடம் சென்று இதைக்கேட்டுத்தெரிந்து அல்லது தந்தையாரிடம் செல்லாமல் தங்கள் சக்தியினால் என் சந்தேகத்தை நிவர்த்தி செய்வார்களானால் அவர்களுக் கென்மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துவதோடு என்றும் மறவா நன்றி யறிதலுள்ளவளாகவும் இருப்பேன்.) என்பது விளங்கவில்லை. ஒரு தடவையே விதித்த விதியானது இடையில் உருக்குலைந்து மக்கள் மதியால் மாற்றப்படுமானால் அப்போது சாமானிய மக்கள் திறனாய் உபயோகிக்கும்மதி பெரிதா? சர்வ வல்லமையுள்ள கடவுள் விதிக்கும் விதிபெரிதா? என்பதை யோசித்து ஒரு முடிவுக்கு வரும் பொறுப்பை யான் ஏற்றுக்கொள்ளாமல் வாசகர்களிடமே விட்டுவிடுகின்றேன். பெண்கள் விதவைக ளாவது தலைவிதியா? என்பதைப்பற்றி இதுகாறும் கூறிவந்தேன். ஆனால், விதவைகளாவதற்குத் தலைவிதி தான் காரணமென்பதைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டி வலியுறுத்த என்னால் முடியவில்லை. என்னால் மட்டுமல்ல; எவராலும் முடியாதென்றுதான் நினைக்கின்றேன். ஒரு சமயம் ஆத்திகர்களால் முடியுமோ? முடியாதோ? அது எனக்குத்தெரியாது. அடடா! என்ன சொன்னேன்? கடவுளைப்பற்றிக்கவலை வேண்டாமென்பவர்களுக்கு முடியாது. கடவுளைப்பற்றி அல்லும் பகலும்

கவலை கொண்டிருக்கும் ஆத்திகருக்குமா முடியாது? முடியும். இது இத்துடன் இருக்கட்டும். இனி ஆண்களுக்கு விதவைப்பட்டம் இல்லாதது என்? என்பதைப்பற்றிச் சிறிது பேசுவோம். விதி வசமென்பது ஆண், பெண் இருபாலாருக்கும் உள்ளதென்பதை மேலே எடுத்துக்காட்டி யிருக்கின்றேன். அங்ஙனமிருக்க விதவைப்பட்டம் பெண்களுக்குமட்டும் உண்டாகவேண்டிய காரணமென்ன? தலைவிதியில் ஒருவருக்கு உண்டு, மற்றவருக்கு இல்லையென்று இல்லாமல் இருவருக்கும் சமத்துவமிருக்க அவ்விதியினல் உண்டாகும் விதவைப்பட்டம், ஆண், பெண், இருவருக்கும் இருக்கவேண்டியதுதானே நியாயம். எவ்வளவு சிறு பிராயமாயிருந்தாலும் அறியாச்சிறுவயதாயிருந்தாலும் கணவன் இறந்ததும் விதவைப்பட்டம் சூட்டி வேற்றுமைச்சட்டத்தின் கீழ், வேதனைக்களாக்கி உயிர் மாளுமளவும் அப்பெண்ணைக் கொடிய நரகில் கொண்டு வீழ்த்துவதுதான் வைதீகர் வகுத்த சட்டம். அதுதான் இந்துமததர்மம். அதுதான் பெண்களுக்கேற்பட்ட சாத்திரக்கட்டுப்பாடு. எவ்வளவு வயது சென்றவராயிருந்தாலும், பல்லெல்லாம் உதிர்ந்து பரலோகம் போகும் வழியை எட்டிப்பார்ப்பவராயிருந்தாலும், வெள்ளிக்கம்பிக்கும் தலைமயிருக்கும் வித்தியாசமில்லாத பருவமுடையவராயிருந்தாலும் பத்துப்பிள்ளைகள் பெற்றுச் சலித்தவராயிருந்தாலும், மனைவியிறந்ததும் மறுமணம் முடித்தாகவேண்டும். இவ்வுலக இன்பங்கள் யாவையும் தடையின்றி அனுபவிக்கலாம். விதவைப்பட்டம் கிடையாது; வேதனையென்பது கிடையாது; வேற்றுமைச்சட்டம் கிடையாது; இதை சுயநல ஆடவர்கள் தொகுத்த திட்டம் என்பது (80) வயது சென்ற, மீசை நரைத்துக் கூனிப்போன கிழம் எட்டு வயதுள்ள இளம் பெண்ணை இன்பக்கல்யாணம் செய்துகொள்ள இடங்கொடுக்கும் இந்து சாத்திரச்சட்டங்கள் பெண்கள் விடயத்தில், ஏழு எட்டு வயதில் கணவனையிழந்தாலும் ஆயுள் உள்ளளவும் மறுமணம் புரியாமல் அங்ஙனமே இருக்கவேண்டுமென்று அதற்கு நேர்விரோதமாய்ப் பேசுவது நேர்மையாகுமா? ஆ! ஆ!! இந்துமதத்தின் நீதியேநீதி!!! பெண்கள் மேல் இந்துமதத்திற்கு இருக்கும் பேரன்பு போல் வேறெவர்க்கும் இராது. இந்துமதம் பெண்களுக்குச் செய்த பல உதவிகளில் இவ்வுதவி ஒன்றே போற்றத்தக்கது.

பெண்கள் தம் துணைவரை இழந்து துன்பப்படுவதோடல்லாமல் அறியாமக்கள் பழிச்சொல்லுக்கும் ஆளாகின்றனர். அவள் 'தலைவிதி' அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் குறைக் கழுத்துக்காரி என்று பெண்ணைத்தான் நிந்திக்கிறார்களேயொழிய ஆணை அணுவும் நிந்திப்பதேயில்லை. இவ்வாறு பெண்ணை நிந்திப்பது பெரிதும் கண்டிக்கத்தக்கதாகும். பெண்ணைக் குறைக்கழுத்துக்காரி என்று நிந்திப்பதைத் தவிர்த்து ஆணைக்குறைக்கைக்காரன், பாவி, தொட்டுத்தாலி கட்டியவன் நெடுநாள் வைத்து வாழவில்லை, என்று ஏன் நிந்தனை செய்தல்கூடாது? உண்மையில் ஆணன்றோ நிந்தனைக்குரியவனாகின்றான். 'ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பதுபோல், சட்டம், சாத்திரம், பெண்கள்பக்கம் பேசும் சகாப்தம் இல்லையென்று கருதியா இவ்வாறு பெண்ணை நிந்தனை செய்கிறீர்கள்? ஓ! சுயநல ஆண்மக்களே! பொல்லாது; பெண்பாவம் பொல்லாதது; மண்ணிலிருந்து பெண்ணுக்குப் பிழை போசாதீர்கள். பெண்கள் விதவைகளாவது 'தலைவிதி' யல்ல. தலைவிதியென்றால் நீங்களும் விதவைகளாயிருக்கவேண்டும். உங்களுக்கும் 'விதவைப்பட்டம்' இருக்க வேண்டும். மனைவி யிறந்தபின் வேறுமணம் புரிந்துகொள்ளாமல் நீங்கள் முக்காடிட்டு மூலையில் குந்தியிருக்கவேண்டும். மெத்தைகளும், திண்டுகளும் இல்லாமல் கட்டாந்தரையில் படுத்துறங்கவேண்டும். சுபகாரியங்களின் போது வெளியில் தலைகாட்டாமல், இருட்டுக்கிடங்கு இருக்குமிடந்தேடி அதில் கிடக்கவேண்டும். ஆண்களுக்கும், பெண்களுக்கும் 'தலைவிதி' யென்பது இருக்க, விதவைத்தன்மையில் மட்டும் வேற்றுமைகாட்டுவது வெறுக்கத்தக்கதும் வேண்டப்படாததுமாகும்.

---

உற்றாரும் நீருஞ்சேர்ந்து உண்டுவந்தா டிக்களிக்கச்
சிற்றாடை சுற்றத் தெரியாச் சிறுமியர்க்குப்
பொற்றாலி பூண்பிக்கும் புன்றொழிலால் அன்னவர்நூல்
அற்றாலஃ தும்பிழையோ அன்றேல் விதிப்பயனோ?

---

# பலிச்சவரையில் பிராமணன்.

## ஓர் ஹாஸ்யக் கதை.

ராம. சுப்பிரமணியம் எழுதுவது.

வரணும்! வரணும்! எப்ப வந்தியள். ஊரிலிருந்துதானே வரியள். அம்மாஞ்சி, பாட்டி, எல்லோரும் சௌக்கியந்தானே. என்று தடபுடல் தாண்டவராயாச்சாரியார் ரயிலிலிருந்து இறங்கி வந்த ராகவாச்சாரியாரை விசாரித்துக்கொண்டிருக்கையில் தந்திப் பியூன் ஒருவன் தந்தி ஒன்றை நமது தாண்டவராயாச்சாரியார் கையில் கொடுத்தான். அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

ரங்கூன்.

தங்கள் குமாரன் வெங்கிடேஸ்வரன் நேற்று நடந்த பூமி அதிர்ச்சி காரணமாக விழுந்துவிட்ட கட்டிடத்திற்குள் அகப்பட்டு அதிக காயமாகி அபாயநிலையிலிருக்கிறான்.

ராமானுஜாச்சாரி.

மேற்படி தந்தியைக் கண்டதும் தடபுடல் தாண்டவராயாச்சாரியார் உடனே தமது மனைவி பிச்சம்மாளை அழைத்தார்.

பிச்சு அம்மாள்:— ஏன் கூப்பிட்டியள். வெறனே கூப்பிடுறதானே ஒங்க வேலை. வெடிஞ்சா ஏந்திரிச்சா ஊர்க்கதைதானே பேசிரியள். ஒரு சம்பாத்தியமுண்டா? கப்பலேறி ரங்கூன் போய் வெங்கடேஸ்வரன் ஏதாவது மாதாமாதம் அனுப்பாவிட்டால் நம்ம பாடு திண்டாட்டந்தானே? நேத்தி சனிக்கிழமை சாத்தப்ப செட்டியார் விட்டிலே சபிண்டி நடந்துது. அதுக்குப்போய் அம்பிட்டதை வாங்கி வரச்சொன்னேன். அதுக்கு யாரோ சுயமரியாதைக் காரனும் அவன் "பார்ப்பானில்லாதவன் வீட்டுப்பணத்தை பாப்பான் ஏமாத்தி வாங்குவது பிச்சைக்காரத்தனம், சோம்பேரித்தனம், வேலை செய்து பிழைக்கிறதுக்கென்ன? கொள்ளையடிக்கலாமா? இன்னு சொன்னான், எனக்கு வெக்கமாயிருந்துச்சு, எனக்கு சுயமரியாதை இல்லையா" இன்னு சொன்னியள். வாஸ்துவம், உத்தியோகத்துக்குப் போவணுமின்னு பிய்யப் பிய்யல் படிச்சியளா? எவனோ வேதபாடசாலை போட்டாண்ணு அங்கேபோய் மழைகாலத்துத் தவளைமாதிரி கத்தினியள், கொஞ்சநாள் மின்னே கோவில்

குளமெல்லாம் வரட்டுத்தவளைமாதிரி கத்துனியள், என்ன கழுதை யாய்க் கத்தினலும் ஒன்றும் மிஞ்சினபாடில்லை. நம்மள்ட்டே என்ன இருக்கு? ஆத்துக்கு சோத்துக்கில்லை, ஐயாவுக்கோ வஸ்திரமில்லை நேக்குப்புடவையில்லை. இப்படியிருக்கச்சே சுயமரியாதைக்கா ரன் தொறத்ரான். இவ்வளவுகாலமா எல்லாரையும் ஏமாத்தியதற் குப் பலனே என்னமோ தெரியல்லே. அந்த திருப்பதி மலையான் தான் அறியணும்.

(இப்படிப்பேசிக்கொண்டிருக்கையில் ரயிலிலிருந்து இறங்கி வந்த ராகவாச்சாரியார் விடை பெற்றுக்கொண்டு காப்பிஹோட்ட லை நோக்கிச் சென்றார்)

தாண்டவராயாச்சாரி:-அடி வெறணே, கத்தாதே. நம்ப வெங் கடேசன் அபாய நிலையிலிருக்காண்ணு ராமானுஜன் தந்தி கொடுத் திருக்கான். ரங்கூன்லே பூகம்பமாம். கட்டிடமெல்லாம் விழுந் துட்டுதாம். கட்டடத்தில்லே ஆப்பிட்டு அதிக காயமாகியிருக் கிறாண்ணு தந்தி சொல்லியிருக்கான்.

பிச்சு அம்மாள்;— (திடுக்கிட்டு) நம்ப வெங்கடேசனு? அம் மாடி! ஐயோ! நான் அப்போதே ரங்கூனுக்குச்செல்லவேண்டா மென்றேன். கேள்க்க மாட்டேண்ணியள்.

தாண்டவராயாச்சாரி:- நான் என்ன செய்வேன். அடுத்தாத் து ஜோசியம் ஆத்மநாதய்யர்தான் ஒங்கபிள்ளை இன்னும் ஒரு வரு ஷத்துக்கு ஒங்கோடே இருக்கப்படாதிண்ணர். சரி இண்ணுபட்டு போறதுக்கு நாள் நக்ஷத்திரம் பாத்துச்சொன்னர். சகுனமெல் லாம் நன்னு ஆனுச்சு, திருப்பதி வெங்கிடாஜலபதியைக்கூட சே விச்சுண்டுதானே போனன்! (தாண்டவராயாச்சாரியும் பிச்சு அம் மாளும் அழுகிறார்கள்)

சிறிது நேரத்திற்கெல்லாம் அழுகைச்சப்தம் கேட்டு, எதிராத் து இஞ்சி கிருஷ்ணய்யர், சுயமரியாதைச் சுப்பையர், ஜப்பான் சங்கரய்யர், பொடிமட்டைராயர், தாணு அம்மாள் முதலியோர் நமது தாண்டவராயாச்சாரி ஆத்தில் கூடிவிட்டனர்.

பொடிமட்டை ராயர்:— ஏன் அழறியள்?

இஞ்சி கிருஷ்ணய்யர்:— ஏண்டா தாண்டு! என் கொளந்தே மாதிரி அழறே, என்ன நடந்துச்சு.

ஜப்பான் சங்கரய்யர்:— வெடிக்காலே இந்த வழியே போகச்சே வெறனே எப்போதும் போலத்தானே இருந்தா.

தாணு அம்மாள்:— ஏண்டி! பிச்சே! என்னடி நடந்தது சொல்லேன்.

சுயமரியாதைச் சுப்பையர்:— ஓய்! ராயர்வாள்! அதோ தந்தி கெடக்கு எடுங்காணும். கொஞ்சமேனும் லௌகீகம் தெரியாதவாளோட்டே இருக்கிறது ரொம்ப சிரமஸாத்தியம்.

ஃ ஃ ஃ

பொடிமட்டை ராயர் தந்தியை எடுத்துக்கொடுத்ததும் படித்துப்பார்த்து அனைவரும் விஷயத்தைத் தெரிந்து கொண்டார்கள்.

ஃ ஃ ஃ

இஞ்சி கிருஷ்ணய்யர்:— தெரியாமலா பெரியவாளெல்லாம் கப்பலேறப்படாதிண்ணு, இந்தக்காலத்து கத்துக்குட்டிகள் பெகு சங்கதி தெரிந்தவா மாதிரியிருக்கா. பொறத்தியான்தேசம் போனு, பூகம்பம் ஏன் நடக்காது? காலங்கெட்டுப் போச்சோண்ணே, பெரியவா மிந்தியே சொல்லியிருக்கா.

பொடிமட்டை ராயர்:— (பொடியை இழுத்துக்கொண்டே) ஏங்காணும் கிருஷ்ணய்யர்வாள், பூகம்ப மின்னு பூமி ஆடுறதானே. அது எத்தினியோ வர்ஷத்துக் கொருக்கா ஆதிசேஷன் இந்தத் தோளிலே இருந்து அந்தத்தோளுக்கு மாத்தச்சே ஆடுறதாமே.

இஞ்சி கிருஷ்ணய்யர்:— ஆமாம் ஆதிசேஷன் இருக்கானேண்ணே, அவன் தோள் மாத்திரப்போ ஆடுறது.

சுயமரியாதைச் சுப்பையர்:— ஏங்காணும். கிருஷ்ணய்யர்வாள் ஆதிசேஷனுக்கு ஆயிரந்தலே யிருக்கிறதாமே, அவனுக்கு ரெண்டு தோளா? ரெண்டாயிரம் தோளா?

இஞ்சி கிருஷ்ணய்யர்:— முட்டாள்! எங்காவது ரெண்டாயிரந்தோள் இருக்கிறதென்று சொன்னு ஒப்புத்துக்குவாளா? சாஸ்திரம் இடங்கொடுக்க வேண்டாமா?

சுயமரியாதைச் சுப்பையர்:— ஒரு பாம்புக்குட்டிக்கு ஆயிரந்தலே இருக்கிறதென்பதை நம்புகிற முட்டாள் ரெண்டாயிரம் தோளிருக்கிறதென்ருல் ஏன் ஒப்புத்துக்கமாட்டான்? அது கிடக்கட்

டும் ஆதிசேஷன் மகாவிஷ்ணுவுக்குப் படுக்கையாயிருக்காண்ணு சாஸ்திரத்துலே சொல்ரான். நீர் பூமியை தாங்குரான்னு சொல் றீர் இதிலே சாஸ்திரம் பித்தலாட்டமா? நீர் பித்தலாட்டமா? அல்லது ரெண்டுமே பித்தலாட்டமா? போராதுக்கு கொஞ்சகாலம் ஸ்ரீராமபிரான் தம்பி லெக்ஷமணனாக இருந்து வந்தாண்ணு வேறே எழுதி வைச்சுருக்கான். இந்த சமயத்திலெல்லாம் பூமியை யாருதோளுலே சுமத்திட்டு வந்தாள்? பூமியைத்தான் ஆதிசேஷன் தாங்குகிறன் ஆதிசேஷனை யார் தாங்குகிறுர்கள்? அவன் எதன் மேலே இருந்துகொண்டு தாங்குகிறுன்?

ஜப்பான் சங்கரய்யர்:— சுப்பையர்வாள்! போரார் விடும் பாவம்! கிருஷ்ணய்யர் என்னத்தைக்கண்டார்; உலகமென்ருல் நாம இருக்கிற இடந்தானுக்குமென்றிருப்பவர்; அவர் பஜனைமடத்துக்குப் போவார்; பஜனை முடிந்ததும் புளியோதரையும் ததியோன்னமும் கிருஷ்ணய்யர் மானேஜ்மெண்டில்தான் நடக்கும், விஷயந் தெரியாதவாளோடே தொண்டைத்தண்ணியை என்விடுறியள்; ஜப்பானிலே பூகம்பம் நடந்த சங்கதி எனக்கல்லவா தெரியும். ஆட்டின ஆட்டுலே ஆதிசேஷன் தோளாயிருந்தால் அப்போவே பிரஸ்லே வச்சமாதிரி ஆகியிருக்கும். என்னமோ பழங்காலத்து பெருச்சாளி நமது கிருஷ்ணய்யர், கெடக்கு விடும்.

பொடிமட்டை ராயர்:— (தமது பொடிமட்டையை திறந்து பார்க்க பொடியில்லாமையால் பரிசாரகன் சாமாவை அழைத்து கடைக்குச்சென்று பொடி வாங்கிவரச்சொல்லிவிட்டு) என்ன சங்கரய்யர்வாள் இப்படி பேசிக்கொண்டிருந்தா நன்னருக்கா, துக்கப் படுகிறவாளே சாந்தப்படுத்திட்டண்ணே பொறத்தியாளைப் பத்திப்பேசணும்.

தாணு அம்மாள்:- நண்ணுருக்கு பொம்மணுட்டிகள்தாஞ் சளசளண்ணு பேசுவா. புருஷாளும் இப்படிப்பேசராளே. விடுங்கோ. வந்த காரியத்தைப்பாருங்கோ. ஏண்டி பிச்சே வருத்தப் படாதே வெங்கடேசன் காயப்பட்டிருந்தா சீக்கிரம் சொஸ்தமாய் போறது இதுக்கென்ன! என் வெங்கடேசனை ரங்கூனுக்கு அனுப்பிச்சே.

பிச்சு அம்மாள்:— அடுத்தாத்து ஜோசியம் மாமாதான் வெங்கடேசனை ஒரு வருஷம் வரை ஆத்துக்காரரோடே இருக்கபிடா

ரிண்ணார். அதுக்கோஸ்ரம் நல்ல நாள்ப்பார்த்துத்தான் பறப்பட்டான். சகுனம் நன்னு ஆனுச்சு.

தாணு அம்மாள்:— (ஒரு சிறுவனிடம்) அடுத்தாத்திலே ஆத்ம நாதனிருப்பான், நான் கூப்பிட்டனுப்பிச்சேனு சொல்லு.

(ஆத்மநாதய்யர் வருகிறார்.)

தாணு அம்மாள்:— ஏண்டா ஆத்மநாதா, கேட்டியோ சங்கதி, நமது வேங்கடேசன் அபாயத்திலிருக்கானும். ரங்கூனிலே பூகம்பமாம். இதுக்குத்தானு அவனை ரங்கூனுக்குப் போகச்செய்தே.

ஆத்மநாதய்யர்:— நான் என்ன செய்வேன். நாள் பார்த்துச் சொன்னேன். சகுனமெல்லாம் அவா கண்ணுக்கு மின்னேதானே ஆனுச்சு. ஏதாவது கொறையுண்டா? இதைப்போலத்தான் நாட்டுக்கோட்டைச்செட்டிப் பிள்ளைகள்ளே ரொம்பபேர் பாத்துப் போரா. சௌக்கியமாவர்ரவா சௌக்கியமாவந்து சேர்ரா. இல்லாபோனு விதிப்படி ஆரா. எல்லாத்துக்கும் நான் பாத்தியமாயிருந்தா செட்டிப்பிள்ளைகளுக்கு நாள் பார்த்துச்சொன்ன ஒன்றுக்கே வகை சொல்லமுடியாதே. ஜாதகம் பொருத்தம் பார்த்துதான் பெண்ணுக்கு கல்யாணம் செய்யுறது. அதுக்காக வீட்டுக்கு ரெண்டு விதவை யில்லாமலாயிருக்கு.

(பொடிமட்டை ராயர், கடைக்கு அனுப்பிய பரிசாரகன் வர)

பொடிமட்டைராயர்:— (பொடியில்லாமல் வெகுநேரம் சிரமப்பட்டுக்கொண்டிருந்தபடியால் மிக கோபத்துடன்) ஏண்டா சாமா! இத்தனை வாய் கடைலே என்ன செய்சே. பொடியில்லா வருத்தம் எனக்கண்ணே தெரியும் முட்டாள்!

பரிசாரக சாமா:—நான் பொடி வாங்கிண்டு வழியோடே வரச்சே கோதானம் குப்பய்யர் பிள்ளை'இருக்கான்னேண்ண அவன்வாயில் வந்தபடி வசான், நானும் வசேன், என்னிட்டே யிருந்த பொடிமட்டையை பிடுங்கி தெப்பக் கொளத்திலே வீசிட்டான். அப்பாலே குளத்திலே இறங்கி நீச்சுப்பிடித்தேன். இத்தந் நாழி பரியந்தம் நீச்சுப்பிடிச்சும் கெடய்க்கல்லே.

இஞ்சி கிருஷ்ணய்யர்:—கோதானம் குப்பையர் பிள்ளை தானே! வரட்டும் ஒருகை பார்க்கறேன்.

சுயமரியாதைச் சுப்பையர்:—ஏண்டா! ஆத்மநாதா! இப்போ ஜோஸ்யம் பார்த்துச் சொல்றியே; அதுகளிலே ஆண்களுக்கு குறைந்தது எத்தனை வயசுலே யெல்லாம் கல்யாணம் நடக்குமென்று எழுதிக்கொடுக்கிறே.

ஆத்மநாதய்யர்:— மின்னே யெல்லாம் வியாழநோக்கம் ஆண்களுக்கு 10 வயது 8 வயது இப்படிவரும். அப்போ கலியாணம் முடியுமென்று எழுதறது. அதைப்போல ஜாதகத்தைப் பார்த்து கல்யாணத்துக்கு முயற்சித்து முடிச்சிடுவா. இப்போ வெள்ளைக்காரன் சட்டம் போட்டானேண்ண! 18 வயசுக்கு மேல் தான் வியாழநோக்கம் வரும்.

சுயமரியாதைச் சுப்பையர்:— ஏண்டா ஆத்மநாதா! இப்படி ஏமாற்றி வயிறு வளர்க்கலாமா?

ஆத்மநாதய்யர்:— நான் என்ன செய்யறது. ஏமாறுறதனம் இருக்கும்வரை ஏமாத்ரதனம் எங்கே போகும். நான் நேற்று ஆத்து ரேழிலே நிண்ணுண்டுருக்கச்சே ஒத்தர் வந்தார். அவரைப் பார்க்கச்சே லக்ஷப்ரபுமாதிரி இருந்தார். இடையிலே ஒனபதினாயிரம் மல் பீசு கட்டியிருந்தார். அதுக்குமேலே பழுக்காச்சவுக்கம். வயசு 45 இருக்கலாம். இரண்டு காதுக்குமேலே அரளிப்பூ ஜாயிண்டு பண்ணப்பட்டிருந்துச்சு. உடம்பெல்லாம் ஒயிட் வாஷ் (White wash) பண்ணினுப்போலே விபூதி இரண்டு மூன்று கோட்கொடுத்து மோட்டார்டியூப்புக்கு பிரஞ்சு சாக் போட்டாற்போலே இருந்துச்சு. கையிலே தேங்காய்மூடி வெத்திலைபாக்கு வகையறு. காலிலே செருப்பைக்காணோம். அவரைப்பார்க்கச்சே கோவிலுக்குப் போய்வரதாய்த்தோணுச்சு. அவர் வாசல்லே நின்றுகொண்டு சாமீ! சாமீ!! என்று கத்தினர். நான் சென்று என்னவென்று கேட்டேன். அதற்கவர் ஒண்ணுமில்லை; இன்னக்கி கோவில்லே எங்க அவிசகம் (அபிஷேகம்) அதுக்குச்சாமி கும்பிட்டுக்கிணு இருக்கையிலே ஒரு பல்லி தொப்பென்று என் உச்சந்தலையில் விழுந்துச்சு. அதைச் சொல்லிப்பிட்டுப் போவமிண்ணு வந்தேன். அதுக்கு ஏதாவது பரியாரமிருக்காண்ணு பார்த்துச் சொல்லுவிய இண்ணுதான் வந்தேன். நல்லாப்பார்த்துச் சொல்லுங்க என்றார். அதற்கு நான் ஆகட்டுமெப்படியே பார்த்துச் சொல்றேண்

ணு சொல்லிபஞ்சாங்கத்தை அப்படியும் இப்படியும் பிரட்டிப்போட்டு சும்மா ஒரு அன்பது ரூபாய்க்குள் பட்டி போட்டுக்கொடுத்தேன். அவர் அதுக்குமேலே பத்தஞ்சுகூடவே போட்டு நிமித்திப்போட்டார். எனக்கு 10 ரூபாய்தான் கிடைச்சுது. இதை விட்டா பொழப்புக்கு என்ன செய்றது.

சுயமரியாதைச் சுப்பையர்:— மொட்டைத்தலை ஆசாமி ஒருவன் அயலூருக்குப்போய்க் கொண்டிருந்தானும். வழியிலே சுங்க வாசல் இருந்ததாம். அதிலே வண்டிகளும் கார்களும் நிறைய நின்றுகொண்டு ஒவ்வொரு வண்டியும் பணம் கொடுத்துப் போச்சாம். கடேசியாக நமது மொட்டைத்தலைப் பேர்வழி சுங்கக்காசு வாங்குவோனிடம், மொட்டைத்தலைக்கும் சுங்கம் உண்டோ என்ருனும். அதற்கு சுங்கக்காசு வாங்குவேன், ஆம் மொட்டைத்தலைக்கு முக்காலணு சுங்கமென்று கேள்விப்பட்டதில்லையா? கொடுத்துவிட்டுப்போ என்ருனும். மொட்டத்தலை காசை அவிழ்த்ததாம். இது போலல்லவா உன் கதையுமிருக்கிறது. இனி ஜம்பம் பலிக்குமென்று நினைக்காதே.

ஆத்மநாதய்யர்:— பலிச்சவரையில் பிராமணனுய் இருக்கிறேன்.

சுயமரியாதைச் சுப்பையர்:— பலிக்காத காலத்தில் என்ன செய்வீர்?

ஆத்மநாதய்யர்:— பலிக்காத காலத்தில் எத்தனையோ பிரபுக்கள் வீடு. என்ன குறைச்சல்; ஒரு குமாஸ்தா வேலைக்குப்போனுலும் போதுமே! இப்போ பிரபுக்கள் வீட்டிலே இருக்கிற குமாஸ்தாக்களுக்கு நூறு இருநூறு சம்பளம் கொடுக்கா? பதினைஞ்சு இருபதுதான் கொடுப்பா. நம்ப ரங்காட்டம் ராமச்சந்திரன் இருக்கானேண்ணு அவனுக்கு சம்பளம் மாதம் பதினைஞ்சு ரூபாய்தான் கிடைக்கிறது. வேறே வரும்படி கிடையாது. திதியிலே காலணு வரொட்டாதபடி சுயமரியாதைக்காரர் செய்துட்டா. ஒரு பூரியுண்டா? மின்னேப்போல பிராமணனை ஓமத்திலே போடறதுண்டா? இப்படியிருக்கச்சேகூட ராமச்சந்திரனுக்கு என்ன குறை! பாருங்கோ. ஆம்படையாளுக்கு காதுலே கழுத்திலே கையிலே என்ன குறைச்சல்! பட்டுப்புடவை எத்தனை மாதிரி! இதெல்லாம் எப்படி

வந்துச்சு இண்ணு நினைக்கிறியள். லோகத்திலே எத்தினியோ விதமாச்சம்பாதிக்கிரா மனுஷியா. என்னைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்றியளே. நான் எப்படியாவது சம்பாதிச்சுட்டுப்போறேன். "ஆத்தங்கரையிலே போயிருந்தால் எத்தனையோ அசடு" என்ற பழமொழியைப்போல இடமா கிடையாது.

மேலேகண்டவர்களின் சம்பாஷணை முடிந்ததும் ஒவ்வொருவரும் தாண்டவராயாச்சாரியாரிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தம் இல்லத்திற்கேகினர். பின்னர் தாண்டவராயச்சாரிக்கு வேண்டிய ஒவ்வொருவரும் வந்து வந்து விசாரித்துச்சென்றனர். விசாரித்தவர்களில் பல கர்னுடகப் பேர்வழிகள் "காந்தியை ஜெயிலில் போட்டதினுலே பூமிஆடியது" என்று பேசிக்கொண்டே சென்றூர்கள்.

---

# ஆதித் திராவிடரின் துயரம்.

திருமிகு. மு. மரகதவல்லியார் எழுதுவது.

நமது நாட்டில் தீண்டாமை என்னும் நோய் எங்கும் பரவிவிட்டது. முக்கியமாக ஆதித்திராவிடரைத் தொடக்கூடாது, நெருங்கக்கூடாது, சிலவிடங்களில் பார்க்கவும்கூடாது என்று நம் மக்கள் கொடுமை புரிகிறூர்கள். கேவலம் ஆடு மாடு நாய் கழுதை மலந்தின்னும் பன்றி ஆகிய இவையெல்லாம் ஒரு வீதி பாக்கியில்லாமல் ஊர்முழுமையும் நடக்கஉரிமையிருக்கிறது. வைதீகருள்பட மற்ற எல்லா வகுப்பினரும் இம்மிருகங்கள் எங்கும் சுற்றுவதைச் சரியென்று ஒப்புக்கொள்கிறூர்கள். ஆனுல் மனிதராகவே பிறந்து மற்றவர்களைப்போல் ஆறறிவும் கண் கை கால் முதலிய அவயவங்களெல்லாம் சரியாக இருக்கும் ஆதித்திராவிட மக்களுக்கு வீதியில் நடக்க உரிமையில்லை என்கிறூர்கள். மேலே சொன்ன மிருக இனங்களைவிட இவர்கள் எவ்வழியில் தாழ்ந்தவர்கள் என்பது தெரியவில்லை. ஊரிலுள்ள ஊருணிகளில் குடிப்பதற்குத் தண்ணீர் எடுக்கக்கூடாதென்றும், குளிக்கக்கூடாதென்றும், பொதுக்கிணறுகளில் தண்ணீர் இறைக்கக்கூடாதென்றும், ஊருக்குள் வீடுகட்டிக்கொண்டு

வாழக்கூடாதென்றும் கட்டுப்படுத்தி அடக்கி வைத்திருக்கின்றனர். அவ்வகுப்பினர் ஊருக்கு வெளியில் சிறு சிறு பனை ஓலைக் குடிசைகள் கட்டிக் குடியிருக்க வேண்டும். தான் கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்த ஒருவர் ஓட்டு வீடு கட்டிக்கொண்டிருக்கலாமென்று நினைத்தால் ஊரரெல்லாம் கூடி கட்டவிடமாட்டார்கள். மீறிக்கட்டினுல் நெருப்பைக்கூட வைத்துக்கொளுத்தி விடுவார்கள். 'ஒரு பறையன் ஓட்டு வீடு கட்டிக்கொள்வதாவது நாமும் அவனும் சரியாகப் போக முடியுமா' என்ற நோக்கத்துடன் இடர் விளைவித்து வருகிருர்கள். பெரியமனிதர்களும், மிட்டாதார்களும், ஏழை மக்களாகிய ஆதித்திராவிடர்களுக்கு, எவ்வளவு சங்கடத்தைக் கொடுக்கிருர்களென்பதைக் கவனித்துப்பார்த்தால் தெரியும். இடுப்பில் வெள்ளை வேட்டி கட்டிக்கொள்ளக்கூடாது; சட்டை போட்டுக்கொள்ளக்கூடாது; தலைப்பாகை வைத்துக்கொள்ளவும், குடை பிடிக்கவும், செருப்புப் போட்டுக்கொள்ளவும் கூடாது. இப்படிக்கஷ்டங்கள் ஆண்மக்களுக்கு இருக்கிறது. பெண்மக்கள், மேலே துணி அணியக்கூடாது. பித்தளைப்பாத்திரம், குடம், முதலியவைகளை உபயோகிக்கக்கூடாது; தங்க நகை போடக்கூடாது எனக் கொடுமை செய்கின்றனர். ஒரு சகோதரி ஆண்மக்களுக்கு முன்னுல் மேலே துணியில்லாமல் வர வெட்கப்பட்டுத் தன்சேலையின் முன் தானையை மேலே போட்டுக்கொண்டு வீதி வழியே வந்ததற்கு, சின்னச்சாதியாயிருக்கும் உனக்கு இவ்வளவா என்று சொல்லித் தன்வேலைக்காரனைக்கொண்டு பெரிய புளியங்கொம்பு ஒன்று ஒடித்துப் பல நாட்டாண்மைக் காரர் அடிக்கச்சொல்வதை இப்பொழுதும் சில இடங்களில் காணலாம். என்ன அநியாயம்! பெரிய பணக்காரர்களும் மிட்டாதார்களும் ஏழைமக்களுக்குத்துணை புரிவதென்பதை முற்றும் மறந்துவிட்டு இப்படி இம்சை செய்வது தருமமாகுமா? இப்படித்தான் எல்லோரும் அவர்களை இழிவு படுத்துகிருர்களே அவர்களை விட்டுவிட்டு இவர்கள் இருக்கமுடியுமா? அதுவும் முடியாது. அவ்வேழைகள் நெற்றித் தண்ணீர் நிலத்தில்விழப் பாடுபட்டால்தான் பணக்காரர்கள் சுகமாக இருக்கவும், மேல்ஜாதி கீழ்ஜாதி என்று பேசவும் முடியும். ஆதித்திராவிடர்களை மற்றவர்கள் அடக்கி ஒடுக்கிவைக்காமலிருந்தால் அவர்களால் இன்னும் உயர்ந்தபயன்கள் கிடைத்திருக்கும். [வெள்ளை

க்காரருடைய குழந்தைகளை ஆயாவாக இருந்து எவ்வளவு நன்றாக வளர்க்கிறார்கள். ஆதித்திராவிடப் பெண்களால் வளர்க்கப்படும் வெள்ளைக்காரக் குழந்தைகள் எப்படியிருக்கின்றன. நம்மால் வளர்க்கப்படும் குழந்தைகளைவிட ஆதித்திராவிடப் பொண்களால் வளர்க்கப்படும்குழந்தைகள் எவ்வளவு மேன்மையாகவும் உலகத்தை ஆளும் சக்தி பெற்றதாகவும் இருக்கின்றனவென்பதைப் பாருங்கள். பெண்மக்களுக்கு அதிகமான இரக்க முண்டென்று சொல்வது வழக்கம். அவர்கள் கூட ஆதித்திராவிடப்பெண்களிடம் காட்டும் உதாசீனத்தைச் சிறிது நோக்குவோம். காடெல்லாம் சுற்றிச் சிறிது விறகு சேர்த்து சுமந்து விற்பதற்கு வருகிறாள். இடுப்பில் ஒரு குழந்தையிருக்கிறது. இடுப்பிலிருக்கும் புடவை கிழிந்து தொங்குகிறது. அதுவும் முழங்காலுக்கு மேல்தான் இருக்கும். இந்த நிலைமையில் அந்தப் பெண் விறகு விறகு என்று கூவிக்கொண்டே திரிய வேண்டும். வெய்யிலில் அலைந்த களைப்பினால் ஆயிரம் வீடுள்ள கிராமத்தில் தண்ணீர் வாங்கிக்குடிப்பதற்குக்கூட வழி கிடைக்காது. யாரையாவது கேட்டால் "போடி! பறக்கழுதை! உனக்கு யார் தண்ணீர் ஊற்றுவார்கள், அப்பாலே போ, தூரப் போ" என்று சொல்லிவிரட்டுகிறார்கள். இந்தச் சமயத்தில் யாராவது மடிகட்டிக்கொண்டு வந்தால் இந்த ஏழைப் பெண்களைக் கல்லால் எறிந்து காயப்படுத்தி விரட்டுவதுமுண்டு. பலபெண்கள் சோமவாரவிரதமென்றும், அமாவாசை என்றும், திதியென்றும், அந்தநாளில் ஆதித்திராவிடர்களுக்குத் தண்ணீர் கொடுப்பது பாவமென்றும் கருதுகிறார்கள். புண்ணியத்திற்கு விரதம் பிடிப்பதாகச் சொல்லும் இவர்கள் தவித்த வாய்க்கு வெறுந்தண்ணீர் கொடுப்பதுகூடப் பாவமென்று கருதுவது விந்தையிலும் விந்தை. தண்ணீர்ப்பந்தல் வைக்கும் புண்ணியவான்கள் ஆதித்திராவிட மக்களுக்குத் தனியாக தகரக்குழாயைப் போட்டோ, மூங்கிற்சப்பையை வைத்தோ, தண்ணீரை ஊற்றுகிறார்கள். அவ்வேழை மக்கள் கை இரண்டையும் வாயில் வைத்துக்கொண்டு குடிக்கிற காட்சி நம் நாட்டிற்கே ஒரு பழியாக இருக்கிறது. தகரக்குழாயிலிருக்கிற துருவும் மூங்கிற்சப்பையில் படியும் ரோட்டுத்தூசியும் ஆதித்திராவிட மக்கள் வயிற்றுக்குள்தான் போகிறது. நோய் வந்தாலும் வைத்தியர்கள் கை பிடித்துப் பார்க்கமாட்டார்கள். கடை வீதிக்குப்

போய் சாமான் வாங்குவதென்றால் கடைக்குச்சமீபத்தில் போய்ப் பார்த்து வாங்க விடமாட்டார்கள். வாங்கின சாமான் உளுத்துப் போயிருந்தாலும் அழுகிப்போய் இருந்தாலும் பலவகைகளில் கெட்டுப்போயிருந்தாலும் திருப்பிக் கொடுத்து நல்ல சமான் வாங்க முடியாது. அவர்களுடைய பிள்ளைகளைக் கல்வி கற்கமற்றவர்கள் விடுவதில்லை. இவைகளை உற்று நோக்குங்கால் மேல்ஜாதி என்கிறவர்கள் கருணை அன்பு பொறுமை இன்னதென்றே அறியாதவர்களாகி விட்டார்கள். ஆதித்திராவிடர் போன்றவர்கள் தீண்டாதார் என்று கருதப்பட்டாலும் வயிற்றுக்கில்லாமல் கஷ்டப்பட்டாலும் அன்பு பொறுமை உழைப்பு விஸ்வாசம் ஆகிய மேம்பட்ட குணங்களில் சிறந்து விளங்குகிறார்கள். மற்றவர்களுக்காக அவர்கள் நன்செய் புன்செய் நிலங்களிலும், மராமத்து வேலையிலும் படும்பாடும், உயர்ந்த ஜாதியார் வீட்டில் பிள்ளை பிறந்தது முதல் அது இறந்து பிடிசாம்பலாகிறவரை இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைக்கிற உழைப்பும்கொஞ்சமல்ல. இப்படிக் கஷ்டப்படும் அவர்களுக்கு மற்றவர்கள் எவ்வளவு தீங்குசெய்ய முடியுமோ எவ்வளவு இழிவு படுத்த முடியுமோ அவ்வளவும் செய்கிறார்கள். ஜாதிவேற்றுமை பாராட்டுகிறவர்கள் தங்களுக்குத் தேவையிருக்கும்பொழுது அதை விட்டுவிடுகிறார்கள். அதிகமாக வைதீகம் பேசுகிறவர்களுக்கும் சர்க்கார்உத்தியோகங்களிலோ சட்டசபை முனிசிபாலிட்டி போன்ற சபைகளின் பெம்பர் ஸ்தானங்களிலோ ஆதித்திராவிடர்கள் நியமிக்கப்பட்டால் அப்பொழுது இந்தந்தீண்டாமைத் தத்துவம் நீங்கிப்போகிறது. அங்கே தொடாதே, ஒத்திப்போ, என்னும் வார்த்தைகளும் இல்லை. அதற்காக இவர்கள் சாஸ்திர ஜாதி ஆசாரம் கெட்டு முழுகிப்போய் விடவுமில்லை. ஆதித்திராவிடரோடு சமத்துவமாக இருக்கமாட்டேனென்று ஒருவராவது ராஜிநாமாச் செய்துவிடவு மில்லை. ஆதித்திராவிட உத்தியோகஸ்தருக்கு முன்னால் பலர் கைகட்டி நிற்கப் பின் வாங்குவதுமில்லை. தங்களுக்கு வேண்டுமென்றால் ஒன்றும், வேண்டாமென்றால் ஒன்றுமாகச் செய்து வருகிறார்கள். இவையெல்லாம் போலி வேஷமேயன்றி உண்மையில் தீட்டொன்றும், கிடையாது. நம் நாட்டில்பிறந்த ஒவ்வொருவரும் திக்கற்ற ஆதித்திராவிட ஏழைகளுக்கு இயன்றவரை உதவி புரிந்து அவர்கள் துயரத்தைப் போக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும்.

---

# புல்லுக்கட்டு.

மிஸஸ். ஜானகி எழுதுவது.

விடியற்காலம் 9-மணி யிருக்கும். எங்கள் வீட்டு மாடியில் நின்றேன். ஏழைக்குடியானப் பெண்கள் வீதிவழியே சென்றார்கள். அவர்கள் கட்டியிருந்த பழயதுணி பல பக்கத்திலும் கிழிந்து தொங்கின. அழுக்காக இருந்தது. துவைத்தால் கூடத் தாங்காது. மேலே போட்டுக்கொள்ள வகையில்லாமல் இடுப்பில் மட்டும் அந்தத்துணியைக் கட்டியிருந்தார்கள். ஒருவர் பின் ஒருவராக ஆறுபேர் சென்றார்கள். அவர்கள் தலையில் ஒவ்வொரு பெரிய புல்லுக்கட்டு இருந்தது. அவர்களுக்குப் பின்னால் மூன்று ஐயர்கள் வந்தார்கள். அவர்கள் கையில் ஒரு பிடித்தபிடி புல் இருந்தது. இவர்கள் எங்கே போகிறார்களென்று பார்த்துக்கொண்டு உச்சிமாடியில் நின்றேன். புல்லுக்கட்டுக்காரப் பெண்கள் ஒரு முச்சந்தியில் இறக்கிவைத்துக்கொண்டு வெய்யலில் நின்றார்கள். பலர் வருவதும் விலைகேட்பதுமாக இருந்தார்கள். ஒரு குதிரை வண்டிக்காரர் வந்து ஒரு கட்டு இரண்டணாவென்று விலைதீர்த்து இரண்டு கட்டுகளைக் கேட்டார். அதற்கு அந்தக்குடியானப் பெண்கள் சம்மதித்துச்சென்றனர். மற்றொரு பெண் மிகுந்தவருத்தத்தோடு "காலையிலே இருந்து கஷ்டப்பட்டு வெட்டினேன். பிள்ளைகளெல்லாம் கஞ்சியில்லாமல் கிடக்கும். இதைக்கொண்டுபோய்த்தான் வரகுவாங்கிக் கஞ்சி ஊற்றவேண்டும். நேற்று நாலணாவுக்கு ஒருகட்டு விற்றேன். இன்று இரண்டணாவுக்காவது என்னுடைய புல்லுக்கட்டையும் வாங்கிக்கொள்ளவேண்டும். சாமி" என்று சொன்னாள். "முடியாது; முடியவே முடியாது" என்று குதிரைவண்டிக்காரர் சொன்னார். திரும்பவும் அந்தப்பெண் "ஐயா சாமி வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொல்லி விழுந்து கும்பிட்டாள். "அடி; படவா" என்று ஒரு உதை கொடுத்துவிட்டு வண்டிக்காரர் இரண்டு புல்லுக்கட்டுக்காரிகளைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார். மற்றபெண்கள் பகல் இரண்டுமணிவரை காத்திருந்துவிட்டு விற்காததால் தூக்கிக்கொண்டு ஊர் வழியே "புல் வாங்கலையா புல்" என்று கூறிக்கொண்டே வீதிவீதியாக அலைந்தனர். கையில் பிடித்த தர்ப்பைப் புல்லோடு சென்ற ஐயர்கள், ஊ

ரணிக்கரையில் உட்கார்ந்தார்கள். நூற்றுக்கணக்கான ஆண்மக்கள்
வந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் இரண்
டணாவும் வெற்றிலை பாக்கும் எள்ளும் வைத்திருந்தார்கள். ஒவ்
வொருவராகக் கூப்பிட்டு "உட்காரும்; கையைமடித்துத் தலையில் கு
ட்டிக்கொள்ளும்; உம்அப்பன்பேரென்ன? பாட்டன் பேரென்ன?
முப்பாட்டன் பேரென்ன? செம்பில் தண்ணீர் கொண்டு வாரும்!
காலை மண்டிபோடும்! ஒருகையை ஊன்றும்! அதற்குள் இன்னொ
ரு கையைவிடும்! வேற்றிலை பாக்கில் பணத்தை வைத்துக்கொடுத்
துவிட்டு வீட்டுக்குப்போம்" என்று சொல்லி கசரத்து வாங்கி இர
ண்டணாவையும் வெற்றிலை பாக்கையும் வாங்கிக்கொண்டு ஒவ்வொ
ருவரையும் வீட்டுக்கனுப்பிவிட்டு சுமார் இரண்டுமணிக்குத்திரும்பி
னார்கள். ஒரு ஆள்சுமை வெற்றிலைபாக்கும் சுமார் 10 ரூபாயும்
ஒவ்வொருவருக்கும் கிடைத்தது. இவர்களுடைய சம்பாத்தியத்து
க்குக் கொண்டுபோனமுதல் ஒரு பிடி தர்ப்பைப்புல்தான். இந்தப்
புல் மாட்டுக்குக்கூடப்போட உபயோகமில்லாதது. வந்தவர்ளெல்
லாம் கும்பிட்டு விழுந்து சொன்ன சொன்னபடி யெல்லாம் கேட்
டுவிட்டுப் பணத்தை வெற்றிலை பாக்கில் வைத்துக்கொடுத்தார்கள்.
5 மணி நேரத்தில் ஆளுக்குப்பத்துரூபாயும் ஒரு ஆள்சுமை வெற்
றிலைபாக்கும் கிடைத்தன. ஏழைக் குடியானப்பெண்கள் இவர்கள்
கொண்டுபோனதைப்போல் 500, 1000 மடங்கு அதிகமானபுல்
கொண்டுவந்தார்கள். அது மாடு குதிரை முதலியவற்றுக்கு மிக
வும் உபயோகமுள்ளது. அவர்களும் 5 மணி நேரம் வெயிலில்
கிடந்து கஷ்டப்பட்டார்கள். காசு கொடுப்பவர்களை விழுந்து
கும்பிட்டாலும் வாங்குவாரில்லை. காரணமென்ன? இந்த ஏழைப்
பெண்களுக்குப் பொய் சொல்லத்தெரியாது; கஷ்டப்பட்டு வேலை
செய்பவர்கள். அந்த ஐயர்களோ இறந்துபோய் தேவலோகத்தி
லிருக்கும் சொந்தக்காரர்களுக்குத்திருப்தி செய்வதாக அண்டப்
புளுகு புளுகுகிறார்கள். பாமர ஜனங்கள் உண்மைக்கு உதவி
செய்ய மாட்டார்களென்பதும், ஏமாற்றுகிற புளுகர்களுக்கே
கொடுக்கிறார்களென்பதும் இதனால் விளங்கவில்லையா?

---

# திருநீறு உருத்திராக்கம்.

திருவாளர் அ. பொன்னம்பலனூர் எழுதுவது.

சைவசமயத்தைப் பின்பற்றி சிவபெருமானை வழிபட்டு தவவேடம் தாங்கும் சிவனடியார்களால் சிறப்பாகப் போற்றப்படுவது திருநீறும் உருத்திராக்கமும் என்று கூறப்படுகின்றது. திருநீற்றின் பெருமையைப்பற்றி இப்பரந்த உலகிற்கு சிறந்த நோக்கத்தோடு விரிந்த கருத்துக்களை வெளியிட்டுள்ள பெரியார் பலராவர். குறிப்பாக சிவபெருமானுடைய திருவருளாலே சிவபாத இருதயர் என்ற பிராமணர்க்கு சீகாழியிலே புதல்வராகப் பிறந்து வளர்ந்துவரும் மூன்றுமாண்டில் தந்தையாருடன் குளிக்கச் சென்ற காலத்து, குளக்கரைமீது நின்று அழுதபோது சிவபெருமானுடைய மனைவியாராகிய உமாதேவியார் அருள்கூர்ந்து தம் பால் கறந்து அதில் ஞானத்தைக் கலந்து ஊட்டியகாலத்துக் குடித்து அழுகைநீங்கி திருவருள்பெற்ற திருஞான சம்பந்தராகிய ஞானபண்டிதர்-ஞானபாலகர் செப்பிய தமிழ்மறை என்ற தேவாரத் திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகத்திலுள்ள பாட்டுகள் பதினொன்றுமே திருநீற்றின் சிறப்பைத் தெற்றென விளக்குகின்றன. அத்தகைய திருநீற்றைத் தயாரிக்கவும் தாங்கிநிற்கவும் ஆகமங்களில் விதி கூறப்பெற்றிருக்கின்றது.

## திருநீறு தயாரிக்கும் முறை.

நோய்வாய்ப்படாததும் பால்கறவையுள்ளதுமான பசுவை நீராட்டி பசும்புல் மேயச்செய்து பரிசுத்தமுடைய இடத்தில் நிறுத்திவைத்து அது மலம் (சாணி) வெளிப்படுத்தும்போது தாமரை இலைகொண்டு, சிவசிந்தனையோடு தாங்கி, சிவமந்திரம் கூறிப் பிசைந்து உருண்டையாக்கி உலர்த்த வேண்டும். பின் உருண்டைகளை ஒன்று சேர்த்து தீபாராதனை காட்டி தீ கூட்டி மூன்று தினங்கள் ஐந்து தினங்கள் புடம்வைத்து அதிகம் கருகாமல் வெண்மை பெற்றவுடன் அதனைத் தூய ஆடையால் வடிகட்டி பட்டுப்பையிலேனும், வெள்ளிச் சம்புடத்திலேனும் எடுத்துவைத்துக் கொண்டு புடம்போட்ட இடத்தை பசு மலங்கொண்டு சுத்தஞ்செய்தல் வேண்டும்.

தரிக்குமிடம் அளவு.

சமயதீக்கை பெறுதவர்கள் திருநீற்றை உதிரியாகப் பூசவேண்டும். சமயதீக்கை பெற்றவர்கள் உதிரியாகப் பூசி பின் தண்ணீர் விட்டுக் கரைத்து நீளம் அகலம் அங்குலக் கணக்குப்படி தலை நெற்றி மார்பு கொப்புள் இரண்டு கைகள் இரண்டு விலாப்புறம் இரண்டு கைமணிக்கட்டுகள் இரு முழங்கால்கள் இருகாதுகள் முதுகெலும்பு கழுத்து ஆகிய பதினாறு இடங்களில்பூசவேண்டும். இதில் நான்கு நீக்கி பன்னிரெண்டு கொள்வதுமுண்டு. அங்குலம் நீட்டல் முடக்கல் ஒரு அங்குலம் மூன்று அங்குலம் பன்னிரெண்டு அங்குலம் பதினாறு அங்குலம் என அவயவங்கள் அமைப்புக்கேற்றபடிகூறும். திரிபுண்டரம் ஒன்றை ஒன்று தீண்டுதல் குற்றமாகும். இதில் சமயதீக்கை விசேடதீக்கை நிர்வாண தீக்கை ஆச்சாரியாபிஷேகம் என நான்குவகைத் தீக்கைகளையும் பெற்றுப் பக்குவம் வாய்ந்த சிவநேசர்கள் பகலிரவு பாராது தலை முதல் பாதம்வரை முழுநிறு பூசிய முனிவராக விளங்குவர்.

காலம்.

நடந்து கொண்டாவது ஓடிக்கொண்டாவது பேசிக்கொண்டாவது சிரித்துக் கொண்டாவது சட்டைபோட்டுக் கொண்டாவது தலைமயிரை விரித்துக் கொண்டாவது திருநீறு தரிப்பது பெருங்குற்றம். படுக்கையைவிட்டு எழுந்தவுடனும் பல்துலக்கியவுடனும் நீராடியவுடனும் சாப்பாட்டிற்கு முன்னரும் பின்னரும் பாராயணம் செய்யும் போதும் ஆலய வழிபாடு செய்யும் போதும் அடியவர்களைக் காணும்போதும் படுக்கைக்குச் செல்லும் போதும் பணக்கவலை மனக்கவலை தோன்றும் போதும் தினசரி வாழ்வில் தவறாது வடக்குமுகமாக வேனும் கிழக்குமுகமாகவேனு மிருந்து நிலத்திலே திருநீறு சிந்தாவண்ணம் சிவ சிவ சிவ என மும்முறைகூறித் தரித்தல் வேண்டும். தீக்கைபெற்றவர்கள் சிவமந்திரம் கூறி தரிக்கவேண்டும். சதுர்த்தி சஷ்டி கிருத்திகை பௌர்ணமி அமாவாசை அஷ்டமி திருவாதிரை பிரதோஷம் உத்திரம் பூசம் மூலம் மகம் பஞ்சமி சிவராத்திரி நவராத்திரி சமயாச்சாரியார் நாயன்மார்கள் மறைந்துபோன (இறந்துபோன) நக்ஷத்திரம் போன்ற புண்ணிய காலங்களில் திருநீற்றை அடிக்கடி சிவசிந்தனையோடு தரித்தல் வேண்டும்.

## பலன்.

திருநீறு தரிப்பதினுலேற்படும் பலன் பின்வருமாறு கூறப்படுகின்றது. ஆயுள் நீடிக்கும், அழகு தரும், புத்திதரும், சித்திதரும், பக்திதரும், செல்வம் தரும், சிறப்புதரும், நோய்தீரும், முத்திதரும்.

## புகழ்ச்சி.

திருநீறு தேவர், மூவர், சித்தர், ஞானி, துறவி, தவசி, அடியார், சிவநேசர், சமயகுரவர், நாயன்மார், அரசர் பெருமான், தேசத்தார் யாவரும் புகழ்ந்து போற்றிப் பூசப்படுவதென்று கூறப்படுகின்றது.

## உருத்திராக்கம்.

இதுவும் திருநீற்றைப்போலவே மிகமிகச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. திருநீற்றுக்குப் படிப்படியாக உயர்வு கற்பிக்கப்பட்டிருப்பது போல் உருத்திராக்கத்திற்கும் பல படிகள் கற்பிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக ஒரு மணி கட்டிக்கொள்ளவேண்டும். மூன்று மணி கட்டிக்கொள்ளவேண்டும். அடுத்தபடியாக மாலைமாலையாக மாட்டிக்கொள்ளவேண்டும். பக்தி அதிகப்பட்டுவிட்டால் மார்பில் பூணூலாகவும் இடுப்பில் ஒட்டியாணமாகவும் கைகளில் வளையலாகவும், தலையில் சிவலிங்கமாகவும், காதில் குண்டலமாகவும் உருத்திராக்கத்தால் அலங்கரித்துக்கொண்டு சிவபெருமானுடைய திருவருட் செயலைக் குறித்துத் துதித்து ஆநந்தத்தால் ஆடிப்பாடி அவன் கழலைச்சிந்தித்தால் முத்தியின்பப்பேற்றைப் பெறுவாரென்று கூறப்படுகிறது. இதுவரை எழுதப்பெற்ற பகுதிகள் யாவும் சைவ சமய நூல்களைக்கொண்டே எடுத்துக்காட்டினோம். இனி இந்நிகழ்ச்சி அறிவிற்கும் அனுபவத்திற்கும் வாழ்க்கை இன்பத்திற்கும் உண்மையில் என்ன பலனை யளிக்கின்றது என்பதை ஆராய்வோம்.

167 கோடி மக்களைக்கொண்டதும் பலவகை மதம், சமயம், ஜாதிப்பிரிவுகளை உடையதுமான இப்பரந்தஉலகில் திருநீறும் உருத்திராக்கமும் தரிக்கும் கூட்டத்தார் மிகமிகச் சிலரேயாவர். அதிலும் சைவசமயக்காரர்கள் சிவநேசர் திருக்கூட்டத்தார்கள் என்ற பெயரில் வேடந்தாங்கியுள்ள பெரியார்களின் தொகை மிகமிகச்சுருக்கம். சைவ சமயத்தை நிலைநாட்டவந்த ச...

பெருமையாக ஏட்டில் எழுதியுள்ள கதையையும் அவர்கள் செய்துள்ள அற்புதத்தையும் நம்பி அவர்களைப்போல் முத்திபெற விரும்பி திருநக்ஷத்திரகாலத்தில் குருபூசை மகேஸ்வர பூசை செய்து மடாலயம் கட்டி காவியுடையணிந்து தவவேடம்தாங்கி "சிவயோகம்" செய்வதாகக்கூறும் ரகசிய குடும்பிகளின் எண்ணிக்கையும் எளிதில் குறிப்பிட்டு விடலாம்? திருநீறு எதற்காகப் பூசுகிறோமென்ற கவலையில்லாமல் பழக்க வழக்கமென்ற காரணத்தால் எந்த இடத்தில் சாம்பலைக் கண்டாலும் எடுத்துப் பூசுகின்றவர்களைப்பற்றிக் கவலையில்லை. திருநீற்றின் உண்மை தெரிந்து பூசுவதாகக் கூறும் அன்பர்கள் திருநீறு தயாரிக்கக் கூறும் சைவாகமப்படி தயாரிக்கமுடிவதில்லை. கடைகளில் திருநீறு விலைக்கு வாங்கப்படுவதை நாம் நேரில் காண்கிறோம். அவை எப்படி தயாரிக்கப்படுகின்றது. ரோடுகளில் நடமாடும் மாடு, குதிரை, எருமை மலத்தை அடைதட்டிக் காயவைத்து விலையாக்கி அடுப்பெரித்துப் பின் குப்பையோடு கூட்டி தோட்டத்தில் சேமித்து வயலுக்கு எருவாக வண்டி ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுவதுண்டு. இதனிடையில் மார்க்கட்டு வியாபாரிகளுக்கு சாம்பலை மட்டும் சில்லரையாக விற்பதுமுண்டு. அவர்கள் அதைச்சுத்தம் செய்து படி இரண்டணா மூன்றணா வென்று சமயம்போல் விற்கிறார்கள். இதில் சிறிது வாசனை கூட்டி மாதச்சந்தாவிற்கும் வருடச்சந்தாவிற்கும் ஆயுட்சந்தாவிற்கும் ரூ 100 50 25 என்று சிதம்பரம் திருவாலவாய் திருச்செந்தூர் தீக்ஷிதர்கள் பெற்றுக்கொண்டு எம்பெருமானுடைய அருட்பிரசாதம் என்று தபாலில் அனுப்பி வியாபாரம் செய்வதுமுண்டு. சாப்பாடு காபி ஹோட்டல்களில் சென்று சாமி திருநீறு எங்கே இருக்கு என்று கேட்கும் சிவநேசர்கட்கும் அடுப்புச்சாம்பல்தான் வெளிவருகின்றது. இது சிவநேசர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரியும். ஆலயங்களில் உற்சவகாலங்களில் பெருங்கூட்டங்கட்கு வழங்கப்படும் திருநீறு வரட்டிச்சாம்பலென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். உண்மையிலேயே ஆகமப்படி திருநீறு தயாரிக்கமுடிவதுமில்லை. முடியுமானால் வெட்கப்படுகின்றார்கள். பக்தி மேலீட்டால் முத்தியை விரும்பி வெட்கத்தையும் பொருட்[illegible]காமல் மாடு சாணிபோடப்போகும் காலத்தை எதிர்

பார்த்துத் தாமரை இலை தாங்கிநின்றால் சுற்றியுள்ளவர்கள் பைத்தியக்காரனென்று பரிகாசஞ் செய்கிறார்கள் என்பதையும் உணராமலில்லை? உணர்கின்றார்கள். முடியாத காரியத்தை விட்டுவிடுவதுமில்லை. பொருத்தமற்ற வியாக்கியானம் கூறாமலும் இருப்பதில்லை. அறிவிற்குப் பொருந்தாத அசட்டுக்காரியங்களை ஏன் பின்பற்ற வேண்டுமென்றால் அதற்குத் தத்துவம் கூறி நாத்திகப்பட்டம் சூட்டுகிறார்கள். முறையாகத் தயாரிக்கப்பட்ட திருநீற்றைத்தவிர இதரநீற்றைத் தரிப்பவன் பரகதியடையான் நரகதியடைவானென்று சமய நூல்களே சாற்றுகின்றன. திருநீற்றைப் பூசவேண்டிய இடங்கள் ஒருவர்க்குப் பதினாறு என்றும் மற்றொருவர்க்குஉடல் முழுதும் என்றும் கூறப்படுவதின் அர்த்தம்விளங்கவில்லை! திருநீற்றை விதிப்படி அங்குலக்கணக்காகப் பூசவேண்டுமென்றும் கூடினாலும் குறைந்தாலும் குற்றம் என்றும் கூறப்படுகின்றது. எவரும் அங்குலக்கணக்குப்பார்த்துப்பூசுவதே கிடையாது. இதிலும் பதினாறு இடங்களின் விபரம் பலருக்கு விளங்குவதேயில்லை. இதற்குக் குருமார்களை நியமித்து பாதகாணிக்கை வைத்து மலரடியில் விழுந்து பாவியை இப்பாருலக ஆசையைவிட்டு பரமன்திருவடி நிழலிலிருக்கச்செய்யுங்களென்று விண்ணப்பஞ்செய்து உபதேசம் கேட்டுக்கொள்ளவேண்டும். அவரும் இவர்கொடுக்கும் ஆதரவைப்பெற்றுக் கொண்டு பெண்டு பிள்ளைகளோடு ஏக போகங்களை அனுபவித்துக்கொண்டு சீடர் குழாத்தினர் சிவகதியடைய சிவ உபதேசம் செய்வார். அப்போதுதான் திருநீறு பூசவேண்டிய விபரம் விளக்கப்படும்! எதற்காகப் பூசுவது என்ற விபரம் சீடர்களுக்கும் விளங்காது; ஆச்சாரிய சுவாமிகளுக்கும் விளங்காது. கண்மூடித்தனமாக கூறுபவற்றை நம்பவேண்டும்; இல்லையேல் குருநிந்தனை செய்ததாகும். குருமார்கள் சீடர்களை சிவகதிக்கு அனுப்புவார்கள். அவர்களுக்கு வழிதெரியாது! திருநீற்றை கிழக்குமுகமாவது வடக்கு முகமாகவாவது நின்று பூசவேண்டும். மேற்கும் தெற்கும் கடவுளுக்கே பிடிக்காத திசையாகும் போலும். அதிலும் புண்ணியகாலம் என்றைக்கென்று பஞ்சாங்கம் பார்த்துக்கொண்டு அன்று ஆலயங்களில் மடாலயங்களில் வீதிகளில் நின்று விளம்பரப்பலகைபோல் உதிரஉதிரப் பூசிக்கொண்டே இருக்கவேண்டும். மக்கள் திரளாகக்க...

களில், "திருநீறுமடம்" என்று ஒன்று அமைத்து திருநீற்றைப் பற்றி யறியாதவர்களிடம் 'நீறில்லாத நெற்றிபாழ்; நெற்றியைச் சுடு காடுமாதிரி வைத்துக்கொள்ளக்கூடாது,சிவப்பிரசாதம்' என்று கட்டாயப்படுத்திப் பூசிவிடுகின்றார்கள். சிலவேட சந்நியாசிகள் பெண் மக்களைத் தொட்டு திருநீறு பூசிவிடுவதுமுண்டு. இவைகள் சமயத்தையும் திருநீற்றையும் மக்களுக்கு சிவநேசர்கள் பரப்புமுறை. உண்மையிலேயே திருநீறு பூசாமலிருக்கும் போது உடல் இயற்கையாகவே நன்றாகவிருக்கிறது. திருநீற்றைப் பூசியபின்னர் தான் சுடுகாட்டைப்போல உடல்முழுதும் சாம்பல் மயமாகப் பூத்துப்போய் இருக்கிறது. இது சிவநேசர்களுக்கு விளங்குவதில்லை. திருநீற்றைப் பூசுவதின் பலன்களோ எழுதிமுடியாது. ஆயுளைவளர்க்கும், சித்திதரும், பத்திதரும், முத்திதரும், மனக்கவலை போக்கும் பணக்கவலை நீக்கும்,தீராதநோய் தீரும் என்பன போன்றவைகளாம். இதைப்பற்றி விளக்கவேண்டுவதில்லை. எவரும் திருநீற்றால் மேற்கூறியவைகளைப் பெறலாமென்று சிவநேசர்கள் தவிர எதிர்பார்க்கவே மாட்டார்கள். எதிர்பார்ப்பினும் ஏமாற்றமே? திருநீற்றைப்பற்றி எவர் புகழ்ந்து கூறினும் அது இன்றைக்கு மக்கள் வாழ்க்கைக்குச்செய்யும் உதவி என்ன? சமணமதத்தை ஒடுக்கவந்த சம்பந்தர் கூட்டம் தங்கள் கூட்டத்திற்கு ஒரு அடையாளம் (ட்ரேட்மார்க்) சாம்பல் உருத்திராக்கம் என்று குறிப்பிட்டது. அதனை விருப்ப முள்ளவர் ஏற்றுக்கொள்ளலாமென்றிருந்தால் நமக்கு அட்சேபணையில்லை. அதற்குப் பல புரட்டான கற்பனைகளைக் கூறி கட்டாயப்படுத்திப் பயமுறுத்தி வற்புறுத்தி மக்களை மயக்குவது அறிவுடைமை யாகாது! எவரால் புகழப்பெற்றதாயினும் அதனை ஏற்றுக்கொள்பவராலும் புகழப்படல் வேண்டும். உருத்திராக்கம் அணிவதும் உண்மையிலேயே தொழிலாளர்களுக்கு ஏற்றதல்ல. குடும்பிகளுக்கும் ஏற்றதல்ல. உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்றதல்ல. காட்டிற்கு தபசுக்குப் போகிறவர்களுக்கும் வீதிகளில்பிச்சைஎடுக்கின்ற பரதேசிகட்கும் சிவயோகக் காரர்கட்கும் ஒருக்கால் ஏற்றதாக விருக்கலாம்! உருத்திராக்கம் சிவபெருமானின் கண்ணிலிருந்தும் கழுத்திலிருந்துமுண்டாகவில்லை. நேப்பாள தேசத்தில் மரத்தில் காய்த்துப் பழுக்கும் ஒருகொட்டை. அதற்குத்தக்கபடி கே.எஸ். முத்தையா கம்பெ

ணியில் வியாபாரமாகின்றது. இதற்குப்பெருங் கற்பனைகளைச் சிறப்பித்துமுத்திக்குவழி உருத்திராக்கமென்பது முழுதும்புரட்டாகும். மக்களுக்குப்பொதுவாகமுத்தியின்பேரிலுள்ள மயக்கத்தால் பகுத்தறியவே முடிவதில்லை. பகுத்தறிவோடு பின்பற்றப்படும் கொள்கைதான் உண்மையிலே நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மைபயக்கும்.

---

# ஒன்றாவது முடியுமா?

மதுரைமன்னன் எழுதுவது.

கலியுகம் முற்றிப்போய் விட்டது. அக்கிரமம் அதிகப்பட்டு விட்டது. சுயமரியாதை இயக்கம் மிகுந்துவிட்டது. தருமம் குடி போய்விட்டது. பிராமணனைத் தூஷிக்கிறார்கள் என்று எங்குங் கூக்குரல் கிளம்புகிறது. வெறுங் கூக்குரல் போடுவதால் ஒருபயனும் விளையாது. வைதீகத்திலும் வேதத்திலும் சாஸ்திர புராணங்களிலும் வர்ணாச்சிரம தருமத்திலும் நம்பிக்கை யுள்ளவர்கள் இப்பொழுதே ஒரு காரியஞ் செய்யட்டும். பிராமணனுக்கு படித்தல், படிப்புச் சொல்லிக்கொடுத்தல், யாகஞ்செய்தல், யாகஞ் செய்வித்தல், தருமங் கொடுத்தல், தானம்வாங்கல், இந்த ஆறு தொழிலுந்தான் மனுதருமசாத்திரத்தில் சொல்லி யிருக்கிறது. இதைத்தவிர வேறு தொழிலைப் பார்ப்பான் செய்யக்கூடாது. இது தான் சாஸ்திரம். இதைத்தவிர வேறு சாஸ்திரமில்லை. இந்த ஆறுக்கும் கட்டுப்பட்டிருக்கும் பிராமணன் எத்தனைபேர்? மற்ற தொழில் செய்யும் பிராமணன் எத்தனைபேர்? ஐக்கோர்ட்ஜட்ஜ் முதல் செட்டியார் வீட்டுக்கு சந்தையில் ஆடுபிடிக்கிற ஐயர்வரை எத்தனையாயிரம் பேர் எத்தனையாயிரம் தொழில் செய்கின்றனர்? இவர்கள் சாஸ்திரம் பேச ஏதாவது யோக்கியதை யுண்டா? இவர்கள் யாவரும் பிராமணத் தொழிலைவிட்டு வெகுநாளாயிற்றே. அப்படியிருக்க தாங்கள் சுத்தப் பிராமணனென்று நினைத்துக் கொண்டு தருமம் போச்சு; கலிமுற்றிப் போய்விட்டது என்றால், ஏதாவது அர்த்தமுண்டா? ஐயர்மார் ஆறு தொழிலுக்குமேல் ஏழாவது தொழிலுக்கு வந்தபோதே எல்லாம் போய்விட்டதே. மிச்சமிருந்தாலல்லவா சுயமரியாதைக்காரர் தொலைத்துவிட்டார் களென்று

கூற இடமிருக்கும். மிச்சமில்லையே! போனதெல்லாம் போகட்டும்; வைதிகத்தில் பற்றுவைத்திருப்பவர்கள் எல்லாரும் சேர்ந்து பிராஹ்மணுள் எல்லாரையும் அவர்களுக்குரிய ஆறுதொழிலாகிய தருமத்தில் நிறுத்தி அதைவிட்டு அசையமுடியாதபடி ஆணியடித்து விட்டால் உலகமே திருந்திவிடும். அவர்கள் செய்கிற யாகாதி புண்ணிய கிருத்தியங்களால் சுயமரியாதைக்காரர் ஓடிப்போதலுங்கூடும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் முதலியார்களும் பழைய ராஜாக்களும் ஏராளமான பொருளைச் செலவிட்டு கட்டிடங்கள் கட்டியும் பணங்கள் ஒதுக்கியும் அநேக வேத பாடசாலைகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அந்தப்பாடசாலைகளில் படிக்கவரும் பார்ப்பனப் பிள்ளைகட்குச் சோறுபோட்டு ஆடைகொடுத்து தேய்த்துக்கொள்ள எண்ணையும் கொடுத்து வளர்த்து படிக்கவைக்கத் தயாரா யிருக்கின்றனர். இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் தோன்றியவுடன் இந்த வேதபாடசாலைக்குப் பிள்ளைகள் கிடைப்பதில்லை. பிள்ளை கிடைக்கப்படாத காரணத்தால் அநேக இடங்களில் வேதபாடசாலைகள்மூடப்பட்டுவிட்டன! ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்குப் போகவே அய்யர்மார்கள் முழுதும் விரும்புகின்றனர். வர்ணச்ரம தர்மத்தில் அதிக அபிமானம் கொண்டிருக்கிற மகாபக்தர்களெல்லாரும் ஒருநிமிஷங்கூட தாமதிக்கக் கூடாது.பார்ப்பனப் பிள்ளைகளில் ஒருகுழந்தையைக் கூட விடாமல் ஒன்றாகக் கூட்டி வேதபாடசாலைக்குக்கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். அத்தனை பிராமணர்களும் பஞ்ச பஞ்சஉஷத்காலத்தில் எழுந்து ஓடுகிறநதியில்ஸ்நானம்.செய்துமூக்கைப்பிடித்துக் கொண்டு ஜபதபாதிகளைக் காலம் தவறாமல் நாள்முழுதும் செய்து கொண்டிருக்கச் செய்ய வேண்டும். அவர்களை அப்படியிருக்கச் செய்துவிட்டால் உலகில் எவ்வித அக்கிரமமும் நடக்காது. சுயமரியாதைக்காரர்களும் தோன்றியிருக்கமாட்டார்கள். மாதம்மூன்று மழை பெய்யும். பணத்திற்கு பத்துப்படி அரிசிவிற்கும். அம்மாதிரி இன்றில்லாமற் போனதிற்கு பிராமணர்களே காரணம். ஒரு நிமிஷங்கூடத் தாமதியாமல் அவர்களை அவர்கள் குலதர்மப்படி நடக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். வர்ணச்சிரம தர்மம் அழிந்து போயிற்று என்று கூச்சல்போடுகின்ற அய்யர்மார்கள் சுயமரியாதைக் காரர்களைத் திட்டாமல்வேட்டியைஉதறிக்கட்டிக்கொண்டு "தக்ளியும்" கையுமாக வேதாத்தியயனம் செய்யப் புறப்படுவார்களாக. அதற்குத் தயாராகயில்லையென்றால் சாதியைக்கெடுத்ததும் சமயத்தைக் கெடுத்ததும் சாஸ்திரத்தைக் கெடுத்ததும்அய்யர்மார்கள் தான் என்பதை ஒப்புக்கொண்டு சும்மா இருப்பதே ஒழுங்கு.

---

# எங்கள் கதி யென்ன?

மிஸ் & மிஸஸ் கமலாக்ஷி எழுதுவது.

எனது அன்புள்ள சகோதரர்களே!

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்று கட்சிகள் ஏற்பட்டு நடக்கிறது. ஆதித்திராவிடரென்று சொல்லிக்கஷ்டப்படுகிற ஜனங்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களின் கஷ்டத்தை ஒழிக்க வேண்டுமென்று பலரும் சொல்கிறார்கள். சுயமரியாதைக்காரர் பிராமணர்தான் கொடுமை செய்கிறார்களென்றும் மற்றவர்களை அடிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லிச் சீர்திருத்தம் செய்ய முன் வந்திருக்கிறார்கள். பிராமணர் இப்படிக் கொடுமை செய்வதன் பயனாக பிராமணசமூகத்தில் பிறந்த என்போன்றவரின் துன்பம் எழுதிமுடியாததாகும். நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். வேறு கதியில்லை யென்று முடிவாகிவிட்டது. என் நிலைமையைப்பற்றி வெளியிட்டால் என்போன்ற சகோதரிகள் இனிமேலாவது விழித்தெழக்கூடுமென்று கருதுகிறேன்.

நான் ஒரு பார்ப்பனப் பெண். என் தாய் தந்தையருக்கு நான் ஒரே பெண். வேறு ஒரே ஒரு ஆண் குழந்தையுமுண்டு. எனக்கு ஒன்பது வயது நடக்கும்போது என்னைக்கலியாணம் செய்து கொடுத்துவிட்டார்கள். என்கணவன் யாரென்று எனக்குத் தெரியாது. என் தகப்பனுடைய ஊருக்கும் கணவனுடைய ஊருக்கும் சுமார் 30 மைல் தூரமிருக்கிறது. அவர் சென்னையில் படித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதின் மூன்றாவது வயதில் நான் பெரிய மனுஷியானேன். என் தகப்பனார் எனக்குத்தமிழும் சிறிது ஆங்கிலமும் படிக்கவைத்தார். சங்கீத வாத்தியார் வைத்து ஹார்மோனியமும் வாய்ப்பாட்டும் கற்பித்தார். தியாகராஜ கீர்த்தனத்தில் அறுபதுக்கு மேல் தெரியும். வயதான பெண் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாதென்று என்னுடைய பதின்மூன்றாவது வயதிலிருந்தே தடுத்துவிட்டார்கள். அன்று முதல் இன்று வரை அடைபட்டுக் கிடைக்கிறேன். என் தகப்பனார் எனக்கு ருதுசாந்தி செய்து விடவேண்டுமென்று முயற்சி செய்தார். என் தாயாரும் அரும்பாடுபட்டாள். ஆனால் முடியவில்லை. என் மாமனாரும் மாமியாளும் ருதுசாந்தி செய்வதானல்

4000 ரூபாய் தரவேண்டுமென்றும் அப்படித்தராவிட்டால் செய்ய முடியாதென்றும் சொன்னார்கள். அனேகம் பெரிய மனிதர்களை வைத்து எவ்வளவு சமாதானம் செய்தும் முடியவில்லை. என் தகப்பனாருடைய வீட்டை விற்று 2000 ரூபா தருவதாகச்சொன்னார். என்ன சொல்லியும் அவர்கள் 4000 த்துக்குக்குறைய சம்மதிக்கவில்லை. இப்படிப் போராடிக்கொண்டிருக்கும் போதே என் தகப்பனார் இறந்து போனார். அதுமுதல் என்தாயார் அழுத கண்ணும் சிந்தியமூக்குமாகக் கிடந்து இரண்டு மாதங்களுக்கு முன் இறந்து போனாள். என் தகப்பனார் இறந்தது முதல் எனக்கு ருது சாந்தி செய்வதைப்பற்றிய பேச்சே நின்றுவிட்டதென்னலாம். என் தாயார் மட்டும் சில சமயங்களில் சொல்லி அழுது புலம்புவதுண்டு. என் சகோதரரும் அவர் சம்சாரமும் இதைப்பற்றி ஒரு வார்த்தை கூடப்பேசினதில்லை. என் மாமிமுதலியவர்கள் நானொருபெண் இருப்பதையே மறந்துவிட்டார்கள். எனக்கு ருதுசாந்திசெய்வதற்காக என் சகோதரன் ஆயிரம் ரூபாய்கூடத் தருவாரென்று நினைக்க இடமில்லை. இந்தப்பேச்சைப்பற்றிப் பேசினால் வீட்டைவிற்றுக்கொடுக்கும்படி நேரிடுமோவென்று பயந்து என் சகோதரர் பேசுவதில்லை. என் தாயார் புலம்புவதை எவரும் காதில் போட்டுக்கொள்வதில்லை. சென்ற இரண்டு மாதகாலமாக நான் படுங்கஷ்டம் கொஞ்சமல்ல. என் தமயன் சம்சாரத்தின் சொல்லுக்கடங்கி வேலைசெய்யவேண்டிய தாகிவிட்டது. எப்போதுமே நான் குடும்பத்துக்கு உழைக்கவேண்டியவளாகவே இருந்தாலும் என் தகப்பனாரிருக்கும்போது செல்வமாகவே வளர்க்கப்பட்டதாலும் என் தாயார் வார்த்தையை எவரும் மீறமுடியாதிருந்தாலும் எனக்குக் கஷ்டமுண்டாகவில்லை. என் தகப்பனார் இறந்த பிறகு என் தாயார் பேச்சு ஏறவில்லை. அதனால் எனக்கு உழைப்பு அதிகமாகிவிட்டது. என்றாலும் திட்டும் துன்பமும் சற்று குறைவாகவே இருந்தன. சென்ற இரண்டு மாதமாக நான் படும்பாடு எழுதி முடியாததாகும். என்னை இனி ஒருவரும் கலியாணம் செய்துகொள்ள முன்வரமாட்டார்களென்று சொல்ல வேண்டியதில்லை. அதுவும் பிராமண ஜாதியில் முடிகிற காரியமில்லை. வாழ்விழந்தவளாக நான் இருக்கிறேன். ஏற்கனவே கலியாணம் செய்து கொண்டவர் யாரென்றே எனக்குத்தெரியாது. அவருக்கு

மறுதாரம் கல்யாணத்திற்கு நாலைந்து, நாட்களுக்கு முன்னர் நிச்சயதாம்பூலம் செய்துவிட்டதாகத் தெரிகிறது. இனி என்கதி அதோகதிதான். என்சகோதரர் சம்சாரம் என்உயிரைச்சிறிது சிறிதாக அரித்துவிடுவாள். ஊரிலுள்ளவர்கள் இப்பொழுதே என்னைக்கண்டு துஷ்டிவிசாரிக்கிறமாதிரி விசாரித்து வருத்தப்படுகிறார்கள். இந்தநிலையில் நான் என்ன செய்கிறது? நான் அறியாத பருவத்தில் கல்யாணம் செய்து விட்டார்கள். எனக்குக் கணவனாகக் குறிப்பிடப்பட்டவர் முகத்தை நான் அறியேன். பெரியமனுஷியாகிப் பல வருஷங்களாகியும் அவரைப் பார்க்கமுடியவில்லை. பார்ப்பதென்றால் 4000 ரூபா காணிக்கை செலுத்தவேண்டும். என்னிடம் பணமுமில்லை. விதவையைவிட மோசமான நிலை யெனக்கேற்பட்டிருக்கிறது. புருஷன் இறந்துபொய் விதவையானால் ஒரேயடியாக 'தலைவிதி' என்று அவர்களே சமாதானம் சொல்லிக்கொண்டு போய்விடுவார்கள். பணம் கொடுத்தால் என்னுடைய தலைவிதியை மாற்றலாமென்றிருப்பதால் பலரும் அதைச் சொல்லிச் சொல்லிக் காட்டுகிறார்கள். இதற்குப் பரிகாரமென்னவென்று யோசித்தேன். எனக்குக் கலியாணம் செய்துகொள்ள விருப்பந்தான். ஆனால் முன் ஒருமுறை கல்யாணம் செய்திருக்கிறபெண் மற்றொருவரைக் கல்யாணம் செய்துகொள்வதென்பது சட்டவிரோதமென்று எங்கள் சித்தப்பா சொல்கிறார். சட்ட விரோதத்தைச் செய்து சிறையிலிருப்பதே மேல் என்று தோற்றுகிறது. ஏனென்றால் வீட்டில் அவ்வளவு கஷ்டமேற்பட்டுவிட்டது. இந்தக்கட்டுரையை யெழுதி முடித்துவிட்டு என்பெயருக்கு முன்னால் மிஸ் என்று போடுவதா மிஸஸ் என்று போடுவதா என்று யோசித்துப்பார்த்தேன். கல்யாணம் ஆகாதபெண்ணானால் 'மிஸ்' என்றும் கல்யாணமாகிவிட்டால் 'மிஸஸ்' என்றும் மேனாட்டார் போடுகிறார்கள். அவர்கட்குக் கல்யாணமும் ருதுசாந்தியும் தனித்தனியாக நடப்பதில்லை. மானமற்ற எங்கள் ஜாதியில் கல்யாணம் ஒரு நாளிலும் ருதுசாந்தி வியாபாரம் மற்றொரு நாளிலும் நடக்கிறது. கல்யாணமாகிவிட்டபடியால் நான் 'மிஸஸ்' ஆகிவிட்டேன். ருதுசாந்தி நடக்காதபடியால் நான் 'மிஸ்' ஆக விருக்கிறேன். ஆதலால்தான் என் பெயருக்குமுன்னால் மிஸ் அண்ட் மிஸஸ் கமலாட்சி என்று போடத் துணிந்தேன்.

---

# உச்சந்தலையில் கண்.

குட்டிச்சாத்தன் A B C D E F etc.

"சர்வேந்திரியாணும் நயனம் பிரதானம்" என்று சாஸ்திரிகள் சொல்கிறார்கள். இந்தக்கண் இல்லாவிட்டால் குருடனாகி விடுகிறான். கண் இல்லாவிட்டால் நன்மை தீமை யொன்றுந் தெரியாது. ஆயிரம் சூரியன் உதித்தாலும் குருடனுக்கு அந்த காரமாகத்தானிருக்கும். எத்தனை மின்சார விளக்குப்போட்டாலும் குருடன் கண்ணுக்கு ஒரே இருட்டுத்தான். சூரியனேஇன்றி விளக்குமின்றி யிருந்தாலும் குருடன்கண்ணுக்கு வித்தியாசமில்லை.

ஃ ஃ ஃ

சாஸ்திரிகளும் வைதீகர்களும் இந்த உலகம் நிலையற்றது; இதை நம்பக்கூடாது; செல்வம் இன்றிருக்கும், நாளை அழியும்; வாழ்வும் தாழ்வும் நிலைத்திருக்கமாட்டா; ஊருஞ்சதமல்ல; உற்றார் சதமல்ல; பெண்டாட்டி சதமல்ல; பிள்ளை சதமல்ல. என்று கதை படிக்கிறார்கள். இதனால் இந்த உலகத்தில் ஒன்றுமில்லை. இருந்தாலும் நிலையில்லை. ஆதலால் மேலுலகத்தை நோக்கியே நடக்க வேண்டுமேன்று கூறுகிறார்கள். இதற்கொரு யோசனை தோன்றுகிறது. முன்பக்கமாக இருக்கிற கண்களைப் பெயர்த்து உச்சந்தலையில் பதித்துவிட்டால் சௌகரியமாக இருக்கும். இந்தக்கண்பொல்லாதது. எல்லாஞ் சதமல்லவென்று ஞானம் பேசிய பட்டினத்தாரே திண்டாடித்திரிந்திருக்கிறார். பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்து ஆட்டுகிறது, என்று பலமாதிரியாகப் புலம்பித்தவிக்கிறார். இப்படி நேர்ந்ததற்குக் காரணம் அவருடைய கண்கள் பக்க வெட்டிலிருந்ததுதா னல்லவா; கண் இரண்டும் உச்சந்தலையிலிருந்தால் இப்படிப்பட்டவற்றைப் பார்த்திருக்க மாட்டார். இப்படிப் பாட்டுக்களும் பாடியிருக்க முடியாது. நிலையில்லாத உலகத்தைப்பார்க்குப்படியாகக் கண்கள் குறுக்குவெட்டில் அமைந்தது ஒரு மூடத்தனமாகும்.

ஃ ஃ ஃ

பூலோகத்திலுள்ள எல்லாம் நிலையற்றதென்றும் மேலுலகத்தில் போய் மோக்ஷமடைவதே சிறந்த பயனென்றும் சைவர்களும் ஐயர்மாரும் சொல்லுகிறார்கள். இதற்குக்கண் பக்க வாட்டிலிருப்பது பெரும் இடஞ்சலாக இருக்கிறது. எந்தத் திசையை

நோக்கி மனிதனோ மிருகமோ நடக்க வேண்டுமோ அந்தத் திசையைப்பார்த்துக் கண் அமைக்கப்பட் டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் காரியம் செவ்வையாக ஒப்பேறுது. கிழக்கே செல்லும் ஒருவன் மேற்கே பார்க்கத் திரும்பிப் பின்புறமாக நடந்தால் எங்காவது பள்ளம் மேடு தெரியாமல் விழுந்து சாகவேண்டியதுதான். அல்லது காலால் தடவித்தடவி மெதுவாக நடந்து இடர்ப்படுவது நிச்சயமாகும். அப்படித்தான் மனிதன் மேலுலகக்கதை பேசுவதுமாகும். மேலேயிருக்கிற பாரமார்த்திக உலகத்தை நாடிச்செல்ல வேண்டுமென்று வைதீகர்களும் சைவர்களும் வைணவர்களும் சொல்லுகிறுர்கள். ஆனல் அவர்களுடைய கண்கள் மேலே பார்க்க அமைக்கப்படாததால் உலகத்தை நோக்கிப் பல சச்சரவுகளில் அகப்பட்டுத்தவிக்கின்றனர். ஆதலால் ஒரு திருத்தம் அவசியமாக இருக்கிறது. பரலோக வாசத்தை மேன்மையென்று கருதி அதற்காகப் பாடுபடவேண்டுமென்று கூறுபவர் யாவரும் முதலாவதாக அவர்களுடைய கண்கள் இரண்டையும் எடுத்து உச்சந்தலையில் பதித்துக்கொள்ள வேண்டியதவசியமாகும். அப்படிச்செய்து கொள்ளாதவரை அவர்களுடைய கண்கள் உலகத்திலுள்ள பல விஷயங்களிலும் புகுந்து திண்டாடித் தெருவில் நிற்கச்செய்யுமே யல்லாமல் பரலோகத்தைப் பார்க்க விடமாட்டா. கடவுளுக்கு நெற்றிக் கண் ஏற்பட்டதுபோல் அவருடைய பக்தர்கட்கு உச்சிக்கண் இருக்கவேண்டும். பக்கக்கண் இருந்தால் அவர்கள் ஒருநாளும் மேல்நோக்கிப் போகமுடியாது. பரலோகத்தைப் பற்றிப் பேசுகிறவர்களும் அந்தலோகத்தை விரும்புகிறவர்களும் இப்போதிருக்கிற இரண்டு கண்களையும் ஒழித்துவிட்டு உச்சந்தலையில் கண்களைத் திறந்துகொள்ள வழிபார்க்கவேண்டும்.

---

# பலதிரட்டு.

## துருத்தியில் விபூதி.

சுடுகாட்டில் படுத்திருந்த நாய் தாவிக்குதிக்கும்போது அதன் காலில் ஒட்டியிருந்த சாம்பல் பறந்து ஒரு பிணத்தின்மேல் விழுந்ததாம். அந்தப்புண்ணியத்தினுல் மகா பாபியான அந்தப்பி

ணம் முத்திக்குப்போய்விட்டதாகப் புராணம் சொல்லுகிறது. புராணம் முழுமையும் உண்மையென்றுகூறும் சிவநேசர்கள் இதைக்கண்டு கவலையொழிந்திருக்கிறார்களென்று தெரிகிறது. இப்பொழுது வாலிபர்கள் எவரும் விபூதி பூசுவதாக இல்லை. ஆதலால் இனிமேல் ஜனங்கள் கூடுமிடங்கட்கு சிவநேசர்கள் ஒப்பற்ற விபூதியைத் துருத்திகளில் அடைத்துக்கொண்டுபோய் எங்கும் நிற்கிற ஜனங்கள் மேல் படும்படி செய்து எல்லாரையும் முக்திக்கு அனுப்ப உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

## கழுதைக்குக் கிராக்கி.

கல்யாணம் முதலிய அநேக காரியங்கள் குறித்த நேரத்தில் நடக்க முடிகிறதில்லை. நாழிகை பார்த்துச்செய்வதென்பது வர வர கஷ்டமாக இருக்கிறது. பெரிய சாஸ்திரியாரிடத்தில் நான் யோசனை கேட்டதில் " சகுனம் செய்வதைச் சாஸ்திரம் செய்யாது" என்று சொன்னார். சகுனத்தில் சிறந்தது 'கழுதை கத்துவதுதான்' என்பது எல்லோருக்கும் தெரிந்தது. ஆதலால் விசேடம் நடப்பதற்குச் சிறிது நெரம் முன்னர் ஒரு கழுதையை ஓட்டி வந்து கட்டிவைத்துக்கொண்டால் நல்லது. நமக்கு சௌகரியமுள்ளநேரத்தில் விசேடத்தை ஆரம்பிக்கலாம். ஆரம்பிக்கும் போது கழுதையைப்புடைத்தால் காள் காள் என்று கத்தும். இந்த சத்தத்திற்கு முன்னால் ஒன்றும் நிற்காது. எல்லா தோஷமும் பறக்கும். அந்த சமயத்தில் காரியத்தை முடித்துவிடலாம். நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை. ஐயரும் வேண்டாம். பஞ்சாங்கமும் வேண்டாம். கழுதை ஒன்றே போதும். என்மேல் கோபம் வேண்டாம். நானென்ன செய்வேன், சாஸ்திரம் இப்படிச்சொல்கிறது. சாஸ்திரத்தை நம்புகிறவர்கள் இப்படிச்செய்யலாம். சுலபமானவழி. ஆனால் கழுதைக்குக் கொஞ்சம் கிராக்கி வரும். அதனால் பாதகமில்லை. ஐயர் நொண நொணவென்று கத்துவதைவிட இந்தக்கழுதை கத்துவது இயற்கையாக இருக்குமல்லவா? என்று ஒருவர் எழுதுகிறார்.

## நாங்கள் பயித்தியக்காரர்களா?

சென்ற மாதம் வெளியான குமரன் மாதப்பதிப்பில் "கரன்ஸி நோட்டு பஹிஷ்காரம்" என்றொரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. அதில் எழுதியிருப்பதெல்லாம் பக்தாள் ஆக்ஷேபணையன்றி ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அது பாரபக்ஷமாக எழுதியிருக்கிறது. வைஷ்ணவாளும் அதைப் பின்பற்ற வேண்டாமோ? இனிமேல் அந்த கரன்ஸிநோட்டுகளில் ஸ்ரீராமஜெயம் சங்கு சக்கரம் திருநாமம் முதலியவைகளையும் சேர்த்து வெளியிட வேண்டும். இல்லாவிட்டால் வைஷ்ணவாள் தொடுவாளோ? வைஷ்ணவாளை உல்லங்கனம் செய்யலாமா? எல்லா விஷயத்துக்கும் ஒத்துமையாக இருப்பதுதான் மேல் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பரிகாரத்தில் சந்தேகம்.

என் ஜாதகத்தில் ஐந்தாமிடத்தில் கேது இருப்பதால் இந்த ஜாதகனுக்குப் புத்திர தோஷம் உண்டு. அதை மாற்ற நாகப்பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று ஜோசியர் சொல்கிறார். அதற்கென்ன செலவாகுமென்றால் 500 ரூபா ஆகுமாம். பிராமணபோஜனம், பிராமணனுக்கு தக்ஷிணை, நாகத்தைச்செய்யக்கூலி மற்ற பிராமணனுக்குப் பூரி தக்ஷிணை முதலிய வகையில் இந்த 500 தீர வெண்டுமேன்கிறார். சரி. ஐந்தாமிடத்தில் கேது இருப்பதால் புத்திர தோஷம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக்கேது அந்த இடத்தை விட்டு வெளியேபோனால் தானே புத்திரதோஷமும் போகக்கூடும். நாகப்பிரதிஷ்டை செய்தால் அவன் ஐந்தாம் வீட்டைவிட்டு ஆறும் வீட்டுக்காவது நாலாம் வீட்டுக்காவது போவானா? இதைப்பற்றிப் பல ஜோசியர்களைக் கேட்டேன். இப்படி ஒருநாளும் போக மாட்டான் என்று சொல்லுகிறார்கள். மனிதன் பிறந்த தினத்திலேயே அந்தக்கேது ஐந்தாமிடத்தில் உட்கார்ந்துகொள்கிறான். பிறகு இந்த ஆசாமி செத்தாலும் அந்த ஜாதகத்தின் ஐந்தாமிடத்தில்தான் கேது இருப்பான். அவன் இருக்கிறவரையில் புத்திர தோஷம் இருந்துதான் தீரும். அப்படியானால் நாகப் பிரதிஷ்டை

செய்வதாலுண்டாகும் பலனென்ன? இந்த சந்தேகத்தை யாரே னும் தீர்த்துவைப்பார்களா?

— "சோதிடப்பிரியன்"

# வாத்தியார் தேவை.

வடநாட்டு ஐயர்மார்களின் சுவாமிகளாகிய பரமசிவன் பார் வதி ஸ்கந்தர் கணேசர் முதலிய கோவில் சுவாமிகள் இங்குவந்து 2000 வருஷங்களாகின்றன. இவ்வளவு நாளாகியும் அந்த சுவாமி களுக்கு தமிழ் பேசவாவது எழுதவாவது யாரும் தமிழில் சொன் ஞல் விளங்கிக்கொள்ளவாவது தெரியவில்லை. நம்முடைய குறை களை யெடுத்துச்சொல்ல கோயிலுக்குப்போனாலும் ஐயரிடம் பணங்கொடுத்து சம்ஸ்கிருதத்தில்தான் அர்ச்சனையெல்லாம் சாமிக் குச்சொல்லும்படி செய்யவேண்டியிருக்கிறது. இதுவரை எத்தனை யோ ஆயிரம் பேர் எவ்வளவோ பணஞ்செலவழித்து அருச்சனை ஜெபம் முதலியனவெல்லாம் நடத்திவிட்டு ஒன்றும் பலிக்காமல் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். நமக்கும் சுவாமிக்கும் இடையில் இருக்கிற ஐயர்மார்கள் தரகு வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை யென்று தெரிகிறது. நம்முடைய குறைகளை ஒழுங்காகக்கேட்டு அ தை சமஸ்கிருதத்தில் சரியாகமொழிபெயர்த்து சாமியிடம் சொல் லியிருந்தால் அந்த சாமியும் நமக்கு ஏதாவது சாதகஞ் செய்திருப் பார். அப்படி யொன்றும் நடக்கவில்லை. ஐயர்மாரும் நம்மிடத்தில் பணத்தை வாங்கிக்கொண்டு நாம் நாசமாப்போக விரும்புகிறோ மென்று சாமியிடம் சமஸ்கிருதத்தில் சொன்னாலும் நமக்குத்தெரி யாது. ஐயர்கள் தப்பிதம் செய்கிறார்களென்று சாமியிடம் ரகசிய மாகச் சொல்வோமென்றாலும் சாமியிருக்குமிடத்திற்குச் செல்ல வும் முடியாது. தமிழிலாவது சத்தம்போடுவோமென்றால் அது வும் சாமிக்குத்தெரியாது. ஆகவே இது மிகக்கஷ்டமாக இருக் கிறதென்றும் இதற்குப்பரிகாரம் செய்யவேண்டுமென்றும் பல பக்தர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆதலால் சமஸ்கிருத மும் தமிழும் தெரிந்தவராகவும் ஆறுமாதத்திற்குள் கோயில் சுவா மியைத் தமிழில் நல்ல அறிவுண்டாக்கக்கூடிய சாமர்த்திய முள்ள வராகவும், சிறிது ஆங்கில அறிவு பெற்றவராகவுமுள்ள ஒரு உபாத் தியாயர் தேவை. யோக்கியதைக்கும் சாமர்த்தியத்துக்கும் தகுந் த சம்பளம் கொடுக்கப்படும்.

R. பிக்ஷாண்ட முதலியார்,
ஏமாந்தபுர தேவஸ்தானம் ட்ரஸ்டி,
ஆஞ்சநேயபுரம்.

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை ௧ | காரைக்குடி பிரமோதூத-ஹூ புரட்டாசி-மீ | மணி ௩.


## பெண்ணுக்கு விடுதலை.

பெண்ணுக்கு விடுதலையென்று இங்கோர் நீதி
பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றிகேளீர்!
மண்ணுக்குள் எவ்வுயிருந் தெய்வமென்றால்
மனையாளும் தெய்வமன்றோ மதிகெட்டீரே

விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்
விடுதலையென்பீர் கருணை வெள்ளமென்பீர்
பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லையென்றால்
பின் இந்த உலகினிலே வாழ்க்கையில்லை.

பெண்டாட்டி தனை அடிமைப் படுத்தவேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
கண்டார்க்கு நகைப்பென்னும் உலகவாழ்க்கை
காதல்எனும் கதையினிடைக் குழப்பமன்றோ?

தாய்க்குமேல் இங்கேஓர் தெய்வமுண்டே?
தாய்பெண்ணே அல்லளோ? தமக்கை தங்கை
வாய்க்கும்பெண் மகவெல்லாம் பெண்ணேயன்றோ?
மனைவியொருத்தியை அடிமைப் படுத்தவேண்டித்

தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
தாயைப்போ லேபிள்ளை யென்று முன்னோர்
வாக்குளதன்றோ? பெண்மை யடிமையுற்றால்
மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ?

— பாரதியார்.

பெண்குலத்தைக் கொத்தடிமையாக்கிப் பாழ்பண்ணிவிட்டன ரென்பதைப் பாரதியார் இப்பாடல்களில் குறிப்பிடுகிறார். பெண்ணை என்று அடிமைப்படுத்த நினைத்தானோ அன்றே இந்திய மனிதன் அடிமை விலங்கை மாட்டிக்கொண்டான். தாயைப் போல பிள்ளை. பெண்டாட்டியை அடிமைப்படுத்த நினைத்தான் மனிதன். பெண்டாட்டி பெண்டாட்டியாகவே யிருக்கமுடியவில்லை. பிள்ளைக்குத் தாயானாள். தாயின் அடிமைத்தனம் பிள்ளைக்குப் பிடித்தது. இப்படியே நாட்டு மக்கள் முழுமையும் அடிமையாயினர். அடிமைப்புத்தி மலிந்துவிட்டது. பெண்ணுக்கு விடுதலை கிடையாதென்று சொன்னால் இந்த உலகத்திலே வாழ்வில்லை. பரலோகம் போகவேண்டியதுதான். என்? அடிமையைக் கட்டியழுவதால் இன்பமுண்டாக வழியில்லை. இன்பம் சுதந்தரத்தில் தானுண்டு. விடுதலையில்தான் இன்பம் மலரும். விடுதலையில்லாவிட்டால் கட்டிக்கொடுக்கும் பெண்ணுக்கும் துன்பம். அதனைக்கட்டிக் கொண்டவனுக்கும் துன்பம். அப்பெண் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கும் துன்பம். அடிமை வாழ்வு வளர்ந்துவிட்டது. மான் மயில் குயில் போன்று சுதந்திரமாகத் திரியவேண்டிய பெண்ணினம் கூட்டிலடைத்த குரங்கைப்போ லாக்கப்பட்டுவிட்டது. இன்றே இப்பொழுதே விடுதலை கொடுத்தாகவேண்டும். எங்காவது இரண்டோரிடத்தில் பெண்ணுக்கும் ஆணுக்கும் சுதந்திர உணர்வு தோன்றினால் அதைக்கேலிசெய்ய முன்வரும் சில தரித்திரம் பிடித்த மனிதர்களைக் கண்டு ஊர்சிரிக்குமே என்று காதலர் அடிமைப்படுகின்றனர். இதனால் காதலில் குழப்பமேற்படுகிறதென்பதை வெகு நுட்பமாகப் பாரதியார் கூறுவதை இளம் பெண்களும் வாலிபர்களும் நோக்குதல் வேண்டும்.

---

# கோயில் உரிமை.

ஒவ்வொரு மதத்தினர்க்கும் சமயப்பொதுஸ்தாபனமாக விளங்குவது கோவிலென்று கூறலாம். மற்றும் பலவகைப்பட்ட ஸ்தாபனங்கள் இருந்தாலும் கோவிலொன்றே முக்கியமானதாக இருக்கிறது. அக்கோவில்தான் கடவுளை வணங்குதற்குப் புனித

மான இடமாருமென்றும் கருதப்படுகின்றது. அதனாலேயே அது முக்கியமாக இருக்கிறதென்று கூறவேண்டியதில்லை. உலகி லுள்ள முக்கியமான மதங்களாக இருப்பன நான்கு. அவை கிறிஸ் து மதம், புத்தமதம், மகமதியமதம், ஹிந்துமதம் என்பனவாகும். இவற்றுள் கிறிஸ்து மதத்தினரின் கோயில்களில் கிறிஸ்து மதத்தி னர் எவரும் செல்லலாம். எல்லோரும் ஒரு மாதிரியாகவே வண ங்கலாம். எல்லா உரிமையும் எல்லாக்கிறிஸ்தவருக்கும் ஒரே மா திரியாக வழங்கப்படுகிறது. வித்தியாசமில்லை. செல்வங்காரண மாகவோ பிறப்புக்காரணமாகவோ வேறெக்காரணம் பற்றியோ அவர்களில் எவரும் தடுக்கப்படுவதில்லை. அதேமாதிரி எந்த இட த்திலுள்ள எந்த புத்தர் கோவில்களிலும் புத்த மதத்தினர் எவ்வி தத்தடையுமின்றி எவ்வித வித்தியாசமுமின்றிச் செல்லலாம். ஒரு வர் வணங்குவதுபோல மற்றவரும் வணங்கலாம். வித்தியாசமும் உயர்வு தாழ்வுங்கிடையா. மகமதியர் பள்ளிகளிலும் வித்தியாசங் கிடையாது. அரசனும் மண்டிபோட்டுத்தொழலாம். வறிஞனும் தொழலாம். கிழவனும் தொழலாம். சிறுவனுந்தொழலாம். ஜாதி பேதம் உடல்பேதம் நிறபேதம் வாழ்க்கையின்பேதம் அறிவின்பே தம் எதுவுங்கிடையாது. "கடவுளைத்தொழுமிடத்தில், அவர் சன் னிதானத்தில் அவருடைய பிள்ளைகளுக்குள் எந்த பேதமுங் கிடை யாது" என்னும் வாக்கை அவர்கள் அனுபவத்தில் கையாளுகின் றனர். இதில் ஏமாற்றுவதும் ஏமாறுவதுங்கிடையா. கோ யில்கள் வெறும் வியாபாரமாகாமல் உண்மை யுணர்வோடிருப்ப தற்கு இது ஒரு உதாரணமாக இருக்கின்றதென்னலாம்.

ஹிந்து மதத்தில் இம்மாதிரியான சமத்துவங்கொடுக்க மறுக் கப்படுகிறது. ஹிந்து மதத்திலிருக்கிற அனைவரையும் கடவுள் படைத்தார். கடவுளுடைய பிள்ளைகளே யாவரும் என்று சமய நூல்கள் ஆக்ஷேபமின்றி ஒப்புக்கொள்கின்றன. என்றாலும் அனு பவத்தில் பார்க்கும்போது கடவுள் சன்னிதானத்தில் எல்லா மக் களுக்கும் சமஉரிமை வழங்கப்படுவதில்லை. சமஉரிமை விரும்பி னால் கொலைகளுங்கூட நடப்பதைக்காணலாம். கடவுள்கோவிலில் சுவாமி சன்னிதானத்தில் வித்தியாசமில்லாதிருப்பது எம்மதத்தி லும் சம்மதமாயிருக்க ஹிந்து மதத்தில் மட்டும் அஃதில்லாதொ ழிந்து போனமை கூர்ந்து கவனிக்கத்தக்கதாகுமன்றோ? பா

பன ஆணும் பெண்ணும் உள்வீடுவரை செல்லும் உரிமையைப் பெற்றிருக்கின்றனர். ஏனைய ஜாதியார் யாவருக்கும் அவ்வுரிமையில்லை. இரண்டு கட்டிடம் தாண்டி இடங்கொடுக்கப்படுகிறது. மற்றும் சில ஜாதியினர்க்கு துவஜஸ்தம்பத்திற்கு வெளியே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அநேக குழுவினர் ராஜகோபுரந்தாண்டி வரக்கூடாதென்று கண்டிப்பான சட்டமிடப்படுகிறது. ஒரே ஹிந்து மதத்தில் பரம்பரையாகப் பிறந்து அதே கடவுளை வழிபட்டு ஹிந்துமதச்சட்டங்கட்குக் கீழ்ப்படிந்து நிற்கும் மக்களில் இப்படிப்பட்ட வித்தியாசமிருப்பது நியாயமா? அதே கோயிலுக்கும் விக்கிரகங்கட்கும் எல்லா மக்களும் இயன்ற அளவு உதவி செய்திருக்க உரிமைமட்டும் வித்தியாசப்படலாமா? உதாரணமாக விக்கிரகத்தைக் காலால் மிதித்துக் கையால்புரட்டி உளி கொண்டடித்து உருவாக்குவது யார்? கல்தச்சனன்றோ? செம்பு விக்கிரகத்தை வார்ப்பதும் ராவுவதும உருவாக்குவதும் ஸ்தபதியெனும் ஆசாரியல்லவா? கோயில்கட்டுவதும் செங்கலறுப்பதும் சுண்ணாம்பு நீற்றுவதும் சிற்பவேலை சித்திரவேலை செய்வதும் பல வகுப்பு மக்கள்தானே? இத்தனைக்கும் பொருள்கொடுப்பவர் நாட்டுக்கோட்டைச் செட்டியாரோ அல்லது ஒரு முதலியாரோ பிள்ளையோ என்று கூறவேண்டியதில்லை. இத்தனைபேரும் சேர்ந்து தங்கள் பொருளாலும் உடலுழைப்பாலுங்கட்டப்பட்ட கோயிலில் இவர்களால் செய்யப்பட்ட விக்கிரகத்தைப்பார்ப்பதற்கும் முடியாமல் தொட்டால் தீட்டாகிவிடுமென்றுங் கூறித் திரைபோட்டு மறைத்துவைத்துக் காசு பெறல் ஒழுங்காகுமா? வேலை செய்கிறவரை இந்த மனிதரால் தீட்டாகாமலிருந்து வேலை முற்று[illegible] முடிந்தவுடன் தீட்டாகுமென்று கூறி வெளியே தள்ளப்படுகிறது.

சமய நூல்களில் திருப்பணி செய்பவர் கைலாசத்தில் சிவபெருமானுடன் இரண்டறக்கலந்து முக்தியின்பம் பெறுவாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் "கல்லினால் பணிகள் செய்வோர் கைலைவிட்டகலாரன்றே" என்று கூறப்படுகிறது. கைலாசத்தை விட்டுப் பிரியாதிருக்கும்படியான லைசென்ஸ் பெற்றவருக்குத் தாம் கட்டிய கோவிலிலேயே சுவாமி விக்கிரகத்திற்கருகில் செல்ல யோக்கியதைஇல்லை யென்று பகிரங்கமாகக்கூறி வெளியே தள்ளப்படுகிறது. கயிலாயத்தில் உயிருடனிருக்கிற கட

வுளுக்கருகில் இருக்கும்படியான உரிமை பெற்றதாகக்கருதி லட்சக்கணக்கான பொருளைக்கொடுத்த ஒருவர் அதே கோயிலில் தான் வைத்த லிங்கத்தைப் பார்க்கமுடியாதபடி வெளியே நிறுத்தப்படுகிறார். விபூதி ஒப்பற்ற திரவியம். அது உடலின் மேல்பட்டாலும் முக்தி கிடைக்கும் என்று சமய நூல்கூறுகிறது. பார்ப்பனரல்லாத ஒருவர் ஒரு மூட்டை விபூதியைக்கரைத்துக்குளித்துவிட்டுப் போனாலும் கோவிலினுள் ஐயர் சொல்கிற இடம் வரைதான் போகலாம். அப்பால் ஒரு அடிகூட வைக்கவிடமாட்டார்கள். "சிவா சிவா என்பார் பின் சிவன் உமையாளொடுந்திரிவன்" என்று நூல் கூறுகிறது. சிவாசிவா என்று தொண்டை வரண்டு மயக்கம் வருகிறவரை கதறினாலும் உள்ளே நிற்கிற பார்ப்பானும் பார்ப்பாத்தியும் சன்னிதானத்தை விட்டு விலகினால்தான் விக்கிரக தரிசனம் கிடைக்கும். சிவன் உமையாளோடு சிவசிவாபேர்வழிக்குப்பின்னால் ஒருநாளும் திரிகிறதில்லை. ஆனால் முன்னாலிருக்கிற கல் விக்கிரகத்தன் பக்கத்திலும் போகவகையில்லை யென்பதை உணரவேண்டும். ருத்ராக்ஷம் ஒன்றணிந்தாலே முக்தி சித்திக்கும் என்று ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது. பார்ப்பனரல்லாதாரொருவர் ஒரு வண்டி ருத்ராக்ஷக் கொட்டைகளைச் சுமந்துசென்றாலும் அவர் நிற்கலாமென்று சொல்கிற இடத்துக்கப்பால் நெருங்கமுடியாது. "கங்கையில் முழுகினால் சகல பாவங்களும் முன்வினை பின்வினைகளும் தீரும்" என்று கூறப்படுகிறது. ஆயிரம் தரம் முழுகிவிட்டுவந்தாலும் ஐயர் கோயிலுக்குள் விடமாட்டார். மதுரைக்குப்போனால் முக்தி; பொற்றாமரையில் முழுகினால் முக்தி; சிதம்பரம் நடராஜாவைப்பார்த்தால் முக்தி; அண்ணாமலையை நினைத்தால் முக்தி; காவிரியில் குளித்தால் முக்தி என்றெல்லாம் எழுதிக்கிடக்கிறது. இத்தனையும் செய்துவிட்டு ஒருவன் கோயிலினுள் சென்றால் உள்ளே வராதே, நீ வந்தால் தீட்டாகிவிடும், கடவுள் தீட்டாவார், கட்டிடம் தீட்டாகும், என்றுதான் கூறப்படுகிறது. ஹிந்துமதத்தில் பிறந்த ஒருவர், தருமஞ்செய்கிற ஒருவர், ஹிந்து மதத்தை மீறாத ஒருவர், ஹிந்து மதக்கடவுளுக்கு ஆலயங்கட்டிய ஒருவர், அந்த சாமிக்குத் திருவிழாசெய்கிற ஒருவர், அதற்கு ஆறு காலம் சாப்பாடு கொடுக்கிற ஒருவர், முக்திக்கு அதிகாரம் பெற்ற ஒருவர், ஹிந்து மதநூல்களில் விதித்த புண்ணிய தீர்த்தங்களில்

ஸ்நானம் செய்த ஒருவர், இரவு பகல் எப்போதும் சிவ சிந்தனையும் தேவாரபாராயணமுமுள்ள ஒருவர், விபூதி மூட்டையையும் ருத்ராக்ஷ மூட்டையையும் உடல் நிறைய அணிந்துள்ள ஒருவர் தாழ்ந்தஜாதி, உள்ளே வரக்கூடாது, வந்தால் கடவுள்பேராலுள்ள கல்விக்கிரகம் தீட்டாகிவிடும் என்று கூறப்படுகிறது. இவர்கள் கதியே இப்படி இருக்குமானல் தீண்டாதவர் என்பவர் நிலையைப் பற்றிக்கூறவேண்டியதில்லை. தீண்டாதவரென்போர் மட்டும் தடுக்கப்படுவதென்பதும் இல்லை. மதுரைக்கோயிலினுள் நுழையக் கூடியவர் திருச்செந்தூர்க் கோவிலினுள் நுழையக்கூடாது. திருச்செந்தூரில் நுழையக்கூடியவர் சிதம்பரத்தில் நுழையக்கூடாது. இந்த நிலைமையில் ஒரே ஜாதியார் ஒரு ஊரில் அனுமதிக்கப்படுவதையும் மற்ருெரு ஊரில் தடுக்கப்படுவதையும் காண்கிருேம்.

பார்ப்பனர் நிலைமையை நோக்கும்போது அபிஷேகப்பொருளைத்திருடுபவரும் புகையிலை போட்டுக்கொண்டு மடைப்பள்ளியினுள்ளேயே உமிழ்பவரும், குளித்தே அறியாதவர்களும் கோயில் விக்கிரகத்திற்கு பக்தர்கள் அணிவிக்கும் பூமாலைகளைத் தாஸி வீட்டிற்கு அனுப்பிவருபவரும் விக்கிரகத்தைத்தொட்டுத் தடவிப்பூசை செய்யலாம். அவர் செய்யும் அத்தனை இழிசெயலையும்பற்றிக் கவலையில்லை. கோயில் சுவாமியினிடத்து உண்மையான ப்க்தியுடன் ஏராளமான பொருளை வழங்கும் ஆசார சீலனுன பார்ப்பனரல்லாதானுக்கு விக்கிரகத்தின் உருவத்தை எட்டிநின்று பார்க்கும் உரிமைதானுண்டு. ஆனல் ஆசாரமென்பதே இல்லாமல் அணுவளவு பக்தியுமின்றி வயிற்றுப்பிழைப்புக்கு அதே சாமி சொத்தைத்திருடியும் கூலிக்கு வேலைசெய்யும் ஒருவனுக்கு சகல சுவாதீனமுமிருக்கிறது. மற்றெல்லா பக்தர்களையும் நாய் கழுதைமாதிரி நினைத்து அப்புறப்படுத்தவும் அதிகாரமிருக்கிறது. இதனல் கோயிலின் நிலை ஒருவாறு விளங்கும். சமய வழிபற்றியோ அல்லது சாஸ்திரவிதிகட்குக் கட்டுப்பட்டோ கோயில்கள் நடைபெறவில்லையென்பதும் அயோக்கியனுனுலும் பார்ப்பன ஜாதியாரின் வாழ்வுக்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதும் தெள்ளத்தெளிய விளங்கவில்லையா?

மற்றவர் தொட்டாலும் சமீபத்திற் போனுலும் சுவாமிவிக்கிரகத்தின் பரிசுத்தத்தன்மை போய்விடுவதாகக்கூறுவது சுத்தப் புரட்டென்பதற்குச் சில சான்றுகள் தருகிருேம். குளக்கரை

களில் பிள்ளையார் விக்கிரகங்கள் பல இருக்கின்றன. அவற்றை எவருந்தொடலாம். பெரியவர் குழந்தைகள் ஆண் பெண் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் யாவரும் அதற்கு அபிஷேகம் செய்தும் சோறு பொங்கிப்படைத்தும் பலகாரங்களைத் தங்கள் வீடுகளிலேயே செய்து படைத்தும் வருகின்றனர். அவர்களும் இந்தப்பார்ப்பனர் கோயில்களிற்போலவே இஷ்ட சித்தி முதலியன உண்டாவதாகக் கருதுகின்றனர். இப்படியே குயவர்கள் முதலியோர் பூசையுள்ள கறுப்பர்கோயில்கள் ஐயனார்கோயில்களில் உள்ள சுவாமிகளின் நிலையுமிருக்கிறது. ஐயனாருக்கும் கறுப்புத் தெய்வங்கட்கும் இருப்பதாகக் கருதப்படும் அபார சக்திகள் பார்ப்பனஸ்பரிச விசேஷத்தில் ஏற்படவில்லை. பார்ப்பனரல்லாதார் தொடுவதால்தான் அந்தசாமிகட்கு அபார சக்தி யேற்பட்டிருக்கிறது. மற்றவர் தொடுவதால் அதன் சக்தி போய்விட்டதாக எவரும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. இவற்றைத்தவிர ஆதித்திராவிடரைக் குருக்களாகக் கொண்ட நொண்டி, முனியன், பேச்சி காளியம்மன் முதலிய பல தெய்வங்களுக்குப் பல கோவில்களுமுண்டு. அவற்றிலுள்ள விக்கிரகங்கள் பஞ்சமர் தொட்டுப் பூசை செய்யும் போது ஓடி விடவில்லை யென்றே கருதப்படுகிறது. அந்தக் கோயில்களில் செட்டியார்களும் முதலியார்களும் பல வகைப்பட்ட ஐயர்மார்களும் தங்கள் மனைவிமக்களுடன் வந்து கும்பிட்டு விபூதி வாங்கி வருவதைக்காண்கிறோம். சிவாலயம் விஷ்ணுவாலயங்களில் தீராத பேயாட்டம் பிசாசாட்டம் முதலியவற்றை இங்கு வந்து தீர்த்துக்கொள்ளலா மென்று நம்பிப்பிரார்த்தனைகளும் செய்து கொள்ளுகின்றனர். மலாய் நாடு பர்மா போன்ற பகுதியிலும் இந்தியாவிலேயே பல இடங்களிலும் பார்ப்பனச்சாமி என்று கருதப்படுகிற சுப்பிரமணிய சாமிக்குப் பண்டாரங்களே பூசை செய்து வருவதையும் அந்த சுவாமிகள் ஐயர் ஐயங்கார்களின் சுவாமிகளைவிட சக்தியில் சிறந்திருப்பதாகக் கூறுவதையும் நாமறிந்திருக்கிறோம். இவைகளை உற்று நோக்கும்போது பார்ப்பனர் மற்றவர்களை யேமாற்றக் கோவில்களைக் கட்டச்செய்து கட்டியவர் தலையிலேயே தேனைத்தடவி விட்டு அந்தக் கோயிலிலேயே தீராத அவமானம் செய்து மானபங்கப் படுத்துவதற்கும் அதன் மூலம் தாங்கள் குடும்பத்தோடு குலத்தோடு யாவரும் வாழ்வதற்கும் மற்ற

வர் யாவரும் இழிந்தவர் என்று சொல்லுவதை அனுபவ பூர்வமாக நிச்சயப்படுத்துவதற்கும் உபயோகித்து வருகின்றன ரென்பதை எவரே மறுக்கமுடியும்? இதைத் தவிர பார்ப்பனருக்கு அணுவளவு பக்தி யிருப்பதாக எவரும் நிரூபிக்க முடியுமா? இந்த ஆகாசப்புரட்டை யறிய முடியாமல் ஏமாந்த சோணகிரிகள் கோயில் கட்டியும் அபிஷேகம் முதலிய கட்டளைகளைவைத்துப் பார்ப்பானுக்குப் போட்டழுவதோடு மட்டுமல்லாமல் "நாங்கள் சின்னச் சாதி, நீங்கள் பெரியசாதி, நாங்கள் என்ன பக்தி செய்தாலும் உயர முடியாது, நீங்கள் எத்தனை இழிதொழிலைச் செய்தாலும் தாழமாட்டீர்கள்" என்று செப்புப்பட்டயம் எழுதிக் கொடுத்து வருகின்றனர். இதுதான் கண்டபலன். "இந்தக் கோயிலுக்குப் போகவேண்டும், முக்காலும் திருக்கோயில் சூழவேண்டும், அபிஷேகம் பண்ணவேண்டும், பார்ப்பான் காலைக்கழுவிக்குடிக்கவேண்டும், மூட்டைக்கணக்கான விபூதி ருத்ராக்ஷவேஷம் போட்டுக்கொண்டு நாங்களும்திருக்கூட்டமாகவருகிறோம், நீங்களும்பிள்ளைகுட்டியோடு வந்து சேருங்கள், எல்லாருங்கூடி விக்கிரகத்தை அடித்து வைத்து அதற்கு வீடும் கட்டிவைத்து வேளைதவறாமல் சாப்பாடும் போட்டு பார்ப்பானையும் காவல் வைத்து கிட்டப் போகக்கூடாத 'சின்னச்சாதி' என்று சாஸ்வத அடிமைத்தனத்தையும் பெறுவோம்" என்று கூறவும் மனிதர்கள் இருக்கின்றன ரென்பதை நினைக்கும் போது நெஞ்சு கொதிக்கிறதன்றோ? ஒரே சமயம், ஒரே கடவுள், அவரால் தோன்றிய மக்கள், அவரால் உலகில் யாவரும் வாழ்கின்றனர், எல்லாரையும் கடவுள் கையால் தடவித் தடவிச் செய்தனுப்பியிருக்கிறார்; அப்படிப்பட்ட கடவுள் சன்னிதானத்தில் இத்தனை கொடுமைகள் நடக்கின்றன. இதனை உணர்ந்து மக்கள் முன்னேற வேண்டுமென்பதே நமது பேரவாவாகும்.

---

எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன்கோயில்

---

இந்தச் சன்னதிக்கு அந்தச்
சன்னதியில் என் வித்தியாசம்?

---

# படித்தபெண்கள் முன் வருவார்களா?

திருச்சி, மிஸ். நீலாவதி எழுதுவது.

இந்தியாவில் சாதிப்பூசல்களும், சமயப்பூசல்களும் நிறைந்து, ஆண், பெண், வேற்றுமை வளர்ந்து, ஒருபாலுக்கொரு நீதி வழங்கும் சட்டங்கள் வலுத்து தன்னலம் தழைத்து நிற்கின்றது. இந்த சமூகநிலை பெரிதும் இழிவான நிலையிலுள்ளதென்பதை ஆட்சேபிக்க முடியாது. சமூகத்தில் நிரம்பியுள்ள ஊழல்கள் அளவிடற்கரிதாம். தீண்டாமையென்னும் கொடும்பேய் தாண்டவமாடித் தேசத்தைப்பாழாக்குகின்றது. 'சாதி' யென்னும் சண்டாளப் பேய் சமூக மேம்பாட்டைச் சீர்குலைக்கின்றது. மூடப்பழக்கவழக்கங்களும், குருட்டு நம்பிக்கையும், அறியாமையும் மலிந்துநிற்க, சமூகவிடுதலை தடைப்படுகின்றது. அந்தோ! இவை யெல்லாம் இந்தியாவினின்று ஒழியும்நாள் எந்நாள்? அந்நாள் விரைவில் வருமா? ஆம்! வந்து கொண்டுதானிருக்கின்றது. ஆனால் இதோடுதிருப்தியடைந்து விடமுடியுமா? அது எப்படி முடியும்? முடியவே முடியாது. இந்தியமக்கள் நலத்திற்குச் சமூகவிடுதலைப்போர் இன்றியமையாததாகும். தீண்டாமையின் கொடுமையால் கோடிக்கணக்கான நமது சகோதரசகோதரிகள் அடையும், இன்னும் அடைந்துவரும் இன்னல்களை, எண்ணிப்பார்த்தால் எவர்மனந்தான் கொதியாதிருக்கும்? ஆ! தீண்டாமையின், கொடுமையை விவரித்துச் சொல்ல என்னால் முடியுமென்றுதான் நான் எப்படிச்சொல்வேன்? தீண்டாச்சாதி என்ற ஒன்றுதனியாய் இருப்பதாகவைதீகர்கள் இன்றும் வாதாடும் நேர்மையைநான் என்னென்றியம்புவது? இறைவன் படைப்பில் ஏற்றத்தாழ்வையுண்டாக்கி எண்ணற்ற பல பிரிவுகளை ஏற்படுத்தி நாட்டைக்கேடடையச்செய்த ஆரியப்பார்ப்பனர் தம்நயவஞ்சகத்தை நம்மவர்கள் இன்னும் உணராதிருப்பது, உணர்ந்தும் அதை ஓட்டாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். மனிதப்பிறவியில் தீண்டத்தக்கவரென்றும் தீண்டத்தகாதவரென்றும் கூடவா வேறுபாடு உள்ளது? அங்ஙனம் தீண்டத்தகாதவரென்போருக்கும், தீண்டத்தக்கவரென்போருக்கும், அகப் புறத்தோற்றத்தில் உள்ள வேறுபாடுதான்யாவை? அங்க அமைப்பிலும் புறத்தோற்றத்திலும், உணர்ச்சியிலும், இருதிறத்தாருக்கும் ஓர

சிறிதும் வேறுபாடின்றி ஒருங்கமைந்திருக்கையில் ஒருவர் மேலோராகவும், மற்றவர் கீழோராகவும், ஒருவர் பார்க்கத்தக்கவராகவும், மற்றவர் பார்க்கத்தகாதவராகவும், கொள்வதற்கு இடமெங்கேயுள்ளது? இந்தியா தவிர வேறு எந்த நாட்டில் இந்தக்கொடிய தீண்டாமைப்பேய் தாண்டவமாடுகின்றது? மாமாயப்பார்ப்பனர் தம் சுயநலத்தால் நயவஞ்சகமாய் உண்டாக்கிய பாழும், 'சாதி'ப்பேயைப் பார்த்து அது உயர்ந்ததென்ற காரணத்தாலோ அன்றி மற்றெதனுலோ, பார்ப்பனரல்லாதாரும் தம்முள் பல பிரிவுகளை, வகுப்புகளை வகுத்துக்கொண்டு விட்டது மிகவும் வருந்தத்தக்கதும், அருவருக்கத்தக்கதுமாகும். இக்கொடிய செயலை உடனே நீக்கவேண்டியதும் அழிக்கவேண்டியதும் அவசியமாகும். மேலும், நாம் ஒருவரை நோக்கிச் சமத்துவம், கேட்கும்முன், நமக்குக் கீழ்ப்பட்டோரென்று அறியாமையால் எண்ணி, அடக்கிவைத்திருப்போருக்கு முதலில் நாம் சமத்துவம் அளித்திடல் வேண்டுமென்பதும், ஈண்டுக்குறிப்பிடத்தக்கது. இது நிற்க, தற்போது இந்தியாவில் சீர்திருத்த உணர்ச்சி தோன்றி வருகின்றதென்பது மிகையாகாது. இந்தியமக்களுக்குக் குறிப்பாகத் தென்னுட்டு மக்களுக்குச் சீர்திருத்ததாகம் உண்டாக்கவேண்டிச் சுயமரியாதை இயக்கம் தோன்றிப் பாடுபட்டு வருகின்றது. இதன் பயனுய் நம்மக்களுக்குச் சீர்திருத்தத் தாகம் சிறிது உண்டாகியும் விட்டது. வைதீக உலகத்திற்கும் சீர்திருத்த உலகத்திற்கும் பெரும்போர் நடந்து கொண்டும் இரு உலகத்தாரும், தத்தம் உணர்ச்சியையும் வலிமையையும் வெளியிட்டுக்கொண்டும் தம் தம் ஆட்சியே இந்நிலவுலகில் நிலைக்கவேண்டுமென்று முயற்சித்தும் வருகின்றுர்கள். ஆனல் சீர்திருத்த உலகம் வெற்றியடைவதும், வைதீக உலகம் தோல்வியடைவதும் திண்ணமென்பதில் பின்னமில்லை. வைதீக ஆட்சியில் சமூக சீர்திருத்தம் கடுகளவுகூட ஏற்படப்போவதில்லை என்பது உறுதி. இது இத்துடன் நிற்க, சமூக சீர்திருத்தம் பெண்மக்கள் பகுதியையே பெரிதும் சார்ந்தது. எனவே இத்துறையில் பெண்மக்கள் தம் பொறுப்பே பெரிதும்வேண்டும். 'பால்யவிவாக மொழித்தல், விதவாமணம் வேண்டுதல், பெண்கல்வி, பெண்கள் விடுதலை' ஆகிய இவையெல்லாம் பெண்களைச்சார்ந்ததன்றி வேறென்? இந்தியாவில் படித்த பெண்கள் தொகை மிகமிகச் சொற்பமென்

பதை யான் அறியாமலில்லை. பெண்கள் படித்தால் கள்ளக்கணவர்க்குக்காதற் கடிதங்கள் வரைவார்களென்னும் மூடநம்பிக்கை, இந்தியப்பெற்றோர் உள்ளத்தில் ஊறிப்போய் நிற்கையில் தம் பெண்மணிகளுக்கு எவ்வாறு கல்விச்செல்வத்தை அளிப்பார்கள்? எவ்விதம் கல்வியின்பத்தை ஊட்ட முன்வருவார்கள்? இந்திய சமூகம் பல மூடநம்பிக்கைகளைத்தன்னுள் கொண்டிருக்கின்றதென்றாலும் இதைப்போல் மோசமானது வேறில்லையென்றே சொல்லலாம். இந்த இருபதாம் நூற்றாண்டிலுங்கூட சில பெற்றோர்கள் தம் பெண்மணிகளுக்குச் சிறிது கல்வி கற்பித்தாலும், எழுதக்கற்பிக்கப்படுவதில்லையென்றால், எவ்வளவு தூரம் அவர் தம் உள்ளம் மூடநம்பிக்கையில் மூழ்கியிருக்கவேண்டுமென்பதை வாசகர்களே அறிந்துகொள்ளட்டும். ஆனால் இவ்வாறு இவ்வளவு தூரம் வியாக்கியானம் செய்துவிட்டுப் படித்தபெண்கள், என்று ஈண்டுக் குறிப்பிட்டுப்பேசுவது எவ்வாறு பொருத்தமாகும் என்று வாசகர்களில் சிலர் எண்ணலாம். அவ்வெண்ணமும் நியாயமானதே யாகும். நம் நாட்டில் படித்த பெண்களின் எண்ணிக்கை, சொற்பமேயானாலும் தற்போது அவ்வாறு சொல்லுவதற்கில்லாமல் நிலைமை சற்றுத் தெளிவடைந்திருக்கின்றது. ஆனால் துணிந்து வெளிவருவதுதான் சாத்தியப்படாத காரியமாயிருக்கின்றது. நிற்க, சமூக சீர்திருத்தத்துறையில் பெண்கள் ஈடுபட்டு உழைத்திடின், பெரும் பயன் விளையக்கூடுமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தற்போது இந்தியாவில் படித்த பெண்கள் பலர் இல்லாமலில்லை. சமூக சீர்திருத்தத்துறையில் முன்னணியில் நின்றுழைக்கப் படித்த பெண்கள் முன்வர வேண்டுகின்றேன். சாதிப்பேயும் மூடநம்பிக்கைகளும் பெண்ணுலகத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. எனவே இதையும் பார்த்துக்கொண்டு படித்த பெண்கள் வாளாவிருப்பது நன்றன்று. பெண்மணிகளாகிய என் கண்மணிகளே! நீங்கள் கல்வி கற்றும் கிணற்றுத் தவளைவாழ்க்கை நடத்தவா விரும்புகிறீர்கள்? உங்கள் துயிலினின்றும் கண்விழித்து வெளிவந்து உலகத்தை உற்று நோக்கி, என்று நீங்கள் உணர்ச்சி பெறப்போகின்றீர்கள்? நம்பெண்ணுலகம், சீர்திருத்தமடைந்து முன்னேற்றமடையும் பணியில் பெண்களாகிய நாமே பின்னிற்பது நமக்கு அழகாகுமா? நமது உழைப்பில்லாமல், ஆண்மக்கள் உழைப்பால் மட்டும் நாம் விடுதலை

டைந்து விடமுடியாதென்பதை என்பிரிய சகோதரிகளாகிய உங்களுக்கு மிக வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்கின்றேன். நமது சமூக நன்மைக்குப் பிறருடைய உதவியை நாம் எவ்வளவுதான் எதிர்பார்க்கமுடியும்? என்னதான் ஆண்மக்கள் உதவி நமக்கிருந்தாலும், நம் முன்னேற்றத்திற்கு நமது பெருமித உழைப்பே வேண்டுமென்றுதான் நான் சொல்லுவேன். சீர்திருத்த உலகத்தில் சரிபாதி பங்கு கொள்ளவேண்டியவர்கள் பெண்களாகிய நாமன்றோ? நமது சமூகம் கல்விக்கண்களை யிழந்து, மூட நம்பிக்கைகளில் மூழ்கி, அறியாமையில் ஆழ்ந்து, அடிமை வாழ்க்கையில் அகப்பட்டு அவதிப்படுவதைத் தடுக்கப் படித்த பெண்களாகிய நீங்கள் இன்னும் முன் வராதிருப்பது, எனக்கு ஒருபக்கம் பெரும் ஆச்சரியத்தையும், மறுபக்கம் மிகுந்த துக்கத்தையும் விளைவிக்கின்றது. கோடிக்கணக்கான நமது சகோதரிகள் விதவைத்தன்மையால் வதைக்கப்படுவதைக் கண்டு உங்கள் பெண்இரத்தம் கொதிக்கவில்லையா? நமது சமூகப்பெண்களாகிய கண்மணிகள் தாழ்த்தப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டு இருப்பதைக் கண்டு, உங்கள் கல்வியறிவால், அவைகளைத் தூள்தூளாய்த் தகர்த்தெறிய முன்வராமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு வாளாவிருக்க உங்கள், பெண் மனம் எவ்விதத்தில் சம்மதப்படுகின்றது? சாதிப் பேயாலும், சாத்திரக்கொடுமையாலும், ஆண்மக்கள் அதிகார ஆட்சியாலும் பெண்கள் படுந்துன்பங்களை இவ்வளவென்று விவரிக்க என்னால் இயலுமோ? இந்தியாவில் தற்போது படித்த பெண்கள் பலரிருந்தும் சமூக சீர்திருத்தத்துறையில், முன்னணியில் நின்று உழைக்காதது, எவ்வளவு வருந்தத்தக்கவிடயம். என்னருமைப் பெண்மணிகளே! முற்காலப்பெண்கள், அதில் சிறந்து விளங்கினர்கள் இதில் சிறந்து விளங்கினர்கள் என்று பழங்கதைகளைக்கூறிப் பெருமைப்படுவதில் பலனென்ன? பண்டை நிலையை எடுத்துக் கூறிப் பெருமை பாராட்டிக்கொள்வதைவிட இன்று செய்கையில் காட்டிப்பெருமையடைவது மேலானதல்லவா? முன்னேற்றமடைந்த மேல் நாட்டுப் பெண்களையும் நம் நாட்டுப் பெண்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் தலைகுனியவேண்டிவருமே தவிர, தலை நிமிர்ந்து நிற்க இயலாது, கல்வித்துறையில் நமது பெண் சமூகம் எவ்வளவு தூரம் பின்னடைந்திருக்கின்றதென்பதை ஈண்டு விளக்

கத்தேவையில்லை யென்றே நினைக்கின்றேன். பெண்மணிகளே! கல்விக் கண்களின்றி நாம் இவ்வுலகில் என்ன இன்பத்தை அடையக்கூடுமென்பதைச் சிறிது தயவு செய்து எண்ணிப்பாருங்கள்! நாம் முன்னேற்றமடையும் விடயத்தில் வைதீக வெறியர்கள் காட்டும் ஆவேசத்தை, செய்யும் ஆர்ப்பாட்டத்தைச் சற்றே கூர்ந்து நோக்குங்கள்!! இவ்வைதீக வெறியர்களுக்குப் படித்த பெண்கள் சரியான சவுக்கடி கொடுக்க முன்வருவார்களேயானால்—துணிந்து முன்வருவார்களேயானால்—அவர்தம் கொட்டம் அதிவிரைவில் அடங்கிவிடும். ஆனால் ஈண்டொன்று குறிப்பிடவேண்டியது அவசியம். அதாவது படித்த பெண்களென்று பெயர் வைத்துக்கொண்டு அவர்களே அறியாமைச்சேற்றில் மூழ்கியிருப்பார்களானல், எள்ளளவும் நன்மை உண்டாகப்போவதில்லை. அப்பேர்க்கொத்தவர்கள் முதலில் தங்கள் அறியாமையைப்போக்கடித்துக் கொண்டு, பகுத்தறிவால் எதையும், ஆராய்ந்து பார்க்கவேண்டும். சமூக சீர்திருத்தத் துறையில், முன்னின்றுழைத்து வெற்றிபெறப் பெண்கள் பெரிதும் போராடவேண்டும். அதிலும் வாலிபப்பெண்களே முதலில் முன்வரவேண்டும். வாலிப உலக சக்தியுடன் வயோதிக உலக சக்தி யெதிர்நின்று போட்டிபோடமுடியாது என்பது திண்ணம். இளமையின் பெருமையை ஈண்டு விரிக்க இடம் போதாதாதலால், அதைச்சுருக்கி ஒரே வார்த்தையில் முடித்தேன். என்னரும் பெண்மணிகாள்! கண்மணிகாள்!!. நீங்கள் சமூக சீர்திருத்தத்துறையில் இறங்கிப் பணியாற்றுங்கால், உங்களுக்குப்பெரும் இடையூறுகள் ஏற்படுமென்பதை யானறிவேன். ஆனாலும் அதைக்கண்டு அஞ்சுதல் அழகல்லவென்பதோடு, நீங்கள் யாவரும் பெண் சிங்கங்களாய்த் திகழவேண்டுமென்பதே எனது பேரவா! எனவே சாதிப்பேயை அழிக்க, சமயக்கொடுமையை ஒழிக்கப் பெண்ணுலகத்திற்குப் பெருந்தொண்டாற்றப் படித்த பெண்கள் முன்வருவார்களா?

---

# யார் நாஸ்திகர்?

வேதாகமங்கள் என்று வீணவாதம் ஆடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்னஅலால் உண்மை வெளிதோன்ற உரைத்தல்
என்ன பயனே இவை. [இலெ

இப்பாடலைப்பாடியவர் சிவஞானம் பெற்று பரம ஆஸ்திக சைவசித்தாந்த சிரோமணியாக விளங்கிய இராமலிங்க சுவாமிகளாவர். இப்பாடலில் என்ன கூறப்பட்டிருக்கிற தென்பதை உற்று நோக்குமாறு வேண்டுகிறேன். இராமலிங்க சுவாமிகள் திருப்பாடல்கள் யாவற்றையும் சேர்த்து திருவருட்பா வென்னும்பெயரால் அச்சிடப்பட்ட பெரும்புத்தகத்தில் ஆறாந்திருமுறையில் இப்பாடல் காணப்படுகிறது. வேதம் ஆகமம் எனும் ஏடுகள் வீண் வாதத்துக்குச் சூதாகச் சொன்னதென்று வெட்ட வெளிச்சமாகக் கூறுகிறார். இந்தச் சுவடிகளால் உலக மக்கட்கு என்ன பயன் என்றும் கேட்கிறார். இப்படியே,

சாத்திரங்க ளெல்லாந் தடுமாற்றஞ் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே.

என்று கூறுகிறார். சாத்திரம் எல்லாம் தடுமாற்றமாகவேசொல்லும். கண்ணுக்குநேரே காட்டக்கூடியவகை அதில் ஒன்றுமிராது. அத்தனையுஞ்சூது என்பது இராமலிங்க அடிகளின் வாக்காக இருக்கிறது. இன்னும்,

சாதிகுல மென்றும் சமயமத மென்றுமுப
நீதியில் ஆச்சிர நீட்டென்றும்—ஓதுகின்ற
பேயாட்டமெல்லாம் பிதிர்ந்தொழிந்தவே பிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று.

என்று கூறுகிறார். வருணாச்சிரமம் மதம் சமயம் என்றுசொல்லப்படுகின்றன வெல்லாம் பேயாட்டமென்று கூறுவதை அன்பர்கள் சிந்தை செய்தல் வேண்டும். பேயாடுவதென்பது மனத்தில் ஏற்பட்ட பயங்காரணமாகச் சுவாதீனமற்று—தன்சுயபுத்தியில்லாமல்—தலைவிரிகோலமாக ஆடுவதென்று கூறப்படும். இந்த ஆட்டமே ஜாதி, குலம், சமயம், ஆசிரமம் என்பனவெல்லாம் என்றும் அப்பெரியார் கூறுகின்றார். மேலும்,

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்றஉலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழகலவே.

இப்பாடலில் சாதி, மதம், சாத்திரம், கோத்திரம் என்பன வற்றில் பிறக்கும்போதிருந்தே ஒருபற்றுஉண்டாக்கப்படுகிற தென்பதையும் அந்த அபிமானத்தால் தன்மதம் தன்ஜாதி தன்சாஸ்திரம் என்ற உணர்வு மேலிட்டு ஆராய்ச்சி செய்து உண்மைகாணும் அறிவு மழுங்கி கண்மூடிப் பொய்ச்சாத்திர மூட்டையில் தடவுவதை வெறுத்துக்கூறுகின்றார். உண்மைகாணுதற்கு அந்தச் சாத்திரத்தையும் சாதியையும் கோத்திரத்தையும் பற்றிப்பிடித்துக் கொள்வதால் பயன்பெறாமல் அலைந்தலைந்து ஏன் வீணே அழிந்துபோகின்றீர்கள் என்று கேட்கிறார். அது அழகல்ல வென்றும் கூறுகிறார்.

இயல்வே தாகமங்கள் புராணங்கள் இதிகாசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையாய் உரைப்பர்
மயலொருநூல் மாத்திரந்தான் ஜாலமென அறிந்தார்
மகனேநீ நூல்அனைத்தும் ஜாலமென அறிக.

மயக்கத்தைத்தரும் நூல்தான் ஜாலம் என்று சிலர் அறிந்தனர். ஆனால் நீ எழுதிவைத்த நூல் முழுமையும் ஜாலம்—ஏமாற்றம் என்று உணர் என்று கூறுவது கவனிக்கத்தக்கது. இதோடு மட்டும் விடவில்லை,

நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலாம்
நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்துஇதுபார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே
ஜாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்.

இப்பாடல்களால் வருணம் ஆச்சிரமம் என்பது புத்தியறியாத சிறுபிள்ளைகளின் விளையாட்டென்கிறார். மேல்வருணத்தையும் தோல் வருணத்தையும் கண்டவர்யார்? கண்ணைமூடிக்கொண்டு குருட்டாட்டம் ஆடாதே! விழித்துப்பார்! என்றுரைப்பது நோக்கத்தக்கது. 'சாத்திரக்குப்பை' என்ற அருமையான சொற்றொடர் திரு ராமலிங்கப் பெருந்தகையார் அருள்வாக்கினின்றும் எழுந்து

அது திருவருட்பாவினுள் வயிரமணிபோல் விளங்குவதைச் சமயக் குருடர் அறியார். இன்னும் அவர்,

> கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
> கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக

என்று வாழ்த்துகிறார். சாஸ்திரத்தில் சொல்லப்படும் கற்பனைகளை அதாவது கட்டுக்கதைகளை உண்மையென்று நம்பிக்கொண்டாடுகின்ற குருட்டு வழக்கமெல்லாவற்றையும் குழிவெட்டிப் புதைக்கவேண்டும் என்று கூறுவது ஒவ்வொருவரும் கூர்ந்து நோக்கத்தக்கதாகும். இவை போன்ற எண்ணற்ற பாட்டுகளை ஓதிய அவர் கூறும் ஒரு பாடலை முடிவாகக்கூறி முடிக்கிறேன்.

> நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் சொல்வார்த்தையன்றி
> நானுரைக்கும் வார்த்தையன்று! நாட்டீர்நான்—ஏனுரைப்பேன்
> நான்ஆர் எனக்கெனஓர் ஞானவுணர்வேது சிவம்
> ஊனுடி நில்லா வழி.

இப்பாடலை அவர் பாடியபடியால்தான் அவர் சைவசித்தாந்தி யென்றும், ஆஸ்திகரென்றும், அவர்வாக்கு அருள்வாக்கென்றும் கொள்ளப்பட்டன. சொல்லவேண்டியவெல்லாம் சொல்லிவிட்டுப் போதாக்குறைக்கு "அவனன்றியோரணுவுமசையாது; ஆதலால் நான் சொன்னதெல்லாம் அதன் சொன்னதுதான்" என்று ஒருபோடு போட்டுவிட்டார். எப்படிச்சொன்னாலும் ஜாதி சமயம் ஆச்சிரமம், சாஸ்திரம் குலம் கோத்திரம் எல்லாம் சூதாக ஏற்படுத்தியது, அவை ஒழியவேண்டும், என்பதுதான் விஷயம். இதனை சுயமரியாதைக்காரர் தங்கள் அறிவைக்கொண்டு சொல்கிறோமென்கிறார்கள். இராமலிங்க அடிகள் கடவுள்—சிவபெருமான் என்வாக்கிலிருந்து சொல்கிறார் என்று ஒரு போடாகப்போடுகிறார். இதுதான் வித்தியாசம். இதற்காக—உள்ளதை உள்ளபடிசொல்வதற்காக சுயமரியாதைக்காரர் நாஸ்திகரா? அப்படியானால் இராமலிங்க சுவாமி முக்காலே மூன்றுவீசம் நாஸ்திகரென்பதை ஒப்புக்கொள்ளத் தயார்தானா? அவனன்றி ஓரணுவும் அசையாதென்பது வாஸ்தவமானால் சுயமரியாதைக்காரர் சொல்லிக்கொள்ளாவிட்டாலும் அவர்களும் சிவபெருமானுடைய திருவருள் இல்லாவிட்டால் அசையமுடியாதல்லவா? எனவே சிவபெருமான்தானே அவர்களையும் அசைவிக்கிறார், ஆட்டுவிக்கிறார், பேசுவிக்கிறார் என்று கருதிக்கொள்வதுதானே நியாயமாகும்?.

அஞ்சா நெஞ்சன்.

---

# புரோகிதப்புரட்டு.

ராம. சுப்பிரமணியம் எழுதுவது.

ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டம் ஒன்று இத்தமிழ் நாட்டில் உளது எனில் அது பார்ப்பன வைதீகக் கூட்டமேயாகும். அக்கூட்டம் இதுவரை ஜனங்களை ஏமாற்றியிருப்பதற்கு ஒரு அளவு கூறமுடியாது. பிறந்தது முதல் இறக்கும் வரை—இறந்த பிறகுங்கூட—பணங்களை அடித்துக்கொண்டு போக வழி கோலப்பட்டிருக்கிறது. ஏமாற்றுவதற்காகச் செய்யப்பெற்ற சூழ்ச்சி நூல்களை ஒரு காலத்தில் உண்மை தெரிந்து பலர் உடைத்தெறியக்கூடும் என்ற பயத்தினால் அச்சூழ்ச்சிக்காரர்கள் நரகம் என்று ஒன்றைப் போட்டுவைத்தார்கள். அதில் சிறு குழந்தைகளுக்குப் பயங்காட்டுவதுபோல் நம்மையும் பயங்காட்டிப் பணம் பறிக்க ஏது உண்டாக்கிக்கொண்டார்கள். ஆசைப்படும் பொருள்களை அளிக்க வல்லவர்கள் நாங்களே எனக்கூறிக்கொண்டார்கள். உதாரணமாக ஒருவர் தனக்குப்பிள்ளை வேண்டுமென எண்ணுகிறார்; உடனே இப்பார்ப்பனர்கள் அவரிடம் எங்கள் மூலமாக நீங்கள் பிள்ளைபெற வசதிகளெல்லாமிருக்கின்றனவே; ஏன் கவலைப்படுகிறீர்கள். போடுங்கள் பட்டியல்! புறப்படுங்கள் இராமேசுவரத்திற்கு! எனத்துரத்தி அங்குள்ள பார்ப்பனர்களைக்கொண்டு தட்டிப்பறிக்கச்செய்து கமிஷன் பெற்றுக்கொள்கிறார்கள். மோட்சம் என்று சொல்லி ஏமாற்றும் மோசச்செயல்களை விரித்தால் அது கட்டுக்கடங்காததாகும். சைனு எங்கிருக்கிறது, ஜப்பான் எங்கிருக்கிறது என்று சொல்லத் தெரியாத ஒருவன் மோட்ச உலகத்தைப்பற்றிச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஒரு அறிஞன் இப்பைத்தியக்கார விஷயத்தைக்கேட்கவோ சொல்லவோ மாட்டானென்பது உறுதி. ஒரு ஏமாளியும் ஒரு ஒழுங்கீனனுந்தான் இதை ஒப்ப முடியும். சுமார் ஆயிரம் மைல்களுக்கப்பால் உயிரோடிருக்கும் தகப்பனுக்குப் பத்து ரூபாய்களை இரண்டணாச்செலவில் தகுந்த பாது காப்புடன் கொண்டுபோய்ச்சேர்க்க வழி இருக்கிறதென்பதை அனைவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதே பணத்தைப் பத்து ரூபாய்ச் செலவில் கொண்டுபோய்ச்சேர்க்கச் சொன்னாலும் சேர்க்க வகையில்லாத இந்த ஒழுங்கீனர்கள் மக்களிடம் இறந்து போன பிதுர்க்களுக்கு எல்லாம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன் என்

சொல்வதில் கடுகளவாவது உண்மை இருக்குமா என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேன். நம்மைத்தவிர மற்ற ஆங்கிலேயனிடமோ ஜர்மனியனிடமோ இறந்து போன உனது தகப்பனுக்குச் சாப்பாடு கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேனென்றால், புரோகிதனுக்குப் புத்திவரும்படி செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். நமது நாட்டில் புரோகித ஆட்சி தொலையாத வரை மக்கள் அடிமையாகவும் படியாத மூட்டாள்களாகவுந்தான் உண்டாகிக் கொண்டிருக்கக் கூடும். அப்புரோகித ஆட்சியைத் தொலைத்த மறு நிமிஷமே உண்மை வாழ்வு இயங்கும். ரயில்வேக் கம்பெனிக்காரர் சேது ஸ்நானத்திற்கு இராமேஸ்வரம் செல்லுங்கள்! ஆருத்திராதரிசனத்திற்கு சிதம்பரம் செல்லுங்கள்! விசாக உற்சவத்திற்குத் திருச்செந்தூர் செல்லுங்கள்! கார்த்திகை தீபத்திற்குத் திருவண்ணுமலை செல்லுங்கள்! வைகுண்ட ஏகாதசிக்கு ஸ்ரீரங்கம் செல்லுங்கள்! என்று மாதந்தவருது ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷன்களிலும் விளம்பரஞ்செய்வதை அன்பர்கள் கண்டிருக்கலாம். ரயில்வேக்காரர் பணஞ்சம்பாதிக்கும் நோக்கத்துடன் இம்மாதிரி விளம்பரங்கள் செய்கிறுர்களே யன்றி இந்த நாட்டு ஜனங்களெல்லாரும் இப்புண்ணிய ஸ்தலங்கட்குச் சென்று முக்திப்பெரும் பேற்றையடைய வேண்டுமென்று கருதியல்ல வென்பது நன்ருகத் தெரிந்ததேயாகும். இதேமாதிரிதான் புரோகிதக் கூட்டத்தாரும் அங்கே போய் பிராமணனுக்குக்கொடு, இங்கேபோய் பிராமணனுக்குக்கொடு என்று மக்கள் பாடுபட்டுத்தேடும் பொருளையும் அபகரித்துக்கொண்டு கஷ்டத்துக்கும் உட்படுத்துகிறுர்கள். புரோகிதனைப் பார்த்து நீ செய்கிறதெல்லாம் ஒழுங்கா? வேலைசெய்து சம்பாதிக்கக்கூடாதா? ஏன் இந்தச்சோம்பேறிப் பிழைப்புப்பிழைக்கிருய் எனில் நாஸ்திகம் என்று சொல்லிதப்பித்துக்கொள்கிறுர்கள். புரோகிதர்கள் மக்களுடைய பணத்திற்கு அந்துப்பூச்சிகளாக இருக்கிறுர்கள். இவர்கள் ஒழிந்தால் நாடு மிக விரைவில் முன்னேறிவிடுமென்பதற்கையமில்லை.

---

# நகரில் நடு நிசி.

இது மேனாட்டுப் புலவரான "ஆலிவர் கோல்டு ஸ்மித்" என்பாரெழுதிய ஓர் வியாசத்தைத் தழுவி வரையப்பெற்றது:—

எங்கும் அமைதி! நிஸ் சப்தம்! ஆ, அஃதென்ன ஓசை! கோபுரத்திலிருக்கும் கடிகாரம் மணி அடிக்கிறது! ஒன்று ... இரண்டு. இப்பொழுது மணி இரண்டு ஆகிறது. என் எதிரே இருக்கும் விளக்கிலிருந்த எண்ணெயும் தீர்ந்து விட்டது. வெளிச்சமும் மங்கலாகிவருகின்றது. காலமோ நிசா சரன் உலாவும் காலம். ஊரை அடிக்கடி சுற்றி "ஜாக்கிரதை, ஜாக்கிரதை" என்று எச்சரிக்கை செய்துவரும் நகரக்காவலாளியும் தன்னை மறந்து தூங்கும் காலம். நெற்றி வியர்வை நிலத்தில் விழ வேலை செய்யும் கூலியாளனும், பஞ்சணை மெத்தைமேல் படுத்து உறங்கும் பிரபுவும் நித்திராதேவி வசம் ஆகும் வேளை. சிந்தா குலத்தில் அழுந்தினோரும், குற்றவாளிகளும், களியாட்டமாடுவோரும், துக்கசாகரத்தில் முழுகி இருப்பவரும்—ஆகிய இவர்கள் விழித்திருக்கும் நேரம். இந்நேரத்தில்தான் குடிகாரன் "இன்னுங்கொஞ்சம், இன்னுங்கொஞ்சம்" என்று மதுவை அளவின்றி யருந்தி வெறித்து தனது மானிடசரீரத்தை அழித்துக்கொள்கிறான். பிறன் பொருளை அபகரிக்க எண்ணும் கள்வன் தெருத்தெருவாய்ச்சுற்றி வரும் நேரமுமிதுவே. எக்காரணத்தாலோ இம்மானிட சன்மத்தை வெறுத்தோர் அருமையாகப் பெற்றுவளர்த்த இச்சரீரத்தை அழிக்கக்கருதித்தற்கொலை என்ற துர்க்கிருத்தியத்தைச் செய்யும் வேளையுமிதுவே.

நான் இதுவரை (இந்நேரம்) படித்த புராதனக்கதைகள் போதும். படித்தமட்டும் நிறுத்திவிட்டு வெளியே சென்று ஏகாந்தமாய் உலாவிவருவோம். நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டே இருக்கும் மானிடர் நடமாடின இடத்தையும், மாயாப்பிரபஞ்சத்தில் ஈடுபட்டோர் குழுமியிருந்த இடத்தையும் பார்த்து வருவோம். சற்று முன்பு கோலாகலமாய் மாயை உலாவியிருந்த இடம் இப்பொழுது எங்கேயோ தெரியவில்லையே!

அப்பா! என்ன பயங்கரமான இருட்டு! மின்மினிப் பூச்சி போல் எரிந்து கொண்டிருந்த எனது விளக்கும் அணையுந்தருவாயிலிருக்கிறது. கோபுரத்தின் நிலையிலுள்ள கடிகாரத்தின் சப்தத்

தையுங் காணேம். மனிதன் செருக்குடன் சற்று முன்பு கூக்குர லிட்டு ஆடின இடம் இப்பொழுது எங்குப்போய் ஒளிந்தது?

ஓ, இதென்ன ஏகாந்தம்! இத்தகைய ஏகாந்தம் அநித்திய மன்றோ? இது ஒழிந்து மானிடர் நித்தியமான ஏகாந்தத்தை அனு பவிக்கும் வேளைவரும். அவ்வமயம் இந்நகரம் அழிந்துபோய் இருந்த இடம் தெரியாமல் ஒரு பெரிய வனாந்தரமாகிவிடும்.

தனது வாழ்க்கையிலே அநேக வெற்றிகளை யடைந்து அதற் கேற்ற விருதுகளை யணிந்து அமோகமான செல்வத்தையும் இன் பத்தையும் பெற்ற நகரங்கள் எத்தனை! ராஜ்யங்களெத்தனை! தனக் குண்டான மதிமயக்கந்தான். தாம் மனிதர் என்பதையும் மறந்து, தனக்கு நிகர் ஒருவருமில்லை, நாம் தேவர்களைப்போன்று அழிவில் லாதவர்கள் என்று நினைத்தவர் எத்தனைபேர்! கால தேவதை அப் படிப்பட்ட மானிடர் வசித்த இடத்தைச்சுட்டிக்காட்ட இயலா மல் தவிக்கிறது. இதுபோன்ற மற்ற மனிதகோடிகள் வாசஞ் செய்த நகரங்களின் இடையே தூக்கம் நிறைந்த யாத்திரீகன் அலைந்து திரிகின்றான். அப்பிரயாணி இக்காட்சிகளைக் காண்கை யில் "இவ்வுலகம் மாயையினாலாக்கப்பட்டது" என்று நினைத்துக் கொள்கிறான். இதோ, இவ்விடத்தில்தான் அவர்களது கோட் டை கொத்தளங்களிருந்தன; இப்பொழுது புல் பூண்டு முளைக்கும் இடமாகிவிட்டது. இங்குதான் அவர்களது நகர காரியாலயம் இருந்தது. அந்த இடத்தில்தான் இப்பொழுது பாம்பு, தேள் முதலிய விஷஜந்துக்கள் குடியிருக்கின்றன. அவர்களது கோயில் களும், மாடமாளிகைகளும் இப்பொழுது எங்கே? எல்லாம் ஒருங்கே அழிந்து போயின. அவர்களது வீண்ஜம்பமும், பகட் டும் சுய நலமுமே பலத்தை ஒடுக்கின. அரசாங்கத்தார் அளித்த பட்டம், பதவிகளெல்லாம் தேச சேவகத்தின் பொருட்டன்று. அவர்களது உலக, பத ஆசையை நிறைவேற்றவே யாம். அவர் களது செல்வமும், செழுமையும் அயலகத்தாரை வரவழைத்தன. ஆரம்பத்தில் அயலகத்தார் தோல்வியடைந்தாலும் பிறகு தமது பெருமுயற்சியாலே வென்று அவர்களை இன்னுரென்று கண்டுபிடி க்க முடியாதபடி அழித்துவிட்டார்கள் என்று இவ்வாறாக தேச ந்தோறும் உழன்று திரிந்து அழிந்துபோன இராஜ்யங்களையும் நகரங்களையும் கண்ட யாத்திரி கூறுகிறான்.

சில மணிக்கு முன்பு வெள்ளம்போல் திரண்டுசென்ற ஜனக் கூட்டம் இப்பொழுதுஎங்கே? வீதியில் ஒரு சிலரையும் காணோம். அப்படி நம் கண்ணுக்குப் புலப்படுவோரும் தமது வெளிவேஷத்தை நீக்கி நிஜரூபத்துடன் காம இச்சையையும் சஞ்சல புத்தியையும் வெளிக்காட்டுகின்றனர். ஹா! அதோ அந்த குபேர செல்வம் படைத்த வீதியிலே பிரபுக்களின் வீட்டு வாயிலிலே தமது துன்பத்தினிடையே சிறிதுநேரம் படுத்துறங்குவோமென்று படுக்க இடமின்றி வீதியிலே படுத்திருப்பவர் யாவர்? பரதேசிகளும், ஏனென்று கேட்பாரில்லா அநாதைகளும், காலக்கொடுமையைக் கூறுவதாலுண்டாகும் பயன் யாது என்று பொறுத்திருப்போரும், துக்கத்திற்கு அளவேயில்லாத ஏழைமக்களுமேயாம். அந்தோ என்னே இவர்களின் கதி! பரிதாபம், பரிதாபம்! இவர்களின் இடுக்கண் நமக்கு இரக்கத்தைத் தருவதை விட்டு கோரத்தையே கொடுக்கின்றது. சிலர் உடுக்க உடையன்றிக் கந்தைத்துணி அகப்படின் அதையாவது இக் குளிருக்குப் போர்த்திக்கொள்வோமே என்று ஏங்குகின்றனரே! வேறு சிலர் வியாதியினால் இளைத்து உண்ண உணவின்றி மெலிந்திருக்கிறார்கள்! இத்தகையோர்களை இப்பாழும் உலகம் வேண்டாமென்று உதறிவிட்டதே! செல்வம்படைத்த மாந்தர் இவ்வேழை மக்களுக்கு முதுகுகாட்டிப் பசித்திருக்கவும், ஆடையின்றி யிருக்கவும் விட்டு வேடிக்கை பார்க்கிறார்களே! அதோ குளிரினால் நடுங்கும் இப்பெண்மக்கள் ஒரு காலத்தில் நற்காலத்தைக்கண்டிருக்கிறார்கள். அப்பொழுது அவர்களது சௌந்தரியத்தை வியந்து பேசாதவர் கிடையாது. ஒரு செல்வம்படைத்த பாதகனால் கற்பழிக்கப்பட்டு இக்கொடும் மாரி காலத்தில் நடுவீதியிலே படுத்து உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி இருக்கின்றார்கள். ஒரு வேளை தம்மைக்கெடுத்த கொடும்பாவியின் வீட்டு வாயிலிலே படுத்து இரந்துவேண்டுவோம் என்று படுத்திருக்கிறார்கள் போலும்! ஆனால் அக்கொடும் பாவிகளின் மனங்கரையவில்லை. கல்லுங் கரையுமே, இவர்களை நோக்கின். பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்பார்களே! இவ்வன்னெஞ்சர்களின் கடுஞ்சித்தத்தை என்னென்று கூறுவது?

ஐயோ? நான் மானிடனாகப்பிறந்தேன்? பிறந்தும் இவ்வனியாயக் காட்சிகள் என் கண்முன் ஏன் தோன்றவேண்டும்? இவர்

களது துன்பங்களைக் கண்டும் அவற்றைத்தீர்க்க முடியாதபடி ஏன் நான் இப்பூமியில் பிறந்தேன். இல்லம் இல்லாமல் இடர்ப்படும் ஏழை மக்களே! ஐயோ! உங்களுக்கு உலகம் நன்மையைக் கொடாது துன்பத்தையே மேன்மேலும் கொடுக்கின்றதே! செல்வம் படைத்த பிரபுக்களுக்கு ஒரு சிறிது துன்பம் நேரிடினுஞ்சரி, (அது ஒருவேளை அவர்களது மனப்பிராந்தியாகவும் இருக்கலாம்) அதைப்பதின் மடங்காக வளர்த்து நாமும் அவர்களுடன் சேர்ந்து அனுதாபப்படும்படியாகச் செய்கிறார்களே! ஏழை மக்களின் துன்பமோ ஒருவருக்கும தெரிவதில்லை. தெரிந்தாலும் தெரியாதவர்கள்போல் போய்விடுவார்கள். பலவித கொடுமைகளுக்கும் ஆளாகி மற்றவர்களுக்கு அரண் போலிருக்கும் "சட்டம்" ஏழை மக்களுக்குக் கொடும் பகையாளிபோல் விடுகின்றது. ஆ என் இருதயம் ஏன் இவ்வளவு இளகினதாய் இருக்கவேண்டும்? அல்லது எனது நற்காலம் என் இருதயத்தின் வேண்டுகோட்கிணங்கி இருக்கக்கூடாது? பரோபகாரம் செய்ய முடியாதமனிதன் ஏன் இளகிய நெஞ்சத்துடன் இருக்கவேண்டும்.? அத்தகையோரின் மனம் ஏழை மக்களின் மனத்தைவிட அவர்களைக்கண்ட போழ்து பதின் மடங்கு துன்பம் அடைகின்றது. "பரோபகாரம் இதம் சரீரம்" என்பதே ஆன்றோர் வாக்கு.

---

## ஐப்பசி வருகிறதே!

ஐப்பசிமாதம் பிறக்க இன்னும் முப்பதுநாள் இருக்கின்றன. ஐப்பசிமாதம் தமிழ்நாட்டில் வாடைக்காற்று உடலை ஒடுக்குங் காலமாகும். ஆனால் அந்த ஐப்பசிமாதத்தின் வாலைப்பிடித்துக் கொண்டு பார்ப்பாரக் கூட்டம் கொள்ளையடிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது. ஐப்பசிமாதம் முதல்தேதி முதல் கார்த்திகைமாதம் முதல் தேதிவரை துலாக்காவேரியின் பெருமையை ஐயர்மார்கள் கடைவைத்து வியாபாரஞ் செய்வார்கள். தண்ணீர்ப் பஞ்சமும் பணப் பெருக்கமுமுள்ள செட்டிநாடு போன்ற இடங்களில் இந்த ஐயர்மார்கள் கடைகள் கணக்கில்லாமல் திறக்கப்படும். காவேரிப் [illegible]ணக் கடைக்கு முதலொன்றுந் தேவையில்லை. கோயில்கள்

மடங்கள் ஊரணிக்கரை மண்டபங்கள் அக்கிரகாரத்துத் திண்ணைகள்தாம் உரிய இடங்களாகும். பழய எட்டையாவது நாலணுப் புத்தகத்தையாவது எடுத்து விரித்துக்கொண்டு ஒரு ஐயர் உட்கார்ந்தால் தினந்தோறும் அரிசி பருப்பு காய்கறி உப்பு புளி மிளகாய் முதலிய எல்லா சாப்பாட்டு சமான்களும் வந்து சேர்ந்துவிடும். கதைவிளங்கினுலும் விளங்கா விட்டாலும் ஐயர் காலில் விழுந்து விழுந்து கும்பிட்டு இவைகளைக் கொடுத்துவிட்டுப் போக அநேகம் பெண்கள் தயார் செய்யப் பட்டிருக்கின்றனர். ஐப்பசிமாதத்தில் ஐயருக்கு ஒருநாளாவது இந்தச் சாமான்களைக் கொடுத்துவிட வேண்டுமென்றும் கொடாவிட்டால் பாவம் வருமென்றும் கருதுகின்றனர்.

மைசூரில் பெய்யும் மழைத் தண்ணீர் புரண்டு ஓடித் தஞ்சாவூர் ஜில்லாவில் ஆருகப் போகிறது. அதை யாவரும் பார்க்கின்றனர். ஆற்றுத் தண்ணீருக்குக் கதைகட்டினுல் அதன் தோற்றம் வரும்வழி இடையிடையே இருக்கிற பாலங்கள் அதில் ஒவ்வொரு ஊரிலுமிருந்து வந்துவிழும் சாக்கடைகளின் விவரம் இவைகளைப் பற்றி எழுதி வைக்கலாம். அப்படியில்லாமல் அதைப்பற்றி மனம் போனபடி புளுகித்தள்ளித் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கு வழி தேடுவதென்ருல் அது கொடுமையல்லவா? காவேரியாறு ஒரு பெண் என்றும் அவள் கலியாணம் செய்து கொண்டுவிட்டாளென்றும் ஐயர்கள் எழுதிவைத்துப் படிக்கின்றனர். இதை நம்பிய ஜனங்கள் காதோலை கருகுமணி எலுமிச்சம்பழம் முதலியவைகளை வாங்கிக் காவிரியாற்றில் போட்டுவிட்டுத்தலைமுழுகுகின்றனர். காவிரியாறு உலகத்திலுள்ள எல்லா ஆறுகளையும் போலவே தண்ணீராக ஓடுகிறது. இது தெய்வலோகத்தில் நடைபெறும் விஷயமல்ல. கண்ணுக்கு முன்னுலே பார்க்கிருேம். மழையில்விழுகிற தண்ணீர் விழுந்து ஓடிவருகிறது. இதைப் பெண்ணென்று ஐயர் கட்டியகதையை நம்பியாகி விட்டது. அந்தப் பெண் காதோலை கருகுமணி அணிந்து கொள்வதென்றும் நம்பிப் போடப்படுகிறது. போகும்பொழுதே அவை தண்ணீரோடு அடித்துக் கொண்டு போவதையும் காண்கிருேம். கண்ணுக்கு முன்னுலே ஓடுகிற ஆற்று நீருக்குப் புளுகுப் புராணமெழுதி ஏமாற்றி சுங்கம் கேட்டு வைத்துப் பணம்வசூலிப்பது போல ஆற்றுநீரில் குளிப்ப

தற்கு வழிமறித்துக்காசு வாங்கும் அநியாயம் பொறுக்கக் கூடியதா? அங்கு எல்லாரும் சென்று எங்கள் சுற்றத்தாருக்குக் கொடுங்கள் என்று புரட்டுப் புராணத்தை ஊரூராகப்படிக்கும்பேர் வழிகட்டும் உப்பு புளி அரிசிபருப்பு காய்கறி கொடுக்கும் அநியாயம் சகிக்கக்கூடியதா? ஆற்றிலே தண்ணீர் ஓடுகிறது. அதில் நாய் மாடு கழுதை யெல்லாந்தான் முழுகுகிறது. அந்த ஆற்றில் பார்ப்பானுக்கு எந்தவிதமான பாத்தியமுங் கிடையாது. ஆனால் ஆற்றங் கரையில் உட்கார்ந்துகொண்டு ஐந்தாறு தர்ப்பைப் புல்லைவைத்துக் கொண்டு இந்த ஐப்பசிமாதம் முழுமையும் கொள்ளையடிக்கப் போகிறார்கள். ஏமாந்த சோணகிரிகள் தாங்களும் பெண்டாட்டி பிள்ளைகளுமாக அவர்கள் காலில்விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டுக் காசையும் கொடுத்து ஆற்றில் குளிக்க லைசென்ஸ் வாங்கி நீராடப்போகிறார்கள். மாயவரம்-ஸ்ரீரங்கம் திருப்பளாத் துறை முதலிய இடங்களில் முக்கியமான கொள்ளைகள் நடக்கும். சில்லரைக் கொள்ளை நாடுமுற்றும் நடக்கும். ஜனங்களைக் குருடாக்கி ஐயர்மார் பிழைக்கும் அற்புத துலாக்காவேரிக் கொண்டாட்ட மாதமான ஐப்பசி வருகிறது. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" என்று புராணம் பாடும் [illegible]களும் தங்கள் மனைவிமாரை ஐயர்காலில் கும்பிட்டு விழச்செய்வது வேடிக்கையல்லவா?

---

## ஓட்டு.

---

சட்ட சபை எலக்ஷனில் நின்ற ஒரு அபேக்ஷகருக்கும் ஒரு ஓட்டருக்கும் நடந்த சம்பாஷணை.—

முதலியார்:— நான் ஒரு சனாதனதர்மி, வைதீக காரியங் களுக்கெல்லாம சாதகமாயிருப்பேன்.

ஓட்டர்:— நல்ல காரியஞ் செய்தீர்கள். சட்ட சபையில் பறையன் பார்ப்பன் எல்லோரும் சமத்துவமாக இருக்கவேண்டு மாமே! அப்படிப்பட்ட இடத்திற்கு உங்களை அனுப்பி பாவத்திற்கு ஆளாக நான் தயாரில்லை.

---

# நாய்க்கு ஞானோதயம்.

நாயைப் பலவிதத்தில் கேவலமாக நினைத்தாலும் அதற்கு ஞானோதயம் அடிக்கடி உண்டாவதைப் பற்றிப் பலர் அறிந்திருக்கலாம். நாய் சில சமயத்தில் குலைக்கும்; சில சமயத்தில் ஊளையிடும். உலக விஷயத்தில் ஞானம் உதயமாகிறபோது குலைப்பதும் பரலோக தத்துவத்தில் ஞானம் உதயமாகிறபோது ஊளையிடுவதும் வழக்கம். பலமனிதர்களை நாய் பார்த்தாலும் திருடனைக் காணும்போது இவன் திருடன் என்று கண்டுபிடித்து அவனைப் பார்த்துக் குலைக்கிறது. இதுதான் உலகஞான உதயமாகும். யமதருமராஜா மனிதர்களைப் பிடிக்க வரும்போது அந்த தருமராஜாவைக் கண்டவுடன் ஊளையிடுகிறதாம். இது பாரமார்த்திக ஞானம். யமன் வருவது எவ்வளவோ ரகசியமாக இருந்தும் நாய்க்குமட்டும் ஞானம்வந்து தெரிந்துகொள்ளுகிறது அதிசயமல்லவா? இதற்குக் காரணமென்னவென்று விசாரித்ததில் உண்மை ஒருவாறு கண்டு பிடிக்கப்பட்டது. நாய் செய்யுங் காரியங்களில் இரண்டுதான் முக்கியமானவையாகும். ஒன்று எச்சில் சாப்பிடல், மற்றொன்று குப்பை மேட்டுச் சாம்பலில் புரளல். இவ்விரண்டும் இந்தியாவில், அதிலும் ஒப்பற்ற தமிழ் நாட்டில் மேன்மைபெற்ற செயல்களாக இருக்கின்றன. கைலாசமும் முக்தியும் ஞானோதயமும் தமிழ் நாட்டுக்காரருக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் இங்கு அப்பெருமைகள் மிகுதியாகக்கொண்டாடப்படுகின்றன. எச்சிலிலையென்பது மிகவும் உயர்ந்தது. அதற்கிணை எங்குமில்லை. சீமையிலிருக்கிற நாய்களுக்கு இவ்வளவு ஞானோதயமுண்டாவதில்லை. வெள்ளைக்காரர்கள் நாயினிடத்து வெகு பிரியமுள்ளவர்கள். அந்த ஜாதிப்பெண்கட்கும்புருஷனைக்காட்டிலும் நாயினிடத்துப்பிரியம் அதிகமுண்டு. அங்குள்ள நாய் 1000 பவுன்வரைவிலைக்கு விற்கப்படுகிறது. பாலும் ரொட்டியுந்தான் அதற்குச்சாப்பாடு. பஞ்சுமெத்தையில் படுக்கை. என்றாலும் யமதருமராஜாவைக்கண்டு பிடிக்கும்படியான ஞானோதயம் அதற்கு வருவதில்லை. தமிழ்நாட்டு நாய்களுக்குத்தான் எமதருமராஜா உதயமாகிறார். எனவே எல்லா நாய்களையும் விடத் தமிழ்நாட்டுநாய் சிறந்ததாக இருக்கிறது. இந்த நாய்கட்கு மற்றவற்றைவிட விசேடமாகக் கிடைத்திருப்பன குப்பைக்குப் போகும் சாம்பலும் எச்சிலிலையுமேயாகும். ஆதலால் இவ்விரண்டு

பொருளிலும் ஞானோதயத்திற்கு வேண்டிய பொருள்கள் அடங்கியிருக்கின்றனவென்று கூறுகிறேன். யமதருமராஜா வரும்போதே கண்டுபிடித்து அறிவிப்பதற்கு நன்றி செலுத்தும் பொருட்டே இரவில் நாய்க்குச் சோறு வைக்கிற வழக்கத்தைப் பலஅறிவாளர்கள் கைக்கொண்டு நடத்திவருகிறார்கள். எச்சிலிலையின் மகத்துவம் சாதாரணமானதன்று. புருஷன் சாப்பிட்ட இலையில் பெண்டாட்டி சாப்பிடவேண்டும். அதற்குமறுத்தால் கற்புக்கலைந்து போகும். கற்புக்கலைந்து போனால் ஞானோதயம் உண்டாகாது. கற்புடைய பெண்கள் ஞானத்தினால் திரிமூர்த்திகளுடைய புரட்டுகளைக்கண்டு பிடித்து அவர்களுடைய ஒழுங்கற்ற நடைத்தையைக் கண்டித்திருக்கிறார்கள். அவ்வளவு ஞானோதயமும் புருஷனுடைய எச்சலிலையை நக்கிச்சாப்பிட்டதனால்தான் உண்டாகியிருக்கிறது. புருஷன் வாந்தி எடுத்ததைத்தின்றால் பெண்களுக்கு ஞானம் மோனம் எல்லாம் வந்துவிடும். அதற்குப் பயந்துதான் அவர்கள் அதைத்தின்பதில்லை. அந்த நாற்றம் பொறுக்கவும் முடிகிறதில்லை. இப்போது இருக்கிறபடி விட்டால் இன்னும் ஒரு 500 வருஷத்திற்குள் சமயக்கிறுக்கர்கள் அந்த நிலைக்குக்கொண்டுவந்து விடுவார்களென்று நம்பலாம். எச்சிலிலையின் மகத்துவம் இன்னுமுண்டு. மடங்களில் பட்டங்கட்டிக் கொண்டிருக்கும் காவி வேட்டிப் பரதேசிகளின் எச்சிலிலைக்கு ஏமாந்த சோணகிரிகள் சண்டையிடுவதுண்டு. அதைப்பார்த்தால் வேடிக்கையாகவிருக்கும். சில மடங்களில் அடுத்த பட்டத்துக்கு வருகிறவன் தயாராக இருந்து சாப்பிடுவதுண்டு. இதனாலும் எச்சிலிலையில் ஞானோதயம் வர முக்கியமான வழியிருக்கிறதென்பது விளங்கும். முன்னொரு காலத்தில் ஒருவன் பிராமணாளுக்கு போஜனம் செய்வித்தபோது ஒரு பூனை அந்த எச்சிலிலையில் விழுந்து புரண்டு பொன்மேனியாகிவிட்டதாகவும் சாஸ்திரம் சொல்லுகிறது. ஆகவே எச்சிலிலையில் புரண்டாலும் சாப்பிட்டாலும் ஞானோதயமும் பிறவும் உண்டாகுமென்பதை சாஸ்திர பூர்வமாக தயார் செய்தாகிவிட்டது.

இனி குப்பை மேட்டுவிஷயமோ மிகப்பெரிதாகும். மாட்டுச் சாணியைப்பொசுக்குவதாலுண்டாகும் சாம்பல்தான் 'விபூதி' யென்பது. இதற்கிருக்கும் மகிமை லேசானதல்ல. அது பட்டால் ஞானமுண்டாகும்; தெரிந்து பட்டாலும் தெரியாமல் பட்டாலும்

செத்தபிறகு பிணத்தில் பட்டாலும் ஞானமும் முத்தியும் சித்திக்குமென்பது சைவசாத்திரக்கருத்தாகும்; விபூதியின் தூசி பறக்கிறதே, அது மேலில் பட்டால் உடனே ஞானம் மோனம் எல்லாம் சித்தியாகிவிடும்; அப்படிப்பட்ட சாம்பலைக்குவித்திருக்கிற குப்பை மேட்டில்—அதிலும் எச்சலிலையைச் சாப்பிட்டுவிட்டு— இன்னும் எச்சிலிலை வருமாவென்று எதிர் நோக்கிக்கொண்டு படுத்திருக்கும் நாய்க்கு ஞானோதயம் ஆகாமலிருக்க எப்படி முடியும்? இப்படிப் பட்ட ஞானோதயம் சிவபக்தர் பலருக்குஉண்டாவதில்லை. அதற்குக்காரணம் அவர்கள் சரியானபடி எச்சில் இன்னும் சாப்பிட்டுத் தீரவில்லை யென்றுதான் கருதவேண்டியிருக்கிறது. தவிர விபூதியைக் குழைத்து மந்திரம் சொல்லி தீட்சைபெற்றுப் பலவிதமான கட்டுப்பாட்டுக்குட்பட்டுப் பூசுகிறார்கள். அதுவும் ஒரு காரணமாக இருக்கலாமல்லவா? கையில் எடுத்துப்பூசுவதால் ஞானம் சரியாக உதயமாகவில்லை. ஆதலால் சிவநேசர்கள் யாவரும் இனிமேல் இரவு பகலாகக் குப்பைமேட்டில் கிடந்து புரண்டால் ஞானோதயம் ஆகுமென்று ஒருவாறு எதிர்பார்க்கலாம்.

---

# பெண்கள் முன்னேற்றம்.

துறையூரில் 31—8—30ல் திருமிகு மு. மரகதவல்லி அம்மாள் அவர்கள் பேசியதன் சாரம் வருமாறு:—

நம் நாட்டில் பெண்கள் முன்னேற்றமென்று சொன்னால் கிடையாது. மற்ற அயல் நாடுகளில் பெண்கள் முன்னேற்றத்திற்கு வழிகள் உண்டு. அங்கே அவர்கள் நாளுக்கு நாள் முன்னேறி வருகிறார்கள். இங்கு முன்னேற்ற மில்லை; ஆனால் மேலேற்ற மிருக்கிறது. சொர்க்கம், கைலாசம், வைகுண்ட மென்றும் அவை மேலே இருக்கின்றன வென்றும் எல்லாரும் மேலேறவேண்டு மென்றுமே எண்ணுகின்றனர். எல்லோரும் மேலேறி முத்தி பெற விரும்புகின்றனரே யன்றி மற்ற தேசத்தினரைப் போல முன்னேற முயல்வதாக இல்லை. ஆண்மக்களாவது முன்னேற்றம் அடையும் வழியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்; பெண்மக்களுக்கு முன்னேறும் வழியைக் கூடப்பார்க்கவொட்டாமல்

ஆண்மக்களின் பின் பக்கத்தில் திருப்பி வைத்திருக்கின்றனர். பெண்மக்கள் இப்போதிருக்கிறபடி முன்னேறச் சொன்னால் பின்னுக்குத்தான் போகமுடியும். திருச்சியிலிருந்து மதுரைப்பக்கமாக இருக்கிற வண்டியை முன்னேறச் சொன்னால் மதுரைப்பக்கம் போகுமே தவிர தஞ்சாவூர்ப் பக்கம் போகமாட்டாது. தஞ்சாவூருக்குப் போகவேண்டுமென்றால் முதலில் வண்டியைத் தஞ்சாவூர்ப் பக்கமாகத் திருப்பி வைக்கவேண்டும். அப்பால் தான் முன்னேறும்படி சொல்லலாம். அப்படித்தான் பெண்கள் நிலை இருக்கிறது. அவர்களை வைதீகர்கள் பக்கம் திருப்பி வைத்திருக்கிறார்கள். முதலில் அவர்களைச் சுயமரியாதைப் பக்கம் திருப்ப வேண்டும். அப்பால் முன்னேற்றவேண்டும். அப்பால் தான் உண்மையான முன்னேற்றத்தை அவர்கள் பெறக்கூடும். சீர்திருத்தத்தை மேற்கொண்டால் சுகமாக வாழலாம். கல்வியைப் பெண்கட்குக் கொடுக்கவேண்டும். பெண்கள் தங்களைத் தாங்களே அடிமையென்று எண்ணி விட்டார்கள். அதனால் சகோதரர்கள்பெண்களை மேலேறவிடாமல் அமுக்கிவிட வசதியாக இருக்கிறது. பெண்களுக்குச் சொத்துரிமை இருக்கவேண்டும். ஆண்பிள்ளையைப் போலவே சொத்து விஷயத்தில் பெண்பிள்ளையையும் கருதவேண்டும். இளமை மணத்தால் தான் பெண்மக்கள் அடிமையானார்கள். படிக்கவேண்டிய வயதில் வீட்டில் அடைப்பட்டார்கள். பால்யத்திலேயே குடும்பஞ் செய்ய வேண்டியவர்களானார்கள். உலக விஷயங்களை அறிய முடியாமல் போய்விட்டது. ஆண்களுக்கு 24-ம் பெண்கட்கு 18-ம் ஆன பிறகு தான் கல்யாணம் செய்யவேண்டும். அறிவு வளர்ந்த பிறகு கல்யாணஞ் செய்தால் வாழ்வு சுகமாக நடக்கக்கூடும். சாரதாசட்டம் கொஞ்சம் சாதகமாக இருந்ததென்று நினைத்தோம். அதுவே குறைந்த வயதை ஒப்புக்கொண்டது. அதைக்கூட நிலைக்கவிடாமல் வைதீகர்கள் உலைவைக்கத்தான் பார்க்கிறார்கள். இப்பொழுது செய்கிற மணங்கள் மிக்ககொடுமையாக இருக்கின்றன. பெண்களையும் ஆண்களையும் சம்மதங்கேட்டுச் செய்யவேண்டும். தாயார் தகப்பனார் கட்டாயத்துக்காகச் செய்யக்கூடாது. எச்சிலிலையில் சாப்பிடக் கூடாதென்று உங்கட்குக் கூறுகிறேன். எச்சிலிலையின் பெருமைக்கு நளாயினி கதை சொல்லப் படுகிறது. குஷ்டரோகத்தினால் அழுகிச் சோற்றில் விழுந்த கை

விரலை யெடுத்து எறிந்து விட்டு அந்தச் சோற்றை நளாயினி தின்றாளாம். அவள் புருஷன் வேண்டுமென்றே கையை அழுகும்படி செய்து சோற்றில் விழச் செய்தாராம். இப்படிச் செய்ய ஆண் மக்கட்கு சுதந்திரம் இருக்கிறது. பெண்களுக்குப் புத்தி யில்லாம லிருக்கிறவரை இப்படிக் காரியங்கள் நடக்கும். இப்படிச் சாப்பிட்டால் தான் கற்புடையவரென்று எழுதி வைத்திருக்கிறார்கள். எவ்வளவு தாழ்மையைச் செய்யமுடியுமோ அவ்வளவையும் பெண்கட்குச் செய்திருக்கிறார்கள்.

ஆலகால விஷத்தையும் நம்பலாம்,
　　ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்,
கோலமாமத யானையை நம்பலாம்,
　　கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்,
காலனார்விடு தூதரை நம்பலாம்,
　　கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்,
சேலை கட்டிய மாதரை நம்பினால்
　　தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே.

என்று பாடுகிறார்கள். இத்தனையும் நம்பலாமாம்; பெண்களை நம்பக்கூடாதாம். நம்பிக்கையில்லாத பெண்ணை யேன் இவர்கள் கட்டிக்கொள்ள வேண்டும்? நம்பக்கூடிய புலியைக் கட்டிக்கொள்ளட்டும்! காவேரி யாற்றைப் பெண்டாட்டியாகக் கட்டிக் கொள்ளலாமே! யானையைக் கட்டிக் கொள்ளலாம்! எம தூ[illegible]ணப்பார்த்துப் பெண்டாட்டியாகக் கொள்ளலாம். ஆனால் அப்படி யொருவரும் செய்யமாட்டார்கள். பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்வார்கள். அப்படியானால் ஏன் பெண்குலத்தைப் பழித்துரைக்க வேண்டுமென்று கேட்கிறேன். இக்கூட்டத்தில் ஆதித் திராவிட சகோதர சகோதரிகள் வந்திருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. வந்திருந்தாலும் முன்னணியில் வந்திருக்க முடியாமலிருக்கிறது. அவர்களிடத்து யாவரும் சகோதரத் தன்மைபாராட்டவேண்டும். அடிமைப்பட்ட மக்கட்குப் பேருதவி செய்வது சுயமரியாதை இயக்கமேயாகும். அதன் நோக்கத்தை யறிந்து யாவரும் அதிற்சேர்ந்து முன்னேற்ற மடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

# வளர்ந்தது மோதிரமா உடம்பா?

மிஸஸ். ஜானகி எழுதுவது.

இந்தக் கேள்வியைக் கண்டவுடன் முடிவு கூறிவிடக் கூடாது. உடம்புதான் வளரும்; மோதிரம் வளராதென்று முடிவு கட்டி விடக்கூடாது. ஏனென்றால் எலும்பைப் பெண்ணாகவும் கல்லைப் பெண்ணாகவும் செய்த அற்புதமான தேசமல்லவா நமது தேசம்? இந்தியா தேசத்தில் நடவாதஅற்புத மெல்லாம் நடைபெறும். ஆதலால் மோதிரம் வளர்ந்திருக்குமென்று நம்பவேண்டும். முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ? கடவுள் அருள் இருந்தால் மோதிரம் வளர்வது ஒரு பெரியகாரியமா?

சாயுங்காலம் 7-மணி இருக்கும். கண்ணம்மாள் சமைத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு அடுப்பில் சோறு வேகிறது. மற்றொரு அடுப்பில் குழம்பு கொதிக்கிறது. கண்ணம்மாளின் கண்கள் நீரைப் பெருக்குகின்றன. மாமியாள் சொல்கிறாள்.— "ஒன்றுக்கும் உதவாத கழுதையை என் மகனுக்குக் கலியாணம் செய்து வீணாய்ப் போய்விட்டது. சனியன்! விடியா மூஞ்சி! வேளைதவறாமல் தின்னத்தான் தெரிகிறது. வீட்டிலிருப்பதை யெல்லாம் தின்று விட்டுப் பன்றி மாதிரி பெருத்துப் போனாள். இந்த முண்டை தொ ந்தால் என் மகனுக்கு வேறே ஒரு பெண்ணைக் கொள்ளலாம்". என் ட்டிக்கொண்டே இருந்தாள். மாமனார் தன்மனைவியைப் பார்த்து ன் இப்படி ஊரார் வீட்டுப் பெண்ணைத் திட்டி அழிந்து போகிறாய்? அது ஏதாவது பேசுகிறதா? ய்வமே என்று வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. காலையில் 5-மணிக்கு எழுந்தால் அரைமணி நேரமாவது உட்காரவிடுகிறாயா? இன்று காலையில் இவ்வளவு பழையகஞ்சிப் பட்டமிளகாயைத் தொட்டுக் கொண்டு குடித்தது. அப்பால் மத்தியானம் அஞ்சாறு சோறு. இரவு 9-க்கு மேல் ஏதாவது மிச்சங்கிடந்தால் உண்டு. இதிலே வேறே அந்தப் பயல் எச்சிலிலையில் பெண்டாட்டிக்காக வாங்கிவைத்தானென்று அவனைத் திட்டுகிறாய். அவன் பயந்து இலையை அடியோடு வழித்து நக்கி விட்டுப் போகிறான். அந்தப் பெண் வரவர மெலிந்து போய்விட்டது. இந்தப்பாவ மெல்லாம் அனுபவிக்க வேண்டும்! சும்மாபோகாது! "மாமியாள் இதைக் கேட்டவுடன்

புருஷன் பக்கம் திரும்பினுள்:— "சரி, சரி மருமகளுக்குக் கிழவன் ஏவல் கேட்கிறதைப் பாருங்களேன். ஏது சங்கதி, இத்தனை நாளு மில்லாமல் மருமகளிடத்தில் என்ன இப்போது இவ்வளவு பிரியம் வந்து விட்டது. எனக்கென்ன? நான் வேண்டுமானுல் வெளியே போகிறேன். நீங்களும் அவளுமாக நன்ருக இருங்கள்! மாமியாள் என்றிருந்தால் மருமகளைத் திட்டாமல் இருக்க முடியுமா? என் மாமியாள் என்னைச் சும்மா விட்டாளா? நன்ருகத் தின்றுவிட்டுக் கொழுத்துப்போனுள் என்று சொல்லாமல் இருக்க முடியுமா? இதற்கெல்லாம் ஆண்பிள்ளைகள் பேச வரக்கூடாது! பெண்கள் இப்படித்தான் பேசிக்கொள்வார்கள். வீட்டுச் சங்கதி ஆண்பிள்ளைகட்கு விளங்காது. நீங்கள் பேசாமல் இருங்கள்!"

இந்த சமயத்தில் கண்ணம்மாளின் தாயும் தகப்பனுரும் வருகிருர்களென்று சின்னப் பையன் ஓடி வந்து சொன்னுன். மாமியாளின் வாய் அடங்கி யிருந்தது. வந்தவர்களை வீட்டுக்காரரிருவரும் வரவேற்றனர். கண்ணம்மாளின் கண்ணீர் அதிக மாயிற்று. நன்ருகத்துடைத்தாள். என்ன சமாதானஞ் சொன்னுளோ தெரியாது. இரண்டு நிமிஷங்களுக்குள் கண்ணீர் முற்றும் நின்று விட்டது. முகத்தையுங் கண்களையுங் கழுவினுள். சின்னப் பையன் வந்து "உன்னை அம்மா அழைக்கிருள்" என்ருன்: கண்ணம்மாள் வந்தாள். அங்கே தன் தாயாரும் மாமியாளும் இருப்பதைக் கண்[illegible] ஒருபுறமாக நின்ருள். சிறிது நேரம் யோகக்ஷேமங்களை வி[illegible]ர்த்துக் கொண்டனர். தன் கையில் போட்டிருந்த மே[illegible]ரத்திலிருந்த கல் [illegible]ன்று விழுந்து விட்ட செய்தியைத் தன் [illegible]ாயாரிடம் கண்ண[illegible]ாள் சொன்னுள். எடுத்து வரச் சொல்லி அ[illegible]தச் சீர் செய்து அனுப்புவதாகத் தாயார் வாங்கிக் கொண்டாள். மோதிரத்தைக் கொஞ்சம் சிறிதாகச் செய்தால் போட்டுக் கொ[illegible]ளலாமென்று கண்ணம்மாள் சொன்னுள். "ஏன் அளவு பார்த்துத் தானே செய்தது. உடம்பு மெலிவாகத் தானிருக்கிறது. ஏதாவது நூலைச் சுற்றிக்கூடப் போட்டுக் கொள்ளலாம்" என்று சொல்லிக் கொண்டே கண்ணம்மாள் கைவிரலில் போட்டுப்பார்த்தாள். ஒன்றரைவிரல் அதில் நுழையும் போலிருந்தது. "நூல் சுற்றிப் போட வேண்டாம். இனி எங்கே உடம்பு பெருக்கப்போகிறது" என்று கண்ணம்மாளின் வாய் சொன்னதும் அவளுடைய கண்களிலிரு

ந்து நீர் ஆருகப் பெருகி விட்டது. பத்துநாள் நம் வீட்டிலிருந்துவிட்டுவரலாமென்று தாயார் சொன்னாள். வரலாம், திரும்பி இங்கேதானேவரவேண்டும், அதனால் இன்னும் அதிக கஷ்டந்தான் உண்டாகும் என்று கண்ணம்மாள் சொன்னாள். மோதிரத்தையெடுத்துக்கொண்டு தாயாரும் தகப்பனாரும் சென்றுவிட்டார்கள்.

இந்த நடவடிக்கைகளை யெல்லாம் நான் வெளியிலிருந்து பார்த்தேன். ஒருவிரலில் போட்டிருந்த மோதிரம் ஒன்றரைவிரல் நுழையும்படியாகிவிட்டது. மாமியாளோ பெண்ணின் உடம்பு பெருத்து விட்டதென்றாள். எது உண்மை யென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். மாமியாளின் அபூர்வசக்தியால் மோதிரம் வளர்ந்திருக்கவேண்டுமென்றுதான் வைதீகர்கள் நம்புவார்கள். மோதிரம் தங்கத்தால் செய்யப்பட்டிருப்பதால் அதற்கு உணர்ச்சி கிடையாது. ஆதலால் அது வளர்ந்திருக்க முடியாது. பெண்தான் இளைத்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சிக்காரர் முடிவுகட்டுவார்கள். இதனுண்மை இப்போது மாமியார்களாக இருக்கிறவர்களுக்கும் மருமகளாக இருந்து துன்பப்பட்டுவருகிற என் தங்கைமார்கட்குந்தான் நன்றாகத்தெரியும். இந்துப்பெண்கள் மாமியார் நாத்திமாரிடம் அகப்பட்டுப் படும் துயரம் எழுதிமுடியாது. இதற்கெல்லாம் விமோசனமென்ன? சுயமரியாதை வாழ்க! பெண்கல்வி வாழ்க! என்று சொல்வதைத்தவிர வேறில்லை! இல்லை! இல்லை!

---

## விடுதலைக் காதல்.

ஆணெல்லாங் கற்பை விட்டுத்தவறு செய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்திடாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தா னெரிந்தி டாதோ?

பேணுமொரு காதலினை வேண்டியன்றோ
பெண்மக்கள் கற்புநிலை பிறழுகின்றார்?
காணுகின்ற காட்சியெலா மறைத்து வைத்துக்
கற்புக் கற்பென் றுலகோர் கதைக்கின்றாரே!

பாரதியார்.

---

# நல்லமாட்டுக்கு ஒருசூடு.

சென்னை திரு. S. குருசாமி எழுதுவது.

சவரப்புராணம்.

திருப்பதி பழனி செட்டுகுடி சமயபுரம் நாகூர் முதலிய இடங்களுக்கு பார்ப்பனரல்லாத பெண்கள் "வெண்டுதலை" க்காகப்போய் மொட்டையடித்துக்கொண்டு (சாமிக்கு மயிரைக்கொடுத்துவிட்டு) வருவது எல்லோருமறிந்ததே. சிறுபெண்கள் மாத்திரமல்ல, கலியாணமான பெண்களும், 2, 3 பிள்ளைகளைப்பெற்றவர்களும் சிலசமயம் 40,50 வயதுக் கிழவிகளும்கூட சந்தனம் பூசப்பெற்ற மொட்டைத்தலையோடு, காதில் பூவணிந்து, (ஏனெனில் மயிரில்லையல்லவா) வரும் காட்சிகளும் அநேகர் பார்த்திருக்கலாம். பெரும்பாலும் வியாதிகள் தீர்ந்த காரணத்திற்காகவே இம்மொட்டையடித்திருவிழா நடைபெறுகிறது. இவ்வளவு பெருத்த சமூகம் மொட்டையடித்துக் கொண்டிருந்தாலுங்கூட ஷ ஊர்களிலுள்ள அம்பட்டர்களுக்கு நல்ல வரும்படி வருவதில்லையாம். ஏனெனில் பார்ப்பன சமூகத்துப்பெண்கள் கட்டுப்பாடாக வருவதே இல்லையென்பதால்தான். ஆகையால் இந்த ஸ்தலங்களிலுள்ள அம்பட்டர்கள் ஒன்று சேர்ந்து "கடவுளி"டத்தில் தூது சென்று விண்ணப்பம் செய்து கொண்டார்களாம். அவர்களுக்காகக் கடவுள் மனமிரங்கி, "பக்தர்களே! வருந்தவேண்டாம் பார்ப்பனப்பெண்கள் கட்டுப்பாடாய் ஒன்றுசேர்ந்து உங்கள் வரும்படியைக்குறைப்பதற்கு சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் அதற்குப்பதிலாக நான் ஒரு சாபம் கொடுக்கிறேன். அதாவது, உங்களுக்கு ஒரு தடவை வரவேண்டிய வரும்படியைக் கெடுத்ததால், பல தடவைகளில் உங்களுக்கு வரும்படி வரும் வண்ணம் விதவையானவுடன் மொட்டையடித்துக் கொள்ளக்கடவர், இன்னும் சிறுவயதிலேயே பெண்கள் விதவைகளாகக்கடவர். அதனால் மாதமிருமுறை உங்களுக்கு வரும்படிவரும். அஞ்சாதீர்கள்! இதுவிஷயமாய் உங்களுக்கு உதவி செய்ய மூர்த்தி, ஆச்சாரி ஆகிய இருவரையும் பூலோகத்திற்கு அனுப்பியிருக்கிறேன்" என்று சொன்னாராம். அப்படியே வெகுகாலமாய் நடந்து வந்தது. ஆனால் சமீபகாலமாய், அதாவது ஆங்கிலப்படிப்பும், நாகரிகமும் வந்ததும் பார்ப்பனப்பெண்களில் சி

வையானவர்கள் பள்ளிக்கூடங்களில் படித்துக்கொண்டு, கூந்தலை யெடுக்காமல் சுமங்கிலிபோலவே வாழ்வதால், நாவிதர்கள் வரும்படி குறைந்தது. இவ்வளவுக்கும் ஆங்கிலேயரே காரணமென்று, அவர்களைத்துரத்திவிட்டு 'சுயராஜ்யம்' பெறவேண்டுமென்கிறார்களாம். ஆகவே க்ஷவரப்புராணத்தில் ஆங்கிலேயர் தலையிட்டு மதத்திற்கு விரோதமாயிருப்பதால் நாவிதர்கள், "க்ஷவரப்புராண சத்தியாக்கிரகம்" ஆரம்பித்து, இதுவரையில், அதாவது ஆகஸ்ட் 24உ வரையில் 0060½ பேர் சிறைசென்றிருப்பதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது. இதில் சேரவிரும்பும் கனவான்கள், "ஆச்சாரியார் அண்டு கோ, க்ஷவரப்புராண சத்தியாக்கிரகக்கமிட்டித் தலைவர், வங்காளக்குடாக்கடல்" என்ற விலாசத்திற்கு எழுதவும்.

சுயராஜ்யம் கொடுக்கும் வருஷம்.

இதேமாதிரி கோவில்களில் காவடியெடுப்பது, மாவிளக்குப் போடுவது, வேல்குத்திக்கொள்வது, அங்கப்பிரதட்சணம் செய்வது, பிசாசாடுவது, கோவிந்தா போட்டுக்கொண்டு தெருவில்போவது, முதலிய "பக்திமார்க்கமான" செய்கைகளெல்லாம் பார்ப்பனப்பெண்களில் ஒருவர் கூடச்செய்வதில்லை யென்ற உண்மையைப் பற்றி எல்லாக்கடவுள்களும் ஒன்று சேர்ந்து யோசித்துக் கடைசியாக கீழ்க்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள்:—

"பார்ப்பனரல்லாத பெண்களில் பெரும்பாலோருக்குப் பகுத்தற[illegible]இல்லை. அதற்குக்காரணம் அவர்கள் வீட்டு ஆண்மக்களுக்குச் சுயபு[illegible] இல்லை; சொல்புத்தியுமில்லை. இரண்டில் ஒன்றிருந்தாலும், மே[illegible]சொன்ன அநாகரிகமான காரியங்களுக்குத் தா[illegible]ள் பெண்களை [illegible]ள்ளாக்கமாட்டார்கள். ஒரு சாண் புல்லுக்கு இவர்கள் பார்ப்பனரிடத்தில் குரங்காய் ஆடுகிறார்கள். ஆனால் இவர்கள் தான் 100-க்கு 97 பேர் என்கிறார்கள். இப்போது ஏதோ சுயராஜ்யப்பேச்சு ஒன்று இருப்பதாக அறிகிறோம். இவர்கள் நாட்டுக்கு சுயராஜ்யம் கொடுத்தால் அந்த க்ஷணத்திலேயே பார்ப்பனருக்குத் தட்சணையாக அதைக் கொடுத்துவிட்டு இஞ்சிதின்ற குரங்குமாதிரி உட்கார்ந்திருப்பார்கள். ஆதலால் இப்போது வேண்டாம் என்று ஆங்கிலேயருக்குச் சிலர் எடுத்துக் கூறியிருக்கிறார்களாம்! இதைக் கண்டு பயந்தபார்ப்பனரல்லாத மக்கள் ஆங்கிலேயரோடு ஒரு சமரச[illegible]வுக்கு வந்திருக்கிறார்களாம்! அதாவது, இன்னும் 00001 யுங்க

களுக்குள் தாங்கள் புத்திசாலி என்று ரூபித்துவிட்டால் உடனேசுய ராஜ்யம் கொடுத்துவிடவேண்டுமென்பது! ஆங்கிலேயர்கள் இதை யோசிக்க ஒரு கமிஷன் நியமிப்பதாக உத்தேசம் என்று சொன்ன தாக "பொய்"ப்பத்திரிகையின் நிருபர் எழுதியிருக்கலாமென்று யூகிக்கிறோம்.

## சுயராஜ்யத்தில் அரசியல் அமைப்பு

சுயராஜ்யம் இன்னும் சில தினங்களில் வரலாம். வந்தவுடன் நாட்டை அரசாளவேண்டிய நிமித்தம் அரசியல் திட்டம் ஒன்று $6098\frac{3}{4}$ பக்கம் கொண்ட புத்தக ரூபமாய் திரு. அரசியல் நிபுணர் அவர்களால் எழுதியது நமது பார்வைக்கு வந்திருக்கிறது. அதிலுள்ள சில முக்கிய அம்சங்களாவன:—

1. பள்ளிக்கூடங்களை யெல்லாம் இடித்துப் பழையமாதிரியான கோவில்கள் கட்டுதல்.

2. சமஸ்கிருதம், ஹிந்தி கட்டாய பாடமாய்வைத்து, வேறு பாஷைகள் கற்கக்கூடாது என்ற நிபந்தனையில்காசியில் ஒரே ஒரு பள்ளிக்கூடம் கீத்துக்கொட்டகையில் கட்டுவது.

3. ஆஸ்பத்திரிகளை இடித்து, டாக்டர்கள் முதலியவர்களை நீக்கி, வேப்பமரம் வைத்துப் பயிராக்கி. அதனடியில் விபூதி மூட்டைகளை அடுக்கி, சாமியார், பூசாரி முதலியவர்களை வைத்தல்.

4. எல்லா கடிகாரங்களையும் ஜனங்களிடமிருந்து பறிமுதல் செய்து, நாசம் செய்துவிட்டு, வானசாஸ்திர முறைப்படி நேரம் அறியும்படி செய்தல்

5. கல்லாயிருக்கும் "கடவுள்"களை செம்பாகவும், செம்பா யிருப்பவைகளை வெள்ளியாகவும், வெள்ளியாயிருப்பவைகளைத் தங் கமாகவும், தங்கமாயிருப்பவைகளை வைரமாகவும் செய்து வைத் தல்.

6. ஆகாய விமானம், மோட்டார், ரயில் வண்டி, சைக்கில், ட்ராம் கார் முதலியவைகளை உடனே ஒழித்து, "புராணகாலத்து" இரட்டை மாட்டு வண்டிகளை வைத்தல்.

7. பள்ளர், பறையர் முதலிய தீண்டப்படாதவர்களைப் பிற மதங்களுக்கு அனுப்பி விடுதல். அல்லது, அவர்களை நந்தனரைச் செய்ததுபோல் நடராஜரது ஜோதியில் ஐக்கியமாகச் செய்தல்.

(மற்றவை தொடரலாம்).

# பல திரட்டு.

## சுவாமிக்கு வெட்கமில்லையா?

கடவுளுக்கு உருவமில்லை நிறமில்லை பேதமில்லை யென்றெல்லாம் புத்தகங்களி லெழுதப்பட்டிருக்கிறது ஒருபுறமிருக்கட்டும். இப்போதுள்ள கோவில் சாமிகளைப்பற்றிச் சில சந்தேகம் வருகிறது. அதற்கு சிவபக்தர்கள் பதில் தரவேண்டும். கோயில்களில் இரண்டுவித சுவாமிகள் இருக்கின்றன. அவை ஆண் சாமிகளும் பெண்சாமிகளுமாகும். ஆண்சாமிக்கு மனிதர்களைப்போலவே எல்லாம் செய்யப்படுகின்றன. வேட்டி உடுத்தி மாலைபோட்டு ஆண் பிள்ளைக்குப் போடுகிற நகைகள் போட்டுக் குடுமிவைத்து பூணூல் போட்டு எல்லாம் செய்கின்றனர். அதேபோல் பெண்சாமிக்கு சேலைகட்டி ரவிக்கை போட்டு பெண்கட்குப் போடுகிற மூக்குத்தி புலாக்கு தலைசோடிப்பு முதலிய நகைகள், தலைமயிர் மற்ற எல்லாம் செய்யப்படுகின்றன. ஆனால் உண்மையில் பெண்சாமியை பெண்ணாகவும் ஆண்சாமியை ஆணாகவும் கருதியே எல்லாம் செய்யப்படும் போது பெண்சாமிக்குப் பூசைபுரிய ஒரு பெண்ணையே நியமிக்க வேண்டுமல்லவா? ஆண்மகன் ஆண்சாமிக்கு அபிஷேகம் செய்து எண்ணை தேய்த்து எல்லாம் செய்வதுபோல பெண் தெய்வங்களுக்குக் குளிப்பாட்டப் பெண்களை வைப்பதுதானே ஒழுங்கு. பெண்ணைக் குளிப்பாட்டவும் சேலை கட்டிவிடவும் ஆண்பிள்ளைகளை அமர்த்துவது யோக்கியமாகுமா? இதுசாமியல்ல, பெண் உணர்ச்சியிராது என்றால் ஏன் அதைப் பெண் உருவத்தில் எல்லா அவயவங்களும் வைத்துச் செய்யவேண்டு மென்று கேட்கிறேன். தவிர இரவில் ஆண்சாமியையும் பெண்சாமியையும் கொண்டுபோய் ஏன் ஒரு ரூமுக்குள் அடைக்கவேண்டும்? இந்தக்கோட்டாலை யெல்லாம் செய்வதால் அந்தச்சாமிகள் ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பதாகத் தானே கருதவேண்டியிருக்கிறது. பெண்சாமிக்கு வெட்கமில்லை யென்று தீரவேண்டும். அப்படியானால் சேலை கட்டவேண்டிய அவசியமில்லை. அல்லது உடனே அம்மனுக்குப் பெண் பூசாரியை ஏற்படுத்தி யாகவேண்டும். இந்த வழக்கை உடனே தரும கர்த்தர்களும் கவனித்து வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமெ கேட்டுக் கொள்கிறேன். என்று அம்பிகைதாசன் எழுதுகிறார்.

## எங்கட்குப் பள்ளியறைவேண்டும்.

சுப்பிரமணிய சுவாமி எழுதுகிறூர்.

எல்லா கோயில் தருமகர்த்தர்கட்கும் கோவில்களிலுள்ள சுற்றுக்கால் சுவாமிகள் சார்பாக நான் இந்த விண்ணப் பத்தை வெளியிடுகிறேன். கோவில்களில் இரவு அர்த்த ஜாமம் ஆன பிறகு படுக்கைக்குப் போகவேண்டிய நேரத்தில் எனது தாய் தந்தையர்கட்கு மட்டும் தனியான பள்ளியறை யமைத்து அதற் குள் இரண்டு சுவாமிகளையும் அனுப்பி ஊஞ்சல் பட்டு மெத்தை கொசுவலை திண்டு தலையணை எல்லாம் வைத்துக் கதவைச் சாத்திக் கொண்டுபோய் விடுகின்றனர். அவர்கள் பாடு சௌகரியமாக இருக்கிறது. உண்மையாகப் பார்த்தால் அவர்களிருவரும் வயோ திகர்கள். அவர்களைக்காட்டிலும் வாலிபப்பருவமுள்ள பெண்களும் ஆண்களும் கோயில்களில் ஏராளமாக இருக்கிறோம். முக்கியமாக என்னைப்பற்றிச்சொல்லப்போனால் எனக்கு இரண்டுபெண்டாட்டி. எங்கள் மூன்று பேரையும் வரிசையாக வைத்திருக்கிறார்கள். இர வில் நாங்கள் என்ன செய்கிறது? விழுந்து படுக்கலா மென்றால் தரையோ சொல்லவேண்டியதில்லை. பாலும் பழமும் பழத்தோ லும் குப்பையும் எண்ணையும் தண்ணீருமாகச் சேர்ந்து சேறாக இருக்கிறது. கதவையும் சாத்திப் பூட்டிக் கொண்டு குருக்கள் போய்விடுகிறார். எங்கள் கதியென்னவாகிறது? அறுபத்துமூன்று நாயன்மார்களில் எத்தனையோபேர் குடும்பஸ்தர்கள் இருக்கிறார் கள். மற்றும் பல சாமிகள் இப்படி இருக்கின்றனர், என்றாலும் அவர்கட்குத் தனி அறை கிடையாது. எல்லாரும் சத்திரத்தில் படுக்கிற மாதிரியாகக் கிடக்கவேண்டியிருக்கிறது. கோவில்களில் முதலாவது செய்யவேண்டிய திருத்தம் இதுதான், புருஷனும் பெண்டாட்டியுமாக இருக்கிறசாமிகளை அர்த்தசாமத்திற்குப் பிறகு தனியான பள்ளியறைகள் கட்டி அதற்குள் அனுப்பிவிடவேண் டும். மற்ற பெண் சாமிகளையெல்லாம் ஒரு படுக்கை அறையிலும் மற்ற ஆண் சாமிகளையெல்லாம் ஒரு படுக்கை யறையிலும் சேர்ப் பிக்கவேண்டும். இல்லாவிட்டால் மரியாதையாக இராது. நாங்கள் இவ்வளவு காலம் பொறுத்திருந்தது போதும். இன்னும் எங்களை அவமானப்படுத்துவதானால் நாங்கள் சுயமரியாதைக் காரர்களிடம்

அடைக்கலம் புகவேண்டி நேரும். எங்களை இனிமேலும் அடைத்து வைத்து உங்களிஷ்டம்போல் நடத்த சம்மதிக்க மாட்டோமென்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## கட்டினதாலி இருக்கும்போது கலியாணமென்ன?

கைலாசத்திலிருந்து ஸ்ரீலஸ்ரீ பரமசிவன் பின்வருமாறு தெரிவிக்கிறார்:—

நான் என் பெண்டாட்டி பார்வதியைக் கல்யாணம் செய்து வெகு காலமாயிற்று. நான் இறக்கிறதே இல்லை. இது எல்லாப்புத்தகங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. எங்கள் பேரைச் சொல்லிக் கோவில்களில் அநேகம் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் சாதாரணமாக இறந்து போகிறதில்லை. இறந்து போகக் காரணமுமில்லை. விஷயம் இப்படியிருக்க என் மனைவி பார்வதிக்கு ஒவ்வொரு கோயிலிலும் திருக்கல்யாண மென்று நடத்தித் தாலி கட்டுகிறார்கள். இது ஒழுங்கில்லாத காரியமாகும். புதிதான கன்னிப் பெண்ணுக்குத்தான் கல்யாணம் செய்து தாலிகட்டுவது வழக்கம். இல்லாவிட்டால் புருஷன் இறந்து தாலியறுத்துவிட்டால் மறுபடி ஒரு புருஷனைப் பார்த்துத் தாலிகட்டி அப்பெண்ணுக்குக் கலியாணம் செய்யலாம். என் மனைவி பார்வதிக்குக் கலியாணமாகிவிட்டது. கல்யாணஞ் செய்து கொண்ட நாளும் உயிருடனே இன்று வரை இருக்கிறேன். ஆதலால் அவள் தாலியறுக்கவுமில்லை. இந்த நிலைமையில் வருஷந்தோறும் தாலிகட்டுதற்கு இவர்கள்யார்? ஒருவனுடைய பெண்டாட்டி கழுத்தில் புருஷனிருக்கும் போது வேறொருதாலியைக் கட்டுவது ஒழுங்காகுமா வென்று கேட்கிறேன். தவிர எனது பெண்டாட்டியான பார்வதி கழுத்திலிருக்கிற தாலியை அறுக்க இன்னொரு திருவிழாக் கூட நடத்துவார்கள் போலிருக்கிறது. இனிமேல் என் மனைவி பார்வதியை இம்மாதிரி கேவலமான காரியத்துக்கு உட்படுத்தக் கூடாதென்று கண்டிப்பாக அறிவிக்கிறேன்.

---

## இனித் தபாலாபீஸ் வேண்டாம்.

அண்ணு[illegible]லையார் துணையா தபாற்காரர் துணையா? என்று நான் எழுதியி[illegible]ந்ததைப் பார்த்த சிவநேசர் ஒரு மறுப்பு சொல்கிறார். அவர் சொல்வதாவது:— "தபாற்காரர் கடிதத்துக்குத் துணையல்ல. [illegible]தபாலில் போடுகிற பத்திரிகை கடிதங்கள் எல்லாம் போய்ச் சேருவதில்லை. இரண்டொன்று தவறிப் போகின்றன." என்பதாகும். சரி, மெத்தச்சரி. அண்ணுமலையார் துணை போட்டுவிட்டால் ஒன்றுந் தவருமல் போய்ச் சேருமா என்ற சந்தேகம் கூடத் தேவை[illegible]யில்லை. சிவபக்திக்குச் செட்டி நாட்டுக்கு சோல் ஏஜண்டுகள் சி[illegible] நேசர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். முதலில் சிவநேசன[illegible] பத்திரிகையை அடுத்த வாரத்திலிருந்து தபாற்காரர் துணையை[illegible]டாமல் ஒரே கட்டாகக் கட்டி "அண்ணுமலையார் துணை" பே[illegible]ட்டு அடுத்த ஒரு பர்லாங் தூரத்திலுள்ள ஆற்றில் போட்டு வி[illegible]டால் போகவேண்டிய ஒவ்வொரு ஊரின் குளத்திலும் மிதக்கு[illegible]ம். சந்தாதாரர்கள் எடுத்துக்கொள்ளலாம். சாட்சாத் சுந்தர மூர்[illegible]தி சுவாமிகள் முன்னொரு முறை முதுகுன்றூர் மணிமுத்தா நதி[illegible]யில் தங்கத்தைப் போட்டு விட்டுத் திருவாரூர்க் குளத்தில் முழு[illegible] எடுத்திருக்கிறார்கள். இப்போதும் சிவபக்தர்கள் தேவாரத்தை ஓதி பலவான்குடி ஆற்றில் பத்திரிகைகளைப் போட[illegible]டால் அந்தந்த ஊரிலுள்ள ஒவ்வொரு குளத்திலும் ப[illegible]ரிகை மிதக்கும். பலவான்குடி மகா நதியில் எப்போதும் த[illegible]ணீர் ஓடுவதில்லை. [illegible]ன்றாலும் அதற்காகக் கவலைப்படவேண்டியதி[illegible]லை. தண்ணீ[illegible]ாதபோது ஆற்றுக்குள் ஒருகுழியை ஆழமாக வெட்டி அதற்குள் பத்திரிகைகளைப் போட்டுப் புதைத்து விட்டா[illegible] பூமி வழியாகப் போய்ச் சேரவுங் கூடும். "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ!" பொது ஜனங்களும் அண்ணுமலையாரை நம்பி தபால் பார்சல் முதலிய எல்லாவற்றிலும் "அண்ணுமலையார் துணை" போட்டுச் சமீபத்திலிருக்கிற கோயில்களில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டால் அங்குள்ள பரமேசுவரன் தம்முடைய சிவ கணங்களையாவது பூத கணங்களையாவது விட்டு விலாசப்படி பட்வாடா செய்து விடுவார். குண்டையூரிலிருந்த நெல்லைப்பரவை நாச்சியார் வீட்டுக்கு வரச்செய்தாரல்லவா? பினுங்கு சிங்

கப்பூர் பர்மா செய்கோன் ஜாவா சுமத்ரா இங்கில ந்துக்குக் கூட இப்படிச் செய்யலாம். என்னத்திற்கு ஸ்டாம்பு செலவு! பக்திக்குப் பக்தியாகிறது. ஆஸ்திக புத்தி குறையா பணமும் மிச்சம். இதில் நம்பிக்கை இருக்கிறவர்கள் அண்ணாமலையார் துணை போடுவதில் எனக்குக் கொஞ்சங் கூட ஆக்ஷேப மில்லை. இதில் நம்பிக்கை இல்லாமல் தபாலாபீசுக்குப்போவதானால் 'தபாற்காரர் துணை' போட வேண்டியது தான். சாமிதுணை போட்டுக்கொண்டு உண்மையாக சாமியை நம்பாமல் தபாற்காரர் துணை தேடுவதென்றால் அதுதான் பக்கா நாஸ்திகமாகும். ஒன்று சாமியை நம்ப வேண்டும். இல்லாவிட்டால் தபாற் காரரை நம்ப வேண்டும். இரண்டு கப்பலிலும் காலை வைத்துக் கொண்டு நின்றால் ஆளுக்குமோசம். ஏதாவது ஒன்றில் நிற்பதே ஒழுங்கு! என்று உண்மைநாடுவோன் எழுதுகிறார்.

---

## எண்ணை விலை மலியுமா?

தமிழ்நாட்டில் மட்டும் சுவாமி விக்கிரகம் 4 கோடி இருக்கிறதாம். அவற்றுள் கல் விக்கிரகம் 2 கோடிக்கு மேலிருக்குமாம். ஒவ்வொருநாளும் இரண்டு முறை அபிஷேகம் நடக்கிறதாக வைத்துக்கொண்டால் ஒவ்வொரு விக்கிரகத்துக்கும் கால்படி யெண்ணையாவது வெண்டும். எனவே நாளொன்றுக்கு இந்த இரண்டு கோடி விக்கிரகங்கட்கு எண்ணை மட்டும் 50 லட்சம் படி தீர்ந்து விடுகிறது. மாதம் 15 கோடி படி. வருஷத்துக்கு 180 கோடி படி எண்ணை செலவாகிறது. இவ்வளவு எண்ணையையும் மிச்சம் பிடித்தால் தமிழ் நாட்டில் எண்ணையினால் ஒரு கெங்கை ஓடுமென்று ஒருவர் கூறுகிறார்; எண்ணையையே காணுதிருக்கும் லட்சக்கணக்கான ஏழை மக்கள் விழுந்து குளித்துவிட்டு உருளைக் கட்டைமாதிரி உடலைப்பெறுவார்களல்லவா? பிறகு ஒருபடி எண்ணை ஒருரூபா இரண்டணு விற்குமா? என்று ஏழை பங்காளன் எழுதுகிறார்.

---

# குமரன்.

எப்பொரு[illegible] யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொ[illegible]ருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை கூ | காரைக்குடி பிரமோதூத-ஆ ஐப்பசி-மீ | மணி ச

## விடுதலை

பார்ப்பா[illegible]ன ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பறங்கி[illegible]யைத் துரையென்ற காலமும் போச்சே—பிச்சை
ஏற்பா[illegible]ரப் பணிகின்ற காலமும் போச்சே — நம்மை
ஏய்ப்[illegible]போருக் கேவல் செய்யும் காலமும் போச்சே.

எங்கு[illegible] சுதந்திரம் என்பதே பேச்சு— நாம்
எல்[illegible]லோருஞ் சமமென்ப துறுதி யாச்சு
சங்[illegible] கொண் டேவெற்றி யூதுவோமே—இதைத்
தர[illegible]ணிக் கெல் லாமெடுத் தோதுவோமே.

எல்லோரும் ஒன்றென்னுங் காலம் வந்ததே—[illegible]யும்
ஏ[illegible]மாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே—இ[illegible]
[illegible]லோர் பெரியோரென்னும் காலம் வந்ததே—கெட்ட
[illegible]யவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே.

உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓய மாட்டோம்.

பாரதியார் பாடிய இப்பாடல்களில் நாட்டில் செய்யப்பட வேண்டிய சில முக்கியமான விஷயங்கள் காணப்படுகின்றன. சீர் திருத்தத்திற்கு அடிப்படை இதில் பொதிந்திருக்கின்றது. மனி

தனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வென்பது ஒழிதல் வேண்டும். பிச்சை வாங்குப்வன் உயர்ந்தவன் என்ற பித்தம் தொலையவேண்டும். ஏய்த்து ஏமாற்றிப் பிழைப்போருக்கு அடிமை பூண்டு ஏவல் செய்யும் கொடுமை ஒழியவேண்டும். இந்திய நாட்டில் சுதந்திர இயக்கம் மலர்ந்தது. சுதந்திர தாகம் உண்டானபோதே எல்லோரும் ஒன்று என்னும் எண்ணம் அரும்பியது. பொய் நூல்களும் புரட்டுக் கொள்கைகளும் பறக்கின்றன. இதுவரை மேலே நின்ற நயவஞ்சகக்காரர் அடங்குகின்றனர். நல்லவரெல்லாம் பெரியவர் என்ற கொள்கை தோன்றுகிறது. தொழிலுக்கு மரியாதை வருகிறது. தண்டச் சோறு தின்பவருக்கு இருந்த மரியாதை சாய்கிறது. வீணுக்குழைத்தல் இனி நடவாது. இந்த நிலைமையை யெதிர்பார்த்துப் பாரதியார் மேற்கண்ட பாடல்களை பல ஆண்டுகட்கு முன்னரே பாடியிருக்கிறார்.

---

## கடவுளைக் காப்பாற்றல்.

கடவுளைப் பற்றித் தத்துவ ஆராய்ச்சியாளர் பலபடக்கூறியிருக்கின்றனர். கடவுள் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள். அதனையாராய்ந்து அறிய முன்வந்த பலரும் திட்டமாக ஒன்றுங்கூறமுடியாதவ ராயினரென்பது சுவடிகளைப் படிப்பதால் நன்கு விளங்குகிறது. "ஏதோ ஒரு சக்தியிருக்கவேண்டும்" என்ற வரையில் வந்தார்களே யன்றி அதை நேரே காணவோ அல்லது அதனைப்பலரும் அறியும்படி செய்யவோ முடியவில்லை. "அறிவுக்கும் எட்டாத பொருள்" என்று சிலர் முடிவு கட்டினர். உருவமாவது நிறமாவது குணமாவது இருக்கும் எந்தப்பொருளும் அழியுமென்ற உண்மை வெளிப்படையாகத் தத்துவநூல்களில் கூறப்பட்டுள்ளது. எனவே உருவம் நிறம் குணம் இல்லாத பரவெளியாகவே கடவுள் இருக்கவேண்டும் என்று ஒருவாறு முடிவு கட்டியிருக்கின்றனர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் புலன்கட்கும் அறிவுக்கும் எட்டாது நிற்கும் பொருள் ஒன்று இருக்கவேண்டுமென்றும் அப்படி யொன்றுக்கும் அகப்படாத பராபரப் பொருளே கடவுள் என்றும் சில சமய ஆசாரியர்கள்

கூறியிருக்கின்றனர். அப்படிப்பட்ட கடவுளின் சக்தியினால் இவ்வுலகமும் ஏனைய பல உலகங்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன என்று நூல்களில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. "புல் முதல் மனிதன் வரையுள்ள அசையும் பொருளும் அசையாப் பொருளுமான எல்லாம் அந்தக் கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றன; அவை யாவும் அந்தக் கடவுளாலேயே காக்கப்படுகின்றன; அந்தக் கடவுள்தான் அவற்றை அழிப்பார். உலகில் உற்பத்தி செய்வதும், வளரச்செய்வதும் வாழச்செய்வதும் அழியச் செய்வதும் எல்லாம் அந்தக் கடவுளின் செயலேயாம். அவன் செயலை எவராலும் எதனாலும் தடை செய்ய முடியாது. கடவுளுடைய இஷ்டத்துக்கு மாறாக எதுவும் நடவாது, எவரும் செய்யமுடியாது" என்று கடவுளைப்பற்றிக் கூறும் ஹிந்து சமய நூல்கள் கூறுகின்றன. இங்கே நாம் கவனிக்கும்படி வேண்டுவதொன்று. எல்லா உலகையும் படைத்துக் காப்பாற்றும் சர்வசக்தி மானாகிய கடவுள் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியில்லாதிருப்பாரா என்பதை யோசிக்கவேண்டும். தன்னால் உண்டாக்கப்பட்ட சமயத்தைக் காப்பாற்றிக்கொள்ள சக்தியில்லாதிருப்பாரா என்பதும் யோசிக்கத் தக்கதன்றோ! நம் தமிழ்நாட்டிலுள்ள சிவபக்தர்கள் "சுயமரியாதைக்காரர் கடவுள் இல்லையென்கிறார்கள்; சமயமில்லை என்கிறார்கள்; கோவில் வேண்டாமென்கிறார்கள்; சாமிக்குப் பூஜை நைவேத்யம் வேண்டாமென்கிறார்கள்; நாங்கள் காப்பாற்றப்போகிறோம்; நீங்கள் உதவி செய்யுங்கள்; சுயமரியாதைக்காரர் சொல்வதைக் கேளாதீர்கள்" என்று சத்தமிடுகின்றனர். கடவுள் சர்வசக்திமான், சர்வவல்லமையுள்ளவர் என்று வேதங்கூறுவதை உண்மையாக நம்பினால் இவர்கள் செய்யவேண்டியதென்ன? கடவுள் சுயமரியாதைக்காரர் வேண்டாமென்றாலும் இல்லையென்றாலும் அவர் எழுதின வேதத்தையும் சாஸ்திரத்தையும் பொய்யென்றாலும் அதற்குச் சொந்தக்காரரான கடவுள்தானே சண்டைபோட்டு அவற்றைக் காப்பாற்றுதல் வேண்டும். ஒருவன் பாடுபட்டுக் கட்டிய வீட்டை மற்றொருவன் இடிப்பானானால் அதன் சொந்தக்காரன் எதிர்த்துப் போராடுதல் இயல்பும் நியாயமுமாகும். அந்த வீட்டுக்காரனுக்கு இடிப்பவனுடன் எதிர்க்க சக்தியில்லாமற் போகுமானால் பக்கத்திலுள்ளவர்களைத் துணைக்குச் சேர்த்துக்கொள்ள

லாம். அல்லது அந்த வீட்டுக்குச் சொந்தக்காரன் செத்துப்போனால் அவன் பிள்ளைகுட்டிகட்காக ஊரிலுள்ளவர்கள் அந்த வீட்டைக் காப்பாற்றலாம். இது முறையாகும். கடவுள் ஏற்படுத்திய சமயத்தையோ சாஸ்திரத்தையோ வேத புராண இதிகாசங்களையோ சுயமரியாதைக்காரர் உடைக்கிறார்களென்றால் கடவுள் நேரே வந்து காப்பாற்றிக்கொள்ளவேண்டும். அவர் ஒன்றுஞ் செய்யாமல் இருக்கிறபோது சிவபக்தர்வேஷம் போட்டிருக்கிற சிலர் சண்டைக்கு வர நியாயமுண்டா? இவர்கள் எல்லாவற்றையும் படைத்த கடவுள் சுயமரியாதைக்காரரிடம் சண்டைபோட்டு வெற்றிபெற முடியாதென்று கருதுகிறார்களா? அல்லது கடவுள் வெளியே வரமாட்டார் என்று கருதுகிறார்களா? அல்லது வெளி வந்து சண்டைபோட்டு சுயமரியாதைக்காரரைத் தோற்கடிக்க முடியாதென்று எண்ணுகிறார்களா? கடவுள் சர்வ சக்திமான், உலகத்தில் நடக்கும் எந்தக் காரியமும் அவருக்கு விரோதமாக நடக்க முடியாது என்பதில் இவர்கட்கு நம்பிக்கை அணுவளவாவதிருந்தால் சுயமரியாதைக்காரரைப்பற்றிக் கவனிக்கவேண்டிய அவசியமேயில்லையன்றோ? கேவலம் தோன்றிச் சில நாளில் இறந்து போகிற அற்பமான மனிதன் செயலால் ஒன்றும் முடியாதென்றும் பரமசிவன் நினைத்தாலன்றி மனிதன் அசையமுடியாதென்றும் புராணம் பாடும் இவர்கள் அந்தப் பரமசிவனுக்கே ஆபத்து வந்துவிட்டதென்றும் அவரைக் காப்பாற்றவேண்டுமென்றும் புறப்படுவது என்ன பாசாங்கு செய்தல் நேர்மையாகுமா? எல்லாம் வல்ல கடவுளுக்குக் கோயில் கட்டி வைத்து சாப்பாடு கொடுத்து குளிப்பாட்டி எண்ணை தேய்த்து படுக்கை வீடு சிங்காரித்து அவரைக் காப்பாற்றுவதாக மக்கள் நினைக்கின்றனர். நெல் முளைப்பதும் செடி வளர்வதும் குழந்தை பிறப்பதும் தீயெரிவதும் சோறு வேகிறதும் யாவும் கடவுள் அருளினால் என்றால் அப்படிப்பட்ட கடவுள் இந்த அற்ப மனிதனுடைய சோறு தின்று உயிர்தாங்கவேண்டியிருக்குமென்பதை யோசித்துப்பார்க்கின்றாரில்லை. உருவமில்லாத கடவுளுக்குக் கற்சிலைகளையும் செம்பு விக்கிரகங்களையும் செய்து நாடு முற்றும் கோடிக்கணக்காக நிரப்பிவிட்டனர். அதை யொட்டிப் பலமக்கள் தங்கள் வாழ்வினை நடத்துவதென்ற நிலைமையை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றனர். கோயிலினுள் இருக்கிற சிலை

கள்தாம் கடவுள் என்ற பிறழ்ந்த உணர்ச்சியை நாட்டு மக்கள் உள்ளத்தில் பதிய வைத்திருப்பதால் கடவுளைக்காப்பாற்ற வேண்டு மென்ற வேலையைக் கோயிலைத் துணைப்பற்றி வாழ்பவர் யாவரும் செய்யவேண்டியேற்பட்டிருக்கிறது. கடவுள் எங்கும் நிறைந்த வர்; அவர் ஒரு உருவத்தில் கட்டுப்பட்டவரல்ல; அவருக்குச் சோறும் கறியும் தேவையில்லையென்ற தத்துவ உணர்ச்சி பொது ஜனங்கட்குள் பரவவில்லை. "விக்கிரகமே கடவுள்; அதற்கு சோறு கறி பழம் பாயாசம் எல்லாம் வேண்டும்" என்று கூறி மக்களை நம்பச் செய்து தாங்கள் பிழைப்பு நடத்துவதால் கோயிற் கடவுளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு குருக்கள் ஐயர்மார் சைவர் முதலியோருக்கு ஏற்பட்டிருக்கிறது. கோயில் விக்கிரகங்கள்தாம் கடவுள் என்பதற்கும், அதற்கும் தங்கட்கும் எல்லோரும் பொருள் தரவேண்டுமென்பதற்குமாக எழுதிவைத்த சுவடிகளையும் காப்பாற்றவேண்டிய நிலைமை யேற்பட்டிருக்கிறது. இவற்றைக் காப்பாற்றுவிட்டால் மக்களிடமிருந்து இந்த மனிதர்களின் வாழ்வும் போலி மதிப்பும் இழக்கப்படக்கூடுமென்பதில் ஐயமில்லை. உண்மையான எங்கும் நிறைந்த கடவுளைப்பற்றி இவர்கட்கு ஒன்றுந் தெரியாது; தெரியவும் முடியாது. தெரிந்தாலும் அவர்களைப் பற்றி இவர்கட்குக்கவலையில்லை. கவலை ஏற்பட்டாலும் அவரைக் காப்பாற்ற முன்வரப்போவதில்லை. கோயில் சாமிகளையும் சுவடிகளையும் சுயமரியாதைக்காரர் ஒழித்துவிட்டால் தங்கட்கு பசித்து வந்து வயிறு குழிவிழுந்து போகுமே என்ற கவலையைத்தவிர வேறில்லை. இவர்கள் "கடவுளைக்காப்பாற்ற வேண்டும், சாஸ்திரம் வேத புராணம் முதலியவற்றைக் காப்பாற்றவேண்டும்" என்பதற்குப் பொருள் தங்கள் வயிற்றைக்காப்பாற்ற வேண்டுமென்பதே யாகும். உண்மையில் உலகையெல்லாம் உண்டாக்கும் கடவுளுக்கு ஆபத்து ஒருநாளும் வராது. அவரால் படைக்கப்பட்ட சுயமரியாதைக்காரரால் அவரை ஊறு செய்யமுடியாதென்று நம்பலாம். அல்லது ஆபத்து செய்யமுடியுமானல் கடவுள் சர்வசக்திமான் என்பது பொய்யாகிவிடும். கடவுளை யெதிர்த்து ஆபத்து உண்டாக்கி விடும்படியான பலத்தை சுயமரியாதைக்காரர் பெற்றிருப்பார்களானல் இந்தப் பத்தர்களால் எதிர்த்து வெற்றிபெற்றுக் கடவுளைக் காப்பாற்றத்தான் முடியுமா? எனவே எப்படிப் பார்த்தாலும்

கடவுளைக் காப்பாற்ற சிவ பக்தர்களென்று சொல்லிக்கொண்டு புறப்பட்டு வெளிவரல் அறியாமையும் நாஸ்திகத்தனமுமாகும். எல்லாம் அவன் செயலாலேயே நடப்பதால் இவர்கள் ஆற்றின் கரைகளிலும் மலையுச்சியிலும் இருந்து ஜபமணியுருட்டிக் கடவுளை நோக்கித் தவம்புரிவதே ஒழுங்காகும். கடவுள் காரியத்தைக் கடவுள் பார்த்துக்கொள்வார். கடவுளால் முடியாது நாங்கள் தான் சண்டைக்கு வருவோமென்றால் கடவுளை நம்பாதபடி நாஸ்திகர்கள் இந்தப் பக்தர்கள்தாம் என்பதில் ஐயமுண்டோ?

---

# ஜாதிப் பைத்தியம்.

திரு. ராம சுப்பிரமணியம் எழுதுவது.

**நம்** நாட்டில் சீர்திருத்தங்கட்கு இதுபோது முட்டுக்கட்டைகளாக நிற்பனவற்றில் தலை சிறந்தது ஜாதிப்பைத்தியமாகும். நாட்டிற்கு என்னென்ன துன்பங்கள் ஏற்பட வேண்டுமானாலும் அவ்வனைத்தையும் உண்டாக்கும் சக்தி ஜாதிக்கட்டுப்பாட்டுக்கு மிகுதியும் உண்டு. ஜாதி என்ற இயந்திரத்திற்குள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் மக்களை நோக்கும்பொழுது ஒரு உண்மையான சீர்திருத்தக்காரனின் மனம் பதைக்கின்றது. பிறந்தது முதல் இறக்கும் வரை ஜாதி என்ற இயந்திரத்திற்குள் புகுத்தப்படுவதற்குத் துணையாக சாஸ்திரங்கள் என்ற பார்ப்பன மோசக்காரர்களால் செய்யப்பெற்ற பல கொடுங்கருவிகள் துணை நின்று மக்களைச் சித்திரவதை செய்கின்றன. தன்னை அடிமையென்று சொல்லச் செய்கின்றன. உலகத்தில் ஒன்றும் செய்ய சக்தியில்லாதவன் என்று சொல்லச்செய்கின்றன. தெருவில் செல்ல உரிமையுள்ள நாய், பன்றிக்குங்கூட இழிந்தவன் என்று சொல்லச்செய்கின்றன. கல்வி கற்று உலகத்தில் சுகமாக வாழ உரிமையில்லாதவன் என்று சொல்லப்படுகின்றன. மதம் என்றும் சமயம் என்றும் சொல்லி மக்களுக்கு வெறிஉண்டாக்கி வீண் சண்டை சச்சரவுகளைக்கிளப்பி யோக்கியனை அயோக்கியனென்றும் அயோக்கியனை யோக்கியனென்றும் சொல்லச்செய்கின்றன. மூன்று நாள் பட்டினி கிடக்கும் ஏழைக்கு ஒரு பிடி அன்னம்கூட அளிக்காதே, மூன்று வே

ளையும் மூக்குப் பிடிக்க சத்திரத்தில் சாப்பிட்ட மோசக்காரனுக்கு நாலாவது வேளையும் சாப்பாடு கொடு என்று சொல்லப்படுகிறது. ஒரு ஏழை கழனியிற்சிந்திப்போன தானியங்களைப் பொறுக்கி வந்து ஜீவனம் நடத்துகிறவனுயிருந்தாலும் அவனிடம் ஒரு பார்ப்பான் சென்று கேட்ட உடனே அவ்வேழை அத்தானியங்களைப் பார்ப்பானுக்குக் கொடுத்துவிட்டுப் பசியோடுதானிருக்கவேண்டு மென்று சொல்லப்படுகின்றது. ஒரு பார்ப்பான் வீட்டுக்கு ஒரு ஏழை சென்று குடிக்கத்தண்ணீர் கேட்டால் கொடுக்கக்கூடாது என்று சொல்லப்படுகின்றது. அந்தோ! கொடுமை!! கொடுமை!! நாடு இவ்வித அயோக்கியர்களிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறதே! இனை உண்மையாக உணர்ந்த திருவருட்பா பாடிய இராமலிங்கசுவாமிகள் "சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச்சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்! அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே" என்று சொல்கிறார். இக்கொடுமைகளுக்கு உதவியாக இருக்கும் சூழ்ச்சி நூல்களின் உண்மை அறிந்து "வேதாகமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர் வேதாகமத்தின் விளைவறியீர், சூதாகச்சொன்ன அலால் உண்மை வெளிதோன்ற உரைத்தல் இலை, என்ன பயனே இவை" என்று இராமலிங்கசுவாமிகளும் கூறுகின்றார். மனிதன் அறிவை வளர்க்கத் தடையாக நிற்கும் நூல்களைத்தொலைத்தாலன்றி சாதிப்பைத்தியம் போகப்போவதில்லை. சாதிப் பைத்தியத்தைத் தொலைத்தால் நாடு மிக விரைவில் முன்னேறி மற்ற நாட்டினரைப்போல் நல்ல வாழ்வு அடையுமென் பதிற்சிறிதும் ஐயமில்லை.

---

# பரலோகப்பித்து.

மதுரை மன்னன் எழுதுவது.

நமது நாட்டு மக்கள் இந்த உலகத்தில் உள்ள இன்பங்களைக் காட்டிலும் சிறந்த இன்பம் பரலோகத்தில் கிடைக்குமென்று நம்புகிறார்கள். கையில் அரைக்காசு இல்லாவிட்டாலும் குடிக்கக் கஞ்சியில்லாவிட்டாலும் மேலுலகத்தில் இடம் பிடிப்பதற்காகப் பிச்சையெடுத்தாவது கடன்பட்டாவது செலவு செய்ய முயல்கிறார்கள்.

இந்த உலகத்தில் எந்த சுகமுமில்லாமல் தரித்திரத்தால் துன்பப் பட்டாலும் பாதகமில்லையென்றும் மேலுலகத்தில் நல்ல பதவி கிடைக்குமென்றும்சொன்னால் கையிலிருப்பதைஎளிதாகத்தட்டிப் பிடுங்கிக்கொள்ளலாம். இந்தவேலைதான் இப்போது நம் நாடு முழு மையும் நடைபெற்று வருகிறது. செத்தபிறகு எல்லா இன்பமுங் கிடைக்குமென்று சொல்லி அகப்பட்டதைப் பிடுங்கிக்கொள்வதற் குப் பல நூல்களும் பல ஸ்தாபனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. மேலுலகமென்பது எங்கேயிருக்கும்? அதற்குப் போகும் பாதை எது? அங்கு நாம் போகவேண்டிய அவசியமென்ன? யாராவது அங்கு போயிருக்கிறார்களா? போனால் அவர்கள் கதி அங்கே எப் படியிருக்கிறது? என்ற விஷயங்களைப்பற்றி எவரும் சிந்திப்பதில்லை. ஹிந்துவாகப் பிறந்தவர்கள் பரலோகங்களை நம்பித் தொலைக்கும் பணத்திற்கு ஒரு அளவே கிடையாது. எவ்வளவு படித்தவனும் மேலுலக ஆசையிலீடுபட்டு ஏமாறாமலிருக்கவில்லை. கண்ணுக்குத் தெரியாதென்றும், போனவர் திரும்புவதில்லையென்றும், இங்குள் ளவன் மயங்கி ஏமாறக்கூடிய பொருள்கள் யாவும் அங்கே உண் டென்றும் சொல்லப்படுகிறது. இங்கே கண்ணுக்கு முன்னால் நேருக்கு நேரே உள்ள யாவும் பொய்யானதென்றும், அழிந்து போகுமென்றும் கூறி அறிவைக் கலக்கியிருக்கின்றனர். தனக் குப் பக்கத்திலிருக்கும் மனைவியும் குழந்தைகளும் தான் குடியிருக் கும் பிரமாண்டமான வீடும் மற்றப் பொருள்களும் இந்தப் பெரிய உலகமும் பொய்யானதென்று சாஸ்திரம் எழுதிவைக்கப்பட்டிருக் கிறது. ஆனால் இதுவரையில் எவரும் பார்க்காததும் உடலோடு எவராலும் செல்லமுடியாததும் சென்றவர் திரும்ப முடியாதது மான உலகங்கள் இருப்பதாகவும் அவை என்றுமே அழியாதன வென்றும் அங்கு சகல இன்பங்களுமுண்டென்றும் ஏட்டில் எழு திப் பணம் பிடுங்கிப் பலர் தின்று உயிர்வாழ்கின்றனர். ஏமாந்த ஹிந்து ஜனங்கள் ஏட்டிலெழுதிவைத்திருக்கிற நாவல் உலகத்தில் சுகமனுபவிக்க நினைத்துப் பொருளை அழித்துக்கொண்டு ஏமாறு கின்றனர். இப்படிப்பட்ட அறியாமை தொலைந்து, மூடியிருக்கிற கண்கள் திறக்கப்படவேண்டும். மேலுலகத்தைப்பற்றி திரு சுப் பிரமணியபாரதியார் கூறியுள்ள ஒரு பாட்டைமட்டும் இங்கு எடுத்துக்காட்டுகிறேன்.

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்றே எண்ணியிருப்பார்
பித்த மனிதர் அவர்சொலும் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்.

---

# பார்ப்பனப் பித்தலாட்டம்.

நாளிது புரட்டாசிமீ 12உ கோ. லேட்சுமிபுரத்தில் திரு. சோ. முருகப்பர் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

இந்த நாட்டிற்கும் மேல்நாட்டிற்குமுள்ள வித்தியாசங்களைக் கவனியுங்கள். நாளுக்கு நாள் மற்ற நாட்டார் அபிவிருத்தியடைந்து வருகின்றனர். இந்த நாட்டில் செய்யும் முயற்சி யொன்றும் உருப்படியாகிறதில்லை. இரண்டொரு குறிப்பைக் கூறுகிறேன். தபால் அனுப்பும் முறையானது காலதாமதப்படுகின்றதென்று தந்தியைக் கண்டுபிடித்தனர். தந்தியில் பாஷை பேசுவதை விட்டு டெலிபோன் கண்டுபிடித்து நேருக்கு நேரே பேச வழிகண்டனர். அதிக தூரத்திலிருப்பவர்களுடன் இருந்த இடத்திலிருந்தே நினைத்தபோது வேண்டிய விஷயங்களைப் பேசிக்கொள்ளும்படி டெலிபோன் அமைத்திருக்கின்றனர். டெலிபோன் பேசும்போது கேட்க ஆளில்லையென்றால் சொல்லவேண்டிய விஷயத்தை எழுதி வைக்கவேண்டிய ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் வெளியூருக்குப்போகிறவர் சிலவார்த்தைகளை டெலிபோனுக்கு முன்னாலறிவித்துவிட்டால் எங்கிருந்து யார் கேட்டாலும் இந்த பதிலை டெலிபோன் தானாகவே சொல்லிக்கொண்டிருக்கிறதாம்.

கடலிலிருக்கும் கப்பலுக்கும் கரைக்கும் தந்தியில் தாக்கல் பேசிக்கொள்ளமுடியாதிருந்த நிலையின் கஷ்டம் கம்பியில்லாத் தந்தியால் நீங்கியது. அம்முறை பல இடங்கட்கும் பரவி கம்பியில்லாமலே செய்தி பேசும்படியான வசதியை உண்டாக்கிவிட்டனர். அதுமட்டுமல்ல? ரேடியோ மூலம் சீமையில் நடக்கும் விஷயத்தை அப்பொழுதே இந்த ஊரில் தெரிந்துகொள்ளும் வசதி ஏற்பட்டிருக்கின்றது. இன்று மாலை மூன்று மணிக்கு கொழும்பில் நடைபெறும் ஒரு சங்கீதக் கச்சேரியை அதேநேரத்தில் இவ்வூரிலிருந்தே கேட்டு மகிழலாம். இப்படியே கட்டை வண்டியிலேறி கஷ்டப்படாமல் ரயில் வண்டி கண்டுபிடிக்கப்பட்டது. தண்டவாளமில்லாத விடங்களிலும் ஓடும்படி மோட்டார்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதைவிட அருமையாக ரோடுகள் போடவேண்டிய அவசியத்தை எதிர் பாராமல் ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்து

விட்டனர். இப்பொழுது கட்டப்படும் ஒரு ஆகாயக்கப்பலில் நூறு பிரயாணிகட்குப் படுக்கையறைகளுடனும், குளிக்குமறைகளுடனும், மற்ற பல வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருக்கிறதென்று செய்தி கிடைக்கிறது. நாற்பது ஐம்பது வருடங்கட்கு முன்னுல் வெளி நாடுகளுக்குக் கப்பலேறிச் சென்றவர்கள் கப்பலேறும்போது எண்ணை தேய்த்து மூழ்கி கோடி வேஷ்டியுடுத்தி மனைவியிடம் வாய்க்கரிசியும் வாங்கி முடிந்துகொண்டு செல்வார்களென்பதை உங்களில் சிலராவது கேட்டிருக்கலாம்? பழைய காலத்துப் பாய்க்கப்பல் புறப்பட்டால் எப்பொழுது புறப்படுமென்றும் எப்பொழுது போய்ச்சேருமென்றும் இடையில் என்ன ஆபத்து ஏற்படுமென்றும் சொல்லமுடியாது! காற்று எந்தப்பக்கத்தில் அடிக்கின்றதோ அந்தப்பக்கம் கப்பல் போய்க்கொண்டிருக்கும். கரையிலிருப்பவர் கப்பலில் போனவர் செய்தியை எந்த விதமாகவும் தெரிந்து கொள்ளமுடியாது. குறிப்பிட்ட கரைக்குப் போய்ச் சேர்ந்தாரா? இறந்தே போனுரா? என்ற செய்தி பலமாதங்கட்குத் தெரிந்துகொள்ள முடியாது. இப்பொழுது மேல் நாட்டார் செய்திருக்கும் கப்பல்களின் தன்மையைப் பாருங்கள். கொழும்பிலிருந்து இத்தனை மணிக்குக் கப்பல் புறப்படுமென்று சொல்லிப்புறப்படுகிருன். மூன்றுநாள் இருபது மணி நேரம் முப்பது நிமிஷத்தில் பிடிக்கிறேனென்று சொல்லி அந்தப்படி சிங்கப்பூர் துறைமுகத்தில் இறக்கிவிடுகிருன். காற்றையோ கடல்அலையையோ லக்ஷியம் செய்வதில்லை. தண்டவாளத்தில் ரயில் ஓடுவதுபோல் ஒவ்வொரு தேசத்திற்கும் கடலில் கப்பல்கள் ஓடித்திரிகின்றன. அந்தக் கப்பலிலிருப்பவர்களோடு கரையிலிருப்பவர்கள் அவசியமிருந்து பேசவேண்டுமென்றுல் கம்பியில்லாத் தந்தியின் மூலம் பேச வசதியிருக்கிறது. இப்படிப்பட்ட அபிவிருத்திகளை மேல்நாட்டு மக்கள் நாள்தோறும் கண்டுபிடித்துப் பயன் பெற்று வருகின்றனர். இந்நாட்டு மக்கள் எப்படியிருக்கின்றனரென்பதை யோசித்துப்பாருங்கள். ஒருவன் சாம்பலைப்பூசிக் கொண்டு முத்திக்குப்போகிறேனென்கிருன். புளியோதரையைவிட சர்க்கரைப்பொங்கல் சிறந்ததென்று கோவிலில் கட்டளை ஏற்படுத்தி மானியம் விடுகிருன். ஊரிலேயுள்ள ஆயிரம் குழந்தைகள் பாலில்லாமல் சாகும்போது கன்றையும் இழுத்துக்கட்டிவிட்டுப்

பாலைக்கறந்து குடம்குடமாகக் கோயிலில் விக்ரஹத்தின் தலையில் கொட்டி அரஹரா வென்று கன்னத்தில் போட்டுக்கொள்ளுகிறுன். ஊரிலே ஆயிரக்கணக்கான ஏழைகள் கஞ்சிக்கு அலைந்து பட்டினி கிடந்து சாகும்போது கோயிலிலிருக்கும் கல் விக்கிரஹத்திற்கு தினம் எட்டுக்காலம் பூஜை நடக்கின்றது. சம்பந்தமூர்த்தி சுவாமிகள் எலும்பைப் பெண்ணுக்கினுர் ஏடு எதிரேறவிட்டார் சுந்திரமூர்த்திகள் முதலையுண்ட பாலனையழைத்தாரென்றெல்லாம் ஊர் ஊராகப் போய்ச் சொல்லிப் புலம்புவதால் ஆகிறபயன் என்ன? இதைக் கேட்கின்ற ஜனங்கள் என்ன நன்மையடைகிறுர்கள். பாத காணிக்கை கொடுத்து அவர்கள் காலில் கும்பிட்டு விழுவதுதான் கண்ட பலனுக விருக்கிறது. ஒருபுறம் பார்ப்பான் கொள்ளை, மற்ருெருபுறம் சைவன் கொள்ளை, ஒருபுறம் கோயில், ஒருபுறம் சடங்கு ஒருபுறம் பண்டிகை, ஒருபுறம் கல்யாணம், ஒருபுறம் கருமாதி ரத்தத்தைப் பிழிந்து தேடுகிற பணமெல்லாம் இவற்றிற்குப் போட்டு அழுகவே போதவில்லை. இவற்றிற்குக் கொடாவிட்டால் சாமி கோபிப்பார். பிள்ளை பிறவாது. நரகம் கிடைக்கும். பிதுர் சாபம் வரும். வாழ்வில் பல எதிர்பாராத கஷ்டங்கள் வரும். நோவு வரும் சாவு வரும் என்றெல்லாம் பயமுறுத்தப்படுகின்றன. இந்தப் பித்தலாட்டங்களையெல்லாம் நம்பி ஏமாந்து பயந்து பணம் கொடுக்கும்படியாக ஜனங்களுடைய மூளையைத்திருப்பிவிட்டனர். அதற்கு முதலாவது செய்த சூழ்ச்சி கல்வியறிவை நாசம் செய்ததாகும். இரண்டாவது, மோக்ஷம் நரகத்தைக் கற்பித்துப் பேராசையையும் பெரும்பயத்தையு முண்டாக்கியதாகும். இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த நாட்டுமக்களை அழிவு முகமாகத் திருப்பி வைத்திருக்கின்றனர். இந்நிலையில் அபிவிருத்தி எப்படியுண்டாக முடியும்? கல்விச்சாலைக்குப் பணம் கிடைக்கவில்லை. தொழிற்சாலைக்கு உதவியில்லை. ரோடு வசதி, தண்ணீர் வசதிக்கு எவர் பணம் உதவுகின்ருர்? ஊர்தோறும் வைத்தியம் செய்துகொள்ளவாவது வசதியிருக்கின்றதா? இவைகளெல்லாம் ஏன் அபிவிருத்தியடையவில்லை? மேல் தேசங்களைப் போல இத்தேசத்து மக்கள் ஏன் பெரிய பெரிய ஆராய்ச்சிச் சாலைகளையும் அறிவு நிலையங்களையும் ஏற்படுத்தித் தங்கள் குழந்தைகளைப்படிப்பிக்க முன்வரவில்லை. இதை நன்கு சிந்தித்துப்பாருங்கள். இங்குள்ள சாஸ்திர இதி

காச புராணங்கள் யாவும் ஒரு முகமாக இந்த அபிவிருத்திகளை வெறுக்கின்றன. "இந்த உலகம் நிலையற்றது. மனைவி மக்கள் நிலையற்றவர்கள். தொழில்கள் நிலையற்றன. செல்வம் நிலையில்லாதது. மனிதன் உடம்பே நிலையில்லாதது. ஆதலால் கிடைக்கிற பணத்தையெல்லாம் கொண்டுவந்து அபிஷேகமென்றும் தளுகை நைவேத்தியமென்றும் கும்பாபிஷேகமென்றும் உபதேசமென்றும் அர்ச்சனையென்றும் ஆராதனையென்றும் பரிகாரமென்றும் தீர்த்த யாத்திரையென்றும் சவுண்டியென்றும் சஷ்டியப்தபூர்த்தியென்றும் எங்களிடம் கொடுத்துவிட்டுப்போங்கள். அதுதான் புண்ணியம். இப்படியெல்லாம் எங்கட்குத்தராவிட்டால் மீளா நரகத்திற்குப்போவீர்கள்" என்று எழுதித்தீர்த்திருக்கின்றன.

இந்தப்புரட்டு ஒழிந்து ஜனங்கட்கு உணர்ச்சியுண்டாகி சரியான வழியில் பணம் செலவிடப்பட்டாலன்றி நாடு அபிவிருத்தியடைய வழியில்லை. மனிதன்மேல் புல்லுருவி மாதிரி பார்ப்பாரப்பித்தலாட்டம் வளர்ந்து நாசப்படுத்துகின்றது (இந்த சமயத்தில் கூட்டத்தில் ஒரு கல் வந்து விழுந்தது) யாரோ அக்கிராரப் பக்கத்திலிருந்து ஒருவன் கல்லை எறிகிறானென்று ஒருவர் சொன்னார். ஆத்திரத்தோடு சிலர் எழுந்தனர்.) இந்தக்கல்லுக்கெல்லாம் பயப்படமுடியுமா? ஆத்திரப்படாதீர்கள். கையாலாகாதவன் கல்லைவிட்டு எறிகிறான். நான் கூறுவதற்கு ஏதாவது சமாதானம் சொல்லி சமாளிக்கக்கூடுமானால் இப்படிவரட்டும். அப்படியல்லாமல் அக்கிராரத்துப் பார்ப்பனரெல்லாரும் இருட்டில் மறைந்திருந்து கேட்டுக் கல்லெறிவது வெட்கம் கெட்டதனமல்லவா? செட்டிநாட்டில் வயிற்றுப்பிழைப்புக்குக் காத்திருக்கும் பார்ப்பனர்களின் யோக்கியத்தனமும் அவர்கள் படிப்பு எவ்வளவென்பதும் எனக்குத்தெரியும். அனேகமாக நூற்றிற்குத் தொண்ணூற்றைந்து பேருக்கு சமஸ்கிருதமும் தெரியாது. தமிழும் தெரியாது. இவ்வளவு பேர் கூடியிருக்கும் இந்தக்கூட்டத்தில் கல்லெடுத்து எறிவதென்ற ஒன்றே அவர்கள் யோக்கியதையை விளக்கவில்லையா? இவர்கள்தான் நம்மை முத்திக்கு அனுப்புகிறவர்கள்! குண்டு மருந்துகளையும் துப்பாக்கி பீரங்கிகளையும் சண்டைக் கப்பல்களையும் ஆகாயக் கப்பல்களையும் வைத்திருக்கும் வெள்ளைக்கார ராஜாங்கத்தோடு சண்டை போட்டு அவர்களை இந்த

தேசத்தைவிட்டு ஓட்டிவிடலாமென்று கருதி நமது நண்பர்கள் சுயராஜ்ஜிய இயக்கம் நடத்துகிறார்கள். வெள்ளைக்காரர் வெடிகுண்டு ஆகாயக்கப்பலில் கொண்டுவந்து ஒன்று போட்டால் பல ஊர்களைச் சாம்பலாக்கிவிட முடியும். ஆனால் இந்த ஐயர்மார்களின் கூளாங்கல்லு என்ன செய்யப்போகின்றது? இங்கு கூடியிருக்கிற நீங்கள் ஆளுக்கொரு கல்லெடுத்தால் இந்த அக்கிரகாரம் என்னவாகுமென்பது அவர்கட்குத் தெரியாது. ஆனால் அது நமது கடமையல்ல? இங்கு நடக்கும் கல்யாணத்தில் அய்யர்கள் மந்திரங்கள் சொல்லி பெண்ணையும் மாப்பிள்ளையையும் உயர ஏற்றிவிடுவதாக நம்மவர்கள் நினைக்கின்றார்கள். சுப்பியைப்போட்டுக் கொளுத்தி பசுநெய்யை அதில் கொட்டிப் புகையவைத்து பெருச்சாளி பிடிப்பதைத் தவிர வேறென்ன நடக்கிறது? அப்போது சகஸ்திர நாமத்தைச் சொல்லுகின்றனர். அது தெரியாதவர்கள் நிகண்டு படிக்கின்றார்கள். அதில் கழுதையின் பெயர் குதிரையின் பெயர் பரமசிவன் பெயர் எல்லாம் வரும். இதுவும் தெரியாதவர்கள் வானத்தில் உச்சம் பார்க்கிற பிரபவச் சுவடியை ஒப்பிக்கின்றார்கள். இது உண்மையல்லவென்று இந்த அக்கிராரத்து ஐயர்கள் சொல்லட்டும். இம்மூன்றைத் தவிர வேறு மந்திரமாவது வேதமாவது சொல்வதில்லை. திவசத்தில் சொல்பவைகளைத் தமிழில் சொன்னால் வேடிக்கையாக விருக்கும். அதற்காகத்தான் சமஸ்கிருதத்தில் சொல்லி மிரட்டுகின்றனர், 'கதலீபலம் நாளீகேரம் குளகண்டம் நிவேத்தியாபயாமீ' என்றால் பெரிய மந்திரத்தை அய்யர் கூறிவிட்டாரென்று கருதுகின்றனர். கதலீபலம் என்றால் வாழைப்பழம் என்று பொருள். நாளீகேரமென்றால் தேங்காய் மூடி என்று பொருள். குளகண்டமென்றால் வெல்லக்கட்டி. வாழைப்பழமும் தேங்காயும் வெல்லமும் சாப்பிடத் தருகிறேனென்று பொருள். இப்படியே ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்த்தால் அத்தனையும் மிரட்டலும் ஏமாற்றமும் என்பது விளங்கும். என் தகப்பனுக்குத் திவசம் கொடுக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தத் திவசத்தை யாரிடம் கொடுத்தனுப்பலாம். என் தகப்பனுருக்கு ஒழுங்காகக் கொண்டுபோய்க் கொடுக்கக்கூடியவரிடத்தில் தானே கொடுத்தனுப்ப முடியும். வெகு தூரத்தில், ஒருவராலும் போகமுடியாததும், போனவர் திரும்பி வரமுடியாததும், கடிதப்

போக்கு தந்திப்போக்கு வரவு இல்லாததும், எந்தவிதமாகவும் போய்ச்சேர்ந்த செய்தி தெரிந்துகொள்ள முடியாததுமான இடத்துக்கு எவ்வளவு நம்பிக்கையுள்ள ஆளிடம் அனுப்பவேண்டுமென்பதை நீங்களே யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். என் தகப்பனர் உயிருடனிருக்கிற வரை இந்த ஐயர்கள் அவரைச் சூத்திரன் என்று சொன்னர்கள். தங்களைத் தொட்டால் தீட்டாகுமென்றார்கள். எருமைமாட்டைத் தொட்டுப் பால்கறக்கிற இவர்கள்மேல் தவறிப்பட்டுவிட்டாலும் தீட்டாகிவிட்டதென்று கூறித் தலைமுழுகினர். என் தகப்பனர் தொட்ட சாப்பாட்டை இவர்கள் சாப்பிடமாட்டார்கள். இவர்கள் சாப்பாட்டில் கூட வைத்துச் சாப்பிடமாட்டார்கள். இவர்கள் சமைத்து உள்வீட்டில் வைத்திருக்கிற பதார்த்தத்திலோ தண்ணீரிலோ கொஞ்சத்தை யெடுத்து முன்னலே கொடுக்கமாட்டார்கள். மறந்து கொஞ்சம் கொடுத்துவிட்டால் பாக்கியுள்ளவையெல்லாம் சேஷமாகிவிட்டதென்று தெருவிற்கொட்டுவார்கள். சாகக்கிடந்தாலும் கையைத் தொட்டுப் பார்க்கமாட்டார்கள். ஆனல் அவர் செத்தவுடன் அவருக்குப் பதிலாக எனக்குத் தகப்பனென்று வந்து உட்கார்ந்து காய் கறி அரிசி பருப்புக் கேட்டால் கும்பிட்டு விழுந்து கொடுக்கமுடியுமா? அவன் வருவது ஒழுங்கா? கொடுப்பது முறையா என்று கேட்கிறேன். உயிரோடிருக்கிறபோது எருமை மாட்டிற்குக்கூடக் கீழாக மதித்து ஒத்திப்போ ஒத்திப்போ என்று சொல்லித் துரத்திய இந்தப் பேர்வழிகளிடம் சாமான்களைக் கொடுத்தனுப்பலாமா? கொண்டுபோய் ஒழுங்காகக் கொடுப்பார்களா? இவர்களிடம் கொடுத்துவிடுவதைவிட நோய்ப்பட்டு அவர் படுக்கையில் கிடந்தபோது இரவும் பகலும் கைபிடித்துப் பார்த்து மருந்துகொடுத்துப் பிழைக்க வைப்பதற்கு அரும்பாடுபட்ட டாக்டரை நம்பலாம். அல்லது இரவு பகல் விழித்து மலஜலம் எடுத்து விசிறி வீசி ஈ எறும்புகளை ஓட்டிப் படுக்கவைத்து வேட்டி துவைத்து உபசாரம் செய்த வேலைக்காரனிடம் கொடுக்கலாம். அவர்கள் உண்மையாகவே முடியுமானல் கொண்டுபோய்க் கொடுப்பார்களென்று நம்ப இடமுண்டு. பார்ப்பானிடம் கொடுப்பது எவ்விதமான ஒழுங்குக்கும் விரோதமாகுமென்று கூறுகிறேன்: அடுத்த மாதம் ஐப்பசி மாதம். காவேரிப்புராணக்

கொள்ளை நடத்த அய்யர்கள் ஆரம்பிப்பார்கள். இந்த ஊரில் எத்தனையிடத்தில் ஆபீஸ் வைக்கப்போகிறார்களோ தெரியாது. காரைக்குடியில் மட்டும் சுமார் ஐம்பது இடங்களில் அய்யர்மார்கள் உட்கார்ந்து பிடுங்கித் தின்பார்கள். உப்பு, புளி, மிளகாய், அரிசி, பருப்பு, கத்தரிக்காய், புடலங்காய் என்று அகப்பட்டதைச் சுற்றுவார்கள். ஏமாந்த பெண்கள் இவைகளைக்கொடுத்து அவர் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டு வீடு திரும்புவார்கள். புருஷனே தெய்வம் வேறு தெய்வம் பெண்கட்குக் கிடையாதென்று சொல்லப்படுகிறது. ஆனால் பார்ப்பான் காலருகில் அத்தனை பெண்களும் விழுந்து கும்பிடுகின்றனர். மேல் உலகத்தில் நடக்குமென்று சொல்வதை விளக்கிச் சொன்னால் சிலர் மூளைக்கு விளங்காமலிருக்கலாம். காவேரிப் புராண சங்கதியப்படியல்ல? கண்ணுக்கு முன்னாலே செய்யும் பகிரங்கப் புரட்டாகும். காவேரியென்பது ஒரு ஆறு. மைசூர் ராஜ்ஜியத்தில் பெய்யும் மழைத்தண்ணீர். பூமியில் புரண்டு ஓடி வருகின்றது. மேட்டூர் அணையில் பெருகி பவானி, ஸ்ரீரங்கம், திருவையாறு, மாயவரம் முதலிய ஊர்களின் வழியாக காவேரிப்பூம்பட்டினத்திற்போய்க் கடலோடு கலக்கின்றது. இனி இங்குள்ள ஒவ்வொருவரும் அறிவீர்கள். மற்றவிடங்களில் மழைபெய்து ஓடுவதைப்போலவே காவேரித் தண்ணீரும் மழைபெய்து ஓடிவருகின்றது. தலைக்காவேரி முதல் காவிரிப்பூம்பட்டினம் வரை உள்ள ஒவ்வொரு முக்கியமான ஊர்களிலும் சென்று தலைமுழுகின ஆச்சிமார்கள் பலருண்டு. எங்கும் ஒரே மாதிரித் தண்ணீராகத்தான் காவேரி ஓடுகிறதென்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது! இப்படிப்பட்ட ஒரு ஆற்றுத் தண்ணீருக்கு "துலாக்காவேரி மகாத்மியம்" என்று ஒரு ஏட்டை எழுதி வைத்துக்கொண்டு தட்டிப்பிடுங்குகின்றனர். காவேரி ஒரு பெண்ணென்றும் அவள் தவழ்ந்தாளென்றும் நடந்தாளென்றும் ஓடினாளென்றும் பெரியமனுஷியானாளென்றும் முனிவரைக் கல்யாணம் செய்துகொண்டாளென்றும் படிக்கின்றனர். இந்தப் படிப்பற்ற ஜனங்கள் அதைக் கேட்டுக்கொண்டு காவேரியம்மாள் கலியாணத்திற்குத் தங்கத்தில் தாலி செய்து பார்ப்பானுக்குத் தானம் செய்தால் புண்ணியமென்று நம்புகின்றனர். ஆற்றிலோடும் தண்ணீருக்குத் தாலி கட்டியதாகக் கதையெழுதி ஊருக்கு ஐம்பது இடத்

தில் உட்கார்ந்து படித்துப், படிக்குமிடங்களிலெல்லாம் தாலி வாங்குகின்றனர். காவேரியாற்றுத் தண்ணீரில் ஆயிரமுறை விழுந்து குளித்து அது தண்ணீர் தான் என்றறிந்த ஆயிரக்கணக்கான பெண்மக்கள் பார்ப்பானைக் கும்பிட்டு விழுந்து அவன் பெண்ணென்று சொல்வதை நம்பித் தாலிசெய்து கொடுப்பதோடு உப்பு, புளி, மிளகாய், அரிசி, பருப்பு, காய்கறி வகையறுக்களை பயபக்தியோடு கொடுக்கும் நிலைமைக்கு ஜனங்களையாக்கிவைத்திருக்கின்றானென்றால் நெஞ்சு கொதிக்கவில்லையா? ஒரு வெள்ளைக்காரப் பெண்ணிடம் இப்படி ஒருவன் புராணம் படித்தால் தனது பூட்சுக்காலால் உதைப்பாள் என்பதில் ஏதாவது சந்தேகமுண்டா? பெண்மக்கள் படிக்கக்கூடாதென்று சாஸ்திரமெழுதிக் கட்டுப்படுத்தி அறிவை வளரவொட்டாமல் தடுத்ததின் பயன் என்னவென்பது இதிலிருந்து விளங்கும். பெண்மக்களின் அறிவைக் கெடுத்து தங்கட்கு அடிமையாக்கிக்கொண்டதினால் பிள்ளைகுட்டியோடு கூடிய குடும்பமே தங்கட்கு அடிமையாகுமென்பதை யுணர்ந்தனர். இந்தக் காவேரிப் புராணமானது உப்பு, புளி, மிளகாய், தாலி, பணம் ஆகியவற்றை இங்குள்ள பார்ப்பான் பிடுங்குவதோடு போவதில்லை. இங்கிருந்து புறப்பட்டுக் காவேரியில் போய் தலைமுழுகு என்று எழுதிப்படித்துத் துரத்தியடிக்கின்றான். 'ஐப்பசி மாதத்தில் காவேரியில் முழுகாவிட்டால் பாவமென்கின்றான். உடனே பிள்ளைகுட்டியை அழைத்துக்கொண்டு விழுந்தடித்துக் காவேரிக் கரைக்கு இந்த ஜனங்கள் ஓடுகின்றனர். அங்கே தர்ப்பைப்புல்லை வைத்துக்கொண்டு அய்யர்கள் வழிமறிக்கின்றனர். "காசைக்கொடுத்து விட்டுத் தண்ணீரிலிறங்கு! இல்லையேல் பயனில்லை" யென்கின்றனர். பயந்து நடுங்கிப்போய் சங்கர்ப்பம் தர்ப்பணம் இரணிய சிரார்த்தம் முதலியவற்றைச் செய்து பணத்தைக் கொடுத்து தர்ப்பைப்புல் லைசென்ஸ் வாங்கி கையில் மாட்டிக்கொண்டு தலைமுழுகுகின்றனர். ஆற்றிலோடும் தண்ணீருக்கு அய்யர்மார் தயவென்ன என்பதே என்னுடைய கேள்வி. ஆற்றில் குளிக்கவேண்டுமென்று ஆசையிருந்தால் அசுத்தமில்லாத துறையைப் பார்த்துப்போய் முழுகவேண்டியதுதானே அறிவுடைமை! இங்குள்ள பார்ப்பனக் கூட்டம் புராணம் படித்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஆற்றங்கரைக்கு விரட்டுவதும் அங்கேயுள்ளவர்கள் அகப்பட்டதை

பிடுங்கிக்கொள்வதும் இரண்டிடத்திலும் கொடுத்துவிட்டுப் புண்ணியம் வந்துவிட்டதாக நினைத்துக்கொண்டு நமது ஜனங்கள் ஏமாந்துபோவதுமாக முடிகின்றது. இம்மாதிரியானகொள்ளை நாள்தோறும் நடந்துகொண்டுதானிருக்கிறது. பணம் நிறைய உள்ளதும் படிப்பில்லாத பெண்மக்கள் நிறைந்ததும் தண்ணீரில்லாத காடுமாகிய இந்தச் செட்டிநாட்டில்தான் காவேரிப் புராணம் படிக்க முடியும். திருநெல்வேலி ஜில்லாவிலும் கங்கைக்கரையிலும் ராமேசுவரத்திலும் காவேரிப்புராணம் படிக்கமுடியாது. படிப்பதுமில்லை. மேல்நாட்டில் ஆண்மக்கள் எவ்வளவு படித்திருக்கின்றனரோ, அவ்வளவு பெண்மக்களும் படித்திருக்கின்றனர். ஆகாயக் கப்பலிலேறிப் பதினெண்ணாயிரம் மைல் ஒரு பெண் பறக்கின்ருள். இருபது மைல் தூரம் கடலில் ஒரு பெண் நீந்துகிருள். உத்தியோகங்களில் எண்ணற்ற பெண்கள் அமர்ந்திருக்கின்றனர். மாதம் இரண்டாயிரம் மூவாயிரம் சம்பளம் வாங்குகின்ற பெண்மணிகள் பலருண்டு. எல்லாத் துறைகளிலும் எல்லா ஸ்தாபனங்களிலும் எல்லா உத்தியோகத்திலும் பெண்மக்களீடுபட்டிருக்கின்றனர். நமது பெண்மக்கள் ஓலைப்பெட்டி முடைந்து ஒரு பகலுக்கு ஒன்றரையணு சம்பாதிக்க முடியும். அல்லது சாணிதட்டி முக்காலணு சம்பாதிக்க முடியும். புருஷன் எச்சில் இலையில் தின்பது முத்திக்கு வழி! திருப்பதிக்குப் போய் மொட்டையடிப்பது மோக்ஷம்! பெண்ணுக்குப் படிப்பு எதற்கு? என்ற எண்ணந்தானே படிந்திருக்கிறது. சகோதரிகளே எச்சிலிலையில் தின்னுதீர்கள்! எச்சிலிலை மனிதர் உண்ணத்தக்கதல்ல. மடத்துச் சாமியார்களின் எச்சில் இலையில் சாப்பிடுவதற்குப் பலர் நான் நீ என்று சண்டையடித்துக்கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். எச்சிலிலையில் சாப்பிடும்படியான அடிமைப்புத்தியிருக்கிற வரையில் ஓரணுவளவுகூட முன்னேற்றமேற்பட முடியாது. ஆதலால் அவ்வழக்கத்தைவிட்டொழியுங்கள். ஒவ்வொருவரும் காலில் மிதியடி போட்டுக்கொள்ளல்வேண்டும். குடைபிடித்துக்கொள்ளல் வேண்டும். வெளிநாட்டுப் பெண்கள் எல்லாருமிப்படிச்செய்கின்றனர். அதனுல் வானமிடிந்து விழுந்துவிடவில்லை. இந்த சில பெண்கள் துணிந்து முன்வந்தால் எல்லாம் சரியாகிவிடும். சில கிழடுகள் இதைப்பார்த்துச் சிலநாளைக்கு உர் என்று உறுமும்.

சண்டை வந்தபோது எந்தப்பாட்டைப் படிக்கலாமென்று சைபிறகு ஒத்துப்போகும். ஒரு பெண் சீர்திருத்தத்தைக் கையாள்வதென்றால் கஷ்டந்தான். அவர்கள் சீர்திருத்தத்தின் நன்மைகளையுணர்ந்து முன்வந்தால் புருஷன் விடமாட்டான். புருஷன் ஒத்துக்கொண்டால் தாய், தகப்பன், மாமன், மாமி முதலியவர்கள் விடமாட்டார்கள். அவர்களும் சாடையாக விட்டுவிட்டால் சுற்றத்தார்கள் உறுமுவார்கள். அவர்கள் விட்டாலும் ஊரிலுள்ள கிழடுகள் விடமாட்டா! இது எனக்குத் தெரியும். என்றாலும் பெண்மக்கள் துணிந்து வீரத்தோடு முன்வந்தால் சில மாதத்தில் உறுமுகிறவர்களெல்லாம் உறுமிவிட்டுப் பின் அடங்கிப்போவார்களென்பது நிச்சயம். நம்முடைய சுகவாழ்விற்கு நாமே பொறுப்பாளி. நாம் சுகமாக இருப்பதைப்பார்த்துப் பொறாமையினால் கேலி செய்வார்கள். நாம் கஷ்டப்பட்டால் அப்போது பார்த்துச் சிரிப்பார்கள். இதுதான் ஊர் ஜனங்கள் செய்யும் உதவி. ஆதலால் அவர்களைப்பற்றிக் கவலைப்பட்டால் நாம் சுகமாக இருக்க முடியாது. துணிந்து சௌகரியமாக இருங்கள்!

---

# ஒன்றுக்கொன்று முரண்

## புராண ஆபாஸம்.

### உண்டான கருப்பத்தை அழிக்கும் வழி.

புராணம் உண்மை; இதிகாசம் உண்மை; எழுதிவைத்த ஏடெல்லாம் சத்தியம் என்று சில அசடுகள் சொல்கின்றன. ஒன்றும் விளங்காமல் இருட்டில் கிடந்து அவையெல்லாம் உண்மையென்று கூறி இடர்ப்படுவார்க்கு 'சர்ச்லைட்' போட்டுக்காட்டினால் நலமாக இருக்குமல்லவா? பொறுமையாகப்படியுங்கள்! கோபப்படாதீர்கள்! புராணங்களைக் கிளறினால் குப்பையைத் தவிர வேறில்லை. நான் அதில் காலத்தைக் கடத்தப்போவதில்லை. ஒவ்வொன்றிலும் மச்சம் காட்டுகிறேன். சைவசமயாச்சாரியாருள் ஒரு முக்கியமானவர் அப்பர் சுவாமிகள். தேவாரப்பாட்டுகள்தான் சைவத்தில் சிறந்தனவென்று சொல்லவேண்டியதில்லை. வைணவரோடு பெரிய

வர்கள் கூடிக் கயிறு சாத்திப்பார்த்தனராம். அதில் வந்த பாட்டைக்கொண்டு வெற்றியடைந்ததாகக் கதை. அந்தப்பாட்டு கடவுளைப்பற்றி என்ன சொல்லுகிறதென்றால்,

"என்னின் அல்லான், ஒப்புடையனல்லன் ஒருவனல்லன் ஓர் ஊரனல்லன் ஒருவமன் இல்லி, அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும் அவன் அருளே கண்ணாகக் காணினல்லால், இப் படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்டொணாதே"

என்று கூறுகிறது. கடவுளுக்கு உருவமில்லை குணமில்லை நிறமில்லை. இதே கடவுளைப்பற்றி, தாயுமானவர்,

"அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளோடு நிறைந்தது எது? தன் அருள்வெளிக்குளே தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க் குயிராய்த் தழைத்ததெது? மனவாக்கினு தட்டாமல் நின்றதெது?" என்றும், பலவாகக் கூறினர். கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாத பரவெளியாக இருப்பது கடவுள் என்று பலரும் கூறியிருக்கின்றனர். அந்தக்கடவுளைப்புராணக்காரர் படுத்தும் பாட்டைப்பாருங்கள்!

காஞ்சிபுராணமென்று காஞ்சிபுரத் தலபுராணமொன்று இருக்கிறது. இதனைப்பாடியவர் லேசான ஆளல்ல. மகாமகா மகிமைபெற்ற சிவஞான யோகிகளாவர். அப்பெரியார் திருவாய் மலர்ந்த காஞ்சிப்புராணத்தில் கடவுளைப்படுத்தியிருக்கிற பாடும் ஆபாஸமும் எப்படியிருக்கிற தென்பதற்கு ஒரே ஒரு சாம்பிள் தருகிறேன். அதில் சுரகரீசப்படல மென்பதொன்று.

ஷ படலம் பாட்டு 27.

"... ...கந்தனை நல்கவேண்டிச்,
சீரிமயத்து மடப்பிடியைத் திருமணஞ்
செய்தபின் எய்தி அங்கண்,
ஏரியல் அந்தப்புரத்தின் மன்னி
இன்பக்கலவி நடத்தலுற்றான்"

பரமசிவன்—உருவமில்லாத பரம்பொருளான பரமசிவன் சுப்பிரமணியசுவாமியைப் பெறுவதற்காகப் பார்வதியைக் கல்யாணம் செய்துகொண்டு அந்தப்புரத்திலே கலவி நடத்த ஆரம்பித்தார் என்று இப்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது.

—ஷை படலம் பாட்டு 28.

"வண்டுஇமிர் கூந்தல் இமயவல்லி வனமுலைதாக்க மகிழ்ந்து புல்லிக், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுப் பன்னுள் கலவிப் பெருநலம் துய்க்கும் காலை, அண்டர் உணர்ந்து வெருவி அஞ்சி அம்பிகை தன்பால் கருப்பவீறு, கொண்டிடுமுன்னம் சிதைவு செய்யும் கொள்கையின் அங்கியை யேவினுர்கள்"

வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பார்வதியின் அழகிய தனங்கள் அழுந்துவதனுல் மகிழ்ச்சியடைந்து கட்டித் தழுவி அவளைக்கண்டும் இசைகேட்டும் அதரபானம் உண்டும் உயிர்த்தும் கட்டிப்பிடித்தும் பலநாள் கலவியாகிய பேரின்பத்தை பரமசிவன் நடத்தினுர். அதனைத்தேவர்கள் அறிந்து நடுங்கிப் பயந்து அம்பிகை வயிற்றில் கருப்பம் முற்றுவதற்கு முன்னுல் சிதைத்து விடவேண்டுமென்று கருதி அக்கினிபகவானை ஏவிவிட்டார்கள். இந்த இரண்டு பாட்டையும் கவனிக்கவேண்டும். சுப்பிரமணியனைப்பரமசிவன் பெறவேண்டுமானுல் நினைத்தால் முடியாதா? கலியாணங்கட்டிக் கலவிசெய்தா பிள்ளைபெறவேண்டும்? கலவியை ஒரு மணிநேரம் செய்தால் போதாதா? பலநாள் விடாமல் செய்யவேண்டுமா? அப்படிச் செய்து கந்தக்கடவுளை உண்டாக்க வேண்டுமென்று பரமசிவன் முன்வந்து மும்முரமாக நிற்கும்போது அதனுலுண்டாகும் கருப்பத்தை அழிக்க மற்றதேவரெல்லாங்கூடி முயற்சிக்கலாமா? கர்ப்பத்தை அழிப்பது ஒழுங்கா? அதிலும் பார்வதி கருப்பத்தை ஒழிக்கத் தேவர் முன்வரலாமா? இதுதேவர்கள் செய்யக்கூடிய காரியமா? இப்போதைய வெள்ளைக்காரர் ஆட்சியில் இந்தத்தேவர்களிருந்து இப்படிக்கருப்பத்தைச் சிதைவுசெய்தால் பெருந்தண்டனைக் குள்ளாவார்களென்பது நிச்சயமாகும். பரமசிவனும் பார்வதியும் கலவிசெய்தமாதிரியை ஒரு யோகீசுவரர் விளக்கிக் கூறுகிற முறை கவனிக்கத்தக்கது. அக்கினிபகவான் போய்ப்பார்த்து சந்தர்ப்பம் நன்றுகவில்லையென்று திரும்பி,

— ஷை பாட்டு 29.

"நீவிர்களே அவணெய்தி ஊறுநிகழ்த்திடுமின்களெனக்கரைந்தான்"

நீங்களே அந்த இடத்துக்குப்போய்க் கருவை அழித்துக்கொள் —ன்றுன். உடனே அரி அயன் முதலிய தேவரெல்லாம்

புறப்பட்டு மந்தரமலையில் நின்று கும்பிட்டுக்கதறினார்கள். உடனே அதனை உணர்ந்து,

— ஷை பாட்டு 30,

"தெரிவையோடு ஆடும் புணர்ச்சிநாப்பண் சென்றனன் வெற்றரையோடும் அங்கண்"

பரமசிவன் பார்வதியோடு புணர்வதிலிருந்து இடையில் பிரிந்து அம்மணமாகப்புறப்பட்டு வந்தான் என்று இந்தப்பாட்டில் சொல்லப்படுகிறது. இதோடு யோகீசுவரர் நிற்கிறாரா? இல்லை.

— ஷை பாட்டு 35.

"வேண்டுவகூறுமின் உங்கட்கு இன்னே மேவர நல்குதும் என்று அருள, ஈண்டியமாயனை உள்ளிட்டோர்தம் ஏவலினால் முகன் ஏத்தி எந்தாய், மாண்ட மலைமகள்பால் கர்ப்பம் வாய்ப்பது வேண்டிலர் மால் முதலோர், காண்டக வந்தனர் மேல் இயற்றும் கடன் அறியேங்கள் எனக்கரைந்தான்"

இப்பாட்டில் பரமசிவன் உங்கட்கு என்ன வரம் வேண்டும் இப்பொழுதே தருகிறேன் என்று சொல்ல, மகாவிஷ்ணு முதலியோர் பார்வதி வயிற்றில் கர்ப்பம் வருவதை விரும்பவில்லை என்றனர். இதைக்கேட்ட பரம்பொருள், அப்படியானால்

— ஷை பாட்டு 36.

"பனித்தமுத் துருக்கியன்ன வெண்புனல் பருகுமின்கள், எனப் புகன்று அருள வல்லே எரி இறை அங்கை ஏற்றான்"

குளிர்ந்த முத்தை உருக்கினாற்போன்ற வெண்மையான நீரைக்குடியுங்களென்று சொல்லி வெளியே விட்டார் பரமசிவன். அதனை அந்த க்ஷணத்தில் கையையேந்தி வாங்கினான் அக்னிபகவான்.

— ஷை பாட்டு 37.

"எண்ணரும் வருடங்காறும் ஆயிரம் இரவிப் பொற்பின், அண்ணல்பால் நின்று வீழும் அதனை அவ் அனலோன் உண்ண விண்ணவர் எவர்க்கும் அந்நாள் மேவருங் கர்ப்பம் நீட்டித் துண்ணெனத்துளங்கி வெப்பு நோயினில் தொடக்குண்டார்கள்"

எண்ணமுடியாத வருஷமாக ஆயிரம் சூரியனின் தன்மையைப்பெற்றுப் பரமசிவனிடத்திலிருந்து பெருகிவிழுகின்ற அந்

திரியத்தை உண்டவுடன் தேவர்கள் யாவரும் கர்ப்பத்தையடைந்தார்கள். மேலும் அதனுடைய உஷ்ணத்தைத் தாங்கமுடியாமல் வெப்பு நோயினல் கஷ்டத்துக்கு ஆளானுர்கள். பரமசிவன் பாதியில்பிரிந்து நிர்வாணமாக வந்து தேவர் வேண்டுகோளுக்கிணங்கி அக்னிபகவான் கையில் இந்திரியத்தை வார்த்தாரென்றும் அதனைக்குடித்து ஆண் தேவரெல்லாரும் கர்ப்பம் கொண்டு பிள்ளைப் பெற வழியில்லாமல் துயரப்பட்டார்கள் என்றும் ஒருயோகீசுவரர் எழுதலாமா? இதனைத்தானே ஆணும் பெண்ணும் கூடியிருக்கச் செய்து கோவில்களிலும் மடங்களிலும் சாம்பல் பத்தர்கள் படிக்கின்றனர். இதனைக் கேட்கும் ஜனங்களுக்கு பக்தியா வரும்? என்ன உணர்ச்சி வருமென்பதை உணருங்கள்! இப்படியே ஒவ்வொரு புராணத்திலும் எழுதிவைக்கப்பட்டுப் படித்துச் சுண்டற் கடலையும் வடையும் கொடுத்துக் கேட்கச் சொல்கின்றனர். ராமாயணம் படித்து சீதா கலியாணத்தன்று தாலி செய்து கட்டிக் கல்யாணத் திருவிழா நடத்துகிற மாதிரி இந்தத் திருவிழா நடத்த முன் வராமற்போனதே சந்தோஷமல்லவா? இந்தத் திருவிழாவையும் கடவுள் திருவிளையாடலாதலால் செய்துகாட்ட சிவபக்தர் தயாராக இருப்பார்கள். ஆனல் பொது ஜனங்கள் இன்னும் அந்த லெவலுக்கு வரவில்லை. இன்னும் சில ஆண்டுகள் சைவர்கள் வசம் விட்டால் கட்டாயம் கொண்டுவந்துவிடுவார்கள். நமது சிவஞானம் பெற்ற யோகீசுவரர் இவ்வளவோடாவது விட்டாரா? இல்லை. மேலே போகிறுர்.

—ஷை பாட்டு 40.

"சுரகரீசத்தின் பாங்கர்ச் சுரகர தீர்த்தமுண்டால், விரவிநீர் படிந்தோர் பாவ வெப்புநோய் முழுதும் நீங்கும், இரவிநாட் கழிய நன்றும் நீர் அவண் எய்தி நம்மைப், பரவிநீ ராடில் இந்த வெப்பு நோய் பாறும் காண்மின்"

—ஷை பாட்டு 41.

"ஆயிடை நீங்கிப் பின்னர் மேருவை அணுகி அங்கண், மேய இக் கர்ப்பந்தன்னை விடுமின்"

காஞ்சிபுரத்தில் சுரகர தீர்த்தமென்று ஒன்றிருக்கிறது. அதில் ...வர்கள் இம்மாதிரி உஷ்ண நோயைவிட்டு நீங்குதல் கூடும்:

நீங்கள் போய்க் குளியுங்கள். அப்பால் அங்கிருந்து மேரு மலைக் குச் சென்று அங்கே உங்கட்கு உண்டாகியிருக்கும் கர்ப்பத்தை விடுங்கள் என்று பரமசிவன் சொன்னார். அப்படியே தேவர் செய்தனர்.

இப்பொழுது இந்தக் கதை எதற்காகக் கட்டப்பட்டதென் பது விளங்கும். ஒன்று மகாவிஷ்ணு முதலிய தேவர்களைக் கேவ லப்படுத்தவேண்டுமென்பது. மற்றொன்று காஞ்சீபுரத்திலிருக்கும் சுரகரீசமென்னும் குளத்துக்குப் பெருமை சொல்லவேண்டுமென் பது. இந்த இரண்டு நோக்கத்தில் பரமசிவனையும் அந்தப் பரம் பொருளின் தத்துவங்களையும் மறந்து கேவலப்படுத்திக் காமங் கொண்டலையும் மனிதனையும் மிருகத்தையும்விடக் கேவலமாக எழுதித் தள்ளிவிட்டார். கலவியில் இடையே பிரிந்து நிர்வாண மாக வந்து முப்பத்து முக்கோடி தேவர்கட்கு முன்னால் சிவபெரு மான் மானமின்றி நின்றதும், இந்திரியத்தை வார்த்ததும் ஒரு யோகீசுவரரால் பாடப்பட்டிருக்கிறது கவனிக்கத்தக்கது. இந்தப் பரிதாபகரமான புராணங்களைப்பற்றிக் குறைசொல்லாமல் எப்படி இருக்க முடியும்? இதைப் படித்த ஒருவன் எப்படிக் கடவுள் திரு வாக்கென்று பொறுத்திருக்க முடியும்? ஜனங்களுக்குப் படிப்பில் லாமல் செய்துவிட்டுப் புராணங்கள் கடவுள் வாக்கு! கேள்! பொய் யென்று சொல்லாதே! ஆபாஸமென்றால் பாவம்! மறுத்துச்சொல் பவன் நாஸ்திகன்! அவன் பேச்சைக் கேளாதே! எனக்குப் பாத காணிக்கை கொடு! என்று மிரட்டுவது யோக்கியதையா என்று கேட்காமலிருக்க முடியுமா? எத்தனை நாளைக்குத்தான் இந்த நாற் றத்தைக் கட்டியழுவது?

இந்தப் புராணத்தைத் தமிழில் பாடும்படி காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் சொல்லி அருளினாராம். கருச்சிதைக்கிற படலத்தையும் கருச் சிதைக்கிற குளத்தையும் பற்றிக் கடவுள் எதற்காகப் புராணம் பாடச்சொன்னாரென்பது யோசிக்கத்தக்க தல்லவா ? விதவைகளுக்கு விவாகமில்லாமற் செய்யப்படும்போது கர்ப்பமுண்டானால் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி யொழித்துக்கொள் ளட்டுமென்பதற்காகவா? சிவபக்தர்கள் செய்யும் விபசார தோஷத் தால் ஏற்படும் கர்ப்பங்களை அழிக்க வசதியாக இருக்கட்டுமென்றா? இவையெல்லாம் சிறிது பகுத்தறிவைக்கொண்டு பார்த்தால் எவ்

வளவு பித்தலாட்டடங்களும் கொடுமையும் அசிங்கமும் நாட்டுக்கு இழைக்கப்பட்டிருக்கின்றன வென்பது விளங்கும். இவற்றை ஒழிக்கவேண்டுமென்று சொன்னால் ஏறி விழுவதில் என்ன பிரயோசனம்?

—— "சர்ச் லைட்"

# சடங்குகள்.

ஸ்ரீமதி நீலாவதி-ராம சுப்பிரமணியம் எழுதுவது.

அர்த்தமற்ற, ஆபாசமான, சடங்குகளினால் விளையும் தீமைகளை எண்டெடுத்துக்காட்டி விவரிக்க இடம் போதாதென்றாலும் சுருக்கமாகவாவது சிறிது சொல்லலாமென்று நினைக்கின்றேன். நயவஞ்சகப்பார்ப்பனர்கள், சுயநலங்கொண்டு பிடுங்கித் தின்னவே பலசடங்குகளை ஏற்படுத்தினார்களென்று உறுதியாய்க்கூறுவேன். பார்ப்பனரல்லாதாராகிய நம்மக்கள் பிறந்தது முதல் இறக்கும்வரையிலும், இறந்தபின்னும் சடங்குப்பிடுங்கல்களால் சூழப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய சடங்குகளின்போது, பார்ப்பன வஞ்சகர்கள் அடிக்கும் பகற்கொள்ளையை நினைக்கும்போதே, நெஞ்சு திடுக்கிடுகிறது. ஒரு குழந்தை பிறந்தால், அதிலிருந்து சடங்கு தொடங்கப்படுகிறது. அப்பிள்ளை வயதாகி, வாலிபமாகி, வயோதிகமாகி, இறந்தும் விடப்படுவது இல்லை. குழந்தை பிறந்த பதினோரும் நாள் வீட்டுக்கழைக்கப் பார்ப்பான் வந்து சடங்கு செய்தே தீரவேண்டும். பார்ப்பான் வந்து கொள்ளையடித்துக் கொண்டு போகாவிட்டால், வீட்டிலுள்ள தீட்டு கழியாதாம். என்னே! நம்மக்களின் மூடத்தனம்? பொதுவாக பார்பபனரல்லாத மக்களின் மூடத்தனந்தான் இவ்வாறென்றால் பெண்மக்களின் மூடத்தனமோ அம்மம்ம! விவரிக்க வியலாது. பார்ப்பான் வந்து தீட்டைக்கழிக்குமுன் இவர்கள் சட்டிபானையெல்லாம் தூக்கியெறிந்து பாதித்தீட்டைக் கழித்து விடுகிறார்கள். பெண்கள் ருதுவானாலும் இவ்விதமே தீட்டுக்கழிக்கும் சடங்கு நடத்தப்படுகின்றது. இவ்விதம் மேற்குறித்த வைபவங்களைத் தீட்டுத்தீட்டு எனப்படுவது என்ன என்பதே எனக்கு விளங்கவில்லை. குழந்தை பிறந்த வீட்டில் என்ன தீட்டு ஒட்டிக்கொண்டிருக்கிறதோ? எவ்

விதம் ஒட்டிக்கொண்டிருக்கின்றதோ? அதுவும் எனக்குத் தெரிய வில்லை. பிறப்புக்கும் இறப்புக்கும் மற்ற ஒவ்வொரு சுப அசுப காரியத்திற்கும் பார்ப்பான் வந்து சடங்குகள் ஆகவேண்டுமென் றே வைதீக உலகம் தன் ஆட்சியின்போது சட்டம் செய்துவிட் டது. அச் சட்டத்தை நம் மக்களும் அறியாமையால் நம்பிவிட் டனர். தேக சிரம மில்லாமல், நகத்தில் அழுக்குப்படாமல் தம் உடலுழைப்பு இல்லாமல், பார்ப்பனரல்லாதார் பொருளைக் கொள்ளைகொண்டு சுகமாக வாழ்வதற்கே பார்ப்பனர்கள் பல போலி ஆபாசச் சடங்குகளை உண்டாக்கினர்களென்றும் உண்டா க்கி யிருக்கின்றார்களென்றும் உலகத்திற் கெடுத்துக் கூறி, 'உலக மக்களை நோக்கி, மூட நம்பிக்கை கொண்டு பார்ப்பானுக்கு அள் ளிக் கொடுக்காதீர்கள்; ஏமாறுதீர்கள் என்று உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, பார்ப்பனர்களுக்கு, 'இனியும் இம்மாதிரி ஏமாற்றிக் கொள்ளையடிக்காதீர்கள்! உழைத்துச் சாப்பிடுங்கள். ஏமாற்றும் வழக்கத்தை விட்டுவிடுங்கள்.' என்று சொல்லுவதா லேயே சுயமரியாதைக்காரர்களாகிய எங்களுக்குப் 'பார்ப்பன துவேஷிகள்' என்ற பட்டப் பெயரும், 'பார்ப்பானைக் குற்றம் சொல்லுகிறவர்கள்' என்ற பட்டப் பெயரும் வருகின்றன. வரு கின்றனவென்று ஏன் சொல்ல வேண்டும்? வந்தேவிட்டது. ஆனால், இத்தகைய பட்டங்களைக் கண்டு நாங்கள் பயந்தோடுவதா யிருந்தால் எங்களால் ஆகக் கூடிய காரியம் ஒரு கடுகளவு கூட இராதென்பதை நன்கு அறிந்துதானிருக்கிறோம். அதோடு, இதனைப் பார்ப்பனர்களுக்கும். பண்டித சிகாமணிகளுக்கும் அறி வித்துக்கொள்ளுகிறோம். நிற்க, ஒரு கல்யாணத்தை எடுத்துக் கொண்டால் மூன்று நாள், ஐந்து நாள், எட்டு நாள் என்று வைத்துக்கொண்டு அந்த ஒவ்வொரு நாட்களிலும், வந்து பார்ப் பான் செய்யும் அர்த்தமற்ற சடங்குகளுக்கு அளவேயில்லை. சடங் கின்போது ஏதோ பாழும் மந்திரங்களைச் சரியாய்ச் சொல்லித் தொலைக்குமுன்னேயே "அதற்கு வை தட்சணை; இதற்கு வை தட்சணை" என்று தட்டிப் பறிப்பதிலேயும் பக்கத்திலுள்ள பருப்பு அரிசி முதலியவைகளை மூட்டை கட்டுவதிலேயும் கண்ணு யிருக்கிறன். பார்ப்பானில்லாமல் சடங்குகளில்லாமல் கல்யா ணம் செய்யக்கூடாதென்றும், அப்படிச் செய்தால் ஆகாதென்

றும் நம்மக்கள் சூதறியாமல், வாதாடுகின்றனர். பார்ப்பான் வந்து நாள் நட்சத்திரம் பார்த்து ஐம்பத்திரண்டு சாத்திர சடங்குகளோடு செய்யும் கல்யாணங்கள், புருடனிறந்தும், பெண்சாந்தி யிறந்தும், பிள்ளையில்லாமலும், தம்பதிகள் ஒருவருக்கொருவர் கீரியும் பாம்புமாகவும் ஏன் ஆகின்றனர்? இதைப்பற்றிப் பேசினால், அதற்குத் தத்துவார்த்தமாக 'அதற்கு யாரென்ன செய்வது? அவரவர் விதிப்படி எல்லாம் நடக்கிறது.' என்கின்றார்கள். அப்படியே சரி! விதிப்படி நடப்பது நடந்தே தீருகிறது. அதற்கு இடையில் இந்தக் கோளாறுகளெல்லாம் ஏன் செய்யவேண்டும்? ஏன் பார்ப்பானுக்குக் கொட்டிக் கொடுக்கவேண்டும்? என்பது தான் எனது கேள்வி! பாப்பானில்லாமல் வேறு எவராயிருப்பினும் சடங்குகள் கூடவே கூடாது. அர்த்தமற்ற ஆபாசமான சடங்குகளை ஒழிக்கத் துணிந்து முன்வர வேண்டுமென அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

## சுயமரியாதை இயக்கம்.

திருவாளர் அ. பொன்னம்பலனார் எழுதுவது.

சுயமரியாதை இயக்கம் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்யவே தோன்றியிருக்கிறது. கல்வி அறிவில்லாத மக்கள் இந்நாட்டில் கோடிக்கணக்காக வசிகின்றார்கள். வயிற்றுக்கு உணவின்றி, இடுப்புக்கு ஆடையின்றி வசிக்க இடமின்றி, வாடும் மக்கள் தொகை கணக்கிட முடியாததாகும். வயிற்றுப் பிழைப்புக்காக இங்கு பிழைக்க வகையின்றிப் பெண்டு பிள்ளைகளோடு கப்பலேறிப் பிற நாடு சென்று கூலி வேலை செய்து மடிகின்றார்கள். இங்குள்ள பல தொழிலாளிகளும், பணக்காரர்களும், விவசாயிகளும், தங்கள் முயற்சியோடு சம்பாதித்த பொருளை வீணாக கோவில் குளம் சத்திரம், உற்சவம், கும்பாபிஷேகம், மடம், திருப்பணி, அபிஷேகம், ஆராதனை, கடவுள் வழிபாடு, பிரார்த்தனை, சடங்கு, கல்யாணம், புதுமை, திதி, பரிகாரமென்றெல்லாம் கண்மூடித்தனமாக சிறிதுகூடச் சிந்தியாமல் செலவு செய்து பார்ப்பானிடம் மோக்ஷத்திற்குக் கொண்டுவிடுமாறு காணிக்கை செலுத்திக் கைகட்டி நிற்

கின்றனர். பார்ப்பனர்கள் தாங்கள்தான் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் யாவரும் சூத்திரர்கள், (அடிமைகள், தாசி மக்கள்) என்று கூறி ஏமாற்றிவருகிறார்கள். பெரும் பணக்காரர்கள் கூடத் தங்களிடம் கூலி வேலை செய்யும் பார்ப்பானை சாமி சாமி என்றழைக்கின்றனர். இரு கையாலும் வணங்குகின்றனர். ஆனால் பார்ப்பனர் மட்டும் இடது கையைத் தூக்கிக் காட்டி வாழ்த்துகின்றனர். ஒரு செட்டியாரிடம் பெட்டியடியில் கணக்கு வேலை பார்க்கின்றவனும் மோட்டார் ஓட்டுபவனும் வீட்டுவேலை செய்கின்றவனுமாகிய பார்ப்பான் தம் எஜமானராகிய செட்டியாரை சமத்துவமாக நடத்துவதில்லை. இழிவாகவும் கேவலமாகவுமே கருதுகிறான். இத்தகைய கொடுமைகள் ஒழியவேண்டும். புரட்டும் ஏமாற்றும் ஒழியவேண்டும். உழைக்கின்ற மக்கள் வயிறார உண்டு உடுத்தி சமத்துவமாக இன்ப வாழ்வு வாழவேண்டும். அறியாமையும் அர்த்தமற்ற மூடப் பழக்கவழக்கங்களையும் அகற்றி மக்கள் உண்மையுணரவேண்டும் என்றுதான் சுயமரியாதை இயக்கம் கூறுகின்றது. இதனைச் சில பார்ப்பனப் புரோகிதர்களும் குருக்களும் மடாதிபதிகளும் சிவநேச பக்தர்களும் உண்மையுணராமல், "ஆஸ்திகம் போயிற்று, நாஸ்திகம் தோன்றிற்று, மதம் போச்சு, சமயம் போச்சு, கடவுள் போச்சு, சாஸ்திரம் போச்சு" என்றெல்லாம் வெறியால் பிதற்றுகின்றார்கள். நாம் கூறுவதைக்கேட்டு அவை சரியென்று தோன்றினால் பின்பற்றுங்கள். உங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும்படி கட்டாயப்படுத்த நாங்கள் வரவில்லை. அது மாதிரி எவர் கூறினும் நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள். இந்நாட்டில் பிறந்த கோடிக்கணக்கான மக்களைத் தீண்டாதவரென்று கூறி மலத்திலும் கேவலமாக இழிவுபடுத்தி ஒதுக்கிவைத்து ஒரு மனிதனை சாமியென்றும் கடவுளென்றும் மதித்து அவன் காலில் விழுந்து வணங்குவது முறையா? நீதியா? இந்நாட்டில் எத்தனை கோடி ஜாதிப் பிளவுகள்? சமயப் பிளவுகளெத்தனை? கடவுள் சண்டைகள் எத்தனை? மதச்சண்டைகளெத்தனை? இவ்வளவும் அறியாமையினாலேதான் வளர்கின்றன. அறியாமையும் அடிமைத்தனமும் என்று ஒழிகின்றனவோ அன்றுதான் மக்கள் விடுதலை பெற முடியும். இந்நாட்டில் பிறந்த எல்லா மக்களும் கல்வி கற்க முடியவில்லை. பசியால் வாடும் மக்களுங்கு சி

யைப் போக்க இடமில்லை. உழைக்கின்ற மக்களுக்கு உழைப்புக் கேற்ற கூலி கிடைப்பதில்லை. ஆனால் பார்ப்பனர் மட்டும் பெண்டு பிள்ளைகளுள்பட கல்விகற்று உடலசையாமல் ஊர்ச்சத்திரங்களில் வயிற்றை நிறைத்துக்கொண்டு வழிப்பிரயாணச் செலவிற்கு தக்ஷிணையும் வாங்கிக்கொண்டு இந்த நாடு முழுதும் சுற்றி மக்கள் வாழ்க்கையின் உழைப்பைப் பலவகையாலும் கொள்ளையடிக்கின்றனர். பார்ப்பான் செய்கின்ற ஒவ்வொரு அக்கிரமமும் புரட்டும் அநியாயக் கொள்ளையும் அர்த்தமற்ற சடங்கும் அடிமைத்தனமும் வேத வாக்கென்றும் வேதியன் கடமை என்றும் கூறப்பட்டு நம்பி ஏமாறப்படுகிறது. பார்ப்பானுக்குத் தர்மஞ்செய்வது மிகமிகப் புண்ணியமென்று கூறி இன்னும் பெரும்பொருள் செலவு செய்யப்படுகின்றது. எதற்காகக் கொடுப்பதென்று இன்னும் விளங்கவில்லை. பார்ப்பானுக்கே கொடுத்தழுத தஞ்சாவூர் ராஜாவம்சம் இருக்குமிடந் தெரியாமல் அழிந்து நாசமாயிற்று. அப்படியே அள்ளிக் கொடுத்த மதுரை திருமலை நாயக்கர், மங்கம்மாள் குடும்பம் எங்கு மறைந்ததென்றே தெரியவில்லை. சேர, சோழ, பாண்டியரென்னும் மூவேந்தர்களும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்த பொருளும் எழுதிவைத்த மானியங்களும் சோறுபோட்ட சத்திரங்களும் கட்டிவைத்த கோயில்களும் வெட்டிய தீர்த்தங்களும் இருக்க, அவர்கள் மறைந்த விடம் தெரியவில்லை. அன்றுமுதல் இன்று வரை அதைத் தின்றுகொண்டு பார்ப்பார ஜாதிமட்டும் அப்படியே மறையாமலிருக்கின்றது. இன்னும், ஒரு கோயிலை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குச் செலவு செய்பவர் யார்? அத்திருப்பணி வேலையை பல கஷ்டத்தோடு கட்டி முடிப்பவர் யார்? ஒரு பார்ப்பானோ ஒரு பார்ப்பாத்தியோ கோயில் கட்டும்போது வேலைசெய்ய வருகிறார்களா? எல்லாம் கட்டி முடிந்தவுடன் கல்லுச்சாமிக்கு உயிர்கொடுக்கவும் கும்பாபிஷேகம் செய்யவும் கோயிலைப் பூட்டித் திறவுகோலை வாங்கிக்கொண்டு கோயில்கட்டியவர்களுள்பட வெளியில் போய்விடுமாறு சொல்லி பார்ப்பார ஜாதி மட்டும் கோயிலுக்குள்ளேயே குடியிருந்து ஏகபோகமாக அனுபவித்து வருகின்றார்களே? ஏன்? ஒரு கும்பாபிஷேகத்திற்குத் தொலைக்கும் பணம் எவ்வளவு? அத்தனையும் பார்ப்பார ஜாதி ...ப் பாயாசத்தோடும் வடையோடும் புதைக்கப்படுகிறதே

தவிர வேறென்ன? செலவு செய்பவர்கட்கும் சிவநேசர்கட்கும் கிடைப்பன யாகசாலைப் புகையும் மண்டையிடியும் தவிர வேறென்ன கிடைத்தது. கப்பலேறிக் கஷ்டப்பட்ட பணத்தை இப்படி யேன் கண்மூடித்தனமாகச் செலவு செய்யவேண்டும்? சுவாமி நம்மைக் கோயில் கட்டு, எனக்குக் குளம் வெட்டு, அபிஷேக ஆராதனை செய் யென்றெல்லாம் கூறுகிறாரா? மூட நம்பிக்கை தவிர வேறென்ன? கடவுளென்று ஒன்றைக் கல்லினுற் செய்து வைத்து அதன் தலையில் எண்ணெ, பால், தயிர், நெய், தேன், பழச்சாறு ஆகியவைகளைக் கொட்டி அபிஷேகம் செய்கின்றனர். அதுவும் அசையாமல் ஆடாமலிருக்கின்றது. உணர்ச்சி இருந்தால் ஒப்புக்கொள்ளுமா? சாப்பிடும்பொருளை மனிதன் தலையில் விட்டால் தலையில் விடுபவன் பல்லையுடைத்து விடுவான். கடவுள் என்ற கல் தலையில் கண்மூடித்தனமாகக் கண்டவற்றைக் கொட்டித் தண்ணீர்விட்டுக் கழுவிவிட்டால் சாக்கடைத் தண்ணீர்போல் ஆபாசத்தோடு தூம்பு வழியாக வருகிறது. அதை பயபக்தியோடு அள்ளிக் குடித்து விட்டுப் பிள்ளைகுட்டிகளையும் குடிக்கச் செய்கின்றூர்கள். சுவாமிக்குத் தீபாராதனை யென்றும் நைவேத்திய மென்றும் ஒரு கல்லுச்சாமிக்கு ஆயிரம்படி அரிசியில் புளியஞ்சோறு, பொங்கல் சோறு, தயிர்சோறு, பாயாசம், வடை, தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு இத்தனையும் அதன் முன்னுல் வைத்து அங்கு கூடியுள்ள அய்யர்மார் வயிற்றில் கொட்டவேண்டியது. தின்றுவிட்டு சந்தனம் தக்ஷணை வாங்கிக் கொண்டு மண்டபத்திலேயே படுத்து மலைப்பாம்பைப்போல் புரளவேண்டியது. சுவாமிக்குத் திருக்கல்யாணமென்று வருடாவருடம் கட்டிய தாலியை அறுத்துவிட்டு புதுத்தாலி கட்டி உற்சவம் கொண்டாடுகின்றனர். ஒரு செப்பு விக்கிரஹத்தில் செய்த பொம்மையை மரக்கட்டையில் குதிரை செய்து அதன்பேரில் வைத்துக் கட்டிப் பட்டாடை வைர நகை மலர்மாலையால் சிங்காரித்து சுவாமி வேட்டையாடப் போகின்றூரென்று அதன் கை காலை நீட்டியும் மடக்கியும் வைத்துக் கட்டிக் கையில் கடிவாளமும் ஈட்டியும் கொடுத்து அதன்மேல் ஒரு பார்ப்பானும் ஏறிக்கொண்டு பைத்தியக்கார ஆசாமிகளாகவிருக்கும் பலர் தோளில் தூக்கி வைத்து ஓடவும் ஆடவும் செய்கின்றனர். பொம்மைச் சாமிக்கு

வாகனம் பொய் வாகனமாகத்தான் வேண்டியிருக்கிறது. எந்த வாகனத்தை எந்தக் கடவுள் விரும்பினாலும் அந்த வாகனத்தை உயிரோடு கொண்டுவந்து உற்சவம் நடத்த வேண்டும். அம்பிகை சிங்க வாகனத்தில் பவனி வருவாளென்றால் ஒரு சிங்கத்தைப் பிடித்துவந்து சுவாமியையும் வைத்துக் கட்டி அய்யரையும் அதோடு வைத்துக் கட்டி சிவநேசர்கள் கையில் பிடித்துக் கொண்டு ஊரைச் சுற்றி வர வேண்டும். அது சுற்றினாலும் சரி. காட்டுக்கே ஓடிவிட்டாலும் சரி. அதுதான் முறை. சுவாமி குதிரை வேட்டையாடுகின்றார் என்றால் சுவாமியைக் குதிரையில் வைத்து அசையாமல் கயிறு போட்டுக் கட்டி கோடிக்கணக்கான வைர நகைகளைப் பூட்டிக் காட்டுக்குள் ஓட்டி விட வேண்டும். வேட்டை முடிந்தவுடன் சுவாமி குதிரையோடு வீட்டிற்கு வரட்டும்! மூன்று ராத்தல் வெங்கலப் பொம்மை விக்கிரஹத்தை முப்பதினாயிரம் ராத்தல் கனமுள்ள தேரில் (ரதத்தில்) வைத்துப் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கூடி பய பக்தியோடு இழுக்கின்றார்கள். இது போன்ற உற்சவங்கட்கு ஒரு ஊரில் ஒரு சுவாமிக்குப் பல லக்ஷக்கணக்கான ரூபாய் வீணாகச் செலவாகும். இந் நாட்டைச் சுற்றிப் பல்லாயிரக்கணக்கான கோயில்களில் இப்படியே அழிகிறது. ஒரு சாமிக்குள்ள சொத்து ஒரு நாட்டையாளும் அரசருக்கு இருக்காது. திருப்பதிப் பெருமாளுக்கு இருக்கும் மூலதனம் கோடிக் கணக்கான ரூபாயாகும். சிதம்பரம், ராமேஸ்வரம், ஸ்ரீரெங்கம், திருச்செந்தூர், பழனி போன்ற பல கோயில்கட்கு மிப்படியே பெரும்பொருளிருக்கிறது. இது தவிர பக்தியின் பேராலும் பிரார்த்தனையின் பேராலும் வசூலாகும் பொருள் அளவிட முடியாது. இவ்வளவு பொருள்களும் எவருக்குப் பயன் படுகிறது? பார்ப்பான் சாப்பிடவும் படிக்கவும் திருடவும் மனைவி மக்களோடு மகிழ்ச்சியோடு வாழவுமேதான் இன்றுவரை செலவாகின்றது. கோயில், குளம், மடம், தீர்த்தம், சத்திரம், மானியம், தங்க வைர நகைகள் இத்தனையும் பார்ப்பான் வசமே ஒப்புவிக்கப்படுகின்றன. அது பின் திருட்டில் மறைந்து, அய்யர் ஜமீன்தாராக வந்துவிடுகின்றார். எனவே இந்த நாட்டைப் பார்ப்பனர்கள் மதத்தின் பேராலும் கடவுள் பேராலும் மோக்ஷத்தின் பேராலும் சடங்கின் பேராலும் கொள்ளையடித்து மக்களை ஏமாற்றி

இழிவுபடுத்திப் பிளவுபடுத்திவருகின்றார்கள். இதனை ஒவ்வொரு வரும் பகுத்தறிவோடு சிந்தியுங்கள். நமது நாட்டில் மதத்தின் பேரால் வீணுகச் செலவு செய்யப்படும் பொருளை நிறுத்தினுல் இந்நாட்டு மக்கள் விரும்பும் எல்லாவற்றையும் பெற்று இன்புற்று வாழலாம்? எதைச் செய்ய முயன்றாலும் பகுத்தறிந்து செய்யுங் கள். பழக்க வழக்கமென்ற கண்மூடித்தனத்தை விட்டுவிடுங்கள். எதையும் பயத்தோடும் அறியாமையோடும் செய்யாதீர்கள். தன் மதிப்போடு எல்லா மக்களும் வாழவேண்டுமென்றுதான் நாங்கள் சொல்கின்றோம். நமது நாட்டில் பெண் மக்களைப் பெரிதும் கொடுமைப் படுத்துகின்றோம். பெண்மக்கள் கல்வி கற்கவேண்டு வதில்லை, வீட்டுவேலைக்கும் புருஷன்மார்கள் இச்சைக்குமே பெண் உலகில் படைக்கப்பட்டாளென்று கருதுகின்றோம். ஒரு பெண் இந்நாட்டில் பிறந்தது முதல் இறக்கும்வரை அடிமையாக இருந்து தானுகவேண்டும். அவர்களுக்கு எவ்வித சுதந்திரமும் கிடையாது. இந்நாட்டில் மனைவியும் கணவனும் கூடி வாழ்வதைப் பெற்றதாய் தந்தையர்களே வெறுக்கின்றார்கள். மாமியார் மருமகளுக்கு விஷமிட்டு வைக்கிறாள். புருஷனுக்கு மனைவிவிஷமிட்டு வைக்கிறாள். புருஷனுக்குப் பெண்ணிடத்தில் அவநம்பிக்கை! பெண்ணுக்குப் புருஷனிடத்தில் அவநம்பிக்கை. புருஷன் மனைவியை விட்டுப் பிரிந்துவாழநினைக்கின்றான். மனைவி புருஷனைவிட்டுப் பிரிந்துவாழ நினைக்கின்றாள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தினம் இந்நாட்டில் பல பகுதிகளிலும் நிகழ்ந்துகொண்டுதான் வருகிறது. பெண் வடிவாக இயங்கும் உலகம் பெண் குலத்தை கொடுமைப் படுத்தாமலும் இழிவுபடுத்தாமலும் இருக்கவேண்டுவது அவசியமாகும்.

---

# கருடசேவைச் சடங்கு.

மிஸ் & மிஸஸ் கமலாக்ஷி எழுதுவது.

சாரதா சட்டத்தை எல்லாரும் எதிர்க்கிறதில்லை. பார்ப்பனர் தான் எதிர்க்கின்றனர். காரணம் என்னவென்றால் மற்ற ஜாதியார்கள் சாதாரணமாகப் பெரியமனுஷியான பின்பே கலியாணம் செய்துவருகிறார்கள். பார்ப்பார ஜாதியார் பெரியமனுஷியாகுமுன்பு கலியாணஞ் செய்துவருகிறார்கள். இந்த விஷயத்தில் வழக்கத்தை மாற்ற ஒப்புக்கொண்டால் மற்ற எல்லா விஷயத்திலும் அரசாங்கத்தார் புகுந்து வயிற்றில் மண்ணடித்துவிட்டா

லென்ன செய்கிறதென்ற பயம் முதலாவதாகும். இரண்டாவது காரணமொன்றுண்டு. பெரியமனுஷியாகிவிட்டால் பெண்ணுக்குக் கொஞ்சம் சொந்தப் புத்தி வந்துவிடும். சொந்தப் புத்தி தோன்றுவதற்கு முன்பே அதாவது பச்சைப்பிள்ளையாக இருக்கும்போதே தாலியைக்கட்டி அடிமையாக்கிவிட்டால் முண்டமுடியாதல்லவா? மரத்தை வளைப்பதைவிடச் சிறு செடியை வளைப்பது சுலபமல்லவா? சிறு குழந்தையிலே கட்டிப்போட்டால் வேறு யோசனையில்லாமல் "என்னவோ கலியாணமாகிவிட்டது புல்லென்றாலும் புருஷன் கல்லென்றாலும் கணவன் அவன் சொல்வதைக் கேட்டுக் காலுக்குச் செருப்பாக இருக்கவேண்டியதுதான். தப்பிப்போக வழியில்லை. இதுதான் தலைவிதி" என்று நினைத்துக் கொள்ளும்படி அறியாத சிறு பருவத்திலிருந்தே செய்யப்படுகிறது. இதனால் அந்தப் பெண்களுக்கு வேறு யோசனை யெழும்பாமல் சாசுவத அடிமைத்தனம் வழக்கத்திலுண்டாகிவிடுகிறது. இந்த இரண்டு காரணங்களும் சாதாரணமானவை. இந்த விஷயம் அநேகருக்குத் தெரியும். இந்த இரண்டு காரணங்களையும் விடப் பெரிய காரணம் ஒன்றிருக்கிறது. அது அநேகருக்குத் தெரியாது. சாரதா சட்டப்படி பெரியமனுஷியான பெண்ணைக் கலியாணஞ் செய்வதென்றால் பார்ப்பாரச் சாதி மானங்கெட்டு நாற்றமெடுத்துப்போகும். இந்த ரகசியம் அநேகம் சட்டசபை மெம்பர்களுக்குக்கூடத் தெரியாது. பார்ப்பார மெம்பர்களுக்குத் தெரியும். ஆனால் இந்த அசிங்கத்தைச் சட்டசபை மேடையில் எப்படிச் சொல்கிறது? முடியாதபடியால்தான் "மதத்துக்கு விரோதம்; விரோதம்" என்று அழுகிறார்கள். அந்த ரகசியமென்னவென்றால், கல்யாணவீட்டில் "கருடசேவைச் சடங்கு" என்று ஒரு சடங்குண்டு. பெண்ணுக்கு மாமனும் மாப்பிள்ளைக்கு மாமனும் வந்து ஒருவருக்கொருவர் எதிராக நிற்பார்கள். பெண்ணும் மாப்பிள்ளையும் அவரவர் மாமன்மார்தோளில் ஏற்றப்படுவார்கள். எப்படி? பிடரியில் உட்காரவைத்து இரண்டு கால்களையும் முன்புறமாகத் தொங்கவிட்டுக்கொள்வார்கள். மாமன்மார் தங்களுடைய இரண்டு கைகளாலும் இரண்டு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆட ஆரம்பிப்பார்கள். மாப்பிள்ளையும் பெண்ணையும் தனித்தனி தோளில் தூக்கியிருக்கிற இரண்டு மாமன்

மாரும் எதிருக்கு எதிராக நின்று முன் வருவதும் பின்னுக்குப் பேரவதுமாக சதுராட்டம் நடைபெறும். இந்தச் சடங்கு முக்கியமானது. இந்த ஆட்டத்துக்கு மணமக்கள் சிறுபிள்ளைகளாக இருப்பதுதானே நலமாக இருக்கும்? இப்பொழுது மருதாரங் கட்டுகிறபோது மாப்பிள்ளையைத் தூக்கி ஆடுவது பெருங் கஷ்டமாகஇருக்கிறது. இருந்தாலும் தூக்காமல் முடியவில்லை. பெண் பெரியமனுஷியாகிவிட்டால் எப்படித் தூக்குகிறதென்ற யோசனை பார்ப்பார சமூகத்தைக் கலக்குகிறது. பெரியமனுஷியான பெண்ணை ஒரு தடி மாமன் பிடரியில் தூக்கி இரண்டு கால்களையும் இரண்டு தோள் பக்கமாக முன்னாலே தொங்கவிட்டுப் பிடித்துக் கொண்டு ஆடுவதென்றால் அசிங்கமாக இராதா? சாரதா சட்டம் நல்லது, பெரிய மனுஷியான பிறகு செய்வதே சரியென்று சாதாரணமாகச் சொல்லிவிடுகிறார்கள். பார்ப்பன மாமன்மார் சங்கதியை நினைக்கிறார்களில்லை. இந்த கருடசேவை சங்கதிதான் பார்ப்பனர் சாரதா சட்டத்தை யெதிர்க்கிறதற்கு முக்கியமான காரணமாக இருக்கிறதென்பதை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். விதவா விவாகத்தைப் பார்ப்பனர் ஒப்புக்கொள்ளாமலிருப்பதற்கும் இதுவே காரணமென்று சொல்லவேண்டியதில்லையல்லவா? இந்தக் கருடசேவைச் சடங்கை விட்டுத் தொலைத்தாலென்னவென்று சீர்திருத்தக்காரர்கள் கேட்கலாம். அது சுலபத்தில் ஆகிற காரியமல்ல. தூக்கி ஆடுகிற மாமன்மார்கட்கு ஒரு ஜோடி பேஷான வேட்டி கிடைக்கும். பணமும் கிடைப்பதுண்டு. தவிரப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு ஆடுவது குஷாலாக இருக்கிறதல்லவா? ஆதலால் விடமாட்டார்கள். தவிர இம்மாதிரிக் காரியங்களை விட்டுவிட்டால் வரவர கிரியைகளில் பக்தியில்லாமல் போய்விடும். அப்படியானால் கல்யாணச் சடங்குகள் அபரக் கிரியைகள் முதலிய எல்லாம் சிரத்தையில்லாமல் வரவர நின்று போகக்கூடும். அப்பால் பார்ப்பனர் பிழைப்பு மண்ணாகிவிடும். ஆதலால் எந்தச் சடங்கையும்விட அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். என்ன செய்கிறது? கருடசேவைச் சடங்குக்கும் சாரதா சட்டத்துக்கும் இன்று ஏற்பட்டிருக்கும் போராட்டம் ஒழியுமோ ஒழியாதோ? எது வெற்றிபெறுகிறதோ பார்க்கலாம்.

---

# விபூதிக்குப் பாதுகாப்பு.

'சைவ சமயமே சமயம்' என்றும், 'சைவத்தின்மேற் சமயம் வேறில்லை' என்றும் சாஸ்திரங்கள் முழங்குகின்றன. இந்தச் சைவ சமயம் சமயாச்சாரியார்கள் பிறந்து எதிரிகளைக் கழுவில் போட்டும், எலும்பைப் பெண்ணாக்கியும், முதலை வாயில் பிள்ளையழைத்தும், ஏட்டை ஆற்றில் எதிர்த்துப்போகச் செய்தும், நெருப்பில் போட்ட ஓலை எரியாதிருக்கச் செய்தும் என்னென்ன பாடுபட்டும் சைவம் வளரமாட்டேனென்கிறது. "அரன் நாமமே உலகெலாம் சூழ்க" என்று ஆயிரம் வருஷத்திற்கு முன் பரமசிவனுடைய குமாரனென ஞானப்பால் சாப்பிட்ட சம்பந்தமூர்த்தி சுவாமிகள் வாழ்த்திய வாழ்த்து இன்னும் பலிக்கவில்லை. 170 கோடி ஜனங்களிருக்கிற இந்த உலகத்தில் 10 கோடி ஜனங்கள் கூட சைவத்தில் இன்னும் சேர்ந்தபாடில்லை. சைவசித்தாந்த சங்கம் வைத்து மற்றவர்களை இரவுபகலாகத் திட்டினாலும் சைவம் வரவரக் குறைகிறதே தவிர வளர்வதாக இல்லை. இதற்குத் தென்னாட்டுச் சைவசித்தாந்த சபைகள் சேர்ந்து பக்கா யோசனை செய்திருப்பதாக ஒரு நண்பர் சொல்கிறார். அதாவது :—

(1) "சாஸ்திரத்தைப் பேசிச் சைவத்தை வளர்ப்பதென்றால் அதில் பல பேதங்கள் ஏற்பட்டு சைவர்கட்குள் பேதமுண்டாகிறது. வாதப்பிரதிவாதமேற்பட்டால் படிப்பில்லாத பொது ஜனங்களுக்கு விளங்குவது கஷ்டமாக இருக்கிறது. கோவிலில் போய்க் கும்பிடும்படி சொல்லலாமென்றால் அங்கும் லிங்கம் சுப்பிரமணியர் விநாயகர் முதலியவற்றில் ஒன்றுக்கொன்று பெரிதென்ற சண்டையேற்படுகிறது. தவிர கோவிலுக்குச் சொந்தக்காரர் பலராக இருப்பதால் அந்தக் கோவிலுக்கு இந்தக் கோவில் நல்லதென்று கூறுகின்றனர். அதனாலும் சண்டையேற்படுகிறது. ஆதலால் எல்லாரும் ஒரே மனதாக ஏற்றுக்கொள்ளக் கூடியது விபூதி ஒன்றுதான். சாஸ்திரங்களிலும் விபூதிக்குச் சமமான பொருள் ஒன்றுங் கிடையாது. ஆதலால் அதைச் சரியாக வளர்த்து அதில் மக்கட்குப் பக்தியுண்டாகச் செய்தால் சைவம் வளர்ந்துவிடும். அதில் பக்தியுண்டாகச் செய்வதற்காக எல்லாக் கட்சிச் சைவ சித்தாந்த சபைகளும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும்."

(2) "விபூதியைக் கீழே சிந்தக்கூடாதென்றும், சிந்தினல் உண்ணியாகப் பிறப்பார்களென்றும் சொல்லப்படும் சாஸ்திரத்தை வற்புறுத்திப் பிரசாரம் செய்தல். 'பக்தியொடு சிவசிவாவென்று திருநீற்றைப் பரிந்து கையாலெடுத்துப் பாரினில் விழாதபடி அண்ணாந்து பருத்த புயமீதிலொழுகும்படி பூசச் செய்தல். விபூதியைக் கீழே சிந்தும்படி விட்டதால்தான் நம்முடைய சைவம் வளரவில்லையாதலால் இனி விபூதி சிந்தாமலிருக்கும்படி செய்தல். சிந்திக்கிடக்கும் விபூதிகளைச் சேகரித்தல். சாணத்தை அடுப்பெரிப்பதாலும் கொல்லர்கள் பட்டாப்போட எரு மூட்டம் போடுவதாலும் திருநீற்றை அலட்சியப்படுத்திக் குப்பையில் கொட்டிவிடுகிறார்கள். இதனுல் அவை மிதிக்கப்பட்டு மகா பாவமுண்டாகிறது. வயலுக்கு உரமாகப் போடப்பட்டுப் பறையர்களும் மிதிக்கிறார்கள். ஆதலால் சாணத்தை விபூதிக்காக சைவசித்தாந்த சங்கத்தார்களைத் தவிர மற்றவர்கள் எரிக்கக்கூடாதென்று சட்டசபையில் தீர்மானங் கொண்டுவந்து தடுத்தல். சட்டம் பாஸாகிறவரை ஏராளமான சிப்பந்திகளை வைத்துத் தெருக்களிலும் வயல்களிலும் வீட்டுக்கொல்லைகளிலும் விழுகிற சாம்பல்களைக் குப்பையோடு சேராமல் பொருக்கிச் சேர்க்கத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஒரு பணியை இப்போது திறமையாகச் செய்தாலும் போதுமானதாகும். தமிழ் நாட்டிலிருக்கிற எல்லாச் சங்கங்களும் சுயமரியாதைக்காரருடனும் மற்றவருடனும் வீண் சண்டை போடாமல் காரியத்திற் கண்ணுயிருக்கவேண்டும். விபூதியின் மகிமை மிகப் பெரிது. அதைப் பாதுகாக்கவேண்டும். சிவ பக்தர்கள் சிவநேசர்கள் சைவ சித்தாந்திகள் எல்லாரும் இதில் கட்சி பேதமில்லாமல் வேட்டியை இறுக்கி இடுப்பில் கட்டிக்கொண்டு சாக்குப் பையை முதுகில் கட்டிக்கொண்டு ஒரு துளி சாம்பல்கூட வீணுகாமல் பொருக்கி மூட்டை கட்டிப் பாதுகாக்கும் பணியில் இறங்குதல் அவசியமாகும்."

# தஞ்சாவூர் மாடுகள்.

திருநெல்வேலியிலிருந்து ஒரு முதலியார் தமது குடும்பத்துடன் தஞ்சாவூரில் நடைபெற்ற ஒரு கல்யாண வீட்டுக்கு வந்திருந்தார். அவருடைய ஆறு வயதுப் பையன் குற்றாலநாதன் வெளியேயிருந்து ஓடிவந்தான். அவன் தகப்பனுரைப் பார்த்துச் சொன்னதாவது :—

அப்பா! அப்பா! வெளியே வா அப்பா! ஒரு வேடிக்கை போகிறது.

அப்பா :—என்னடா வேடிக்கை?

பையன் :—மாடெல்லாம் திருப்பதியிலிருந்து வருகிறது.

அப்பா :—அது எப்படி உனக்குத் தெரியும்?

பையன் :—திருப்பதியிலிருந்து வந்தால் தெரியாமல் போகுமா? அது எல்லாம் தலை மொட்டை போட்டிருக்கிறது.

அப்பா :—(சிரித்துக்கொண்டு) திருப்பதிக்குப் போகவில்லையடா! இங்கேதான் அப்படிச் செய்கிறுர்கள்.

பையன் :—ஏய்க்கவா பார்க்கிறீர்கள். அது முடியுமா? அம்மா திருப்பதிக்குப் போய்த்தானே தலை மொட்டை போட்டாள். இங்கே யாராவது மொட்டை போடுகிறுர்களா? அப்படித்தானே மாட்டுக்கும்.

விளையாட வந்த பார்ப்பாரப் பையன் :—இங்கேயும் போடுவாடா? எங்கப்பா செத்துப்போனுர். அப்பவே எங்கம்மாளுக்கு மொட்டையடிச்சுட்டாடா!

முதலாவது பையன் :—அப்படியானல் இந்த மாட்டுக்கெல்லாம் புருஷன் இறந்துபோனுனே? எல்லா மாட்டுக்கும் மொட்டை போட்டிருக்கிறதே?

அப்பா :—சிறு கன்றுக இருக்கும்போதே இந்த ஜில்லாவில் கொம்பு முளைக்காதபடி சுட்டுவிடுகிறுர்கள். அதனுல் மாட்டுக்கு பலம் ஜாஸ்திப்படுமாம்.

முதலாவது பையன் :—அப்படியானுல் எங்கம்மாளுக்குப் பலம் வரத்தான் திருப்பதியில் மொட்டை போட்டதோ? சரி.

சரி. இன்னும் ஒரு மாதத்தில் எனக்கும் திருப்பதியில் மொட்டை போடுவோம்.

பார்ப்பாரப் பையன் :—அடே உங்கப்பா சொல்றது சரியில்லே. எங்கப்பா வேதமெல்லாம் படித்திருக்கிறார். முந்தி ஒரு காலத்திலே பார்வதி தஞ்சாவூர் ஜில்லாவுக்கு வந்தாளாம். அப்போது சிகப்புச் சேலே கட்டியிருந்தாளாம். அதைக்கண்டு இந்த மாடெல்லாம் வெறித்துக் கிளம்பிப் பாயவந்ததாம். உடனே அந்தப் பார்வதி இனிமேல் இந்த மாட்டுக்கெல்லாம் கொம்பில்லாமல் போகக்கடவது என்று சாபம் போட்டுவிட்டாளாம். அதனால்தான் கொம்பில்லாமல் போய்விட்டதாம். இப்படி எங்கப்பா சொன்னார். தெரியுமாடா?

வல்லாள கண்டன்.

---

# பலதிரட்டு.

## ராகுகாலம் போகிற போக்கு.

ஏமாந்த ஹிந்து ஜனங்கள் துப்பாக்கிக் குண்டுக்கு எவ்வளவு பயப்படுவார்களோ அவ்வளவு இந்த ராகுகாலத்திற்கும் பயப்படுகிறார்கள். ராகுகாலமென்று ஒரு மூன்றே முக்கால் நாழிகையைத் தீண்டாத நேரமாகக்கொண்டு அதில் எந்தக் காரியமும் செய்யமாட்டேனென்கிறார்கள். "அதில் கல்யாணம் செய்தால் தாலியறுபடும். ஊருக்குச்சென்றால் திரும்பமாட்டான். உழுதால் ஆபத்து வரும். விதைத்தால் முளைக்காது. நடந்தால் காலொடியும்" என்றெல்லாம் கருதிக்கொண்டு திண்டாடி நிற்கின்றனர். இந்த ராகுகாலம் பார்த்து அந்த நேரத்தை யொழித்து மற்ற நேரத்தில் செய்யப்படுங் கலியாணத்தில் தாலி நிரந்தரமாக இருக்கிறதா ? பயணம் போகிறவர்கள் சாகவில்லையா ? அதொரு புறமிருக்கட்டும். சென்னையிலிருந்து ரங்கூனுக்குக் கப்பல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் போகிறது. வைத்த பயணம் தவறுகிறதில்லே. அங்குபோய்த் தவறாமல் சேருகிறது. அந்தக் கம்பெனிக்காரர்கள் முழுச் சுயமரியாதைக்காரர்கள் போலிருக்கிறது. ஒருநாளைப்போல் வெள்ளிக்கிழமைதோறும் 10-30-க்கு மேல்

12-க்குள் விசையைத் திருகிப் புறப்படுகிறார்கள். அந்தக் கப்பல் வெகு ஒழுங்காக ரங்கூன் துறைமுகம் போய்ச் சேருகிறதே! காரண மென்ன ? ராகுகாலத்தில் தொடங்குங்காரியம் உருப்படாதென்று எழுதிய சாஸ்திரம் பொய்யா ? ராகுகாலமே பொய்யா ? அல்லது ராகுகால சங்கதி கலியுகத்தில் பலிக்காதா? சிவபக்தர்கள் வைணவ தாஸர்கள் ஐயர்மார்கள் போன்ற ஆகாசப் புரட்டர்கட்கு அடிமைப் பட்டுக் கும்பிட்டுவிழுகிற ஏமாந்த சோணகிரிகளிடந்தான் ராகு காலத்தின் சம்பம் பலிக்குமா ? ரகசியமென்ன? ராகுகாலம் பார்க் காத ரஷ்யா ஜப்பான் இங்கிலாந்து ஜெர்மனி முதலிய தேசங்களில் தொட்ட தொழிலெல்லாம் பயன்பெற்று உலகம் முற்றும் பரவி லாபந்தருகிறதே ? ராகுகாலம் பார்த்து இந்தியாவில் செய்யுங் காரியங்கள் விடியாமல் தொலைகின்றனவே! காரணமென்ன? என்று ஒருசந்தேகி கேட்கிறார்.

---

## பிள்ளையார் சுழி சிவமயம்.

சிவபக்தர் சிலருக்குச் சிவபக்தி தலைகீழாகப் புறப்பட்டுவிட் டது. பலவிதமான யோசனைகள் அவர்கள் மூளையைக் குழப்பு கின்றன. பிள்ளையார்சுழி சிவமயத்தை எங்கும் போடுவதாகத் தீர்மானித்துவிட்டார்களாம். எழுதுகிற காகிதத்தில் மட்டுமல்ல. கூடுகளில் போடுகிறார்கள். கார்டுகளில் போடுகிறார்கள். கார்டு களின் முன்பக்கத்திலும் போட்டு ஒவ்வொரு அணு அபராதம் கொடுக்கப்போகிறார்கள். கட்டியிருக்கிற வேட்டி மேல்வேட்டி சட்டை துண்டு கௌபீனம் உள்பட எல்லாவற்றிலும் பிள்ளையார் சுழி சிவமயம் போடப்போகிறார்கள். போடுகிற பொடிமட்டை, குடிக்கிற சுருட்டு, விபூதிப்பை, ருத்ராக்ஷத் தாவடம், குடை, செருப்பு, மோதிரங்கள் ஆகிய எல்லாவற்றிலும் பிள்ளையார்சுழி சிவமயம் போடப்போகிறார்களாம். நெற்றியில்கூட ஒரு பிள்ளை யார்சுழி சிவமயம் போடப்படும். இது என்றும் அழியாதிருக் கும்படி இலச்சினையாகவே சுட்டுவிடப்படும். இப்படியெல்லாம் சிவமயமாகச் செய்துகொண்டு பிறகுதான் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு பிள்ளையார்சுழி சிவமயப் பிரசாரத்துக்குப் புறப்பட உத் தேசித்திருக்கிறார்களென்று ஒருநிருபர் எழுதுகிறார்.

---

## அம்மனுக்கு லோத்ரா.

இந்நிறம் இவ்வண்ணம் இவ்வுருவம் என்று எழுதிக் காட்ட முடியாத கடவுளுக்குக் கோவில்கட்டிக் கோவில்களில் கல்லிலுஞ் செம்பிலும் எண்ணிக்கையில்லாமல் விக்கிரகங்களை அடித்தும் வார்த்தும் வைத்திருக்கின்றனர். அவற்றுக்கு மனிதருக்குச் செய்வது போலக் குளிப்பாட்டுவதும் வேட்டி உடுத்துவதும் சோறு கறி குழம்பு பழம் பலகாரம் பாயசம் வைப்பதும் படுக்கையறையில் பெண்சாமி ஆண்சாமிகளைப் படுக்கவைப்பதும் ஆகிய எல்லாக் கொடுமைகளும் செய்யப்படுகின்றன. கன்னியாகுமரியிலிருக்கிற அம்மன் விக்கிரகம் மாதத்தில் மூன்றுநாள் தீட்டாகிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் காலத்தில் அபிஷேகம் முதலியதெல்லாம் செய்கிறதில்லையாம். இதைப்போல மற்ற கோவில்களிலிருக்கிற அம்மன் எல்லாம் ஏன் ஒழுங்காக மாதாமாதம் தீட்டாகிறதில்லையென்பது சந்தேகமாக இருக்கிறது. தீட்டாகிறதே இல்லையென்றால் லோத்ரா என்னும் மருந்தை வாங்கி நிவேதிக்கலாம். தீண்டற்குச்சு ஒவ்வொரு கோயிலுக்கும் அவசியமல்லவா? தூரமாக இருக்கிற பெண்மக்களை இரவு 12 மணியானாலும் மழையானாலும் இடியும் மின்னலும் கண்ணையும் காதையும் பிய்த்துக் கொண்டு போனாலும் வெளியே பிடித்துத் தள்ளிவிடுகிறார்களே! அதைப்போல கோயிலிலிருக்கிற பெண்சாமிகளையும் அந்தக்காலங்களில் தனியாகக் குடிசைகட்டி அதில் விட்டுவைப்பதே நல்லது. அப்படி நாட்களிலும் விலக்கிவைக்காமல் வருஷம் 365 நாளிலும் ஆண்சாமி பெண்சாமிகளைப் பள்ளியறையில் அடைப்பது சுகாதாரத்துக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமாகும். சாஸ்திரப்படி ஆண் பெண் சம்பந்தத்திற்கு இன்னின்ன கிழமை இன்னின்ன நக்ஷத்திரம் இன்னின்ன திதி கூடாதென்று விதியிருக்கிறது. அவைகளைக் கவனிக்காமல் 365 நாளும் பள்ளியறையில் இரண்டு சாமிகளையும் படுக்கவிடுவது முறையாகுமா? தவிர இரண்டு வேளையும் எண்ணை தேய்த்து முழுகிவிட்டு இம்மாதிரியான நிகழ்ச்சிக்கு இடங்கொடுப்பது பிசகாகும். இவைகளைத் தரும கருத்தர்கள் கவனிக்கவேண்டும். சிவபக்தர்கட்கு இவை விளங்காது. அவர்கள் விபூதி பூசிப்பூசி மூளையும் ரத்தமும் வரண்டு பயித்தியக்கார

ஆஸ்பத்திரிக்குத் தயாராகிவிட்டனரல்லவா? மலரகிதமான சுவாமிக்குத் தீட்டு வராதென்றால் கன்னியாகுமரி அம்மனுக்கு மட்டும் மாதாமாதம் வருவதன் காரண மென்ன? மற்ற அம்மன்கட்கு மட்டும் இது ஏற்படாமலிருப்பதன் காரணம் விளங்க வேண்டும். மாதவிடாய் வராத அம்மனுக்குப் பள்ளியறையில் அடைக்க வேண்டிய அவசியமென்ன வென்பதும் யோசிக்க வேண்டிய விஷயமாகும். என்று ஒரு வைதீகர் எழுதுகிறார்.

---

## புதிய சட்டசபையில் வைதீக மெம்பர்கள்.

புதிதாகக் கூடப்போகும் சென்னைச் சட்டசபையிலும் டில்லி இந்தியச் சட்டசபையிலும் அரிய காட்சிகளைக் காணக்கூடும். ஏனென்றால் பல வைதிகர்களும் சைவ மெய்யன்பர்களும் போயிருக்கிறார்கள். அவர்கள் வைதீகத்துக்கு அணுவளவுகூடத் தவறி நடப்பதில்லையென்று ஜனங்கட்குச் சொல்லிவிட்டுப் போயிருப்பதால் தவறமாட்டார்களல்லவா? சட்டை போட்டுக்கொள்வது வைதீகத்துக்கு விரோதமாதலால் பஞ்சகச்சமும் பட்டைக்கோவணமும் உச்சிக்குடுமியும் ஜொலிக்கும்படி தோன்றப்போகிறார்கள். உடம்பெல்லாம் தூய வெண்ணீறு குழைத்துப் பட்டை பட்டையாகப் போட்டிருப்பார்கள். ஐயங்கார்கள் துவாதச நாமம் போட்டிருப்பார்கள். பூணூல் மார்பில் கிடந்து தவழும். குமிழ் வைத்த பாதரக்ஷையில் ஏறிக்கொண்டு சிவநாம ராமநாம பஜனை செய்துகொண்டு மனு தரும சாஸ்திரப் புத்தகத்தையும் கையிலேந்தி வருவார்களானால் அவர்களுடைய திருக்கோலம் எல்லாருடைய கண்ணையும் கவருமென்பதிலையமுண்டோ? இப்படிவர இவர்களே தயாராக இருப்பார்களா என்று ஒரு சந்தேகம் பிடித்த நண்பர் கேட்கிறார். வராமல் முடியுமா என்று நான் கேட்கிறேன். உண்மையான வைதீக கோலமே இவர்கட்குப் பிடிக்காவிட்டால் இவர்கள் வைதீகத்துக்கு வேலை செய்வேனென்று சத்தியம் செய்துகொடுத்திருப்பது என்னவாகும்? எல்லாம் இரண்டு மாதத்துக்குள் தெரிந்துவிடுமல்லவா? என்று ஒருவர் எழுதுகிறார்.

---

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை ௯ (1) | காரைக்குடி
பிரமோதூத-ஹு கார்த்திகை-மீ | மணி ரு

## அச்சமில்லை.

அச்சமில்லை அச்சமில்லை
அச்ச மென்ப தில்லையே.

இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்

துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதினும்

இச்சை கொண்ட பொருளெலாம்
இழந்து விட்ட போதினும்

நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பர் ஊட்டு போதினும்

பச்சைஊன் இயைந்தவேற்
படைகள் வந்த போதினும்

உச்சிமீது வான் இடிந்து
வீழுகின்ற போதினும்

அச்சமில்லை அச்சமில்லை
அச்ச மென்ப தில்லையே

பயமே கிடையாது. எதற்கும் பயமில்லை. எப்பொழுதும் பயமில்லை. திருட்டு செய்பவனும் புரட்டு செய்பவனுந்தானே உலகத்தில் பயப்படுவான். உண்மையாக நடப்பவன் பயப்பட வேண்டியதில்லை. பயப்படாதவன் பொய் சொல்லவேண்டிய தேவையில்லை. மனிதன் உலகிற் பிறக்கிறான்; வளர்கிறான்; வாழ்கிறான்; சாகிறான். இதற்கிடையில் சிறிதுதுன்பம்! சிறிது இன்பம்! சிலர் பகைக்கிறார், சிலர் நகைக்கிறார், சிலர் வாழ்த்துகிறார், சிலர் நேசிக்கிறார், ஒருபுறம் வரவு, ஒருபுறம் செலவு, இதுதான் உலக வாழ்வு. உலகவாழ்வாகிய கடலில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு உடம்பாகிய கப்பலை ஓட்டுகிற மாலுமியாக இருக்கிறான். அலைமுன்னும் பின்னுமாக மோதுகிறது. பயந்தென்னசெய்கிறது. பயப்பட என்ன இருக்கிறது. துணிந்தால் கடல் இன்பமயமாக இருக்கும். பயந்தால் சமாதானத்துக்கு வழியேது? பிறந்தோம். இறப்பது திண்ணம். எப்பொழுது இறந்தாலென்ன? நன்மையான காரியத்தைச்செய்வோம். ரோஷத்துடன்—மானத்துடன்—சுதந்தரத்துடன்—சுயமரியாதையுடன் பயமின்றி வாழ்வோம். எல்லாரும் எதிர்த்தாலென்ன? கையில் அரைக்காசுமில்லாத பரம ஏழையானாலென்ன? ஆசைப்படுவதெல்லாம் கிடையாமற்போனாலென்ன? உயிருக்குயிரான நேசர்கள் நஞ்சையெடுத்து நம்முடைய வாயில் ஊட்டினாலென்ன? வேலாயுதம் சூலாயுதங்களெல்லாம் வந்து உடலைத்துளைத்தாலென்ன? வானந்தகர்ந்து தலையில் விழுந்தாலும் அச்சமற்றிருக்க வேண்டுமென்பது பாரதியார் பாட்டாகும். வருகிற கஷ்டங்களைத் துணிவுடன் எதிர்த்து அடித்து வீழ்த்த வேண்டுமேயல்லாமல் பயப்படுவதால் விளைவது அழிவுதானென்பதை உணரவேண்டும். துணிந்தவனுக்கு இருமடங்கு பலமுண்டு. பயந்தவன் இருக்கிற பலத்தையும் சமயத்தில் இழந்துவிட்டு விழிக்க வேண்டியதுதான். கஷ்டம் வரும்போதும் எதிர்ப்புகள் நேரிடும்போதும் எல்லாரும் போய்விடுவர்; எல்லாம் போய்விடும். கடைசியில் மிஞ்சுவது தைரியம். அல்லது பயம். பயம் சரியான துணையல்ல. தைரியம்தான் சரியான துணை. ஆதலால் அஞ்சாமையைக் கைக்கொள்க.

# தொடாதே!

"தொடாதே" என்ற சொல்லை எவனொருவன் உச்சரிக்கிருனே அவன் இரக்கமுடையவனுக இருக்கமுடியாது. தொடாதே தொட்டால் தீட்டாகிவிடுவேன் என்று சொல்லும் மனிதன், மனிதத் தன்மையைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டானென்பதில் ஐயமில்லை. பிறர் தன்னைத் தொடக்கூடாதென்ருல் தான் பிறரைத் தொடத் தயாராக இருக்கமுடியாதென்பது நிச்சயம். இந்த மனப்பான்மையுடையவர்கள் பிறருக்கு என்ன ஆபத்து நேர்ந்தாலும் உதவி புரியமாட்டார்கள். வேறு ஜாதிக் குழந்தையோ மனிதரோ கிணற்றில் விழுந்து தவித்தாலும் அவர்களை யெடுத்து உதவி செய்ய முன்வரமாட்டார். தீண்டாமையென்பது பஞ்சமர், தீண்டத் தகாதவரென்று கூறப்படும் மக்களிடத்தில் மட்டுந்தான் காட்டப்படுகிறதென்பது தவறு. அது இந்துமக்கள் யாவரிடத்தும் பரவி, இந்துக்கள் இருக்குமிடமெல்லாம் கையாளப்பட்டு, இந்துக் கோயில்கள், சுவாமிகள், சாஸ்திரங்கள், மந்திரங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் நுழைந்துவிட்டது. இந்து என்ற பெயர் எங்கு காணப்பட்டாலும், அங்கு தீண்டாமையும் ஓங்கி வளர்ந்து உரம்பெற்று நிற்பதைக் காணலாம். ஹிந்து மதமென்பது தீண்டாமை மதமாக விளங்குகின்றது. சாதாரணமாகத் தீண்டாதவர்கள் ஆறு ஏழு கோடிப்பேர் இருக்கின்றனரென்று கருதப்படுகின்றது. உண்மை அப்படியல்ல. எல்லா ஜாதியாரும் சேர்ந்து பறையர் முதலியோரைத் தீண்டாதவரென்று ஒரே யடியாகச் சொல்வதால் அவர்கள் தாம் தீண்டாதவரென்று பொதுவாகக் கருதப்படுகிருர்கள். பார்ப்பன ஜாதியை யெடுத்துக்கொண்டு பார்த்தால் பார்ப்பனரல்லாத சகல ஜாதியாரும் தீண்டாதவராகக் கருதப்படுவதைக் காணலாம். அப்படியே சைவர்களென்னும் ஜாதியார் மற்றவர் தமக்குத் தாழ்ந்தவரென்றும் அவர்கள் தங்களைத் தொட்டால் தீட்டாகுமென்றுங் கருதுகின்றனர். இப்படியே ஒவ்வொரு ஜாதியாரும் பிறப்பாலும் ஆசாரத்தாலும் தாங்கள் சிறந்தவரென்று கருதி மற்றவர்களைப் பார்த்துத் "தொடாதே" என்று சொல்ல முன் வருகின்றனர். பார்ப்பனரிலிருந்து ஒவ்வொரு ஜாதியாராகப் பார்த்தால் ஒருவரை யொருவர் தீண்டக்கூடாதவராகவே இருப்பதைக் காண்டல் அரிதன்று.

பார்ப்பனருள்ளும் ஒருவரை யொருவர் தொடக்கூடாதென்றும் ஒருவருண்பதை யொருவர் பார்க்கக்கூடாதென்றும் சமைத்துப் போடக்கூடாதென்றும் சாப்பாட்டைத் தொடக்கூடாதென்றும் கொள்கைகள் வைத்திருக்கின்றனர். அவருள்ளும் தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதியிருக்கின்றன. அப்படியே தாழ்த்தப்பட்டவரென்று கருதப்படும் பறையர், பள்ளர், வள்ளுவர் போன்ற ஜாதியாருள்ளும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு கூறி ஒருவர் மற்றவரைத் தொட்டால் தீட்டாகுமென்று கருதும்படி செய்யப்பட்டிருக்கிறது. தங்களைவிடத் தாழ்ந்த ஜாதியென்று கருதப்படுபவர் மேல் ஜாதியாரைத் தொட்டுவிட்டால் பாவமென்று கருதுவதால் எப்படியும் ஒரு வகுப்பினரை மற்ற வகுப்பினர் தீண்டக்கூடாதென்ற உணர்ச்சி யேற்பட்டிருக்கிறது. இந்தத் தீண்டாமைக் கொள்கையானது மனிதருக்கு மனிதர் மட்டும் ஏற்பட்டதோடு நிற்கவில்லை. சாமியைத் தொட்டால் தீட்டாகும்; கோவிலில் நுழைந்தால் தீட்டாகும்; பாடசாலை சத்திரங்களில் புகுந்தால் தீட்டாகும் என்ற நிலை வரையில் வந்திருக்கிறது. இந்து என்று கூறிக்கொள்ளும் மனிதனுடைய மனத்தில் தீண்டாமை விதை போடப்பட்டு வளர்க்கப்பட்டதன் பயனாக ஒருவனுடன் ஒருவன் சேராதபடி தீண்டாமைப் புத்தி வளர்ந்து எங்கும் தீண்டாமை மயமாகி நிற்பதைச் சிறிது கூர்ந்து நோக்குவாரும் அறிவர்.

தீண்டாமை மனித உருவத்தில் மட்டுமே கொடுமையுடன் அனுட்டிக்கப்படுகிறது. தங்களால் முடியாதபோது அது உடைந்து தூளாவதைக்காணலாம். தீண்டாமை முறையானது இயற்கைக்குப் பொருத்தமற்றதாதலால் அதனைக் கையாளப் பல சந்தர்ப்பத்திலும் முடிகிறதில்லை. தீண்டாத வகுப்பினரென்பவரை எல்லோரும் தொடக்கூடாதென்று கட்டுப்பாடு செய்துதீர்த்தனர். எப்படி அவர்களை யாவரும் தள்ளும்படி செய்தனரோ அப்படியே பார்ப்பனரை உயர்ந்தவரென்றும், அவர்கள் தங்களைத் தொட்டால் அவர்கள் தீட்டாவார்களென்றும, தாங்கள் அவர்களை அறியாமல் தொட்டாலும் பாவம் வருமென்றும் கருதினர். இப்படிக் கருதுவதால் தாங்கள் தீண்டாச்சாதியாகிறோமென்ற உணர்ச்சி மழுங்கிவிட்டது. தங்கட்குக் கீழ் தீண்டாச்சாதி யிருப்பதைப் பெருமையாகக் கொண்டனரே யன்றித் தங்கட்கு மேல் ஒரு ஜாதி யிருந்து

தங்களைத் தீண்டாச்சாதியாக்குவதைப் பொருட்படுத்தாமல் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். படிப்படியாகத் தீண்டாமையைப் பாகுபடுத்தியதனாலேயே கடைசிப்படிக்குத் தள்ளப்படாமல் கூடிய வரையில் மேற்படிகளில் நின்றுகொள்ள மற்ற பல வகுப்பினர் எண்ணங்கொண்டனர். தங்கள் ஸ்தானம் பாதாளத்திற்குப் போய்விடாமலிருக்கும்பொருட்டே பார்ப்பனர் எல்லாவற்றுக்கும் மேலான உச்சிப்படியில் இருப்பதற்கு ஏனைய ஜாதியினர் சம்மதிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பார்ப்பன ஜாதியினர் சாஸ்திர மெழுதும் அதிகாரத்தைக் கைக்கொண்டிருந்தபடியால் அந்த சாஸ்திரத்தில் நடுப்படிகளில் இடமுண்டென்று எழுதிவைத்தால் போதுமென்ற எண்ணம் பலருக்கு உண்டானதில் ஆச்சரியமொன்றுமில்லை. பார்ப்பனர் சுயநல மேலீட்டால் தங்கட்கு ஏற்படுத்திக்கொண்ட ஜாதிஉயர்வு நிலைக்கும்பொருட்டே தமக்கு அடுத்துப் பலபடிகளை வரிசையாக உண்டாக்கிவைக்க வேண்டியவர்களாயினர். முழுத் தீண்டாமைக்கு இலக்காகிய மக்கள் தன்னுணர்ச்சி பெற்று எழுந்து போர் தொடங்குவதென்று ஒரு காலத்தில் கிளம்பினாலும் நேராகத் தங்களுடன் தாக்காதிருக்கும் பொருட்டே மற்றவர்களை இடையில் போட்டு பந்தோபஸ்து செய்திருக்கின்றனர். அன்று செய்த சூழ்ச்சி இன்றளவும் அசைக்கமுடியாமலிருப்பதைக் காணலாம். இக்காரணங்களையும் அனுபவத்தையும் உற்று நோக்கினால் ஜாதி வகுப்பும் தீண்டாமையும் பார்ப்பன ஜாதிக்கு உயர்வளிக்கும்பொருட்டே ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்தத் தீண்டாமை முறையால் ஏற்பட்ட பலன், பன்றி எருமை போன்ற மிருகங்களைக்காட்டிலும் மனிதன் கேவலமானவனென்ற உணர்ச்சியும், மகமதியர், கிறிஸ்தவராகிய அன்னிய மதத்தினரைக் காட்டிலும் இந்துவாக இருப்பவன் தாழ்ந்தவனென்ற உணர்ச்சியும், இந்து மதத்தில் பிறந்தவன் சாகிற வரை உயர்வுக்கு உரிமையற்றவனென்ற உணர்ச்சியும் ஏற்பட்டு உறுதியடைந்ததேயாகும். ஜாதி பிரித்து ஒருவரையொருவர் தொட்டாலும், பார்த்தாலும், பாதை வழி நடந்தாலும் தீட்டாகுமென்ற எண்ணம் வளர்ந்ததன் பயனாக ஒருவருக்கொருவர் தொடக்கூடாத அளவு கழிபட்டவர் என்ற நிலை யேற்பட்டுவிட்டது. இது

வழக்கமாகி ஒரு ஜாதிக்கு ஒரு ஜாதி கொடுமையான பகைமையை யும் அலட்சியத்தையும் அசிங்கத்தையும் வளர்த்து சகோதரத் தன் மையை வேரறக் கல்லி மாய்த்துவிட்டது. இந்த பேத உணர்ச்சி யைச் சாஸ்திர ஆதாரத்துடன் மதக்கொள்கையோடு சேர்த்துக் கடவுளின் சம்மதமென்று பிரசாரஞ் செய்து மக்களைக் கட்டுப்படுத் திய தன் பயனாகப் பார்ப்பனர் உயர் ஸ்தானத்தையும் பொருள் வரு வாயையும் ஏனைய சுக சௌகரியங்களையும் அடைந்தாலும் நாட்டுமக் கள் அத்தனைபேரும் வீண் காலங் கடத்தி ஒற்றுமை கெட்டு ஹிந் து ஜாதி ஒரேஜாதி ஒரு மதத்திற்குரிய மக்கள் என்ற உணர்வற்று ஒருவருக்கொருவர் முகங்கண்டவுடன் உயர்வு தாழ்வுச் சண்டையி லீடுபடும்படியான பரிதாப நிலையை அடைந்துவிட்டனர். தீண் டக்கூடாது—தொடக்கூடாது என்ற சொல் இந்து மக்களிடம் வழக்கத்திற்கூட இல்லாதபடி அழிகிறவரை இச் சமூகம் ஒரு அறிவுள்ள சமூகமென்று உலகினரால் கருதப்படப்போவதில்லை யென்பதும், ஏதாவது ஒரு தொழிலுக்கோ அபிவிருத்திக்கோ நாட்டு ஆட்சிக்கோ வேறு சிறந்த காரியங்கட்கோ முன்னின்று மேன்மைபெற வழியேற்படப்போவதில்லை யென்பதும் நிச்சய மாகும். இத் தீண்டாமை முறை வகுக்கப்பட்டிருப்பதால் பார்ப் பன ஆண் மக்கள் தவிர மற்றெல்லோருக்கும் இழிவும் கஷ்டமும் ஏற்பட்டிருப்பதை எவரும் எளிதில் அறியக்கூடும். தங்கட்குக் கீழாக சில ஜாதியிருப்பதைக் கண்டு சிலர் திருப்திப்படுவதாலேயே தீண்டாமை முறை உயிருடன் இன்றுவரை இருந்து வருகிறது. மற்ற மக்கள் தங்கட்கு மேலுள்ளவருக்குத் தங்களைக் காட்டிலும் உயர்விருப்பதற்கென்ன காரணமென்பதை யோசிக்க முயன்றால் அன்றே இந்தத் தீண்டாமை முறை நாட்டைவிட்டுப் பறந்து போவது திண்ணமாகும். இந்து மதத்தைத் தவிர வேறு மதங் களில் இத் தீண்டாமை முறையானது கையாளப்படுவதில்லை. எவ னொருவன் மகம்மது நபியினுடைய உபதேசத்தை யேற்று அம் மதத்தில் சேருகிறானோ அவனெல்லாம் சகோதரனென்று கருதப் படுகின்றனர். அப்படியே கிறிஸ்தவர்களுமாகிவிடுகிறார்கள். ஹிந்து மதத்தில் தீண்டாத பஞ்சம ஜாதியானும் மகமதியனாகவோ கிறிஸ் தவனாகவோ மாறுவானானால் பரிசுத்தனாகிவிடுகிறான். மனிதனை மனிதனுக்கக்கூடிய சக்தி—தள்ளுபட்ட மனிதனை மற்றவருடன்

சரிசமமாக்கும் சக்தி மற்ற மதங்கட்கு இருக்கிறது. மனிதனை மனிதனாக ஏற்றுக்கொள்ளும் பேரறிவு அந்த மதத்து மக்கட்கு ஏற்பட்டிருக்கிறது. ஹிந்து மதத்தில் பிறந்ததால் ஏற்பட்ட கழிவு நிலைமை மற்ற மதத்தைக் கைக்கொள்வதால் உயர்வடைகிறது. ஆனால் ஹிந்து மதத்தில் இப்படிப்பட்ட உயர் தன்மை யாவது அதைக் கைக்கொண்டிருக்கிற மக்களுக்கு இப்படிப்பட்ட பெருந்தன்மையாவது கிடையா. மனிதனுடைய பாவம் போக்குதற்கும், முக்தி யடைவதற்கும், பரிசுத்தம் பெறுவதற்கும் ஏராளமான தீர்த்தங்களும் ஸ்தலங்களும் மூர்த்திகளும் புராணக் கதைகளும் பரிகாரங்களும் இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் செய்தாலும் மனிதன் உயர்வு பெற முடியாது. சாகிற வரை அல்லது ஹிந்து மதத்திலிருந்து வெளியே போகிற வரை இவனைப்பற்றிய இழிவு, தாழ்ந்தவன் என்ற தன்மை ஒழிவதற்கே வழி கிடையாது. இந்து மதத்திலிருந்து தாழ்ந்த ஜாதி, தீண்டத்தகாத பாபி என்றிருக்கும் ஒரு பஞ்சமன் மகமதிய மதத்திலாவது கிறிஸ்தவ மதத்திலாவது புகுந்தால் அந்த நிமிஷத்திலிருந்து அவனை அந்த மதத்தினரும் இந்த ஹிந்து மதத்தினரும் போற்றி மனிதப் பிறவியில் சமத்துவங்கொடுக்க முன்வருவதைக் காண்கிறோம். இவ்வளவு சக்தி மற்ற மதங்கட்கிருக்கிறது. ஆனால் ஹிந்து மதத்தில் கொடுமை நிறைந்திருப்பதை எவரும் மறுக்க முடியவில்லை. எந்தப் பாவத்தையும் போக்கிப் பரிசுத்தத்தைத் தருமென்று சொல்லப்படும் எந்தத் தண்ணீரில் முழுகினாலும் தீண்டாதவன் தீண்டாதவன்தான். சர்வ பாவத்தையும் போக்கி உயர்கதியைத் தருமென்று சொல்லப்படும் எந்த சுவாமியைக் கும்பிட்டாலும் தீண்டாதவன் தீண்டாதவன்தான். சர்வ பாவங்களையும் போக்கும்படி எந்தப் பரிகாரங்களைச் செய்தாலும் தீண்டாதவன் தீண்டாதவன் தான். தீண்டாமையை எந்தச் சாஸ்திரமும் எந்தத் தீர்த்தமும் எந்தத் தலமும் எந்த சுவாமியும் எந்தப் பரிகாரமும் தீர்க்குமென்று பார்ப்பனரும் மற்றவரும் ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் பாவம் போக்குந் தண்ணீரும் சுவாமியும் ஸ்தலமும் பரிகாரமும் ஹிந்து மதத்திலிருப்பதுபோல் வேறெம்மதத்திலுங் கிடையாது. ஆனால் பாவம் மட்டும் போவதில்லை. மற்ற மதங்களில் பாவம் போக்க இத்தனை ஸ்தாபனங்களில்லாவிட்டா

லும் எந்த மதத்தினர் கழித்து விமோசனமின்றித் தள்ளுகிறார்களோ அவர்களையெல்லாம் பரிசுத்தம் செய்யும்படியான உயர்ந்த எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கிறது. அதனாலேதான் அம்மதங்கள் உயிர்பெற்று உலகில் தனியரசு தாங்கிச் செழித்துக் கொழுத்து மேன்மை பெற்று விளங்குகின்றன.

பிறந்தது முதல் தீட்டென்பதொரு புறமிருக்க, இறந்ததீட்டு பிறந்ததீட்டு மாதாந்தரத்தீட்டு என்று இன்னுஞ்சில ஏற்பட்டுள்ளன. இவை வேறுமதத்தினருட் கிடையா. ஒருவர் இறந்து போனால் பார்ப்பனருக்குப் பத்துநாளும், க்ஷத்திரியருக்குப் பன்னிரண்டுநாளும், வைசியருக்குப் பதினைந்துநாளும், மற்றவருக்கு முப்பதுநாளும் தீட்டுண்டென்று எழுதப்பட்டுக் கிடக்கின்றது. இப்படியே மூன்று கூட்டத்தார் தீட்டுக்காத்து வருவதையும் பலரறிவர். ஒருவர் இறப்பாரானால் உயிருடனிருப்பவரைத் தீட்டுப் பிடித்துக்கொள்ளுங் காரணமென்னவோ! புண்ணியாகவாசனம் செய்து ஐயருக்குத் தட்சணை கொடுத்தால் தீட்டுப்போய்விடும். இதைத்தவிர ஏதாவது இத்தீட்டுக்குப் பொருளுண்டா! எந்த தேசத்திலாவது இவ்வளவு கொடுமையும் அனுவசியமும் ஏமாற்றமும் இவ்விஷயத்தில் ஏற்பட்டிருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். குழந்தை தாயின் வயிற்றிலிருந்து பிறப்பதற்கேற்பட்ட தீட்டென்னவென்று விளங்கவில்லை. வயிற்றினுள்ளே இருக்கிறவரை தீட்டென்று கூறப்படவில்லை. பிறக்கிற குழந்தை தீட்டென்று கருதப்படுவதில்லை. பிறந்த உடனே சில நாள்வரை அந்த வீட்டில் தீட்டு ஒட்டிக்கொண்டிருக்கிறதென்றும் ஐயர் வந்து பணத்தை வாங்கிக்கொண்டு தண்ணீர் தெளித்தால் அது விலகிவிடுகிறதென்றும் கருதுவதன் காரணமென்ன? பித்தலாட்டத்தைத் தவிர வேறேதும் இருக்கமுடியுமா? பெண்மக்களின் மாதாந்த ருதுகாலம் தீட்டென்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வொன்றினால் தான் பெண்மக்கள் நாயினுங் கீழாக மதிக்கப்படுகிறார்கள். இக்கொடுமை முறையிருப்பதால்தான் பெண்மக்களைப் பாமர ஜனங்கள் மிக இழிந்தவர்களென்று கருத முடிகிறது. இதைச் சொல்லியே பெண்மக்களை இழிந்தவர்களென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் ஏற்படும் ருதுவால் பெண்மக்கள் தாழ்ந்தவர்களென்று கருதப்படுவதென்றால் பத்துமாதம்

அந்தப் பையில் கட்டப்பட்டு ஊறிக்கிடந்து வெளிப்படும் குழந்தைகள் தீட்டு மயமல்லவோ? அந்தக் குழந்தைகள் கோவிலினுள் செல்லவும் பிறர் தொடவும் யோக்கியமுடையதாவதெங்ஙனம்? இதை உத்தேசித்தே பழய புராணக்காரர் துளசிச் செடியினடியிலும் தண்ணீரிலும் யாக குண்டத்திலும் மகான்கள் பிறந்தனரென்று எழுத ஆரம்பித்தனர். யோசித்துப் பார்க்கும் அறிவை ஆரம்பத்திலிருந்தே மூட நம்பிக்கையில் புகுத்தித் தேய்த்துவிட்டபடியால் மக்கள் அனுவசியமாகத் தீண்டாமையை ஒப்புக்கொண்டு மீளாத துன்பத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாகி வருகின்றனர். யோசித்துப் பார்க்கும் சக்தி யிழந்தவர்க்கு இம்மாதிரி விஷயங்கள் பயங்கரமாக இருக்கலாம். ஆனால் யோசனையைச் செலுத்துவார்க்கு சீர்திருத்தங்கள் இன்பக்கடலாட்டுமென்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

ஹிந்து மக்கள் உலகில் ஏதாவது உயர்வடைய ஆசையிருக்குமானால் "தொடாதே" என்ற சொல்லை உபயோகிப்பதில்லையென்று விரதம் வைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாத வரையில் இம்மதத்திற்குட்பட்ட எவரும் சிறந்த வாழ்க்கை வாழ வழி கிடையாதென்பதை உணரவேண்டும். இந்திய நாட்டுக்கு உயிரும் உணர்வும் நல்கவேண்டுமென்று எண்ணிய ஒவ்வொருவரும் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றனர். வேறு தேசங்களிலும் வேறு மதங்களிலும் இல்லாத இக்கொடுமை முறையானது இன்றே ஒழிக்கத்தக்கதாகும்.

---

# இன்பச்சுதந்திரம் எங்கட்கில்லையா?

மிஸஸ். நீலாவதி ராமசுப்பிரமணியம்.

**பெண்** பிறவியே பாபப்பிறவியென்னும் மூடநம்பிக்கையும் பெண் ஜென்மமே அடிமை ஜென்மமென்னும் குருட்டு நம்பிக்கையும் இந்திய நாட்டில் வேரூன்றி நிற்கின்றன. பெண்களைப் பலவிதத்தும் அடிமைகொள்ளும் நாடு எதுவென்று இன்று சிறிது ஆராய்வோமானால், அது இந்திய நாடு ஒன்றே என்பது தெள்ளிதிற்புலனாகும். எப்படிப்பார்ப்பனர்கள் தங்கள் பொய் புரட்

டுப் பித்தலாட்டங்களைப் பிறர் அறிந்துகொள்ளாதிருக்குமாறு முதலில் தங்களைத்தவிர மற்றவர்கள் கல்வி கற்கக்கூடாதென்று ஏடுகளில் எழுதிவைத்துத் தடுத்தார்களோ, அத்தன்மையாகவே பெண்களை அடிமை கொள்ள ஆண்கள் முதலில் அவர்களின் கல்விக் கண்களைப் பறித்துவிட்டார்கள். அதிலும், வேறு விடயம் ஏதாவது சொன்னால் எங்கு ஏற்றுக்கொள்ளப் படாமற்போகின்றதோ வென்றெண்ணி, மிகவும், பயங்கரமாகவும் ஆபாசமாகவும், கள்ளப் புருடனுக்குக் கடிதமெழுதுதல், என்பதைச்சேர்த்துக் காரியத்தைச் சாதித்துவிட்டார்கள். ஆனால், இவ்வண்ணம் சாதித்துப் பெண்பாவத்தை அடிமடியில் கட்டிக்கொண்டு இந்திய ஆணுலகம் ஏற்றபலன் என்னவென்பது பலருக்குத் தெரியவில்லை. பெண்களின் கல்விக்கண்களைப்பறித்து, அவர்களைத்தங்கள் காலின்கீழ் போட்டு அடக்கித் தாம் நினைத்தபடியெல்லாம் ஆட்டுவித்துவரும் ஆண்களின் யதேச்சாதிகார வாழ்வு கூடியவிரைவில் அழிந்துபடுவது உறுதி. யான் இவ்வாறு கூறுவதைப்பற்றிச் சில சுயநல ஆடவர்கள் என்மேல் சீற்றங்கொண்டாலும் கொள்ளக்கூடும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. "உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" உண்டாவது இயற்கைதான். ஒருவரின் சுயநல சூதாட்டத்தை எடுத்துக்காட்டிப் பகிரங்கப்படுத்தினால் 'சுள்ளாப்பு' வருவது சகஜந்தான். ஆகவே, இவ்வளவு காலமாய்ப் பெண்களைத் தாழ்த்தித் தங்களிலும் கீழானவர்களென்று அடக்கி ஒடுக்கி வைத்திருந்த ஆண்கள், இப்போது, 'ஆணைவிடப் பெண் தாழ்ந்ததல்ல, பெண்ணைவிட ஆண் உயர்ந்ததல்ல, ஆண் பெண் இருவரும் சமம் என்று சொல்வதைக்கண்டு அங்ஙனமே நடந்துவருவதைக் கண்டு ஆத்திரங் கொள்ளாது வேறென் செய்வார்? எங்கள் சுதந்திரங்களையெல்லாம் பறித்து, எங்களை மனிதக்கூட்டத்தினின்றே பிரித்து, எங்கள் கால்களைமுறித்து கண்களைக்கட்டி உணர்ச்சியை ஒடுக்கி உலகத்தின் கடைசி மூலையில் உட்காரவைத்த ஆண்களின் மனப்பான்மையை நினைத்தால் நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறது. இன்பச்சுதந்திரம் பெண்மக்கட்கில்லாமல் போனது ஏனென்று தெரியவில்லை. ஆணுலகிற்குப் பெண்கள் இழைத்திட்டதீங்கு யாதென்பதும் தெரியவில்லை. ஆண்களைப் பெண்கள்தெய்வம்போல் மதித்து வழிபடவேண்டுமென்று சொல்லப்படுகின்றது.

ஆனால் உண்மையில் பெண்களைத்தான் ஆண்கள் தெய்வமெனப் போற்றுதல் வேண்டுமென்று நான் கூறுகின்றேன். இது சிலருக்குக் கசப்பாய்த்தோன்றலாம். ஆம்! அதற்கு என்னசெய்வது? பெண்களை இதுவரை அவ்வாறு அடக்கி வைத்திருக்கையில் பெண்களுக்கு எப்படி இருக்கும்? இல்வாழ்க்கையில், பொதுவாக உலக வாழ்க்கையில் பெண்ணுக்கிருக்கும் பங்கு ஆண்களுக்கிருக்கின்றதாவென்று பார்ப்போமானால், இல்லையென்ற முடிவிற்குத்தான் வரவேண்டியிருக்கும். இதுபற்றி ஒருவரும் பேராச்சரியம் கொள்ளுதல் வேண்டாம். அவரவர்களே நன்கு யோசித்துப் பார்க்கட்டும். ஆண்கள் பெண்ணின் பெருமையை அறியாமல் அல்லது சுயநல மிகுதியால் அவர்களை அடிமைகளாக ஆக்கி அந்தப்புரக் கோட்டையில் அடைத்துவிட்டார்கள். ஆண்களுக்கிருக்கும் அளவற்ற சுதந்திரங்களில் பெண்களுக்கு அணுவும் கிடையாது. பெண்களுக்குச் சுதந்திரம் கொடுத்தால் குடி முழுகிப்போகுமென்று கருதுகின்றார்கள். உலகமே அழிந்துவிடுமென்று சத்தமிடுகின்றார்கள். பெண்களின் தற்கால நிலையை உற்று நோக்கின் அவர்களின் பரிதாபகரமான அடிமை வாழ்க்கையைக் கண்டு ஆற்றொணாத் துயர் அடையவேண்டித்தான் வரும். பெண்களைப் படைக்கும்போதே 'பிரமன்' அவர்களை அடிமைகளாகவே யிருக்கும்படி செய்துவிட்டானென்று வைதீகர்கள் வாய் வேதாந்தம் பேசுகின்றனர். 'பிரமன்' கட்டளை அவ்வாறிருக்குமென்று நம்புவதற்குச் சிறிதும் இடமில்லை. இன்பச் சுதந்திரம் பெண்கட்குக் கொடுக்கப்படாமல் துன்ப அடிமைத்தனம் கொடுக்கப்பட்டுப் பலவிதத்தும் எங்களைத் துயர்க்கடலில் அமிழ்த்தி வைத்தது, இப்போதும் அமிழ்த்தப் பார்ப்பது, இனிமேலும் அமிழ்த்த முயற்சிப்பது ஆணுலகிற்கு நீதியாகுமா? இவர்கள் மனம் கல்லினும் கடிதோ? அன்றி இரும்பினும் கொடிதோ? பெண்களை ஆண்கள் தங்கட்கு இரண்டு மூன்று விடயத்தில் உபயோகமாகும் ஒரு கருவியாக வைத்திருக்கின்றார்களேயன்றி மற்றப்படி அவர்களும் (பெண்களும்) நம்மைப் போல் ஒரு மனிதப்பிறவிதான், இவ்வுலகில நமக்கு வேண்டும் சுதந்திரங்கள் அனைத்தும் அவர்களுக்கும் வேண்டும் என்று எண்ணுவதில்லை. கூர்ந்து நோக்கினால் எவ்விதத்தும் பெண்ணுக்கு எதொரு சுதந்திரமும் இல்லையென்பது எப்படிப்பட்டவருக்கும்

இனிது விளங்கும். சாப்பாட்டு விடயத்திலும், சாதாரணமாய் நித்திரை செய்யும் விடயத்திலும், ஆசனங்களில் அமரும் விடயத்திலும் கூடப் பெண்கள் பின்னிலையில்தான் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். முதலாவது சாப்பாட்டை எடுத்துக்கொள்ளுவோம். சாப்பாடு சரியாய் இல்லாவிட்டால் ஆளைப்பார்ப்பது அரிதாய் விடும். அன்னம் ஒடுங்கினல் ஆளும் ஒடுங்கவேண்டியதுதான். இது எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதான். ஆனல் பெண்களைப் பொறுத்த வரையில் இது என்னவோ கொஞ்சம் தெரியாமல்தான் போய்விட்டது. 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு' என்று ஒளவையாரும் உரைத்துவிட்டார். அவர் எந்நோக்குடன் கூறியிருந்தாலும் சரி, அல்லது இப்போது சில வீரர்கள் அதற்கு என்ன தத்துவார்த்தம் கூறினலும் சரி, அதை ஆதாரங்காட்டிப் பேசுவதில் மட்டும் குறைவில்லை. "வயிற்றைக்கட்டிப் புருஷனைப் போற்று" என்றொரு பழமொழியும் தமிழ் நாட்டில் வழங்கிவருகின்றது. அன்பு காரணமாகத், தான் சாப்பிடுவதைப் புருடனுக்குக் கொடுத்தால் அதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபம் கிடையாது. அதைப்பற்றிக் குறைகூறுவாரும் இல்லை. ஆனல், சாப்பாட்டு விடயத்தில் பெண் மட்டமாய்த்தான் இருக்கவேண்டும்; ஏதோ பழையதோ பட்டதோ கஞ்சியோ கூழோ அதைத்தான் பெண்கள் சாப்பிடவேண்டும் என்று முரட்டுப் பேச்சுப் பேசுவதைத்தான் அடியோடு ஆட்சேபிக்கவேண்டியிருக்கிறது. பெண்களுக்குக் காப்பி என்னத்திற்கு? பலகாரம் என்னத்திற்கு? என்று அவர்களை "ஊனிருக்க உயிரை வாங்குவது" என்பதுபோல் செய்துவிட்டால், ஆண்களுக்குப் பலமாய் உழைப்பது எங்கே? இதை உத்தேசித்தாவது அது விடயத்தில் கொஞ்சம் விட்டுக்கொடுக்கக்கூடாதா? இரண்டாவது பெண்கள் கட்டிலில் மெத்தையில் படுப்பது ஒரு பெருங் குற்றமாகக் கருதப்படுகின்றது. அந்தோ! அவர்கள் உடம்பு மனித உடம்பல்லவா? ஐயோ! இது கூடவா தடுக்கப்படவேண்டும்! மூன்றாவது பெண்கள் நாற்காலிகளில் உட்காரப்படாதென்பது. ஒரு பெண் நாற்காலியில் உட்கார்ந்திருக்க யாராவது கண்டுவிட்டால், அவர்கள் துள்ளும் துள்ளு சொல்லவேண்டியதில்லை. கொஞ்சம்கூட வெட்கமில்லாமல் ஆண்பிள்ளையைப்போல் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைப்

பாருங்களேன் ? என்று கொடித்துவிடுவார்கள். ஆனாலும் இந்திய நாட்டில் பெண்கள் இவ்வாறு துயர்ப்படுதல் அடாது! அடாது!! அருமைச் சோதரர்களே! சிறிது அறிவைச் செலுத்தி எங்கள் உலகை உற்று நோக்குங்கள்! உங்களோடு நாங்கள் சரிசமமாய் வாழ்வதில் உங்களுக்கோ அன்றி எமக்கோ ஒரு விதத்திலும் தாழ்வு வந்துவிடாது. வேற்றுமையின்றிச் சேர்ந்து வாழ்வது சிறப்பேயொழிய சிறுமையில்லையென்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இன்பச் சுதந்திரம் எங்கட்கில்லாது போகவேண்டாம். உங்களைப்போல் நாங்களும், எங்கும் உல்லாசமாய்ச் சென்று எதையும் கண்டு மகிழ்ந்து இன்ப வாழ்க்கை நடத்தவே ஆசைப்படுகின்றோம். அதில் குறுக்கிட்டு எங்கள் இன்பச் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்யப் பார்ப்பது அழகு அல்லவே அல்ல.

---

# ஒன்றுக்கொன்று முரண்.

## புராண ஆபாசம்.

சென்ற மாத இதழில் காஞ்சிப் புராணத்திலிருந்து ஒரு சிறு பகுதியை எடுத்து எழுதியிருந்தேன். அவை என்னாலாவது அல்லது என்போன்ற வேறொரு சாதாரண மனிதராலாவது எழுதி வைக்கப்பட்டதல்ல. பரமசிவன் பார்வதிக்குச் சொல்லியதை மடியிலிருந்து கேட்ட சுப்பிரமணியக் குழந்தை அகத்தியருக்குச் சொல்லி வெளிவந்ததாகும். அந்த அற்புதம் சமஸ்கிருதத்தில் மட்டும் இருந்தாற் போதாதென்று தமிழில் பாடும்படி காஞ்சி ஏகாம்பரநாதர் உத்திரவு கொடுத்துத் தூண்டிவிட்டதால் மகா மகா யோகியாகிய சைவ சித்தாந்தப் பெருஞ்செல்வர் சிவஞான யோகீஸ்வரர் திருவாய் மலர்ந்திருக்கிறார். இவர் ஏன் இப்படி ஆபாஸமாகப் பாடினாரென்பதற்கு இதேஜாதிக் கதையொன்று பாகவதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதற்குப் போட்டியாகவே வைணவரின்கடவுளான விஷ்ணுவைக் கேலி செய்யக் காஞ்சிப் புராணத்தில் இக்கதை சேர்க்கப்பட்டிருக்கின்றதென்பதை விளக்க பாகவதத்திலுள்ள பகுதியை இங்கே தருகிறேன்.

பாகவதம் சிறப்புப்பாயிரம் பாட்டு 4.

தழைத்த நான்மறைத் தடஞ்சினைக் கற்பக தருவின்
பழுத்துதிர்ந்தது பரமபாகவதம் என்றுஇசைக்கும்
விழுப்பெருங் கனிநுகர்ச்சியே விரும்புவார் மேலோர்

"சிறந்த நான்கு வேதங்களாகிய கற்பக விருக்ஷத்திலிருந்து பழுத்து உதிர்ந்ததே மேன்மை பொருந்திய பாகவதமாகும். அப்படிப்பட்ட பாகவதமாகிய உயர்ந்த பெரிய கனியின் உணவையே மேலோர் விரும்புவார்கள்" என்று சிறப்புப்பாயிரத்தில் பாகவத புராண ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஷை பாட்டு 5.

பூமடந்தை புணர்ந்தவன் மாக்கதை
நாமடந்தை நவின்றனள் ஆகலான்
காமடந்தை யென்று ஓர் கவியான் சொலின்
பாமடந்தையள் பாடியதாகுமே.

பூமா தேவியைக் கலந்தவனாகிய மகாவிஷ்ணுவின் பெருமை பொருந்திய கதையாகிய பாகவதத்தை சரசுவதி தேவி சொன்னாள். ஆதலால் கவிஞனாகிய நான் அதை இப்போது சொன்னால் அதுவும் அந்த சரசுவதிதேவி சொன்னதாகவே ஆகும் என்று பாடியவர் சொல்கிறார். இதனால் பாகவதக்கதைகள் வேதத்தில் பழுத்த பழமென்றும, மேலோர்தான் இதை விரும்புவாரென்றும் சொல்லப்படுகிறது. இந்தக்கதை முழுமையும் சரசுவதியென்னும் பெண்தெய்வம் சொன்னதென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதனை ஞாபகப்படுத்திக்கொண்டு புராணக் கதையிற் கைபோடலாம்.

மோகினி யுருக்காட்டிய அத்தியாயம். பாட்டு 1.

பெய்கடல் கடைந்தநம்பி பெண்ணுரு வெடுத்தல் காண்பான்
மைகனிந் தொழுகுகண்டன் மருங்குறை மங்கையோடு
நெய்கனிந் தொழுகும் வெவ்வாய் நேமியான் இருக்கை சேர்ந்தான்

கடலைக்கடைந்த மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுப்பதைக் காணும்பொருட்டுச் சிவபெருமான் பக்கத்திலே பொருந்தியிருக்கிற பார்வதியோடு வைகுண்டத்துக்குச் சென்றார்.

ஷை பாட்டு 2.

மாய்வில் வைகுந்தம்மேவி மதியணி சடையோன் எந்தாய்
தூயவர் ஒன்றே யென்னத் தொழுமவர் இரண்டேஎன்ன
ஆயினை;

ஒரு நாளும் அழியாத வைகுந்தத்திற்குச் சிவபெருமான் சென்று விஷ்ணுவை நோக்கி, எமது சுவாமியே! அறிவாளிகள் ஒன்றே பொருள் என்று சொல்லவும், பக்தர்கள் இரண்டு பொருளென்று (துவைதம்) சொல்லவும் ஆகிநிற்கின்றாய் என்று சொல்லி அவர் பெருமையைக்கூறினார்.

ஷை பாட்டு 3.

பெண்ணுருக் காணவேண்டிப் பெரிதுஉளம்பெட்டது இன்னே
கண்ணவென்று ரைத்தான் வெய்ய கனல்உமிழ் கணிச்சியானே

நெருப்பைக்கக்குகின்ற கண்ணையுடைய சிவபெருமான், மோகினியாகிய பெண்ணுருவை இந்த நிமிஷமே காணவேண்டுமென்று தன்மனம் மிகமிக ஆசைப்படுகின்றது என்று சொன்னார்.

ஷை பாட்டு 4.

குன்றவில் குழைத்த நக்கன் கூறிய மாற்றங்கேளா
நன்றெனப் பவளச்செவ்வாய் நகைநிலாத் தவழநக்கு
துன்றினர் விழைந்த நல்கும் தொல்புருஷோத்தமன்தான்
மன்றலங் கடுக்கையான்கண் மறைந்தனனங்கண் மானே.

சிவபெருமான் சொன்ன சொல்லைக்கேட்டு நன்று என்று சொல்லி நெருங்கினவர் விரும்புவதைக் கொடுத்து அருளுகின்ற பழமையான புருஷோத்தமனாகிய மகாவிஷ்ணுவானவர் சிவபெருமானை விட்டு மறைந்தனர்.

ஷை பாட்டு 5.

...........பூங்கடுக்கை மார்பன் வாள்விழி பரப்பி நோக்க
எழுஞ்சுடர்ப் பரிதியென்ன இலங்குகூர் ஆழிமாலோன்
பிழிந்துகொள் வனைய செவ்விப் பெண்ணுரு எடுத்து நின்றான்.

சிவபெருமான் தன்னுடைய வாள் போன்ற விழியினால் பார்க்கும்படி சக்கரத்தையுடைய விஷ்ணுவானவர் அழகைப் பிழிந்து கொள்ளும்படியான பெண்ணினுடைய உருவத்தை யெடுத்து நின்றார்.

இதுவரை கூறிய பாட்டுக்களை நோக்கலாம். மகாவிஷ்ணுவினுடைய பெண்வேஷத்தைப் பார்ப்பதற்காகத் தம்மனைவியோடு கைலாசத்தைவிட்டுப் புறப்பட்டு வைகுண்டம் சென்றிருக்கிறார். திருவண்ணாமலைப் புராணத்தில் சிவபெருமானுடைய பாதத்தைக் காண்பதற்காகப்பன்றி உருவெடுத்துப் பாதாளம்வரை துளைத்

துச் சென்றுங்காண முடியவில்லையென்று எழுதியிருக்கிறது. ஆனால் பாகவதத்தில் சிவபெருமான் பெண்டாட்டியோடு புறப்பட்டு வைகுண்டம் போனாரென்று எழுதியிருப்பது கவனிக்கத் தக்கது. கைலாயத்தில் இருந்தபடியே விஷ்ணுவை வரவழைத்துப் பெண்வேஷம் எடுக்கச்சொல்ல முடியாமற்போய்விட்டது! அது போகட்டும். விஷ்ணுவைப்பார்த்து, எமது சுவாமி என்று விளிக்கிறார். அத்வைதம்என்றும் த்துவைதம்என்றும் சொல்லும்படி எங்கும் நிறைந்து நிற்கின்றீர், உம்மையன்றி வேறொரு சர்வசக்தி இல்லையென்றும் சிவபெருமான் சொன்னதாக இரண்டாம்பாட்டு கூறுகின்றதே. இதனைச் சைவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா? ஒப்புக்கொண்டால் சைவ சித்தாந்தம் போய்விடும். ஒப்புக்கொள்ளாமல் 'இதுபொய்' என்றால் புராணம் பொய்யென்ற பாவத்துக்கு ஆளாவர். பெண்ணுருவைக்காண வேண்டுமென்று பரமசிவ பெருமான் பேராசைப்பட்டாராம்.

ஷை பாட்டு 8.

மழையை நோக்கிய மடமயில் சாயலாள் மதர்த்த
விழியை நோக்கும் அவ்விடத்தினை நோக்கும் வெங்காமம்
தழையும் நோக்கினை நோக்கும் உள்தளரும் தன்செங்கை
உழையை நோக்கும் பிஞ்ஞகன்மயல் யாதென உரைக்கேன்.

கார்மேகத்தைக்கண்ட இளமயிலின் சாயலையுடைய அப்பெண்ணின் செழித்த விழியை சிவபெருமான் பார்க்கிறார்; அதிலிருக்கும் விஷத்தைப் பார்க்கிறார்; கொடுமையான காம நோயானது வளர்வதற்குக் காரணமான பார்வையைப் பார்க்கிறார்; மனந் தளருகிறார்; தன்னுடைய சிவந்த கையிலிருக்கிற மானைப் பார்க்கிறார். இப்படியாகப் பரமசிவனுக்கேற்பட்ட காம மயக்கத்தை எப்படிப்பட்டதென்று என்னால் சொல்லமுடியும்?

பரமசிவன் மகாவிஷ்ணுவிடம் பெண்வேஷம் போட்டுக்காட்டும்படி கேட்டு அந்த வேஷம் எதிரே வந்தவுடன் புத்திமருண்டு அந்தப் பெண்ணின்மேல் ஆசைகொண்டு புத்திகெட்டுத் திண்டாடுகின்றாரென்றும், இன்னும் காமமயக்கங்கொண்டு அவர் செய்த காரியங்களைச் சொல்லமுடியவில்லை யென்றும் சரசுவதியே சொல்வதாக எழுதப்பட்டிருப்பது வேடிக்கையல்லவா?

ஷ பாட்டு 12.

அழல்கட் பாய்புலி அதளுடை நெகிழ்தர..........

சுழலும் வண்டு இமிர் கொன்றையந்தொங்கலான் தொடரும்

அரையிற் கட்டியிருக்கும் புலித்தோல் அவிழ சிவபெருமான் பெண்ணைத் தொடர்ந்தார்.

ஷ பாட்டு 15.

பிறையும் வில்லும் ஒத்து இலகிய திருநுதற்பேதை
அறையும் வண்டிமிர் அணிமலர்த்தடஞ்சினைதோறும்
மறையு மாற்றருமாதர் மீதூர முக்கண்ணன்
இறையும் நாணிலன் பின் செலும் இருங்களிறேய்ப்ப

அந்த அழகிய பெண்ணுருவம் கிளைவழிகளிலெல்லாம் சென்று மறைகிறது. ஆசைபற்றி வளர்தலால் முக்கண்ணனாகிய சிவபெருமான் அணுவளவுகூட வெட்கமில்லாமல் பொலியெருது மாதிரி பின்னாலே ஓடினார்.

ஷ பாட்டு 16.

நெறித்து நெய்கனி குழல்உமை நகுவதும் நினையான்
பொறுத்த கங்கையாள் புன்னகை கேட்டலும் கருதான்
அறற்கருங்குழல் பற்றினன் அங்கையால் தழுவ
எறிக்கும் சேயிழை மின்னெனக் கைப்படாதிலகும்.

பக்கத்திலிருக்கும் பார்வதியானவள் சிவபெருமானுடைய இச்செயலைக்கண்டு சிரிப்பதையும் கருதவில்லை. தலைமேலிருக்கும் கங்காதேவி பார்த்துச்சிரிப்பதைக்கேட்டுப் புத்தி சரிப்படவும் தயாரிலில்லை. எதிரே தோன்றுகிற விஷ்ணுவாகிய பெண்ணுருவத்தைக் கட்டித்தழுவும் பொருட்டுத் தலைமயிரைப் பிடிக்க முயன்றார். அப்பெண் இவர்கையிலகப்படாமல் மின்னலைப்போல விலகியது.

ஷ பாட்டு 17.

ஆனதொன்முதல் தாய்தந்தையாம் அவன் உரு ஈதென்னான்
கானலைப்புனல் என்று ஓடும் கலையென மயர்ந்து செல்வான்

எல்லாவற்றுக்கு மூலகாரணமான தாயும் தந்தையுமாக விளங்கும் மகாவிஷ்ணுவின் உருவம் இதுவாகுமென்னும் உணர்வைச் சிவபெருமான் இழந்துவிட்டு, கானலை நீரென்று நினைத்து ஓடியோடி அலைந்து ஏமாந்து போகும் மானைப்போல அலைந்து திரிந்தான்.

இப்பாட்டுக்களால் பரமசிவன் எட்டியெட்டிப் பிடித்தாலும் விஷ்ணுவைப்பிடிக்க முடியாதென்று கூறப்படுகிறது. ஒருபெண்ணைக்கண்டு காமவெறிகொண்டு சிவபெருமான் புத்திகெட்டுத் திண்டாடித் தெருத்தெருவாக ஓடித்திரிந்தாரென்றும், அந்தப் பரிதாப நிலையில் கட்டியிருந்த புலித்தோலும் கழன்று விழுந்ததென்றும் பாடித்தள்ளியிருக்கின்றனர். இவர் திரிந்து சீரழிவதைப் பார்த்துப் பக்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் பார்வதியும் தலைமேலிருக்கும் கங்கையும் சிரித்தார்களென்றும் அதுவும் சிவபெருமான் புத்தியில் தட்டவில்லையென்றும் பாடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இதற்கப்பால் பாகவதம் போகிறபோக்கைப் பாருங்கள் !

ஷை பாட்டு 18.

பார்த்தனன் வேனில் வேந்தன் பழம்பகை தீரமற்றுங்
கார்த்தனன் சிலைகால் கோட்டி அயில்முகப் பகழிமாரி
தூர்த்தனன் இளவெண் திங்கள் சூடுசெஞ் சடையினானும்
போர்த்தனி ஏறுபோலப் புலன் அழிந்து ஒழுகிநின்றான்.

இப்படியாகப் பரமசிவன் திண்டாடித் தெருவில் திரிவதை மன்மதன் பார்த்தான். தனக்குள்ள பழய பகையைத் தீர்த்துக் கொள்ள இதுதான் சமயமென்று கருதி வில்லை வளைத்துப் பரமசிவன்மேல் கூர்மையான அம்புகளை மழையாகப் பொழிந்தான். இளஞ் சந்திரனைச் சூடியிருக்கிற செஞ்சடைக் கடவுள் போருக்குச் செல்லும் எருதைப்போல அறிவு கெட்டு இந்திரியத்தை ஒழுக விட்டு நின்றான்.

இதைக்காட்டிலும் பரமசிவ பெருமானைக் கேலிசெய்ய முடியுமா என்று கேட்கிறேன். வெட்டை நோய் கொண்டவனின் நிலைமையைக்காட்டிலும் மோசமான நிலைமையைச் சிவபெருமான் அடைந்திருக்கிறார். இவ்வளவு பரிதாபமான நிலை மனிதர்களுள் கடைகெட்ட ஒருவரிருவருக்கு நிகழுமென்று வைத்துக்கொண்டாலும் பெண்டாட்டியையும் பக்கத்திலேயே கூட்டிக்கொண்டு இப்படி நிகழ்த்த மனம் வருமா ? இடது கையில் பெண்டாட்டியையும் தூக்கியணைத்துக்கொண்டு தலையிலும் ஒரு பெண்ணை வைத்துச் சுமந்துகொண்டு அவர்களும் இவரைப்பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்க, ஒருவன் பெண் வேஷம் போட்டுக்கொண்டு நடிப்

பதைக் கண்டு காமவெறி பிடித்து அலைந்து திரிந்ததோடு மட்டுமல்லாமல் கடைசிவரையில் நாறி நாற்றமெடுத்தார் என்று எழுதியது என்ன அற்புதம்! இதுதான் பரமபாகவதம்! இதைத்தான் சரசுவதியம்மாள் உலகத்துக்குச் சொல்லியருளினுள். இதுதான் சென்ற பல்லாயிரம் வருஷமாகக் கோவில்களிலும் மடங்களிலும் வைத்துப் படிக்கப்படுகிறது. இதை ஆணும் பெண்ணுங் கூடிக் குளித்து முழுகிப் பூசை செய்து கேட்டு வைகுண்டத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறுர்கள். இந்தப் புராணம் மெய்யா பொய்யா? சைவர்களே! சிவநேசர்களே! ஆஸ்திக ரத்தினங்களே! என்ன சொல்கிறீர்கள்? பொய்யென்ருல் நாஸ்திகராவீர்கள். மெய்யென்ருல் பரமசிவன் கதி அதோகதியாவதைத் தவிர வேறில்லை. பரமசிவனுக்கு இந்திரியம் ஒழுகின பிறகுதான் புத்தி வந்ததென்றுங்கூறப் பட்டிருக்கிறது.

ஷை பர்ட்டு 19.

மின்புரிந்தனையகற்றை விரிசடை மகுடத்தண்ணல்
என்புரிந்தனம் என்று உட்கி எருத்து இறைஞ்சினன் நின்ருனல்
பொன்புரி ஆரமார்பன் புரிவளையோடு வெய்ய
கொன்புரி ஆழியேந்திக் கொண்டலில் திகழநின்ருன்.

இந்த நிகழ்ச்சி நடந்த பின்னர் விரிசடை முடிக்கடவுளான சிவபெருமான் என்ன வேலை செய்துவிட்டோம் என்று வெட்கப் பட்டு பிடரியை வளைத்துக்கொண்டு மகா விஷ்ணுவை நமஸ்காரஞ் செய்தார். அப்பொழுது மகாவிஷ்ணுவானவர் சங்கும் சக்கரமும் தாங்கி கம்பீரமாக நின்றுர்.

ஷை பாட்டு 20.

........................................கயிலை சேர்ந்து
மடலவிழ் துளவப்பெம்மான் மாயையார் கடப்பர் என்ன
கடல்விஷம் நுகர்ந்தோன் வெற்புக் காரிகைக்கு உரை செய்தானல்

இதற்கப்பால் கயிலாசத்திற்குச் சென்று துளசியணிந்த கடவுளின் மாயா சக்தியை யாரால் காணமுடியும் என்று ஆச்சரியத்தோடு பார்வதியினிடத்தில் பரமசிவன் சொன்னுர்.

ஷை பாட்டு 21.

மடவரல் பாகனென்று மாமறை புகழ நின்றோன்
விடுபுலம் மண்ணில் வீழ்ந்து வெறுக்கையாய் விளைந்ததன்றே.

பெண்ணைப் பாதியாகவுடையவனென்று வேதங்களால் புகழப்பட்ட பரமசிவன் ஒழுகவிட்ட இந்திரியம் பூமியில் விழுந்து பெருகித் தங்கமாக விளைந்தது.

"பரமசிவனின் திமிர் அடங்கின பிறகுதான் புத்திவந்தது' அப்பால் தான் மானம் இன்னதென்று விளங்கியது; மகாவிஷ்ணுவின் பெருமை இனிது விளங்கிற்று. தலைவணங்கி அவரை வழிபட்டார். மகாவிஷ்ணுவினுடைய அபார சக்தியை அளக்க முடியாதென்று தன் பெண்டாட்டியிடம் புகழ்ந்து பேசினர்." என்றவரை கொண்டுபோய்விட்ட பிறகுதான் பாகவதம் எழுதின வைணவனின் மனம் திருப்தியடைந்திருக்கிறது. இதை யெழுதி வைத்ததோடுவிட்டால் ஜனங்கள் நம்பமாட்டார்களென்பதற்காக பழய சுவாமிகள் சொன்னதாகவும், ரிஷிகள் திருவாய் மலர்ந்ததாகவும், அதனைப் படிப்பதும் கேட்பதும் புண்ணியமென்றும் அதிலேயே எழுதப்பட்டிருக்கிறது. வைணவ புராணங்களுள் இந்த பாகவதம் மிக விசேஷமானதென்று கருதப்படுகிறது. முக்கிய புராணம் பதினெட்டனுள் இது ஒன்றாகும். இப்புராணம் சரசுவதியால் உலகுக்குச் சொல்லப்பட்டதை சூத புராணிகர், பிராமணருக்குச் சொன்னதாகவும் கேட்பவருக்கு ஏற்படும் பலனும் பின்வரும் பாட்டுக்களால் பெறப்படும்.

மாயவன் அமிசாவதாரமுரைத்த
அத்தியாயம் பாட்டு 2.

அரிய மாமகம் புரிதரு சாலையிலடைந்த
உரிய மாதவச் சூதனுக்கு உயர்தவிசு அளித்துப்
பெரிய மால்கதை கேட்குறு பெட்பினர் ஆகி
தெரியும் நான்மறை அந்தணர் செப்பல் உற்றனரால்.

அருமையான பெரிய யாகத்தைச் செய்கின்ற யாகசாலைக்கு வந்து சேர்ந்த சூத மகா முனிவருக்கு உயர்ந்த ஆசனங்கொடுத்து, பெருமை பொருந்திய விஷ்ணுவின் கதைகளைக் கேட்பதற்கு ஆசைப்பட்டவர்களாக நான்கு வேதங்களையுந் தெரிந்த பிராமணர்கள் தமது வேண்டுகோளைச் சொல்லத் தொடங்கினர்கள்.

ஷை பாட்டு 6.

உலகெலாம் தனது அகல்வயிற்று ஒருபுடை கிடப்பக்
கலையரும்பு கதிரிளமதி யெழில் கவற்றும்
திலகவாணுதல் தேவகி திருவயிற்றுதித்தோன்
குலவுமார்க்கதை கூறுவாய் என்று கூறினரால்.

உலகம் முழுமையும் தன் வயிற்றில் கிடக்கத் தான் தேவகி யின் திருவயிற்றில் உதித்தவனுகிய மகா விஷ்ணுவின் பெருமை பொருந்திய கதையைச் சொல்லவேண்டுமென்று சொன்னுர்கள்.

இந்த வேண்டுகோளைச் சூத முனிவர் ஏற்றுக்கொண்டு சொல் கிறுர்.

ஷ பாட்டு 10.

உரைசெய் வெங்கலி உததியைக் கடந்திடற்கு ஓடம்
பொருவில் தன்பதந் தோற்றிய கங்கையிற் புனிதம்
தெரிதரச் சொலக்கேட்க நல் தெவிட்டிடா அமுதம்
அரியவெம்பவ நோய்க்கு அருமருந்து அரிகதைதான்.

கொடுமையான கலியாகிய கடலைக்கடப்பதற்குத் தோணி யாகவும், விஷ்ணுவினுடைய திருவடியில் தோன்றிய கங்கையை விடப் பரிசுத்தமானதாகவும், தெரிந்துகொள்ளுதற்கும் சொல்லு தற்கும் கேட்பதற்கும் தெவிட்டாத தேவாமிர்தமாகவும், கொடு மையான பாவநோய்க்கு அருமையான மருந்தாகவும் அரிகதை யான இந்த பாகவதம் இருக்கிறது.

பாகவதத்தில் பரமசிவனைப் படுத்தியிருக்கிற பாடு எவ்வள வென்பதற்கு மேலே எடுத்துக்காட்டிய மோகினியுருக்காட்டிய அத்தியாயப் பாட்டுக்கள் போதியதாகும். இதைக்காட்டிலும் அசிங்கமான செய்திகளைப் பாட முடியுமா என்பதையும் கவனிக்க வேண்டும். இதைப் பரிசுத்தமென்றும் அமுதமென்றும் சொல் லப்பட்டிருக்கிறது. கலியைக் கடக்க இது துணை நிற்குமாம். கலியென்றுல் என்ன? இதைப் படித்துங் கேட்டும் அதனைக் கட க்கலாமென்றுல் என்ன பொருளென்பது சொல்லவேண்டியதில்லை. தவிர விஷ்ணுவின் காலிலிருந்து கங்கை உற்பத்தியானதென்று மேலே காட்டிய பாட்டில் குறிப்பிடப்படுகிறது. மகா விஷ்ணு வின் காலிலிருந்துண்டாகிற கங்கையைத்தான் பரமசிவன் தலையில் தாங்கினுரென்று பழிப்பதற்காக இங்கே அச்சாரம் போடப்பட்டி ருக்கிறது.

ஷ பாட்டு 13.

பவமெலாம் தொலைத்தருள்கதை பக்தியிற்கேளான்
புவியின்மேல் பிறந்தென்பயன் புனிதன் நற்கதையை
நவிலும் நாவினேர் நண்ணிய அன்போடு கேட்கும்
செவியினேர் தவத்தால் வருஜென்மமே ஜென்மம்.

பாவத்தை யெல்லாம் தொலைத்தருளுகின்ற இந்தக்கதையை பக்திசெய்து கேளாதவன் இந்தப்பூமியின் மேல் பிறந்து என்ன பயன்? பரிசுத்தமான அரியினுடைய இந்த நல்லகதையைச் சொல்லும் நாவைப்பெற்றவரும் அன்போடு இதைக்கேட்கும் செவியுடையவரும் தவத்தினால் எடுத்த ஜென்மமே ஜென்மம்.

என்று பாடப்பட்டிருக்கிறது. சரிதானா என்று கேட்கிறேன். மேலே காட்டிய கதையை ஜனங்கள் நம்பிப் பிடித்தால் என்ன பயன் கிடைக்குமென்பதை வாசகர்கள்தாம் உணரவேண்டும்.

இந்த பாகவத புராணத்தில் இந்தக்கதையைப்படித்த சிவஞான யோகியாகிய சைவருக்கு சகிக்கமுடியவில்லை. சிவபெருமான் "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த" மாதலால் அவருக்கு இம்மாதிரியான நிகழ்ச்சி ஏற்படாதென்று மறுத்திருப்பாரானால் அழகாக இருந்திருக்கும். அப்படிப்புத்தி போகவில்லை. நம்முடைய கடவுளை வைணவன் இழிவாகச்சொன்னபடியால் அவர்கள் கடவுளை இன்னுங்கேவலமாக எழுதவேண்டுமென்று கருதிக் காஞ்சிப்புராணத்தில் ஒரு தட்டுத் தட்டியிருக்கிறார். அதில், "வேஷம் போட்ட பெண்ணைக்கண்டல்ல; தன் மனைவி பார்வதியோடு என்றெழுதினார். பார்த்த மாத்திரத்தில் விந்திழக்கவில்லை, பல்லாயிரம் வருஷம் செய்தும் வெளிவிடவில்லையென்று தீட்டினார். நிர்வாணமாகவந்து கையில் வார்த்து விஷ்ணுமுதலியவருக்குக்கர்ப்பம் வந்து தவித்தார்கள் என்று பொறித்தார். அப்பால் பரமசிவன் அருள்பெற்று ஆள் தப்பினார் என்றும் கூறினார். இப்படியாகவே சைவர் வைணவரைத் திட்டவும் வைணவர் சைவரைத்திட்டவுமே புராணங்கள் எழுதப்பட்டுள்ளன. எழுதின மனிதனுடைய ஒழுக்கத்துக்கும் அறிவுக்கும் தக்கபடி புராணங்கள் அமைந்திருப்பதைக்காணலாம். புராணம் முழுமையும் உண்மை; கடவுள் வாக்கு என்றுரைப்போர் விளங்காமலும் அவற்றைப்படியாமலும் யோசித்துப்பார்க்காமலும் சொல்லுகின்றார்கள். உண்மையில் சைவர் வைணவர் புராணங்களையும், வைணவர் சைவ புராணங்களையும் உண்மை யென்று ஒப்புக்கொள்ள ஒரு நாளும் முடியாது. ஒப்புக்கொண்டால் மதமும் கடவுளும் சந்திக்கு வந்து கட்சி அழிந்தொழிந்து போவது திண்ணம்.

———

சர்ச்லைட்.

# "பொல்லாத கள்வர்யாவர்?"

சாமி. சிதம்பரனுர் எழுதுவது.

ஒரு நாள் மாலையில், விளக்குவைத்த நேரத்தில் நான் எனது படிப்பு அறையில் உட்கார்ந்துகொண்டு சில பழம்புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனது நண்பர் ஒருவர் வந்து சேர்ந்தார். அவர், காலையிலும் மாலையிலும் தவருமல் என்னிடம் வருவார். ஆனல் அன்று காலையில் வரவில்லை. ஆகையால் அவரைக்கண்டவுடன், வாருங்கள்! எங்கே, காலையில் வரவில்லை என்றேன். அவர் முகம் சிறிது வாடியிருந்தது. அதோடு கொஞ்சம் மெதுவான குரலில், மனவருத்தம் வெளிப்படும்படியான வார்த்தையாக "இரவில் என்வீட்டிற்குத் திருடர்கள் வந்து விட்டார்கள்" என்றுர்.

உடனே நான், "ஆ! அப்படியா! எந்தத்திருடர்கள் வந்தார்கள்? என்ன செய்தார்கள்?" என்றேன். அவர் "என்ன ஐயா! திருடர்கள் வந்துவிட்டார்கள் என்றுல் எந்தத்திருடர்கள் என்று கேட்கிறீர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கிறீர்கள்? எந்தத்திருடர்கள்தான் வருவார்கள்? என்னதான் செய்வார்கள்? உங்களுக்குத்தெரியாதா?" என்றுர்.

உடனே " இல்லை! இல்லை! பொருளைத்திருடிக்கொண்டு போகும் திருடர்கள் வந்தார்களா? அல்லது வேறு திருடர்கள் வந்தார்களா? என்று கேட்டேன்" என்றேன். அவர் "பொருளைத்திருடுகின்றவர்கள்தானே திருடர்கள்? வேறு யாரையா திருடர்கள்?" என்றுர்.

உடனே நான் "ஐயோ பொருள் திருடுகின்றவர்கள் மட்டிலும் திருடர்கள் அல்லர்; இன்னுஞ்சில திருடர்களும் இருக்கின்றுர்கள்; பொருள் திருடும் கள்ளர்களைவிட அவர்கள் மிகவும் கொடியவர்கள்" என்றேன். அவர் "அப்படியானல் அவர்கள் யார்? என்று கொஞ்சம் தயவு செய்து சொல்வீர்களா?" என்றுர்.

நான் "கொஞ்சம் தயவு என்ன? நிரம்பத்தயவு செய்தே சொல்லுகிறேன்; கேளுங்கள்! திருடிக்கொண்டு போகின்றவர்கள் ஒருவகையில் நல்ல திருடர்கள் என்று கூறலாம். எடுத்ததற்கெல்லாம் கூழைக் கும்பிடுபோட்டு ஏமாற்றுங்கள்ளர்கள்; பிறரை ஏமாற்று

வதற்காக விபூதியைக்குழைத்துப் பட்டைபோடும் கள்ளர்கள்; தெய்வத்தினிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர்கள் போல பாடல்கள் பாடி அழுகின்ற கள்ளர்கள்; அடிக்கடி தெய்வத்தை வணங்குவது போல பாவனை செய்யும் கள்ளர்கள்; எல்லோரையும்விடத் தாம் அதிகச் சுத்தம் உள்ளவர்போல ஆசாரத்தை அனுஷ்டிக்கும் கள்ளர்கள் ஆகிய இந்த ஐந்துபேர்கள்தான் பொல்லாத கள்ளர்கள்" என்றேன்.

உடனே அவர் "ஐயா நீங்கள் சுயமரியாதைக்காரர். ஆனதால் இம்மாதிரி சொல்லுகிறீர்கள்! உங்கள் அகராதியே வேறல்லவா? நான் இதை நம்பமாட்டேன்" என்றார்.

நான் "ஐயா! நான் சொல்லாமல் வேறுயாரேனும் ஒரு சிவனடியார் சொல்லியிருந்தால் நம்புவீரா" என்றேன். அவர் "நம்புகிறேன்." என்றார்.

உடனே நான், நல்ல தமிழ்ப்புலவரும், தருமபுரம் மடத்தில் சந்நியாசம்பெற்றுத் தம்பிரானுயிருந்தவரும், சிவனடியாருமாகிய படிக்காசுத்தம்பிரானால் பாடப்பட்ட ஒரு புத்தகத்தையெடுத்தேன். அதில் கீழ்க்கண்ட பாட்டு இருந்தது. அதைக்காட்டினேன். அவரும் சரியென்று ஒத்துக்கொண்டார். அப்பாடலாவது:—

செழுங்கள்ளு நிறைசோலை தண்டலைநீள்
நெறியாரே திருடிக்கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர்; பொல்லாத
கள்ளர்இனி யாரோ வென்றால்,
கொழுங்கள்ளர் தம்முடன்கூடும் பிடுங்கள்ளர்;
திருநீறு குழைக்கும்கள்ளர்;
அழுங்கள்ளர்; தொழுங்கள்ளர்; ஆசாரக்
கள்ளர்; இவர் ஐவர்தாமே.

இதுதான் நான் சொல்லவந்தவிஷயம்; ஆனால் இன்னும் முடிவில்லை கொஞ்சம் பாக்கியிருக்கிறது. அதையும் கூறிவிடுகிறேன். நானும் சொல்லாமல் அரைகுறையாக விடுவது நல்லதன்று. நீங்களும் "தொடரும்" என்று படிப்பீர்களானால் திருப்தி அடையமாட்டீர்கள்.

அதாவது உண்மையாக நடக்கின்றவர்களுக்கு,—மனத்தில் ஒன்றும், வாக்கில் ஒன்றும், செய்கையில் ஒன்றும் இல்லாமல் நடக்கிறவர்களுக்கு—மனத்தில் நினைப்பதையே செய்து வாழ்கின்றவர்களுக்கு ஒருவேஷமும் வேண்டியதில்லை. பொறுமைக்காரர்களுக்கும், பிறர் குடியைக் கெடுப்பவர்களுக்கும், ஏமாற்றுகின்றவர்களுக்கும், கூடாவொழுக்கம் நிறைந்தவர்களுக்கும் அழகான மேற்போர்வை வேண்டியதுதான்! என்ன அழகு வேண்டியிருக்கிறது! அந்த மேற்போர்வைதான் சமயவேஷம்! மதவேஷம்! நான் சொல்லவேண்டியதைச்சொல்லி முடித்துவிட்டேன். நீங்களும் கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்!

---

# விதவைகள் துயரம்.

எம். நாச்சிமுத்து எழுதுவது.

பஞ்ச அறிவுடன் கூடிப் பகுத்தறிவையும் பெற்ற நாம், அவ்வறிவுக்குச் சிறிதேனும், வேலைகொடுக்கவேண்டாமா? "வெள்ளையர்களுக்கு நாம் அடிமைப்பட்டுக் கிடக்கின்ருேமே இந்த அவமானத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா" வென்று பகுத்தறிவுக்கு வேலைகொடுக்கும்படி கூறிய என்னைக்கேட்பீர்கள். வாஸ்தவம், ஆனல், குடியிருப்பதற்கு வீடு ஏற்றதாயிருந்தாலன்ருே அவ்வீட்டில் குடியிருப்பவனை விரட்டியடிக்கலாம். வீட்டில் குடியிருப்பவன் பலவானயிருக்கும்போது அவனை விரட்டியடிக்க நமக்கு ஒற்றுமை வேண்டுமல்லவா? அந்த ஒற்றுமைதான் எங்கே என்று கேட்கிறேன். முதலாவது நமக்கு ஜாதி சமயங்களில் ஒற்றுமையுண்டா, கோயில் குளங்களில் ஒற்றுமையுண்டா, மலந்தின்னும் பன்றிகள்கூட ஓடியாடித்திரியும் பொதுத்தெருவில்தான் ஒற்றுமையுண்டா. இதெல்லாம் போகட்டுமைய்யா உங்கள் குடும்பத்தில் உங்கள் பெண்டுபிள்ளைகளுடனவது ஒற்றுமை வேண்டாமா? சுதந்திரம் வேண்டாமா?

உங்களுக்கு ஓர் பெண்மகள் பிறக்கின்றது. உடனே உங்கள் வீடு தீட்டுப்பட்டுப் போகின்றது. தர்ப்பைப்புல் கொண்டு பார்ப்பான் வந்து தண்ணீர் தெளித்தவுடனே தீட்டுப் பறந்து விடு

கின்றது. குழந்தையை அன்போடும் ஆவலோடும் வளர்க்கின்றீர்கள். வயதும் 8, 9, ஆகிவிடுகின்றது. வரன்பார்த்து சயனம்பார்த்து சாஸ்திரம் பார்த்துத் திருமணம் முடிக்கின்றீர்கள், கொஞ்சம் நாளையில், பெண்ணும் பருவமடைகின்றது. சாந்தி முகூர்த்தம் செய்துவிடுகின்றீர்கள். இரண்டோர் நாட்களில் மணமகன் இறந்து விடுகிறான். நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? அருமையாய் வளர்த்த உங்கள் புதல்விக்கு மொட்டையடித்து முக்காடிட்டு மூலையில் வைக்கின்றீர்கள், கால்வயிறும் அரைவயிறுமாகக் கஞ்சியை வார்க்கின்றீர்கள், "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றபடி உங்கள் புதல்வி பூ முடிக்கவும், அணிகலன் அணியவும், பொட்டிட்டுக்கொள்ளவும், பட்டுச்சேலை கட்டவும் ஆசைப்படுகின்றார்கள், நீங்கள் விடுகின்றீர்களோ! இல்லவே இல்லை. அதிலும் உங்கள் புதல்வரின் மனைவி ஒருவள் வீட்டிலிருந்துவிடின், கேட்கவேண்டியதில்லை. "கல்யாணமானதும் கணவனைக்கொன்ற பாதகி உனக்குக் காற்சிலம்பு வேண்டுமோ" என்பதுடன் இவைபோன்ற வசைமொழிகள் குபீர் குபீர் என்று கிளம்பிக்கொண்டேயிருக்கும். நீங்கள் இவற்றையெல்லாம் அறியாதவர்கள்போலவே யிருப்பீர்கள். இயற்கையாய் எழும் இன்பத்தை நுகரவழியின்றி உங்கள் புதல்வி ஆற்றொணுத்துயரத்தில் ஆழ்ந்துகிடப்பது உங்களுக்குத்தெரியாது. கணவனிறந்தபின் ஓர் பெண்ணின் வாழ்க்கை கிடையவே கிடையாது என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். "சட்டம் என்பது யாவர்க்கும்பொது" எனபதை இவ்விருபதாம் நூற்றாண்டிலும் நீங்கள் மறுக்கின்றீர்களா? முடியவே முடியாது. உங்களுக்கு ஓர்மனைவியிருந்து சிறிது நாளில் இறந்து விட்டால் நீங்களெல்லாம் பெண்டிழந்தவர்கள்தானே. சட்டப்படி நீங்கள் விதவர்கள்தானே. விதவர்களாய்விட்ட நீங்களெல்லாம் மறுமணம் செய்யாமலும், உலக இன்பத்தை நுகராமலும், இருந்தாலன்றோ உங்கள் சகோதரிகளும் அவ்வாறிருக்கவேண்டும். ஆண்களுக்கு ஏற்படும் சுகதுக்கம் பெண்களுக்கும் உண்டல்லவா. அப்படியாயின் ஏன் மறுமணம் செய்துகொள்ள உங்கள் சகோதரிகளை விடாமல் அடைத்துவைத்திருக்கின்றீர்கள். "உலகஇன்பத்தை நுகர ஆண்களுக்கே உரிமையுண்டு" "பெண்களுக்கு அவ்வுரிமையில்லை" என்பீர்களாகில், எல்லாம்வல்ல உங்கள் கடவுளுக்கு—பாரபட்ச

மற்றஉங்கள் கடவுளுக்குப் பெண்டு பிள்ளைகளுடன் படுக்கையறையில்பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கும் கடவுளுக்குச்சம்மதமாகுமா? தற்கால உலகப்போக்கிற்கு அது ஒத்ததாகுமா? பாரபட்சமற்றவர்களுக்கு நீதியாகுமா? பெண்களுக்கும் சமத்துவம் வேண்டும் என்னும் இக்காலத்துக்கு ஏற்றதாகுமா? அம்மனுக்கும் சாமிக்கும் எண்ணெஸ்நானம் செய்வித்து, பள்ளியறையில் படுக்கவைக்கும் அன்பர்களே! இது தருமமாகுமா? வெள்ளையர்களை விரட்டியடிக்கக் கங்கணம்பூண்டு நிற்கும் தேசியவாதிகளே! உங்களுக்கு இதுசம்மதந்தானா? இத்தகைய அநீதியைக்கண்டு வெள்ளையர்கள் வியப்படையார்களா? கலப்பற்ற சுயராஜ்யத்தைக் கொடுக்க அவர்களுக்கு மனம் இடம் கொடுக்குமா? ஆண்களுக்கொரு நீதி பெண்களுக்கொருநீதி என்பதை வெள்ளையர்கள் வெறுக்கார்களா? நமது நீதியைக்கண்டால் அன்னியநாட்டார் நகைக்கார்களா? இத்தகைய அநீதியை நாம் வைத்துக்கொண்டிருக்கும் வரையில் சமஉரிமைபெற்ற மேல்நாட்டுப்பெண்கள் நம்மவர்களையும், நம்சகோதரிகளையும், மதிப்பார்களா? சிவநேயச் செல்வர்களே! நீங்களே கூறுங்கள். "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. நீங்கள் எல்லாம் என்னைக்குறைகூறி நரகச்சீட்டைக்கொடுக்க வருவீர்கள். நான் முன்னமேயே நாஸ்திகப் பட்டத்தையும் நரகச்சீட்டையும் பெற்றுக்கொண்டிருக்கின்றேன். நமது சகோதரிகளை 90ல் இரண்டு பேர்களை இவ்விருபதாம் நூற்றூண்டிலும், அதுவும் சுயமரியாதைச்சர்ச்லைட் நாடெங்கும் புகுந்து ஒளிவீசாநின்ற இன்னாளிலும், விதவைகளாகவே வைத்திருக்கின்றோம். இயற்கையாய் எழும், இன்பத்தையடக்க முடியாமல் சில பெண்மணிகள் சோரம் செய்து மானமிழந்து மதிகெட்டுக் கிடப்பதை நாம் கண்கூடாகக்காண்கின்றோமன்றோ. சாக்கடைகளிலும், சந்துபொந்துகளிலும், அன்று பிறந்தகுழவி அலருவதை நாம் பார்த்ததில்லையா? பக்கத்துவீட்டுப் பண்பார் இளைஞனை அடைய அரும்பாடுபட்டும் முடியாமலிருந்து முடிவில் வெளியேறும் சகோதரிகளை நாம் கண்டதில்லையா? பூப்பு நிகழ்ந்தபின் புதுமணத்திலாசைவைத்துப், புலம்பியழும் மங்கையர்கள் எத்தனை பேர். தாய்தந்தையரின் கொடுமையைச் சகிக்கமுடியாமல் தற்கொலை செய்து கொள்வோர் எத்தனைபேர். நாத்தி கொடுமைகளை

கவில மிகவஞ்சி, நட்டாற்றிற்குதித்து உயிர் துறப்போர் எத்தனை பேர். அந்தோ! அத்தகைய பெண்மணிகளை நினைப்பின் நெஞ்சம் பதறுகின்றது. ஓ! சகோதரர்களே! நமதருமைச்சகோதரிகள், கற்பு என்ற ஒன்றினுக்கு அஞ்சியும் புத்திகெட்ட உலகம் சிரிக்கும் என்பதற்கஞ்சியும், ஜாதிக்கொடுமைகளுக்குப் பயந்தும், நரகம் என்ற ஒரு பெரும் புரட்டு இருக்கின்றதே, அந்த நரகத்துக் குப்போய்விட்டால் என் செய்வது என்பதற்கஞ்சியும், பார்ப்ப னர்களாலாக்கப்பட்ட பண்டைய மூடப் பழக்கவழக்கங்களுக்குப் பயந்தும், பெரும்புரட்டான தலைவிதியிருக்கின்றதே அதற்குத் தலைகுனிந்தும் முடிவில், "எல்லாம் அவன்செயல்" என்னும் அர்த் தமற்ற பழமொழியை நம்பி, கடவுள்செயலுக்கு யாரென்செய்வது. "அன்றெழுதியவன் அழித்தெழுதப் போருனு" வென்று அழுது புலம்பி அடுப்பங்கரையில் கிடப்பதற்கு யார் ஜவாப்தாரி? ஆண் மக்களாகிய நாமேயன்றோ. நமது சகோதரிகளுக்கு நன்மை செய்ய வேண்டிய பொறுப்பு நம்தலைமேல் இருக்க ஒரு காதற்ற ஊசியள வாவது விதவைப்பெண்களுக்கு நன்மை செய்திருக்கின்றோமா? இல்லவே இல்லை, துன்பமே செய்து வருகின்றோம். சுயமரியாதை க்காரர்கள், "எல்லாம் அவன் செயல்" என்பதனைப் பொய்மைப் படுத்துகின்றவரன்றோ? செல்வர்காள், தலைவிதியை மாற்ற நீங் கள் ஏன் முயற்சிக்கக்கூடாது? அதனால் வரும் கெடுதிகள் என்ன? துன்பம் எவ்வளவு? விபரீதம் என்ன? சற்று யோசனை செய்து பா ருங்கள்! அப்பொழுது தெரியும் உண்மை! அறிவுக்கு வேலைகொ டுக்கவேண்டியது மனிதனுடைய கடமை அல்லவா.

---

## பஞ்சாங்கக் கம்பெனி.

இப்போது ஊருக்கு ஊர் இருக்கிற பஞ்சாங்கக்காரர் சரியான படி தொழில் நடத்தவில்லை யென்ற புகார் அதிகப்பட்டுவிட்டது. பிரபுக்களுக்கும் ஏழைமக்கட்கும் திதி, தர்ப்பணம், மாளையம் பரிகாரங்கள், சங்கற்பம், தீர்த்தஸ்நானம் முதலியவைகளைத்தக்க படி செய்து வைக்க முடிகிறதில்லையென்பது எல்லாருக்கும் தெரிந் த விஷயம். ஆதலால் மேலேகண்ட பேருடன் ஒரு கம்பெனியை

ஆரம்பிக்க நாங்கள் விரும்புகிறோம். இந்தக்கம்பெனியின் ஏஜெண்டுகள் காசி முதல் கன்னியாகுமரிவரை இருக்கும்படி ஏற்பாடு செய்ய உத்தேசம். ஒவ்வொன்றுக்கும் திட்டம்போட்டு அதன்படி நடத்திவைக்கப்படும். சிறு குழந்தைகளானாலும் பெரியவர்களானாலும் ஒரேமாதிரியான தட்சணை பெற்றுக்கொண்டு ஒரே மாதிரியாக நடத்திவைக்கப்படும். திவசம் முதலிய காரியங்கள் ஆண்மக்கட்குச் செய்துவைப்பதைப் போல தற்கால நாகரிகத்தை ஒட்டிப் பெண் மக்களுக்கும் செய்து வைக்கப்படும். சிறுவர்கள் செய்யவேண்டிய திதி முதலிய காரியங்களில் அவர்கட்குப் பதிலாக நமது ஏஜெண்டுகளே இருந்து நடத்திவைப்பார்கள். வயோதிகர்களாவது பிரபுக்களாவது தீர்த்தயாத்திரை செல்ல முடியாவிட்டால் அவர்கட்காக நமது ஏஜெண்டுகள் மூன்றுவது மனுஷியாள் மூலம் ஸ்நானம் செய்து பலனை அனுப்புவார்கள். சூரிய நமஸ்காரம் முதலியன செய்ய முடியாதவர்கட்குப் பிரதிநிதியாக இருந்து அவைகளைச்செய்வதற்கும் ஆட்கள் நியமிக்கப்படும். இவைகளில் புரட்டேற்படாதபடி வேண்டிய இன்ஸ்பெக்டர்கள் இருந்து கவனிப்பார்கள். பரிகாரம் தானம் சபிண்டி தலைத்திதி முதலியவற்றுக்கு . வேண்டிய சகல சாமான்களும் ஒரு செட் கம்பெனியிலேயே தயாராகச்செய்து வைக்கப்படும். எப்படிப்பட்ட பெரிய பரிகாரமானாலும் கடைக்குப்போய் அலைந்து சாமான் வாங்காதபடி சௌகரியம் செய்யப்பட்டிருக்கிறது. சகல சாமான்கட்கும் சாமானுக்குத் தக்கபடி சொற்பமான வாடகை ஏற்படுத்தப்படும். அரிசி காய்கறி வகையறு நினைத்தநேரம் கொடுப்பதற்கு வேண்டிய கடைகளும் ஒப்பந்தம் செய்யப்படும். எந்தமாதிரியான பரிகாரமானாலும் திவசமானாலும் சபிண்டியானாலும் க-மணி நேரம் முன்னால் தெரிவித்தால்போதும். காசி,ஸ்ரீரங்கம்,மாயவரம், ராமேசுவரம் போன்ற முக்கியமான இடங்களில் கம்பெனியின் கிளைகள் ஏற்படக்கூடும். மற்ற இடங்களில் தகுந்த ஏஜெண்டுகள் நியமிக்கப்படும். தங்கள் வீடுகளில் வந்து நடத்துவிப்பதற்கும் தயாராக ஏஜெண்டுகள் அமைக்கப்படும். தற்கால நாகரிகத்தை யொட்டி எந்த நேரத்திலும் எந்த நாளிலும் பிரபுக்களின் இஷ்டப்படி திதி முதலியவற்றை வீட்டில் வந்து நடத்திவைக்கப்படும். திதிமுதலியவைகளை, விரும்பினால் தமிழிலும் சொல்லிச் செய்யப்படும். பிரபுக்கள்

அனைதச்சொல்ல இஷ்டப்படாவிட்டால் நமது ஏஜெண்டுகளே சொல்லி முடித்துவிடுவார்கள். சுயமரியாதைக்காரர்களுக்குத்தக்க படியும் செய்து வைக்கப்படும். இஷ்டப்படுகிறவர்கட்குப் பார்ப் பனரல்லாதாரைக் கொண்டும் நடத்திவைக்கப்படும். எல்லா வற்றுக்கும் பில்படி பிரயாணச்செலவும் சேர்த்து முன் பணம் கட்டி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். எங்கட்கு எவரானுலும் வித்தியாசமில்லை. எங்கள் ஏஜெண்டுகளைக் கும்பிட இஷ்டப்படா விட்டால் கட்டாயமில்லை. பூணூல் போட்டுக்கொள்ள வேண்டு மென்பதும் காலைமடித்து திதிசெய்யவேண்டுமென்பதுமில்லை. இம் மாதிரியான பல சாதகங்கள் இருப்பதால் யாவரும் எங்கள் கம் பெனி மூலமாகவே திவசம் முதலிய காரியங்களைச்செய்து கொ ள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தீர்த்தயாத்திரை கிடாம்பியாச்சாரியார்,
பரிகார வீர சூர சிகாமணி கிட்டுவையர்,
பஞ்சாங்கப்புலி ராமசுப்பையர்,
காசியாத்திரை ராமலிங்கமையர்,
ஈமச்சடங்கு நிபுணர் ஆட்கொண்டதேசிகர்.

## ஏஜெண்டுகள் தேவை.

நமது பஞ்சாங்கக் கம்பெனிக்கு ஏஜெண்டுகள் தேவை. அவர் களின் சொந்த விஷயங்களில் எப்படி வேண்டுமானுலும் இருக்க லாம். கம்பெனி சம்பந்தப்பட்டமட்டில் கீழ்க்கண்ட நிபந்த னைகட்குக் கட்டுப்பட வேண்டும்.

1. போகிற இடத்தில் அவர்களுடைய இஷ்டத்திற்கு மாறுக நடக்கக் கூடாது.
2. கம்பெனித்திட்டப்படி பணத்தை வாங்குவதில் கண்டிப் பாக இருக்க வேண்டும்.
3. காரியங்கள் செய்கிற நபர்களை 'பிரபு' என்று அழைக்க வேண்டும்.
4. அவர்கள் விரும்புகிறமாதிரி அவர்களை வைத்தோ அவர்களின் பிள்ளைகளை வைத்தோ ஏஜெண்டுகளை வைத்தோ முடியாத பக்ஷம் அவர்கட்குப் பதிலாகத் தாங்களே இருந்தோ காரிய

ங்களை நடத்தவேண்டும். எவ்வளவு சாவகாசத்தில் நடத்தச் சொன்னாலும் அந்த நேரத்திற்குள் முடிக்கவேண்டும். எந்த நேரத்தில் செய்ய விரும்புகிறார்களோ அந்த நேரத்திற்கு 5 நிமிஷம் முன்னாக அந்த இடத்திலிருக்க வேண்டும். அவர்களுடன் எந்தவிதமான தர்க்கமும் செய்யக்கூடாது.

5. மாதச் சம்பளம் ரூ. 50 முதல் 250 வரை ஆளுக்கும் சாமர்த்தியத்துக்கும் தக்கபடி கொடுக்கப்படும்.

தீர்த்தயாத்திரை கிடாம்பியாச்சாரியார்,
for Panchangom & Co.,
ஹாலாஸ்ய க்ஷேத்திரம்.

---

# மழைபெய்யாது.

மிஸஸ். ஜானகி எழுதுவது.

பெண்கள் குடைபிடித்தால் மழை பெய்யாது! பெண்கள் மிதியடிபோட்டால் மழை பெய்யாது! பெண்கள் பால் சாப்பிட்டால் மழை பெய்யாது! பெண்கள் ஆண்களுடன் இருந்து உண்டால் மழை பெய்யாது! ஜாதி வித்தியாசம் போகவேண்டுமென்றால் மழை பெய்யாது! பார்ப்பான் காலில் விழுந்து கும்பிடாவிட்டால்மழை பெய்யாது! பார்ப்பான் ஏமாற்றுவதற்குக் கட்டுப்படாவிட்டால் மழை பெய்யாது! திவசங்கொடுக்காவிட்டால் மழை பெய்யாது! வருணஜெபம் செய்யாவிட்டால் மழை பெய்யாது! கற்புடைய மங்கையர் இல்லாவிட்டால் மழை பெய்யாது! புருஷன் அடித்து எலும்பை ஒடித்தாலும் சரியென்று கும்பிட்டுக்கொண்டு இருக்காவிட்டால் மழை பெய்யாது! இப்படி யெல்லாம் சாஸ்திரம் படிக்கின்றனர். இத்தனை காரியங்கட்கும் மாறுபாடாக வெள்ளைக்காரப் பெண்களும் ஆண்களும் நடக்கிறார்கள். அவர்கள் நாட்டில் நாள்தவறாமல் மழை பொழிகிறது. மழை இல்லாத நாளே கிடையாது. காரணமென்ன? அங்கே பார்ப்பானில்லை. பார்ப்பானுடைய புரட்டுச்சுவடிகளுமில்லை. சங்கராச்சாரியார் இல்லை. வருணபகவானுக்குக் குடங்கட்டி ஜபஞ்செய்கிறதில்லை. ஆதலால் நாள்தவறாமல் மழைபெய்கிறது. இங்குள்ள பார்ப்பன

ரைப் பொய்ச்சாஸ்திர மூட்டையுடன் மேல்நாட்டுக்கு அனுப்பி விட்டால் சாஸ்திரப்புரட்டும் வருணஜபப்புரட்டும் ஐயர்மார் பித்தலாட்டங்களும் ஒரே நாளில் ஒழிந்து போதல் திண்ணம். இல்லாதபக்ஷம் வருணஜபம் வைத்தால் மழை பொழியாது என்று ஒட்டைத்திருத்தி யாகவேண்டிய நிலேயேற்படும். அப்படியெழுதினுல் உடனே புரூவ் செய்தாகவேண்டும். இல்லாவிட்டால் அங்குள்ள வெள்ளேக்காரருடைய கால் பூட்ஸின் முத்தத்திற்கு சாஸ்திரிகளின் கன்னங்கள் தயாரிலிருக்க வேண்டிய நிலே யேற்படுவது நிச்சயமாகும். இங்கே எதைச்சொன்னுலும் கைகட்டி வாய்புதைத்துக் கேட்டுக்கொண்டிருப்பதோடு பாதகாணிக்கை வைத்துக் கும்பிட்டுவிழத் தயாராக இருப்பதால்தான் கண்டகண்ட ஆசாமிகளெல்லாம் தலேதூக்கி ஆடத்துவங்குகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மழை கண்டபடியாகப் பெய்து விட்டபடியால் இனிமேல் பெண்கள் குடைபிடிக்கலாம்; மிதியடிபோடலாம்; சமத்துவமாக இருந்து சாப்பிடலாம்; மேலே சொன்ன எல்லாக்காரியமும் செய்யலாம், இக்காரியங்களே ஏற்கனவே மழை ஆரம்பித்தவுடன் செய்திருந்தால் இத்தனே ரயில்உடைப்பும், ஏரியுடைப்பும், பாலங்களின் உடைப்பும் ஏற்பட்டிருக்காதல்லவா? மழை வருவதற்கு ஐயர்மார் வருணஜபம் செய்யட்டும். பெண்மக்களும் மற்றவரும் சுகமாக மேற்சொன்ன காரியங்களேச் செய்துகொண்டு சுகமாக இருக்கட்டும். அதற்கும் இதற்கும் சரியாகி விடுமல்லவா? நாமெல்லோரும் வெள்ளேக்காரர் மாதிரியும் வெள்ளேக்கார பெண்கள் மாதிரியும் மழைக்குக் குடை, வெயிலுக்கு மிதியடி, நேரத்தில் சாப்பாடு, ஷோக்கான வாழ்க்கை. இம்மாதிரியான காரியங்களேச்செய்வோம். இதனுல் மழை பெய்யாவிட்டால் வருணஜபம்செய்து ஐயர்கள் மழையைப் பொழியச் செய்யட்டும். இந்த நாட்டில் இப்போது மழை அதிகமாகப்பெய்து பெருத்த நஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. மழையை நிறுத்த ஐயர்மார்கள் சூரிய ஜபமோ அக்கினி ஜபமோ செய்யப் புறப்பட்டதாகத் தெரியவில்லே. மழை தொடர்ந்து பெய்தால் அப்படியும் எட்டை எழுதிக்கொண்டு புறப்படுவார்களென்பதில் சந்தேகமுண்டோ?

---

# நல்லமாட்டுக்கு ஒருசூடு.

சென்னை எஸ். குருசாமி **B.A.** எழுதுவது.

பிரசவ ஆஸ்பத்திரியா? தாயுமானவரா?

**மூன்** காலத்தில், அதாவது நம்முடைய முன்னோர்கள் நாளில் பெண்கள் கர்ப்பவதியாயிருந்து பிள்ளைப்பெறும் நாள் நெருங்கியதும் பல சந்தர்ப்பங்களில் கடவுளே உதவியாயிருந்ததாக அறிகிறோம். உதாரணமாக செட்டிப் பெண்ணுக்கு திருச்சினப்பள்ளி தாயுமானவர் (காரணப்பெயர்.) மருத்துவம் பார்த்ததாகச் சொல்லப்படுவதோடு இன்னும் அந்த உற்சவம்கூடக்கொண்டாடப்படுவதைப் பார்க்கிறோம். ஆனால் இந்தக்காலத்தில் ("கலியுகத்தில்") ஆஸ்திகர்கள் அவ்வாறு கடவுளை நம்பாமல் மருத்துவ ஆஸ்பத்திரியையே நம்பியிருப்பதாகவும் அதனால் கடவுள் நம்பிக்கை குறைந்துகொண்டு வருகிறது என்றும் பிறர் (நாஸ்திகர்) சொல்வதற்கு இடமேற்படுவதினாலும், திருச்சியிலும் பக்கத்திலுள்ள ஊர்களிலும் இருக்கிற ஆஸ்திகர்களெல்லாம் இனி தங்கள் வீட்டு கர்ப்பவதிகளையெல்லாம் தாயுமானவர் சந்நதியில் போட்டுவிட்டு கதவைப்பூட்டி வைத்துவிட்டு, சிலதினங்கள் சென்று போய் குழந்தையும் தாயுமாக அழைத்து வரவேண்டியதென்று ஏற்பாடு செய்திருப்பதாகவும், இப்படிச் செய்தால்தான் 'நாஸ்திகர்' களுக்குப் புத்தி வருமென்றும் சொல்லிக்கொண்டிருப்பதாகவும் நமக்குத்திருச்சி நண்பர் ஒருவர் ரகசியமாக எழுதியிருக்கிறார். ஆகவே, இனி திருச்சியில் மருத்துவ டாக்டர்களுக்கு வேலையில்லையென்றும் அவர்கள் எல்லோரும் எமதர்ம ராஜனிடத்தில் முறையிட்டுக் கொண்டிருக்கின்றார்களென்றும், அவரும் அவ்விஷயத்தைக் கவனிப்பதாக வாக்களித்திருக்கிறாரென்றும், எமலோகம் சென்று திரும்பிய வைகுண்ட சாஸ்திரி தர்ப்பை மூலமாக நமக்கு அறிவித்திருக்கிறார்.

திருக்கழுக்குன்றம் கழுகு.

திருக்கழுக்குன்றத்தில் இரண்டு கழுகுகள் தினந்தோறும் தவறாமல் வந்து பண்டாரம் தருகின்ற ஆகாரத்தைச் சாப்பிட்டு விட்டுப்போகிறதாம். அதற்காக அந்த இரண்டு ரிஷிகளையும்

(கழுகுகள்) தரிசிப்பதற்காக கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் சென்று வருகிறார்கள். "கலியுகத்தில் கடவுள் நம்பிக்கை குறைந்தவர்களுக்கு இது ஒரு நல்ல அத்தாட்சியாகும்" என்று ஒரு வித்வான் எழுதியிருக்கிறார்.—ஆமாம் "அது சதாரண கழுகு அல்ல. தெய்வத்தன்மை பொருந்தியதுதான். ஒருநாளைக்கு அதனுடைய ஆகாரத்தில் சிறிது விஷத்தைக்கலந்து வைத்து, அவைகள் அதைத்தின்றாலும் அவை சாகமாட்டா. வேண்டுமானாலும் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம்" என்று ஒருநாஸ்திகர் பதில் எழுதுகிறாராம். இரண்டு பேருக்கும் பொதுவாக நாம் சொல்லுவதென்னவென்றால், ஒரு வருஷத்திற்கு ஆகாரமே வைக்காமலிருந்தால் அந்த இரண்டு ரிஷிகளும் (கழுகுகள்) ஒருவருஷங்கழித்து வரமாட்டார்களென்றும், அந்த ஒருவருஷம் வரையில் அந்த ரிஷிகள் சுடுகாட்டில் ஆகாரம் பண்ணிக் கொண்டிருப்பார்களென்றும், அதன்பிறகு திருக்கழுக்குன்ற ஸ்தல புராணத்திற்குப் பதிலாக "சுடுகாட்டுக் கழுகுப்புராணம்" எழுதவேண்டுமென்பதே.

பசுமாட்டு மூத்திரமும், சென்னை உத்யோகஸ்தர்களும்.

இந்த சென்னை மாகாணத்திற்கே அதிக நாகரிகமும், படிப்பும், செல்வமும் பொருந்திய ஊர் சென்னை நகர் ஆகும். இந்த ஊரில் பெரிய பெரிய உத்யோகஸ்தர்களில் பெரும்பாலோர் காலையில் 11 மணிக்கு ஆபீஸ்களுக்குப் போகும்போது, வழியில் ஏதாவது பசுமாடுகள் நின்றுவிட்டால், அவைகளைச் சும்மா விடுவது கிடையாது. அவைகளினுடைய பின்பாகத்தைக் கையால் தடவி மூத்திரம் வந்தபின் அதை பயபக்தியோடு தலையில் தெளித்துக்கொண்டு போகிறார்கள். ஆகவே, சட்டை தலைப்பாகையோடு யாராவது ஒருவர் கிட்டே வருவதைக்கண்டு விட்டால் பசுமாடுகள் பயந்து கொண்டு ஓடுகின்றன. ஆனால் உத்யோகஸ்தர்கள் ஆபீசுக்கு நேரமாகிவிடுமென்ற காரணத்தால் அவைகளைத் துரத்துவதுமாத்திரம் கிடையாது ............இதைக்கண்ட மற்ற மிருகங்கள் பசுமாட்டினிடத்தில் பொறாமைப்படுகின்றனவாம். எருமை மாடானது தான் ஓடுவதில்லையென்றும் தன்னுடைய நீரையும் அப்படி கௌரவம் செய்யவேண்டுமென்றும் உத்யோகஸ்தர்களிடத்தில் வேண்டிக்கொள்வதற்காக "எருமைமாட்டு மகாநாடு" ஒன்று கடற்கரையில் சீக்கிரம் நடைபெறுமாம். இன்னும் பன்றிக்கூட்டங்கள்,

மகாவிஷ்ணுவே தங்கள் அவதாரம் எடுத்துங்கூட ஜனங்கள், தங்களைக் கண்டால் கன்னத்தில் போட்டுக்கொள்ளுவதில்லையென்றும் கடவுள் பக்தர்களான உத்யோகஸ்தர்கள் தங்கள் (பன்றிகள்) நீரையும் தலையில் தெளித்து கௌரவப்படுத்துவதில்லை யென்றும் மகாவிஷ்ணுவினிடம் முறையிட்டுக் கொண்டிருக்கின்றனவாம். இன்னும் காளைமாடுகளெல்லாம், பரமசிவம் வாகனமாயிருந்துகூட தங்கள் நீரை என் ஜனங்கள் தலையில் தெளித்துக் கொள்வதில்லையென்று மிகவும் வருத்தப்படுகின்றதோடு, பரமசிவனிடத்தில் சொல்லி சாபம் கொடுக்க ஏற்பாடுசெய்கின்றதாகக் கேள்வி.........நிற்க, இதில் ஒரு ரகசியம். மாட்டு மூத்திரத்தைத் தலையில் தெளித்துக் கொள்ளும் சென்னை உத்தியோகஸ்தர்களில் பார்ப்பனர் ஒருவர் கூடக்கிடையாதாம். அவர்களெல்லாம் முட்டாள்கள் என்று நமது "புத்திசாலிகள்" நினைத்துக் கொண்டிருக்கிறார்களாம்.

## சென்னை நகரில் "நாஸ்திகம்" பரவிவிட்டது.

சென்னை நகரத்தில் பேசும் சினிமா (Talkies) வந்தபிறகும், கடற்கரையில் ரேடியோ (Radio music) சங்கீதம் வந்தபிறகும் கிருஸ்துவக் கோயில்களிலும் கூட்டம் ரொம்பவும் குறைந்து விட்டதால் கோயில் பூசாரிகளுக்கு வரும்படியும் குறைந்து, மதிப்பும் குறைந்துவிட்டதாம். ஜனங்கள் தங்கள் தங்கள் கோவில்களையும் கடவுளையும் ஏன் இப்படி மறக்க வேண்டுமென்றால், ஒருநாள் முழுதும் உடம்பு அலுக்க வேலை செய்த பிறகு உல்லாசமாய் கடற்காற்றோடு சங்கீதம் கேட்பதும், ஸினிமா பார்ப்பதும், இன்னும் டென்னிஸ், கால்பந்து, கிரிக்கெட், ஹக்கி, முதலிய விளையாட்டுகள் விளையாடுவதும் —இந்த மாதிரியான மனத்துக்குச் சந்தோஷமான காரியங்களைவிட்டு இருட்டறையில் மண்டி போட்டுக்கொண்டு கொல்லன் துருத்தி மாதிரி வாயை மூடித்திறந்து கொட்டாவி விடுவது என்பது சிறிதும் அறிவுக்கும் இயற்கைக்கும் பொருத்தமாயில்லை யென்று கூறுகிறார்களாம். ஆகையால் ஆஸ்திகர்களெல்லாம், ஆங்கில அரசாங்கத்தை சபித்துக்கொண்டு இருப்பதோடு, "நாஸ்திகம் பரவும்காலம் வந்துவிட்டது, உடனே புறப்படவும்" என்று மகாவிஷ்ணுவுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்களாம்.

——

# பலதிரட்டு.

## காபி நைவேத்தியம் செய்யுங்கள்.

ஸ்ரீ கைலாசத்திலிருந்து நந்தி தேவர் மூலம் சிவபெருமான் பின்கண்ட கட்டளையை ஆக்ஞாபித்திருக்கிறார்:—

நம்முடைய பக்தர்கள் நமக்கு எல்லாவிதப் பொருள்களையும் நைவேத்தியம் செய்கிறார்கள். ஆனால் பூவுலகில் மிகுந்து நிற்கும் நாகரிக பானமாகிய காபி, டீ (Coffee & Tea) ஆகியவற்றை நைவேத்தியம் செய்வதில்லை. கால நாகரிகம் நமக்குத் தெரியாதெனக் கருதியே அவைகளை நைவேத்தியம் செய்வதில்லையென நாரதர் சொல்லுகிறார். அவ்வாறு நினைப்பது உண்மையாயின் அது தவறென அறிவிக்கிறோம். பழங்காலத்து வழக்கம்போல் விளக்கெண்ணைத் தீவட்டிகளுடன் எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சி கொடுக்காமல் கியாஸ்லைட்டுகளுடன் எழுந்தருளிக் காட்சி கொடுப்பதிலிருந்தே நாமும் நாகரிகத்தை அனுசரித்து நடக்கிறோம் என்பது நன்கு விளங்கும். எனவே இனிமேல் கால சந்திக்குச் செய்யப்படும் தளிகை நைவைத்தியத்தை நிறுத்திவிட்டு காபி நைவேத்தியமும், சாயரட்சைக்குச் செய்யப்படும் தளிகை நைவேத்தியத்திற்குப் பதிலாக டீ நைவேத்தியமும் செய்யவேண்டுமென்று பக்தகோடிகளுக்கு ஆக்ஞாபிக்கிறோம்.

---

## அரசியற் கைதிகளுக்கு விடுதலை.

சமீபத்தில் மகாத்மா காந்திக்கும், வைசிராய்க்கும் நடைபெற்ற ராஜிப் பேச்சில் மகாத்மா கேட்ட நிபந்தனைகளில் அரசியற் கைதிகள் அனைவருக்கும் விடுதலை அளிக்கவேண்டுமென்பதும் ஒன்றாகும். அவர் தமிழ்நாட்டுக்காரராக இருந்தால் இந்நிபந்தனையைச் சொல்லியிருக்கமாட்டார். வடநாட்டுக்காரரானதால் தமிழ்நாட்டு மகத்துவங்கள் அவருக்குத் தெரியவில்லை. சிறையிலிருந்து விடுதலை அடையச் சுலபமான வழி தமிழ்நாட்டிலிருக்கிறது. விநாயக கவசத்தை இருபத்தொரு நாள், தினம் இருபத்தொரு தரம் ஜெபித்தால் சிறையிலிருந்து விடுதலையடைவதுமன்றி கஷ்டமும் நீங்கிவிடும். இந்தக் கவசம் சாமான்யமானவர்களால் பாடப்

பெற்றதல்ல. காசிப முனிவர் முற்கால முனிவருக்கு அருளிச் செய்ய, அவர் மாண்டவி முனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மரீசி முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளியதாகும். இதனை அவருக்கு எடுத்துக்கூறி சிறையில் இருக்கும் தேசபக்தர்களை விடுவிப்பதற்கு வழிகாட்டு வதற்காக விநாயக பக்தர்களின் தூதுக்கோஷ்டியொன்று தமிழ் நாட்டிலிருந்து எர்வாடாச் சிறைக்குச் செல்லப்போவதாகத் தெரிகிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## ஒரு யோசனை.

கோயில் சுவாமிக்கு அபிஷேகம் செய்தால் புண்ணியம் அதிகமாக வருமென்று சொல்லப்படுகிறது. அதிலும் பழச்சாறுகள் மிக விசேஷமானதென்று சொல்லவேண்டியதில்லை. அபிஷேகம் தினம் நடக்கவேண்டியிருக்கிறது. ஆனால் எல்லாப் பழங்களும் எல்லாக் காலத்திலும் கிடைப்பதில்லை. இதை உத்தேசித்து சீமையிலுள்ள அநேகம் கம்பெனிக்காரர்கள் வெகு பிரயாசைப்பட்டுப் பழங்களிலிருந்து சாறு எடுத்து அவைகள் கெட்டுப்போகாமலிருக்கும்படி 'கிரஷ்' என்ற பெயருடன் அனுப்பியிருக்கிறார்கள். அதில் ஆரஞ்சுக் கிரஷ், லெமொன் கிரஷ் என்று எல்லாப் பழச்சாறும் தனித்தனியாக இருக்கிறது. இதனை வாங்கிவைத்துக் கொண்டால் பழங்கட்காக அலையவேண்டியதில்லை. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு, கார்க்கை எடுத்துவிட்டு சுவாமி தலையில் வடியவிடலாம். இல்லாவிட்டால் தண்ணீரில் கலந்து தாராளமாக அபிஷேகம் செய்யலாம். பழம் கிடைக்கவில்லை யென்பதற்காக அபிஷேகம் குறைவுபடாது. திராக்ஷைப்பழம் போன்ற உயர்ந்த பழச் சத்துக்களும் போர்ட் ஒயினாக விற்கிறது. அதையும் வாங்கிக்கொள்ளலாம். சிவபக்தர்களும் வைணவ தாஸர்களும் கோபப்படவேண்டாம். இதில் மற்றவர் கைபட்டிருக்குமென்று சந்தேகப்படவேண்டியதில்லை. எல்லாம் மெஷினில் தான் செய்யப்பட்டிருக்கிறது. சந்தேகமாக இருந்தால் எல்லாப் பாவத்தையும் போக்க வல்ல விபூதியை அதன்மேல் தூவிவிட்டால் போய்விடுகிறது. இப்படிச் செய்வதால் அதிலிருக்கிற பாவமெல்லாம்போய்

பழச்சாறு மட்டும்தான் தங்கியிருக்கும். பிறகு அபிஷேகம் செய்வதில் கஷ்டமிருக்காது என்று ஒரு கிஷ் வியாபாரி எழுதுகிறார்.

---

### ஐயர்மார்களுக்கு கிராக்கி.

ஐரோப்பா கண்டத்திலுள்ள ஜெர்மனி, பிரான்சு, ரஷ்யா, இடாலி சுவிட்ஜர்லண்ட் ஹாலந்து போலந்து பெல்ஜியம் ஆஸ்ட்ரியா போன்ற நாடுகளிலும் இங்கிலாந்திலும் நாள்தோறும் மழை பொழிந்து கொண்டே இருப்பதால் பெருத்த சேதங்கள் உண்டாகிக்கொண்டே இருக்கின்றன. ரோடுகளும் வீடுகளும் ஏராளமான பொருட் செலவிட்டுக் கெட்டி பண்ணவேண்டியிருக்கிறது. கல்லிலும் சிமிண்டிலுங் கட்டினல்தான் வீடுகள் நிலைக்கும். தவிர எப்போதும் மழைபெய்துகொண்டே இருப்பதால் கம்பிளிச்சட்டைகளால் ஏராளமான செலவேற்படுகிறது. வெளியே போக வரவும் வேலைசெய்யவும் கஷ்டமாக இருக்கிறது. இப்படி அநியாயமாகப் பெய்கிற மழையைத் தடுத்து நிறுத்தினல் இன்னும் நிரம்ப வேலைசெய்யலாம் ஆதலால் இந்த மழையை எப்படி நிறுத்தலாமென்று யோசிப்பதற்காக நியமிக்கப்பட்ட "மழை நிறுத்த ஆராய்ச்சிக்கமிட்டியார்" பின்வருமாறு ஒருஅறிக்கையை வெளியிடப்போவதாகத் தெரிகிறது. அதன் சாரம் வருமாறு:—

எல்லா தேசத்தையும்பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்தோம். மழை அதிகமாகப்பெய்யாத தேசங்களில் தென்னிந்தியா ஒன்றுக இருக்கிறது. அங்குதான் பெரிய மகான்கள் பிறந்திருக்கிறார்கள். கடவுளே ஐந்தாறு முறை பிறந்து மதுரை முதலிய முக்கிய இடங்களில் ராஜ்ய பாரம் செய்திருக்கிறார். அவருடைய பெண்டாட்டி மீனுக்ஷியும், பிள்ளை சுப்பிரமணியரும் ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் சொல்வதை நம்பலாமென்று தோன்றுகிறது. அனேக சாஸ்திரங்களைச் சிவபெருமானே ஒரிஜினலாகச் சொல்லியிருக்கிறார். மற்ற சில சாஸ்திரங்கள் பெரிய தேவர்களாலும் ரிஷிகளாலும் காப்பி செய்யப்பட்டிருக்கின்றன. அனுபவத்திலும் அங்கு மழை அதிகமாகப் பெய்கிறதில்லை. ஏகதேசம் மழை தேவைப்பட்டால் வருணஜபம் செய்து வரவழைத்துக் கொள்கிறார்கள். இவ்வளவுக்கும் என்ன காரணமென்று ஆராய்ந்து பார்த்தால் அங்கு

ள்ள அந்தணரென்று சொல்லப்படுகிற பார்ப்பன ஜாதியார்கள் அரிசி வியாபாரஞ் செய்வதுதான் என்று கண்டுபிடித்திருக்கிறோம். பார்ப்பனர் அரிசி விற்றால் வருஷத்துக்கு ஒருமழைதான் பெய்யுமென்று சாஸ்திரத்தில் பரமசிவன் சொல்லியிருக்கிறார். ஆதலால் மழை அதிகமாகப் பெய்கிற நாடுகளில் மழையைப்பெய்யாமல் ஒழிப்பதற்கு இந்த முறையைக்கையாளலாம். சுலபமான வழி. மற்ற தேசங்கட்கு இந்தியாவிலிருந்து கூலிகளை அனுப்புவதுபோல இந்த பார்ப்பன ஜாதியார்களை ஏற்றுமதி செய்து மழை பெய்யும் தேசங்களில் அரிசிக்கடை வைத்து வியாபாரம் செய்யச்சொன்னால் மழை இருந்தவிடந் தெரியாமல் ஓடி ஒழியுமென்று தெரிகிறது.

---

### மழையை ஏன் நிறுத்தவில்லை.

இந்த வருஷம் மழை அதிகப்பட்டுவிட்டது. தண்ணீரைக் காணாத ஆறு குளம் ஏரி யெல்லாம் தாறுமாறான வெள்ளப்பெருக்கெடுத்திருக்கிறது. மழை மேலுமேலும் பெய்துகொண்டே இருக்கிறது. பாலங்கள் இடிந்து வெள்ளத்தால் கொண்டுபோகப் பட்டுவிட்டன. பல சிறு வீடுகள் நீரில் மிதந்து சென்றுவிட்டன. ரயில்ரோடு வண்டிப்பாதையெல்லாம் வருணபகவான் அடித்துப் பாழாக்கிவிட்டான். இந்த வருணபகவான் வருஷா வருஷம் மழையைப் பொழியாமல் ஏமாற்றுவது வழக்கம். ஆனால் இவ்வருஷம் முழு அடியாக அடித்து எங்கும் வெள்ளக்காடாகச் செய்திருக்கிறான். இனி மழை தேவையில்லை. மழையை நிறுத்தியாகவேண்டும். மழை பெய்யாத காலத்தில் பூணூல்போட்ட ஐயர்கள் 'வருணஜபம்' வைக்கவேண்டுமென்று சொல்லி ஏமாந்தவர்களிடத்தில் பணத்தைத் தட்டிப்பிடுங்குவது வழக்கம். மழை பெய்வதற்கும் மழை பெய்யாமலிருப்பதற்கும் ஐயர்மார்தான் காரணமென்று சொல்லவேண்டியதில்லை. சமீபத்தில் வந்த மழை அடைப்பு இருபத்திரண்டு நாள் இருக்குமென்றும் அந்த இருபத்திரண்டு நாளிலும் சூரியோதயமிராதென்றும் கண்டுபிடித்துப் புளுகியிருக்கின்றனர். இப்படிச் சாஸ்திரங்களை முன்னுள்ள ரிஷிகளாகிய தாடிவாலாக்கள் எழுதிவைத்திருக்கின்றனர். இத்யாதி காரணங்களால் மழை வருமுன்னரே சாஸ்திரம் படித்த பார்ப்பனர்கட்குச் செய்தி தெரியுமென்றும் அம்மழையை மந்திரஞ்

சொல்லி நிறுத்தவோ வரவழைக்கவோ அவர்களால் முடியுமென்றும் விளங்குகிறது. ஆதலால் முன்னமே மழை இருபத்திரண்டு நாள் வரை பெய்யப்போகிறதென்று தெரிந்திருந்தும் பார்ப்பனர் அதை நிறுத்த முயற்சி செய்யாமலிருந்தது பெரிய மோசமாகும். மழையை யெதிர்த்து நிறுத்தியிருக்கவேண்டும். அப்படிச்செய்யாதபடியால் அபார நஷ்டமுண்டாகியிருக்கிறது. ரயில்வேக் கம்பெனிகட்கு ஏராளமான நஷ்டம் வந்திருக்கிறது. இனிமேலாவது ரயில்வேக்கம்பெனியார் இந்த வருண ஜெபக் கம்பனியாரிடம் மழையை அளவாக வரும்படி ஒப்பந்தம் செய்து தக்க பரிகாரத்தைத் தேடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழை விசேஷமாகப் பெய்யாத இந்த நாட்டில் தாறுமாறான மழை பெய்திருப்பதால் இதற்கு யாராவது ஐயர்மார்கள்தான் பலமான வருண ஜெபத்தைச் செய்துவிட்டிருக்கவேண்டும். வருண ஜெபஞ் செய்யாவிட்டால் இவ்வளவு மழை யெப்படிப் பெய்யமுடியுமென்று கேட்கிறேன். மறைவாக இருந்து வருண ஜெபத்தைச் செபித்து இவ்வளவு மழையைப் பெய்யும்படி ஏற்பாடு செய்து பொது ஜனங்கட்கும் அரசாங்கத்துக்கும் பெரு நஷ்டத்தை உண்டாக்கிவிட்டார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் தான் இந்த மழை பெரிய நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணமே தர்மரக்ஷணம் செய்யும் பிராமண ஆதிக்கமுள்ள ஊராகும். அங்குள்ள ஆசாமிகளின் ஏற்பட்டால்தான் இப்படிப்பட்ட வருணஜபம் பலித்திருக்குமென்று நம்ப இடமிருக்கிறது. யார் செய்தபோதிலும் கவலையில்லை. வருணஜபமில்லாமல் இவ்வளவு மழைபெய்ய வழியில்லையென்பது நிச்சயம். பிராமணரல்லாதவர் வருண ஜெபம் செய்கிறதில்லை. செய்தாலும் பலியாது. ஆதலால் பார்ப்பனர் தாம் செய்திருக்கின்றனர். எனவே இந்த மழையினால் ஏற்பட்டிருக்கும் சேதம் யாவற்றுக்கும் பார்ப்பனர் தான் காரணராவர். அந்தப் பணம் முழுமையும் அவர்களிடம் வசூல் செய்தாகவேண்டுமென்று நான் கூறுகிறேன். சென்னைச் சட்ட சபையில் நம் மாகாணத்தைப் பொறுத்தவரையிலாவது மழையினால் வரும் கஷ்டநஷ்டங்கட்கும் வெயிலால் ஏற்படும் பஞ்சத்துக்கும் பார்ப்பன ஜாதியார்களிடம் வசூல் செய்யவேண்டுமென்று ஒரு சட்டஞ் செய்து பொது ஜனங்கட்கு ஏற்படும் நஷ்டத்துக்கு ஈடுசெய்யவேண்டிய தவசியமாகும். இவ்விஷயத்தில் மிதமாக இருத்தல் நியாயமல்ல.

போதுஜனப் பிரியன்.

---

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை ௯ (9) | காரைக்குடி பிரமோதூத-ஹூ மார்கழி-மீ | மணி ௬ (6)


## மாந்தோப்பில் கொள்ளை.

தாமரை பூத்த குளத்தினிலே—முகத்
தாமரை தோன்ற முழுகிடுவாள்—அந்தக்
கோமள வல்லியைக் கண்டுவிட்டான்—குப்பன்
கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை—அவள்
தூய்மை படைத்த உடம்பினையும்—பசுந்
தோகை நிகர்த்த நடையினையும்—கண்டு
காமனைக் கொல்லும் நினைப்புடனே—குப்பன்
காத்திருந்தான் அந்தத் தோப்பினிலே.

முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும்—ஒரு
முழுமதி போல நனைந்திருக்கும்—தன்
துகிலினைப் பற்றித் துறைக்குவந்தாள்!—குப்பன்
சோர்ந்துவிட்டானந்தக் காமனம்பால்—நாம்
புகல்வதுண்டோ குப்பன் உள்ளநிலை!—துகில்
பூண்டு நடந்திட்ட கன்னியெதிர்க்—குப்பன்
"சகலமும் நீயடி மாதரசி—என்
சாக்காட்டை நீக்கிட வேண்டும்" என்றான்.

கன்னி யனுப்பும் புதுப்பார்வை—அவன்
கட்டுடல் மீதிலும் தோளினிலும்,—சென்று
மின்னலின் மீண்டது, கட்டழகன்—தந்த
விண்ணப்பம் ஒப்பினள் புன்னகையால்.

சற்றுத் தலைகுனிந் தேகடப்பாள்—அவள்
சங்கித வாய்மொழி ஒன்றினிலே—எண்ணம்
முற்றும் அறிந்திடக் கூடுமென்றே—அவள்
முன்பு நடந்திடப் பின்தொடர்ந்தான்—பின்பு
சிற்றிடை வாய்திறந்தாள் அதுதான்!—இன்பத்
தேனின் பெருக்கன்று; செந்தமிழே!
"சுற்றத்தர் மற்றவர் பார்த்திடுவார்—என்
தோழிகள் இப்பக்கம் வந்திடுவார்.

காலை மலர்ந்தது! மாந்தரெலாம்—தங்கள்
கண்மலர்ந்தே நட மாடுகின்றார்!—இச்
சோலையிலே இள மாமரங்கள்—அடர்
தோப்பினை நோக்கி வருக!"—என்றாள்.
நாலடி சென்றனர் மாமரத்தின்—கிளை
நாற்புறம் சூழ்ந்திட்ட நல்விடுதி!
மூலக்கருத்துத் தெரிந்திருந்தும்—அந்த
மொய்குழல் "யாதுங்கள் எண்ணம்" என்றாள்.

"உன்னை எனக்குக் கொடுத்துவிடு!—நான்
உனக் கெனைத் தந்திட அட்டியில்லை"—இந்தக்
கன்னல் மொழிக்குக் கனிமொழியாள்—எட்டிக்
காய் மொழியாற்பதில் கூறுகின்றாள்:—

"சின்ன வயதினில் என்றனையோர்—பெருஞ்
சீமான் மணந்தனர், செத்துவிட்டார்!—எனில்
அன்னது நான்செய்த குற்றமன்றே—நான்
அமங்கலை" என்றுகண் ணீர்சொரிந்தாள்!

மணந்திட நெஞ்சில் வலிவுளதோ?—இந்த
வார்த்தைசொன்னாள்! குப்பன் யோசித்தனன்!-தன்னை
இணங்கென்று சொன்னது காதலுள்ளம்—"தள்"
என்றன மூட வழக்கமெலாம்,—தலை
வணங்கிய வண்ணம் தரையினிலே—குப்பன்
மாவிலை மெத்தையில் சாய்ந்துவிட்டான்—பின்

கணம்ஒன்றி லேகுப்பன் நெஞ்சினிலே—சில
கண்ணற்ற மூட உறவினரும்,

வீதியிற் ப்றபல வீணர்களும்,—வேறு
விதியற்ற சிற்சில பண்டிதரும்,—வந்து
சாதியி லுன்னை விலக்கிடுவோம்—உன்
தந்தையின் சொத்தையும் நீ இழப்பாய்!—நம்
ஆதிவழக்கத்தை மீறுகின்றாய்!—தாலி
அறுத்தவளை மணம் ஒப்புகின்றாய்—நல்ல
கோதை ஒருத்தியை யாம் பார்த்து—மணம்
கூட்டிவைப்போம் என்று சத்தமிட்டார்!

கூடிய மட்டிலும் யோசித்தனன்—குப்பன்
குள்ளச் சமூகத்தின் கட்டுக்களை!—முன்
வாடிக் குனிந்த தலைநிமிர்ந்தான்—அந்த
வஞ்சியைப் பார்த்தனன் மீண்டும்அவன்—ஆ!

ஏடி வடிவத்தின் ஆதிக்கமே!—மூடர்
எதிர்ப்பில் வெளிப்படும் நமதுசக்தி!—மற்றும்
பேடிவழக்கங்கள் மூடத்தனம்,—இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்!

காதல் அடைதல் உயிரியற்கை;—அது
கட்டில் அகப்படும் தன்மையதோ?—அடி
சாதல் அடைவதும், காதலிலே—ஒரு
தடங்கல் அடைவதும் ஒன்றுகண்டாய்!—இனி
நீ தடுமாற்றம் அகற்றிவிடு!—கை
நீட்டடி! சத்தியம்! நான் மணப்பேன்—அடி
கோதை! தொடங்கடி என்று சொன்னான்—இன்பம்
கொள்ளை! கொள்ளை! கொள்ளை! மாந்தோப்பில்.

—பாரதி தாஸன்.

புதுச்சேரியினின்றும் வெளிவரும் 'புதுவை முரசு' என்னும் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் இப் பாட்டை நோக்குக. இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்ட இப் பாடல் திகழ்வ

தைக் காணலாம். காதலெழுச்சியும், இருவர் கூட்டமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. விதவைகளின் ஆதரவற்ற நிலைமையைக் குப்பனுக்கு எழுந்த காதல் வெள்ளத்தினிடையே அமிழ்த்திக் காட்டுவது வெகு நளினமாக இருக்கின்றது. காதல் கரை புரளும்போது மூட வழக்கம் தள்ளப்படுமென்பது தெள்ளிதின் விளக்கப்படுகின்றது. இதனுல் காதலற்ற வாழ்க்கை யிருக்கும் வரையில்தான் சமூகக் கட்டுகளும், மூட வழக்கங்களும் நிலைபெற்றிருக்க முடியுமென்பது சொல்ல வேண்டியதில்லை. காதலர்கள் வாழ்வில் எந்த உதவியும் செய்யத் தயாரில்லாத வீண் மனிதர்களும், வேறு விதியை அறியாத ஏட்டுப் பூச்சிகளும் "ஜாதியை விட்டுத் தள்ளுவோம்; சொத்துத் தரமாட்டோம்; வழக்கத்தை மீறுகிறுய்; இதை விட்டு விடு; ஜாதிப் பெண் கட்டி வைக்கிறேம்" என்று புலம்பும் புலப்பத்தை வேடிக்கையாக எடுத்துக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. காதல் நிறைந்த உள்ளத்தில் வீரம் கிளைத்தெழுகிறது. காதலும், வீரமும் கலந்த உள்ளம் பெற்ற குப்பன் முன்னே மூட வழக்கமும் பேடிச் சாத்திரமும் பஞ்சாய்ப் பறந்து போகின்றன. ஆயிரம் சாத்திரம், ஐயாயிரம் உறவினர், ஐம்பதாயிரம் வழக்கங்கள், ஐந்து இலட்சம் கட்டுப்பாடு, ஐம்பது இலட்சம் சாமிகள் அதற்கு மேலிருந்தாலும் அவ்வளவையும் அடித்து வீழ்த்தியது காதல் வெள்ளம். எல்லாம் போய் எஞ்சியதென்ன? காதல். அதைத்தான் மாந்தோப்பில் கொள்ளையடித்தான். உலக மக்களின் அறியாமைக்கும், கொடுமைக்கும் அகப்பட்டு வழி காணுது உதவியின்றிக்கிடந்த ஒரு பெண்ணுக்கு விடுதலை கொடுத்தான் குப்பன். இம்மாதிரி அடைபட்டுக் கிடக்கும் பெண்ணின் தொகை லட்சக்கணக்கு. நாகரிகமுள்ள தேசங்களிலெல்லாம் இந்தக் கொடுமையில்லை. புண்ணிய பூமியான இந்தியா தேசத்தில் புண்ணியத்திற்கு சோல் ஏஜண்டுகள் என்று சொல்லிக்கொள்ளும் சில ஜாதியார்களிடத்தில்தான் இது இருக்கிறது. வாலிபர்கள் உள்ளத்தில் குப்பன் உள்ளம் கலந்தால் மூடக்கட்டுப்பாடுகள் ஒரு நிமிஷத்தில் தகர்ந்துபோகும். உடனே நடப்பது மாந்தோப்புக் கொள்ளைதான். ஆனுல் மூடச் சாத்திரங்கள் வாலிபரின் உள்ளத்தை இருட்டாக்கி வைத்திருக்கின்றன. இருளென்றுல் சரியான இருள்; கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள். காதல் ஒளி அங்கே தோன்ற வேண்டும். தோன்றுமா? தோன்றும். இனித் தோன்றுமல் முடியாது.

---

# ஹிந்துமதம் யாருக்காக?

ஹிந்துமதம் புராதனமானதென்றும் அநாதியாக ஏற்பட்டதென்றும், கடவுளாலேயே வகுக்கப்பட்டதென்றும் பெருமை சொல்லப்படுகிறது. அது பல ஆயிர வருஷங்களாக வளைந்தும், நிமிர்ந்தும், விழுந்தும், எழுந்தும் இருந்து வருகிறதென்பது மட்டும் உண்மையாகும். தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் இங்கு சில சொல்லவிரும்புகிறோம். தமிழ் நாட்டு மக்கள் பார்ப்பனர்களுடைய நெருங்கிய கூட்டுறவில்லாமல் வாழ்ந்துவந்த போது அவர்களுடைய பழக்கங்களும், கொள்கைகளும் மனப்பான்மையும் வேறு விதமாக இருந்தனவென்பதற்குப் பண்டைத் தமிழ் நூல்கள் சான்று தருகின்றன. பார்ப்பனர்களுடைய கலப்புவந்த பின்னரே பெரும்பாலும் அவை மாறிவிட்டன. இன்றுவரை பார்ப்பனர்களுடைய பழக்கம், வழக்கம், மனப்பான்மை முதலியனவும், ஏனையோரினுடைய பழக்கம், வழக்கம், மனப்பான்மை முதலியனவும் ஒன்றோடொன்று முரண்படுவதைக் காணலாம். பண்டைக்காலத்துத் தமிழ் மக்கள் பிறவாயாக்கைப் பெரியோனையும், கண்ணன், முருகன், காளி முத்லியவற்றையும் தெய்வமாகக்கொண்டு வணங்கிவந்தனரென்று தெரிகிறது. அவர்களுடைய கொள்கைகளை மதம் என்ற பெயர் கொடுத்துக் கட்டுப்பாடுகளை எழுதி மக்கள் வாழ்வில் குழப்பத்தை உண்டுபண்ணிக் கொள்ளவில்லை. பார்ப்பனர் வந்து புகுந்தபோது பிறவா யாக்கைப் பெரியோனைச் சிவனென்றும், கண்ணனை விஷ்ணு வென்றும், இரண்டு கட்சி உண்டாக்கிக் கதைகளெழுதி மக்களுள் புகுத்த ஆரம்பித்திருக்கின்றனர். தங்களுட் சிலர் சிவபக்தரென்றும், சிலர் வைணவ பக்தரென்றும் நடித்து பார்ப்பனரல்லாத மக்களை இருகூறுக்கி இருவரையும் போட்டிக்கு விட்டிருக்கின்றனர். "சர்வம் பிர்மமயம் ஜகத்" என்று வேதம் எழுதப்புறப்பட்ட பார்ப்பனர் விஷ்ணுவைப் பற்றியும், சிவனைப் பற்றியும், சுப்பிரமண்யத்தைப் பற்றியும் வேதத்தில் குறிப்புகள் எழுதி வைத்துக் கொண்டனர். இதை ஆதாரமாகக் கொண்டு சைவர் கட்சியில் சேர்ந்த பார்ப்பனக் கூட்டம் சிவனை உயர்த்தியும், விஷ்ணுவைத் தாழ்த்தியும் புராணங்களை எழுதிக் குவித்தது.

இதேமாதிரி வைஷ்ணவர் கட்சியில் சேர்ந்திருந்த பார்ப்பனக் கூட்டம் சிவனைத் தாழ்த்தியும், விஷ்ணுவை உயர்த்தியும் புராணக் கதைகளை எழுதிக் குவித்தது. இந்தப் போட்டியைச் சண்டை வெறியில் இரு கூறுன பார்ப்பனரல்லாத மக்கள் ஏற்றுக் கொண்டு ஆடவேண்டியவராயினர். இதற்கிடையில் இரண்டு கட்சிப் புராணங்களிலும் ஸ்மார்த்த மதம் நன்ருக இடம் விடாமல் நிறைத்து எழுதப்பட்டுவிட்டது. ஜாதி பேதத்தையும், மனித வித்தியாசத்தையும், பெண்ணடிமையையும், தீண்டாமையையும், கல்வி கூடாது என்பது போன்ற பல கொடுங் கட்டுப்பாடுகளையும் அஸ்திவாரமாகக் கொண்ட ஸ்மிருதிகளின் கொள்கைகள் புராணங்கள் முழுமையும் பெய்து பிரிக்க முடியாமல் கிடப்பதைக் காணலாம். இத்தனை புராணங்களும் வடமொழியில் எழுதப்பட்டன வென்பதையும், பின்னுல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன வென்பதையும் நோக்குதல்வேண்டும். இஷ்டப்பட்ட தெய்வத்தை வணங்கிக்கொண்டு மத வெறியின்றி சுகமாக இருந்த தமிழ் மக்கள் இருகூருகி பார்ப்பன ஸ்மிருதியை ஆதாரமாகக் கொண்ட புராணங்களையும் பிறவற்றையும் நம்பின நாள்தொட்டு இன்றுவரைமுன்னேற முடியாமல் நாளுக்கு நாள் கீழே போய்க் கொண்டிருப்பது கண்கூடு. சைவரும், வைணவருமாகிய இரு குழுவினரும் தங்கள் இயற்கைக் குணத்துக்கு மாறுபட்ட ஸ்மார்த்தக் கொள்கையான ஜாதி பேதத் துன்பத்தை ஒழித்துக்கொள்ள அவ்வப்போது முயற்சி செய்திருக்கின்றனர். என்ருலும் பார்ப்பன ஆதிக்கத்திஞல் பகிரங்கமாகச் செய்ய முடியாமல் மறைவாக நின்று பயன் தராதொழிந்தது. கடவுள் சந்நிதானத்தில் ஜாதி பேதம் இல்லை யென்றும், மோக்ஷத்தில் ஜாதி வித்தியாசம் இல்லையென்றும். பெண்களுக்கும் மோக்ஷத்திற்குச் செல்லும் உரிமை உண்டென்றும், தாழ்ந்த ஜாதியானுக்கும் படிப்பற்றவனுக்கும் வன விலங்குகளை வேட்டையாடுபவனுக்கும் நேரே மோட்சம் கிடைக்கக்கூடும் என்றும் சம உரிமையைப் பெரிய புராணக்காரரான சைவர் எழுதினுர். இது பார்ப்பனர்களுடைய ஸ்மிருதி மதத்துக்கு முழு விரோதமாகும். ஸ்மிருதியின்படி பார்ப்பானுக்குத்தான் மோக்ஷமுண்டு; சூத்திரனுக்கு மோக்ஷம் கிடையாது; சூத்திரன் மோக்ஷம் அடையவேண்டுமாஞல் பல ஜென்மங்கள் பார்ப்பானுக்கு அடி-

மை செய்து அந்தப் பலனால் பிராமண ஜென்மம் பெற்று அப்பால் மோக்ஷம் பெறவேண்டும். இதனைச் சைவர்கள் மறுத்தனர். இதேமாதிரி வைஷ்ணவர்களும் ஒரு அடியார் பட்டியல் போட்டு இக் கொள்கையை மறுத்து, சைவரைப்போலவே மோக்ஷமடைவதில் ஜாதி பேதமில்லாமல் எல்லோருக்கும் உரிமையுண்டென்று நூல்கள் எழுதியிருக்கின்றனர். இந்தமாதிரியான கொள்கைகள் நாளடைவில் வளர, வளர ஹிந்து மதத்தில் கொள்கைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியாமல் பலவிதமான நூல்கள் எழுதப்பட்டு, பலவிதமான கொள்கைகள் புகுத்தப்பட்டு எந்த வழியில் போனாலும் வாழ்க்கைக்கும், யுக்திக்கும் ஒத்துவராத ஏட்டுக்குவியல்கள் நிறைந்துவிட்டன. சண்டையும், பொறாமையும், வயிற்றுப் பிழைப்பும் ஒன்று சேர்ந்து புராணங்களுக்குள் புகுந்து அவைகளும் மதக்கொள்கைகளாகி நாசத்திற்கு வழிகாட்டி நிற்கின்றன.

ஹிந்து மதமானது சாத்திரத்தை ஒட்டியும், ஸ்மிருதி புராணங்களை ஒட்டியும், நன்றாக ஆராய்ந்துபார்க்கும்போது பார்ப்பனருக்காகவே வகுக்கப்பட்டிருக்கிறதென்பது தெள்ளிதின் விளங்கும். ஒரு சில விஷயங்களை மட்டும் இங்கு உதாரணமாகக் காட்டுகிறோம். ஜாதி பேதம் கடவுளால் வகுக்கப்பட்டது, அதை ஒழிக்கக்கூடாது என்று சாத்திரம் பேசுகிறது. கடவுளால் படைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற நான்கு ஜாதி நாலாயிரமாகப் பிரிவுபட்டிருக்கிறது. அத்தனை பேரும் பிராமணன் உயர்ந்தவனென்பதை ஒப்புக்கொண்டாகவேண்டும். ஒருவனுக்கொருவன் உயர்ந்தவன் தாழ்ந்தவனென்று எவ்வளவு சண்டை போட்டுக்கொண்டாலும் எல்லோரும் சேர்ந்து பிராமணன் உயர்ந்தவனென்று கூறாமல் முடியாது. நான்கு ஜாதியில் மூன்று ஜாதி படிக்கலாம் என்று ஒரு ஸ்மிருதி சொல்லுகிறது. ஆனால் கலியுகத்தில் பிராமணனும் சூத்திரனும்தான் உண்டு என்று மற்றொரு ஸ்மிருதி சொல்லுகிறது. இதனால் பிராமணனைத்தவிர மற்ற மனிதன் எல்லோரும் தாழ்ந்தவர்கள் என்று தீர்க்கமாகப் புத்தகத்தில் விதி எழுதப்பட்டுவிட்டது. இது கடவுள் வாக்கென்றும் சொல்லப்படுகிறது. கோவிலுக்குப் போனாலும் சத்திரத்திற்குப் போனாலும், வேதபாடசாலையில் நுழைந்தாலும், இப்படிப்பட்ட மத

ஸ்தாபனங்களில் எங்கு சென்றாலும் பார்ப்பனருக்கு மட்டும் உரிமையிருக்கிறதே தவிர மற்ற ஒருவருக்கும் கிடையாது. உலகத்திலுள்ள எந்த மதத்திலும் அந்த மதத்தில் பிறந்தவராயினும் சரி, அல்லது வேறு மதத்திலிருந்து புகுந்தவராயினும் சரி எல்லாருக்கும் சமஉரிமையுண்டு. மகமதியமதத்தில் புதிதாக ஒருவன் போய்ச் சேருவானாயின் பழய மகமதியனுக்கு உள்ள உரிமை புதிய மகமதியனுக்குச் சமமாகக் கொடுக்கப்படுகிறது. அப்படியே கிருஸ்தவ மதத்திலும் செய்யப்படுகிறது. அந்த மதத்திலுள்ள எந்தப் பெண்ணையும் அவன் கல்யாணம் செய்து கொள்ள உரிமையுண்டு. எந்தப் பெண்ணை விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளுகிறானோ அந்தப் பெண்ணுக்கு மதச்சட்டப்படி சகல பாத்தியமும் உண்டு. ஹிந்து மதத்தில் அப்படிக்கிடையாது. ஹிந்துமதத்திற்குள் ஒருவன் புகுவானானால் அவனுக்கு இருக்கவும் இடமில்லை; நிற்கவும் இடமில்லை. அவனுக்கு ஹிந்து மதப் பெண்களில் யாரையும் கல்யாணம் செய்துகொள்ள வகையுமில்லை. யாராவது ஒரு பெண் விரும்பிக் கல்யாணம் செய்துகொண்டாலும் ஒரு ஜாதியிலும் சேரமுடியாமல் தன்னந்தனியாக ஆதரவற்று நிற்கும்படியான நிலைமை ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா மதத்திலும் மதச்சட்டம் ஒன்று. அதன்படி உள்ள உரிமைகள் அந்த மதத்திலிருக்கிற எல்லாருக்கும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஹிந்து மதத்திலிருக்கிற மக்களுக்கு மதக் கோட்பாடுகள் எட்டாக்கனியாகவும், பித்தலாட்டமாகவும் ஏமாற்றமாகவும் இருக்கின்றன. மோட்சம்வேண்டுமென்று விரும்புகிற அத்தனை ஹிந்துக்களும் பார்ப்பனருக்குப் பணம் கொடுத்தாக வேண்டும். திவசம் கொடுக்கவேண்டுமானால் அவர்களுக்கே கொடுக்கவேண்டும். பரிகாரம் செய்யவேண்டுமானால் அவர்களுக்கே கொடுக்கவேண்டும். சுவாமி தெரிசனம் செய்யவெண்டுமானால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இதேமாதிரியான காரியங்களைப் பார்ப்பனர்கள் செய்யும்பொழுது ஒருகாசுகூடப் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக்கிறதில்லை. மதத்தின் பேரால் என்ன காரியம் நடந்தாலும் அதற்குச் செலவிடுவதில் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரே கொடுப்பதும், அதனால் கிடைக்கும் ஆதாயம் முழுமையும் அநுபவிப்பவர் பார்ப்பனராகவே இருப்பதையும் காணலாம்.

எல்லோருக்கும் பொதுவான ஹிந்துமத நூல்களைப் பார்ப்பனர்தான் படிக்கலாம். மற்றவருக்குப் படிக்கும் உரிமையில்லை. ஹிந்துமதக் கோயிலினுள்ளே விக்கிரகத்தின் அருகில் ஹிந்துக்களாகிய பார்ப்பனரல்லாத மக்கள் யாரும் போகமுடியாது. ஹிந்துவாக இருக்கிற பார்ப்பனரல்லாதார் ஒருவர், ஹிந்துவாகவே இருக்கிற ஒரு பார்ப்பனரைத் தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்வதாகச் சொல்லப்படுகிறது. ஹிந்து விக்கிரகத்தை வணங்க வேண்டுமானால் பார்ப்பனர் கையில் காசுகொடுத்து அவர்களாலேயே விக்கிரகத்திற்கு அர்ச்சனை முதலியன செய்யச் சொல்லி வணங்கவேண்டியதிருக்கிறது. பார்ப்பனரல்லாதார் கட்டிய கோவிலில் அவர்கள் காலால் மிதித்து அடித்த கல் விக்கிரகங்களை வைத்து கோவில் சாவியை பார்ப்பனர் கையில் ஒப்புவித்துவிட்டால் மறுபடி ஒருவரும் அதைத் தொடாதவாறு மத சாஸ்திரங்களால் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜாதி வேற்றுமை ஒன்றை அஸ்திவாரமாகக்கொண்டே இப்படிப்பட்ட உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரே கடவுளை நம்பி, ஒரே மதத்தில் ஈடுபட்டிருக்கிற மக்களுக்குள் ஒருவரையொருவர் 'தொட்டால் தீட்டு' என்று கூறும் கொடுமை பொறுக்கக்கூடியதன்று. பொருள் விஷயம் ஒருபுறமிருக்க மனிதனுடைய தன்மதிப்பு கொடுமையோடு அழிக்கப்படுகிறதென்பதை உணரவேண்டும். இந்த வித்தியாசங்கள் ஒரு மனிதனை இழிந்தவனென்றும், ஒரு மனிதனை உயர்ந்தவனென்றும் பிரித்து வைக்கின்றது. இதற்கு ஏதாவது பரிகாரம் செய்து 'தானும் ஹிந்து மதத்தில் மனிதனாகவேண்டும்' என்று கருதினால் அதற்கு வழியே கிடையாது. எத்தனை கோடி செலவிட்டாலும், உடலை வருத்தி எவ்வளவு தவங்கிடந்தாலும், எத்தனை மூட்டை விபூதி பூசினாலும், என்ன செய்தாலும் மத சம்பந்தமான உரிமைகளைப் பார்ப்பனரைப்போல அடைவதற்கு எவ்வித வழியும் இல்லவே இல்லை. செத்துப்போவதைத் தவிர உயிரோடிருந்து பெற வழியில்லாமல் மதம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஹிந்து மதத்தில் பார்ப்பனரல்லாதானாகப் பிறந்த எவனும் "சின்னச்சாதி" "இழிகுலத்தான்" "ஒருநாளும் உயரமுடியாதவன்" "என்ன செய்தாலும் பரிகாரமற்றவன்" என்ற நிலைமையை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். மதத்தின்பேரால்

கொடுக்கின்ற ஒவ்வொரு காசும் பார்ப்பனரைக் காட்டிலும் இழிந்தவன் என்று ஒப்புக்கொண்டு அதற்காகக் கட்டும் கப்பமென்று கருதவேண்டும். அதோடு மட்டுமல்ல; மீளமுடியாத அடிமை என்று பிறக்கும்போதே ஏற்பட்டிருக்கும் பட்டயத்தைப் புதுப்பிப்பதாக முடிகின்றது.

சமுதாய சீர்திருத்தத்தில் இரண்டே குறிப்புக்களை ஈண்டு காட்டுகின்றோம். மத சம்பந்தத்தில் சமுதாய வாழ்வு முற்றும் நாளாவட்டத்தில் புகுத்தப்பட்டிருக்கின்றது. மற்ற மதங்களில் ஈடுபட்டிருக்கும் அத்தனைபேருக்கும் சமுதாய வாழ்க்கைப் பொதுச் சட்டங்கள் ஒரேமாதிரியாக இருக்கின்றன. விவாக விஷயத்தில் ஆளுக்கொரு சட்டம் மற்ற மதத்தினரில் கிடையாது. ஹிந்து மதத்தில் எத்தனை ஆயிரம் பேதங்கள் உண்டென்பதை இங்கு எடுத்துக்காட்ட இடம் போதாது. விதவா விவாகம், ருதுமதி விவாகம் என்னும் இரண்டைமட்டும் இங்கு உதாரணமாக எடுத்துக் காட்டுகிறோம். விதவா விவாகம் செய்யக்கூடாதென்று மத நூல்கள் கூறுகின்றன. ஆனால் பார்ப்பனரும், அவரைப் பின்பற்றி மகா உயர்ந்தவர்களென்று கருதிக்கொண்டிருக்கும் சில ஜாதியார்களும் தவிர ஏனைய ஹிந்துமக்கள் அத்தனைபேரும் விதவா விவாகம் செய்யும் வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் மதத்திற்குப் புறம்பாகக் கருதப்படவில்லை. இதேபோல பார்ப்பனர்கள் மட்டும் ருதுவான பிறகு பெண்களுக்கு விவாகம் செய்வது கூடாதென கருதுகின்றனர். ஹிந்துமதச் சட்டம் அப்படித்தான் என்று சாத்திரங்களை யெடுத்துக் காட்டுகின்றனர். விவாக வயது நிர்ணய மசோதா இந்தியச் சட்ட சபையில் கொண்டு வந்தது முதல் இன்றுவரை மதம் போய்விட்டது, போய்விட்டது என்று சத்தம் போட்டுக்கொண்டிருக்கின்றனர். ஹிந்து மதத்திலுள்ள பார்ப்பனரல்லாத இருபது கோடிக்கு மேற்பட்ட பார்ப்பனரல்லாத மக்கள் யாவரும் ருதுவானபின்னரே பெண்களுக்கு விவாகம் செய்து வருகின்றனர். இதுவரையில் மதம் போய்விட்டதென்று எவரும் கூறவில்லை. சட்டமிட்டு பார்ப்பன சமூகத்தை நெருக்கினவுடன் மதம் போய்விட்டது, மதக் கொள்கைக்கு விரோதமேற்பட்டுவிட்டதென்று சத்தமிடுகின்றனர். ஒரே ஹிந்துமதத்தில் ஈடுபட்ட இருபது கோடி மக்கள் செய்து

வருகிற காரியம் மதச்சட்டப்படி விரோதமாக இருந்தும் மதச் சட்டத்தை மீறியதாகக் கருதப்படவில்லை. பார்ப்பனரிடம் வந்த போது அதே காரியம் மதச் சட்டத்திற்கு விரோதமென்று சொல்லப்பட்டது. இதனுல் ஹிந்துமத மென்பதும், ஹிந்து மதக் கொள்கைகள் என்பனவும் பார்ப்பனருக்காக இருக்கின்றன வே தவிர மற்றவர்களுக்காக இல்லவே இல்லை யென்பது விளங்க வில்லையா? பார்ப்பனரல்லாத மக்கள் யாவரும் உழைத்து பார்ப்ப னர்களுக்குக் கொடுத்து வாழவைக்க வேண்டுமென்ற அஸ்திவாரத் தின் பேரிலேயே மனுதர்ம சாஸ்திரம் எழுதப்பட்டிருக்கிறது. இவ் வுண்மையைத்தான் எடுத்துக் கூறி, ஹிந்துமதமானது பார்ப்பன ருக்காகவே இருக்கும் மோசமான தத்துவத்தை எடுத்துக் காட்டி எல்லா மதத்தினரும், தங்கள் மதத்திற்கு உட்பட்ட உரிமைகளை ஒரேமாதிரியாக அனுபவிப்பதைப்போல ஹிந்துக்கள் யாவரும் அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஒரு கூட்டம் உழைத்துப்போட்டே சாகவும், இன்னொரு கூட்டம் உண்டு களித்தே மகிழவும் கட்டுப்பாடாக ஏற்பாடு செய்து ஹிந்து மதம் இன்றிருக்கிறதென்பதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---

# இனி ஜம்பம் பலிக்காது.

## (ஒரு கதை)

திரு. ராம. சுப்பிரமணியம் எழுதியது.

புண்ணிய பூமி என்று சொல்லிக்கொள்ளுகிற நமது இந்தி யாவில் தென்பாகத்தில் கரியபட்டி என்றொரு சிறிய கிராமமிருந் தது. அக் கிராமத்தில் பல புன்செய் நிலங்களையும் சில நன்செய் நிலங்களையும் பண்படுத்திப் பயிர் செய்துகொண்டு பல குடியான வர்கள் வாழ்ந்து வந்தார்கள். அக் குடியானவர்கள் ஒவ்வொரு பருவ காலங்களிலும் தம் தேக சிரமங்களைச் சிறிதும் கவனியாது அந்தந்தக் காலங்களில் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துப் படாத பாடு பட்டு உணவு வகைகளை உண்டாக்குபவராயிருந்தனர். அவர்களில் கறுப்

பண்ணன் என்றொரு வயோதிகக் குடியானவரிருந்தார். அவர் மிகவும் நல்லவர். மிகுந்த ஏழை. நன்செய் புன்செய் நிலங்கள் எதுவும் சொந்தத்திலில்லை. பிறருடைய நிலத்தில் உழுது சம்பாதிப்பதற்குப் போதிய உடல் வலியில்லாதவராக யிருந்தார். அவருக்கு உள்ள சொத்து ஒரே ஒரு பசுமாடுதான். இதைத் தவிர மிக மிகப் பழைய குடிசை வீடு ஒன்று எப்பொழுது புறப்படுவோம் என்று தயாரிலிருந்தது. அவருக்கு வேறு உதவி செய்வாரும் இல்லை. தமது பதினாறு வயதுள்ள வீரன் என்னும் குமாரனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு அந்த ஊரில் பிராமணரல்லாதவர் படிக்கும்படி தர்ம பாடசாலை (சாஸ்திரத்தில் தருமம் என்று சொல்லப்படாததால்) ஒருவரும் ஏற்படுத்தவில்லை. வேறு திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதென்றால் அங்குள்ள பார்ப்பன உபாத்தியாயர்களுக்கு திவசக்காரர் வீட்டிலிருந்து காய் கறி அரிசிப் பெட்டி தூக்கி வரவும் மாதா மாதம் சம்பளம் கொடுக்கவும் நமது கறுப்பண்ணன் சம்மதமில்லாததோடு பணமில்லாதவராகவு மிருந்தார். கறுப்பண்ணன் மனைவியாரும் வயதானவராகையால் யாதொரு வேலையும் செய்ய சக்தியில்லாதவராகவிருந்தார். ஆக இம் மூவரும் அவர்கள் சொத்தாகிய பசுமாட்டைக்கொண்டு அதில் வரும் வரும்படியினால் பிழைக்கலாயினர். மேலும் அக் கிராமத்தில் அக் குடியானவர்களின் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு பட்டு உழைப்பின் பயனாய்க் கிடைக்கும் உணவுப் பொருள்களை சமயம் பார்த்து உபயோகித்துக் கொள்ளும் பார்ப்பனர் செறிந்த ஓர் அக்கிரகாரமும் இல்லாமலில்லை. பொதுவாக வைதீகப்பார்ப்பனர் எனும் ஒருகூட்டத்தார் ஒரு தொழிலும் செய்வதில்லை. ஆனால் ஜிலேபி, லட்டு, சேமியாப்பாயாசத்துடன் சாப்பாடு! சாதிக் தருவினால் சாப்பாடு! சமயக்குருவினால் சாப்பாடு! யானை குதிரை ஒட்டை முலிதயவைகளை ஒட்டிக்கொண்டு வரும் சர்க்கஸ் குருவினால் சாப்பாடு! பகலில் கொள்ளையடிக்கும் பக்காக்குருவினால் சாப்பாடு! சத்திரத்தினால் சாப்பாடு! சாஸ்திரத்தினால் சாப்பாடு! காசி முதல் கன்னியாகுமரிவரை கண்ட கண்டவிடமெல்லாம் ஒரு சிரமமும் படாமல் வெங்காயச் சாம்பாருடன் சாப்பாடு! கருட புராணத்தினால் சாப்பாடு! காவேரிப் புராணத்தினால் சாப்பாடு! வேதத்தினால் சாப்பாடு! விருவிருத்த சாப்பாடு! விலாப்

புடைக்கச் சாப்பாடு! ஆளின் தலையில் அரிசியை அள்ளிப்போட்டு அகப்பட்டவரை பிடுங்கி ஆஸ்திகம்! ஆஸ்திகம்!! என்று சொல்லும் ஆசாரச் சாப்பாடு! கோவிலினுல் சாப்பாடு! கொள்ளையான சாப்பாடு! ஏமாந்த வரையில் எத்திப்பிழைக்கும் சாப்பாடு! "தீர்க்காயுஷ்யமஸ்து" என்று சொல்லித் தீர்த்துக் கொள்ளுகிற சாப்பாடு! ஆக இவ்வாருக ஏழைகளின் இரத்தம் சொட்டி உழைக்கும் உழைப்பை சந்தோஷமாகக் கொள்ள இப் பார்ப்பனர்களும் இவர் போன்ற பல சுயநலக்காரர்களும் மலிந்திருந்தார்கள். இவர்களில் ஒருவரான அக்கிரமத்து பரசுராமய்யர் ஒரு பக்காப் பேர்வழி. அவருக்குச் சம்பாதிக்கும் வழி சுலபமாகத் தெரியும். சமயம் பார்த்துப் புகுவதில் பலே பேர்வழி. அவர் வெகு நாளாய் தமது கறுப்பண்ணன் வீட்டு மாட்டை எந்த விதமாகவாவது கொண்டு வரவேண்டு மென்று பலவித யோசனை செய்தும் முடியாமற் போய்விட்டது. கடைசியாக கறுப்பண்ணன் சில நாட்களில் நோய்வாயுற்று இறக்குந்தருவாயிலிருக்கிருர் எனத் தகவல் தெரிந்து அவர் வீட்டிற்குப் பஞ்சாங்கத்தையும் கருட புராணத்தையும் கட்கத்தில் வைத்துக்கொண்டு சென்று அங்கு வந்திருந்த பாமர மக்களிடமும் வீட்டுக்காரரிடமும் பரசுராமய்யர் தமது மூட்டையை அவிழ்த்து சங்கதிகளைச் சொல்லி முடித்ததும் அவர்கள் "சரிதான், சாமி சும்மாவா சொல்லுவார்கள், சாத்திரத்திலே இருக்கிறதைக் காட்டுகிருரே, உண்மைதான். நம்மள் பசுமாடு பெரிதல்ல வைதரணீ நதியைக் கடக்கும் கஷ்டம் பெரிதாகவல்லவோ இருக்கிறது. கறுப்பண்ணன் சாதாரண காலத்திலே வேலை ஒன்றும் செய்யச் சக்தியில்லாதவர் இப்பொழுது இந்தக் கஷ்டத்தைக் கொடுக்கலாமா" என்று பலவாருக யோசித்து முடிவாக அவர்களிடமிருந்த பசுமாட்டை, என்ன செய்வது என்ற விசனத்துடன் தகப்பனைக் காட்டிலும் மாடு பெரிதா என்று எண்ணி பிடித்துத் தானம் கொடுத்துவிட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் கறுப்பண்ணன் கண்ணை மூடினுர். பரசுராமய்யரும் மிகுந்த சந்தோஷத்துடன் வீடு போய்ச் சேர்ந்தார். சில நாட்கள் கழிந்தன. கறுப்பண்ணன் குடும்பம் செலவிற்கு வழியில்லாது தவித்துக்கொண்டிருந்தது. ஒரு நாள் காலை ஏழு மணிக்கு வீரன் பரசுராமய்யர் வீட்டின் தெருப்பக்கம் போய்க்கொண்டிருக்கையில்

பரசுராமய்யர் ஒரு கையில் பால் நிரம்பிய செம்புடன் தானம் வாங்கிய பசுவிற்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். வீரன் அதைக் கண்டவுடன் அவரிடம் சென்று ஏனையா! இப் பசுவை என் தகப்பனுர் நதியைக் கடப்பதற்கு உதவியாக அனுப்பப்போவதாகக் கூறி எங்களிடமிருந்து வாங்கி வந்து உமது வீட்டில் வைத்துக்கொண்டு பால் கறக்கிறீரே இது சரியா? என்று கேட்டான். அதற்குப் பரசுராமய்யர், "பசு இங்கு தானிருந்து கொண்டிருக்கும். ஆனுல் உன் தகப்பனுரிடம் மந்திர சக்தியால் சென்று வைதரணீ நதிக்குப் போய்ச் சேரும். அந் நதி நெருப்பு மயமாக ஓடும். அதைக் கடப்பதற்கு மயிர்ப்பாலமொன்று கட்டப்பட்டிருக்கிறது. அதன் மேலே இப் பசு முன்னே செல்ல பின்னே அதன் வாலைப் பிடித்துக்கொண்டு உன் தகப்பனு செல்வார். ஒரு சிரமமும் இராது. இப்படித்தான் சாஸ்திரம் கூறுகிறது. நானு கூறுகிறேன்?" என்றுர். பின்னர் வீரன் நன்ருக சாஸ்திரம் கூறியது! வெகு ஒழுங்கு! ஒரு பசுமாட்டை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்கிற ஏழையாகிய எங்களிடமே இம்மாதிரி கொள்ளையடித்துக்கொண்டு வந்துவிடும் சாமர்த்தியமுள்ள நீ, பணம் ஏராளமாயுள்ளவர்களிடம் அவர்களுக்குத் தகுந்தாற்போல் சொல்லி எவ்வளவு பொருள்களை ஏமாற்றிப் பிடுங்கியிருப்பாய்! நாங்கள் இந்தப் பசு இல்லாததினுல் படுங் கஷ்டம் உனக்கென்ன தெரியும்? அகப்பட்டவரை அடிக்கிறது தானே! வெகுயோக்கியதை!" என்று சொல்லி மாட்டை அவிழ்த்துக்கொண்டு வந்து தன் வீட்டில் கட்டிக்கொண்டான். பார்த்தார் பரசுராமய்யர். இனி ஜம்பம் பலிக்காது என்றெண்ணியும் வீரனின் வீட்டிற்குச்சென்ருல் மரியாதை கிடைக்குமென் றஞ்சியும் மோக்ஷலோகப் பித்தர்கள் வீடு தவிர வேறு யார் வீட்டையும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை என முடிவு செய்து கொண்டார்.

# ஒன்றுக்கொன்று முரண்.

## புராண ஆபாசம்.

திருவண்ணுமலைத் தலத்தைப் பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. அந்த அண்ணுமலை நாதருக்கு ஆயிரக்கணக்கான அடிமைக்குடிகள் உண்டென்பதும் எனக்குத் தெரியும். பயபக்தியோடு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பொருளை அந்த ஊரில் சூறை விடுவதும் தெரியும். அதைப்பற்றி எழுதினுல் அநேகருக்குக் கோபம் மூக்கை முட்டுமென்பதையும் நான் நன்ருக அறிந்திருக்கிறேன். என்ருலும் மூட்டையை அவிழ்க்காமல் முடியவில்லை. அந்த ஊரில் நடக்கும் இத்தனை காரியங்களுக்கும் ஆதாரமாக இருப்பது அருணுசல புராணமென்னும் அவ்வூர் தலபுராணமாகும். அதிலிருந்து ஒரு மச்சம் காட்டுகிறேன். அருணுசல புராணத்தில்,

திருமலைச் சருக்கம் பாட்டு 16.

> பரியதான தன்தேவி மூக்கிரண்டினும் பரிதி
> உரிய வாண்பரியாகி யிந்திரியத்தை ஊற்ற
> வரிசை பற்றிய மருத்துவரிருவரும் வந்தார்
> விரி சராசரம் பிறந்தன பலபலவிதமாய்.

(இதன் பொருள்) சூரியன் தன் மனைவியைச் சேருகிறதற்கு யத்தனப்பட்டபோது அவள் அதற்குப் பொருந்தாமல் பெண் குதிரையாயோடினுள். சூரியன் ஆண் குதிரையாய்த் [illegible]ரத்த அவள் திரும்பிப்பார்த்தாள். அப்போது சூரியன் தனது பெண்சாதியின் இரண்டு மூக்கிலும் இந்திரியத்தை ஊற்ற, வரிசையாகிய அசுவினி தேவர்களிருவர் பிறந்தார்கள். அதன்பின்பு விரிந்தசரமும் அசரமும் அநேகவிதமாயுண்டாயின.

மழவை மகாலிங்க ஐயரவர்கள் மேற்கண்ட விதமாக மேற்படி பாட்டிற்கு உரை எழுதியிருக்கிருர்கள். சூரியனுனவன் ஒரு பெண்டாட்டி கல்யாணம் செய்திருக்கிருன். அவளைச் சேருவதற்கு எத்தனப்பட்ட பொழுது அவள் ஓட்டமெடுத்திருக்கிருள். ஓட்டமெடுத்ததற்குக் காரணம், அவனுடைய வெப்பத்துக்குப் பயந்தோ அல்லது அந்த ஆளிடத்து விருப்பமின்மையோ

இந்த இரண்டிலொன்ருகத்தானிருக்கவேண்டும். புருஷனிடத்தில் பிரியமில்லாத அல்லது அவன் தன்மை தெரியாத பெண்ணைச் சூரியனுக்குப் பிடித்துக் கட்டிவைப்பானேன்? சூரியன் ஒரு தேவனுக இருந்தும்—உலகத்துக்கெல்லாம் ஞான ஒளியைத் தருகிறவனு யிருந்தும் இந்தப் பெண்ணைக் கட்டிக்கொண்ட காரணமென்ன? புருஷன் இஷ்டத்தை மீறக்கூடாதென்றும், அவன் விரும்புவதை யெல்லாம் செய்யவேண்டுமென்றும் ஒரு வண்டி சாஸ்திரம் எழுதிவைக்கப்பட் டிருக்கிறதே? அவற்றை அணுவளவாவது சூரியன் பெண்டாட்டி நம்பி யிருப்பாளானுல் சூரியன் விருப்பத்துக்கு இணங்காமல் ஓட்டமெடுத்திருக்க முடியுமா? அப்பொழுதே அவளுடைய கற்புக் கெட்டுப்போய்விட்டதல்லவா? ஒருவேளை அன்றையதினம் அவளுக்கு உடம்பு சரியாக இல்லையென்பதனுல் இஷ்டப்படவில்லையென்று சொல்லவும் முடியாது. ஏனென்ருல் தேவர்களுக்குச் சீக்கு வருவதில்லை. சீக்கு வந்ததாக வைத்துக்கொண்டால் சீக்காயிருக்கிற பெண்ணைச் சூரியபகவான் விரட்டிப்பிடித்துச் சம்பந்தப்படுவது நியாயமாகுமா? ஆளாக ஓடினுல் சூரியன் விரட்டிக்கொண்டுவந்து தொந்தரவு செய்வானென்று கருதியே குதிரை வடிவெடுத்து ஓட்டம் பிடித்திருக்கிருள். இஷ்டப்படாத ஒரு பெண்ணை. விரட்டிப் பிடிப்பது மானக்கேடான செய்கை என்பதைச் சூரியன் மறந்து ஆண் குதிரை உருவெடுத்து விரட்டிக்கொண்டு போயிருக்கிருன். பெண்டாட்டியான பெண் குதிரை தப்பியோட முடியாமல் எதிர்த்துச் சண்டைபோட்டிருக்கிறது. சூரியனுன ஆண் குதிரை பெண்குதிரையின் பின் பக்கம் போகமுடியாமல், பெண் குதிரையின் மூக்குத்துவாரம் இரண்டிலும் இந்திரியத்தை ஊற்றிவிட்டதாக அருணசல புராணத்தின் அற்புதப் பாட்டுச் சொல்லுகிறது.

ஷை புராணம் நூல் வரல்று 20.

கருத்துருக விறைவ் னந்திக் கருள்புரிய நந்தியுமார்க் கண்டற்கோத
விருத்திமறை வியாசமுனிக்கவனுரைக்கச் சூதனுக்கு வியாசன் சொல்லப்
பொருத்தமன விருடியருக் கருட்சூதன் மொழிந்தசிவ புராணங் கோடி
உருத்திரசங் கிதையுருத்த வருணகிரி வளத்தினையா னுரைக்கலுற்றேன்.

(இதன் பொருள்) மனதுருகப் பரமசிவன் நந்திகேசுரருக்கு அருள்புரிய நந்திகேசுரரும் மார்க்கண்டேயருக்கருள்செய்ய, மார்க்

கண்டேயர் வேதங்களை யொழுங்குசெய்த வியாசருக் கருள்செய்ய, வியாசர் சூதமுனிவருக்குச் சொல்ல, சூதர் ஒருவழிப்பட்ட மனத்தையுடைய சவுனகாதி ரிஷிகளுக் கருள்செய்த சிவபுராணம் கோடியாகும். அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் உருத்திர சங்கிதையிற் சொல்லிய அருணுசல ஸ்தல புராணத்தைச் சொல்லத் தொடங்கினேன்.

பரமசிவனிடத்திலிருந்து நந்தி யெம்பெருமான் மூலம் அநேக ரிஷிகளின் காதுகளில் நுழைந்து இந்தப் புராணம் வாய்வழியாக வந்திருப்பதாக இந்தப் பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி விஷயங்களை என்ன காரணம் பற்றிப் பரமசிவன் இந்த மகா பக்தர்களிடம் சொல்லிப் பாடச்சொல்கிருர் என்பதற்குத் தகுந்த காரணம் புலப்படவில்லை. சூரியன் என்னுந்தேவன் காம உணர்ச்சியுண்டானவுடன் மனைவி சம்மதிக்காத போது குதிரையாக ஓடி அதன் மூக்கில் இந்திரியத்தை ஊற்றினுனென்று புராணமெழுதி இது பரமசிவனுலும் தேவர்களாலும் ரிஷிகளாலும் சொல்லப்பட்டதென்றும் நெஞ்சு அஞ்சாமல் எழுதி அதனைக் கோயில்களிலும் மடங்களிலும் ஐயர்மாரும் சைவர்களும் சாமியார்களும் இருந்து படித்து ஜனங்களை ஏமாற்றி வருவது ஒழுங்கா என்று கேட்கிறேன். இந்த மாதிரி மூக்குத்துவாரங்களில் விடப்பட்ட இந்திரியத்தின் பலனுக இரு துவாரங்களிலிருந்தும் அசுவினி தேவர்கள் என்ற இரண்டு தேவர்கள் பிறந்தார்களாம். மூக்கினுள் கர்ப்பப் பையும் ஏற்பட்டிருந்தது போலும்! இதே சூரியபகவான் தன் மனைவியை மட்டும் விரட்டிப் பிடித்தானென்பது மட்டுமல்ல. இவன் புணர்ந்த பெண்கட்குக் கணக்கே கிடையாது. புராணம் இதிகாச மென்றுள்ள எதனை யெடுத்தாலும் அதில் பெண்ணைச் சூரியன் புணர்ந்த கதையுமிருக்கும். பாரதத்தில் குந்திதேவி கன்னிகையாக இருக்கும் போது, பெரிய மனுஷியாகு முன்னரே இந்த சூரியபகவான் சென்று புணர்ந்து கர்ணனைப் பெற்றுவிட்டாளென்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவர்கள் இப்படிச் செய்யலாமா? பெரிய மனுஷியாகுமுன் ஒரு பெண்ணைக் கற்பழித்தால் இப்போதுள்ள சட்டப்படி கடுந்தண்டனையடைய வேண்டும். சூரியபகவான் கன்னிப்பெண்ணைத் திருட்டுத்தனமாகக் கூடிப் பிள்ளைபெற்று

ஆற்றில் விடும்படி செய்துவிட்டான். இவனைத் தெய்வமென்று ஜனங்கள் கும்பிட்டு வருகின்றனர். இந்தச் சூரியனுக்குக் கோயில் களில் சிலை வைத்துக் கும்பிடப்படுகிறது. நாள்தோறும் வணக்கம் நடக்கிறது. இதில் இன்னுமொரு தமாஷ் இருக்கிறது. குந்திதேவி யை முதலில் சூரியன் புணர்ந்து கர்ணனைப் பெற்றான். அந்தச் சூரியனுடைய இந்திரியத்தால் குதிரை மூக்கிலிருந்து பிறந்த அசுவினி தேவர்களான இரண்டு மக்களும் அதே குந்தி தேவியைப் புணர்ந்து நகுலனையும் சகாதேவனையும் பெற்றார்கள். கதை நன் றாக இருக்கிறதா? ஒரு பெண்ணைத் தகப்பனும் மக்களும் சேர்ந்து பிள்ளைகள் பெற்று ராஜ்யம் ஆளவிட்டிருக்கிறார்கள். இவையெல் லாம் நான் கட்டும் பொய்க்கதையல்ல. சுயமரியாதைக்காரரின் சொந்தக் கட்டுமானமல்ல. பரமசிவன் திருவாயிலிருந்து புறப்பட்ட சத்தியவாக்கென்றும், மலர்ந்து மணக்கின்றன வென்றும் எழுதி அச்சடித்து வைக்கப்பட்டிருப்பனவாகும். சம்மதிக்காத பெண் டாட்டியை விரட்டிச் சென்று வழிமறித்துச் சேர்வதும், அவள் இணங்காதபோது மூக்கில் புணர்வதும், மூக்கிலிருந்து பிள்ளை களைப் பெறுவதும், வேறு பெண்ணிடத்து ஒருவருக்கும் தெரி யாமல் விபசாரம் செய்வதும், பெரியமனுஷியாகாத பெண்ணைச் சேர்வதும், பிள்ளை பிறந்தால் ஆற்றில் விடுவதும், அப்பன் சேர் ந்து பிள்ளை பெற்ற பெண்ணுடன் மகன் சேர்ந்து குழந்தை பெறு வதும், அவர்கள் அண்ணன் தம்பிமாராக வாழ்வதும் ஆகியன தேவர்களின் பரிசுத்த வாழ்க்கையென்று புராணத்தில் எழுதப்பட் டிருக்கின்றன. இந்த ஆபாஸங்களை விடாமல் கைகட்டி வாய் புதை த்து ஆண் பெண்கள் கூடியிருந்து கேட்டு நடக்கவேண்டுமென் றும் சொல்லப்படுகிறது. இவை கிருதயுகம் முதல் துவாபரயுகம் வரை நடந்த அற்புதமான காரியங்களாகும். கலியுகத்தில் அக்கிர மம் அதிகப்பட்டுவிட்டதென்று சொல்வதற்கு ஏதாவது அர்த்த மிருக்கிறதா என்று கேட்கிறேன். இத்தனை அசிங்கமும் ஆபாஸ மும் இப்போது நடக்கிறதா என்று கேட்கிறேன். தேவர்களே அந்தக்காலத்தில் இப்படி நடந்தால் மனிதர்கள் எப்படியிருந்திருப் பார்களென்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளவேண்டும்.

இனி சூரியன் குதிரையாகப் புறப்பட்டபோதும் குந்திதேவி யைச் சேரச் சென்றபோதும் சூரியனின் ஸ்தானத்தில் இருந்து

உலகத்துக்கு வெளிச்சத்தைக் கொடுத்தது யாரென்பது விளங்கவில்லை. தற்கால ஆராய்ச்சிப்படி சூரியன் ஒரு நிமிஷங்கூட ஓய்வெடுக்க முடியாதே! ஏழு குதிரை போட்டு ரதத்தில் சவாரி செய்து உலகைச் சுற்றிவருகிறானென்ற புராணப்படி பார்த்தாலும் இருபத்துநாலுமணி நேரமும் சவாரியில்தானே இருக்கமுடியும். இடக்கு செய்கிற குதிரைப் பெண்டாட்டியை விரட்டிக்கொண்டு செல்ல நேரமேது?

சூரியன் பூமியைப்போன்றதும் ஆனால் பூமியைவிட எத்தனையோ பங்கு பெரியதான ஒரு கோளமென்றும் அது எப்பொழுதும் சுழன்றுகொண்டே இருக்கிறதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சூரிய ஒளியில் நின்றால் தேகத்துக்கு நன்மையுண்டென்பதையறிந்த வைத்தியர்கள் சூரியனைத் தெய்வமென்று எழுதிக் காலையில் அந்த ஒளியில் நின்று கும்பிடவேண்டுமென்று சொல்ல முன்வந்தனர். இதிலிருந்து ஏடெழுதுகிறவர்களும் வயிற்றுப்பிழைப்பு ஆசாமிகளும் சேர்ந்து சூரிய கோளத்தைச் சாமியாக்கி சாமி மனிதனைப்போலவே இருக்குமென்று கருதி மனிதனாகிய தாங்கள் செய்யும் அயோக்கியத்தனமெல்லாம் சாமியும் செய்யுமென்றும் நாளாக நாளாக சாமி செய்தது என்றும் எழுதிப் புராணமூட்டையை, ஆபாசமூட்டையாக்கிவிட்டனர். இந்தப் புளுகு நிறைந்த ஆபாஸமூட்டையை ஜனங்கள் நம்பமாட்டார்களென்று கருதி பரமசிவன் சொன்னது, நந்தி சொன்னது, நாரதர் சொன்னதென்றும், பொய்யென்றால் நரகம் வருமென்றும், நம்பினால் புண்ணியமென்றும் எழுதிவைத்திருக்கின்றனர். இற்றுப்போன பொள்ளல் துணிக்கு ஒட்டுப்போட்டுத் தைத்தமாதிரி வைதீகர்கள் செய்துவந்தால் ஊசி நுழைந்த இடமெல்லாம் இற்ற துணி பொத்தலாகி உதிர்ந்து பொத்தல் பெரிதாவதுபோல் ஆகி வருகிறது. இம்மாதிரியான ஆபாசங்களைப் பொது ஜனங்கள் கைக்கொண்டு கெட்டலையப்படாதென்பதே என் கொள்கை. புராணத்தில் உண்மையை எழுது; நடப்பதை எழுது; நடக்கக்கூடியதை எழுது; கண்டதை எழுது; பொய்யும் புரட்டும் எழுதாதே! அசிங்கமானதை எழுதாதே! சாமி பரலோகம் நரகம் என்று எழுதிக் கொள்ளையடிக்காதே! பயமுறுத்தாதே! அப்படி எழுதியிருப்பதற்குப் பயப்படக்கூடாது! அசிங்கத்தை

கம்பாதே! அசிங்கத்தை ஒப்புக்கொள்ளாதே! என்பது தான் என் உபதேசம். இதையெடுத்து விளக்கிக்கூறும் என்னை நாஸ்திகன் என்று புத்திசுவாதீனமாக உள்ளவன் சொல்லமாட்டான். அப்படிச்சொல்லிப் பொது ஜனங்களை இனி யேமாற்ற முடியாது.

"சர்ச்லைட்"

---

# புலியின் கொவல வழக்கு.

ஜெர்மனி தேசத்திலுள்ள லிப்ஸிக் நகரில் சில நாட்களுக்கு முன் ஓர் பெண்புலியின் கழுத்தைக் கடித்துக்கொன்று, தன்னைப் பிரியமாய் வளர்த்துவந்த எஜமானை இரட்சித்த ஆண்புலியின் சமர்த்தைப்பற்றி நேயர்கள் அறிந்திருப்பார்கள். (சென்ற ஐப்பசி மாதம் உஅ௨ வெளிவந்த "குமரன்" கக-ம் பக்கம் பார்க்க).

அச்சம்பவத்தின் சுருக்கம் வருமாறு:—ஸர்க்கஸில் காண்பிக்கும் வேடிக்கைகளுக்காக மிருகங்களைப் பழக்கும் வேலையிலீடுபட்டிருந்த ஒருவர் ஓர் நாள் சில மிருகங்களைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வெளியே உலாத்தச்சென்றார். அச்சமயம் அக்கூட்டத்தில் சென்ற ஓர் பெண்புலிக்குத் தன் இயற்கைக் குணம் மேலிட்டதால் ஸர்க்கஸ்காரர்மேல் பாய்ந்து கீழே தள்ளிக் கடித்துக் கொல்ல யத்தனித்தது. இச்செயலைக்கண்டதும் அங்கிருந்த ஆண்புலியொன்றுக்கு, தன் எஜமான்மேலுள்ள நன்றிப்பெருக்கால் கொலைபாதகம் செய்யாதபடி பெண்புலியைத் தடுக்கவேண்டுமென அவாவெழும்பி அந்த நிமிஷமே பெண்புலியைத் தாக்கியடித்து அதன் கழுத்தைப் பலமாய்க்கடித்து உயிரையுண்டுவிட்டது, என்பது பத்திரிகையில் காணப்படும் சமாசாரம். அதற்கு மேல் நிகழ்ந்த கதையே இவ்வியாஸத்திற்கேதுவாவது.

நன்றி செலுத்தின புலிக்குப் பாராட்டு வைபவங்கள்.

உடுக்கை இழந்தான் கையொப்ப உதவிக்கு முந்திய புலிக்கு உரிய வழிகளிலெல்லாம் பெருமைகள் சூட்டவேண்டுமெனும் பேரவா ஸர்க்கஸ்காரரைப் பிடரிபிடித் துந்திற்று. உடனே ஆலோசனை தொடங்கினார். அதன் பயனாகத் தன் நண்பர் பலரைக் கூட்டி வைத்து, பெரிய விருந்தொன்று நடத்தினார். அவ்

விருந்தில் தம்முயிர்த்தோழரான புலிக்கு உயரிய ஆசனமளித்து வெள்ளிப்பாத்திரங்களில் பலவகைப் பச்சை மாம்சங்கள் படைத்து உபசரித்தார். விருந்து முடிவில் புலியின் பெருமைகளை விளக்கி விருந்துண்ட கனவான்கள் பலர் பிரசங்கமாரி பொழிந்தனர். குறள் ஆராய்ச்சியில் சிறந்த புலவர், மக்கட்பிறப்பினர்கூடச் செய்ந்நன்றியின் மேன்மை யறியாதிருக்கும் இக்கலிநாளில் விலங்குருத்தாங்கிய புலி நன்றி மறவாது கைம்மாறு காட்டிய நற்கதையினை உலகம் ஓர்காலும் மறக்கும் தரத்ததன்றெனுங் கருத்தினை உட்படுத்திச் சொற்பெருக்கிட்டார். வேறு சிலர் "பெரியாரைத் துணைக்கோடல்" எனும் குறள் அதிகாரத்தைச் சுட்டி, ஸர்க்கஸ்காரர் காட்டுப்புலியொன்றினைத் தனக்குத் துணைவராக ஏற்படுத்திக்கொண்ட முன்கருதலினை வியந்து புகழ்ந்தனர். அதையொட்டி ஓர் இருபிறப்பாளரான சாஸ்திரி யெழுந்து அங்கு உண்ட அறுவகையுண்டியின் ஞாபகத்திற்காக விருந்தின் காரணகர்த்தரான புலியாருக்கு "வீரதீர புலிச்சிங்கம்" எனும் சிறப்புப் பெயர் சூட்டவேண்டுமெனப் பிரேரேபித்தார். அதனை ஆதரித்தும் ஆமோதித்தும் சுவைரஸத் தேர்ச்சி பெற்றோர் பலர் பேசினர். ஆகவே வீரதீரப் புலிச்சிங்கப் பட்டம் புலி பெற்றது.

ஆயினும் அங்கு குழுமியிருந்த பெருங் கூட்டத்தின் சில கோணங்களில், புன்னகையும் முகச்சுளிப்பும் உண்டாகாதிருக்கவில்லை. இந்நிகழ்ச்சி கவனித்த சிலர்க்கே அறிவாயிற்று. அது நிற்க,

விருந்திற்கு விஜயம் செய்திருந்த டிஸ்திரிக்ட் கலெக்டர் துரையவர்களண்டையில் ஸர்க்கஸ்காரர் சென்று ஏதோ அபேட்சிக்கவும் அதற்கிசைந்த தலையசைப்புடன் "ஒகோ அங்ஙனமே செய்வேன்" என்று கலெக்டர் உறுதிகூறவும் செய்தார். இது நிகழ்ந்து சிறிது நாட்களுக்குள் மற்றொரு பெருங்கூட்டம் நகரசபை மாளிகையில் கூட்டப்பெற்றது. அக்கூட்டத்தின் தலையாஸனத்தில் பெரிய ரவனியூக் கமிஷனர் துரை வீற்றிருந்தார். அவர் பக்கத்தில் நமது வீரசூரப் புலிச்சிங்கனும் அமர்த்தப்பட்டார். பின் நிகழ்ந்தவற்றை நீட்டி விரிக்கில் வாசிப்போர் மனத்தில் கசப்பேறக்கூடுமெனச் சங்கித்து சுருக்கத்தில் சொல்லிவிடுகிறேன். அஃதாவது:— முந்தியவிருந்துக்கூட்டத்தில் கலெக்டர் துரை தலை

யாட்டியபடி துரைத்தன மேலதிகாரிகளுக்கு எழுதியனுப்பி வீர சூரப் புலிச்சிங்கத்திற்கு "ருக்மணி கிராஸ்" பதக்கம் வந்துவிட்ட தென்றும், அதனை உரிய முறைப்படி சூட்டுவதற்காகவே கமிஷனர் வந்திருக்கிறாரென்றும் மகா ஜனங்களுக்கு அறிவித்து ஷெ பதக்கம் வீரசூரப் புலிச்சிங்கத்தின் கழுத்தில் பூட்டப்பட்டதென்பதாகும்.

இத்துடன் கதை நின்றுவிடவில்லை. நமது புலிச்சிங்கத்தால் கொல்லப்பட்ட பெண்புலியோடு அதன் சகோதரப் புலியொன்றும் ஸர்க்கஸ்காரர் கையில் அகப்பட்டுவித்தை கற்றுவருவதுண்டு. தன் ஸகோதரி கொடுமையாகக் கொல்லப்பட்ட செய்தியறிந்தவுடன் கோபாவேசமுண்டாய் வழக்கறிஞரை நண்ணி விசாரணை பண்ணி பிரியாது கொடுப்பதென உன்னி "உண்மை விளக்கம்" எனத் திருப்பெயர் பூண்ட பிரபல பாரிஸ்டரைப் பணிந்தது. அவரோ உலக வழக்குகளெல்லாம் நன்குணர்ந்தவர். பலவாண்டுகளுக்கு முன்னதாகவே எம். ஏ., எம். எல், எல். எல். டி. பட்டங்களும் பிறவும் பெற்றவர். சட்டதிட்டங்களும் ரிப்போர்ட்டெட் (Reported) கேஸுகளும் பார்வையிட்டார். கொலை வழக்குத் தொடருவதென முடிவு செய்துகொள்ளப்பட்டது. ஸர்க்கஸ்காரரை முதல் பிரதிவாதியாகவும், பேர்பெற்ற வீரசூரப் புலிச்சிங்கத்தை இரண்டாவது பிரதிவாதியாகவும் சேர்த்து முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டார் கோர்ட்டில், கொலையுண்ட பெண்புலியின் சகோதரப் புலி மனுதாராகவும் பாரிஸ்டர் மிஸ்டர் உண்மை விளக்கம் மனுதாரின் வக்கீலாகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இச்செய்தி மாஜிஸ்திரேட்டுக்கும் ஆச்சரியத்தை விளைத்தது. ஏன் விளையாது? காட்டில் கிடக்கும் கொடிய மிருகமல்லவா, புலியென்பது? அதில் ஒன்றினை மற்றொரு புலி கடித்துக்கொன்றுவிட்டதென்றால் என்ன வழக்குண்டு? மேலும் இவ்வழக்கில் ஓர் மனிதர், அவரும் ஓர் வெள்ளை ஜாதியார் அல்லவா முதல் பிரதிவாதியாக்கப்பட்டிருக்கிறார்? புலியோ கருப்பு இனத்தைச் சேர்ந்தது. இவையெல்லாம் சேர்ந்தால் வியப்புண்டாவது சகஜம்தானே?

வழக்கு விசாரணை.

வழக்கு எவ்விதம் நடைபெறுகிறதென்பதைக் கவனித்து முடிவுசெய்யலாமென்றெண்ணி மாஜிஸ்திரேட்டு பிரதிவாதிகளை

முறைப்படி அழைத்தார். அவர்களுக்காக எதிர்வாதம் நடத்தும் பொருட்டு மிஸ்டர் "சுயநல ஆவேசம்" பீ. ஏ. பி. எல். நியமிக்கப் பட்டார். வழக்கின் தொடக்கத்திலேயே மனுதாரின் வாக்கு மூலத்தில் கண்டிருக்கும் கொலையின் நிகழ்ச்சியினையும் மற்றுள்ள துணைக்காரணங்களையும் மிஸ்டர் சுயநல ஆவேசம் ஒப்புக்கொண்டு விட்டதால் ருஜுப்படுத்தும்பொருட்டு சாட்சிகளோ தஸ்தா வேஜிகளோ தேவையில்லையெனக் கோர்ட்டார் உத்தரவு செய்து விட்டார்கள். ஆகையால் வழக்கு வளராமல் சுருங்கிவிட்டது. கிரிமினல் புரொஸிடுயர் நிபந்தனைகளின்படி மனுதாருக்கு வழக் குண்டென்று தாபிக்கவேண்டுவது முதற்கடமையாகையால் மிஸ் டர் உண்மைவிளக்கம் அவ்வாறு செய்வதற்குத் தயாருண்டா வென்று மாஜிஸ்திரேட்டின் கேள்வி பிறந்தது. ஆம், என ஒத் துக்கொண்டு அவர் செய்த சட்டப்பிரசங்கம் வருமாறு:—(இதனை வாசிக்கும் தமிழ் நேயர்களில் ஆங்கிலவாசனை மிகுந்திருப்போர் சிலர் உலகெங்கும் ஆங்கில பாடையில்தான் வழக்குகள் நடை பெறுமென்று எண்ணியிருக்கக்கூடுமாதலால், அங்ஙனமன்று, இவ்வழக்கு லிப்ஸிக் நகரில் நடைபெற்றது ஜெர்மன் பாடையிலா கும், என்பதனைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.) இஃதோர் நூதன வழக்கென்பதனை நானும் ஒத்துக்கொள்ளாதிருக்கமுடி யாது. ஆகையால் மனுதாரின் வழக்கை நடத்த ஒத்துக்கொண் டிருக்கும் என் தலைமீது பெரும்பாரம் ஏறியிருப்பதாக நான் உணருகிறேன். அக்காரணத்தால் என் வழக்கை ஆரம்பிக்கு முன்ன தாக எதிர்வாதிகள் சொல்லப்போகும் தர்க்கங்களையும் அவை களுக்கு என்னுடைய சமாதானங்களையும் வெளிப்படுத்துவது நல்லமுறையென்று எண்ணுகிறேன். முதலில் இவ்வழக்கை நிலை நிறுத்துவதற்கு ஆதரவான சட்டம் இந்நாட்டில் இல்லையென்பார் கள். அவ்வாட்சேபணையை நான் ஒத்துக்கொள்ளுகின்றேன். சட்டம் இல்லாமல் வழக்கேது, மனு தள்ளுபடி செய்யவேண்டி யதைத் தவிர கோர்ட்டாருக்கு வேறு வழி கிடையாதென்று எதிர்வாதம் பிறக்கும். இதொரு தர்க்கந்தான் இவ்வழக்கிலுள் ளது. இதற்கு நான் சரியான பதிலிறுக்கும் பட்சத்தில் எதிரி கள் கொலைக்குற்றத்தினை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். பீனல் சட்டத்தில் குற்ற விவரம் சொல்லியிருக்கும் எல்லா வகுப்புகளும்

குற்றக்காரனுக்குக் கெட்ட எண்ணம் இருக்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. கெட்ட எண்ணத்திற்கு அடிப்படை யாதென்றால், பிறருக்குத் துராகிருதமாகத் தீங்கிழைத்தல் அல்லது தனக்கு நியாயவிரோதமான லாபம் விளைத்தல்; இவ்விரண்டுமோ அல்லது அவையில் ஒன்று மாத்திரமோ இருப்பின் கெட்ட எண்ணமென்பது பூர்த்தியாகிவிடும். இரண்டாம் எதிர்வாதி மனுதாரின் சகோதரியைக்கொன்றது, சுயநலம் கருதியே யாம். அஃது நியாய விரோதமான லாப இச்சையின்பாற்பட்டதுமாகும். ஏனெனில் முதல் எதிர்வாதி கொடுத்துவந்த எச்சில் எலும்புகளைப் பெரிதென்றெண்ணியே இரண்டாமவர் கொலைபுரியத் துணிந்தார் என்பது வெளிப்படை. இரண்டாம் பிரதிவாதிக்கும் கொலையுண்ட புலிக்கும் தம்மில் யாதொரு விரோத காரணங்களுமில்லை. கொலையுண்ட புலி சுதந்திரமாய் தன்னுடைய பிறப்புரிமையினைத்தன் முன்னோர் ஆண்டு அனுபவித்துவந்த வனபூமியில் தானும் அனுபவித்து வந்தது. அப்புலி முதல் எதிர்வாதிக்கும் யாதொரு தீங்கும் இழைக்கவில்லை. அவர் தன்னுடைய வயிறு வளர்ப்பதற்காகவே அப்புலியினையும், மனுதாரையும் வஞ்சகமாக சூத்திரப் பொறிக்குள் சிக்கும்படி செய்து இம்சைகள் பல செய்து தன்னூட்டுக்குக் கொண்டுபோய் அவருடைய தாளத்திற்கொத்து ஆடும்படி செய்தார். வயிற்றிற்குப் போதிய உணவு கொடுக்க மாட்டார். சுயமரியாதையின் உணர்ச்சி இன்னதென்றறியுமெவரும் இவ்விதச் செய்கைகளைப் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனியொத்து கோர்ட்டார் உணரத்தக்கதொன்றும். ஆகையால் நான் மிகைபட உரைக்கத் தேவையில்லை. ஆனால் அடிமை வாழ்க்கையில் ஆழ்ந்திருப்போருக்கு, ஜனனத்திலேயேஇழிவான அப்பத்துண்டு தின்று வளர்ந்த பேர்வழிகளுக்கு நான் முன் குறித்த மேன்மையான சுயபோத உணர்ச்சி எழும்பமாட்டாது. தேசாபிமானம், சுதந்திர தாகம், சுயமரியாதை, ஸகோதர—நேசம் இன்னும்இவைபோன்ற சிறந்த குணங்களெல்லாம் பிறரீயும் எச்சிலுண்டு வயிறோம்பும் வழியொன்றே உடம்பு வளர்க்கும் மார்க்கமென இளமையிலேயே பயிற்றப்பட்டுப் பாழ்ங்குழியில் வீழ்ந்திறக்கும் பேதையர் அறியமாட்டார். அவ்வினத்தைச் சேர்ந்தவரே இரண்டாவது எதிர்

வாதி. எங்ஙனமெனின் விளக்குகின்றேன். இவரும் மனுதாரரைப் போன்று விசாலமான தளிர்வனத்தில் மேன்மையான தாய் வயிற்றில் பிறந்தவரேயாவார். ஆனால் முதல் எதிர்வாதியின் நோக்கிற்கு இவரன்னை இரையாக்கப்பட்டாள். அந்நாள் இவர் சிறு குழவி. தாய் முலைப்பாலருந்திக்கொண்டிருக்கும்பொழுது முதல் எதிர்வாதி அவரைத் தாயில்லா அனாதையாக்கி அவரைத் தன் கூத்தாடப் பழக்கும் பொருட்டு உடன் கொண்டுபோனார். தன் எச்சில் துண்டுகளைக் கொடுத்துவளர்த்தார்; பாராட்டினார்; சீராட்டினார். பாவம்! மாதர்ஹத்தி புரிந்த எமனை, தன் இரட்சகர்த்தாவென்று மயங்கி அவர்மாட்டு பேரன்புபூண் டொழுகலானார் இவ் வழக்கிலுள்ள இரண்டாமெதிர்வாதி.

சட்டப்படி இன்னொரு ஆட்சேபனையும் எழும்பக்கூடும். அஃதாவது, புலியின் வழக்கை விசாரிக்கவும், புலியின் கொலைக்கு பினல்கோடில் வகுப்புக் கண்டுபிடிக்கவும் இடமில்லையென்பதே! அவ்வாறு வகுப்பில் வெளிப்படையாகச் சொல்லியிருப்பதில்லையென்று யானும் ஒத்துக்கொள்ளுகின்றேன். ஆயினும் வகுப்பொன்று உண்டாக்குவதற்குப் போதிய காரணம் இவ்வழக்கினால் ஏற்படுகிறதென்பதை யான் வற்புறுத்துகின்றேன். காரணம் விளக்கும்பொருட்டு இரண்டாம் எதிர்வாதிக்குத் துரைத்தனத்தார் பட்டங்களும் பதக்கங்களும் வழங்கி மேன்மைப்படுத்தி நடத்திய பிரசங்கங்களின் சுருக்கெழுத்துப் பிரதியினை யான் தாக்கல் செய்கின்றேன். அதிலிருந்து வீரசூரப் புலிச்சிங்கப் பட்டமும், ருக்மணிக்கிராசும் இரண்டாம் எதிர்வாதியாகிற புலி பெற்றிருக்கிறதென்று காணும். இப்பட்டங்கள் மனிதருக்காகச் சிருட்டிக்கப்பெற்றவையென்பது வெளிப்படை. ஆகையால் புலிகளும் மனிதரோடு தொடர்புடையன வென்றே கொளல்வேண்டும். வேண்டுமாயின் சட்டத்தில் ஒரு வசனம் கூட்டி எழுதிக்கொண்டால் போதும். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை கிடையாது.

மற்றொரு விஷயங்கூட விளக்கவேண்டியவனாயிருக்கிறேன். அஃதாவது, இரண்டாம் எதிர்வாதியன்றோ கொலைபுரிந்தார்? முதல் எதிர்வாதிமேல் யாது குற்றமென்பதைக் காண்பிக்கவேண்டுமென்பதாம். அத்துடன் இறந்துபோனவர் முதல் எதிர்வாதியைக் காரணமன்னியில் கடித்துக் கோபமூட்டினார் என்றும், அந்

தக் காரணம்பற்றி முதல் எதிர்வாதிக்கு சுயரட்சணையவகாசம் சித்தித்துவிட்டதெனவும் ஆகையால் தன்னைக் கொல்ல எத்தனித்தவரை, தானே அல்லது தன் நேசரான இரண்டாவது எதிர்வாதியோ இம்சிப்பது குற்றமாகாதெனவும் கூறப்படலாம். அதற்கு விடை கூறுவேன்: இரண்டாவது எதிர்வாதி இயற்கையில் தன் உணவுக்காக மட்டிலும் மற்ற ஜெந்துக்களைக்கொல்லும் குணமுடையவர். பிறர் வாழ்வில் அழுக்காறு கொள்ளல், அவர்க்கு வஞ்சனைபுரிதல், "ஹம்பக்" பாராட்டல் முதலிய தீக்குணங்கள் எதுவும் அவருடைய பிறப்பிற்குரியனவன்று. ஆயினும், இவ்வழக்கிற்கேதுவான கொலை அவரால் செய்யப்பட்டது. அதற்குக் காரணகர்த்தர் ஸர்க்கஸ் வித்தைக்காரரே யாவார். ஆகையால்தான் அவர் முதற் பிரதிவாதியாகச் சேர்க்கப்பெற்றார். முதற்பிரதிவாதி கொலையுண்ட புலிக்குத் துரோகம் செய்து ஹிம்சித்த காரணத்தால் அப்புலிக்குக் கோபம் மூட்டினார். அக்கோபம் காரணமாகவே அப்புலி அவரைக் கடித்தது. அப்படிச் செய்தது அப்புலிக்குள்ள சுயரட்சணை அவகாசத்தின்பாற்பட்டதாம். அதற்குப் பதிலாக உ-ம் எதிர்வாதி கொலைசெய்ததனைச் சட்டம் மன்னிக்க மாட்டாது. இக்காரணங்களால் க-ம் எதிர்வாதியே கொலைக்குப் பிரதம உத்தரவாதியாவாரென்றும், அவரால் வஞ்சிக்கப்பட்டும், தூண்டப்பட்டும் வினைபுரிந்த உ-ம் எதிர்வாதி குறைந்த தண்டனைக்குப் பாத்திரமாவாரெனவும் மிக வணக்கத்துடன் விண்ணப்பித்துக்கொள்ளுகின்றேன் என்று பேசி முடித்தார். மாஜிஸ்திரேட் என்ன செய்வதென்று விளங்காமல் அண்ணாந்து பார்த்துக் கொண்டு பெஞ்சி மேடையில் உட்கார்ந்திருக்கிறார். மேல் நிகழ்ச்சி அறிவிக்கத்தக்கதாயிருப்பின் நமது அருமைக் குமரன் வழி நேயர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

—தேசநேசன்.

---

# நம்மை நாடிவந்த யாசகர்கள்.

"குசேலர்" எழுதுவது.

எனக்குச் சொந்த ஊர் கரூர். என்பெயர் சுப்பிரமணிய சாஸ்திரி. சென்னையில் கவர்ன்மெண்டுஉத்தியோகத்தில் மாதம் ஐம்பது

ரூபாய் சம்பளத்திலிருந்தேன். மேல்வரும்படி மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேல் கிடைத்தது. எனக்கு ஆறுயிரம் ரூபாய் சொத்துக்களுமிருந்தன; எனக்கு நான்கு பெண்குழந்தைகளுமிருந்தன. இரண்டு பெண்குழந்தைகட்குச் சமீபத்தில் சாரதாசட்டம் வருவதற்காக மிக அவசரப்பட்டு இருந்த ரூபாயெல்லாம் போட்டு கல்யாணம் செய்துவிட்டேன். கையில் இப்போது ஒன்றுமில்லை. கடன் கொடுப்பாருமில்லை. உத்தியோகத்திலிருந்தும் விலக்கிவிட்டார்கள். எனது முதலாவது பெண்ணுக்கு ருதுசாந்தி செய்ய வேண்டும். எங்கள் சாதியாசாரப்படி இதற்காக மாப்பிள்ளைக்கு இரண்டாயிரம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் முடியாது. எல்லோரும் பழித்துப்பரிகசிக்கவும் செய்வார்கள்; எப்படியாவது ரூபாயைச் சம்பாதித்துக் கொண்டுதான் வீட்டிற்கு வரவேண்டுமென்று என் ஆம்படையாள் மிகக் கோபமாகப்பேசி தினம் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தாள். என்னால் பொறுக்க முடியவில்லை; இப்படி, தங்களைப்போல் பலபிரமுகர்களைப் பார்த்து யாசகம் வாங்கியாவது என் பெண்ணை வாழும்படி செய்யலாமென்று முதன் முதல் தங்களிடந்தான் வந்தேன். எனது கஷ்டத்தையுணர்ந்து தாங்கள் உதவவேண்டும். இன்னும் பலரைப் போய்ப் பார்க்கவேண்டும். இந்த ஊரைப்பார்த்துவிட்டு மற்ற ஊருக்குச் செல்லவேண்டும். சிறிது விரைவுபடுத்துங்கள். எல்லாம் தங்கட்குக் கடவுள் கொடுத்துக்காப்பாற்றுவார். மங்களமுண்டாகும்.

* * *

நானிருப்பது வேதாரண்யம்; என்பெயர் அருணசல ஓதுவாமூர்த்திகள். எனக்குத்தமிழில் நல்ல பாண்டித்தியமுண்டு; தமிழ்ச் சங்கத்தில் பட்டம் பெற்றிருக்கிறேன். எங்கு சென்றாலும் உத்தியோகம் கிடைக்க வழியில்லை. தமிழ்ப்பண்டிதர் வேலைக்கு முயற்சி செய்தேன்; இதுவரைப்பதிலுமில்லை. சமயநூல்கள் முழுதும் படித்துவிட்டேன். நான்கு தீக்கைகளும் முடிவடைந்துவிட்டன. கல்யாணம் கருமாதிச் சடங்குகட்குச் சிலசமயங்களில் நடத்திவைக்கப் போவதுண்டு. தேவார கோஷ்டிகட்கு எங்காவது அழைப்பு வந்தால் போவேன். சிலகாலமாக ஒருதொழிலுமில்லை. வயிற்றுப்பிழைப்போ பெருங்கஷ்டமாகவிருக்கிறது. "திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், விநாயகபுராணம், பார்வதி கல்யாணம்" ஆகிய

வைகளை ராகத்தோடு தற்காலத்திற்கேற்றாற்போல கதை செய்வேன். தாங்கள் ஒரு ஏற்பாடு செய்து என்னை இதுசமயம் காப்பாற்றவேண்டும். நான் அடிக்கடி இப்படியெல்லாம் வருவதில்லை. காலவித்தியாசம்; தங்கட்குஅதிகம் கூறத்தேவையில்லை. "செயற்கரிய செய்வார் பெரியார்" என்பது நம் பொய்யா மொழிப்புலவர் திருவாக்கன்றோ? எம்போன்ற புலவர்களையும் இவ்வாறு வறுமை பிடித்து வாட்டுவது மிகக்கொடிது! "எல்லாம் அவன்செயல்". இப்படியெல்லாம் எம்மை சோதிப்பதும் அவனருள்தான்.

---

# விதவை மணமும் ராமாயணமும்.

ஸ்ரீராமச்சந்திரனுடைய வீரச்செயல்களை ஞாபகமூட்டும் வண்ணம் வருஷாவருஷம் நம்நாட்டில் கொண்டாடப்படுகின்ற விழாக்களில் முக்கியமானவை தசரா உற்சவமும் தீபாவளிப்பண்டிகையுமாம். ஒவ்வொருவருஷம்அவைகள் நம்மால் பெரிதும் சிறப்பிக்கப்பெற்று ஏராளமானபணத்தையழித்து நம் வீடுகளில் அளப்பரிய சந்தோஷத்தையூட்டி வருகின்றன. இந்து என்றபெயரோடு ஒருவன் உலகில் எந்தபாகத்தில் இருந்தபோதிலும் அவற்றை ஒப்பற்ற தேசிய விழாக்களாகக் கொண்டாடுகின்றான். ஏனெனில் சத்தியமும் தருமமும் அந்தநாட்களில் வெற்றிபெற்றதாக எண்ணுகிறோம். அவைகள் மாதிரி புருஷனென்றும், பூரண புருஷனென்றும் இன்னும் சிறிது விளக்கமாகக்கூறினால் ஓர் அவதாரமென்றும் எண்ணப்படுகின்ற ஸ்ரீராமனை ஞாபகமூட்டுகின்றன. அவ்விழாக்கள் மனிதனின் நல்லொழுக்கத்தை வளர்க்க வேண்டுமென்பதே நமது ஆவா. ஓர் உண்மையான இந்து அவ்விழாவைப்பற்றிக் குறைகூறவோ, ஆராய்ச்சிசெய்யவோ, வியாக்கியானம் செய்யவோ துணியமாட்டான். ஸ்ரீராமன் ஓர் அவதாரம்என்பதும் மாசற்றவரென்பதும் அவனது கருத்து. ஆனால் நாம் குறைகண்டவிடத்து அதனை ஆராய்வது அதருமமென்றும் மதத்துக்குப்புறம்பானது என்றும் தள்ளிவிடுவதை அறவே வெறுக்கின்றோம். அஃதொருபுறமிருக்க சனாதன இந்து என்று கூறிக்கொள்கிறவர்கள் பகவானுடைய செயல்களை ஒழுங்காகப் பின்பற்றுகின்றார்களா

வென்றுகேட்கின்றேன். வீண்வாதம் பேசியும்,பகவானின் செயல்களைக் கண்டிக்கலாகாதென்று கூறியும் அவருடைய செய்கைகளை நடைமுறையில் காட்டாதிருந்தால் சிறிதேனும்பொருளுண்டோ?

நாம் ஈண்டு ஸ்ரீராமன் கையாடிய விதவா மணத்தையும் தீண்டாமை யொழித்தலையும்கூறவிரும்புகின்றேன். ஸ்ரீராமன் தீண்டாதாளுகிய பில்நி (Bhilni) யிடத்தில் சுவைக்கப்பட்ட மாமிசத்தை வாங்கிச்சாப்பிட்டார். இன்னும் இந்த ஸ்ரீராமனே விதவையான தாரையை வானர வீரனுகிய சுக்கிரீவனுக்கும், மண்டோதரியை விபீஷணனுக்கும் மணம்செய்து வைத்ததாகவும் சொல்லப்படுகிறது. சனுதன இந்துக்களென்போர் இவ்விரண்டு செய்கைகளையும் ஒப்புக்கொள்கின்றனர்; இராமாயணத்தைப் போற்றுகின்றனர். என்றிருந்தாலும் அவற்றை வாழ்க்கை முறையில் காட்டாது மிக ஆத்திரத்தோடு பலமாக மறுத்து வருவதென்றுல் எவ்வாறு பொருந்தும் என்றுகேட்கின்றோம். அவர்கட்கு மறுப்பிருந்தால் இராமாயணத்தின் மேற்குறித்த சம்பவங்கள் வரும்பாகங்களைக் கிழித்து ஆழமான குழிதோண்டி மண்ணில் புதைத்து விடவேண்டும். அப்படிச் செய்வதில்லை என்றுலும் ராமபக்தர்களென்றும் பூரண சனுதனதர்மிகள் என்றும் வாய்ப்பறையறைவதில் பொருளென்ன விருக்கிறதென்று கேட்கிறோம். இத்தகைய உண்மையுணராத குருட்டுத்தனமே இடையருது இறந்துபடுகின்ற இந்துக்களென்னும் வகுப்பாரின் அழிவிற்குக் காரணமாயிருக்கின்றது.

"விடோஸ் காஸ்"

---

# குழந்தைப் பாதுகாப்பு.

நியுஸீலாந்தில் குழந்தைகள் நன்றுகப் பாதுகாக்கப்படுகின்றன. இதைப்பற்றி ஐ. ராபர்ட்ஸன் யம். எ. என்பார் 'நியு இந்தியா' பத்திரிகையில் ஒரு கட்டுரை வரைந்திருக்கிறார். அதன் சாரம் வருமாறு:—

நியுஸீலாந்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் அதன் குடும்ப அங்கத்தினரில் ஒருவராக மட்டுமன்றி, தேசத்தின் அங்கத்தினரில் ஒருவராகவும் கருதப்படுகின்றது. எனவே, பிறப்புப்

பதிவு அங்கு கட்டாயப்படுத்தப்படுகின்றது; குழந்தையைப் பாதுகாக்கும் விஷயத்தில் அரசாங்கம் அதிகப் பங்கெடுத்துக் கொள்ளுகின்றது. ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள சிசுப்பாதுகாப்புச் செவிலிக்கும் பிறப்புப் பதிவு அதிகாரி சிசுக்களின் ஜாப்தாவொன்றைத் தயாரித்துக் கொடுக்கிறார். இந்தச் செவிலி அரசாங்க உத்யோகஸ்தரல்ல; ஆனால் நியுஸீலாந்தில் ஏற்பட்டிருக்கும் பெண்கள், சிசுக்கள் பாதுகாப்புச் சபையின் உத்யோகஸ்தராகும். லேடி பிளங்கட் இச்சபை முதல் போஷகர்; ஆனதுபற்றி 'பிளங்கட் சொஸைட்டி' யென்றும் இச்சபைக்குப் பெயருண்டு. இது 1907-ம் வருடம் டிரபி அரசரால் நிறுவப்பட்டதாகும். இந்தச் சபை வகுத்திருக்கும் திட்டத்தின்படியே பெரும்பாலும் சகல சிசுக்களும் பாதுகாக்கப்படுகின்றன. சிலர் தங்கள் குழந்தைகளை வாரத்திற்கொருமுறை செவிலிகளிடங் காட்டி பாதுகாப்பு முறையைத் தெரிந்துகொள்வார்கள்; மற்றவர்கள் பிளங்கட் சபையார் சிசுப் பாதுகாப்பு விஷயமாக வெளியிடும் துண்டுப் பிரசுரங்களில் குறிக்கப்பட்டிருக்கும் விதிகளைப் பின்பற்றுவார்கள்; பிளங்கட் செவிலியினுடைய அனுபவம் பெற்ற தாய்மார்களின் யோசனையின்படி நடப்பார்கள் வேறு சிலர். தினமும் குழந்தைகளைச் சுகாதார முறையிற் பரிபாலிக்கும் விதத்தைத் தாய்மார்களுக்குக் கற்பிப்பதே பிளங்கட் சபையின் முக்கிய ஊழியமாகும். அதன் முறைகள் மிக எளிதானவை. குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை தினந்தோறும் சிசுவுக்கு ஆகாரமூட்டுவதும், ஆகார நேரங்கட்கிடையில் தூங்கப்போடுவதும், அல்லது வேறு யாருடைய தொந்தரவுமின்றி சும்மா கிடக்கச் செய்வதும் அச்சபை குறிக்கும் விதிகளாகும். சுற்றத்தார் குழந்தையைக் கொஞ்சுவதினின்றும் முற்றுந் தடுக்கப்படுகின்றார்கள். இம்முறை நோயுற்ற குழவிகளைத் திடகாத்திரக் குழவிகளாகவும், திடகாத்திரக் குழவிகளைப் பரிசுபெறும் மாதிரிக் குழவிகளாகவும் வளர்க்கின்றது. இதன் பயனால், நியுஸீலாந்தின் சிசுமரண விகிதம் மிகக் குறைவுற்றதுமன்றி, உலகத்திலுள்ள வேறெத்தேசத்து விகிதத்திற்கும் குறைவுபட்டு நிற்கச் செய்தது. தாய்க்கும் குழந்தைக்கும் பிளங்கட் செவிலி ஆகார விதிகளையெடுத்துக் கூறுகின்றாள். இவ்விதமாக சிசு தனது மூன்றாவது வயதிற் புகுகின்றது. இதுமுதல் ஐந்து வயது வரை

நல்ல ஆரோக்கியமுள்ள குழந்தைகளை மேற்பார்க்கும் பொறுப்பு குறைகின்றது.

ஐந்தாவது வயதில் குழந்தை பள்ளிக்குச் செல்கின்றது. சுகாதார இலாகாவைச் சேர்ந்த பெண் டாக்டர்களும், தாதிகளும் வருடந்தோறும் குழந்தையைப் பரிசோதிக்கின்றார்கள். ஆரோக்கிய முடையனவாகக் கருதப்படும் குழந்தைகள் அடிக்கடி மூக்கு, தொண்டை, பல், கண், செவி இவற்றில் ஏற்படும் குறைபாடுகளால் கஷ்டப்படுகின்றன. இவ்விதக் குறைபாடுகள் ஏதேனுமிருந்தால் உடனே பெற்றோருக்கு அறிவிக்கப்படுகின்றது. குடும்பவைத்தியர் இதைக்கவனித்துத் தக்கன செய்கின்றார். மேற்கண்ட உத்தியோகஸ்தர்களின் மற்றொரு வேலை, சரியான ஆகாரம் உட்கொள்ளும் முறையையும், நல்ல ஆரோக்கியத்தைக் காப்பாற்றும் முறையையும் குழந்தைகட்கும் பெற்றோர்கட்கும் எடுத்துக் கூறுவதாகும். குற்றமுற்ற பற்களை நியுஸீலந்தில் சர்வசாதாரணமாகக் காணலாம். பல ஜில்லாக்களில் பொது ஜன உதவியால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல்வைத்தியசாலைகள் இலவசமாக இவற்றைக் கவனிக்கின்றன. தினந்தோறும், பிள்ளைகளுக்கு உடற்பயிற்சி முறைகள் குறிப்பிட்ட திட்டப்படி கற்பிக்கப்படுகின்றன. மேலும் பலவித விளையாட்டுகளும் ஆசிரியர்களாற் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் நல்ல விளையாட்டுத் தோட்டமொன்றிருக்கிறது; கவர்ன்மெண்டார் மூன்று ஏக்கர் நிலம்வரை இதற்குதவுகிறார்கள்.

குளிர்காலத்தில் தினந்தோறும் நடுப்பகலில் குழந்தைகளுக்குச் சூடான பானம் அளிக்கப்படுகின்றது — கொக்கோ, பால், சூப்; இதற்காகும் செலவு ஜில்லாவாசிகளுடைய நன்கொடைகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும், பூந்தோட்டங்களில் விளையாட்டிடங்களும் விளையாட்டுச் சாமான்களும் இருக்கின்றன; விளையாட்டுப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியையும் இருக்கின்றாள். மிகச்சில குழந்தைகளே ஆகாரக்கெடுதியால் துன்புறுகின்றன; ஒழுங்கற்ற முறையில் உணவூட்டுவதினாலேயே இத்துன்பம் ஏற்படுகின்றது. வேனிற்காலத்தில் அவர்கள் ஒரு பெண் டாக்டருடைய பரிசீலனையின்கீழ் இரண்டு வார காலத்திற்கு வைக்கப்படுகின்றார்கள். பிரத்தியேக

ஆகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. உடற்பயிற்சி, ஓய்வு, சூரிய ஸ்நானம் முதலியன அவர்களுடைய உடல் நிலையை விரைவாகச்சரிப்படுத்தி விடுகின்றன. வேறு தனிப்பட்ட சபைகளும் இம்மாதிரி ஊழியங்கள் பல செய்து வருகின்றன.

சிறந்த மேதாவியின் கருத்துப்படியே சகல பள்ளிக்கூடக்கட்டிடங்களும் கட்டப்படுகின்றன. புதியமுறையில் திறந்த வெளி வகுப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு குழந்தைகள் சுகாதாரத்தில் ஈடுபட்ட ஒரு குழுவினரால் பரீட்சிக்கப்பட்டது. இப்பரீட்சை மிக்க வெற்றியளித்ததால், கல்வி, சுகாதார இலாகாக்கள் இம்முறையைக் கைக்கொண்டுவிட்டன. இதனால் அதிகச் செலவுமில்லை.

நடுத்தரக் கலாசாலைகளில் இலகுவான முறையில் இச்சுகாதாரப்போர் நடத்தப்படவேண்டும். அற்பக் குறைகளை விளையாட்டு ஆசிரியர் பரிசோதிக்கிறார். தினமும் பழகத்தக்க பயிற்சிகளைக் கற்பிக்கிறார்; வருடந்தோறும் உயரம், எடை, மார்பு அடக்கம் முதலியவற்றை அளக்கிறார்; வருடந்தோறும் இவற்றில் அபிவிருத்தி யேற்படுகின்றதா என்று கண்காணிக்கிறார். ஒவ்வொரு ஆசிரியரும், தம் மாணவர்களுடன் பழகுவதால், எந்தக் குழந்தைக்காவது விசேடப் பாதுகாப்பு தேவையாவென்று பரிசோதிக்கிறார். நடுத்தரக் கலாசாலைப் பெண்களனைவருக்கும் குடும்பத்தாதிமுறையும், ஆபத்துக்குதவும் முறையும் கற்பிக்கப்படுகின்றன.

மேற்குறித்த விவரம் அரசாங்கமும் சில பொதுச் சபைகளும் எடுத்துக்கொள்ளும் குறைந்தபட்ச முயற்சிகளையே அறிவிக்கின்றது. பெரும்பாலான ஜில்லாக்களில் சாரணர் படைகளும் வேறு பல குழாங்களும் ஓய்வு காலங்களில் குழந்தைகள் பராமரிப்பு விஷயத்தில் கவனஞ் செலுத்துகின்றன.

# சில குறிப்புகள்.

திரு. எம். நாச்சிமுத்து எழுதியது.

## விதவை சத்தியாக்கிரகம்

“வாருங்கள், வாருங்கள், என்ன, ஜாதகம் பார்க்கலாமல்லவா? எங்கே மாப்பிள்ளை? ஆத்துக்காரர்களைக் காணுமே? அவர்களும் வரணுமோவில்லியோ?”

“அவாளும்வந்துட்டா. எங்கே ஜாதகம்? கொடுங்கோ பார்க்கட்டும்”

ஜோதிடர் ஜாதகம் பார்த்து நாள் வைத்துக் கொடுத்துவிட்டார். மணமகனுக்கு வயது 26 ;மணமகளுக்கு வயது 9. திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மூன்றுவது மாதம் கடுங் காய்ச்சலடித்து மணமகன் மாண்டார். ஐயரும் தன் அருமைப் புதல்விக்குச் சிலநாளில் மொட்டையடித்து முக்காடிட்டு மூலையில் வைத்துவிட்டார். இம்மாதிரியான பால்ய மணங்கள் பார்ப்பனர்களிடையும், மற்றும் சிற்சில வகுப்பார்களிடையும் நிகழ்ந்து வருதலை யாவருமறிவர். பால்ய விதவைகளாகும் பெண்கள் கீழ்க் குறிப்பிடும் யோசனையைக் கவனிப்பார்களாக. சிறு பெண்களை விதவையென்று அடக்கிப் போட்டுத் துன்புறுத்தி வருகின்றனர். என்றாலும், இயற்கையாய் எழும் இன்பத்தை யடக்க யாரால் முடியும்? உங்கள் நலனுக்கும் போதாயனர் என்பார் ஓர் சுலோகம் கூறியிருக்கின்றார்.

“த்ரீனி வர்ஷாண் யருது மதீகாங் க்ஷேதபிதிர்சாசனம்
ததல்சதுர்த்தே மாஸேத் விந்தேத்லத்ரு சம்பதிகம்
அலப்யமானே லத்ருசே குணஹீனம் ஸமால் ரயேத்—”

“ருதுமதியான கன்னிகையானவள் மூன்று வருஷங்கள் வரையிலும், பிதாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். பிறகு தானுகவே தக்க வரனைத் தேடி யடையலாம்—”

இந்த ஆதாரத்தைக்கொண்டேனும் சற்று வாதாடிப் பாருங்கள். இதற்கும், உங்கள் தாய் தந்தையர்கள் இடமளிக்காவிடின், பிறகு நான் சொல்லும் யோசனையைக் கடைப்பிடித்து நடவுங்கள். கண்டிப்பாய் நீங்கள் ஜயமடைவீர்கள்.

உங்கள் பக்கத்துவீட்டில் ஓர் மணமகன் இருக்கின்றான். மணமகனைப் பார்ப்பதற்கென்று சிலர் வருவார்கள். நீங்கள் அவர்

களுக்கு எதிரே செல்லுங்கள். உடனே திருமணம் நின்றுவிடும். புது மணமக்களுக்கு இன்று சாந்தி முகூர்த்தம் செய்யப்போகின்றார்கள். நீங்கள் என்ன செய்யவேண்டும்? அவர்கள் கோயிலுக்குச் செல்வதாக வரும் வழியில் எதிரில் வாருங்கள். எப்படிச் சாந்தி முகூர்த்தம் நடக்குமோ ஒருகை பார்த்துவிடலாம். உங்கள் பக்கத்துவீட்டுப் பெரியவர் ஏதாவது வேலையை முன்னிட்டு நல்ல நேரம்பார்த்துக்கொண்டே கிளம்புவார்; அவர் முன்னால் வந்து 'தாத்தா எங்கு செல்கின்றீர்கள்' என வினவுங்கள். தாத்தாவின் பயணம் எப்படியாகுமோ பார்க்கலாம். உங்கள் அடுத்தவீட்டுப் பெண்ணும், அவள் தன் துணைவனும் அயலூர் செல்கின்றார்கள். வீட்டைவிட்டுக் கிளம்புமுன்னே அந்தப் பெண் ஆயிரந் தடவை தெருவைப்பார்த்துவிட்டே கிளம்புவாள். அடுத்த தெருவில் அவர்களுக்கு எதிரே வாருங்கள்! அவர்கள் பிரயாணம் ஓடும் ஓட்டத்தைப்பார்க்கலாம். புருஷனும் மனைவியும் பிள்ளைதேடி அரசமரம் சுற்ற அதிகாலையில் புறப்படுவார்கள். எதிரே நடந்து வாருங்கள். இவைகள்தான் நீங்கள் செய்யவேண்டிய சத்தியாக்கிரகம். பால்ய விதவைகள் சங்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு இப்படி ஆரம்பித்தால் உங்கள் காரியம் விரைவில் முடியும். நான் செய்யும் உதவி இவ்வளவுதான்.

## கடன் வாங்கி நாமம்போடும் வழி.

சகுனங்களில் பூனைச் சகுனம் பொல்லாதது. பூனை குறுக்கிட்டால் எந்தக் காரியமும் செய்யக்கூடாது. ஒன்றும் கூடி வராது. இராகுகாலத்தை மீறிக் காரியங்கள் செய்தாலும், பூனைச் சகுனத்தை மீறிக் காரியங்கள் செய்யக்கூடாது. எத்தகைய அவசர காரியமாய் இருந்தாலும், பூனைச் சகுனம் கண்டால் பறந்துவிடும். ஆகா! இத்தகைய பூனைகள் கடன்காரர்களுக்கு இருப்பின், நன்மைகள் பலவுள. பூனை ஒன்று கையில் இருந்தால் போதும்; கோர்ட்டுக்குச் செல்லவேண்டுவதில்லை; கூண்டில் ஏறவேண்டுவதில்லை; வக்கீலுக்குப் பணம் அழவேண்டுவதில்லை; சாக்ஷிக்குப் படிகட்ட வேண்டுவதில்லை; கோர்ட்டுப் பியூன்களைக் கண்டால் அஞ்சவேண்டுவதில்லை; இன்சால்வென்ட் கொடுக்கவேண்டியதில்லை; ஜெயிலுக்கும் போகவேண்டுவதில்லை. நீங்கள் ஓர் பாண்டு எழுதிக்கொடுத்துப் பணம் வாங்கியிருக்கின்றீர்களென்று வைத்

துக்கொள்ளுங்கள். காலாவதி ஆய்விடுமென்று தாக்கல்செய்யச் செட்டியார் கோர்ட்டுக்குச் செல்கின்றார். வழியில் நீர் ஓர் பூனையைவிட்டுவிட்டால் உமது காரியம் பலித்துவிடும். பூனை குறுக்கே போனதால் செட்டியார் பாதி வழியுடன் வீடு திரும்பிவிடுவார். பிராம்சரிக்குக் கெடு தீர்ந்துவிடும். எனவே கடன்காரச் சிவபக்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பூனை வாங்கிக்கொள்வதுடன், அதை எங்கு சென்றாலும் உடன்கொண்டு செல்வார்களாக. இதனால் பூனைக்குக் கொஞ்சம் கிறுக்கி ஏற்படும். கிறுக்கி ஏற்படாமல் இருப்பவர்களிடம் வாடகைக்கு வாங்கிக்கொள்ளலாம். இருந்தாலும் முந்திக்கொள்வதே நலம். பின்னால் பூனை கிடைக்கவில்லையே என் மனவருத்தம் வேண்டாம்.

---

# கதம்பம்.

திரு. நீலாவதி ராமசுப்பிரமணியம் எழுதுவது.

மனைவி:— என்னாங்க! தலைச்சவரம் பண்ணிக்கிட்டு வந்து வீட்டுக்குள் நுழைஞ்சிட்டிங்கோ?

சுயமரியாதைக்கணவன்:— சரி, சரி, பேசாமல் நீ உன் வேலையைப்பார்.

மனைவி:— ஆமாம்! வேலைபாக்காமத்தானிருக்கு. ஆனாலும், அம்பட்டன் தீட்டெல்லாம் என்னு பன்னுறிங்கிளே!

கணவன்:— (சிறிது கோபமாய்) உனக்கு எத்தனை நாட்களாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறேன். கொஞ்சங்கூடப் புத்தியிற்படவில்லையே? ரொம்ப அழகு. யாராவது வந்திருக்கும்போது இந்தமாதிரி நீ செய்தால் மெச்சிவிட்டுத்தான் போவார்கள்.

மனைவி:— உங்களுக்கு இந்த மாதிரித்தான் பேசுரத்துக்குத் தெரியும். தீட்டு இல்லை, திடைப்பு இல்லை என்னு சொல்லி சொல்லி எல்லாம் ஒன்னு பன்னித்தாம் இங்கே கீழு கீழென்று வாழுது. இன்னம் என்ன கதி பண்ரத்துக்கோ இந்த மாதிரி செய்றுங்கோ? நாள் தவறினாலும் தேள் தவறுதா? (சற்று மெதுவாய்) தீட்டு சேர, சேரத் தேள்தானே நிறையும். என்னமோ; வெடுக்கென்னுப் புடுங்கிப் பொய்விட்டாலும் தும்பமில்லை. ஆ! எடுத்த

தற்கெல்லாம் இந்தமாதிரிப் பேசுறாரு. ஒரு நாளுல்லே, நல்ல துல்லே; ஆத்தி! நல்ல சுயமரியாதையிலே சேந்தாரு. பாழும் சொயமரியாதை.

* * *

பழையகாலத்துப்பாட்டி :—(பேத்தியை நோக்கி) அடியம்மா செல்லம், வெத்தலேபோட்டுக்கில்லேயா?

பேத்திசெல்லம் :—எனக்கு வேண்டாம் பாட்டி. நாக்கெல்லாம் சொர சொரன்னுப்போவுது. சும்மா படுத்துக்கிறேன்.

பாட்டி :—நல்ல வேலேயைக்கெடுத்தியே கட்டுக்கழுத்துப் பொண்ணு, செவ்வாக்கிழமே; ராத்திர்லே வெத்தலே போடாமேப் படுக்கலாமா? சொன்னுக் கேளு; கட்டுக்கழுத்திப் பொங்களெல்லாம் தினம் ராத்திர்லே வெத்தலே போட்டுக்கனும் அம்மா? அதிலும் வெள்ளி செவ்வா விடவே கூடாது.

* * *

சுயமரியாதைப்பெண் :—கூட்டத்திற்குப் போகவேண்டும். 'டயம்' ஆச்சு.

கணவன் :—அந்த வழக்கமெல்லாம் இங்கு வச்சுக்காதே? ஆணேப்போல் எங்கும் போகவேண்டுமென்று பார்க்கிறுயா? வாசற்படியைவிட்டு இறங்கினுல் முழங்கால் சிப்பியை எடுத்துவிடுவேன் ஜாக்கிரதை! பெண்ணுவது, கூட்டத்துக்குப் போரதாவது! ரொம்ப ஒழுங்குதான்.

* * *

சுயமரியாதைக்கணவன் :—நாளே மறுநாள் நடக்கும் 'கான்பரன்சுக்கு'ப்போக வேண்டும். நாளேக்காலே வண்டி ஏறினுல்தான் சௌகரியமாயிருக்கும் என்று நினேக்கின்றேன்.

மனேவி :—அந்தக் காம்பரஞ்சு ஊரில் என்ன திருவிழாவா?

கணவன் :—கான்பரன்ஸ்; ஊரல்ல. அதில் திருவிழாவும் இல்லே 'கான்பரன்ஸ்' என்றுல் மகாநாடு.

மனேவி :—சரி. நீங்க பொயிட்டு வாங்கோ ! நான் எங்கம்மா வீட்டுக்குப் பொயிர்ரேன். நீங்க ஊரிலிருந்து வந்தவுடனே வந்துர்ரேன்.

கணவன்:—அடப்பயித்தியமே! இந்தக் கதையெல்லாம் ஏன் இழுக்குறே! நீ கூடத்தான் வரணும். நான்மட்டும் போகக்கூடாது.

மனைவி :—அப்பாடியோ! நாம் மாட்டேன். அங்கே ஆம்பளேங்களாயிருப்பாங்கோ. எனக்கு வெக்கமாயிருக்கும். நான் வர்லேசாமி! நீங்க மகாநாசராப் பொயிட்டு வாங்கோ!

கணவன் .—உஸ்! எனக்கு நீ வாழ்த்தி வரம் கொடுக்கவேண்டாம். பெண்களெல்லாம் வருவார்கள். நீ பெண்களிடம் இருக்கலாம். பெண்களாகிய உங்களுக்குத்தான் முதலில் சுயமரியாதை வேண்டும். ஆகவே இனி நாங்கள் தனியே போகமுடியாது. பெண்கள் சகிதம் போகவேண்டும்.

மனைவி :—என்னைப்போட்டுத் தொந்தரவு செய்யாதிங்கோ; என்னே வெட்டி வச்சாலும் வரமாட்டேன். பொம்பளேங்கோ வர்ராங்கொன்னு அவங்க வருவாங்கோ, எல்லாத்தையும் வித்துப் புட்டு. எனக்கு அப்படி வர சரிப்புடாது. நல்லா! இவங்க மகா நாடுகூடி மண்ணுப்பொவ, எனக்கேம்புடிக்கனுங் கிராச்சாரம். ஊகும்! பொங்களுக்குத்தான் மொதல்லே வேணுமாம் சோய மாரி—யாதை!

* * *

வெள்ளிக்கிழமை விளக்கு வைக்கும் நேரம்—ஓர் ஏழைப் பெண், ஒரு வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டு, அம்மா! அம்மா!! என்று சத்தம் போட்டாள்.

வீட்டம்மாள் :—(அதட்டலாய்) யாரது?

பெண் :—அம்மா! நான் தான் வழியே வந்த பரதேசி. இந்தப்பிள்ளே (பிள்ளையைச் சுட்டிக்காட்டி) கைவிரலேத் தகரத்தால் அறுத்துக்கிச்சி. கொஞ்சம் சுண்ணும்பு கொடுத்நால் தடவலாமென்னு பார்க்குறேன்.

வீட்டம்மாள் :—அடி போடி பயித்தியக்காரி! நீ என்னக் குடுத்தனம் பண்ரவதானு? செறைச்சித் திங்கிரவளா? வெள்ளிக் கிழமை விளக்கு வைக்கிர நேரம்! புள்ளே குட்டிங்கோ இருக்கிற இடம், இந்நேரத்துக்கு வந்து சுண்ணும்பு கேக்கிறியே! உனக்கு ஏதாவது அறிவு கிறிவு இருக்கா?

ஏழைப்பெண் :—அம்மா! கோவிச்சுக்காதிங்கோ! நெத்தம் ஆரு ஒடுது. ஊட்டுக்குப் பொவனுமின்னு இன்னம் மூனு கல்லு நடக்கனுஞ்சாமி. அத்தாதூரம் போரவரைக்கும் பிள்ளேத் தாங்க மாட்டான்னுப்புட்டு கேட்டம்மா! போதும். போறேன்.

வீட்டம்மாள்:—சர்த்தாம்போடி! என்னமோ அலாக்குரே, ரெத்தம் வருதுன்னு, கட்டியிருக்கிற சீலையில் கொஞ்சம் கிழிச்சித் துடைச்சிவுட்ரது.

அடடா! பெண்களிடம் பதிந்துள்ள மூட நம்பிக்கையைத் தான் என்னென்று சொல்வது? வெள்ளிக்கிழமையாயிருந்தா லென்ன? விளக்கு வைக்கும் நேரமாயிருந்தாலென்ன? அறு பட்ட விரலுக்குக் கொஞ்சம் சுண்ணும்பு கொடுத்தால் இவர்கள் ஆஸ்தியெல்லாம் கொள்ளையா போய்விடும்? அழிந்தா போய் விடும்? என்னே பெண்களின் மூட மதி. ஆ! இது ஒன்றுமட் டுந்தானு? இன்னும் எவ்வளவோ எண்ணித் தொலையாமலிருக் கின்றன. அதையெல்லாம் ஈண்டு விவரிக்க இடம் போதுமா?

---

## பல திரட்டு.

### பூசப்பூசப் போன்னிறம்!

வீரசிங்கம்:—என்ன ஐயா! சைவப்பிரசங்கியாரே! பூசப் பூசப் பொன்னிறம் என்று சொன்னீர்களே. அதென்ன விஷயம்?

பிரசங்கியார்:—இல்லை. எம்பெருமானுடைய தெய்வ வெண் டிருநீறு பூசினல் பூசப்பூசப் பொன்னிறமாகும் என்று சொன் னேன்.

வீரசிங்கம்:—பூசப்பூச எது பொன்னிறமாகும்?

பிரசங்கியார்:—(சிறிது திகைத்து) உடம்புதான்.

வீரசிங்கம்:—உங்கள் உடம்பு ஏன் இப்படியிருக்கிறது? இவ் வளவு கறுப்பும் இவ்வளவு அடர்த்தியான மேகப்பற்றும் நிறைந்த உடம்பை நான் கண்டதே இல்லையே?

பிரசங்கியார்:—இது ஒரு வியாதி. டாக்டரிடத்தில் மருந்து சாப்பிட்டு வருகிறேன்.

வீரசிங்கம்:—ஜப்பான்காரரையும் சீனக்காரரையும் பார்த்த துண்டா?

பிரசங்கியார்:—மதராசில் ஒரு சீனக்காரனைப் பார்த்தேன். அவன் உடம்பு எப்படியிருந்தது தெரியுமா? பத்தரைமாற்றுத் தங்கந்தான்.

வீரசிங்கம் :—அவர்கள் விபூதி பூசுகிறதில்லை. வெள்ளைக்காரர், அமெரிக்கன்காரர், ஜெர்மன்காரர் முதலிய ஒருவரும் விபூதியைப் பூசுகிறதில்லை. அவர்கள் உடம்புதான் உண்மையில் பொன்னிற மாக இருக்கிறது. விபூதி பூசுகிற உங்கள் உடல் சொறி பிடித்து வரண்டுபோய் கரியாகியிருக்கிறது. ஏன் பூசப்பூசப் பொன்னிற மென்று புளுகி ஏமாற்றுகிறீர்கள்? விபூதியைப் பூசி ஒரு கறுப்பனைப் பொன்னனுக்க உம்மால் முடியுமா?

பிரசங்கியார் :—அது முடியுமா? முன்னோர் சொன்னதைச் சொல்கிறோம். நாங்கள் என்ன புதிதாகவா சொல்கிறோம்?

---

## காரணமென்ன?

சீன தேசத்துப் பெண்களுக்குக் கல்யாணம் செய்தாய் விட்டால் வருஷத்துக்கு ஒரு பிள்ளை தவறாமல் பிறக்கிறது. சில சந்தர்ப்பத்தில் ஏழு வருஷத்தில் எட்டுப் பிள்ளைகூடப் பிறந்து விடுவதைக் காணலாம். இப்படியே ஜப்பான் தேசத்தினரும் இருக்கின்றனர். மேல்நாடுகளிலும் பிள்ளைக் குறைவில்லை. பர்மாக்காரர் சங்கதியும் இப்படித்தான். அவர்கள் பிள்ளைகளைப் பாது காக்க முடியாததால் பிள்ளைகள் பெறாமலிருக்கும் பொருட்டு அநேக முறைகளைக் கையாளுகின்றனர். ஆனல் நமது புண்ணியாத்மாக்களான இந்துக் குடும்பங்களில் பிள்ளை பிறக்கிறதென்றால் அரும் பெரும் பரிகாரங்கள் பெரும்பெரும் பணச்செலவுடன் செய்யவேண்டி யிருக்கின்றது. பல இடங்களில் என்ன செய்தாலும் பிள்ளை பிறக்கவே மாட்டேனென்கிறது. தங்க பஸ்பம், சிட்டுக்குருவி சத்தின் லேகியம், தாதுவிருத்திக் குளிகைகள் முதலியன ஒருபுறம்! புத்திரகாமேஷ்டியாகம், அரசமரப் பிரதக்ஷணம், தீர்த்த யாத்திரை, நாகப்பிரதிஷ்டை முதலிய சூறையாட்டமொரு புறம். அர்ச்சனைகள், அபிஷேகம், மண்டபப்படி, நேர்த்திக்கடன் வகையறு இன்னுமொருபுறம். சாமியாட்டம், கனுக் கண்டுபிடித்தல், குறிகேட்டல் முதலிய கதைகள் வேறொருபுறம். இத்தனையுஞ் செய்துவிட்டு ஏமாந்து போவதிலும் குறைவில்லை. மறு பெண்டாட்டி, மூன்றும் பெண்டாட்டி கட்டியும் பலருக்குக் குழந்தை பிறக்கவில்லை. இதற்குக் காரணமென்ன? சாமி பக்தியும்

அடியார் பக்தியும் பரிகாரமும் எவ்வளவு செய்துகொண்டாடியும் பயனேற்படவில்லையே? பர்மா சீனு ஜப்பான் போன்ற தேசத்தினருக்கு ஏராளமாகப் பிள்ளை பிறக்கின்றனவே? அவர்கள் எப்படிக் குறைப்படுதென்று யோசித்துக் கவலைப்படுகின்றபோது, நாம் பிள்ளை வேண்டுமென்று ஏங்கி நிற்பதன் காரணம் யாருக்காவது விளங்குகிறதா? பரிகாரமும் ஐயரும் இல்லாததால்தான் வெளி நாட்டாருக்கு அதிகமான பிள்ளை பிறக்கின்றனவோ? வெள்ளைக்காரரும் ஜப்பான்காரர் சீனுக்காரரும் சாமி அர்ச்சனை நைவேத்தியம் செய்யாததால்தான் பிள்ளைகள் கணக்கில்லாமல் பிறக்கின்றனவா? ராமேசுவரம் மற்ற தேசத்தில்லாததால்தான் அதிகமாகப் பிறக்கின்றனவா? விஷயமென்ன? யாருக்குந் தெரிந்தால் கேட்டறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன் என்று ஒரு பிள்ளையில்லாதவர் எழுதுகிருர்.

—

## ஏனோ இந்தப் போய்.

"மற்ருெரு சரீரத்தினும் புகுதலாம், சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்று மனிதர்களின் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியவர் பாடி வைத்திருக்கிருர். இப்படி மனிதர்கள் எங்காவது இதுவரை செய்திருக்கிருர்களா? எங்காவது நடக்கிறதா? எங்கள் இனத்தாரும் ஆடு கோழி புரு வகையறுவுந் தானே மற்ருெரு சரீரத்தினும் புகுகிருேம். எங்களை மனிதர்கள் அவர்கள் சரீரத்தினுள் புகுத்திக்கொள்கிருர்களே தவிர அவர்கள் யார் சரீரத்தில் புகுகிருர்கள்! நாங்கள் செத்துப்போனுலும் கருவாடாக்கி மனிதர்கள் சரீரத்தில் புகுத்திக்கொள்ளாமல் விடுகிருர்களா? சிந்தையை அடக்கிச் சும்மாதானே இருக்கிருேம். அந்தத் திறம் எங்களுக்கு அரிதா? சிறிய காரியமாகக் கருதப்படுகிற மற்ருெரு சரீரத்தினும் புகுதலைக்கூட மனிதரால் செய்யமுடியவில்லை. ஆனுல் மனிதர்களில் பெரியவரான சாமியார் தங்களால் முடியவில்லையென்று சொன்ன சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கிற செயல் எங்களால் முடிகிறது அல்லவா? என்று தொண்டித் துறைமுகத்திலிருந்து கெண்டைமீன் அர்ச்சண்ட் தந்தியில் கேட்கிறது.

—

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை ௯ (9) | காரைக்குடி பிரமோதூத-௵ தை-௴ | மணி ௭ (7)

1931 ஜன - ஃப்

## காதலுங் கட்டுப்பாடும்.

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே.

—பாரதியார்.

நாடகசாலையில் நாயகனும் நாயகியும் காதல் உரையாடும்போது எல்லாரும் பார்த்து 'ஆஹா!' என்று சொக்குகின்றனர். ராமனும் சீதையும் தோள்மேலே கைபோட்டு அன்றிலும் பேடும்போல் காதலில் திளைத்தார்கள் என்று புராணம் படிக்கும்போது 'ஆஹா என்ன காதல்!' என்று மகிழ்கிறார்கள். அது கண்ணுக்கு முன்னாலே ஆணும் பெண்ணுமாக வந்தால் வயிற்றெரிச்சல் பிடுங்குகிறது. இதுதான் தற்காலத் தமிழ் நாட்டின் நிலை. ஏட்டிலே கேட்கப்பிரியம். வேஷம்போடும்போதும் பிரியம். ஆனால் மகனும் மருமகளும் காதலின்பம் துய்த்தால் அடிவயற்றில் பற்றுகிறது. அடுத்தவீட்டில் காதல்வாழ்வுதோன்றினால்பொறுக்கமுடியவில்லை. நாட்டில் காதல் தோன்றாமல் தொலைக்க மூடமக்கள்விதிகள்செய்து மடிகிறார்கள் என்றுபாரதியார் கூறுகிறார். தனக்குக் காதல்வாழ்வு

வாழமுடியவில்லை. ஆதலால் மற்றவர் வாழ்வதில் பொறுமைகொள்கிறன். எட்டிலும் கூத்திலும் பொய்க்காதலாதலால் பொறுத்துக்கொண்டு 'ஆஹா!' என்கிறன். அனுபவத்தில் மற்றவன் அடையும்போது தாங்கமுடியவில்லை. இதை வாலிபர்களும் வாலிபப் பெண்களும்உணரவேண்டும் காதல் கலவாவிட்டால் வாழ்வில்சத்தில்லை. சத்தில்லாத வாழ்விலிருந்து இன்பத்தை எதிர்பார்ப்பது பட்டமரத்தில் பலனை யெதிர்பார்ப்பது போலவே இருக்கும்.

# சைவர்களும் சுயமரியாதை இயக்கமும்.

தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கமானது காட்டுத்தீயைப்போல் பரவி வருகின்றது. இதன்வேகத்தைக் கண்டு சைவமெய்யன்பர் பயப்படுகின்றனர். வேதம் சாஸ்திரம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களையும் அழித்துப் புராதனமான வழக்கங்களையும் தொலைத்து மதத்தையும் வீழ்த்தி விடுமோ என்று பயப்படுகின்றனர். இப்படிப் பயப்படுவதற்கு முக்கியமான காரணம் எல்லாம்வல்ல கடவுளிடம் தீவிரதர நம்பிக்கை இன்மையேயாகும். இவ்வுலகில் நடைபெறும் எல்லாக்காரியங்களையும் கடவுள்தான் தோற்றுவிக்கிறரென்பதிலும் அவைகள் இயங்குவதும்வளர்வதும் அழிவதும் அந்தப்பரம்பொருளானசிவபெருமானின் திருவருளின் செய்கையினலேயே யென்பதும் சைவப்பெரியோர் துணிபு. பெரியோரால் வரம்பிடப்பட்ட இக்கொள்கையில் நம்பிக்கையில்லாதவரே இயக்கங்களைக் கண்டு மிரண்டு சண்டை தொடங்குவர். சைவசமயப் பெரியாராகிய பல ஆசிரியர் இவ்வுண்மையை உணர்ந்தார்களாயினும் முக்குண வசத்தால் மோதுண்டு மற்ற மதத்தினருடன் போர் தொடுத்திருக்கின்றனரென்பதையும் நாம் உணரவேண்டும். ஆனல் அப் போராட்டத்தினல் சைவசமயத்திற்கு எவ்வித நன்மையுங் கிடைக்கவில்லை. பலவகையான தோல்வியே வந்திருக்கிறதென்னலாம். புத்தர்களுடனும் சமணர்களுடனும் சண்டையிட்டுக் கொடுமை செய்ததனல் சைவசமயத்திற்கு உண்மையான வெற்றி எதுவுங் கிடைக்கவில்லை. சமணரை ஆயிரக்கணக்காகக் கழுவேற்றியதனல் சைவசமயம் வளர்ந்தோங்கிவிடவில்லை. அதன்

பயனுக சமணசமயம் ஒழிந்துபோகவுமில்லை. அப்படியே புத்த மதத்தினரை இந்தியா தேசத்தில் இல்லாதபடி பலர் சேர்ந்து ஒழிக்க முயன்றதன்பயனுக நாடு முற்றும் சைவசமயமாகத் திகழ்கிறதோ? இல்லை. வெளியேற்றப்பட்ட புத்தமதமானது சீனு ஜப்பான் சயாம் போன்ற தேசங்களில் புகுந்து அந்நாடுகளை உலகத்தின் உயர்மணிகளாகச் செய்து 60 கோடி மக்களைத் தனதாகக் கொண்டு மிளிர்கின்றது. சமண மதத்தையும் புத்த மதத்தையும் போராடி ஒழிக்க முன்னின்ற சைவமதம் தன்னிடமிருந்த மக்களிற் பெரும்பகுதியினரை வைணவ மதத்திற்குக் கொடுத்துவிட்டதோடுமட்டுமல்லாமல் மகமதிய மதத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் நாள்தோறும் அனுப்பிக்கொண்டிருப்பதையுங் காணலாம். சைவசமயமானது பார்ப்பனருடைய பலவகைப்பட்ட பித்தலாட்டங்களிலிருந்து விடுபடும் நோக்கங் கொண்டதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன்ற சமயாச்சாரியர்களாலும் சேக்கிழார் போன்ற அடியார்களாலும் சைவசமயத்தில் சமூக சீர்திருத்தக் கொள்கைகள் பொருத்தப்பட்டன. அவை நேராக வளர்ச்சியடைந்து செழித்து வளர்ந்திருக்குமானுல் இந்திய நாடு முற்றும் சைவ சமயமே தலை சிறந்து நின்றிருக்கும். ஆனுல் அவர்கள் போட்ட விதையை முளையிலேயே பார்ப்பனர் மண் போட்டு மூடி அழித்துவிட்டனர். வைதீகப் பித்தம் பிடித்த சைவ சமயவாதிகள் கண்ணைத்திறந்து பாராமல் பார்ப்பனருடைய ஸ்மிருதி வலையில் பட்டு அறிவிழந்து போயினர். சூத்திரர்க்கு முக்தியில்லையென்ற பார்ப்பனரின் கொடுங்கொள்கையையும், பார்ப்பனராலும் தாஸிப் பெண்ணையும் வைசியப்பெண்ணையும் கடவுள் சம்மதமாகக் கல்யாணம் செய்துகொள்ளலாம், வேளாளன் காலில் பிராமணன் விழுந்து வணங்கலாம் என்பனபோன்ற சீர்திருத்தக் கொள்கைகளும் சைவசமயத்தில் புகுமாறு செய்யப்பட்டன. இதனைக் கண்ட பார்ப்பனர் பொய்ப் புராணங்கள் வகுத்துச் சைவக் கொள்கையைப்பார்ப்பன ஸ்மிருதி வழியில் மடக்கி வீழ்த்திவிட்டனர். இதன் பயனுகவே சைவம் வர வர உள்ளடங்கிச் சென்று கொண்டிருக்கின்றது. மனுதரும சாத்திரத்தையும் பெரிய புராணத்தையும் படித்து உணருவாருக்கு இவ்வுண்மை புலனுகும். வைணவருடன் சைவசமயத்தினர் போராடியதனுல் ஒரு நன்மை

யையும் பெறவில்லை. அவர்களுடன் போட்டி போட்டு ஒருவரை யொருவர் திட்டியும் இரு கடவுளுக்கும் இழிவு கற்பித்துப் பொல்லாப் புராணங்கள் பலவற்றைப் புனைந்தெழுதியும் மக்கள் மனத்தைக் குழப்பிவிட்டனர். இதனால் சமயநெறி சண்டை நெறி யென்ற உணர்வும் அவ்வழியில் பெருங் கசப்பும் மக்களுக்கு உண்டாகிவிட்டன. சமய வாதிகள் என்றால் பெருஞ் சண்டைக்காரர்கள் என்ற உணர்வு மக்களிடையில் உண்டாயிற்று. சைவர் தம் வெற்றிக்காக வைணவசமயத்தினரை இழிவுபடுத்துவதும் துன்பப் படுத்துவதும் அப்படியே வைணவர் சைவர்களைச் செய்வதும் தொழிலாகக் கொண்டனர். இந்த மதங்களைச் சார்ந்த அரசர்கள் மற்றவர்களின் கண்ணைப்பிடுங்கியும் காதை அறுத்தும் ஜெயிலிலிட்டும் காட்டில் விரட்டியும் பலவிதமான கொடுமைகளைச் செய்தனர். இப்படியெல்லாம் செய்தாலும் வைணவ சமயத்தை ஒழித்துச் சைவசமயமோ சைவத்தை ஒழித்து வைணவ சமயமோ தனியாக நின்று வளம் பெற்று ஓங்கிவிடவில்லை.

இன்றைய நிலையில் பழய கொடுமைகளில் தோய்ந்த சைவ உலகம் சாந்தமாகக் கடவுள் நம்பிக்கையுடன் தன் வளர்ச்சியில் நாட்டங்கொள்ளும் வலிமையை இழந்துவிட்டதென்றே கூற வேண்டியிருக்கிறது. சைவ உலகில் பற்றுக்கொண்டிருப்பவர் தொகை மிகச் சுருக்கமேயாகும். சைவ சமயத்தில் சிறிது பற்று ஏற்படுமாயின் அவர் தன்னுடைய உருவம் தோற்றம் வேஷம் வாழ்வு முதலியவற்றில் மனித சமூகத்திற்கு அப்பாற்பட்டவர் போல் நடிக்க ஆரம்பிக்கின்றனர். சைவத்தில் பற்று அதிகப்பட அதிகப்பட மற்றவரை இழிந்தவர், ஆசாரமில்லாதவர் தாழ்ந்தவர் என்று கருதும் மனப்பான்மை வளர்கின்றது. இதன் பயனாக மக்கள்பாலிருக்கும் அன்பு வரவரக்குறைந்து கோயில் அடிமையாகின்றார். சைவத்தின் வளர்ச்சி இவ்விதமாக வளர்வதால் இதனைப் பலர் பின்பற்ற முடிகிறதில்லை. சைவ வளர்ச்சி செய்பவர்களால் மக்களுக்கு அறிவையோ அன்பையோ நல்க முடியவில்லை. நல்குதற்கு அவர்கள் விரும்புவதுமில்லை. இதனால் பொது ஜனங்களின் வாழ்க்கைக்கு எவ்வித உதவியையும் சைவ சமயம் நல்கமுடியாமற் போகிறது. தவிரசைவசமயவாதிகளுக்குப்பிறமதகண்டனமே முக்கியமானதாக இருப்பதைக்காணலாம். தஞ்சமயத்திலிருப்பவர்க்கு

உதவி செய்யும் எண்ணமில்லாததோடுகூட அமையாமல் எப்போதுங் கண்டனங்க ளெழுதுவதும் சண்டை நூலெழுதுவதுமாகவே இருக்கின்றனர். சைவப் பணியென்பது பிற கொள்கையாளரைத் திட்டுவதுதான் என்ற முடிவுக்கு வந்திருப்பது அவர்களின் செய்கையைக் கவனித்தால் இனிது விளங்கும்.

இப்படிப்பட்ட சைவ மக்கள் தங்களின் பரிதாப நிலையைக் கவனியாமல் சுயமரியாதைக் கட்சியினருடன் எங்கு பார்த்தாலும் போராட முற்படுகின்றனர். சுயமரியாதை இயக்கமானது பார்ப்பதற்கு நாஸ்திக இயக்கமென்று சிலர் கருதும்படி இருப்பினும் அது உண்மையில் ஒரு நாஸ்திக இயக்கமல்ல. நோய்வாய்ப்பட்டு மரமரப்படைந்த ஒருவனுக்கு விஷ சத்துக்கள் நிறைந்த மருந்து கொடுத்தாலல்லது வியாதி குறைந்து உணர்ச்சி வருவதில்லை. அதே மருந்து நல்ல தேகமுடையவனுக்கு உயிரைப்போக்கும் விஷமாக இருத்தல் கூடும். கொடுத்தால் உண்டவன் இறந்துபோகவுங் கூடும். ஆனால் பெரு நோயாளிக்கு அம் மருந்து மிக இன்றியமையாததன்றே? தமிழகத்தில் இன்று அறிவு மழுங்கிப் போய்விட்டது. சாமி கோயில் பரிகாரம் பூசை கணக்கிலடங்காமல் வளர்ந்துவிட்டன. அக்கிரமமும் தேசத்தையும் சமய உணர்வையும் பாழாக்கும் கொள்கைகளும் நாடுமுற்றும் இன்றியமையாத தருமங்களென்று கருதப்படுகின்றன. அறிவுரையை ஏற்பாரில்லை. உண்மையான சமய உணர்வும் கடவுள் பக்தியும் காணக்கிடைக்கவில்லை. கடவுளே வந்து பக்தியுபதேசம் செய்தாலும் மக்கள் கேலி செய்வ ரென்பது திண்ணமாகும். அவ்வளவு தூரம் மக்கள் கீழிறங்கிவிட்டனர். சைவ சமயத்தை வளர்க்க ஏற்பட்ட சங்கங்கட்குக் கணக்கேயில்லை. கூட்டப்பட்ட மகாநாடுகளும் ஆண்டுவிழாக்களும் எண்ணற்றன. சன்யாசிகளும் சாமியார்களும் தம்பிரான்களும் மடாதிபதிகளும் சைவத்தை வளர்க்க அரும்பெரும் முயற்சி செய்ததில் குறைவில்லை. தேவார பாராயணஞ் செய்பவர்க்கும், தேவார பாடசாலைகளுக்கும் ஆகம பாடசாலைகளுக்கும் குறைவுண்டா? எத்தனையாயிரம் கோவில்களில் நாள்தோறும் காலந் தவறாமல் பூசை நடந்துவருகிறது. ஆண்டவனுக்குத் திருவிழாக்கள் நடைபெறுவதில் குறைவுண்டா? இத்தனையும் செய்தும் சைவம் அணுவளவாவது வளர்வதைக் காணமுடி

கிறதா? முடியாததோடுமட்டுமன்றி அதே சைவ மக்களிடையில் சுயமரியாதை இயக்கம் தீவிரமாகப் பரவி வருவதன் காரண மென்ன? இதைப்பற்றி யோசித்து சைவசமயத்திலுள்ள குறை பாடுகளைத் திருத்திக்கொள்ள வேண்டுமேயன்றி சுயமரியாதை இயக்கத்தை யெதிர்த்து வீழ்த்திவிடலாமென்று நினைப்பது பயித் தியக்காரத்தனமே யாகும். சைவசமயத்திலிருக்கும் துன்பமும் சோம்பேறித்தனமும் உதவியற்ற மனப்பான்மையுமே சுயமரி யாதை இயக்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக நிற்கின்றனவென்பதை சைவ நன்மக்கள் உணரவேண்டும். சுயமரி யாதை இயக்கத்தின் வேகத்தைக் கண்டு பதட்டமடைபவர்களில் முதலாவதாக இருப்பவர் பார்ப்பனர். இரண்டாவதாக வருப வர் சைவரே யாவர். வைணவர் அவ்வளவாகப் பரபரப்படைய வில்லை. காரணம் அவர்களிடம் சிறிது சமத்துவ வாடையிருப்ப தேயாகும். கிறிஸ்தவரும் மகமதியரும் புத்தமதத்தினர்போன்ற வரும் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு எதிர்த்துத் திண்டாட வில்லை. வரவேற்கின்றனர். பார்ப்பனரிடத்திலும் சைவரிடத்தி லும் களங்கமிருப்பதால்தான் பதறுகின்றனர். பார்ப்பனருக்குத் திருந்த வழியே கிடைப்பதரிது. ஆனால் சைவர்கள் திருத்தமுற இடமிருக்கிறது. அதைவிட்டு வீண் எதிர்ப்பு செய்வதால் சுய மரியாதை இயக்கம் வளர்ந்தோங்குமேயல்லாமல் சைவம் அணு வளவுகூட வளரப்போவதில்லை. இன்று விளங்காவிட்டாலும் சைவக் குழுவினர் இன்னும் சின்னாளில் ஓய்ந்து உட்காரப்போ வது திண்ணம்.

## சுயராஜ்யம் வருகிறது.

(ஒரு ஒற்றன்)

சுயராஜ்யம் வரப்போகிறதே; வந்துவிட்டால் என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற யோசனை எல்லாருக்குமே சாதாரணமாகத் தோன்றக்கூடுமல்லவா? அப்படியே எனக்கும் சில யோசனை தோன்றுகிறது. அதை வெளியிடுவதற்குள் என்னுடைய சிநேகி தர்களின் திட்டங்களை அறிய முடிவு செய்தேன். அதைப் பொது

ஜன நன்மையின் பொருட்டு வெளியிட முன் வருகிறேன். என்னுடைய பார்ப்பன வைதீக நண்பருடைய அபிப்பிராயமும் திட்டமும் பின்வருமாறு:—

சுயராஜ்யத்தைக் கட்டாயம் பெற்றுவிடவேண்டும். வெள்ளைக்காரரிடத்தில் ராஜ்யமிருப்பதால் இந்ததேசத்திற்கு மகத்தான கஷ்ட நஷ்டங்கள் வந்துவிட்டன. மதத்தில் தலையிடுவதில்லையென்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தாலும் பல சமயங்களில் தவறி விடுகிறார்கள். புருஷனிறந்ததும் உடன்கட்டையேறும் வழக்கத்தை சட்டஞ் செய்து தொலைத்தார்கள். விதவா விவாகஞ் செய்யலாமென்று ஒரு அவைதிக சட்டத்தை யுண்டாக்கினார்கள். ருதுவானபிறகு பெண்களை விவாகஞ் செய்யவேண்டுமென்று ஒரு சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். தாஸிகட்குப் பொட்டுக்கட்டக்கூடாதென்றும், சங்கர ஜாதியாகும்படி கலப்பு மணஞ் செய்ய வேண்டுமென்றும் பலமாதிரியான சட்டங்களைச் செய்யவாரம்பிக்கிறார்கள். ஆதலால் இந்த வெள்ளைக்காரரிடமிருந்து ராஜ்யத்தை வாங்கிவிட வேண்டும். வாங்கின உடனே மத பக்தாளாகவும் தெய்வவிஸ்வாசமுள்ளவர்களாகவுமுள்ள பிராம்ஹணளும் பிரபுக்களுமாக இருந்து ஒவ்வொருவரும் அவரவர்கட்கு ஏற்பட்ட தருமம் தவறாமல் நடந்துவரும்படி செய்ய வேண்டும்.

### சில திட்டங்கள்.

1. ஒருவரும் சட்டைபோடக் கூடாது. கிராப் வைத்துக் கொள்ளப்படாது. சூத்ராளெல்லாம் பூணூல் போட்டுக்கொள்ளப்படாது. சட்டசபை முனிஸிபாலிடி ஜில்லா போர்டு முதலிய இடங்களில் பிராம்ஹணளுக்கு உயர்ந்த ஆசனம் போட வேண்டும். சூத்திராளுக்குத் தரையில் ஜமுக்காளம் விரித்து உட்காரச் செய்யலாம். பஞ்சமாள் முதலியோர் கட்டிடத்திற்கு வெளியே நிற்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். பெண்டுகள் இதிலெல்லாம் கலந்துகொள்ள இடமிருக்கக்கூடாது.

2. தர்மங் குறைந்து அதர்மம் மேலிட்டுவிட்டதால் ஒவ்வொரு ஜில்லா போர்டு முனிஸிபாலிட்டிகளிலிருந்தும் தருமப் பிரசாரஞ் செய்வதற்காக அநேகம் வைதீகப்பிராமணளை வைத்துப் பிரசாரம் செய்யச் சொல்லி அவர்கட்குத் தக்க சம்பளங்கொடுக்க

வேண்டும். இதற்கு அரசாங்கத்தார் தாராளமாகப் பணம் ஒதுக்க வேண்டும்.

3. பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயராக இருக்கும் உரிமை சாஸ்திரப்படி பிராமணருக்கே இருப்பதால் அவர்களையே நியமிக்க வேண்டும். பிரமவித்துக்களான பிராமணர்தான் உபதேசம் செய்ய அருகதை உள்ளவர்களாதலால் மற்றவர்கள் எதைப் பற்றியும் உபந்யாசம் செய்யக்கூடாதென்று சட்டபூர்வமாகத் தடுக்கப்பட வேண்டும்.

4. பெண்கள் தெருவில் நடமாடுவதாலேயே பலவிதமான தீமைகள் உண்டாவதால் அவர்களைக் கண்டிப்பாக வீடுகளைவிட்டு வெளியே வராதபடி சட்டம் போட்டு அடக்க வேண்டும். விதவைகளை வெளிவரவிட்டதால்தான் அநேக உத்தமமான காரியங்களெல்லாம் கெட்டுப்போக ஹேதுவாக இருக்கிறது. எல்லாரும் ஜாதி பேதம் கருதாமல் விதவைகள் விஷயத்தில் பாக்கியுள்ளவர்களும் சேர்ந்து தலையை மொட்டையடித்து ஒரு வேளை சாப்பாடு போட்டு வீட்டிற்குள் போட்டு அடைத்து வைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

5. மார்க்கெட்டுகள் முதலிய எல்லாம் பிராமணருக்குத் தனியாகவும் சூத்திராளுக்குத் தனியாகவும் தீண்டாப்பேருக்குத் தனியாகவும் ஏற்பாடு செய்யவேண்டும். சேர்விஸ்கார்களில் பிராமணருக்கு ஒரு அடைப்பு செய்து இடத்தைத் தனியாக ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சமன் போன்றவர்களை வண்டியில் ஏறக்கூடாதென்றும் கால் நடையாகவே போகவேண்டுமென்றும் கண்டிப்பாக ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்து நடக்கமாட்டார்கள்.

6. சாஸ்திரப்படி 8 வயதுக்கு முன்னமே கலியாணஞ் செய்துவிடவேண்டுமென்று ஏற்பாடு செய்யவேண்டும்.

7. பிராமணர் எல்லாருக்கும் முந்தின தர்மராஜ்யங்களிலிருந்தபடி எல்லா வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும். முக்கியமாக அவர்களுக்கு ரயிலில் பிரயாண சார்ஜ் இல்லாமல் செய்ய வேண்டும். ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனுக் கருகில் ஒவ்வொரு சத்திரம் பிராமணருக்கென்று இனமாக சாப்பாடு போடும்படி வசதியுள்ளதாக அமைக்கப்படவேண்டும்.

சைவ நண்பர்களின் அபிப்பிராயமும் திட்டமும் வருமாறு:—

வெள்ளைக்கார ராஜ்யம் வந்ததிலிருந்து சில நன்மையுமுண்டாகியிருக்கிறது. சிலதீமையுமுண்டாகியிருக்கிறது. மற்ற மதத்தர்களையொழிக்க நமது பண்டையராஜாக்கள்செய்தமாதிரி கண்ணைப் பிடுங்கியும் காதையறுத்தும் கொலைசெய்தும் உதவி செய்யவில்லை. ஆனால்மற்றமதத்தினர்உயர்தனிச்சைவசமயத்தை அழிப்பதற்கும் உதவி செய்யவில்லை. இப்போது இவர்களிடமிருந்து சுயராஜ்யம் வாங்கிவிட்டால் நல்லதென்றுதான் தெரிகிறது. சுயராஜ்யம் என்றால் அது நம்முடையஇஷ்டந்தானென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் வெள்ளைக்காரரிடமிருந்து சுயராஜ்யத்தை வாங்கிவிட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## சில திட்டங்கள்.

1. ஒப்பற்ற உயர்தனிச் சைவசமயம் எங்கும் பரவும்படி செய்யவேண்டும். சுயராஜ்யம் வைணவர்களுக்கும் சேர்த்துத் தான் வருமென்று தெரிவதால் அதையும் சேர்த்துக்கொண்டு மற்ற கிறித்தவர் முகமதியர்களின் மதங்கள் இந்தியாவில் இல்லாமல் செய்தல். விபூதியானது இந்த தேசம் முழுமையும் பரவும்படி செய்தல். சைவ சமயப் பிரசாரகர்களை ஏராளமாக ஏற்படுத்தி சைவத்தின் உண்மைகளையெடுத்து எங்கும் உபந்யாசம் நடக்கும்படி செய்தல். விசேஷமாகக் கோயில்கட்குத் திருவிழாக்களை ஏற்படுத்தல். அறுபத்துமூவர் மடங்களை எல்லா ஊர்களிலும் ஏற்படுத்தல்.

2. பள்ளிக்கூடங்களில் தேவாரத்திருமுறையைக் கட்டாய பாடமாக ஏற்படுத்தல். பள்ளிக்கூடப் பையன்கள் தலையில் கிருப் வைக்கக்கூடாதென்றும், விபூதி ருத்ராக்ஷம் கட்டாயமாக அணிய வேண்டுமென்றும் வற்புறுத்தல். எல்லாரும் கட்டாயமாக சிவ தீக்ஷை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சட்டஞ்செய்தல்.

3. பரமசிவன் வாக்காகிய வேதத்தில் சொல்லியிருக்கும் கீழ் வரும் விஷயத்தை நடைமுறையில் சட்டபூர்வமாகக்கொண்டு வரல்:— "விபூதி பூசாதவன் நெற்றியைச் சுடு; ருத்ராக்ஷம் கட்டாதவன் கழுத்தில் குத்து. பஞ்சாக்ஷரம் ஜெபிக்காதவன் நாக்கை அறு."

வைணவ வடகலை ஐயங்கார் தமது அபிப்பிராயத்தைப் பின் வருமாறு அறிவித்திருக்கிறார்:—

நம்முடைய ராஜ்யத்தை அன்னியாள் ஆள்வது பொருத்த மல்ல. ராஜ்யபாரம் நடத்துவது மகாவிஷ்ணுவின் அம்ஸமான ராஜாக்கள்தான் செய்யவேண்டும். ஆதலால் நல்ல வைஷ்ணவாள் தான் ராஜாவாக இருக்கவேண்டும். இனி சுயராஜ்யம் வாங்கினால் காந்தியின் இஷ்டப்படிதான் நடக்கும். எப்படி யிருந்தாலும் காந்தி வைஷ்ணவர்தானே! அதனால்தான் தமிழ்நாட்டுக்கு ராஜ கோபாலாச்சாரியார் என்ற வடகலை ஐயங்காரை ஏற்படுத்தியிருக் கிறார். ஆதலால் சுயராஜ்யம் வரவேண்டியதுதான். பின் வரும் திட்டங்களை அனுசரித்தல் போதியதாகும்.

திட்டங்கள்.

1. எல்லாப் பெருமாள் கோவிலிலும் வடகலையாருக்கே முதல்தீர்த்தமும் மற்ற மரியாதைகளும் செய்யும்படி செய்தல்.

2. ரயில்வே ஸ்டேஷன்களில் வைஷ்ணவாளுக்குத் தனி யிடத்தில் வடகலையாரைக்கொண்டே கிளப்புகள் வைக்கும்படி செய்தல்.

3. பொதுவாக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லாரை யும் விஷ்ணுவே பரம்பொருள் என்பதைக் கட்டாயமாக ஒப்புக் கொள்ளும்படி செய்தல்.

---

# உப்புவரியைவிடப் பெரிய வரி.

(திரு. சி. ச. சுப்பையா)

நாட்டில் உப்பு உற்பத்திக்குக் கவர்ன்மெண்டாருடைய பிரயாசையில்லை என்றும், இதனால் உப்புக்கு வரி விதிப்பது கூடா தென்றும் ஆக்ஷேபனை செய்து மகாத்மா காந்தியவர்களால் சத்தி யாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை எல்லாரும் அறிவர்.

இந்த உப்பு வரியை நிராகரித்து விட்டால் அப்பால் வேறு எல்லாவற்றையும் ஆக்ஷேபனை செய்து இந்த கவர்ன்மெண்டை அவர்கள் சுய தேசத்திற்கு அனுப்பிவிடலாமென்ற எண்ணம் சில ருக்கு இருக்கலாம். ஆனால் இந்தியாவில் மதப் பிரிவுகளும், சாதிப்பிரிவுகளும், ஜனங்களுக்குள் எல்லோரும் சமத்துவமாய் வாழக்கூடிய தன்மைகள் இல்லாமையும் இருப்பதினால் இப்போ

தைய: கவர்ன்மெண்டார் ஆளுவதுதான் இந்தியாவுக்கு நன்மை என்று கருதும் மக்களும் இல்லாமலில்லை.

எல்லா வரிகளுடைய வகைகளும் கவர்ன்மெண்டாருடைய பிரயாசையில்லாததன்மைகளாகத்தானிருக்கின்றன. எந்த கவர்ன் மெண்டும் வரிகள் விதிக்காமல் ஆளமுடியாது.

கவர்ன்மெண்டாருடைய பிரித் தாளுந் தன்மையால்தான் மதப் பிரிவுகளும், சாதிப்பிரிவுகளும், ஜனங்களுக்குள் சமத்துவமாய் வாழக்கூடிய தன்மைகள் இல்லாமைகளும் இருந்துவருகின்றனவென்று சிலர் சொல்லுகிறார்கள். சமீபத்தில் அரிபிலாஸ் சாரதா அவர்களால் இந்தியச் சட்டசபையில் கொண்டுவரப்பட்டு பெரும்பாலோரால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறிய சிறுவர்களின் விவாகத் தடுப்புச் சட்டத்தை, சிலர் ஆக்ஷேபித்து மேற்படி சட்டம் ஒழிவதற்காகப் பலவிதப் பிரயத்தனங்கள் செய்ததன்பயனாக மேற்படி சட்டம் உயிரற்று இருந்துவருகிறது. இப்படிக்கான நிலைமையில்தானா கவர்ன்மெண்டார் மதங்களிலாவது, சாதிப்பிரிவுகளிலாவது தலையிட்டால் அந்தமட்டில் சரிதானென்று ஒப்புக் கொண்டுவிடக்கூடும்?

உப்பு மூலம் வருஷ வருமானம் சுமார் ரூபாய் ஏழு கோடிதான். சென்னை மாகாணத்தில் உள்ள இந்து தேவஸ்தானங்களிலும், மடங்களிலுமுள்ள வருஷ வருமானம் சுமார் இருபத்தேழு கோடி ரூபாய். இந்த இருபத்தேழு கோடி ரூபாய் வருமானத்தில் சுமார் ஒரு கோடி அல்லது இரண்டு கோடிதான் ஜனங்களுடைய முன்னேற்றமான காரியங்களுக்காகச் செலவு செய்யக்கூடியதாக இருக்கலாம். இவை போக மீதப்பணம் பூராவும் ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கும், மேன்மைக்கும் இல்லாத தன்மைகளாய் அறியாமையையும், மூடத்தனத்தையும் வளர்க்கக்கூடிய வகைகளாகச் செலவு செய்யப்பட்டு வருகிறது. உதாரணமாக மதுரை ஜில்லா அழகர் கோவில் என்ற ஊரில் அழகர் என்று ஒரு விக்கிரகத்தை வைத்து அதைமதுரைக்கு அருகாமையிலுள்ள வண்டியூரில் நாச்சியார் அம்மன் என்ற மகமதியப் பெண்ணிடம் சோரத்தனத்திற்காகப் போய் வந்ததாக மேற்படி அழகர் என்ற விக்கிரகத்தை வருஷத்திற்கு ஒருமுறை எடுத்து வண்டியூர் கொண்டுபோய் அங்கு ஒரு கட்டிடத்தின் மச்சில் பால், பழம் பலகா

ரங்கள் சகிதம் நாச்சியார் அம்மன் என்ற சிலேயோடு அடைத்துப் பூட்டிவைத்து அப்பால் அழகர்கோவில் என்ற ஊருக்குக்கொண்டு போய் விடுகிறார்கள். இந்த வகைக்குப் பணங்கள் வீணுகச்செலவு ஆவது ஒருபுறமிருக்க, ஜனங்கள் செய்யும் ஆடம்பரங்களும், கூத்தாடுதல்களும், கோவிந்தா என்று சத்தம் போடுவதும், கன்னத்தில் அடித்துக்கொள்வதும், சுவாமி வைப்பாட்டி வீட்டிற்குப் போகிறதென்ற ஆனந்தக் கொண்டாட்டங்களேயும் யோசித்துப் பார்க்கையில் உலகத்தில் இப்படிக்கான பயித்தியக்காரத் தன்மை வேறு இருக்காது என்றே நினேக்கவேண்டியதாயிருக்கிறது.

சாதாரணமாய் ஜனங்களே சோரத்தனஞ் செய்தால் எவ்வளவோ அவமரியாதையும், கேவலமும், கண்டன தெண்டனேகளும் உண்டாகின்றன. இப்படியிருக்கையில் சுவாமி என்று பெயரை வைத்து ஜனங்களே மேன்மையான வழிகளில் திருப்பக்கூடிய வகைகளாயில்லாமல் சுவாமி வைப்பாட்டி வீட்டிற்குப் போகிறதென்று ஐதீகங்கொண்டாடுவது எதற்கு?

ஜனங்களும் துன்மார்க்கத்தில் பிரவேசித்து வீணுகக்கெட்டு மடியட்டுமென்பதைத் தவிர வேறு நன்மைகிடைக்கவேண்டுமென்பதற்கான காரியமுண்டா? மானமும், மரியாதையும் இல்லாத மூடத்தனமான இந்தத்திருவிழாவுக்குத் தடுப்பு எப்பொழுது வரக்கூடுமோ?

சென்னே மாகாணத்திலுள்ள இந்து தேவஸ்தானங்களிலும், மடங்களிலுமுள்ள ஆடம்பரமான வீண்செலவுகளே நிறுத்திஞல் அப்படிக்கானதில் உள்ள மிச்சப்பணங்களேக்கொண்டு, உப்பு வரியில்லாமல் செய்வதற்காக மேற்படி வரிப்பணம் பூராவையும் மொத்தமாகக் கட்டிவிடலாம். மேலும் ஜனங்களுடைய மேன்மைக்கான கல்விச்சாலேகளேயும் தொழிற்சாலேகளேயும் அதிகப்படுத்தியும் மேலான படிப்புகளுக்காக அனேகரை அன்னியநாடுகளுக்கு அனுப்பி உலகத்தார் தங்களோடு நம்மையும் சமமாகப் பாவிக்கும் தன்மை யடையலாம். இன்னும் இந்த தேவஸ்தானங்களிலும், மடங்களிலுமுள்ள சகலவற்றையும் ரொக்கப் பணமாக்கிஞல் இந்த நாட்டிலுள்ள ரயில்வேக்கள், பாங்குகள், கூட்டு வியாபார பாங்கிகள் முதலான சகல காரியங்களேயும் நம்மவையாக்கி மேன்மையடைந்து அன்னியர்கள் நம்மை உபயோகமுள்ள மனிதர் என்று கருதும்படி வாழுதல் கூடும்.

# சமதர்மம்.

திரு. அய்யாமுத்து எழுதுவது.

மக்கள் இன்புற்று வாழவேண்டுமானல் அவர்கள், தங்களுக்குத் துன்பம் விளைப்பனவற்றைத் தகர்த்தெறியப்பழகவேண்டும். அவ்வழியில் குறுக்கிட்டு நிற்கும் பழக்கம், வழக்கம், சட்டம், திட்டம் முதலியவைகளைப் பொருட்படுத்தாது விலக்க வேண்டும். விலக்கியபின்னர் அப்பழக்கவழக்கச் செய்கைகள் பின்னரும் மாமூல்படி தங்களை அடிமைப்படுத்த வொட்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக ஒருவனுக்குத்தன் மனைவியிடத்தில் பிரியமில்லை என்று வைத்துக்கொள்வோம். அவளுடைய சௌந்தர்யமோ, நடத்தையோ, பேச்சோ, பிறிதோ அவனுடைய மனமொப்பாததாய் இருந்தால் அவன் அவளை வைத்துக்கொண்டு காலமெல்லாம் துன்பப்படுவதைக்காட்டிலும் அவளை விலக்கிவிட்டு வேறு மணமுடித்து வாழ்தலே இருபாலாருக்கும் இன்பந் தரும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. தன்னைக் காதலிக்காத புருஷனுடன் வாழ்ந்திடும் மனைவிக்கும் அவள் வாழ்க்கையில் துன்பமே தவிர இன்பமில்லை. ஆதலால் இருவரும் பிரிந்து வேறுமணம் புரிந்து கொள்வது இருபாலாருக்கும் துன்பந் தவிர்த்து இன்பம் பயக்கும் முறையாகும்.

பின்னரும் மணமுடித்துக் கொள்வதில் இம்மாதிரி முரண் ஏற்படாவண்ணம் பாதுகாத்துக்கொள்வது அவசியம். இதற்காக மணமுடித்துக் கொள்வதற்கு முன்னரேயே ஆணும் பெண்ணும் கலந்துறவாடி ஒருவரை யொருவர் நேசித்துப் பழகச் சுதந்திரம் இருக்கவேண்டும். இவ்வண்ணம் அவர்கள் பழகுங்காலத்தில் இணக்கமில்லாவிடில் பிரிந்து கொள்ள வசதியிருக்கவேண்டும். இவ்வாறு நேசித்த பின்னர் மனமொப்பி மணமுடித்துக் கொள்வார்களானல் அவர்கள் வாழ்க்கையில் அவர்களுக்குத் துன்பம் ஒரு நாளும் இராது. அதுவின்றி ஒருவர்முகம் ஒருவர் பாராமலேயே பெற்றோர்களால் தெரிந்தெடுத்து மணஞ்செய்யப்படும் இடங்கள் பலவற்றில் துன்பங்கள் அதிகம். விபசாரமும் அதிகமென்றே சொல்லவேண்டும். மனைவி "சார"மில்லாவிட்டால் புருஷன் பிறமனையை இச்சித்துப்போய் விடுகிறான். புருடன் ஆண்மை

யற்றவனுயிருந்தால் மனைவியும் வேறிடம் பார்க்கிறாள். அவர்கள் இருவரும் ஒருகால் விபசாரமற்றவர்களாய் இருப்பினும் அவர்களுக்கு மன ஒற்றுமையோ இன்பமோ ஒருக்காலும் இல்லாமலே அவர்கள் சதா துன்பப்பட்டே வாழ்ந்து வருவது அநுபவம்.

தற்காலக் கலியாண முறையானது, கல்யாணம் செய்தபின் ஒருவள் சோரம்போக உரிமைபெறுவது போல் இருக்கிறது எவ்வளவோ கிழங்கள் பிள்ளைப்பேற்றுக்காக இளங் குமரிகளைக் கட்டி அல்லல் படுவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். தாசி வேசி இல்லங்களில் சிக்குண்ட பலவாலிபர்கட்குப் பெற்றோர் வலியக் கட்டாயத்தின் பேரில் (அவர்களைச் சரிப்படுத்தும் எண்ணத்தோடு) மணமுடித்து அவர்கள் தங்கள் மனையாளை அசட்டையாக விட்டுவிட்டுப் பின்னரும் பிற இடம் போவதைப் பார்த்திருக்கிறோம். இம்மாதிரிப் பற்பல காரணங்களும் சம்பவங்களும் அநுபவ வாயிலாக நமக்குத் தெரியும். ஆதலால் மணத்துக்கு முன்னரே இருபாலாரும் நட்புறவாடி ஒருவரைஒருவர் நன்கறிந்து மணமுடித்துக் கொள்ளும் வழக்கம் ஏற்படவேண்டும். உண்மையில் சிந்திப்போமானுல் இதற்கு மாறுபடும் மாந்தர் இருக்கமுடியாது. ஆனுல் நாம் நெடுநாளாக எண்ணி வந்த எண்ணமும், அனுட்டித்துவந்த பழக்க வழக்கமுமே இதற்கு எதிராகத் தோன்றும்.

மேக வியாதிகளைப்பற்றி யாதொரு விதமான ரகசியமும் இருக்கக்கூடாது. இதை ரகசியப்படுத்தி வைக்க வைக்க இந்த ரோகம் எல்லோரையும் பீடித்த வண்ணமாய் இருக்கிறது. தகப்பன் ஒரு வேசியிடம்போய் நோய்வாய்ப்பட்டு வருந்தும்போது அதைத்தன் மனைவிக்கும் பிள்ளைக்கும் பகிரங்கமாகச் சொல்லி விடுவானுகில் அவர்கள் எச்சரிக்கையாக இருப்பார்கள். அதுவின்றி இவன் அதை ரகஸ்யப்படுத்தினுல், மனைவியின் இச்சையைப் பூர்த்தி செய்ய அவளுடன் சுகிப்பதால் அவளுக்கும் அந்நோய் உடலில் ஏறிவிடும். அவள் அறிந்திருந்தால் தன் புருஷன் சுகப்படும்வரை அவனைப்பக்கத்திலும் சேர்க்காமலிருப்பாள். மற்றும் தன் பிள்ளையும் தன் தந்தைபடும் வேதனையைக் கண்ணுல் பார்த்து உணர்ந்து வேசியர் இல்லம் நாடாதிருப்பான். அப்படி மீறிப் போய்விட்டாலும், ரகஸ்யம் என்பது இல்லாவிட்டால் அவன்

ஆரம்பத்திலேயே வியாதியின் குணங்களைச் சொல்லித் தகுந்த மருந்துகள் சாப்பிட்டு குணப்படுத்திக்கொள்வான். மேகநோய் வந்தவர்கள் ரகஸ்யம் என்ற சனியனுக்காளாகி, அதை வைத்தியர்களிடமும், பெற்றோரிடமும், நண்பர்களிடமும் ஆரம்பத்திலேயே தெரிவிக்காமல், நோய்முற்றி, உடலில் விஷமேறி ஆபத்தான நிலைமை ஏற்பட்டு, நோய் தானகவே வெளிக்கிளம்பி அம்பலப் படுத்தும்வரை பேசாதிருந்து, கடைசியில் அது தீராது தலைமுறை தலைமுறையாகத் தொத்திக்கொண்டு போவதை நாமறிவோம். ஆதலால் இத்தகைய நோய்கள் பகிரங்கமாகவும் சுலபமாகவும் சிகிச்சை செய்யப்படவேண்டிய முறைகள் கையாளப்படவேண்டியது அவசியம்.

பிள்ளை பெறுவதிலும் வெகுமிதமாக இருக்கவேண்டியது இன்பவாழ்விற்கு அவசியம். சில பெண்கள் பிரசவிக்கும்போது அனுபவிக்கும் வேதனை அதிகமாகும். ஒவ்வொரு பிரசவத்தின் போதும் அவரவர் இறந்து மறு ஜன்மம் எடுப்பதுபோ விருக்கிறது. இப்பேர்ப்பட்டவர்களும், மற்றும் பலஹீனமுள்ள தேகமுடையவர்களும் பிள்ளைபெருமல் இருக்கத்தக்க வைத்திய முறைகளைக் கைக்கொள்வது குடும்பத்தின் துன்பத்தைப்போக்கும். எந்த ஸ்திரீயும் தனது ஆயுட்காலத்தில் இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெருமலிருந்தால் உலகம் க்ஷேமத்தோடும், இன்பத்தோடும் வாழும் என்பதில் தடையில்லை. இவ்விதம் பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதால் நாட்டில் ஜனசங்கை குறைந்துவிடும் என்று யாரும் அஞ்சவேண்டியதில்லை. காட்டில் விதைக்கப்பட்ட செடி அடர்த்தியாய் இருந்தால், குடியானவன் சில செடிகளைப் பிடுங்கி எறிவதைக்காண்கிறோம். அதனுல் அவனுக்கு ஆதாயமே தவிர நஷ்டமில்லை. அப்படியே ஊக்கமும், உணர்வும், நல்ல தேகஅமைப்பும் இல்லாத நானூறுபிள்ளைகள் இருப்பதைவிட திடகாத்திரமுள்ள பத்துப்பிள்ளைகள் இருக்குமானுல் இன்பம் பெருகுமே தவிர துன்பமில்லை. மற்றும் நாட்டில் தற்போது சந்தானமின்றி அல்லற்படும் விதவைகளும் மணமுடித்து வாழ்வார்களானுல், கட்டுப்பாடுடைய பிரஜா உற்பத்தியால் ஜனசங்கை இப்போது இருப்பது போலவேதான் இருக்கும்.

பெண்கள் தங்கள் தேக வலிமை குன்றிருக்கும்பொருட்டு அவர்கள் குழந்தைகளுக்கு வருடக்கணக்காய்த் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தவேண்டும். குழந்தைகளுக்கு இரண்டு மூன்று ஆண்டுகட்குத் தாய்ப்பால் கொடுப்பதால் பெண்கள் தங்கள் தேக பலத்தை முற்றிலும் இழந்து ஆண்களைப்போல் திடகாத்திரமற்றவர்களாய்ப் போகிறார்கள். கடினமான வேலைக்கும், குதிரை சவாரிக்கும், அவர்கள் தேகம் உதவுவதில்லை. மற்றும் அவர்களுக்கு பலஹீனம் ஏற்பட்டு மனோதைரியம் குறைந்து, இழிவுக்கும் ஆண்களின் பழிச்சொல்லுக்கும் ஆளாகிறார்கள். பெண்கள் விடுதலை கோரும் இந்நாளில் இது அவசியம் கவனிக்கற்பாலது. சிறிது நாள் சென்றதும் ஆவின் பாலைக் கொடுத்துப் பழக்க முயல வேண்டும். ஆவின்பால் மிகுந்த சத்துள்ளது. பசுவின் பால் அதிகமாகவும், நல்லதாகவும் எல்லோருக்கும் கிடைக்கும்படியாகப் பண்ணைகள் ஊர்கள் தோறும் அமைக்கப்பட்டுப் பொதுப் பணத்தினல் நிர்வகிக்கப்பட வேண்டுவது அவசியம்.

பிள்ளைகள் ஓடவும், விளையாடவும் நல்ல காற்றோட்டமுள்ள மைதானங்களும், சாலைகளும், நந்தவனங்களும் ஊர்கள் தோறும் அமைக்கப்பெறல் வேண்டும். ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் கல்வி, கைத்தொழில், சிற்பம், சாஸ்திரம் ஆகியவற்றைத் தம் தம் பிரியத்துக்கும் மனோ எழுச்சிக்கும் ஏற்றவாறு பயின்று கொள்ளப் பொதுப்பணத்தில் பள்ளிகள் அமைக்கப்பெற்று அவர்கட்குப் போதிக்கப்படவேண்டும். இது கட்டாயமாகவும் இலவசமாகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்படவேண்டும். நல்ல திறமையும், ஊக்கமுமுள்ள குழந்தைகளைப் பொறுக்கியெடுத்து அயல் நாடுகளுக்கு அனுப்பிப் பற்பல விதமான கல்வி பயிற்றுவிக்கவேண்டும். பிள்ளைகள் கல்வி போதனைக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் யாதொருவிதமான தொடர்பும் இருத்தல் கூடாது. நாட்டிலுள்ள செல்வங்களும், நிலமும், இதர ஸ்தாபனங்களும் எப்படி நாட்டுக்குப் பொதுவாக அமைக்கப்பட்டு விடவேண்டுமோ, அப்படியே அந்நாட்டில் பிறக்கும் பிள்ளைகளும் அந்நாட்டின் பொதுச் சொத்தாகவே பாவிக்கப்பட்டு அந்நாட்டின் நலனுக்காகப் பல துறைகளிலும் பயிற்றுவிக்கப்படவேண்டும். அங்க ஈனர்களும், வியாதியஸ்தர்களும், தெருத் திண்ணைகளிலும்,

சாலையோரங்களிலும் அலைந்து திரியாமல் அவர்கள் ஒரு தனி யிடத்தில் வைத்துப் போஷிக்கப்படவேண்டும்.

கால் நடைகள் மேய்வதற்கு ஏராளமான காவி நிலங்கள் ஒதுக்கப்படவேண்டும்; நாட்டிற்குத் தேவையான தவச தான்யங் கள் ஏராளமாகப் பயிர் செய்யப்படவேண்டும். எஞ்சின பூமி களில் ஏற்றுமதிக்கான பொருள்கள் விளைவு செய்யப்படவேண்டு மேயொழிய, பணப்பயிர்களை (புகையிலை, பருத்தி, நிலக்கடலை முதலியன) ஏராளமாகப் பயிர் செய்து வெளிநாடுகளுக்கு அனுப் பிவிட்டு, நாட்டு மக்கள் தானியங்களுக்காக அலைய அவசியமில்லா மல் தடுக்கவேண்டும். நமது நாட்டுக்குத் தேவையான சாமான் களை நமது நாட்டு மக்கள் முயற்சியாலும் உழைப்பாலும் நமது நாட்டிலேயே செய்விக்க வேண்டும். பிற்போக்கான எண்ணமும், கொள்கையும் கொள்ளாமல் நவீன இயந்திரங்களை நாட்டில் அமை த்து மனிதரின் தேக உழைப்பைக் கூடுமான அளவு குறைக்க வேண்டும். இயந்திரங்களை நமது நாட்டிலேயே செய்விக்க முயற்சி கள் செய்யவேண்டும். அயல் நாட்டவரின் கூட்டுறவையும், நட் பையும் பேணி வாழும் ஆட்சி அமைப்பை ஏற்படுத்தவேண்டும். சுயேச்சை என்பது பிறருக்குக் கட்டுப்பட்டு அடங்கிக்கிடக்கும் அடிமை வாழ்வைத் தவிர்ப்பதே யன்றி பிற நாட்டாரின் கூட்டு றவையும், நட்பையும் இழந்து தன்னந்தனியே தவிப்பது என்ப தல்ல.

நிலத்தையும், செல்வத்தையும் கைத்தொழிலையும், தேச நிர் வாகத்தையும் பொதுவாக்கிய பின்னர் நாட்டில் எத்தகைய குழப் பமும், பிளவும் ஏற்படக் காரணமில்லை. இந்து முஸ்லீம் என்ற பிணக்குகளும், பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் என்ற அவநம்பிக்கைகளும், பிராமணர் பிராமணரல்லாதார் என்ற பூசல்களும் இல்லாதொழிவதோடு, அந்நாளில் எல்லா மதங்களும் பிரிவுகளும் சாதிகளும் ஐக்கியமாகி, பொல்லாதவைகள் புறக்க ணிக்கப்பட்டு, நல்லவைகள் இணைக்கப்பட்டு, இந்திய மதம் இந்திய சாதி இந்திய சம்பிரதாயம் என்ற கொள்கை ததும்பி அது உலகியலோடு ஒன்றிப் பின்னர் மனிதமதம் மனித சாதி மனித சம்பிரதாயம் என்று பெருகிவிடும் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்நாளில் இந்நாட்டு அரசர்களெல்லாம்

ஜனத் தலைவர்களாக மாறி இந்நாட்டுக்குச் சிறந்த ஊழியம் செய்து பெரும் புகழும் பூண்டு வாழ்வார்கள். அது அவர்கட்கு ராஜ சம்பத்தைக் காட்டிலும் அதிக மகிழ்வையும் விடுதலையையும் அளிக்கும் என்பது திண்ணம்.

---

# கோவில் தேவையா?

"ஏயஸ்"

பெரும் பணஞ் செலவுசெய்து, மக்களுக்குக் கடவுள் பக்தியை உண்டுபண்ணும் நோக்கத்துடன் பண்டைக்காலத்தவர் கணக்கற்ற கோவில்களைக் கட்டியிருக்கிறார்கள். புதிய கோவில்கள் தேவையில்லை. அவற்றிற்குச் செலவிடப்படும் பொருளெல்லாம் வீண் செலவினத்தில் சேர்க்கப்படத்தக்கதாகுமென்று சொன்ன போது, "கோவில் கட்டுவதால் பயனுண்டு. எத்தனையோ ஏழைத் தொழிலாளர் பிழைக்க வழியிருக்கின்றது. ஒரு கோவிலைக்கட்டி முடிக்கப் பல ஆண்டுகள் செல்லும். இந்த நாட்டில் கோவில் கட்டுந் தொழில் ஊர் தோறும் நடந்துகொண்டிருக்கின்றது. இதனால் ஒரு சில தொழிலாளராவது கஷ்டமின்றி வாணாளைக்கழிக்க முடிகின்றது. அவர்களுக்கு இதைவிட்டால் வேறு வேலை கிடைப்பது அரிது; ஆதலால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தைக் குறைக்க இது ஒரு வழியாக நிற்கின்றது. எனவே, கோவில்கட்டுவது மதபக்தியைப்பற்றிய மட்டில் எவ்வாறு கருதப்பட்டாலும், தொழிலாளரை ஆதரிப்பது என்ற முறையில் ஒரு நல்ல தருமமாகும்" என்று ஒரு அன்பர் கூறினார். இதை வேறுசிலரும் ஒப்புக்கொள்ளலாம். காதுக்கு மிக இனிமையாகத் தானிருக்கிறது. ஆனால் சற்று ஆராய்ந்து பார்த்தல் அவசியம்.

எந்தவிஷயத்திலும் நன்மையுந்தீமையும் கலந்திருக்கலாம். ஆனால் நன்மை அதிகமாக இருப்பதையே அறிஞர் மேற்கொள்வர். நன்மை தீமையைச் சீர்தூக்கிப் பார்ப்பதே பகுத்தறிவின் வேலை. நன்மையான காரியங்களைச் செய்வதே அறிவுடைமைக்குப் பொருத்தமாகும்.

கடவுள் பக்தியைப் பாமர ஜனங்களிடையே பரப்புவதற்கும், வளர்ப்பதற்கும் கோவில் அவசியமென்று கூறப்படுகிறது. இன்று கோவில் பக்தியை வளர்க்கின்றதா என்று பார்த்தால் இல்லையென்றே சொல்லவேண்டும். ஆனால், மூடத்தனத்தையும் வேற்றுமையுணர்ச்சியையும், வேறுபல தீமைகளையுமே வளர்க்கின்றது. பண்டைக்காலத்தில் விடாது கோவிற்சாமியைக் கும்பிட்டவரும், திருப்பணி இயற்றியவரும் முத்தியடைந்ததாகக் கூறப்படுகிறது அன்று ஒரு வேளை நடந்திருக்கலாம் — இருக்குமையாஇருக்கும், இல்லாமலா சொல்வார்கள் என்ற கொள்கைப்படி வைத்துக்கொண்டாலும், இன்று எத்தனையோ ஆயிரம்பேர் தங்கள் தங்கள் சக்திக்குத்தக்கபடி பொருட்செலவு செய்து சாமியைப் பூஜித்து வருவதைக் காண்கின்றோம். வருடந்தோறும் நடைபெறும் உற்சவங்களைத் தெரிசிக்க ஊர்ஊராகச் செல்லும் மக்களுக்குக் கணக்கில்லை; மாதந்தோறும் வரும் விசேட தினங்களில் சாமி தரிசனஞ் செய்யும் ஜனங்கள் தொகையை அளவிடமுடியாது. மக்கள் உய்வான் வேண்டி எம்பிரான் பற்பல அவதாரங்களெடுத்து உலகில் தோன்றி, நிகழ்த்திய திருவிளையாடல்களையும், அத்திருவிளையாடல்களுக்கு உடந்தையாகவும், காரணஸ்தராகவுமிருந்து முத்திப்பேற்றை அடைந்ததாகக் கூறப்படும் அடியார்கள் சரித்திரங்களையும், திருவிழாக்கள் மூலமும், புராணப் பிரசங்கங்கள் மூலமும் கண்டும் கேட்டும் பக்திக் கடலில் திளைக்கும் மக்கள் கணக்கிலடங்கார். ஆலயந் தொழுவது சாலவும் நன்றெனக்கொண்டு தினமும் வீட்டருகேயிருக்கும் கோவிலுக்குச்சென்று திருவலகிடுதல், திருவலம் வருதல், திருவடி தொழுதல், திருக்கூத்தாடுதல், திருப்புகழ் பாடுதல் முதலிய திருத்தொண்டுகளை இயற்றி அல்லும் பகலும் ஈசனிடத்தே தம் மனத்தை ஒருமைப்படுத்தி நிற்கும் பக்தர்கள் தொகை எந்த ஜனகணிதத்துக்கும் அடங்காததாகும். இவ்வாறு கோடிக்கணக்கான மக்கள் ஈசன் அருள் விழைந்து முன்னோர் வகுத்தவழி நின்று உழைப்பினும் எவரேனும் முத்தியடைந்ததாகவோ அன்றி எவருக்கும் ஈசன் திருக்காட்சி கொடுத்ததாகவோ நமது அறிவுக்கு எட்டிய மட்டில் புலப்படவில்லை. அந்தக் காலத்தில் ஈசன் வெகு எளிதாக மக்களுக்குக் காட்சி கொடுத்தான்

என்று புராணங்கள் கூறுகின்றன. இந்தக் காலத்தில் அவ்வளவு எளிதாகத் தோன்றுவிட்டாலும் ஒரு மாதிரியாகத் தோன்றினாலும் போதும்! ஏன்? அக்காலத்து மனிதர் கண்டுபிடிக்காத தூரதிருஷ்டிக் கண்ணாடி, பூதக்கண்ணாடி, ஆகாயக் கப்பல், எக்ஸ்ரே, ரேடியோ, ஒலிபரப்புங் கருவி முதலிய பல நூதன சாதனங்கள் இக்காலத்து மனிதர்வசமிருக்கின்றன. ஒரு மாதிரியாகத் தோன்றினாலும் இவற்றின் மூலம் எளிதிற் கண்டுகொள்வர். ஆனால் இவ்வளவு சாதனங்கள் இருப்பினும் யாருக்கும் கடவுள் காட்சி கொடுத்ததாகவோ, முத்தியளித்ததாகவோ தெரியவில்லை. அப்படியே கடவுள் வந்து 'உனக்கு முத்தி தருகிறேன்' என்று சொன்னாலும் எத்தனைபேர் சம்மதிப்பார்களோ தெரியாது. பண்டைக் காலத்து மனிதரைப்போல எதற்கும் ஆமாப்போடும் ஆசாமிகள் இப்பொழுது அதிகமாக இல்லை. பூசணிக்காய் திருடக் கூரை மேலேறிய திருடன் தன் உடலில் பூசணிக்காய்ச் சாம்பல் ஒட்டியிருந்ததைத் துணைக்கொண்டு நான்தான் கடவுள் என்று சொல்வதானால் இக்காலத்தில் உதைப்பார்களேயன்றிக் கையெடுத்துக் கும்பிட்டு அவன் காலில் விழமாட்டார்கள். அந்தக் காலம் மலையேறிவிட்டது. மக்களை எளிதில் ஏமாற்றிவிடமுடியாது. மக்கள் விழித்துக்கொண்டனர். விழித்த மனிதர் இன்னும் இருட்டுக் குகையிலேயே அடைக்கப்பட்டிருப்பதால் வெளியுலகம் தெரியவில்லை. இருட்டைவிட்டு அவர்கள் வெளியே வராது கோவில் தடுத்து நிற்கின்றது என்று கூறினும் பொருந்தும்.

கடவுள் பக்தியை ஊட்ட சிலை அவசியமென்றால் சிலை மட்டும் போதும். இல்லை; அது பந்தோபஸ்தாகவும் இருக்கவேண்டுமென்றால், அதைச்சுற்றி நல்ல சுகாதார முறையில் சுவரெழுப்பிக் கட்டிடம் கட்டிக்கொள்ளலாம். கோவில் தேவையென்று நினைக்கிறவர்களுக்கு வேண்டியது இதுவே. எப்பொழுது வேண்டுமானாலும் சென்று, ஈசனை மனமார வணங்கிவிட்டுச் செல்லலாம். யாருக்குந் தடையில்லை; கட்டுப்பாடில்லை. ஆனால், கற்கோவில் கட்டவேண்டும்; அதுவும் பல சிற்ப வேலைகள் அமைந்திருக்க வேண்டும்; கோபுரம் வேண்டும், தங்கச்சாமிவேண்டும், திருவிழா வேண்டும் என்று வரும்போதுதான் வீண் செலவும், ஆடம்பர வாழ்க்கையும் ஏற்படுகின்றன.

ஏமாறுகிறவர்களை எளிதில் ஏமாற்றிப் பிடுங்கித் தின்னவே இம்மூதிரிக் கற்பனைகள் செய்யப்பட் டிருக்கின்றன வென்பது சிறிது ஆராய்ச்சி செய்பவர்க்கும் தெள்ளிதிற்புலனுகும். மனிதத் தன்மைக்கு மேலான தெய்வத்தன்மை கற்பிக்கப்படும் சாமி, மனி தத்தன்மைக்குங் கீழான மிருகத்தன்மைக்கொத்த செயல்கள் செய் வதாகக் குறிப்பிடப்படுகிறது இவற்றையாதாரமாக வைத்து சாமிக்குப் பெண்டுபிள்ளைகள், தாசி, வைப்பாட்டிகள், கல்யாணம், தாலியறுத்தல், குடும்பச்சண்டை, தூதுபோதல் முதலியனவெல் லாம் கற்பிக்கப்பட்டுத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இவை யெல்லாம் கடவுள்செயலென நம்பும் மக்கள் எவ்வாறு ஒழுக்கத்தில் சிறந்து விளங்கமுடியும்? தாசி வீடு செல்லும் மனிதனையும், பிறன் மனை விழைபவனையும் உலகம் இழிந்தவனென எள்ளுகின்றது; ஆனால் அதே செய்கைகளைச் செய்வதாகக்கருதப்படும் கடவுளை வணங்குகின்றது. கடவுள் தத்துவத்தை வகுத்தவர் கருத்து அங்ஙனமாயின், ஒழுக்கமுடைய மனிதர் கடவுளைவிட மேலான வர் என்றே கருதவேண்டும். கடவுளைவிட மேலான மனிதர் கட வுளை வணங்கவேண்டியதில்லையன்றோ? அவர்கள் கோவிலுக்குஞ் செல்லவேண்டியதில்லை. அன்று, கடவுள் இவ்வாறு இழிசெயல் களைச் செய்ததாகக் கூறுவதோ அன்றி நடிப்பதோ உண்மைக்கு மாறானதாகும்; இது சுத்தப்புரட்டு என்றால் தற்காலமிருக்கும் கோவில்களும், அங்கு கடவுள்பேரால் நடக்கும் செய்கைகளும் தேவையற்றவையென்றுதான் சொல்லவேண்டும். இவ்விரண்டு வழி யையும் விட்டு, இவற்றிற்குத் தத்துவார்த்தம் கற்பித்துத் தப்பிக் கொள்ள முயல்கின்றார் சிலர். தத்துவார்த்தத்தை யாரும் கவனிப்ப தில்லை. மக்கள் மனத்தில் அவை என்ன உணர்ச்சியை உண்டு பண்ணுகின்றனவென்பதே கவனிக்கற்பாலது. தீய உணர்ச்சியை உண்டுபண்ண ஏதுவாயிருக்குமானால், அது எத்தகைய உயரிய கொள்கையைத் தத்துவமாகத் தன்னகத்தே தாங்கிநின்றாலும் முற் றிலும் வெறுக்கத்தக்கதேயாகும். ஆகவே கோவிலிற் சென்று வணங்குவதால் ஒழுக்கம் சிறக்கும், பக்தி பரவும், முக்தி சித்திக் கும் என்பனவெல்லாம் முழுப்புரட்டாகும். நிற்க,

வருடந்தோறும் லட்சக்கணக்கான பொருள் கடவுள் பேரால் கோவில்களில் வீண் விரயஞ்செய்யப்படுகின்றது. கடவுள் விருப்பு

வெறுப்பற்றவர் என்று கூறப்படுகின்றது. விருப்பு வெறுப்பற்ற கடவுளுக்கு உணவு தேவையா? திருவிழாத் தேவையா? பெண்டு பிள்ளைகள் தேவையா? தினமும் ஆறுகாலம் பற்பல பதார்த்தங்கள் படைக்கப்படுகின்றன. கடவுளுக்கு இது தேவையா என்று யாரும் சிந்திப்பதில்லை. கடவுள் யாரிடமும் இது தேவையென்று கூறினதாகவுந் தெரியவில்லை. ஒரு மனிதனுக்குத் தேவையான உணவைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகக் கடவுளுக்குப் படைக்கப்படுகின்றது. உண்மையாகக் கடவுள் அதைச் சாப்பிடுவதானால் அவருக்குப் பற்பல நோய்கள் ஏற்பட்டு எந்தக்காலத்திலோ தமது சொந்த ஊருக்குப் போயிருப்பார். ஆனால் அவர் தின்பதில்லை. அதுதான் இரகசியம். தின்னாத கடவுளுக்கு இது எதற்கு? ஒரு சிலர் தமது வயிற்றைப் பிறர் உழைப்பின் மூலம் நிரப்பிக்கொள்ளக் கைக்கொள்ளப்பட்ட குறுகிய வழிதான் இது. சும்மா கேட்டால் கொடுக்கமாட்டார்கள்—சாமியின் பேரைச் சொன்னால் கேட்டதெல்லாம் தானாக வந்துவிழுகிறது—அது மட்டுமா? கரும்பு தின்னக் கூலி கொடுப்பதுபோல பதார்த்தங்களையுங் கொடுத்து அவற்றைச் சாப்பிட 'காணிக்கை' யென்ற கூலியையுங் கொடுக்கின்றனர். சிலந்திப்பூச்சி வலையில் எவ்வாறு ஜந்துக்கள் தாமாகவே வந்து விழுகின்றனவோ அதே மாதிரி பிறர் கட்டாயமின்றி உண்மை உணராத மக்கள், மூட நம்பிக்கையின் பேரில், பரம்பரை பழக்கத்தின்பேரில் இவ்வாறு தமது பொருளைக்கொண்டு கொட்டுகின்றனர். இதுவும் போதாதென்று, சுங்கச்சாவடி மாதிரி கோவிலில் வரி வசூலிக்கின்றனர். இந்தச் சாமியைப் பார்க்க இவ்வளவு கட்டணம் என்று ஒரு தொகை வசூலிக்கப்படுகின்றது. சில கோவில்களில் அபிஷேக ஆராதனைகள் செய்யவேண்டுமென்றால், சில குறிப்பிடப்பட்ட பன்னீர்க்குப்பிகளைத்தான் வாங்கவேண்டும். வேறு தினுசுகளை வாங்கினால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் குறிப்பிடும் தினுசுகட்கு அவர்கள் வைத்ததே விலை. இவ்வாறு பற்பல முறையில், மக்கள் ஆராய்ந்து பார்ப்பதற்கு இடங்கொடுக்காமலே மதத்தின்பேராலும், சாமியின்பேராலும் பணம் பிடுங்கப்படுதற்குக் கோவில் ஏதுவாயிருக்கின்றது.

மக்களை ஏமாற்றிப் பிழைக்க முனைந்தவர் வேற்றுமைப்படுத்துங் கொள்கையைக் கைக்கொண்டது வியப்பன்று. பற்பல பிரி

வினராகப் பிரித்து மேல்கீழ்வரிசைப்படி கோவிலிலும் மரியாதை வகுத்தனர். சாமியின் சமீபம் நிற்கத்தக்கவர் பூசுரர்கள்தான். அதற்கப்பால் வைசியர், முதலியோர் நிற்கலாம். கொடிமரத்தை யொட்டி நிற்க ஒருசிலருக்குத்தான் உரிமையுண்டு; வெளிப்பிரகாரத்தில் இன்னார்தான் நிற்கலாம். எதிலும் சேராத பஞ்சமர் கோவிலைச்சுற்றியுள்ள வீதியின் அருகில்கூட வரக்கூடாதென்றெல்லாம் பாகுபடுத்தி, இவற்றிற்கேற்பப் புராணங்களும் வகுத்தனர். இன்றளவும் இவ்விதமரியாதைகளைப்பற்றிய வழக்குகள் நடைபெற்று வருவதைக்காணலாம். இந்தப்பிரிவினையால் ஒற்றுமை கெட்டதுமின்றி மக்களுக்குள் வேற்றுமையும், சண்டை சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

கோவில்களிலுள்ள தங்கஸ்தூபி, அம்மன் வைரத்தாலி, தங்கப்பீடம் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் அடிக்கடி களவு போவதைப்பற்றிக் கேட்கின்றோம். களவுபோகப் போகப் புதிது புதிதாகச் செய்துவைக்கப்படுகின்றன. ஏன் களவுபோகின்றன? கடவுளுக்குக் கண்ணில்லையா? அவர் ஏன் சும்மா இருக்கிறார்? அன்றி அவருக்கு இவற்றில் விருப்பமில்லையா? என்பதைப்பற்றி யாருஞ் சிந்திப்பதில்லை. திருவிழாக் கூட்டங்களில் நடக்குங் களவுகட்கும், பிற அநியாயங்கட்கும் கணக்கில்லை. கோயிலால் ஏற்படும் தீமைகள் கணக்கிலடங்கா. இருந்தாலும் கடவுள் பக்தியும், மதக் கட்டுப்பாடும், மூடக்கொள்கையும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பழக்க வழக்கங்களும் மக்கள் மனத்தைப் பிடித்து நிற்பதால் உண்மை புலப்பட வகையில்லாதிருக்கின்றது.

கோவில்களின் சுகாதாரக் கேட்டைக் கவனிக்கும்போது மக்களுடைய நல்வாழ்வை விரும்பும் எவனும் கண்டிக்காதிருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் அசுத்தமும் இருட்டும் நிறைந்திருக்கின்றன. கற்சிலைமீது விடப்படும் நெய், பால், பழம் முதலிய பல்வகை அபிஷேகப் பதார்த்தங்களெல்லாம் ஒருங்கு திரண்டு ஒழுகிவிழும் தீர்த்தத்தொட்டியில் தேங்கி நிற்கும் அழுக்கு நீரை ஜனங்கள் பக்தியுடன் மொண்டு குடிக்கும் காட்சி மிகப் பரிதாபகரமானது. கோவில்களில் திருவிழா நடக்கும்போது ஏராளமான மக்கள் கூடுவதாலும், அவ்வளவு மக்களுக்கும் போதிய சுகாதார வசதிகள் செய்வது இயலாத காரியமாதலாலும், விஷபேதி முத

விய தொத்து நோய்கள் பரவத் திருவிழாக்கள் காரணமாயிருப்பதைக் காண்கிறோம். குளிக்கப்போய் சேற்றைப் பூசுவதுபோல, பக்தி பக்தியென்று வாழ்வுக்கு ஊறுவிளைப்பது நலமாவென்று சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும்.

ஆகவே, இத்தகைய தீமைகளுக்கு உறைவிடமாகவும் மக்கள் மூடத்தனத்தில் மேலும் மேலும் ஆழ்ந்து போவதற்கு முக்கிய துணைக்கருவியாகவும் இருக்கும் கோவிலை மீண்டும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்குவதால் நன்மை விளையுமா, தீமை விளையுமா என்று எளிதில் முடிவுகட்டிக்கொள்ளலாம். ஒரு சிலருக்குத் தற்கால சாந்தியாக வேலை கிடைக்கின்றது என்றால், எத்தனையோ ஆயிரம் மக்களை வேலையில்லாது திண்டாடச் செய்வதும், எத்தனையோ லட்சம் மக்களை அறிவிழக்கச் செய்வதும், சோம்பேறிகளாக்குவதும், பகற்கொள்ளையடிக்கச் செய்வதும் கோவிலாகவே இன்று விளங்குகின்றது.

கோவிற்குச் செலவிடும்பொருளை வேறு நல்ல துறையிற் செலவிடின் அத்தனை மக்களுக்கும் வேலை கிடைப்பதோடன்றி, அவற்றை உபயோகிக்கும் மக்களுக்கும் பெரும் நன்மை கிடைக்கும். தற்காலம் மக்களுக்கு மிகமிகத் தேவையாயிருப்பது அறிவுக் கோவில்தான். பழங்கோயிலாகிய இருட்டுக்குகையில் கண் விழித்துப்பார்க்கும் மக்கள் வெளியேறி, வெளிச்சம் பெறவேண்டுமானால், அங்கு அறிவுச்சுடர் கொளுத்தவேண்டும். அறியாமையினின்றும் மக்களை அப்புறப்படுத்தினால், அவர்கள் தாமாகவே பிறதீமைகளினின்றும் தங்களைக்காப்பாற்றிக் கொள்ளுஞ் சக்தியைப்பெறுவர் என்பதுறுதி. இதனாலேயே பாரதியாரும், தேங்கனியினுஞ் சோலைகளையும், குளிர்ச்சி பொருந்திய நீர்கொடுக்கும் சுனைகளையும், ஆயிரம் அன்னசத்திரங்களையும், பதினாயிரம் கோவில்களையும் ஏற்படுத்துவதைவிட ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் பெரும்புண்ணியமாகும் என்று கூறியுள்ளார். கல்விக்கோவிலே மக்களை என்றுங் காக்கவல்லது. அக்கோவிலையே மக்கள் போற்ற வேண்டும்; அறிவைப் போற்றாதவர் கல்லினுங் கடையராவர். அறிவை வளர்ப்போர் உலகை வளர்ப்போராவர்.

---

# ஒன்றுக்கொன்று முரண்.

## புராணப் புரட்டு.

புராணமெல்லாம் சத்தியம், கடவுள் வாக்கு என்று கூறுவோர்க்கும், அதனை நம்பிக் கூச்சலிடுவோர்க்கும் இங்கே சில குறிப்பிடுகிறேன். மதுரைத் திருவிளையாடற் புராணத்துக்கும், திருவண்ணாமலை அருணாசல புராணத்துக்கும், திருவாரூர்ப் புராணத்துக்குமுள்ள போராட்டத்தைக் கீழே காண்க. சைவர் வைணவருடனும், வைணவர் சைவருடனும் சண்டையிட்டு ஒன்றுக்கொன்று தாழ்வு உயர்வு கற்பித்து எழுதிய புராணங்கள் பல. இங்கே காட்டப்படும் மூன்றும் சைவர்களுடைய புராணங்களேயாகும். இதற்குள் இருக்கும் மாறுபாட்டைக் கவனியுங்கள்.

அருணாசல புராணத்தில் மற்றத் தலங்களை யெல்லாம் விட திருவண்ணாமலையே சிறப்புடையது என்று கூறி அதற்கு உதாரணம் பின்வருமாறு காட்டப்பட்டிருக்கிறது:

திருநகரச் சருக்கம், பாட்டு 26.

சத்தபுரி யேமுத லெடுத்ததலம் யாவுமொரு
தட்டுமொரு தட்டதினிலே
அத்தலமு மிட்டெதிர் நிறுக்க வவைகட்கதிக
மானதொளி ரந்நகரம்
முத்திநக ரென்றுபெயர் ஞானநக ரென்றுபெயர்
முந்தியதலேச் சுரமெனும்
சுத்தநக ரென்றுபெயர் தென்கைலை யென்றுபெயர்
சோணகிரி யென்றுபெயரே.

(இ-ள்) சத்தபுரி என்கின்ற அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை முதலிய எல்லாத் தலங்களையும் ஒரு தட்டில் போட்டு மற்றொரு தட்டில் திருவண்ணாமலையை மட்டும் போட்டு நிறுத்தநில் திருவண்ணாமலைத் தட்டு மட்டும் கனத்து விளங்கியது............

இது சரிதானா என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்க வேண்டும். இங்குள்ள எல்லாத் தலங்களிலும் மேற்கண்ட ஏழுதலங்களும் சிறந்தனவென்று வேறு புராணக்காரர் கூறுகிறார்,

அப்படிப்பட்ட ஏழுதலங்களிலும், மற்ற எல்லாத் தலங்களிலும் திருவண்ணுமலை சிறந்ததென்று சொல்லவேண்டுமென்ற அவசியம் திருவண்ணுமலை டோல்கேட்டிலிருக்கும் ஐயர்மார் முதலியோர்க் கேற்பட்டது. பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்குச் சரியான வழி தராசில் நிறுத்துக் காட்டுவதன்றி வேறென்ன சிறந்ததாக இருக்க முடியும்? எனவே தராசு நிறுவையாக நிறுத்துப் பார்த்ததில் உலகதலமெல்லாம் ஒரு தட்டில் போட்டுப் பார்த்ததாகவும், ஆனால் அவை முற்றும் திருவண்ணுமலையின் எடைக்கு நிற்கவில்லையென் றும் அண்டப்புளுகு புளுகப்பட்டிருக்கிறது. பூமிக்குத் தென் ஞலி ராமன் மைய முளை அடித்த கதைக்கும் இதற்கும் ஏதாவது வித்தியாசம் காணமுடியுமா என்பதே என் கேள்வி. திருவண்ணு மலை ஐயர்மார் தங்கள் கோவிலை நோக்கி ஜனங்கள் ஓடி வரும்படி செய்வதற்கு ஏற்படுத்திய சூழ்ச்சியை மதுரைக்காரரும் கைக் கொண்டிருக்கின்றனர். திருவிளையாடற் புராணத்தில்,

தலவிசேடம், பாட்டு 20.

கைத்தலநான் கிரண்டுடைய மலர்க்கடவுள்
மேலொருநாள் கைலை யாதி
எத்தலமும் ஒரு துலையிட்டு இத்தலமு மொருதுலையிட்
டிரண்டுந் தூக்கி
உத்தமமாந் திருவால வாய்மிகவுங் கனத்ததுகண்டு
உலகின் மேலா
வைத்ததலம் இதுவென்றுல் இதன் பெருமை
யாவரே வழுத்தற் பாலார்.

(இ-ள்) எட்டுக் கைகளையுடைய பிரமாவானவர் முன்னெரு நாள் கைலாயம் முதலிய எல்லாத் தலங்களையும் ஒரு தட்டில் வைத்து, மதுரையை மற்றொரு தட்டில் வைத்து நிறுத்தபோது மதுரையானது மிகவும் கனத்ததுகண்டு உலகத்திலே மேலான தாக வைத்த தலம் இது என்று சொன்னுல் இதன் பெருமையை யாரால் சொல்ல முடியும்?

இந்தப் புராணக்காரர் ஒரு அடி மேலே போகிறுர். அயோ த்தி முதலிய பூலோகத்திலுள்ள தலங்களெல்லாவற்றையும் சேர் த்த எடையைவிடத் திருவண்ணுமலை மேலென்றுல், இவர் கைலா சத்தையும் சேர்த்துப்போட்ட பெரிய எடையில் கனத்தது மது

ரைதான் என்று ஒரு கொளுத்துக் கொளுத்தியிருக்கிறார். அருணாசல புராணத்தில் யார் நிறுத்ததென்பது சொல்லப்படவில்லை. திருவிளையாடலில் பிரமா தராசுபிடித்துத் தூக்கி நிறுத்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. கைலாசத்திலிருக்கிற பார்வதி பரமசிவன் நந்தியெம்பெருமான் எல்லாரையும் சேர்த்து எடை போட்டுத் தூக்கியிருக்கவேண்டும். திருவண்ணுமலையின் உச்சியைக் காண அன்னபக்ஷியாகி அலைந்து தவித்துக் கடைசிவரை காணமுடியாமற் போய்விட்டதென்று அவ்வூர்ப் புராணக்காரர் சொல்கிறார். அந்தத் திருவண்ணுமலையையும் சேர்த்துதான் இந்த சமயத்தில் பிரமா எடைபோட்டாரா? அந்த மலையைத் தராசுக்குள் திணித்து அதற்குமேல் தன் கையால் தராசின் மேற்பாகத்தைத் தூக்கி நிறுத்திருக்கிறரென்று மதுரைக்காரர் சொல்கிறார். சரிதானு? நிற்க, திருவாரூர்த் தலபுராணக்காரர்

தலமகிமைச் சருக்கம், பாட்டு 7.

தரையிலூ ரனைத்தும் ஒரு பெருந்தட்டில்
தந்தொரு தட்டினில் கமலா
புரியெனும் பதிதந்து அரனரு ளதனல்
நிறுப்பவப் பொன்னகர் கனத்தில்
ஒருபதி னறு பங்கில் ஒன்றேனும்
உலகிலூ ரனைத்தும் நின்றில அப்
பெருமை கண்டு அலரோன் க்ஷேத்திரவரப்பேர்
பேசினன் பெருந் தவ முனிவீர்.

(இ-ள்) பூமியிலுள்ள எல்லா ஊர்களையும் ஒரு பெரிய தட்டில் போட்டு கமலாபுரியென்று சொல்லப்படுகிற தலத்தை மற்றொரு தட்டில் வைத்து சிவபெருமானுடைய திருவருளினலே நிறுக்கும்போது, அந்த அழகிய திருவாரூரின் கனத்தில் பதினறில் ஒரு பங்கு அளவுகூட மற்ற எல்லா ஊரும் நிறைந்த தட்டு நிற்கவில்லை. அந்தப் பெருமையை நேரில் கண்டு இந்த நகரம் சிறந்ததென்று முடிவு செய்தனர்.

திருவாரூர் புராணக்காரர் கொஞ்சம் பயந்திருக்கிறார். கைலாசத்தையும் சேர்த்துப் போட்டு நிறுத்ததாகச்சொல்ல அவர் மனம் சம்மதிக்கவில்லை. ஆனல் மற்ற இரண்டு புராணங்களை விட இரண்டடி மேலே பாய்ந்திருப்பது கவனிக்கத்தக்கது. திருவண்ணு

மலைப் புராணத்தில் சப்தபுரி முதலான தலங்கள் ஒரு தட்டில் போடப்பட்டதாகச் சொல்லப்பட்டது. மதுரைக்காரர் கைலாசத்தையும் சேர்த்து எல்லாத் தலங்களையும் ஒரு தட்டில் போட்டதாகச் சொன்னார். திருவாரூர்க்காரர் பூமியிலுள்ள எல்லா ஊர்களையும் ஒன்று விடாமல் ஒரு பெரிய தட்டில் போட்டதாகப் புராணமெழுதியிருக்கிறார். மற்ற இரண்டு புராணத்திலும் தங்கள் ஊர் கனமாக இருந்ததென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். திருவாரூர்க் காரரோ பூலோகத்திலுள்ள எல்லா ஊரும் சேர்ந்து திருவாரூர் எடையில் மாகாணிப் பங்குகூட இல்லையென்று ஒரே தட்டாகத் தட்டிவிட்டார். இந்த மூன்று பேர்வழிகளுடைய கூற்றுக்கும் ஆதாரம் என்ன வென்பது கவனிக்கத்தக்கது. எடை போட்ட விஷயத்தில் திருவண்ணாமலையை நிறுக்கும்போது எதிர்த்தட்டில் மதுரை, திருவாரூர் எல்லாம் சேர்ந்துதானிருக்கின்றன. மதுரையை நிறுக்கும்போது திருவண்ணாமலை, திருவாரூர் எல்லாம் எதிர்த்தட்டில் இருந்திருக்கின்றன. அப்படியே திருவாரூரை எடைபோடும்போது மதுரை, திருவண்ணாமலை முதலிய தலங்கள் எதிர்த்தட்டில் இருந்திருக்கின்றன. எடை எப்படி நயங்கண்டதென்பது தெரியவேண்டும். இதற்கு புராணமெல்லாம் சத்தியம்; கடவுள் வாக்கு; அவற்றில் பொய்யே கிடையாதென்று சொல்லுகிற சிரோன்மணிகள் பதில் கூறுவார்களாக. இந்த மூன்று தலங்களுள் எது ஜாஸ்தி எடையுள்ளதென்பதை யாவது இப்போது சொல்ல முடியுமா? இந்த மூன்று புராணக்காரர்களும் கேட்க ஆளில்லை யென்ற ஒரு காரணத்தினால்தானே இவ்வளவு பெரும் புளுகுகளைப் புளுக முன்வந்திருக்கின்றனர். இவை என்னுடைய கட்டுமானமல்ல. மூன்றுபுராணங்களும் அச்சிட்டுக்கடையில் விற்கப்படுகின்றன. யார் வேண்டுமானாலும் வாங்கிப் பார்க்கலாம். மூன்றில் எந்த எடை சரியான எடை என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். மூன்றும் சரியாக இருக்க முடியாதென்பது மட்டும் நிச்சயம். அல்லவா?

இனி மற்ற தலங்களுக்கும் திருவண்ணாமலைத் தலத்துக்கும் விவரமாக உள்ள வித்தியாசங்களைப் பின்வரும் பாட்டுக்களில் கூறப்படுகிறது.

திருநகரச் சருக்கம் பாட்டு 45.

தில்லையைக் காணக் காசியி லிறக்கச்
சிறக்கும் ஆரூர்தனில் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலாம் முக்தியென் றுரைத்தீர்
ஒல்லையில் நாலு தலங்களும் தம்மில்
ஒக்குமென் றுரைத்திடா தடிகேள்
அல்லிசூழ் அருணை அதிகமென் றுரைத்த
தருளென அருள் செய்வா னவனும்.

(இ-ள்) சிதம்பரத்தைத் தரிசிப்பதாலும், காசியில் இறப்பதாலும், திருவாரூரில் பிறப்பதாலும், திருவண்ணமலையை நினைப்பதாலும் முத்தி கிடைக்குமென்று அருளிச் செய்தீர். இந்நான்கையும் சமத்துவமென்று சொல்லாமல் திருவண்ணமலையைச் சிறந்ததென்று சொன்னதற்குக் காரணத்தைக் கூறவேண்டுமென்று மார்க்கண்டேயர் கேட்க நந்திகேசுவரர் சொல்லுகிறார்.

ஷை சருக்கம் 46.

இறந்திடு தொழிலும் பிறந்திடு தொழிலும்
எண்ணிய படியவை முடியா
பறந்திடு மவைக்கும் சில விலங்கினுக்கும்
பாதப முதவுவோ ருயிர்க்கும்
நிறைந்தபுன் நீச ரந்தகர் தமக்கும்
நிருத்த மண்டபந் தொழ நேரா
தறந்திகழ் பயனுர் சிலர் சிலர்க் கெளிதாம்
அல்லவர்க் கரியதா மதுவே.

(இ-ள்) இறப்பதும் பிறப்பதும் நினைத்த தலத்தில் செய்ய முடியாது. பக்ஷி, மிருகம், விருக்ஷம், நீசர், குருடர் ஆகியோர் கோவிலினுள்ளே வந்து தரிசனம் செய்ய முடியாதபடியால் சிலருக்கு மாத்திரமே மற்ற தலங்கள் முத்தியளிக்கத் தக்கனவாயிருக்கின்றன.

ஷை சருக்கம் 47.

குண்டகர் பதிதர் கோளகர் புலையர்
கொலையின ருறுப்பினிற் குறைந்தோர்
கண்டக நெடுந்து ரத்தினி லிருப்போர்
கருணைசேர் அருணை பூதரத்தை

எண்டக வொருகால் நினைத்திட முத்தி
இவரலால் விளங்குபுன் மரங்கள்
முண்டக முதலா யினவுமுன் காண
முளைத்திட முத்தியே பெறுமால்.

(இ-ள்) குண்டகர் முதலிய தாழ்ந்தவர்களுக்கும், அங்க வீனர்களுக்கும், போகமுடியாமல் நெடுந்தூரத்திலிருப்பவர்களுக்கும் ஒரு தரம் நினைத்தால் முத்தியுண்டாகும். மிருகங்கள், பட்சிகள் அங்கு சேர்ந்தாலும், மரம், செடி கொடிகள் அத் தலத்தில் முளைத்தாலும் முத்தியடையும். (ஆதலால் இத்தலம் எல்லாவற்றுள்ளும் சிறந்தது.)

இதற்குப் போட்டியாகத் திருவிளையாடற் புராணத்திற் கூறியிருப்பது வருமாறு.—

தல்விசேடம் பாட்டு 3.

........................அவற்றீறிலாத
சைவதல மதிகமவற் றறுபத்தெட் டதிகமவை
தமிலீ ரெட்டுத்
தெய்வதலம் அதிகம் அவற்றதிக தலநான்கு
அவற்றைச் செப்பக் கேண்மின்.

(இ-ள்) அழிவில்லாத சைவஸ்தலங்கள் சிறந்தன. அவற்றுள் அறுபத்தெட்டு சிறந்தன. அவற்றுள் தெய்வத் தன்மை பொருந்திய பதினாறு ஸ்தலங்கள் சிறந்தன. அவற்றில் நான்கு சிறந்தன.

ஷை பாட்டு 4.

அன்னமலி வயற்புலியூர் காசிநகர் காளத்தி
ஆல வாயாம்
இன்ன வளம் பதி நான்கில் திருவால வாயதிகம்
எவ்வா றென்னில்
மின் அவிர் அம்பலம் காணக் காசிநகர் வதிந்திறக்க
வியன் காளத்திப்
பொன்னகரம் பத்தியினுல் வழிபாடு செயவளிக்கும்
போகம் வீடு.

(இ-ள்) அன்னம் மலிந்திருக்கின்ற வயலையுடைய சிதம்பரம், காசி, திருக்காளத்தி, மதுரை ஆகிய வளம் பெற்ற ஸ்தலங்கள்

நான்கில் மதுரை தான் சிறந்தது. எப்படி யென்றால் சிதம்பரம் தெரிசிப்பதாலும், காசி இறப்பதாலும், திருக்காளத்தி பக்தியினால் வழிபாடுசெய்வதாலும் இம்மை மறுமை இன்பங்களைத் தரக்கூடும்.

ஷை பார்ட்டு 5.

அறந்தழையுந் திருவாலவாய் கேட்டவுடன் போகம்
அளிக்கும் மீண்டு
பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும் இதுவன்றிப்
பிறழா தெங்கும்
நிறைந்தபரன் எத்தலமும் படைப்பான் இத்தலத்தை
முதனிருமித் தங்கண்
உறைந்தருளி னானன்றி இன்னமுள ததன்பெருமை
உரைப்பக் கேண்மின்.

(இ-ள்) தருமமே தழைத்தோங்குகின்ற மதுரையானது பெயரைக் கேட்டவுடனேயே இம்மை இன்பத்தைத் தரும். இனிமேல் பிறந்து இறவாத பேரின்ப முத்தியையும் தரும். இது மட்டுமல்ல. எங்கும் நிறைந்திருக்கிற பரமசிவன் உலகத்திலுள்ள எல்லாத் தலங்களையும் படைக்கும் பொருட்டு மதுரைத் தலத்தை முதலிலேயே உண்டாக்கி அதிலே பொருந்தியிருந்தான். இன்னும் அதன் பெருமை பலவுண்டு. சொல்கிறேன் கேளுங்கள்.

அருணாசல புராணத்தில் சிதம்பரம், காசி, திருவாரூர், திருவண்ணாமலை ஆகிய நான்கு நகரம் முத்திகொடுக்கக் கூடியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. மதுரை சேர்க்கப்படவில்லை, ஆனால் மதுரைத் திருவிளையாடற் புராணத்தில் சிதம்பரம், காசி, திருக்காளத்தி, மதுரை ஆகிய நான்கு ஊர்கள் முத்தி நகரமென்று சொல்லப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையும், திருவாரூரும் ஒழிக்கப்பட்டு அவற்றுக்குப் பதில் மதுரையும், திருக்காளத்தியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை நினைக்க முத்தி என்றால் மதுரையின் பேர் கேட்க முத்தி என்று எழுதப்பட்டிருக்கின்றது. இன்னொரு வேடிக்கையான பெருமையும் மதுரைக்குச் சொல்லப்படுகிறது. எல்லாச் சிவதலங்களையும் உண்டாக்குவதற்குப் பிளான் போட்டுக்கொண்டு மதுரை நகரத்தை முதலில் உண்டாக்கிப் பரமசிவன் அதிலே வந்து உட்கார்ந்து கொண்டு மற்ற நகரங்களைச் சிருஷ்டி செய்தார் என்று எழுதியிருப்பதைக் காட்டிலும் தமாஷ்

வேறொன்று வேண்டியதில்லை. திருவண்ணாமலைக்காரர் மதுரை என்று ஒரு தலமிருக்கிறதென்றும், அதன் பெருமை திருவண்ணாமலைக்குக் காணுமென்றும் திருநகரச் சருக்கத்தில் சொல்லுகிறார். ஆனால் மதுரைக்காரரோ திருவண்ணாமலையை அநாமதேயப் பட்டியலில் போட்டிருக்கிறார்.

இனித் திருவாரூர்ப் புராணத்தில் அந்த ஊர்ப்பெருமையை கூறப்பட்டிருப்பதில் இரண்டொன்றை இங்கு காட்டுகிறேன்.

தலமகிமைச் சருக்கம் பாட்டு 18.

தேசுசால் உலகின் மேலாம் சிவதலம் பலவவற்றுள்
ஆசுதீர் காசி மேன்மை அடைந்துள ததனின் சால
எசிலா மேன்மை பெற்ற தாரூரென் றெடுத்துரைக்கும்
ஆசுதீர் தொன்மை சான்ற மறைமுதல் நூல்களெல்லாம்.

(இ-ள்) உலகில் மேன்மைபெற்ற சிவ தலங்கள் பல உள்ளன. அவற்றுள் குற்றமில்லாத காசித்தலம் மேன்மையடைந்துள்ளதாகும். அதைக்காட்டிலும் இழிவு சொல்லமுடியாத மேன்மை பொருந்திய திருவாரூர் என்று பழமையான, மாசற்ற வேதங்களும் மற்ற எல்லா நூல்களும் எடுத்து உரைக்கின்றன.

ஷை பாட்டு 77.

இந்தமா நகர்க்கு மேலாம் நகரமும் ஈறில் செல்வத்
திந்தமா நகரமொத்த நகரமும் எதிர்நீர் சூழ்ந்த
இந்தமா நிலத்தி லில்லை இணைஇதற் கிஃதேயாகும்
இந்தமா நகரின் மேன்மை இசைப்பரி தெவர்க்குமம்மா.

(இ-ள்) இந்தத் திருவாரூருக்கு மேலான நகரமும், அழியாத புகழில் இதற்கு ஒத்த நகரமும் இந்தப் பூலோகத்தில் வேறு கிடையாது. இதற்குச் சமானம் இதுவேயாகும். இதன் பெருமை எவருக்கும் சொல்லமுடியாது.

இந்தப் புராணக்காரர் ஒரு போடாகப் போடுகிறார். வேதம் முதலிய சிறந்த நூல்களெல்லாம் திருவாரூர் சிறந்ததென்று கூறிவிட்டதாக எழுதிவிட்டார். அந்த நூல்களுள் திருவிளையாடற் புராணமும், அருணாசல புராணமும் சேர்ந்திருக்கிறதா? இல்லையா? எல்லா நூல்களும் திருவாரூரைத் தலைசிறந்ததென்று கூறுவதாக இவர் சொல்லுவது சுத்தப்புரட்டல்லவா? காசித்தல

மகிமையில் கூறியிருக்கிற கதையை மற்றொரு சமயம் அவிழ்த்து விடுகிறேன். காசி சிறந்தது. ஆனால் தங்களுடைய ஊருக்கு அது தாழ்ந்ததென்று இந்த மூன்று புராணக்காரரும் எழுதிவிட்டார்கள். இதற்குக் காரணம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள பார்ப்பனர் வயிற்றுப்பிழைப்புக்காகப் புராணக் கேட்லாக் போட்டு அதில் கோவிற்பெருமை, தலப்பெருமை, தீர்த்தப்பெருமை, ஐயர்மார் பெருமை, அவர்களுக்குக் கொடுப்பதால் கிடைக்கும் பலன் இவைகளை விளம்பரம் செய்து ஜனங்களை வரவழைப்பதற்குச் செய்த சூழ்ச்சியைத் தவிர வேறொன்றுமில்லையென்பது விளங்கவில்லையா? இவற்றைவிட இன்னும் முக்கியமான விஷயம் ஒன்று கவனிக்கத்தக்கது. இம்மூன்று புராணங்களும் சூதபுராணிகருக்குச் சொல்லப்பட்டதாகவும் அவரால் அருணசல புராணமும், திருவாரூர்ப் புராணமும் முனிவர்களுக்குச் சொல்லப்பட்டதென்றும் அவ்வப்புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே சூத புராணிகர் மூன்றுவிதமாக ஒன்றுக்கொன்று பரிகாரமில்லாத முழு முரணுகக் கதைகட்டிவிட்டிருக்கிற காரணமென்ன? இந்த மூன்று ஊர்க்காரரும் ஒருவரை யொருவர் சந்திக்கப் போவதில்லையென்று கருதிப் புளுகித் தள்ளினரா? அல்லது புராணக்காரர் புளுகி சூதபுராணிகர் சொன்னரென்று பழி சுமத்தினர்களா? அல்லது எல்லாரும் சேர்ந்து பொது ஜனங்களிடத்தில் கொள்ளையடிப்பதற்கு இந்த வேலையில் தலைப்பட்டார்களா? புராணம் உண்மை; அதைப் பொய்யென்று சொல்லக்கூடாதென்று கூறுவோர் இக்கட்டுரையை ஒருமுறை, இருமுறை, மும்முறை படித்து வழி சொல்லுவாராக.

"சர்ச்லைட்".

---

## மடைப்பள்ளியில் டிரஸ்டி எடிஷன்.

மிஸஸ் ஜானகி எழுதுவது.

மேல்நாட்டிலுள்ள புத்தகக் கம்பெனிக்காரர் புத்தகங்களை இரண்டுவிதமாகப் பதிப்பிக்கின்றனர். பணக்காரர்களும் பிரபுக்களும் படிப்பதற்காக உயர்ந்த காகிதம் உயர்ந்த பயிண்டு பொன்னெழுத்து முதலிய அலங்காரங்களுடன் ஒரு எடிஷன் போடுவார்

கள். சாதாரண ஜனங்கள் சொற்பவிலையில் வாங்கிப்படிப்பதற்காக மட்டமான காகிதம் மட்டமான பயிண்டுடன் ஒரு எடிஷன் வெளியிடுவார்கள். இந்த முறையை வெளிநாட்டுக்காரர்தான் கண்டுபிடித்தார்களென்று நினைக்க வேண்டாம். ஏற்கனவே நம்முடைய நாட்டில் புராதனமாக இந்த வழக்கம் இருந்துதான் வருகிறது. கோவில்களில் செய்யப்படும் வடையில் இரண்டு எடிஷன் உண்டு. ஒன்று டிரஸ்டி எடிஷன். மற்றொன்று சாதாரண எடிஷன். டிரஸ்டி எடிஷன் வெகு சுகமாக இருக்கும். தனிநெய்யில் செய்யப்பட்டிருக்கும். புது உளுந்து. தனியான பக்குவம். சுடச்சுடக் கிடைக்கும்; ஒரு கல் இராது. ஆனால் இந்தப் பதிப்பு கொஞ்சமாகவே தயாரிக்கப்படுவதால் எல்லாருக்கும் கொடுக்கவும் முடியாது. டிரஸ்டிகளுக்கு ஸ்பெஷலானது. சாதாரண எடிஷன் பலருக்கும் தெரியும். கடலையெண்ணெயில் நனைந்து ஊறியிருக்கும். பலவருஷத்து எண்ணை மிஞ்சிமிஞ்சிப் புதிய எண்ணையும் சேர்ந்து தைலமாகியிருப்பதில் வேக வைக்கப்பட்டிருக்கும். பிழியலாம். பழய உளுந்து. அர்த்தசாமத்துக்காக மத்தியானம்செய்த வடை—சில சமயத்தில் காலையிலேயே செய்த வடை—அடுத்த நாள் பகல் 1-மணி வரை கொடுக்கப்படுகிறது. ஊசியிருக்கும். நூலும் கோத்திருக்கும். கல்லுக்குக் குறைவில்லை. இந்த வடையைச் சாமி சாப்பிடுகிறதில்லை. சாப்பிட்டாலும் அதன் கல்லுடலுக்குக் கல்வடை என்ன செய்யப்போகிறது. அதனால் சாமி இதில் கவலையெடுக்கிறதில்லை. அநேகம் டிரஸ்டிகளுக்கு வடையில் இரண்டு எடிசனிருக்கிற சங்கதி தெரிகிறதில்லை. இதில் அவர்கள் கவலை செலுத்துகிறதுமில்லை. செல்வராஜபிள்ளை கையில் சாதாரண எடிஷன் வடை கொடுக்கப்பட்டது. பகிர்ந்தார். அவரால் பொறுக்க முடியவில்லை. நேரே டிரஸ்டி வீட்டுக்குச் சென்றார். இதுதான் தங்கள் கோவில் வடை. இப்படி அக்கிரமம் நடக்கலாமா?

டிரஸ்டி:—இதென்னய்யா பெரு மோசம்! நம்மள் கோவில் வடை திவ்யமாக இருக்குமே! அடே ராமா கோயிலிலிருந்து வந்த வடையை எடுத்து வாடா.

ராமன் வடையைக் கொண்டுவந்தான். செல்வராஜபிள்ளைக்கிருந்த கோபம் சொல்லமுடியவில்லை. கோவில் மணியகாரர் வரவழைக்கப்பட்டார். வடை இரண்டையும் மணியகாரர் பார்த்

தார். பயந்து நடுங்கிப்போய் "இது இவடத்துக்காகச் செய்தது. கோவிலில் எல்லா வடையும் அப்படித்தானிருக்கும்" என்றார். "ஓகோ இது டிரஸ்டி எடிஷனே? சரி. சரி. அந்த வடை மற்றவருக்குக் கிடைக்க வேண்டுமானல்" என்று செல்வராஜபிள்ளை கேட்டதற்கு, மணியகாரர் "டிரஸ்டியாக வருவதற்கு முயற்சி செய்யவேண்டியதுதான்" என்று சொன்னார். டிரஸ்டி புன்னகை பூத்தார்.

---

## ராவணன்
## எப்படி முத்தங்கொடுத்தான்?

இலங்காபுரியை ஆண்ட ராவணனுக்குப் பத்துத்தலையும் இருபது கைகளும் இருந்ததாக ராமாயணம் சொல்லுகிறது. ராவணனுக்குப் பத்துத்தலையிருந்தால் அவை வரிசையாக இருந்தனவா? அல்லது வட்டமாக இருந்தனவா? கைலாச வாகனத்தைப் பார்க்கும்போது வரிசையாகவே இருந்ததாகத் தெரிகிறது. தலை வரிசையாக இருந்திருந்தால் அந்த ஆசாமி படுக்கும்போதும் தூங்கும்போதும் மல்லாக்கவும் குப்புறவுமே கிடந்திருக்கவேண்டும். பக்கவாட்டில் படுத்திருக்கவே முடியாதே! பேசும்போது பத்துவாயும் பத்து விஷயங்களைப் பேசுமா? ஒரே விஷயத்தைத்தான் பேசுமா? பத்தும் ஒன்ருகப் பேசுமா? தனித்தனியாகப் பேசுமா? பத்துவாயும் பேசினல் ஒன்றும் விளங்காதே! சாப்பிடும்போது பத்துவாயிலும் சாப்பிடுவானு? ஒரு வாயால்தான் சாப்பிடுவானு? கழுத்து ஒன்றும் தலை பத்துமாக இருப்பதால் பத்து வாயால் போடப்படும் சாப்பாடு ஒரு கழுத்திலும் ஒரு தொண்டையிலும் புகுந்து விக்கிக்கொண்டு அவன் சாகாமலிருந்த காரணமென்ன? ஒரு வாயில் சாப்பிடுவதும் ஒருவாயால் பேசுவதுமாக இருந்தால் 10 தலை வைத்திருந்ததால் ஏதாவது சுகமாக இருந்திருக்குமா? துன்பத்தைத் தவிர சுகமொன்றுமில்லையே? என் மற்ற தலைகளை அவன் திருகியெறியாமலிருந்தான். சந்திர சூரியர்கள் தேவர்கள் யாவரையும் சிறையிட்டு எல்லாக் காரியங்களையும் தலைகீழாக்கிய மகா பலசாலியான ராவணன் அனுவசியமான இந்த வீண் தலைகளை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டிருப்

பானு? தவிர இன்னுமொரு சந்தேகம். பெண்டாட்டி பிள்ளைகளை எந்த வாயால் முத்தமிட்டிருப்பான்? ஒவ்வொரு வாயாகவா? குறுக்குவசத்தில் 10 வாயினாலும் ஒரே தரத்திலா? ஒரு பக்கத்துக்குப் பத்துக் கைகள் ஒன்றன்மேல் ஒன்றாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனாலும் அவன் சாய்ந்து படுக்கமுடியாதென்பது நிச்சயமாகிறது. படுக்கையில் மல்லார்ந்து [illegible]ழ வேண்டும். புரள முடியாது. அசையவேண்டுமானால் மல்ல[illegible]த படியே எழுந்து மறுபடி குப்புற விழுந்து படுக்கவேண்டும். இந்தக் கஷ்டத்தை ராவணேசுவரன் ஒப்புக்கொண்டு மூன்றரை[illegible] கோடி வருஷம் உயிரோடிருக்க ஒப்புக்கொண்டிருப்பானு? பத்துத்தலை ராவணன் கதையிலுள்ள இந்தக் குழறுபடைக்கு ராமாயண பக்தர்கள் பதிலளிக்கவேண்டும். என்று ஒரு சந்தேகி எழுதுகிறார்.

---

# பலதிரட்டு.

(ஒரு பிரயாணி எழுதுவது.)

## தீக்ஷதரும் பையனும்.

தீக்ஷிதர்:—தம்பீ! அப்பா வீட்டிலிருக்கிறாரா? வெளியில் போயிருக்கின்றாரா?

பையன்:—நீங்கள் யார்? எதற்காகத் தேடுகிறீர்கள்.

தீக்ஷிதர்:—நான் சிதம்பரம். ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குத் தங்கள் அப்பா கட்டளை என் மூலம் வைத்திருக்கிறார்? அதற்காக வசூலுக்கு வந்தேன். பார்க்கவேண்டும்.

பையன்:—நடராஜாவுக்குக் கட்டளை என்றால் என்ன?

தீக்ஷிதர்:—தங்கள் அப்பா ஜன்ம நக்ஷத்திரத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு அபிஷேகம் ஆராதனை செய்து ஆசீர்வதித்துப் பிரசாதம் அனுப்பிவருகிறோமல்லவா? அதைத்தான் கட்டளை என்பது. ஒவ்வொரு மாதமும் பிரசாதம் தங்கள் வீட்டிற்குத்தான் வந்திருக்குமே! அதுதான்.

பையன்:—விபூதியும் குங்குமமும் தானு பிரசாதமென்பது? அதுதான் ஒவ்வொரு மாதமும் தபாலில் வருகிறது. அதற்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கவேண்டும்.

தீக்ஷிதர் :—ஒரு வருஷத்திற்கு 100 ரூபா. மூன்று வருஷப் பணம் பாக்கியாக இருக்கிறது. மற்ற மரியாதைகள் பிரியம்போல் செய்வார். சென்ற வருஷம் தீபாவளிக்கு இரண்டு பட்டு வேஷ்டிகள் கொடுத்தார். அது நாற்பது ரூபாயிருக்கும். இதெல்லாம் கணக்கில்லை.

பையன் :—எங்கள் அப்பாவிடத்தில் மட்டும்தான் பாக்கியா? தங்கட்கு இதுதான் பிழைப்போ? என்று கோபமாய்க் கேட்டான்.

தீக்ஷிதர் :—இந்த ஊரில் மட்டும் நூறுபேர் கட்டளைக்காரர்களிருக்கலாம்! மற்றவர்களையும் பார்க்கவேண்டும். மற்றும் பல ஊர்களிலும் எங்கட்குக் கட்டளைக்காரர்களிருக்கின்றார்கள். என்னமோ ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய திருவருளால் எங்கட்கு அன்று தொட்டு இன்று வரை இதுதான் பிழைப்பு.

பையன் :—தங்கள் கையிலிருப்பது கணக்கு மூட்டையா? தாங்கள் எப்போது ஊர்போய்ச் சேருவீர்கள்?

தீக்ஷிதர் :—கணக்கு மூட்டையும் பூசைப்பெட்டியும் மடிகளும் விபூதி குங்குமமுந் தான் வைத்திருக்கிறேன். ஊர்போய்ச் சேர மூன்று மாதங்கள் செல்லும்.

பையன் :—தாங்கள் பன்னிரெண்டு பொட்டணம் சாம்பல் பொடியையும் சிகப்புக்கலர் மஞ்சக்கலர் பௌடரையும் அனுப்பி விட்டு வருஷத்திற்கு 3000, 4000 ரூபாயென்று கணக்கு எழுதிக் கொண்டு வியாபாரி மாதிரி வசூலுக்கு வெளிவந்திட்டீரே? ஏன் இப்படிக் கொள்ளையடிக்கின்றீர்? இது நியாயமா?

தீக்ஷிதர் :—மிகப் பயந்தவராய், தம்பி தாங்கள் பேசுவது சரியில்லை. பிரசாதத்தை சாம்பலென்றும் மஞ்சள் பொடியென்றும் பக்தியின்றிப் பரிகசித்துப் பேசுவது ஸ்ரீ எம்பெருமானுக்கே அடுக்காது? தாங்கள் பத்திரிகை படிக்கிறவர்கள் போலிருக்கிறது.

பையன் :—தாங்கள் ஸ்ரீ நடராஜப்பெருமானிடம் செய்யும் புரட்டுகளுக்கும் தீய செயல்களுக்கும், தங்கள் வீட்டுப் பெண் பிள்ளைகள் வீட்டுக்குத் தூரமாகும் காலத்தில் (ஓய்வுகாலத்தில்) மடித்து அனுப்பும் சாம்பல் தூள் மஞ்சள் தூள் என்ற காரணத்திற்காக ஸ்ரீ நடராஜன் கோபித்தால் கோபித்துக்கொள்ளட்டும். நீங்களும் உங்கள் வகையாரும் செய்வது மட்டும் முழுதும் நியாயம், ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும் சம்மதம், என்கிறீரோ? தங்கள் கூட்டத்தாரின் யோக்கியதைகளைப்பற்றி எழுதும் பத்திரி

கைகளைப் படிப்பது தவறு? அவர்கள் எழுதுவது தவறு? நீங்கள் நடப்பது தவறு? எத்தனை நாளைக்கு ஒரு குடும்பத்திற்கு வருஷம் 100 ரூபாய்வீதம் தங்கள் புரட்டுக்கும் பிழைப்புக்கும் கொடுத்து வருவது?

தீக்ஷிதர் :—தாங்கள் அதிகமாகப் பேசுகிறீர்கள். அப்பா சம் மதப்பட்டுதானே கொடுக்கப்போகிறார்கள். தாங்கள் வாலிபக் குழந்தை. ஒன்றும் தெரியாது

பையன் :—உங்களைப்போன்றவர்கட்கெல்லாம் "கட்டளை, கட்டளை" யென்று இருந்த பொருளையெல்லாம் கொட்டியழுது விட்டுப் பெருவாரியாகக் கடனையும் வாங்கிவைத்துவிட்டு அவர் இறந்துபோனார். அவர் இறந்துபோன பிறகு அவர் வாழவேண்டு மென்று ஜென்ம நக்ஷத்திரத்தில் நீர் அர்ச்சனை செய்கிறீர். போதும்! போய்வாரும். நிற்காதீர்.

## மந்திரத்தால் சொர்ன புஷ்பம்.

புரோகிதர் :—திதிக்கு வாங்கவேண்டிய சாமான்கள் யாவும் வாங்கிவந்துவிட்டீர்களா?

ராமன் :—சிலசாமான்கள் வாங்கவில்லை. மற்றவை வீட்டிலி ருக்கின்றன.

புரோகிதர் :—இல்லாதசாமான்களைச் சொல்லப்பா! தர்ப்பை யை வைத்து மந்திரம்சொல்லிவிடலாம். திதியை நடத்துவோமா?

ராமன் :—அப்படியானால் நான் தயாராகவிருக்கிறேன். நடத் துங்கள்.

புரோகிதர் :—(மஞ்சள் பிள்ளையாரிடம்) வாழைப்பழத்தை எடுத்துவையுங்கள்.

ராமன் :—பழம் வாங்கவில்லை.

புரோகிதர் :—சரி "கதலீபலம் சமர்ப்பயாமீ" தாம்பூலம் எடுத்துவையுங்கள்.

ராமன் :—அதுகூட வாங்கத்தான் தவறிப்போய்விட்டது.

புரோகிதர் :—அதனாலொன்றும் கெடுதலில்லை "தாம்பூலம் சமர்ப்பயாமீ" "சொர்ண புஷ்பம் ஒரு ரூபாய்" பிள்ளையாரிடம் வையுங்கள்.

ராமன் :—இப்போது கைவசம் ரூபாயும் தடைதான். அதை யும் மந்திரத்தாலே சொல்லிவிடுங்கள்.

புரோகிதர் :—அடேராமா! என்ன என்னை பரிகாசமா செய் கிறாய்! எடுத்து ரூபாயைக் கீழே வையடா?

ராமன் :—நான் முன்னமேயே யோசித்துப்பணத்தின் கஷ்டத்திற்காகத்தான் கடத்திவிடப்பார்த்தேன். தாங்கள் இல்லாதவைகளை மந்திரத்தாலுண்டாக்கிக் கொள்கின்றேன் என்றீர்கள். அதன்படி யுண்டாக்கிக் கொள்ளவேண்டியதுதான்.

புரோகிதர் :—நான் பணம்கூடவா உண்டாக்கிக்கொள்ளுகிறேன் என்று சொன்னேன். அப்படி யுண்டாக்கிக்கொள்ள எனக்கு முடிந்தால் உன் வீட்டிற்கு நான் ஏண்டா வர்ரேன்.

ராமன் :—வாழைப்பழம் தாம்பூலாதிகள் மந்திரத்தால் வரும்போது சொர்ன புஷ்பம் மட்டும் வராதா? நன்றாய் வரும். சீக்கிரம் முடியுங்கள் நேரமாகிறது. இது முடிந்தால் வேறுவேலை பார்க்கலாம். (புரோகிதர் மிக வெட்கத்தோடு வெளியே சென்று கோபமாக நடக்கலானார் )

## பாட்டுப்பாடிய சாமியார்கள்.

பரதேசிகள் :—"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்ற பாட்டைப் பாடிக்கொண்டு ஒருவியாபாரியைப் பார்த்து துட்டு கேட்டார்கள்.

வியாபாரி :—"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" தாங்கள் பாடுவது முற்றும் உண்மைதான். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. போய்வாருங்கள்! துட்டை விரும்பாதீர்கள்!

* * *

துறவி:—"வாசற்படி கடந்து வாராதபிச்சைக்கு இங்குஆசைப்படுவதில்லை அண்ணலே" என்ற பாட்டைப் பாடிக்கொண்டே அம்மா "பசிகாதடைக்கின்றது. பிச்சை போடுங்கள்" என்று ஓங்கிக்கத்தினர்.

வீட்டுக்காரர் :—வெளியே வந்து வாசற்படிதாண்டி உமக்குப் பிச்சை இங்குவராது. நீர் ஆசைப்படாமல் போய்வாரும்.

* * *

துறவி :—(அடுத்த வீட்டிற்குச்சென்று) மற்றொருபாட்டை "அன்னவிசாரம் அதுவேவிசாரம் அதுஒழிந்தால் சொன்னவிசாரம் தொலையாவிசாரம் நற்றேகையரைப்பன்னவிசாரம்..........

வீட்டுக்காரர் :—ஏண்டா பரதேசிப்பயலே! உனக்கென்ன குறும்பா? போக்கிரித்தனமா? உனது விசாரத்திற்கெல்லாம் எங்கள் வீடுதான் கிடைத்ததோ? தாசி, வேசி வீடென்று நினைத்தாயா? "நற்றேகையரைப் பன்னவிசாரம்" என்ற அடியை மடித்து மடித்து மூன்றுதரம் பாடுகின்றாயே? இது எவன் பாடினான்

என்று ஓங்கி அறைந்தார். பரதேசியார் பாட்டு படாதபாடுபட்டது. துறவியார் அழுதுகொண்டே நடக்க ஆரம்பித்தார்.

## எதுதான் உடன்பாடு.

கடவுளன்பர் :—தாங்கள் கடவுளைப்பற்றி என்ன கருதுகின்றீர்கள்? தங்கட்குக் கடவுள் உடன்பாடுதானே?

வாலிபன் :—நான் கடவுளைப் பார்த்ததுமில்லை. பார்க்க முயன்றதுமில்லை. எனக்குக் கடவுளைப்பற்றியொன்றும் தெரியாது. எனக்குத் தெரியாத ஆள் எப்படி என்னோடு உடன்படுவார்?

கடவுளன்பர் :—அப்படியானால் தாங்கள் கடவுள் இல்லை என்று கூறுகின்றீர்களா இருக்கிறாரென்று கூறுகின்றீர்களா? முடிவு சொல்லும்.

வாலிபன் :—இல்லை இருக்கு என்பது என்னுடைய வாதமில்லை? எனக்கு அவரைப்பற்றியொன்றும் தெரியாது. நான் அவரைப்பற்றிக் கவலைப்படுவதும் கிடையாது. அவர் எம்மிடம் வந்து எதையும் எப்போதும் என்றும் கேட்டதுமில்லை.

கடவுளன்பர் :—தங்கட்குப் பின் இந்த உலகத்தில் எதுதான் உடன்பாடு? கூறும்.

வாலிபன் :—இப்போது கலாசாலையில் படித்து வருகிறேன். படிப்பு முடிந்தவுடன் லண்டனுக்குச் சென்று டாக்டர் பயிற்சி பெறப்போகின்றேன். அதன் பின் உலக வாழ்வில் மக்கட்கு இன்பம் நல்குவது எதுவென்று என் அறிவிற்குப்படுகின்றதோ அதை அவசியம் தன்னம்பிக்கையோடு செய்வேன். தன் மதிப்போடு வாழ்வேன். இவைகளெல்லாம் எனக்கு உடன்பாடுதான்.

கடவுளன்பர் :—அப்படியானால் பாவபுண்ணியம், தலைவிதி, கர்மம், மோக்ஷம், நரகம் கூட கிடையாதென்று சொல்லுகிறீர்?

வாலிபன் :—எனக்குத் தெரியாதவைகளையும் நம்பத்தகாதவைகளையும் அறிவிற்குப் பொருந்தாதவைகளையும் எப்படி என்னால் உண்டு என்று கூறமுடியும். ஏட்டைப்படித்துவிட்டு "இருக்கலாம் ஒருவேளை" என்ற பழைய பல்லவி பாட என்னால் முடியாது. தாங்களாவது மேற்கூறியவைகளை நேரில் பார்த்ததுண்டா? பார்க்கக்கூடுமா? பார்த்துவிட்டு வேண்டுமானால் வாருங்கள். பின்னர் அதைப்பற்றிப் பேசுவோம்.

கடவுளன்பர் :—இப்படி எங்குபார்த்தாலும் பையன்கள்கூட நாஸ்திகம் பேசுகின்றான். கடவுளே நீ யிருந்தால் அவர்களைக் கேள்.

PUDUKOTAH STATE.

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சஞ்சிகை கூ } காரைக்குடி பிரமோதூத-ஹூ மாசி-மீ { மணி ௪ (8)

1931 - பிப் - மார்ச்

## ஞானமிருந்தால் பேதமில்லை.

1931 - Feb Mar

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மாநிலம் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ் நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்
முன்னோ ருரைத்த மொழி தவறுமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற வறத்தி னிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்பும் சீலமுமல்லது
பிறப்பு நலந்தருமோ பேதையீரே.

—கபிலர்.

இது இன்று பாடப்பட்ட பாட்டல்ல. பல நூற்றாண்டு கட்கு முன் பாடப்பட்டிருக்கிறது. ஜாதி வேற்றுமை யென்பது

பார்ப்பனரின் கட்டுக்கதை யென்பதை வெகு விளக்கமாக இக் கபில ரகவல் கூறுகின்றது. இயற்கையாக மனிதருக்குள் வேற்றுமை கிடையாது. மழையும் காற்றும் பூமியும் வெயிலும் மக்கள் யாவருக்கும் சம உரிமையையே நல்குகின்றன. குலமும் குடியும் இறப்பும் பிறப்பும் ஒன்றே என்று கூறுவது குறிப்பிடத் தக்கதன்றோ?

---

# இம்மையும் மறுமையும்.

மனிதர்கள் இவ்வுலகில் பிறந்து வாழ்வுக்கு வேண்டியவற்றைக் கைப்பற்றி மனைவி மக்களுடன் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கும்போது நாம் எங்கிருந்தோம் எப்படி வந்தோம் எப்படி இறப்போம் பின்னர் என்ன நிலைமையை அடைவோம் என்ற எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன. இது ஒரு ஆச்சரியமானதன்று; இயல்பேயாகும். ஈண்டுள்ள வாழ்வு நிலை இன்பமாக இருக்கும்போது இம்மாதிரியான பலவகைப்பட்ட எண்ணங்கள் எழுகின்றன. இதிலிருந்து ஆராய்ச்சி அதிகரித்தது. என் பிறந்தோம் எதற்காகப் பிறந்தோம் நாம் செய்யவேண்டியதென்ன என்று துருவித்துருவி யோசித்துத் தங்கள் தங்கள் கருத்துக்களைப் பலரும் வெளியிட்டிருக்கின்றனர். இந்த உணர்ச்சியின் பயனாகவே மதங்களும் கடவுளும் தோன்றியிருக்கின்றன வென்று சொல்லவேண்டியதில்லை. இவ்வுலக வாழ்வைவிட வேறு உலக வாழ்வு உண்டென்றும் கடவுள் ஒருவர் உண்டென்றும் அவர் மக்கள் செய்யும் பாவ புண்ணியங்கட்குப் பலனை அனுபவிக்கச் செய்வாரென்றும் மதக் கொள்கைகளெழுந்தன. இவ்வுலகில் நடைபெறும் விஷயங்களே ஒரு இடத்துக்கும் மற்றோரிடத்துக்கும் எத்தனையோ மாறுபாட்டுடன் பரப்பப்படுகின்றன வென்றால் மறுமை யுலகங்களில் நடைபெறுவனவற்றைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களும் கதைகளும் தோன்றுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. கண்ணுக்கு முன்னுள்ள இவ்வுலக அதிசயங்களை விடக் கண்ணுக்குப் புலனாகாத மறுமை யுலகங்களின் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் ஏடுகளில் மக்கட்கு மோகம் அதிகப்படவே அவைகளைப் பற்றிப் பல நூல்கள் தோன்றலாயின. எல்லா மதத்

தினரும் மறு உலகங்களைப் பற்றிக் கூறியிருக்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால் மறு உலகச் செய்திகளைக்கொண்டே மதங்கள் உயிர்பெற்றிருக்கின்றன. மறு உலகச் செய்திகள் யாவும் ஊகிப்பாகவும் கட்டுக்கதைகளாகவு மிருக்கின்றனவே யன்றி உண்மையாக நேரில் காணும்படியான நிலைமையிலில்லையென்பது யாவரும் அறிந்ததாகும். கண்ணுக்குப் புலப்படாத உலகத்தில் நடப்பதாகப் பலசெய்திகள் ஒன்றுக்குப் பத்தாக நூறாக ஆயிரமாகப் பெருகி யெழுதப்பட்டுள்ளன. இங்குள்ள வாழ்க்கையில் சலிப்பேற்படும்போது மேலுலகத்திலாவது சுகமாக இருக்கலாமென்று கருதி அதற்கு என்ன செய்யலாமென்பதில் சாதாரண மக்கள் மனம் ஆர்வமுற்றது. இதை ஆதாரமாக வைத்தே பரிகாரங்களும் மோக்ஷத்தைத் தரத்தக்க பல அற நிலையங்களும் கோயில்களும் திருவிழாக்களும் அந்தப் பகுதியைச் சேர்ந்த எண்ணற்ற ஸ்தாபனங்களும் வளர்ந்து மக்கள் மனத்தைக் கவர்ந்து விட்டன. சுயநலங்கொண்ட பலர் இவற்றை ஆதாரமாகக்கொண்டு பெரிதாக்கிப் பாதுகாத்து மக்கள் பொருளைக் கொள்ளையடித்து வருகின்றனர்.

மறுமையுலகப் பித்தம் இந்துமதத்தினருக்கே அளவு கடந்து ஏறிவிட்டது. பார்ப்பனரென்ற ஒரு சமூகத்தாரே மறு உலக ஆதாரத்தைக்கொண்டு தங்கள் வாழ்நாளின் நடைமுறைக்குவேண்டிய சகலத்தையும் பெற்றுவர முன்வந்து விட்டனர். அவர்களுடைய சூழ்ச்சியின் பலத்தால் பொது ஜனங்களின் அறிவு வளர முடியாதபடி தடுத்து அணை போட்டுவிட்டு, மறுமை யுலகத்திற்காகவே மக்கள் இவ்வுலகிற் பிறக்கிறார்களென்றும் வாழ்கிறார்களென்றும் வதிகிறார்களென்றும் இறக்கிறார்களென்றும் நூல்களெழுதிப் பிரசாரம் செய்துவருகின்றனர். இவ்வுலக வாழ்வுக்கு இன்றியமையாத கைத்தொழில் வியாபாரம் முதலிய வீண் முயற்சி செய்து பொருள் தேடல் அறிவீனமென்றும், இவ்வுலகிலுள்ள வீடு நிலம் மாடு மக்கள் மனைவி உற்றார் முதலிய எல்லாமே நிலையற்றதென்றும், இதில் புத்தியைச் செலவிடுபவன் அஞ்ஞானி யென்றும், மறு உலகப் பேற்றுக்காக உயிர் வாழ வேண்டுமென்றும் நன்கு பிரசாரம் செய்து தீர்த்திருக்கின்றனர். பார்ப்பனக் குழுவினர் சொர்க்கலோகமென்று சொல்லி அங்கு

கற்பக விருக்ஷம் காமதேனு சிந்தாமணி உண்டென்றும் அவை கேட்டதெல்லாம் தருமென்றும், பொன்மயமான பூமியில் சௌந்தரியமுள்ளவர்களும் என்றும் இளமை மாருதவர்களுமான தேவதாசிகளுண்டென்றும் அவற்றை ஏகபோகமாக அனுபவிக்கலாமென்றும் எழுதி வைத்திருக்கின்றனர். இப்படியே சைவர்கள் கைலாயத்தை மாருப் பேரின்ப நிலைக்களமென்றும் வைணவர் வைகுண்டம் அழியாப் பெரும்பதவி யென்றும் ஏடுகளை யெழுதிக் குவித்துப் பிரசாரம் செய்து மக்கள் மூளையில் அசைக்கமுடியாதபடி ஏற்றியிருக்கின்றனர். கர்ப்போற்பத்தி முதல் கட்டையில் வைத்த பிறகும் இந்தக் கொள்கைகளைச் சொல்லி சடங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் பயனாக மக்கட்கு இவ்வுலக வாழ்வில் ஊக்கமின்றித் தன்னம்பிக்கை இழந்து ஜீவப்பிரேதமாக உயிர் வாழ்ந்து திரியும் நிலைமை யேற்பட்டிருக்கிறது. பரலோகப் பித்தம் தெளியாதவரையில் இந்திய நாட்டில் ஹிந்து மக்களால் ஒரு காரியமும் செய்து உருப்படியாக முடியாதென்பது திண்ணமாகும். தொழிலிலும் வியாபாரத்திலும் வாழ்விலும் புதுப்புதுத் தோற்றங்கள் நாள்தோறும் நாழிகைதோறும் அபிவிருத்தியடைந்து வருகின்ற இந் நாளில்— மற்ற தேயத்தினர் யாவரும் அதில் போட்டி போட்டு முன்னேறுங் காலத்தில் நமது மக்கள் 3000 வருஷத்துக்கு முந்திய பழங் கதைகளைப் பேசித் திண்ணையிலிருந்து பொழுது போக்க நினைக்கின்றனரென்பதை நினைக்கும்போது நெஞ்சம் கொதிக்கின்றது. "மணிக்கு 3000 மைல் ஆகாயத்தில் பறக்கிருன்; கம்பிகூட இல்லாமல் 6000 மைல் தூரத்தில் பேசுவதைக் கேட்கிருன்" என்ருல் அவை அநித்தியம் என்று சொல்லிக்கொண்டே கையிலிருக்கிற இரண்டணுவை எள்ளில் வைத்துப் பார்ப்பான் கையில் கொடுத்துக் கும்பிடு போட்டுவிட்டுக் கஞ்சிக்கு ஆலாய்ப்பறக்கிருன். இந்த நிலை பரலோகப் பயித்தியம் ஒழிந்தாலன்றி எந்த விதமாகவும் மாற்றமடைய முடியாதென்பது திண்ணமாகும். மற்றைய மதங்களில் மறுமை எவ்வளவு அவசியமோ அவ்வளவு இம்மையிலும் நல்வாழ்வும் நல்வாழ்வுக்குரிய முயற்சியும் அவசியமாகு மென்று வற்புறுத்தப்படுகிறது. ஹிந்து மதம் ஒன்றிலேயே இம்மை வாழ்வு வீணென்றும் மறுமை யொன்றே அடையத்தக்கதென்றும் கூறப்படுவது கவனிப்புக்குரியதாகும்.

---

# ஒன்றுக் கொன்று முரண்.

## புராண மூடம்.

பரமேசுவரன் சர்வக்ஞன் எல்லாமறிந்தவன் சர்வ வியாபி சத்திய சொரூபி என்றெல்லாம் வேதஞ் சொல்கிறது. சத்திய சொரூபமாக இருக்கிற பரமசிவனுடைய திருவடி நீழலை யடைய வேண்டுமென்பதே சைவத் திருவாளர்களினுடைய கொள்கையாம். அந்தப் பெருமானுடைய திருவடியின் கீழ் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு வழிகளாகத்தான் கோயில் விக்கிரகம் பூசை நைவேத்தியம் பாடசாலை சத்திரம் அறுபத்துமூவர் மடம் அடியார்கள் குருபூஜை பசுமடம் நந்தவனம் தளுகை ஆராதனை தாஸியாட்டம் திருவிழா எல்லாம் நடைபெற்று வருகின்றனவென்பதை யாவரும் அறிவர். அந்தச் சிவ பரம்பொருளின் திருவடியை அடைந்தால் மாறாத முக்தி யென்றும் கூறப்படுகிறது. முக்திக்குப் போனவர் அதாவது கடவுளை அடைந்தவர் திரும்பி வருவதில்லை. மறு பிறப்புப் பிறப்பதில்லை யென்று எல்லாச் சைவ நூல்களும் சொல்லுகின்றன. இந்தக் கொள்கைகட்கு உலைவைத்து அருணுசல புராணத்தில் ஒரு கதை யெழுதப்பட்டிருக்கிறது.

பிர்மாவும் விஷ்ணுவும் பலமான சண்டை போட்டுக்கொண்டு விஷ்ணு பன்றியுருக்கொண்டு பூமியைத்துளைத்துச்சென்றார்; பிர்மா அன்னப்பட்சியுருவெடுத்து ஆகாயத்தில் பறந்தார். விஷ்ணுவின் பன்றியுருவம் மூக்கின் முனைதேய்ந்து திரும்பிற்று. அன்னபக்ஷி இறகு உடலெல்லாம் வெந்துகருகித் திரும்பும்போது, மேலே இருந்து ஒரு தாழம்பூ இறங்கி வந்தது.

அருணுசல புரர்ணம் திருமலைச்சருக்கம் பர்ட்டு 55.

இம்மடலெங் குற்று வருவ தென்னுமுன்
அம்மடல் அணைந்ததங் கதனை யேற்றனன்
செம்மல்தன் முடியில்வீழ் செம்மலர்க் கையால்
மெய்ம்மைசே ருயிர்ப்பதாய் விடுமினென்றதே.

(இ-ள்) இம்மடல் எங்கிருந்து வருகிறதென்று யோசிப்பதற்கு முன்பாக அந்த மடல் சமீபத்தில் வந்தது. அதனை பிர்மா பிடித்தார். உண்மையான பெருமூச்சோடு 'விடும்' என்றது.

ஷை பாட்டு 56.

எரணி கைதையே இங்கு நீவரும்
காரண மேதெனக் கமலன் கூறினுன்
ஆரணன் நாரணன் அளவிடாமுதற்
ருரணி முடியினும் தவறி வீழ்ந்தனன்.

(இ-ள்) தாழம்பூவே இவ்வழி நீ வந்த காரணமென்ன வென்று பிர்மா கேட்க, பிர்மாவினுலும் விஷ்ணுவினுலும் அறிய முடியாத சிவபெருமானுடைய முடியிலிருந்து தவறி விழுந்தேன்.

தாழம்பூவுக்குச் சிவபெருமானுடைய திருவடியல்ல, முடியே கிடைத்திருக்கிறது. சகல பாவமும் போகாவிட்டால் இப்படிப் பட்ட பெறற்கரிய பெரும் பேறு கிடைக்காது. பரமசிவனுடைய சிரத்தில் பல கோடி வருஷங்களிருந்த தாழம்பூவுக்கும் ஒரு கேடு காலம் வந்து கீழே நழுவி விழுந்தமை ஆச்சரியமல்லவா? சிவ பெருமான் தலைமேலேறிய பிறகும் அங்கு பல நாளிருந்த பிறகும் பரமசிவனுடைய பரிச தீட்சை பெற்ற பின்னரும் தாழம்பூவுக்குத் தடுமாறி விழுகிற நிலை போகவில்லை. இது கவனிக்கத்தக்கது.

ஷை பாட்டு 60.

படியளந் தவனுடன் பறவை யாமிவன்
முடியறிந் தானென மொழிதல் வேண்டுமே.

(இ-ள்) விஷ்ணுவிடத்தில் பறவையுருவெடுத்த பிர்மா சிவ பெருமானுடைய முடியை அறிந்தார் என்று நீ சொல்லவேண்டும்.

ஷை பாட்டு 61.

வஞ்சமென் றிகழ்ந்திடேல் வருந்தினுர்க்குயிர்
தஞ்சமா மெனிற் பெரும் பொய்யும் சாற்றலாம்
மிஞ்சியே சொலத்தகா மொழியு மன்றிது
நஞ்சமுண் டமைவரே நண்பு வேண்டினுர்.

(இ-ள்) வஞ்சனைத் தொழிலென்று தள்ளாதே. துன்பப் படுகிறவர்கட்குத் தஞ்சமாக இருக்குமானுல் பெரும் பொய்யையும் சொல்லலாம். தவிர இது சொல்லத்தகாத வார்த்தையுமல்ல. சிநேகம் வேண்டினவர்கள் நஞ்சைக்கூட உண்ணவும் இசைவர்.

ஷை பாட்டு 62.

கண்ணுதல் முடியில்வாழ் கைதையே பிறிது
எண்ணுவ தொழிகென இயைந்து போந்தது.

(இ-ள்) நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் திருமுடியில் வாழ்கின்ற தாழம்பூவே! வேறு எண்ணத்தை விட்டுவிடு என்று பிர்மா சொல்ல, சம்மதித்துப் புறப்பட்டது.

ஷை பாட்டு 63.

சீதரா கேட்டியென் வரவின் செய்கையை
மாதனூ ருயிரங் கணத்திலே கடந்து
ஆதியான் முடியதிக் தணுகினே னென
ஓதினன் கைதையும் உள்ள தென்றதே.

(இ-ள்) விஷ்ணுவே என்னுடைய வரவைக் கேள்! நூறுயி ங்காதம் ஒரு நொடியிலேயே பறந்து பரமசிவனுடைய முடியை அடைந்தேன் என்று பிர்மா சொன்னார். தாழம்பூவும் "உண்மை தான்" என்று சொன்னது.

இதைப் படிக்கும் அன்பர்களே! உலகத்தைப் படைத்து அவரவர் வினைப்படி தலைவிதியை யெழுதி அவரவர் செய்த பாவ புண்ணியங்கட்குத் தக்கபடி உடலமைப்பையுங் கொடுத்து அனுப் பும் பிரமதேவன் இவ்வளவு பெரும் புளுகனாக இருப்பது எவ்வ ளவு கொடுமையாகுமென்பதை யோசித்துப் பாருங்கள். தான் புளுகினதுமன்றித் தாழம்பூவையும் புளுகச் சொன்னது இன்னும் திறமானதல்லவா? தாழம்பூ உண்மை யறிவானந்த மயமான பர மேசுவரனுடைய முடியில் இருக்கும் பேறு பெற்றுப் பல்லாயிரம் ஆண்டு வாழ்ந்திருந்தும் கடைசியில் வழியில் நின்ற வொருவன் பேச்சைக் கேட்டுப் புளுகும்படியான புத்திதான் அதற்கேற்பட்டி ருக்கிறது. "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத் தியல்பதாகும் அறிவு" என்ற திருக்குறளின்படி தாம் சேர்ந்த இனத்தின் அறிவு இந்தத் தாழம்பூவுக்கு வராமற்போன காரண மென்ன? உண்மை வடிவான கடவுளுடன் பழகியும் அந்த இனத் தின் அறிவு வரவில்லையா? அல்லது கடவுளே புளுகுகிற இனமா? இது விளங்கினால் நல்லதல்லவா? பிர்மாவையும் விஷ்ணுவையும் கேலி செய்து இழிவு படுத்தவே இந்தக் கதையை திருவண்ணா மலைச் சிவபக்தர்கள் எழுதி யிருக்கிறார்கள். ஆனால் சாட்சியை உண்டாக்கத் தாழம்பூ வந்ததாகக் கதை கட்டப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியில் கடவுள் தலையிலிருந்துவந்த பூ பொய் சொல் லலாமா? முக்திக்குப் போன பூ திரும்புமா என்ற யோசனை களி

மண் மூளையில் உதிக்கவில்லை! பாவம்! இந்த பிர்மாவினல்படைக் கப்பட்ட அரிச்சந்திரன் ஒரு பொய் சொல்லமாட்டேனென்று மனைவியைவிற்று மகனைப்பறிகொடுத்துத் தானும் சுடலைகாத்தானென்று புராணம் பாடியிருகின்றனர். அந்த பிர்மா எவ்வளவு அபாரப்புளுகனுக இருக்கிருரென்பதைப்பாருங்கள்!

"சர்ச் லைட்"

---

# நன்றி கெட்ட தெய்வங்கள்.

தேசபக்தச் செல்வரான மோதிலால் நேரு 6—2—31 காலையில் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவருக்கு வயது 70. முதிர்ந்த வயதில் அவர் பிரிந்தாராயினும் சுயராஜ்யப் போராட்டம் தீவிரமாக இருக்கும் இந்த சமயத்தில் பிரிந்தமை பெருவருத்தத்துக்குரியதேயாகும். அவரைப்போன்ற பெரியார் பலர் இந்த நாட்டில் அருமையாக இருப்பதால்தான் 70 வருஷமிருந்து கஷ்டப்பட்ட அவரை இன்னுமிருக்க வேண்டுமென்று எல்லாரும் விரும்புகிருர்கள். தெய்வத்தை நம்பிக் கையில் மடியிலிருக்கிற எல்லாவற்றையும் கோயில் சாமிக்குப் போட்டழுதுவிட்டு அவர் எப்பொழுது காப்பாற்றுவார் என்று வாயைப் பிளந்துகொண்டிருப்பதே இந்த நாட்டு மக்களின் "தலை விதி"யாக இருக்கிறது. மோதிலால் நேரு நோய்ப்பட்டார் என்றவுடன் அவர் குணமுற்று எழவேண்டுமென்று அநேகம் கோயில்களில் அர்ச்சனைகளும் பூசைகளும் தயிர்ச்சாத நைவேத்தியங்களும் நடத்தப்பட்டன. அந்த சாமிகளெல்லாம் சோற்றையும் வடை பாயாசத்தையும் நன்ருகச் சாப்பிட்டுவிட்டு மோதிலால் நேருவையும் கொண்டுபோய்விட்டன. பத்திராதிபர்கள்கூட நேருவைக் காப்பாற்ற வேண்டுமென்று மிக மிக வேண்டிக்கொண்டார்கள். என்ருலும் நன்றிகெட்ட தெய்வங்கள் நேருவைக் கொண்டுபோய்விட்டன. அர்ச்சனை அபிஷேக நைவேத்தியம் செய்த அன்பர்கள் அந்தந்தக் கோவில் பார்ப்பனர்களிடமிருந்து செலவான பணத்தை வசூலிக்க முயற்சி செய்ய வேண்டுமென்று சிபார்சு செய்கிறேன்.

'காங்கிரஸ் வாதி'

---

# விடுதலை முழக்கம்.

"ஏயஸ்"

நாடெங்கணும் விடுதலை முழக்கம் ஒலிக்கின்றது. எங்கு பார்த்தாலும் விடுதலைப் பேச்சே முழங்குகின்றது. இன்றல்ல, நேற்றல்ல, மனிதன், அறிவுபெற்ற நாள்முதல் விடுதலை பெற்றவாழ்வையே விரும்பி முயற்சித்து வந்திருக்கின்றான். அடிமைப்படுகுழியில் ஆழ்ந்துகிடந்த நாடுகள் பலவும் தத்தம் நிலையினின்றும் விடுதலை பெற்று பூரண சுதந்திரத்துடன், செழுமையடைந்து, தலைதூக்கி வாழ்வதைக்காண்கின்றோம். மதத்துக்கும், மதத்தலைவர்களுக்கும் கட்டுப்பட்டுக்கிடந்த மேனாட்டு அரசர்களெல்லாம், மதத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லையென்பதை உணர்ந்து மத ஆதிக்கத்தை உதறித்தள்ளிவிட்டுத் தங்கள் சுதந்தரத்தை நிலைநாட்டிவிட்டதை யாரே அறியாதார்? மத வாழ்க்கைக்கும் லௌகீக வாழ்க்கைக்கும் சம்பந்தம் இவ்வளவுதான் உண்டு என்பதை மேனாட்டுமக்கள் வரையறுத்து, தங்கள் இன்பவாழ்வுக்கு மதம் குறுக்கிடாதபடி பாதுகாத்துக்கொண்டு செல்வஞ் செழிக்க, துன்பம் நீக்கி, இம்மை, மறுமை, மரணபயங்களின்றி ஏறுபோன்ற நடையுடையராய் கவலையற்று வாழ்தலையுங்காண்கின்றோம். ஆனால் பண்டை நாகரிகப் பழங்கதை பேசி வெறும்பேச்சளவிலே எல்லையில் விறும்பூதெய்தி மகிழ்ந்த நமது நாடுமட்டும் இன்னும் விடுதலை பெறாது — எத்துறையிலும் விடுதலையடைய சக்தியும், தகுதியும் இன்றி — அல்லோலகல்லோலப்படுவது அறிவுடைய எவர் மனத்தையும் கரைக்காதிருக்கமுடியாது.

விடுதலையென்ற சொல் நமது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் புதிதன்று. பிறநாடுகளெல்லாம் அறியாமையில் ஆழ்ந்து தவித்துக் கொண்டிருந்த காலத்தில் நமது நாடு அறிவுடைமையிற் றிகழ்ந்தது; சுதந்தர வீரர்கள் பலர் நம்நாட்டில் நீதிவழுவாது செங்கோலோச்சி வந்தனர். பலதுறைகளிலும் நம் நாடு பொலிந்து விளங்கிற்று. ஆனால், முன் அறியாமையிலும் அநாகரிகத்திலும் ஆழ்ந்து கிடந்ததாகச் சொல்லப்படும் நாடுகளெல்லாம் அறிவிலும், திருவிலும், நாகரிகத்திலும் முன்னணியில் முன்னேறிச்செல்லும் இக்காலத்தில் நமது நாடுமட்டும் தூங்குகின்றது

என்று சொல்வதா? அன்றி பின்னணியில் முன்னேக்கிச் செல்கின்றது என்று கருதுவதா? அல்லது இன்னும் பின்னேக்கியே செல்கின்றது என்று முடிவுகட்டுவதா? நேற்றுவரை அநாகரிகத்திலும், மூடபழக்கவழக்கங்களிலும் ஆழ்ந்து கிடந்த நாடுகளெல்லாம் திடீரென விழிப்புற்று, தம் நிலையோர்ந்து அதிவேகமாகச் சீர்திருந்தி முன்னேறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் பண்டைய நாகரிகத்தில் சிறப்புற்றிருந்த நமது நாடு அரசியல், பொருளாதாரம், சமூகச்சீர்திருத்தம், கைத்தொழில், கல்வி, வியாபாரம், முதலிய பல துறைகளிலும் மிக மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பதற்குக் காரணம் யாதெனக்கூறுவது? மதம்! மதம்!! மதம்!!! என்பதைத்தவிர வேறென்றும் கூறமுடியாது.

அறிவும் ஆற்றலும் வேண்டியவளவு திரண்டிருந்த அக்காலத்தில் மக்கள் தம் அறிவையும் ஆற்றலையும் மக்களுக்குத் தேவையான, உயிர்வாழ்தற்கின்றியமையாத வழிகளிற் செலவிடாது, மதவாழ்வை வரையறுப்பதிலும், மதவாழ்வை வரையறுப்பதிலும், மதவாழ்வைப் பாகுபடுத்துவதிலும், கடவுளரை வகுப்பதிலும், சமயக்கோட்பாடுகள் ஏற்படுத்துவதிலும், சமூகக்கட்டுப்பாடுகளை நிறுவுவதிலும், வீண் சடங்குகளைக் கோலுவதிலுமே பயன் படுத்தினர். தம் சந்ததியார் உணர்ந்து, தமது நாகரிகத்தையும் இன்பவாழ்வையும் நிலைநிறுத்திக் கொள்ளுமாறு எவ்வழியையும் கோலாது விட்ட குறை பெருங்குறையன்றே? அக்குறையே இன்று நம் நாட்டைச் சீர்குலைத்துவிட்டது. அவர்கள் கோலிய சமயவாழ்வு சாரமற்றவாழ்வாய்ப்போக இக்காலத்திற்குப் பொருந்தாததாய்ப் போக அது சமயவாழ்வாக இல்லாது பேய் வாழ்வாக மாறிவிட்டது. மக்களை மாக்களாக மாற்றியதும் அவ்வாழ்வே. பட்டினிகிடக்கும் மக்கள் நாளுக்கு நாள் பெருகிவருவதும், நோய் பிடிக்கும் மக்கள் மல்கமல்க, மனிதர் ஆயுள் சுருங்கிக்கொண்டுவருவதும், கைத்தொழில் எல்லாம் சீர்கேடுற்று, நமக்குத் தேவையான பொருள்கள் எல்லாவற்றிற்கும் அயல் நாட்டாரை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும்படி செய்ததும், இந்த சமயவாழ்வேயாகும். அம்மம்ம! சமயவாழ்வு இயற்றிவரும் இடுக்கண்களை இயம்புவது எளிதன்று, எளிதன்று. சுருங்கக்கூறின், நாடு சமய வாழ்வினலேயே இன்

றைய பாழ் நிலையை எய்திவிட்டது என்று மட்டுந்தான் கூறமுடியும்! சமயவாழ்வுக்குப் பெரு மதிப்பையும் லௌகீக வாழ்வுக்கு மதிப்பின்மையையும், அன்று சிறுமையையும் நமது முன்னோர் — கற்றறிந்த முன்னோர் — கொடுத்ததினாற்றான் நாம் இன்று சாத்திரச்சேறுடி, மதப்பித்துப்பிடித்து, 'வீணே நீறுகின்றோம்; மண்ணாகி நாறுகின்றோம்'. வீண் பெருமை பேசுவதால் யாது பயன்?

நமது முன்னோர் நூல்களிலும் விடுதலை முழக்கம் முழங்கத்தான் செய்கின்றது. அவை விளம்பும் விடுதலைக்கும், நாம் இன்று கோரும் விடுதலைக்கும் நமக்குத் தேவைப்படும் விடுதலைக்கும் மடுவுக்கும் மலைக்குமுள்ள வித்தியாசந்தான்! ஒன்றுக்கொன்று நேர் முரணானவை. ஆனால் விடுதலையென்ற பேச்சு மட்டும் பொது. அதனால் எய்தும் பயன் மாறுபாடானது. இவ்வுலக வாழ்வினின்றும் விடுதலை பெறுவதே பேரின்பமென்றும், அதுவே விடுதலை யென்றும் நமது சமய நூல்கள் கூறுகின்றன; இவ்வுலக வாழ்வை இன்பமயமாக ஆக்குவதற்குரிய வழிகளைத் தேர்ந்து, அவற்றின் மூலம் பூரண சுதந்திரம், அல்லது முழு இன்பம் பெறுவதே விடுதலையாகும் என்று நாம் எண்ணுகின்றோம். இவற்றில் எது சரியென்பது அறிஞர் ஆராய்ச்சிக்குரியதாகும்.

இவ்வுலகில் மனிதன் அடையவேண்டிய பொருள்கள் நான்கு; அவை அறம், பொருள், இன்பம், வீடு என்று குறிக்கப்பட்டிருக்கின்றன. முதல் மூன்றும் இங்கு அடையத்தக்கனவென்றும், நாலாவதாய வீடு இம்மூன்றின் பயனாக மறுமையில் எய்தத்தக்க பேரின்ப நிலையென்றும் விரிவுரை கூறப்பட்டிருக்கின்றது. முதல் மூன்றுடன் நின்றிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்; இல் வாழ்க்கையையே குறிக்கோளாக அவை குறிக்கும்; ஆனால் இம்மூன்றையும் விடப் பெரிதாகக் கொள்ளப்படும் மறுமைக்குரிய பேரின்பமே மனிதன் வாழ்வை அடியோடு குலைத்துவிட்டது. என்று இம்மை மறுமை வகுக்கப்பட்டதோ, என்று விடுதலை அல்லது பேரின்பமென்பது இவ்வுலகிலின்றி மறு வுலகில் தான் அடையப்படும் என்ற நம்பிக்கை புகட்டப்பட்டதோ அன்று மனிதன் வாழ்வில் நஞ்சேறி, எலும் பெலும்பாய், நரம்பு நரம்பாய்த்தின்று, உருக்கிஒன்றுக்கும் உதவாதவனாகப் பித்தேறினவனாக, உழுத்தமரம் போன்றவனாக ஆக்கிவிட்டது.

மனித வர்க்கத்துக்குச் செய்யப்படும் கொடுமைகளில் இதைவிட மிகப் பயங்கரமான கொடுமையிராதென்றே துணிந்து கூறலாம். நமது முன்னோர்களின் பரிசுத்தத் தன்மையும், தூய வாழ்வும், பக்திப்பெருக்கும், பாரமார்த்திக சிந்தனையும் மிக மேம்பட்டன; எத்தேயத்தினரும் போற்றத்தக்கனவென்று கூறினும், இன்று நாம் இவ்வளவு மோசமான நிலையிலிருப்பதற்குக் காரணமும் மேற்சொன்ன குணங்களே என்று கூறுதிருக்க முடியாது. மறுமையிருக்கட்டும்; மறுமையில் பேரின்பமடைய முடியும் என்றுமிருக்கட்டும்; அதற்காக இவ்வுலக வாழ்வை ஏன் ஒறுக்கவேண்டுமென்றுதான் அவர்கள் சிந்திக்கவில்லை. கடவுள் ஒருவர் மனிதனைப் படைத்திருந்தால், அவரது ஆணைப்படி நாம் ஏதோ செயலாற்றுதற்காக இங்கு படைக்கப்பட்டிருந்தால், அவரது விருப்பப்படி நடந்து மேற்கதியடைய வேண்டுமானால் நமது அறிவை வளர்த்து, வாழ்வை இன்ப வாழ்வாக ஆக்குவதே அவரிட்ட கட்டளையாக இருக்க முடியுமேயன்றி, என்றும் துன்பப்பட்டு, அழுந்திச் சாகாமல் சாகவேண்டுமென்றிருக்க முடியாதென்று திட்டமாகக் கூறலாம். இதனாலன்றோ "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்றும், "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்றும் பல மொழிகள் கிளம்பின. மனவிரக்கமும், அறிவும், பணமும், இல்லாதவனும், இன்பமின்றித் துன்பமே பட்டுக்கொண்டிருப்பவனும் எக்காலத்தும் தன் கடமையைச் செய்ய இயலுமோ? ஒருபோதும் முடியாது.

"வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம். பாழ் போவது பிறவிக்கடல்" என்றெழுந்த வாக்கு இல்வாழ்வின் நிலையற்றதன்மையைக் குறிக்கின்றது. இவ்வுலக வாழ்வு துன்பமயமாகவே யிருக்குமென்றும், முன் ஜன்மத்தில் செய்த பாவபுண்ணியங்கட்குத் தக்கபடி இங்கு நல்வினை தீவினை அனுபவிக்கவேண்டுமென்றும், இந்த ஜன்மத்தில் செய்யப்படும் நல்வினை தீவினைகட்குத் தக்கபடி மறு ஜன்மத்தில் பலன் கிடைக்குமென்றும், தீவினையற்ற வாழ்வு முடிவில் பிறப்பிறப்பில்லாப் பேரின்ப நிலையைத் தருமென்றும் நம் முன்னோர் கருதினர். இது அறிவுக்கு எவ்வளவு தூரம் பொருத்தமாயிருக்கிறதென்பதை அனுபவத்தோடு

பொருத்திப் பார்க்க வேண்டுகிறேன். நல்வினை தீவினைக்குத் தக்க படி பிறப்பென்றால் எத்தனை ஜன்மங்களில் ஒருவன் தன் தீவினைகளை முற்றும் ஒழித்துப் பலன்பெற முடியுமென்பதும், எக்காலத்திலாவது இது சாத்தியப்படுமாவென்பதும் ஊன்றி யோசிக்கத் தக்கனவாகும். நிற்க,

இது மாயவாழ்க்கை; பிறவிப்பெருங்கடல் துன்பமயமானது; இதை விட்டு என்றும் அழியாத, எல்லையற்ற இன்பத்தைத் தரும் நிலைதான் பேரின்ப நிலையென்றும் அதை அடைவதே ஜன்மத்தின் லட்சியமென்றும் சதா கடவுள் தியானத்திலிருப்பதே அதற்குரிய வழியென்றும் வகுக்கப்பட்ட குறிக்கோள் விடுதலையின் அடிப்படையிலே மாற்றத்தை உண்டுபண்ணிவிட்டது. 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்' என்ற திருக்குறளும் "பிறந்தோருறுவது பெருகிய துன்பம், பிறவாருறுவது பெரும்பேரின்பம், பற்றின் வருவது முன்னது, பின்னது அற்றது" என்ற மணிமேகலை வாக்கும் "ஈதலறம் தீவினை விட்டீட்டல் பொருள்........................ வீடு" என்ற ஔவையார் மொழியும் ஈண்டு நோக்கத்தக்கன.

வாழ்க்கை நிலையற்றதானால், அதில் வெற்றிபெறவோ, அதை இன்பமயமாக நடத்தவோ யார்தான் முனைவர்? இதனாலேயே பலர் வாழ்க்கையில் துன்பப்படுவதே சிறந்த வழியெனக்கொண்டு பொருளிருந்தும் வறியராய், மனைவிமக்கள் இருந்தும் அனைவரையும் துறந்து சன்யாசிகளாய், வீட்டையும் நாட்டையும் விட்டுக் காடடைந்து கந்தமூலாதிகளை உணவாகக்கொண்டு, அருமையான உடலை ஒறுத்து துன்பப்படத் தலைப்பட்டனர். இதுவே மறுமையில் பேரின்பத்தை நல்கும் என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்திருந்தது. உலக வாழ்க்கை ஆசையை அடிப்படையாகக் கொண்டதென்றும், ஆசையை அறுத்துவாழ்வதே முத்திப்பேற்றை அளிக்குமென்றும் நூல்களும் புராணங்களும் எழுதப்பட்டன. மனிதவாழ்வு சிறப்பதற்கு ஏதாவது வழியிருக்கின்றதா என்று எண்ணிப்பாருங்கள். அறத்தை வளர்க்கவும், பொருளை ஈட்டவும், இன்பத்தைப் பெருக்கவும் ஏது வுண்டா என்று உன்னுங்கள். கடவுள் தியானத்தில் கண்மூடியிருப்

பவன் தன் தொழிலை விருத்திபண்ணமுடியுமா? அறிவைப் பெருக்கக்கல்வியை வளர்க்கமுடியுமா?

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் விட்டது விடுதலையென்றால் அத்தகைய விடுதலையால் பயனுண்டா? அறம் பொருள் இன்பம் ஆகியமூன்றையும் பெறுவதே விடுதலையென்று தான் தற்கால அறிவியல் வாதிகள் கருதுகின்றனர். இதுவே யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமாயிருக்கின்றது. இப்பொழுது உலகில் முழங்கப்படும் விடுதலைப்பேரொலி இம்மூன்றையும் பெறுதற்கேயாம். விடுதலைபெற்று ஓங்கிநிற்கும் நாட்டு மக்களெல்லாம் இம்மூன்றையும் பெற்று, கல்வி, அரசியல், பொருளாதாரம், கைத்தொழில் முதலிய சகல துறைகளிலும் செழிப்புற்றுத் திகழ்கின்றனர். இம்மூன்றும் பொருட்டல்ல; மறுமையில் அடையும் இன்பமே பேரின்பம் என்ற லட்சியத்தைக்கொண்ட மக்கள், இம்மூன்றையும் வளர்க்க வழிதெரியாது, வழியை நாடமுன்வாராது, கடவுள், கடவுள் என்ற சிந்தனையிலேயே ஆழ்ந்தவராய், வலியிழந்து, பொருளிழந்து, நெறிபிறழ்ந்து, கடமையுந்தவறி அடிமைப்பட்டுத்துன்பவாழ்வே வாழ்கின்றனர். இவ்விருலட்சியங்களினுடையவும் வேற்றுமையும் பலனும் நாம் இன்று கண்ணாரக் கண்டு அனுபவிக்கின்றோம். இன்றும் பழைய கொள்கையையே வைத்திருக்க வேண்டுமென்று கூறுதல் அறிவுடைமைக்கு ஏற்றதாக இருக்கமுடியுமா? முன்னோர்கொண்ட லட்சியமே நம்மை அடிமைத்தனத்தி லாழ்த்திவிட்டது. அடிமைக்கு இங்கோ, எங்கோ விடுதலையுண்டா?

முக்தியைப்பற்றி மக்கள் பிரமாதமாக எண்ணவும், அதற்காக ஏனைய உடைமைகளையும், இவ்வுலகவாழ்வையுங்கூடத் துறக்கவும் மக்கள் தலைப்படுதற்குக் காரணம் சாஸ்திரிகளும், புராணிகர்களும், மதவாதிகளும் செய்த பெருஞ்சூழ்ச்சியேயாகும். மக்களுடைய நிலையை அவர்கள் தங்கட்குச் சாதகமாக்கிக் கொண்டனர். முத்தியைப்பற்றி மதநூற்களிலும், புராணங்களிலும் பற்பலவாறு விவரிக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு சமயத்தார்க்கும் பற்பல விதமாக முக்தி அளவுபடுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. சதா இன்பவாழ்வு அங்கு நிலவுமாம்; வேண்டியமட்டும் பொன்னை வாரிக் கொள்ளலாம் — எங்கும் கனகமயம். நினைத்ததெல்லாம் தரும்

கற்பகதரு, காமதேனுக்கள். விரும்பியபோதெல்லாம் நம்முடன் கூடி இன்பந்தரத் தயாராக நிற்கும் தேவகன்னிகைகள். மனிதன் ஆசைப்படுவது முக்கியமாக மண், பொன், பெண் இம்மூன்றும் எவ்வித முயற்சியுமின்றி ஓரிடத்தில் வேண்டிய மட்டும் கிடைக்கு மானால் யார்தான் ஆசைப்படாதிருக்கமுடியும்? இன்னும், என் றும் இளமையும் இத்துடன் உண்டு. எல்லாரும் மார்க்கண்டே யர்தான்! கவலை ஒருசிறிதுகூடக்கிடையாது. இந்த நிலைதான் பேரின்பநிலையாம்! இது செத்தபிறகுதான் சித்திக்குமாம். இது பேயுரையென்று பாரதியார் கூறுகின்றார்.

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே யெண்ணியிருப்பார்
பித்தமனித ரவர்சொலும் சாத்திரம்
பேயுரையா மென்றிங்கூதேடா சங்கம்"

கையிலிருக்கும் வெண்ணெயைத் தூர எறிந்துவிட்டு நெய்க் கலைவார்போல், இல்வாழ்க்கையைப் புறக்கணித்துவிட்டு செத்த பிறகு இன்பத்திற்காசைப்படுவது பேயாசைதான். சிவலோகம் சேர்வதே வாழ்க்கையின் லட்சியம், அதுவே விடுதலையென்ற உணர்ச்சி பரவுமானால், மக்கள் தம் அறிவைவளர்த்து வாழ்வை இன்பமயமாக்க முடியுமா? இதனால்தான் நாடு அறியாமையில் ஆழ்ந்தது, மூடப்பழக்க வழக்கங்களெல்லாம் வளர்ந்தன. சிவ லோகத்தைக் கைப்பற்ற என்னென்ன வழிகளுண்டெனப் புரா ணிகர்களும், வைதீக சூழ்ச்சிமிக்க சுயநலக்காரர்களும் எழுதி வைத்தனரோ அவற்றையெல்லாம் மக்கள் கண்மூடித்தனமாக நம்பி, கடைப்பிடித்தொழுகத் தலைப்பட்டனர். சாஸ்திரச்சேற் றுக்கும், சமயக்குப்பைக்கும், புராணப் பொய்மைக்கும், மறுமை மயக்கத்துக்கும் மக்கள் அடிமைப்பட்டுத் தங்கள் இயற்கை விடு தலையைத் துறந்தனர்.

அறத்தை வளர்க்கவும், பொருளை நல்வழியில் திரட்டவும் அவர்கள் முனையவில்லை. சந்யாசிவேடந்தாங்கிய எவர்க்கும் கேட்ட தைக் கொடுப்பதே அறமென்றும், அவர்கட்குக் கொடுப்பதற்கே பொருள் சம்பாதிக்கப்பட வேண்டுமென்றுங் கருதினர். இக்கருத் தைக்கொண்ட பக்தர்கள், குழந்தையறுத்துக் கறி சமைத்துக்

கொடுக்கவும், தம் மனைவியை அடியார்க்குக் கூட்டிக்கொடுக்கவும், வயலில்விதைத்த விதையைப்பொறுக்கிச் சமைத்துக்கொடுக்கவும், கண்ணைப்பிடுங்கிக் கல்சாமி முகத்தில் பொருத்தவும் ஏன் முன் வரமாட்டார் என்றுதான் கேட்கின்றேன். இச் செயல்கள் உண்மையாக நிகழ்ந்திருக்குமாயின் இதில் எத்தகைய வியப்பும் கொள்ளத் தேவையில்லை.

வாழ்க்கையைச் செம்மைப்படுத்தத்தக்க கல்விச்சாலைகளும், ஏழைகளை சம்ரட்சணை செய்யும் அறச்சாலைகளும், தொழிலைப் பெருக்கத்தக்க தொழிற்சாலைகளும் இவைபோன்ற பிறவும் நிறுவப்பட்டனவா? அன்று, அன்று. சோம்பேறிகளை வளர்க்கத்தக்க அன்ன சத்திரங்களும், சாவடிகளும், மூடத்தனத்தை வளர்க்கத் தக்க மடாலயங்களும், சைவர் தின்று கொழுக்கக் குருபூசை மடங்களும் மக்களின் ஏழ்மைத் தனத்தைப் பெருக்கும் கோவில், குளம், திருவிழா, திருப்பணி முதலியனவும், முக்திக்கு வித்தாய தேவார வேத பாடசாலைகளுந்தான் நாட்டில் ஏற்பட்டன. இதைத்தவிர வேறொன்றும் யார்தான் எதிர்பார்க்க முடியும்?

மக்கள் அறிவு மழுங்கிப்போக வேறு காரணமும் உளதோ? மக்கள் அடிமைத்தனத்தில் ஆழ்ந்து அயல் நாட்டார் வசம் சிக்கினதில் ஆச்சரியம் இருக்க நியாயமுண்டோ? தேவைப்படும் பொருள்கட்கு அயலநாடுகளை எதிர் நோக்கும் நிலை உற்றது காரணமற்ற காரியமா? எல்லாம் ஒழுங்காகவும், முறைப்படியுமே நடைபெற்றிருக்கின்றன. சமய வாழ்க்கைச் சிறப்பினால் ஏற்பட்ட பலன் இது! மக்களுடைய பரலோக விடுதலைக்குறி வாழ்வைக் குலைத்துவிட்டது. அநித்தியமான உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குப் பொருள் எற்றுக்கு? அரசு எற்றுக்கு? தொழில் எற்றுக்கு? மதக் கல்வியைத் தவிர பிற அறிவுக்கல்விதான் எற்றுக்கு? ஒன்றுந் தேவையில்லை, மதமும் கடவுளும் திருப்பணியும் மட்டும் போதும்! கிடைப்பது முத்தி. அது தான் விடுதலை. இதுதான் நமது முன்னோர்களும், அவர் தம் நூற்களும் முழங்கிய விடுதலை முழக்கம்.

இன்று நாம் விரும்பும் விடுதலை—உண்மையான விடுதலை—பெறவேண்டுமானால் அடிப்படையான தத்துவத்திலேயே மாற்றத்தை உண்டுபண்ண வேண்டும். நாம் விரும்பும் விடுதலை இவ்

வுலக வாழ்வை இன்பமயமாக்குதற்காகும் என்ற உணர்ச்சி மக்கள் மனத்தில் பதிந்து விடவேண்டும். லௌகிக வாழ்வுக்கும் மத வாழ்வுக்கும் சம்பந்தமில்லை யென்பதைத் திட்டமாகத் தெரிவித்து விட்டால், கடவுளைப் பற்றியும், பரலோகத்தைப் பற்றியும், மறுமையைப் பற்றியும் யோசிப்பதில் வாணாளைக் கழிக்கும் மக்கள் இன்றைய வாழ்வுக்குத் தேவையானவற்றிற் கவனஞ் செலுத்த முற்பட்டு விடுவர். பரலோகப்பித்து அவர்களை விட்டொழியும். இவ்வுலகில் சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்ந்து தவிப்பவர் மறுலகில்—இருக்கிறதோ இல்லையோ—இன்பத்தை அடைய இங்கு முயற்சி செய்வதேனோ? அம்முயற்சி பயனளிக்கக்கூடுமா? 'கவலை துறந்திங்கு வாழ்வது வீடு'. அதுதான் நாம் வேண்டுமென்று கூறுகின்றோம். மக்கள் கவலையற்ற வாழ்வு வாழ என்னென்ன தேவை யென்பதை உணர்ந்து அவற்றை அடைய நம் அறிவைச் செலுத்தி முயற்சிப்பதே தக்க வழியாகும். இதில் வெற்றிபெறுவதே உண்மை விடுதலை. இவ்விடுதலையைப் பெற முக்கிய கருவியாக இருப்பது அறிவு. அறிவே கடவுள் என்பது பாரதியார் கருத்து. அறிவொன்றினால்தான் மக்கள் இன்பத்தை அடைய முடியும். பிறநாடுகளெல்லாம் இன்று சிறந்தோங்குதற்குக் காரணம் அங்குள்ள மக்கள் அறிவைப் பெருக்கியிருப்பதேயாகும்.

'சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ?'—பல
பித்த மதங்களிலே தடுமாறிப்
பெருமை யழிவீரோ?

இன்று நமக்குக் கிடைத்துள்ள சாத்திரங்களிலும், மதங்களிலும் பழம் பொய்மைக் குப்பைகளையன்றி வாழ்வுக்குப் பொருத்தமான, அவசியமான உண்மை யெதுவும் காண்கின்றோமில்லை. மக்கள் அத்தனைபேருக்கு மொன்றாய் அறிவை வளர்த்திட வேண்டும். மதமும், கடவுளும், சாஸ்திரமும் அறிவைச் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றன. அறிவை வளர்த்தால் உண்மை விடுதலைக்கு வழியை தாமே கண்டுபிடித்துக்கொள்வர். அதைவிட்டு மனத்துள்ளே பழம் பொய்கள் வளர்ப்பதாலே இன்னலுற்று மாந்தரெல்லாம்

மடிவரன்றி வேறு நேர்வதில்லை; செத்த பிறகு திவலோகம் சேரப் போவதுமில்லை!

'மதமென்றும் சமயமென்றும் சாத்திரங்கள் என்றும்
மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள் வாழும்
பதமென்றும் பதம் அடைந்த பத்தர் அனுபவிக்கப்பட்ட அனுப
[வங்கள் என்றும் பற்பலவாவிரிந்த
விதம் ஒன்றுந் தெரியாது'

மக்கள் மயங்கிக்கிடக்கின்றனர். அவர்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்துவதே காலத்துக்கேற்ற ஊழியமாகும். மக்கள் மதி யைக் கெடுத்தது சமயந்தான்.

'பொய்மைதீர, மெய்மை நேர
வருத்தமொழிய வறுமை யொழிய
வையமுழுதும் வண்மை பொழிய'

உதவுவதே விடுதலையாகும். இந்த விடுதலைக்குப் பாடுபட முன் வருவதே சிறந்த தொண்டாகும். கல்வி வளரின் பல காரியங் கையுறும்; வீரிய மோங்கிடும்; அல்லலொழியும்; மக்கள் வாழ்வு இன்ப வாழ்வாகும். எத்துறையிலும் அவர்கள் சிறந்து விளங்கு வர். நாகரிகம் முதிரும். மூடக்கொள்கைகள் மண்மூடிப்போக, நவீனக் கொள்கைகள் தலை சிறந்து நிற்கும். ஏமாற்றுப் பிழைப் போர் வேறு வழியின்றி உண்மை வழிக்குத் திரும்புவர். சமத்து வம் வளரும். அன்பு தழையும். அறிவு ஓங்கும். எல்லா மக்க ளும் பேதமின்றி இன்பத்தில் திளைப்பர். நாடு செழிக்கும். செங் கோல் நிலவும். தன்னரசு தனித்தாளும். பிற நாடுகளுடன் நம் நாடும் தலை நிமிர்ந்து நாணமற்று நடக்க முடியும். அதுவே உண் மை விடுதலை; பூரண விடுதலை; அதை அடையவே ஒவ்வொரு வரும் முயற்சிக்க வேண்டும். தடை செய்வனவற்றைத் தாளாது தகர்த்தெறிய வேண்டும். எங்கும் விடுதலை முழக்கம் முழங்குக.

# வேத மகிமைகள்.

திரு. நீலாவதி அம்மையார் எழுதுவது.

பெரியோர்களே! வேதம் என்பது கடவுளால் சொல்லப்பட்ட நீதிவாக்கியங்கள் நிறைந்த ஓர் நூலென்பதை நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கக்கூடும். ஆனால், இது எனது முடிவல்லவென்பதையும் நீங்கள் அறிந்திடல் வேண்டும். வேத மகிமைகளைப்பற்றி ஈண்டு விளம்புவதென்னில் காலமும் போதாது. நமது தருமைக் குமரன் இடமும் தாரான். ஆயினும் ஒன்றிரண்டு கூறுதல் மிகவும் நலமே. வேதத்தைப் பார்ப்பனர் தவிர ஏனையோர் படித்தல் கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கின்றது. இதன் ரகசியம் பிரமாதமல்ல. தாம் எழுதிவைத்திருக்கும் வஞ்சகங்களைப் பிறர் அறிந்துகொண்டிடின் தம் கதி என்னகுமென்னும் எண்ணமேயாகும். இனி விஷயத்தில் செல்லுவோம். மக்களின் யுக்திவாயிலை அடைத்தவர்கள் பார்ப்பனர்களே யாவர். அதற்கு உதாரணம் ஒன்று.

ஸ்ருதி ஸ்துவேதோவிஜ்ஞேயோ தர்மசாஸ்த்ரம்து வைஸ்ம்ருதி
தேஸர் வார்த்தேஷ்வமீமாம்ஸ்யே தாப்யாம் தர்மோவிநிச்சித
யோவமன் யேததேமுலே, ஹேதுசாஸ்தராஸ் ரயாந்நர
ஸஸாது பிர்பகிஷ்கார்யோ, நாஸ்திகோ, வேதநிந்தக. (மனு)

இதன் பொருளென்னையெனில், "வேதங்களும் ஸ்மிருதிகளும், தருமத்திற்கு இருப்பிடங்களாதலால் இவைகளை யுக்திவாயிலாக எவனுவது கண்டிக்க முயன்றால் அத்தகைய வேதநிந்தகனை நாஸ்திகனை நல்லோர்கள் ஊரைவிட்டுத் துரத்திவிடவேண்டும்." என்பதாகும். வேதங்களும் ஸ்மிருதிகளும் தருமத்திற்கு இருப்பிடங்களென்று கூறியிருப்பது வியக்கத்தக்கதாகவே யிருக்கிறது. ஆனால், மனுநீதியில் கூறியிருப்பவை அனைத்தும் வியக்கத்தக்கதேயெனினும், தருமத்தின் இருப்பிடங்களைப் பற்றிக் கூறியிருப்பது பெரிதும் வியப்புற வேண்டியதே! தருமத்திற் கிருப்பிடங்களான வேத, ஸ்மிருதிகளை யுக்திவாயிலாகக் கண்டிக்க முயன்றால் அவர்களை, அவ் வேதநிந்தகர்களை நல்லோர்கள் நாட்டைவிட்டுத் துரத்திவிடவேண்டுமென மனு (அ) நீதி மார்தட்டும் நேர்மையை என்னென்று எடுத்துரைப்பது? வேதத்தைப்பற்றி நாம் ஆராயப் புகு

வோமானல் அது பெரும் ஆபாசமாகவே வந்து முடியும். தருமத்திற்கு இருப்பிடங்களென்றால் நான்கு வருணத்தைப் பிரித்து, அவர்களில் இன்னின்னாருக்கு, இன்னின்ன தருமம் என்று ஏற்படுத்திப் பிளவுபடுத்தியிருப்பதைத்தான் கொள்ளவேண்டும். நான்கு வருணங்களுக் கேற்பட்டிருக்கும் தருமங்களைப்பற்றிப் பின்னால் பேசிக்கொள்வோம். நிற்க, யுக்திவாயிலாகக் கண்டிக்க முயன்றால் என்று குறிப்பிட்டது என்ன அறிவோடு என்பது எனக்கு விளங்கவில்லை. அக் கூற்றுப்படிப் பார்த்தால் யுக்திக்கு ஒத்து வராமலே அவை சொல்லப்பட்டிருக்கின்றன வென்பதும் யுக்தியினால் கண்டிக்கக்கூடியனவே யாகுமென்பதும் நன்குவிளங்குகிறது. மேலும், இந்த வார்த்தையைக் கொண்டே, வேத, ஸ்மிருதிகள் யுக்திக்கு ஒத்துவராதென்றும், அது உண்மையறிவுக்கு முரண்பட்டு, அறியாமைக்கும், அநியாயத்திற்கும், மௌடீகத் தன்மைக்குந்தான் ஒத்துவருமென்றும், அதற்கேற்ற வாக்கியங்கள்தான், சுலோகங்கள்தான் அதில் நிறைந்துகிடக்குமென்றும் தெற்றென அறியலாம். மேலும், 'நல்லோர்கள்' என்றால் யார் நல்லோர்கள் என்பது தெரியவில்லை. எந்த, மனப்பான்மை கொண்டவர்களுக்கு எந்தக் கொள்கையுடையவர்களுக்கு எந்த ஆசார, அநுஷ்டான தர்மங்களை அநுஷ்டிப்பவர்களுக்கு இந்த 'நல்லோர்கள்' பட்டம் நல்கப்பட்ட தென்பதும் திட்டமாய்த் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், மதவாதிகளை, சாத்திர அபிமானிகளை, சமயாச்சாரிகளை, வேத ஸ்மிருதிகளை நம்பி, அதன் ஆக்ஞைப்படி நடக்கும் அறிவாளிகளை, 'நல்லோர்கள்' என்று குறிப்பிட்டிருந்தாலும் இருக்கக்கூடும். அது இருக்கட்டும். ஆபாசமும் அநியாயமும், கொடுமையும் நிறைந்த வேத ஸ்மிருதிகளை யுக்தி வாயிலாகக் கண்டிக்க முயல்பவர்களை நல்லோர்கள் நாட்டை விட்டுத் துரத்திவிடவேண்டு மென்றன்றோ முன் எடுத்துக்காட்டிய சுலோகம் வலியுறுத்துகின்றது. ஆம்! அது சரி. அங்ஙனமே யுக்தி வாயிலாக, வேத ஸ்மிருதிகளை, இதிகாச புராணங்களை, சாஸ்திர (அ) நீதிகளை இனிமேல் கண்டிக்க முயலாமல் இப்போதே கண்டித்து வரும் சுயமரியாதைக்காரர்களாகிய எங்களை, வேத நிந்தகர்களாகிய எங்களை நாட்டைவிட்டு ஏன் துரத்தவில்லை? குறிப்பிட்டபடி நல்லோர்கள் இல்லையா? அல்லது நல்லோர்கள் யாவ

ரும் தமது சரக்குகளை (கொள்கைகளை) அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்களா? அல்லது தங்கள் மேலான வேத சாஸ்திர நீதிகளை, அந்நிய நாடெங்கும் ஆல்போல் தழைத்திடச் செய்வான் வேண்டி பிரசாரம் செய்ய மேல்நாட்டுக்கே சென்றுவிட்டார்களா? வேத நிந்தகர்களாகிய எங்களை, நாத்திகர்களாகிய எங்களை, மனுவின் நீதிவாக்கியத்தை உணர்ந்த, நல்லோர்கள், பெரியோர்கள், ஆத்திகர்கள், இவ்வாறு துளிர்விட்டு வளர விடுவது, வளரவிட்டுக்கொண்டிருப்பது என்னவோ ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஒன்று, மனு சுலோகத்தில் கூறப்பட்ட நல்லோர்கள் பூண்டு நமது நாட்டிவில்லாமலே அற்றுப் போயிருக்கவேண்டும். அல்லது, சுயமரியாதைக்காரர்களை நாட்டை விட்டுத் துரத்தத் தற்போதிருக்கும் இங்கிலீஷ் அரசாங்கம் இடங்கொடுக்காதிருக்கவேண்டும். அரசாங்கம் மட்டும் வேறுவிதமாயிருந்திருக்கும் பட்சத்தில் நடந்திருக்கும் சங்கதிகளெல்லாம் வேறுதான். இதற்குள் நாட்டைவிட்டுத் துரத்துவது மட்டுமல்ல, இன்னும் எவ்வளவோ கொடும் ஆக்கினைகள் நடந்தே தீர்ந்திருக்கும். அதென்னவோ வைதீக ஆட்சி வாழாமல், ஆங்கில ஆட்சி தாண்டவமாடுகின்றது. வேத ஸ்மிருதிகளை யுக்தி வாயிலான் அலசிப்பார்க்க ஆரம்பித்தால் கடுகளவைக்கூட மிச்சம் வைக்காமல், எல்லாவற்றையும் போட்டுக் கொளுத்தத்தான் நேரிடும். விதண்டாவாதம் பேசும், வேத ஸ்மிருதிகளை அறிவுடையோர் யுக்தி வாயிலாற் கண்டித்து அதன் வண்டவாளங்களை வெட்ட வெளிச்சமாக்கிவிடின் தமது புரட்டுப்பிழைப்பு மண்ணாய்ப்போய் விடும் என எண்ணித்தான், நாத்திகரென்றும், நாட்டைவிட்டுத் துரத்த வேண்டுமென்றும் ஏடுகளில் எழுதிவைத்துவிட்டார்கள். ஆனால், தற்போது நாத்திகப்பட்டத்திற்குச் செல்வாக்கு அதிகமிருக்கிறதென்பதையும் நாத்திகப்பட்டம் ஒவ்வொருவரும் காத்திருந்து பெறும் காலம் இதுவென்பதையும், வேத ஸ்மிருதி அபிமானிகளும், சாத்திரபுராண சம்பன்னர்களும், ஆத்திக சீலர்களும் அவசியம் உணரவேண்டுகிறேன்.

# நாள் செய்வது நல்லோர் செய்யார்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதியது.

நம் தமிழ்நாட்டுப்பழமொழிகளில்இதுஒன்று.இதன்பொருள் வெள்ளையாக விளங்குகிறது. அதாவது நாள் செய்யக்கூடியதை நல்லவர்கள் செய்யார்கள் என்பதே. ஆனால், நாள் செய்கின்ற நன்மையை நல்லோர் செய்யாரா? நாள் செய்கின்ற தீமையை நல்லோர் செய்யாரா? என்ற ஐயப்பாடு நமக்கு உண்டாகின்றது. ஏனெனில், இதை இப்பழமொழி விளக்கிக்காட்டவில்லை. ஆகவே இதன் உண்மைப்பொருளை நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒரு புலவர் இதற்குப்பொருள் கூறும்பொழுது "சாஸ்திரம் அறிந்தவர்களைக் கொண்டு பஞ்சாங்கம் பார்த்துக் குறிப்பிட்ட ஒரு நல்லநாளில் செய்யப்பெறும் சுபகாரியங்கள் பெரும்பயனைத்தரும். இவ்வளவு பெரும்பயனை நல்லவர்கள் சொற்படி நடந்து பெறுதற்கு முடியாது" என்று கூறினர். இது உண்மையாகுமானல், நல்லநாள் பார்த்து அஸ்திவாரம்போட்டு, நிலைவைத்துக்கட்டியவீடு கிரஹப்பிரவேசம் செய்த மறுநாள் விழுவானேன்? நல்ல நாள்பார்த்து கடைவைத்த வியாபாரிகள் இன்சால்வென்ட் ஆவானேன்? நல்ல நாள் பார்த்து ஊர்ப் பயணம் சென்றவர்கள் திரும்பிவராமல் போவானேன்? நல்லநாள்பார்த்து சாந்திமுகூர்த்தம் செய்தவர்களுக்குக் குழந்தை பிறக்காமற் போவானேன். குளிசத்தைப்பார்த்து பிரேதத்தை எடுத்து, குளிசத்தைப்பார்த்து பால் தெளித்து, நல்ல கிழமை பார்த்துக் கருமாதி செய்தவீட்டில் மறுபடியும் சாவு விழுவானேன்? நல்லநாள் பார்த்துச் சொல்லுகின்ற ஐயர்களின் வீட்டில் மொட்டத்தலையும், வெள்ளைச் சேலையும் அதிகமாக உலாவுவானேன்? நல்லநாள் பார்த்து நல்ல நேரம் பார்த்துத் தாலிகட்டுகின்ற இந்தியநாட்டில் மட்டும் 15 கோடிப் பெண்களில் $2\frac{1}{2}$ கோடிப் பெண்கள் விதவைகளாகவும் அதிலும் 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட வாலிபமான விதவைகள் 3,91,147, பேரும், 10 வயதுக்குக் கீழ்ப்பட்ட பால்யவிதவைகள் 1,15,285, பேரும், 5 வயதுக்குட்பட்ட அறியாவிதவைகள் 19,487 பேரும், ஒரு வயதுக்குட்பட்ட சிசுவிதவைகள் 1064 பேரும் இருப்பானேன்? நாளும், நேரமும் பாராத புறச்

சமயத்தினர்களிடம் இக்கொடுமைகளும், கொடுஞ்செயல்களும் காணுமற்போவானேன்? என்ற ஐயப்பாடுகள் நமக்கு உண்டாகின்றன. மற்றொரு புலவர் மேற்கூறிய பொருளை மறுத்து வேறு பொருள் கூறினர். அதாவது ஒருவனுக்குக் கோபம் அதிகமாகவிருக்கும்பொழுது நல்லவர்கள் அவனை சாந்தப்படுத்தமுடியாது. ஆனால், நாளானது சிறிது சிறிதாக அவனுடைய கோபத்தைத் தணித்துவிடும். சகிக்க முடியாத துன்பத்தின் காரணமாக, ஒரு மனிதன் தூக்கிட்டுக்கொண்டு மரணமடைய எண்ணும்பொழுது அவனுக்கு நல்லோர்கள் எவ்வளவு கூறினும் ஏற்றுக் கொள்ளான். ஆனால், நாளானது செல்லச்செல்ல அவனுடைய எண்ணத்தை மாற்றிவிடுகிறது. கெட்ட எண்ணமும், கெட்ட பழக்கமும் உடையவர்களை நல்லோர்கள் திருத்திவிட முடியாது. ஆனால், நாட்களாவது பல நாட்கள் ஆவதின்மூலம், அவனுடைய எண்ணத்தையும், பழக்கத்தையும் மாற்றி நன்னிலைக்குக் கொண்டு வந்துவிடும். ஆகவே நாள் செய்கின்ற நன்மையை நல்லோர்களால் செய்ய முடியாது என்பதே.

முதற்கூற்றைவிட இரண்டாவது கூற்றில் சிறிது அறிவு கலந்திருக்கின்றது. அது ஒருவகையில் ஒப்புக்கொள்ளக்கூடியதே எனினும், ஆராய்ச்சியில் நிலைத்து நிற்காது. ஏனெனில் 'பழக்கம்' என்பதில் சில மாறுதலடைந்தாலும் பொய் கூறுதல், குடித்தல் முதலிய பழக்கங்களை நாட்களால் மாற்ற முடிவதில்லை. அதற்குப் பதிலாக நாட்கள் அதிகமாகவே வளர்ந்துவிடுகின்றன. 'எண்ணம்' என்பது ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்காக மாறக்கூடிய தன்மை வாய்ந்தது. கோபம் என்பது விநாடிக்கணக்கில் மாறிவிடும் இயல்பு வாய்ந்தது. ஒருவனுக்கு 1000 ரூபாய் தருகிறேன், ஒரு நிமிடத்திற்கு முந்தியிருந்த கோபத்தை வரவழைத்துக்காண்பி என்றால் அவனாலேயே முடியாது. அறிவுடைய மக்களிடத்திற் காணப்படுகின்ற சினம் நீர்கிழிய வெய்த வடுப்போல மாறிவிடும். இத்தகைய மக்களின் கோபத்தை நல்லவர்களாலும் மாற்றிவிட முடியும். ஆகவே, இப்பொருளைக்கொண்டுதான் இப்பழமொழி பிறந்தது என்று எண்ணுவதற்கில்லை. ஆகவே இதன் உண்மைப் பொருள்தான் என்னவென்று ஆராய்ச்சி செய்யும்பொழுது நமக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

குப்புச்சாமி என்பவன் நாகப்பட்டினத்தில் இருப்பவன். அவனுக்கு மாத வருமானம் ரூ. 20. தாயும், தந்தையும், தமக்கையும், உறவினருமில்லை. தன் கையால் தானே சமைத்து உண்டு வருவதைக்கண்ட சில நண்பர்கள் திருச்சிராப்பள்ளியில் ஒரு பெண்ணைப்பார்த்து மணமுடித்து வைத்தனர். பெண் கர்ப்ப வதியானள். ஏழாவது மாதமாகிய தை மாதத்தின் இறுதியில் கட்டுச்சோறு கட்டிப்போடுவதற்கு நல்ல நாள் பார்த்து, சூலம் பார்த்து ஐயருடைய அனுமதியின்பேரில் திருச்சிக்குப் பெண் வீட்டார் அழைத்து வந்தார்கள். அழைத்து வந்த மாதம் தை மாதம் என்பதை வாசகர்கள் மறந்துபோகவேண்டாம். திரும்பப் பெண்ணை அனுப்பவில்லை. சில நாள் பொறுத்து குப்புசாமி திருச்சிக்கு வந்து பெண்ணை அனுப்பும்படி கேட்டான். மாசி பிறந்துவிட்டது, 8-வது மாதம்அனுப்பக்கூடாது என்று சொல்லி விட்டார்கள். குப்புசாமி நாகைக்குச் சென்று பங்குனி எப்பொழுது பிறக்குமென்று ஆவலோடு எண்ணிக்கொண்டே, கவலையோடு சமைத்து உண்டான். பங்குனி பிறந்து குப்புசாமி திருச்சிக்கு வந்து மனைவியை அழைத்தான். மனைவியின் பாட்டி "பிரசவக்குறி தோன்றுகிறது, நிறைமாதத்தில் இரயில் பிரயாணம் செய்வது நல்லதல்ல. இப்போது அனுப்பினலும் பிரசவத்திற்கு மறுபடியும் இங்குதானே அழைத்துவரவேண்டும். தாயும் பிள்ளையும் வேருக்கி அனுப்புகிறோம்" எனக் கூறினள். குப்புசாமி நாகைக்குச் சென்று தன் பழைய தொழிலைக் கைக்கொண்டான். அவர்கள் சொற்படி பங்குனியிலேயே குழந்தையும் பிறந்தது. குழந்தைபிறந்த 16-ம் நாள் குப்புசாமி திருச்சிக்கு வந்து வீட்டிற்கு அழைக்கும் சடங்கில் கலந்து கொண்டு அடுத்தநாள் நாகைக்கு அழைத்தான். '30 கழிக்கட்டும்' என்று பாட்டி கூறினள். 30 நாள் கழித்து சித்திரைமாதம் குப்புசாமி மிக்க ஆவலோடு மனைவியை அழைத்துப்போக திருச்சிக்குவந்து சேர்ந்தான். குழந்தை பிறந்த இரட்டித்த மாதம் ஆதலால் அனுப்பமுடியாது, மூன்ருவது மாதம் அழைத்துப்போகலாம் எனக்கூறினர்கள். குப்புசாமி வருத்தத்துடன் நாகைக்குச்சென்று தனது தொழிலை மறுபடியும் கைக்கொண்டான். அவனுடைய சமயல் வேலை சம்பாதிக்கும் வேலைக்கு இடையூறு செய்தது.

மூன்றுவது மாதமாகிய வைகாசியும் பிறந்தது. பாவம்! மனைவியின் பாட்டி மண்ணுலக வாழ்க்கையைத் துறந்த செய்தி குப்புசாமிக்கு அறிவிக்கப்பெற்றது. குப்புசாமி கருமாதி வரை காத்திருந்து திருச்சிக்கு வந்துகருமாதி முடிந்த மறுநாள் பெண்ணை அனுப்பும்படி வேண்டினன். 30 கழிக்கட்டும் என்றார்கள். வாய் பேசாது போய்விட்டான். கிழவி இறந்த 30 நாட்கள் கழிந்து ஆனிமீ 3உ அன்புடன் மனைவியை அழைத்துப்போக திருச்சிக்கு வந்தான். பெண்வீட்டார் "நான்காவது மாதம் இரட்டித்த மாதமாயிற்றே! அனுப்பிவைக்க முடியவில்லையே என்று மிகவும் வருத்தத்துடன் கூறி ஐந்தாவதுமாதம் எவ்வித ஆட்சேபணையுமில்லாமல் அழைத்துப்போகலாம்" எனக்கூறினர்கள். போய் விட்டான்.

குப்புசாமிக்குக் கவலை அதிகமாயிற்று. வேலைத் தொந்தரவுகள் அதிகம். சமையல் செய்ய முடியாமல் ஓட்டல் சாப்பாடு சாப்பிட ஆரம்பித்தான். மிளகாய்ப்பொடி அவன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றும் வெகு கஷ்டத்துடன் 30 நாட்கள் கழித்துவிட்டு 5-வது மாதம் பிறந்ததும் மனைவியை அழைக்க திருச்சிக்கு வந்தான். "ஐயோ! ஆடி அடியெடுத்து வைக்கக்கூடாதே! எப்படி அனுப்புவோம்?" என்றார்கள். குப்புசாமிக்கு நாட்களின்மீது வந்த கோபம் அதிகம். என் செய்வது? நாகைக்குப்போய் ஓட்டல் உணவு உண்டு ஆடிமாதத்தை கழித்துவிட்டு ஆவணி பிறந்து திருச்சிக்கு வந்தான். கதையை வளர்ப்பானேன்? 'ஆவணி 6-வது மாதம் இரட்டித்த மாதம்' என்றார்கள். மறுபடியும் வேதாளம் முருங்கமரத்தில் ஏறிக்கொண்ட கதையை எண்ணி ஊருக்குப் போய்விட்டான். ஏழாவது மாதமாகிய புரட்டாசி பிறந்தது. குப்புசாமி திருச்சிக்கு வந்தான். மாதம் பிறந்த கிழமை ஞாயிறு என்பதை வாசகர்கள் மறக்கவேண்டாம். பெண்வீட்டார் மருமகனை நன்கு உபசரித்தனர். பெண்ணை அனுப்பும்படி குப்புசாமி வேண்டினன். "இன்று மாதப்பிறப்பு நாளை அழைத்துப்போகலாம்" என்றார்கள். 2உ திங்கட்கிழமை "கிழக்கேசூலம்" என்றார்கள். 3உ செவ்வாய்க்கிழமை "நிறைந்த கட்டுக்கழுத்தியை வீட்டைவிட்டு அனுப்பக்கூடாது". 4உ புதன்கிழமை "பிறந்தநாள் அனுப்பக்கூடாது" என்றார்கள். 5உ வியாழக்கிழமை "பாட்டிமை"

என்றார்கள். 6உ வெள்ளிக்கிழமை "கட்டுக்கழுத்தியை வீட்டை விட்டு அனுப்பக்கூடாது" என்றார்கள். 7உ சனிக்கிழமை "கிழக்கே சூலம்" என்றார்கள். பாவம்! குப்புசாமி மிகப்பொறுமையாக இந்த முதல்வாரத்தைப் போக்கினான். அடுத்தவாரம் பிறந்ததும் அழைத்துப்போக எண்ணங்கொண்டான் குப்புசாமி. 8உ "பரணி", 9உ திங்கள் "கிழக்கேசூலம்." 10உ 'அனுப்பமுடியாது.' 11உ புதன் "பிறந்தநாள்". 12உ வியாழன் "மரணயோகம்". 13உ "அனுப்பக்கூடாது" 14உ சனி "கிழக்கே சூலம்" என்ற பதில் கிடைத்தது. இதன்படி இரண்டாவது வாரத்தையும் தொலைத்து விட்டார்கள். குப்புசாமி வருந்துகிறான். பாவம் அவன் வாங்கி வந்த விடுமுறை தீர்ந்துபோயிற்று. என்றாலும் மூன்றாவது வாரத்தில் மனைவியை அழைத்துப்போகலாம் என்ற நம்பிக்கையோடிருந்தான். மூன்றாவது வாரம் பிறந்தது. அவ்வாரத்தில் திங்களும் சனியும் கிழக்கே சூலம் என்றார்கள். வெள்ளியும் செவ்வாயும் அனுப்பமுடியவில்லையே என்று வருத்தப்பட்டார்கள். புதன் பிறந்த நாளாகப் போயிற்று. வியாழனும், ஞாயிறும் நட்சத்திரம் நன்றாகவில்லை என்ற பதில்வந்தது. அவனுடைய குமஸ்தா வேலை போயிற்று என்பதை குப்புசாமி அறியான். 4-வது வாரத்தில் கண்டிப்பாய் அனுப்பிவிடுவார்கள் என எண்ணங்கொண்டு நம்பிக்கையோடிருந்தான். அவ்வாரத்தில் மேற்கூறியபடி 5 நாட்கள் போக வியாழனும் ஞாயிறும் நட்சத்திரம் மிகமோசமாகவிருந்து நான்காவாரங்கட்கும் 28 நாட்கள்போக, "29உ ஞாயிறு கரிநாள். 30உ திங்கள் கிழக்கே சூலம்" என்ற பதில் வந்தது. புரட்டாசி மாதத்தில் வேறு நாட்கள் இல்லையே என்று எல்லோரும் விசனப்பட்டார்கள்.

குப்புசாமி நல்ல பையன். மிகவும் ஏழை. பொறுமையும் அறிவும் நிறைய உடையவன். மாமியார் வீட்டில் யார்பேரிலும் அவன் குறை கூற விரும்பவில்லை. பாழாய்ப்போன நாட்கள் புரட்டாசி மாதத்தைக் கொலை செய்துவிட்டனவே என்று வாய்விட்டுக் கூறி வருத்தப்பட்டான். ஐப்பசி மாதம் பிறந்தது. அவன் பெண்ணை அனுப்பும்படி கேட்கவில்லை ஏனெனில் அவன் அடைந்த அனுபவத்தைக்கொண்டு அது "எட்டாவது மாதம், இரட்டித்த மாதம் அனுப்ப முடியாது" என்பதை அவன் அறி

வான். மனம் தளர்ந்தது. தனது அன்பிற்குரிய மனைவியை அழைத்து "போய் வருகிறேன். சுகமாயிரு" என்று கூறி குழந்தைக்கும் ஒரு முத்தமிட்டு நாகைக்குச் சென்று கார்த்திகை எப்போது பிறக்குமென எண்ணிக்கொண்டேயிருந்தான். வீடும் இடிந்து அது மண்டையிலும் விழுந்தது போல குப்புச்சாமியின் புண்பட்ட மனதில் அவனுடைய வேலை போயிற்று என்ற செய்தி புண்ணில் வேல் செருகுவது போன்றிருந்தது. அவன் இருதயம் உடைந்தது. நோய்வாய்ப்பட்டு பாயும் படுக்கையுமாக அவனுடைய வாழ்க்கை மாறிவிட்டது.

கதையை வளர்க்க விரும்பவில்லை. விஷயம் அவ்வளவுதான். எழுதக் கை நடுங்குகின்றது. திருச்சியில் உள்ள குப்புசாமியின் மாமனுருடைய கையில் தந்தி யிருந்தது. அவன் மறு உலகம் சென்ற செய்தியை அறிந்து மனம் பதைத்தது. எல்லோரும் அலறி, அடித்துக்கொண்டு இரயில்வேஸ்டேஷனுக்கு ஓடினார்கள். ஐப்பசி-ஶ்ரீ 8-வது மாதம் என்ருவது, 19உ சனிக்கிழமை கிழக்கே சூலம் என்ருவது பார்க்க முடிந்ததா? இல்லை. குப்புசாமி தன்னுடைய மனைவி சமைத்த உணவை உண்ண ஆவலோடு இருந்தான். ஆனல், அதற்குப் பதிலாக சமைக்காத பச்சரிசியை தன்னுடைய மனைவியின் கையால்தான் பிரேதமாகவிருந்து வாயில் வாங்கிக்கொண்டான்.

அன்பர்களே! இத்தகைய அநீதியை ஒரு நல்ல மனிதன் செய்வானு? நம்முடைய பெரியோர்களில் அறிவிற்சிறந்த ஒருவர் இக் கருத்தை உள்ளமைத்தே நாள் செய்கின்றதீமையை நல்ல மனிதன் செய்யான் என்ற பொருள்பட "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்ற பழமொழியை உண்டாக்கி யிருக்க வேண்டும் என்றே எண்ணுகிறோம். வாசகர்களாகிய நீங்களும் அறிவுடையவர்களாதலினுலே இம் மூன்று பொருள்களையும் நன்கு சிந்தித்து கொள்வதைக்கொண்டு, தள்ளுவதைத் தள்ளி, செய்வன செய்து, சிறப்பெய்தி வாழவேண்டுவதோடு இக்கட்டுரையை இத்துடன் முடிக்கிறோம்.

# பெண் கல்வி.

திரு. வயி. ப. சுப்பிரமணியன் எழுதுகிறார்.

நம்முடைய பத்திரிகைகள் அனைத்தும் வட நாட்டுப் பெண் மணிகளின் வீரதீரங்களைப்பற்றி நெஞ்சம் திடுக்கிடும்படி தினந்தோறும் புதுப்புது விஷயங்களைப் பரப்பி வருகின்றன. வடநாட்டுப் பெண்மணிகளோ சிலர் மகமதிய ஆசாரப்படி கோஷா முறையை அனுஷ்டிக்கின்றவர்கள். அவர்கள் செல்வர்களாயிருப்பினும் ஏழைகளாயிருப்பினும் சூரிய வெளிச்சம் இன்னதென்று தெரியாதவர்களாய் மூலை முடுக்குகளில் பதுங்கிக்கொண்டு தங்கள் வாழ்வைக் கடத்திக்கொண்டு வந்தனர். ஆண் மக்கள் அனைவரும் பெரும் பெரும் கல்வியாளராய் மேற்றிசை நாகரிகத்தின் பிம்பங்களாக உலகத்தைச் சீர்திருத்த அரும்பாடுபட்டுக்கொண்டிருந்த பொழுதும் பெண் மக்களைச் சுத்தமான காற்றுக்கு இழுத்துக்கொண்டு வர முடியாதபடி மதங்களும் ஆசாரங்களும் மூடப் பழக்க வழக்கங்களும் பெருந்தடைகளாக நின்று பயமுறுத்தித் தடுத்துக் கொண்டிருந்தன. ஆனால், கால வேற்றுமையால் நிலைமை மாறுபட்டுவிட்டது. நமது கவிச் சக்ரவர்த்தினியாகிய ஸ்ரீமதி சரோஜனி தேவியாரும் மற்றும் பல பெரிய கௌரவம் நிறைந்த பெண் மணிகளும் சுதந்தரம் என்னும் பெரும் பயனை அடைவதற்காகச் சிறைக்கு இழுத்துக்கொண்டு செலுத்தப்பட்டதைக் கண்டவுடன் பெண்மக்களின் நெஞ்சங்களில் புத்துணர்ச்சி புறப்பட்டுவிட்டது. மதம் ஆசாரம் முதலியவைகளை அகற்றிவிட்டனர். முக மூடிகளைக் களைந்து எறிந்துவிட்டனர். சுதந்தரப் போராட்டத்தின் முன்னணியில் தலைவர்களாக நின்று படையைச் செலுத்த முன் வருகின்றனர். அவர்களுடைய வீரதீரங்களை உலகம் புகழ்ந்து கொண்டு வருகின்றது. இஃது இங்ஙனமாக, நம்முடைய நாட்டுப் பெண்மணிகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். நம் பெண்மணிகளோ, எந்நாளும் சுதந்தரமுடையவர்களாகவே இருக்கின்றார்கள். மேற்றிசை நாகரீகமும் இவர்களைத் தொட்டுவிட்டன. வாலிபர்களான ஆடவசமூகத்தினரும், பிரசாதியினரையும் பிறநாட்டினரையும் கண்டு உண்மையான சுதந்திரத்தினாலும் சமத்துவத்தினாலுமே உண்மையான அன்பும் ஆனந்தமும் உண்டாகின்றனவென்

பதை உணர்ந்து, பெண்மக்களின் விடுதலைக்காக அவர்கள் போராடிக்கொண்டு வருகின்றார்கள். இவ்விடுதலை முழக்கத்தைக்கேட்டவுடன் முதியோர்களும், உலக அறிவும் கல்வியறிவும் அற்ற ஆண் பெண் பலரும் இடிமுழக்கத்தைக்கேட்ட நாகத்தைப்போல் அஞ்சுகின்றனர். ஏன்? இவர்களை மூடப் பழக்கவழக்கங்கள் மூடிக்கொண்டிருக்கின்றன. அறிவும் அழிந்துவிட்டது. பெண் கல்வி பரப்புவித்தலினால் தீய வொழுக்கங்கள் பரவி விடுமென்றும், கணவனுக்கு அன்றி காதலர்களுக்கு கள்ளக்கடிதங்கள் எழுதுவார்கள் என்றும் ஒரு சில சுயநலக்காரர்கள் கூறும் கூற்றைக் கூறி அதைரியப்படுத்துகின்றனர். அதனால், கல்வி தீய வொழுக்கத்தில் செலுத்துமாவென்பதை நாம் ஆராயவேண்டியது அவசியம் நம்முடைய முன்னோர் அனைவரும் மகா ஞானிகள் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். அவர்களே, பெண் மக்களை, உயர்ந்த நிலைமையில் உள்ளவர்களாகவே ஒப்புக்கொண்டன்றோ, உலகத்தை இயக்கும் மகா சக்தியையும், அழியாத பிரகாசத்தைக் கொடுக்கும் அறிவையும், செம்மையைப் பயக்குவிக்கும் செல்வத்தையும், பார்வதி, சரஸ்வதி, லக்ஷ்மி என்னும் பெண்ணுருவங்களாகவே உருவகப்படுத்தி இன்றும் வழிபட்டு வருகின்றனர். ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற பல தமிழ்ப் பெண்மணிகள் அருளியுள்ள நீதிகளைக் கண்டு ஆனந்திக்கின்றனர். கார்க்கி, மைத்திரேயி, போன்ற பெண்மணிகளிடமிருந்து ஞானசம்பந்தமான சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்கின்றனர். தமிழ் மறப் பெண்டிரின் வீரங்களை மெச்சியுரைக்கின்றனர். சீதை, தமயந்தி முதலிய நாரீமணிகளின் கற்பைத் துதிக்கின்றனர். உடனே நம் பெண்மணிகளின் உயர்வையும் சமத்துவத்தையும் நினைத்தவுடன் மனம் அஞ்சுகின்றனர். இவர்களுடைய அறிவும் ஆராய்ச்சியும் இருந்தவாறென்னே? பெண் மக்கள் அனைவரும் அடிமைகளாகவே இருக்கவேண்டுமென்று வாதிக்கின்ற இவர்கள் தங்கள் பெண்கள் பிறர் வீட்டில் கொடுமையாக நடத்தப்படும் போழ்து மனம் கொதிக்கின்றனர். சுதந்திரக்கடவுள் சிருஷ்டித்த சிருஷ்டிகளின் மனித சமூகத்தைத் தவிர மற்றவைகளில் ஆண் பெண் என்னும் வேற்றுமை ஒரு சிறிதும் இன்றென்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆனால், இன்றைய உலகம் பெண்

மக்களுக்குத் தலைமை ஸ்தானத்தைக் கொடுத்து வருகின்றது. அரசாங்கமும் மற்றப் பொது ஸ்தாபனங்களும் இதை உணர்ந்துவிட்டன. இனி நாமும் பெண்மக்களின் வளர்ச்சியை தடுப்போமாயின் பிற்கால சரித்திரத்தில் நம்பெயர்கள் தீயர்களாகப் பொறிக்கப்பட்டுவிடும். நாம் என்றும் வசைமொழிக்கு ஆளாகுதல் கூடாது. பெண்களிடை நாகரீகம் மிகவும் வேகமாகப் பரவிக்கொண்டு வருகின்றது. உண்மையாக, நாம் பெண்மக்களுக்கு செய்ய வேண்டிய கடைமை ஒன்று இருக்குமாயின் அது அவர்கள் மனக்கண்களைத்திறத்தலாகிய கல்வியைச் சுலபமான முறையில் அளித்தலேயாகும். இதனால் தீர்க்கமுடியாத பலகுறைகள் அகன்று விடுவதோடுநம்முடைய சமூகமும் உயர்வானதாகிவிடும. கல்வி நிறைந்த தாய்மார்களின் வயிற்றில் உதித்த குழந்தைகளும் இளமையிலேயே கல்வி நிறையப்பெற்றவர்கள் ஆகிவிடுவார்கள் அல்லவா?

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.

---

## பெண்ணரசிகள் வேண்டும்.

"பெண்களிடம் ஆண்களைவிட பல அருங்குணங்கள் மல்கியிருக்கின்றன" வென்பது ஓர் ஆங்கில அறிஞர் கூற்று. உலக நிகழ்ச்சிகளை நன்ருக ஆராய்ந்து பார்த்தால் இஃது தெற்றென விளங்கா நிற்கும். கடவுள் தன்மை மிக்கது என்று இந்துக்களால் கொள்ளப்படுகின்ற வேதங்களிலும், சங்க இலக்கியங்களிலும், சமய இலக்கியங்களிலும், வைதீக உலகத்திலும் பல மாதர்கள் தலைமையுற்று புருஷர்கட்கு எவ்வாற்ருனும் புறம்போகாது மிளிர்ந்தார்களென்ருல் அதைவிட நம் கூற்றிற்கு வேறு சான்றுகள் வேண்டுவதில்லை. பல்லாயிரக்கணக்கான புருஷர்கள் பெண்களை அடிமைகொள்ள முயன்றிருந்த அந்தக் காலங்களிலும் பெண்கள் தலைசிறந்து விளங்கினர்கள் என்பதைப் பார்க்கும்போது மேற்சொல்லப்பட்ட கருத்து சாலவும் வலியுறுத்தப் பெறுகின்ற

தன்றோ? இன்னும் சிறிது நுணுகி ஆராய்ந்தால் "பெண்கள் அளவுக்கு மிஞ்சிய சாமர்த்தியமுடையவர்கள்" என்றுகூடத் துணிந்து கூறலாம். இக்கருத்துப்பற்றியேதான் போலும் பண்டையோர் "பெண்ணொருத்தி பேசில் பெரும் பூமிதா னதிரும்..................." என்று கூறினார்கள்.

இத்தகைய பெண்கள் பற்பல துறைகளில் மாண்புற்றிருந்தாலும் ஆளும் திறமை என்பது இயற்கையாகவே அவர்களுடைய குணத்தில் மல்கிக் கிடக்கின்றது என்று கூறலாம். இதனை ஜியார்ஜ் பர்னார்டுஷா வென்கின்ற பெரியார் அடியில் வரும் சில வாக்கியங்களால் விளக்குகின்றார் :—

ஃ ஃ ஃ

அதிகாரம் வாய்ந்த அரசனைக்கொண்டிருக்கின்ற எந்த நாடும் கண்ணியம் வாய்ந்த உத்தியோகங்களிலிருந்து புருஷர்களை நீக்கிவிட்டு பெண்களை நியமிக்கின்ற ஓர் சட்டமியற்றுதல்வேண்டும். அதுவே புத்தியுடைமையும் நாட்டின் நலங்கருதுகின்ற தன்மையுமாகும். புருஷர்கட்கு சிறு உத்தியோகங்களைத் தவிர பெரியவற்றிற்கு அருகதையில்லை.

ஃ ஃ ஃ

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஓர் தேர்தல் நடைபெற்றது. அதன் நோக்கம் டெக்ஸாஸ், வைமிங் என்ற இரு பகுதிகளிலும் பெண் கவர்னர்களை நியமிப்பதாகும். பெண்கள்சரித்திரத்தில் இதுவே முதலாவது தேர்தல் முயற்சி. பலர் இம்முயற்சியை எதிர்த்துப் போராடினார்கள். என்றாலும் உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் பெண்கள் ஆண்களைவிட மிகச் சிறந்த புத்திசாலித்தனமான முறையில் ஆட்சிபுரிபவர்கள் என்பது விளங்குமென்று நினைக்கின்றேன். அமெரிக்கக் குடியாட்சித் தலைவர் பதவி தற்போது இருப்பதுபோல 4 வருஷத்துடன் முடிந்துபோகாமல் ஜீவிதம் முழுதும் நீடித்திருப்பதானால் நிச்சயமாகவும் பெண்களையே தலைமைப் பதவிக்குச் சிபார்சு செய்வேன்.

ஃ ஃ ஃ

ஒரு பெண்ணுக்கு புருஷனைவிட மிக சாமர்த்தியமாக நிர்வாகம் புரியவும் மக்களை குற்றேவலுக்குத் தூண்டவும் அரச பக்தியை பெற்றுக்கொள்ளவும் முடியும். குடியேற்ற நாட்டாட்சி நடக்

கின்ற தேயங்களிலுள்ள அதிகாரிகளில் பெரும்பாலோரும் தகுதி யில்லாத புருஷர்களையே உத்தியோகங்களில் நியமிக்கின்றார்கள். ஆனால் பெண்கள் அங்ஙனமன்று. மிகவும் திறமையோடு தகுந்த மக்களை உத்தியோகங்கட்கு எடுத்துக்கொள்ளுவார்கள். புருஷர் கள் பெண்களுக்குக் கீழ் எவ்வித கலவரமுமில்லாது வேலைசெய்வது கண்கூடு. ஒரு பெண்ணுக்கும் புருஷனுக்குமிருக்கின்ற சம்பந்தம் இரு புருஷருக்கிருக்கின்ற சம்பந்தத்தை விட எவ்வளவோ மேலானதாகும். பெண்களுக்குக் கீழ் ஆண்கள் ஒழுங்காக வேலை செய்த நிகழ்ச்சியை விக்டோரியா மகாராணியின் ஆட்சியில் நன்றாகக் கண்டோம்; இப்போது வில்டிமான்ஸ் மகாராணியின் ஆட்சியில் காண்கின்றோம்.

ஃ ஃ ஃ

இன்னும் விளங்கக் கூறினால், எலிஜபத் ராணியார் இங்கிலாந் திலிருந்த மிக மேலான அரசியாவார். அவருடைய காலத்தில் அரசாங்கத்திற்கிருந்த வலிமை கூறவியலாது; அவர் ஒரு யதேச் சாதிகாரி என்றே சொல்லலாம். அவருக்குப் பின்னால் சிங்கா தனத்திற்கு வந்த ஒன்றாவது ஜேம்ஸூம், சார்லஸ் அரசனும் மிக பரிதாபகரமான நிலைமையையடைந்தார்கள் என்றால் என்னே எலிஜபத்தின் திறம்! அவருக்கு ஆளும் கருவியாக இருந்தவை அவரது தோற்றமும் மதி நுட்பமுமேயாகும். அவருக்குப் பின்பு 500 மன்னர்கள் சிங்காசனமேறினாலும் அவரைப்போன்று ஆட்சி செலுத்தமுடியாது.

ஃ ஃ ஃ

பெண்களிடம் நான் காண்கின்ற ஒரு குறை யுண்டென்றால் அது அவர்கள் அளவுக்கு மிஞ்சிய புத்திசாலிகளென்பதாகும். ஸ்வீ டன் தேசத்து கிருஸ்தியன் அரசியைப்போல பலரை நாம் காண லாம். அவர் தமது திறமையால் புருஷரைப்போலவே வாழ்ந்து ஜோன் அப் ஆர்க்கைப்போல தளகர்த்தராக விளங்கினார்.

ஃ ஃ ஃ

பெண்கள் புருஷர்களைப்போல அவ்வளவு பெரிய பேதையர் களல்ல. அவர்கள் குறையெதுவாக இருந்தபோதிலும் புருஷர் களுடைய முடியாத் தன்மையினாலும் பொங்கிய மனோவெழுச்சி யினாலும் அவதிப்படுவதில்லை. அவர்கட்குப் பொது அறிவு மிகுதியு முண்டு; வீட்டு ஆட்சி முழுவதையும் அவர்களுடைய கையி லேயே புருஷன் விட்டுவிடுகின்றான்.

---

# தசரதன் முனிஸிபாலிடி.

பதினாயிரம் ஜனத் தொகையுள்ள ஊருக்கு முனிஸிபாலிடி அவசியமென்று கருதப்படுகிறது. இந்தப் பதினாயிரம் ஜனங்கள் வசிக்கும் ஒரு ஊரில் உண்டாகும் அசுத்தத்தைத் அப்புறப்படுத்தவும், விளக்குகள் போடவும், தண்ணீர் சப்ளை முதலிய வசதிகளைச் செய்யவும் ஒரு முனிஸிபல் ஆபீஸ், அதற்கொரு செக்ரட்டரி, பல இன்ஸ்பெக்டர்கள், எத்தனையோ தொழிலாளர்கள், யானை போன்ற இஞ்சினீரிங் டிபார்ட்மெண்டு, சுகாதார ஆபீசர், அநேகம் கண்ட்ராக்டர்கள், இவ்வளவையும் பராமரிக்க ஒரு கௌன்ஸில், அதில் ஒரு டசனுக்கு மேற்பட்ட கௌன்ஸிலர்கள், அவர்களுக்கேற்ற தலைவர் உபதலைவர்கள் இவ்வளவும் வேண்டியிருப்பதைக் காணலாம். இத்தனை ஏற்பாடும் செய்து பல மோட்டார் லாரிகள் வைத்து வேலை செய்தும் அசுத்தம் போனபாடில்லை. தசரத சக்ரவர்த்தியின் அந்தப்புரத்தை நினைக்கும்போது என்னுடைய வயிற்றைக் கலக்குகிறது. தசரத சக்ரவர்த்திக்கு 60000 பெண்டாட்டி. இத்தனை பேருக்கும் குறைந்த பக்ஷம் ஒவ்வொரு தாதியாகக் கணக்கிட்டாலும் 60000 தாதிகள். சமையலாள், விசேஷப்படியான ஆட்கள், காவலாளர்கள் முதலிய எல்லாம் சேர்த்துக் கூடியவரை சுருக்கிப் பார்த்தாலும் 2 லட்சம் ஜனங்கட்குக் குறைந்திருக்க முடியாது. ஒரு ராஜாவுக்கு—ஒரு ஆண்பிராணிக்கு இரண்டாவது கிளாஸ் பெண்டாட்டி கம்பெனி 2 லட்சம் ஜனத்தொகை கொண்டதாக இருந்திருக்கிறது. இது காரைக்குடி முனிஸிபாலிடியைப்போல சுமார் 20 மடங்கு பெரிதாகும். சென்னபட்டினத்தின் ஜனத்தொகை சுமார் 4 லட்சம். தசரதனின் பெண்டாட்டி முனிஸிபாலிட்டியின் ஜனத்தொகை 2 லட்சம். சென்னபட்டினத்தில் பாதி தசரதன் அந்தப்புர நகராகும். இதற்கொரு பெரிய தனி முனிஸிபாலிடி இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஊர் நாறி நாற்றமெடுத்து மகாராஜாவின் காலடி படமுடியாமல் ஆகிவிடுமல்லவா ? ஆகவே எத்தனை லட்சம் ரூபா இந்த முனிஸிபாலிடிக்கு வருஷந்தோறும் செலவாகியிருக்கவேண்டுமென்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளவேண்டும். இந்த இரண்டு லட்சம் ஜனங்கட்கும் வரும்படியோ தொழிலோ

கிடையாது. ஆதலால் பொது ஜனங்களின் வரிப்பணத்திலிருந்தே இந்த முனிஸிபாலிடிச் செலவையும் செய்திருக்கவேண்டும். தவிர 60000 பெண்டாட்டிகட்கும் நகையும் வீடுகளும் நாற்காலி மேசை சீப்பு கண்ணுடி புடவை வாசனைச் சாமான்கள் வகையில் எவ்வளவு மாதந்தோறும் ஆகியிருக்கும். இதற்குப் பணம் எங்கிருந்து வந்தது? எல்லாம் பொது ஜனங்களின் தலைவரி தானே! இதுதான் தருமராஜ்யமா? தசரதன் தன் பெண்டாட்டி டிபார்ட்மெண்டை இப்படி வளர்த்திருந்தால் இவனுடைய மற்ற சங்கதிகள் எப்படியிருந்திருக்கும்? இப்போது இந்த 1931-ல் இப்படி ஒரு அரசன் இருக்க முடியுமா? இருப்பானு? இருந்தால் என்னவாகும்? பொது ஜனங்களின் வரிப்பணத்தில் செலவு செய்து பெண்டாட்டி முனிஸிபாலிடி நடத்த முடியுமா? என்று ஒரு சந்தேகி எழுதுகிறுர்.

---

## கலி முற்றிவிட்டதா?

ஐயர் மார்கட்கோ அவர்களைப் பின்பற்றி யிருக்கும் வைதீகருக்கோ வழக்கமாக நடக்கிறதை ஆதரித்துச் சுயநலம் அடையத் தெரியுமே தவிர மற்ற சங்கதிகள் பூஜ்யந்தான் என்பது சிறிது புத்தியுடையவர்கட்கும் விளங்கக்கூடும். "கலப்பு மணம் செய்ய வேண்டும்; விதவா விவாகம் செய்யவேண்டும்; தீண்டாதவனை உயர்த்தவேண்டும்; ஜாதி பேதம் பாராட்டக்கூடாது; பெண்கட்கு உரிமை யளிக்கவேண்டும்" என்று சொன்னுல் "கலி முற்றிப் போய்விட்டது" என்று அவர்கள் கூறுவதை எங்கும் கேட்கலாம். சாஸ்திரப்படி கலியுகத்துக்கு மொத்த வருஷம் நாலு லட்சத்து முப்பத்திராயிரமாகும். இதில் இதுவரை 5032 தானே ஆகியிருக்கிறது. இன்னும் 426,968 வருஷம் பாக்கியிருக்கிறது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் கலியுகம் தவழக்கூடிய காலங்கூட ஆகவில்லை யென்பது விளங்கும். பல் முளைக்காது, அப்பா என்று கூடச் சொல்லத் தெரியாத பாலப் பருவத்தில்தான் கலியுகம் இருக்கிறதென்பது விளங்கும். இப்போதே கலி முற்றிப்போய் விட்டதென்று சொல்வதற்குப் பொருளென்ன வென்பதைக் கவ

னிக்கவேண்டும். வைதீகம் மண்டையிலேறி வலுத்துப்போனல் உண்மையும் விளங்காது; புத்தியும் சுவாதீனத்திலிராது போலும்! இப்பொழுதே கலி முற்றிவிட்டதென்று கூறிப் புலம்ப ஆரம்பிப்பவர்கள் கலியுகமானது தவழ்ந்து நடந்து ஓடி ஆடி உலக விவகாரத்தில் தலைப்பட்டு அபார வேலைகளைச் செய்கிறதான அதனுடைய வாலிபப் பருவத்தில் என்ன செய்வார்கள்? கலி பிறந்து வளர ஆரம்பிக்கும்போதே சாமியில்லை கடவுளில்லை சாஸ்திரமில்லை யென்று சொல்ல ஆரம்பித்து விட்டார்களே! போகப் போக என்ன வாகிறதென்று கேட்கிறேன். எத்தனை வைதீகர் மகாநாடு கூட்டினலும் பல்லாவரத்தில் சைவக்கூட்டம் கூடி எவ்வளவு புளியைக் கரைத்துக் குடித்துத் திட்டி மகிழ்ந்தாலும் கலியுகம் 4,32,000 வருஷம் வரை இருந்து எல்லா அக்கிரமத்தையும் செய்துதானே தீரும். அப்படி அநியாயம் செய்யும்படி கலியுகத்தையும் கடவுள் உண்டாக்கிவிட்டு, அப்படி யெல்லாம் நடக்குமென்று திருவாய் மலர்ந்து மிருக்கிறுரே? அதனை ரிஷிகளும் ஒப்புக்கொண்டு புராணங்களிலெழுதிவைத்து விட்டார்களே? அது மாறுமா? அதனை மாற்றி வைதீகத்தை நிலைநிறுத்துகிறேனென்று சிவபக்தர்கள் முன் வரலாமா? முன் வருவது சாஸ்திர விரோதமில்லையா? கலி முற்றி அதாவது 432000 வருஷமும் முடிந்த பிறகு யானைத் துதிக்கை அளவு தாரையுடைய பெரிய மழை பெய்து உலகை அழிக்குமென்று புராணம் சொல்கிறது. அதற்கிடையில் சுவாமி வேதாசலமாவது சிவநேசர்களாவது சைவ சித்தாந்த சமாஜங்களாவது தோன்றிக் கலியை அழித்து தருமத்தை நிலை நாட்டி விடுவார்களென்று பரமசிவன் சொன்ன புராணங்களில் இல்லையே? அப்படி யிருக்க சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய இவர்கள் ஏன் வீண் புலப்பம் புலம்பவேண்டும்? ஏன் கலி முற்றிப்போய் விட்டதென்று பொய்சொல்லவேண்டும்? இப்போது தானே கலி ஆரம்பமாகியிருக்கிறது? இனிமேல்லவோ அதன் பருவகாலம் வரப்போகிறது? இவை யெல்லாம் சிவபெருமான் திருவருளின்படியும் சாஸ்திரப்படியும் ஒழுங்காக நடக்கும்போது மனிதர் புகுந்து மறுப்பது நியாயமாகுமா? பரமசிவன் கோபிக்க மாட்டாரா? என்று சுப்பராமன் எழுதுகிறுர்.

---

# பலதிரட்டு.

## புதிய யோசனை

"தம்பி கெட்டது கெட்டாலும் சாஸ்திரத்தோடு கெட்டான்" என்று வைதீகர்கள் ஆளையும் தள்ள முடியாமல் காரியத்தையும் மறைக்க முடியாமல் சொல்லி சமாதானம் செய்து கொள்வார்கள். அந்தமாதிரி புராணப் புளுகுக்கு ஒருவழி அகப்பட்டிருப்பதாக எனது நண்பர் புளுகுணி சுப்பையர் சொல்கிறார். புராணம் முழுமையும் சுத்தப் புளுகு என்று வெட்ட வெளிச்சமாகிவிட்டதே. இனி என்ன செய்வது என்று நான் கேட்டேன். அவர் சொன்ன பதிலை நான் அப்படியே கூறுகிறேன்:—

வாஸ்தவந்தான்; புராணம் புளுகுதான்; எங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு எழுதப்பட்டதுதான்; மறுத்துச் சொல்ல முடியவில்லை யென்பது வாஸ்தவம்தான்; அதற்காக என்ன? சுயமரியாதைக்காரர் இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டார்கள்; முடிந்தமட்டும் எதிர்த்துப் பார்த்தோம்; முடியவில்லை. அதனால் என்ன முழுகிப்போய்விட்டது? இந்துக்கள் இருபத்து நாலு கோடி. முழுமையும் மூடமாக்கி எங்கள் முன்னோர் வைத்திருக்கிறார்கள். சுயமரியாதைக்காரர் போடுங் கூப்பாடு எத்தனை பேர் காதில் ஏறப் போகிறது? போனது போகட்டுமே! ஒரு லட்சம் போகட்டும்! 10 லட்சம் போகட்டும்! ஒரு கோடிதான் போகட்டுமே! 23 கோடி முட்டாள் எங்களிடம் கும்பிட்டு விழுந்து காசு தந்து ஆசீர்வாதம் பெறக் காத்துக்கொண்டிருக்கிறார்களென்பது ஞாபகத்திலிருக்கட்டும்! பயமில்லை. ஆனால் புராணம் படிக்குமிடத்தில் யாராவது ஒருவர் கேள்வி கேட்டு விடுகிறார். சரியான பதில் சொல்ல முடியவில்லை. இதற்கும் ஒரு சமாதானம் சொல்லியே ஆகவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஜனங்கள் நம்புகிறார்களில்லை. இதற்காக வியாபார சம்பந்தமாக அமுலிலிருந்த ஒரு வழக்கத்தை இப்போது புராணப் பிரசங்கத்துக்குக் கொண்டுவந்திருக்கிறோம். வியாபாரத்தில் பொய்யில்லாமல் முடியாது. ஆதலால் பொய்யினாலேற்படும் பாவம் கறுப்புக் கம்பிளியின் மேலிருந்து சொல்வதால்

பாதிக்கிறதில்லே. அப்படியே கறுப்புக் கம்பிளியின் மேலி ருந்து புராணப் பிரசங்கம் செய்தால் பாவம் தானே விலகிப் பறந்து போகும். பொய்யில்லாமல் புராணம் எழுத முடி யாதாதலால் சிறிது சேர்த்துதானிருக்கிறது. பெரு நெருப் புக்கு ஈரமில்லேயென்றபடி கொஞ்சம் கலந்திருப்பதால் பாதக மில்லே. இருந்தாலும் கம்பிளியின் மேலிருந்து சொன்னல் பாவம் பாதிக்காது என்று சொல்வதென முடிவு செய்தாகி விட்டது. இனிக்கவலேயே இல்லே.

## கற்பைக்கெடுக்கும் திருநாமங்கள்.

சிவா என்று சொல்லாதவருடைய நாக்கை அறுத்துவிட வேண்டுமென்று சைவர்கள் புராணம் எழுதி வைத்திருக்கின்றனர். ராமநாமமே கற்கண்டு என்று வைணவர் கூறுகின்றனர். சிவா என்பதும் ராமா என்பதும் சொல்ல முடியாத பெருமையுடையன வாக இருக்கின்றன. சிவராமன் செட்டியார் மனேவியார் இந்த இரண்டையுஞ் சொல்ல முடியவில்லே புருஷன் பெயரைக் கற்பு டைய பெண்கள் சொல்லக்கூடாதென்று சாஸ்திரஞ் சொல்லுகி றது. புருஷன் பெயரைச் சொன்னல் கற்புப் போய்விடும். கற்பு போனல் முக்தி கிடைக்கவேமாட்டாது. இதைக் கருதினல் சிவா ராமா என்று சொல்ல வகையில்லே. அப்படி ஒரு நாளாவது சொல்லாதிருக்கிற ஜென்மத்துக்கு முக்தி கிடையவே கிடையாது. இதற்கென்ன செய்யலாம்? புருஷன் பெயர் சொல்லக் கூடா தென்ற சாஸ்திரப்படி பார்த்தால் இந்த சிவராமன் செட்டியார் மனேவி சிவா ராமா என்று சொன்னல் நரகத்துக்குப் போவது நிச் சயமாக இருக்கிறது. இந்தக் காரணத்தால் உபதேசங்கேட்ட பெண்கள் ஜபஞ்செய்ய முடியாமலிருக்கிருர்கள் எம்பெருமா னுடைய திவ்ய திருநாமங்களே உச்சரிக்காதவர்கள் தப்பாமல் நரக மடைவார்களென்று சந்தேகமில்லாமல் சாஸ்திரங்கள் சொல்லு கின்றன. சங்கடங்கட்கிடையில் பெண்மக்களே விட்டுத் துன்பப் படுத்துதல் நியாயமல்ல. இதற்கு ஒரே வழிதான் உண்டு. ஆண் மக்களுக்கு சுவாமிகளின் பெயரை வைக்கக்கூடாது. முக்கியமாக எந்தப் பெயர் சொன்னல் முக்தியைத் தருமோ அந்தப் பெயரை யாவது அது சம்பந்தப்பட்ட பெயரையாவது ஆண் மக்கட்கு வைத்தல் கூடாது. அப்படியானல் பெண் மக்கள் எல்லாரும்

தடையில்லாமல் எல்லாத் திவ்ய திருநாமங்களையும் தாராளமாகச் சொல்லி முக்தியடைதல் கூடும். உண்மையில் சாஸ்திர நம்பிக்கையுள்ள ஆஸ்திகர்கள் இனிமேல் தங்கள் பிள்ளைகட்குக் கடவுள் பெயரை வைக்காதிருக்கவேண்டிய தவசியமாகும். இப்படி சுவாமி பெயர் வைப்பதால் கட்டாயமாகச் சில பெண்கள் நரகத்துக்குப் போக வேண்டி நேருகிறது. அந்தப் பாவத்துக்குப் பேர் வைத்த தாய் தந்தையரே ஜவாப்தாரியாக இருக்கிறார்கள் என்று ஒரு பக்தர் எழுதுகிறார்.

## பிள்ளையாருக்குக் கம்பளிச்சட்டை.

எனக்குக் கொஞ்சம் இரக்கமான புத்தி. வீதியில் செல்லுகிறபோதெல்லாம் அரசமரத்தடியிலும் ஊருணிக் கரையிலும் முச்சந்திகளிலும் இருக்கும் பிள்ளையார்களைப் பார்க்கும்போது ஐயோ என்று வருகிறது. பனியோ சொல்ல முடியவில்லை. இரவிலும் காலை நேரத்திலும் வாடை ஆட்டுகிறது. சிவ பக்தர்கள் பிள்ளையார் பக்தர்கள் யாவரும் உள் வீடுகளைத் தாளிட்டுக்கொண்டு சட்டை, கம்பிளிகளைக் கொண்டு மூடி முக்காடு போட்டுப் படுத்துக்கொள்கிறார்கள். காலையிலும் கரடிமாதிரி கம்பிளிக்குள் மறைந்துகொண்டே நடமாடுகிறார்கள். வெயில் வந்தபிறகு வென்னீரில் தலை முழுகிவிட்டுத் தேங்காயை யெடுத்துக்கொண்டு பிள்ளையாரிடம் வருகிறார்கள். இவர்கள் செய்வது புரட்டுப் பக்தியாக இருக்கிறது. இவர்கள் காரியங்களை ஒழுங்காக முடித்துக்கொண்டு பிள்ளையாரிடம் வந்து ஒரு கும்பிடு போட்டுத் தேங்காயை உடைத்துவிட்டு தங்களால் முடியாத பல காரியங்களையும் முடித்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். பிள்ளையார் முடித்துக்கொடுக்கிறாரா இல்லையா வென்பதொருபுறமிருக்கட்டும். முதல் நாள் காலையில் தேங்காயுடைத்துவிட்டுப் போன இந்த பக்தர் மறுநாள் வேலையெல்லாம் முடித்துக்கொண்டுதான் மறுபடி வருகிறார். இது நியாயமா? யோக்கியப் பொறுப்பாக இருக்கிறதா என்பதே என் கேள்வி. பனியிலும் வாடையிலுமிருந்து தெருப்புழுதி மூக்கு வாய் கண் காது முதலிய இடமெல்லாம் புகுந்து கஷ்டப்படுத்தப் பிள்ளையார் வெகு பாடு படுகிறார். இதைப்பற்றிப் பக்தர்கள் கவனிக்கிறதேயில்லை. மதுரையிலிருந்த பாண்டியன் இடது காலைத் தூக்கி ஆடு

வது போலிருந்த நடராஜ விக்கிரகத்தைப் பார்த்து ஒரு காலிலே ஆடினால் கால் வலிக்குமே என்று அழுது கதறினாராம். உடனே சுவாமியானவர் இடதுகாலை மாற்றி வலது காலைத் தூக்கி அன்று முதல் மதுரைக் கோயிலில் ஆடிக்கொண்டிருக்கிறார். அந்தமாதிரி தற்கால பக்தர்கள் விண்ணப்பம் போட்டு ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் காஷ்மீர் தேசத்துக் கம்பிளியிலாவது ஒரு சட்டை கனமானதாகத் தைத்து ஒவ்வொரு பிள்ளையாருக்கும் பனி வாடை நீங்கும் வரை போட்டுவைக்கலாம். இதற்குச் சிவ பக்தர்கள் முயற்சி செய்ய வேண்டிய தவசியமாகும் என்று ஒரு கம்பிளி வியாபாரி எழுதுகிறார்.

## வாகனம் பெருமாளை விழுங்குகிறது.

ஆகாயத்தில் பறக்கிற கருடனைப் பார்த்தவுடன் கன்னத்தில் பலர் போட்டுக் கொள்வதைக் காணலாம். காரண மென்ன வென்றால் மகாவிஷ்ணுவின் வாகனமாம். மகாவிஷ்ணு பெரியவர். அவருடைய வாகனத்துக்கும் மதிப்பு செலுத்த வேண்டியதுதான். ஸ்ரீ ராமபிரானுடைய செருப்புக்குப் பட்டாபிஷேகம் செய்த திரு நாடல்லவா இந்தப் புண்ணிய நாடு! போகட்டும். இந்த மகா விஷ்ணு மச்சாவதாரம் எடுத்தாரே, அந்தத் திருவவதாரமான மீனை ஏன் பலரும் விழுங்குகிறார்கள்? வாகனமாக இருந்த ஒரிஜினல் கருடன் இப்போது காணக் கிடைக்கிறதில்லை. அதனுடைய டூப்ளிக்கேட்டுக் கருடன் தான் இங்கே திரிகிறது. இந்தப் பெருமாளின் வாகனமே பெருமாள் அவதாரமான மீனைக்கொன்று விழுங்கிக்கொண்டிருக்கிறதே! இதற்குக் காரணமென்ன? அவதாரத்தைத் தின்னுகிற வாகனத்தை வணங்குவது ஒழுங்கா என்று கேட்கிறேன். இரண்டாவதாக மகாவிஷ்ணுவினுடைய அவதாரமான பன்றி யம்பெருமானை வணங்க வேண்டாமா என்ற கேள்வி பிறக்கிறது. ஆமைகளின் கதியென்ன? பெருமாளின் வாகனத்தைக் கும்பிட்டால் போதுமா? மற்ற கடவுளர்களின் வாகனமான மூஞ்சுறு, மாடு, மயில், ஆடு, நாய் முதலியவைகளையும் பயபக்தியோடு வணங்க வேண்டாமா? பக்தியை வளர்ப்பதென்றால் இவற்றை யெல்லாம் வணங்கும்படி ஏற்பாடு செய்தலே யாகும். கருடனை மட்டும் இப்போது ஜனங்கள் வணங்குகின்றார்கள். பக்தியை வளர்க்கிற

தென்றல் மற்ற வாகனங்களின்மீதும் பக்தி ஏறி வளரும்படி செய்தலே நியாயமாகும். சிவநேயர்கள் கவனிக்கவேண்டும். பெருமாள் வாகனத்தைப் பறக்கவிட்டு வணங்குவதும் சிவனுடைய வாகனமான மாட்டை வயலில் இடுப்பொடிய உழுவதும் பார வண்டியில் கட்டி யடிப்பதும் வெட்டிச்சாப்பிடுவதும் நியாயமன்று. இவைகளைப் பார்த்துக்கொண்டு சைவர்கள் சகித்திருப்பது அம்மா பெருங் கொடுமையாகும் என்று பன்றிகள் மகாநாட்டுக் காரிய தரிசி நடராஜன் எழுதுகிறார்.

## குடுமி எங்கே?

கோயில் சுவாமிக்குத் தேங்காய் உடைக்கிறார்களே! மதுரையில் குடுமியில்லாத தேங்காய் செலவாணியாகவில்லை. மதுரைச் சொக்கலிங்கர் மீனாட்சி முதலிய சுவாமிகட்குக் குடுமியுள்ள தேங்காய்தான் உடைக்கவேண்டும். குடுமி யில்லாவிட்டால் கோவிலுக்குப் போகும் பக்தர்கள் வாங்கவே மாட்டார்கள். ஆனால் திருநெல்வேலியில் குடுமியுள்ள தேங்காய் அகப்படவே மாட்டாது. சாணி உருண்டை மாதிரி குடுமியில்லாமல் கடைகளில் தேங்காயை வைத்திருக்கிறார்கள். இதனையே எல்லா பக்தர்களும் வாங்கி நெல்லையப்பருக்கும் காந்திமதியம்மனுக்கும் மற்ற குட்டிச் சுவாமிகட்கும் உடைக்கின்றனர். காரணமென்ன? மதுரைச்சாமிக்குத் தேங்காய்க் குடுமியில் வந்த பிரியமென்ன? திருநெல்வேலிச் சாமிக்குக் குடுமியில் வந்த கோபமென்னவென்பது தெரியவேண்டும். இதைப்பற்றித் தகுந்த ஆராய்ச்சி செய்து சிவநேசர்கள் ஒரு அறிக்கை வெளியிடவேண்டும். மதுரைச் சிவபெருமானையும் திருநெல்வேலிச் சிவபெருமானையும் விரைவில் கேட்டு ஒரு சமாதானம் செய்து ஒரு மாதிரியான தேங்காயை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும். இதற்கு அவர்கள் ஒத்துவராவிட்டால் இரவில் மொட்டைத் தேங்காயும் பகலில் குடுமித் தேங்காயும் உடைக்கும்படி செய்யலாம். எப்படியும் ஒரு சட்டமாக்குவதே சிறப்பாகும் என்று ஒருவர் எழுதுகிறார்.

# குமரன்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு —திருக்குறள்.

சதங்கை ௯ | காரைக்குடி பிரமோதூத-௵ பங்குனி-௴ | மணி ௯

## ஒரே விதி! ஒரே வாழ்க்கை!!

பாரத சமுதாயம் வாழ்கவே — வாழ்க, வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே.

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை. (பா)

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினி யுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி யுண்டோ—புலனில்
வாழ்க்கை இனி யுண்டோ?

இனியொரு விதிசெய்வோம்—அதை
எந்த நாளுங் காப்போம்
தனி யொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

—பாரதியார்.

இப் பாட்டில் பொதிந்து கிடக்கும் ஜீவ சக்தியை நோக்கு தல் வேண்டும். தனியொருவனுக்கு உணவில்லை யென்றால் இந்த ஜகத்தையே தொலைத்து விடலாமென்கிறார். மனிதன் யாவரும் ஓரே குலம், ஓரே இனம் என்ற எண்ணம் நாட்டில் பரவுமாயின், துன்பம் கவலை அடிமை என்பன இருக்குமா? எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை யென்று கூறும் பாரதியார் வாக்கு பொன் னேட்டிற் பொறிக்கத்தக்கனவன்றோ?

---

# கல்யாணம்.

மக்களுடைய உலக வாழ்வு கல்யாணத்திலிருந்துதான் ஆரம் பமாகிறது. கல்யாணமென்பது ஒரு பெண்ணும் ஒரு ஆணும் கூடி இன்பம் நுகர்ந்து குழந்தை பெற்று மகிழ்ச்சியடைந்து உலகி லுள்ள பல்வேறு போகங்களையும் அனுபவிப்பதற்குச் செய்யப் படும் அஸ்திவாரமாகும். ஆண் பெண் என்ற இரு பொருள்கள் மாறுபாடின்றி ஒன்றிக் கலக்கும்போதே இன்பத் தோற்றம் உண் டாகின்ற தென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. உலகிலுள்ள எந்தப் பிராணியினுடைய வாழ்வு நெறியிலும் இச் சேர்க்கையே முக்கியமான உலக இன்பக் களனாக இருப்பதைக் காணலாம். மற்றப் பிராணிகட்குச் சொத்தும் வீடு நிலங்களும் இன்மையால் அவற்றிற்குக் கல்யாணமென் றொன்று அவசியமில்லையாயிற்று. மனித வாழ்விற்கு ஒரு பெண்ணும் ஒரு ஆணும் கூடிப் பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் உதவி செய்து கொண்டு வாழ்தல் இன்றியமை யாத வழியாகும்.

பெண்ணை ஆணும், ஆணைப் பெண்ணும் தேடும் பருவம் ஒன்று இரு பாலாருக்கும் உண்டு. எப்படிப் பசியுள்ளவன் ஆகா ரத்தை விரும்புவானோ அதைப்போல மக்கள் வாழ்வில் ஏற்படும் பருவ காலம் அணுகியபின்னரே பெண்ணுக்கு ஆண் உதவியும் ஆணுக்குப் பெண் உதவியும் தேவைப்படுகின்றது. இக்காலத்தில் இவ்வுதவி மறுக்கப்படுவதும் தேவைக்குரிய பருவகாலமேற்படு முன் பிணைத்துவைப்பதும் கொடுமையாகும். இந்துக்களின் கல் யாண முறை இரண்டு வகையாலும் இடர் விளைப்பதாக இருக்கின்

றதென்பதைக் காணலாம். பருவகாலம் அரும்புவதற்கு முன் ஆண் பெண் என்ற பேதமின்றிக் குழந்தைகள் விளையாடித் திரிகின்றன. உடலமைப்பில் விசேஷ மாறுபாடுகளும் புதிய புதிய ஆசைகளும் தோன்றுங் காலமாகிய பருவ காலத்திற்கு முன்னர் சிறு குழந்தைகளின் மனம் வேறு வகையில் இன்பக் கடலாடி நிற்கின்றது. அக் காலத்தில் கல்வியறிவினை நல்கி உலக வாழ்வுக்கு வேண்டிய எண்ணற்ற துறைகளில் பழக்கி விசால அறிவுடையவர்களாகச் செய்தல் முறையாகும். மேனாட்டினர் கல்யாண மென்பதைப் பருவகாலத்தின் பின்னரும் பல்லாண்டு தள்ளியே குறிக்கின்றனர்.

இந்துமக்கள் குழந்தைகள் பிறந்தவுடனேயே கல்யாணம் செய்யும் கவலையிலீடுபடுகின்றனர். தேவைப்படும்போது தங்கள் வாழ்வுக்காகப் புருஷனையோ மனைவியையோ தேடி மணக்கும் உரிமை மணமக்கட்குக் கிடையாது. புத்த மதத்தினரும் கிறிஸ்தவரும் இவ்வகையில் மிகவும் முற்போக்கடைந்திருக்கின்றனர். பண்டைத் தமிழ் மக்கள் காதல் மணம்—களவு மணம் ஆற்றி வந்தன ரென்பதைப் பழங் காவியங்கள் கூறுகின்றன. தமிழ் மக்களின் தமிழ் வாழ்வு இன்பக்களஞ்சியமாகத் திகழ்ந்திருக்கிறது. தாயும் தந்தையும் உறவினரும் இணங்கினாலும் இணங்காவிட்டாலும் இஷ்டமுள்ள இளைஞனுடன் இளங்கன்னி காதல் கொண்டால் வெளியேறிச்சென்றுவிடுவர். சுற்றத்தார் அவ்விருவரையும் தேடிப் பிடித்து செல்வம் செல்வாக்கு முதலிய எதையும் நோக்காது மண முடித்து வைப்பர். அப்படி வாழ்ந்த தமிழர் வாழ்வு ஆரியக் கலப்பால் இன்று பாழடைந்திருக்கிறது.

குழந்தை பிறந்தவுடனே தாய் தந்தையர் கல்யாணம் செய்வதைப்பற்றிச் சிந்தனையடைகின்றனர். கல்யாணம் செய்வதென்றால் ஒரு ராஜ்யத்தைப் பிடிக்கிறமாதிரியான மனப்பான்மையோடு செயலாற்ற முற்படுகின்றனர். ஆயுள் முழுமையும் அவ்விருவரும் பிரிய வகையின்றிப் போடப்படும் கல்யாண முடிச்சில் மணமக்கட்கு உரிமை கிடையாது. உரிமை பேசும் பருவமும் வரவிடுவதில்லை. தாய் தந்தையரும் சுற்றத்தாரும் புரோகிதர்களும் பிறரும் கூடி கல்யாண ஜோடியைத்தீர்மானிக்கின்றனர். அத

ஞல் பலர் பலவிதமான லாபத்தை அடைவதையும் காண்கிரும். செல்வத்துக்காகவும், செல்வாக்குக்காகவும், குடும்ப பெருமைக் காகவும், தரகர்களின் மோச வலேயில் சிக்குண்டும், புரோகிதன் லஞ்சம் பெற்றுக்கூறும் பொருத்தங்களே நம்பியும் கல்யாண ஜோடிகள் சேர்க்கப்படுகின்றன. இதன் பயனுக அறுபது வயது மாப்பிள்ளேயும் பன்னிரண்டு பதின்மூன்று வயதுப் பெண்ணும் ஜோடி சேர்கின்றனர். தீராத நோயாளிகளும் விகாரசொரூபிகளும் இளம் பெண்கட்கு நாயகராகின்றனர். ஒன்றுக்கொன்று சம்பந்த மற்ற மனப்பான்மையுள்ளவர் கட்டிப் போடப்பட்டால் வாழ்க்கை யில்சுவையேற்படமுடியுமோ? இம்மாதிரியானகட்டாயக்கல்யாண முறையால் கொலேகள் நடக்கின்றன. நாள்தோறும் சண்டை நடக்கிறது. விதவைகள் மலிகின்றனர். விபசாரம் சகஜமாகி வருகின்றது. கணவன் மனேவிக்கிடையில் கசப்பு நாள்தோறும் ஏற்படுகின்றது. இதனுல் நாட்டுக்கே பெருங் கேடு விளேதலேக் காணலாம். சுருக்கமாகக் கூறினுல் பெண்மக்கள் ஒரு போகப் பொருள் என்றும், அவர்களே எப்படிப்பட்ட ஒருவனும் கல்யாண மென்ற பெயரால் அனுபவிக்கலாமென்றும், அனுபவிப்பவனுக்கு உரிமையேயன்றி அனுபவப் பொருளுக்கு உரிமையில்லேயென்றும் ஆரியர் முடிவுகட்டி வைத்திருக்கின்றனர். மாடு குதிரை முதலிய வற்றை விலேக்கோ தானமாகவோ பெறுபவன் அவற்றை இஷ்டம் போல் நடத்துவதும் அவற்றின் இஷ்டத்துக்கு விடாமல் அடக்கு வதும் அவை இருந்தாலும் செத்தாலும் வாழ்ந்தாலும் தன் அதி காரத்திற்கடங்கியவையேஎன்று கருதுவதுபோலவேமனேவியையும் கருதும்படியான நிலேயேற்பட்டிருப்பதைக்காணலாம். அம்மிரு கங்கள் இடக்கு செய்யும்போது அடிக்கவும் உதைக்கவும் இம்சிக்க வும் உரிமை எஜமானனுக்கிருப்பதுபோலவே மனேவியை அடிக்க வும் இம்சிக்கவும் உரிமை பெற்றிருக்கிருன். இம்மாதிரியான பெண்ணடிமையிருக்கிறவரை 'கல்யாணம்' என்ற சொல் துன் பத்தைத்தான் தரக்கூடும். ஆணும் பெண்ணும் ஒத்த மனப்பண் புள்ளவர்களேத் தெரிந்து மணக்கும் உரிமை பெறும்வரை வாழ்வில் மணமேற்படமுடியாதென்பது திண்ணமாகும்.

---

# நமது மக்களின் குருட்டு நம்பிக்கைகள்.

## 3. நீலாவதி.

நமது இந்தியமக்களின் அறிவானது பல வழிகளிலும் பாழ்படுத்தப்பட்டிருக்கின்றது. பயம், ஏமாற்றம், மயக்கம், மூட எண்ணம், குருட்டு நம்பிக்கை இவைகளின் பெயரால் நம்மக்களின் பகுத்தறிவானது நசித்துப் போய், வாழ்க்கையில் பெரும் துன்பத்தையும் எண்ணற்ற இடையூறுகளையும் விளைவித்து வருகின்றது. மக்களுக்குக் கல்வியறிவில்லாக் காலத்தில்தான், பகுத்தறிவில்லாக் காலத்தில்தான் ஏதோ குருட்டு நம்பிக்கைக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்களென்றால், தற்காலம் சிறிது அறிவு விளக்கம் பெற்றதாகச் சொல்லிக் கொள்ளப்படும் இந் நூற்றாண்டிலும் அந் நிலை ஒரு முக்கால் பங்காவது மாறாதிருப்பது வருத்தத்திற்கும் பரிதாபத்திற்குந் தான் இடந்தருகின்றது. மக்கள் தங்கள் வாழ் நாட்களில் முக்காலே மூன்றுவீசம் பகுதியை, அர்த்தமற்ற குருட்டு நம்பிக்கைகளிலும் மூட எண்ணங்களிலும் செலவழிக்கின்றார்களென்றால், இப்போதும் செலவழித்து வருகின்றார்களென்றால், இனிமேலும் செலவழிக்கக் காத்திருக்கின்றார்களென்றால் அதன் வலிமையை, அது மக்களை மயக்கியிருக்கும் ஒரு தன்மையை என்னால் அளவிட்டுக் கூறவியலுமோ? விடிந்து எழுந்ததிலிருந்து (ஏன்? எழுந்திருக்கும்போதே) படுக்கையில் படுக்கும் வரைக்கும் குறிப்பிட்ட பேய்களுக்கு அடிமைப்பட்ட வாழ்க்கையே நம்மக்கள் நடத்தி வருவதாகும். இக் குருட்டு நம்பிக்கைகளுக்கு அடிமைப்பட்டதின் காரணமாய் மக்களின் அறிவு அழிந்துபோனதோடல்லாமல் பொருள் நட்டத்திற்கும் முக்கிய வழியாயிருக்கிறது. பகுத்தறிவைக் கிஞ்சிற்றும் உபயோகியாத மக்களின் வாழ்வு மனிதவாழ்விற்குச் சமமான தெனக் கூற முடியாது என இங்கு குறிப்பிடுவதைப்பற்றி வாசகர்கள் மன்னிப்பார்களாக. கண்டதற் கெல்லாம், குருட்டு நம்பிக்கையை முன்வைத்துக்கொண்டு காலந்தள்ள வேண்டியதே நம்மக்களின் முக்கிய முதல் கடமையாகி விட்டது. என்ன தான் நாம் உண்மை நிலையை விளக்கிக் கூறித் திருத்த முயற்சித்தாலும், அது திருந்தாக் கடவுளே; விளங்காக் கடவுளே என்று தான் வந்துநிற்கின்றது. மற்றவன் சொல்லும் பேச்சை மட்டும்,

மதிப்போடு கேட்டு மறக்காமற் கைக் கொள்கிறாயே; நாங்கள் சொல்வது மட்டும் ஏன் செவியிலேற வில்லை: என்று கேட்டுவிட்டாலோ வந்துவிடுகிறது மூக்கின்மேல் கோபம். சாதாரணமாக நம் நாட்டில் நம் மக்களிடையே யிருக்கும் மூட எண்ணங்களும் குருட்டு நம்பிக்கைகளும் எண்ணித் தொலையாதவையே. ஒரு சல்லிக் காசுக்கும் உபயோகமில்லாத இவைகள் மக்களின் மனத்தை அடியோடு கவர்ந்து விட்டதுதான் ஆச்சரியமா யிருக்கிறது. யோசித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவதற்கும் இடமில்லை. எல்லாவற்றையும் கொண்டுவந்து முடிவாக 'உயிருக்கு மோசம்' என்று வைத்துவிட்டதால் அதற்கு மக்கள் அச்சமுற வேண்டியவர்களாகிவிட்டார்கள். சாதாரணமான எண்ணெய் ஸ்நானத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் ஸ்நானம்செய்தால் கண்ணுக்குக் கெடுதி. திங்கள்: ஆயிரம் விளக்கை அவித்தது (நிறுத்தினது) மாதிரி. செவ்வாய்: செவ்வாயோ, வெறுவாயோ, கூடாது. புதன், சனி, பெண்களுக்குக் கூடாது. வியாழன், எமகண்ட நாள் ஆகாது. வெள்ளி தாய்தந்தையர் உள்ள ஆண்பிள்ளைகள் தலைமுழுகக் கூடாது. சனி ஆண்களுக்கு ஏற்றதினம். அன்பர்களே! இதைச் சிறிது ஆராய்வோம். ஞாயிறு சூரிய பகவானுக்குகந்ததினமாதலால் அந்நாளில் எண்ணெய்தேய்த்துக் குளித்தால் கண்ணைக் கெடுத்து விடுவாராம். எண்ணெய்க் குளிப்புக்குக் கண்ணைக் கெடுக்கக் கூடிய ஒரு தெய்வம் எவ்வளவு கருணை நிரம்பியதாயிருக்க வேண்டு மென்பதை வாசகர்கள்தான் ஊகித்துணர்ந்து கொள்ள வேண்டும். திங்களைப் பற்றியோவென்றால், நாம் முழுகும் காரணத்தால், ஆலயத்திலுள்ள ஆயிரந் திருவிளக்கு அவிந்துவிடுமாம்! நாம் வீட்டில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளக் கோவிலிலுள்ள விளக்குகள் நின்று விடுமென்பதும் அதை நம்பிவருவதும் முதல்தரமான முட்டாள்தனம் ஆகும். நாம் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவதற்கும் கோவிலில் போடப்பட்டிருக்கும் விளக்குக்கும் ஏதாவது கரண்ட் இருக்கின்றதா வெனக் கேட்கின்றேன். இதை நம்பி நடக்கும் மூடர்கள் இன்னும் நம் நாட்டில் இருந்து வருவது தான் பரிதாபம்! எண்ணெய்க் குளிப்புக்கும் பெண்களைத் தனியே தள்ளப்பட்டிருக்கின்றது. வெள்ளி, செவ்வாய் சுமங்கலிகள் ஸ்நானம் செய்யவேண்டிய அவசியமான நாட்களாகும். விய

ழன் எமகண்ட நாள் என்று கூறினால், அந்நாளில் வேறு காரியம் செய்வது மட்டும் சரியோ வென்று கேட்கின்றேன். முதலாவது வியாழனில் கல்யாணம் செய்யலாமா? அதிலும் இன்னொரு வேடிக்கை! புருஷனும் பெண்சாதியும் ஒரு நாளில் முழுகக் கூடாதாம். இதனால் உண்டாகும் கேடு யாதெனின் கணவனுக்கு ஆயுள் குறை வேற்படுமாம். என்னே நம்மக்களின் மூடநம்பிக்கைகள்! இதுமட்டுமா? அப்படி முழுக வேண்டிய நாட்களில் ஏதாவது கார்த்திகை, அமாவாசை, அல்லது பிறந்த நாளாயிருந்தால் அதுவும் இல்லை. அந்தோ! இந்திய மக்களின் அறிவு இவ்வாறு பாழாகவேண்டும்? இவையெல்லாம் அடியோடு ஒழிந்து நம் மக்கள் என்று அறிவு விளக்கம் பெறுவார்களோ? அந்நாள் விரைவில் வருமாக!

---

# நாலு ஜாதிப் பொருள்.

திருவாளர் கங்கா பிரஸாத் எம். ஏ. எம். ஆர். ஏ. எஸ் அவர்கள் ஜாதிபேதம் என்ற தலைப்பின் கீழ் எழுதுவதாவது :—

ஜாதி வேற்றுமை பண்டைக்காலத்தில் நம் நாட்டில் இருந்ததில்லை என்று அறிஞர்கள் பலர் முடிவுகட்டிவிட்டார்கள். மிகப் புராதனமான வேதங்கள் ஜாதிபேதத்திற்கு அனுகூலமாகின்றன என்பதும் தவறென்று தற்காலத்தில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. மக்களை பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வகுத்தது வேதக் கோட்பாட்டிற்குப் பொருந்தாததென்பது அவரது கொள்கையாகும். இந்நான்கு வருணத்தாரையும்பற்றி விளக்குவதாகவேதத்திலிருந்தும் காட்டப்படுகின்ற மந்திரம்பார்ப்பனரால் தவறாக வியாக்கியானம் செய்யப்படுகின்றது. அந்த சுலோகம் :—

பிராமணோஸ்ய முகமாஸீது பாகு ராஜன்ய க்ருத
ஊரு ததஸ்ய யத்வஸ்யோ பத்பியாம் சூத்ரே, அஜாயத.
(இருக்வேதம் 10—90—11.)

என்பதாகும். இதற்கு சாதாரணமாகக் கூறப்படும் கருத்து அடியில் வருமாறு :—பார்ப்பனர் பிரமாவின் முகத்தினின்றும் தோன்றினர். க்ஷத்திரியர் கைகளினின்றும் உற்பத்தியாயினர், வைசியர் துடைகளினின்றும் பிறந்தனர். சூத்திரர் பாதங்களினின்றும் தோற்றுவிக்கப்பட்டார்கள். இந்த வியாக்கியானம் பல வழியாலும் மறுக்கத்தகுந்ததாகும். இம்மந்திரத்தின் உண்மைக்கருத்து "பார்ப்பனர் (நன்கமைக்கப்பட்ட) ஜனசமுதாயத்தின் சிரசை ஒப்பார்கள், க்ஷத்திரியர் அதன் கைகட்குச் சமமாவார்கள், வைசியர்

துடைகட்குச் சமானமாவார்கள், சூத்திரர் பாதங்களைப்போல்வார்கள்'' என்பதாகும். வேதத்தில் மேற்குறிப்பிட்ட சுலோகம் வருகின்ற சந்தர்ப்பத்தைப் பார்த்தாலும் இக்கருத்து தெற்றென வெளிப்படா நிற்கும். ஒன்பதாவது சுலோகத்தில் ஜனசமுதாயம் ஒரு மனிதனுக ரூபகப்படுத்தப்படுகின்றது. பத்தாவது சுலோகத்தில் "முகம் கிமஸ்யாஸீத், கிம் பாகு, கிம்ஊருபாதா உச்யதே'' என்று கேட்கப்படுகின்றது. பதினோராவது சுலோகம் இந்த வினாவிற்கு விடையாக அமைந்ததாகும். எனவே அதன் கருத்து நாம் மேலே கூறியதையின்றி வேறொன்றிருக்கமுடியாது என்பது வெளிப்படை.

இம் மந்திரம் ஜாதி பேதத்தை ஒரு வழியாலும் நிலை நாட்ட முற்படவில்லை என்று துணிந்து கூறுகின்றோம். மனித சமூகத்தை ஒரு மனித சரீரத்தோடு ஒப்பிடுவதே அதன் கருத்தாகும்.

ஒப்பிட்ட பிறகு அதன் அமைப்பை சிறிது விளக்கிக் கூறுகின்றது. ஒரு சரீரத்தில் தலை, புஜம், துடை, பாதம் இவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் முக்கிய ஸ்தானம் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கின்ற நான்கு ஜாதியாருக்கு மமைந்திருக்கின்றதென்றே கூறுகின்றது. கல்வியைக் கற்று கல்லாத மக்களுக்கு உபதேசம் செய்யும் மக்கள் யாவரும் மனித சமூகத்தின் தலைகளேயாவார்கள். பலசாலிகளும் ஜனங்களைப் பாதுகாப்பவருமாகிய க்ஷத்திரியர் மக்கள் தொகுதியின் புஜங்கள் என்று சொல்லப்படுவதும் பொருத்தமுடையதேயாம். வியாபார விருத்தியின் பொருட்டு ஊர் ஊராக, நாடு நாடாக அலைந்து திரியும் வைசியர்கள் உலகத்திற்கு துடைபோன்றவர்கள் என்பதிலும் ஆக்ஷேபமில்லை. கல்வியறிவற்றவரும் மேலான வாழ்க்கைக்குத் தகுதியற்றவருமாகிய மக்கள் உலகில் தாழ்ந்த பாதத்துக்கு சமமாவார்கள் என்றும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. இப் பாகுபாடுகள் ஜாதிபேதமன்று; ஒவ்வொருவரும் செய்யும் தொழிலை நோக்கி மக்களைப் பாகுபடுத்தியிருக்கின்றன. இப் பாகுபாடு பிறப்பையன்று, குணத்தைப் பொறுத்தே செய்யப்பட்டிருக்கின்றது. இதைவிட மேலான ஓர் பாகுபாடு வேறென்ன ? இது முதன்மை ஸ்தானத்தைக் கல்விக்கும், இரண்டாவது ஸ்தானத்தை சக்திக்கும், மூன்ருவது ஸ்தானத்தை பணத்திற்கும் நல்குகின்றது. உலகில் நாம் காண்கின்ற ஏற்றத் தாழ்வும் இதனை யடிஸ்தானமாக்கியன்ரோ நிற்கின்றது?

ஆகவே மேற்குறிப்பிட்ட வேத சுலோகம், ஜாதிபேதத்தைக் காட்டவேயில்லையென்றும் உலக அமைப்பு எவ்வாறு நிகழக்கூடுமென்பதையுமே காட்டுகின்றதென்றும் கூறுகின்றதென்ருல் தவறன்று.

---

# தவறுயிருந்தால்
# மன்னித்துக்கொள்ளுங்கள்!

(சாமி சிதம்பரனுர்.)

**நினைப்பது** ஒன்று; சொல்வது ஒன்று; செய்வது ஒன்று ஆகிய செயல்களைச் சாமானிய மானவர்களால் செய்யமுடியாது. இவ்வாறு செய்வதற்குத் திறமை வேண்டும்; நுட்ப அறிவு வேண்டும். இப்படிப்பட்டவர்கள்தான் கெட்டிக்காரர்கள்; அறிவாளிகள்; என்று எல்லோராலும் கூறப்படுவார்கள்.

நினைத்தபடி பேசுதல்; பேசுகிறபடி செய்தல் ஆகிய குணங்களுடையவர்களைத் திறமையுடையவர்களென்று கூறுவதில்லை. அறிவுடையவர்கள் என்று சொல்லுவதில்லை. இவர்களை வெகுளிகளென்றும், ஏமாந்தவர்களென்றும் இயம்புவார்கள். இது உண்மைதான். சந்தேகமில்லை.

இவற்றை நோக்கும்போது அறிவுடையவர்களை வஞ்சகர்களென்றும்; தந்திரசாலிகளென்றும் கூறலாம்.

அறிவுடையவர்களில் நல்லவர்களிருக்கலாம்; பிறருக்குத் தீங்கு செய்யாதவர்களிருக்கலாம்; தீங்கு நினைக்காதவர்களிருக்கலாம்; சுயநலமற்றவர்களிருக்கலாம்; பரோபகாரிகள் இருக்கலாம், அறிவுடையவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. ஆகையால் அறிவுடையவர்களில் நல்லவர்களாயிருப்பவர்கள் நம்மீது சீறி விழவேண்டாம்.

ஆனல் உண்மையைச் சொல்லவேண்டியிருக்கிறது. உண்மையைச் சொல்வதனுல் பலருக்குக் கோபம் வருவது இயற்கை. "உள்ளதைச் கூறினுல் நொள்ளைக்கண்ணனுக்கும் கோபம்" என்பது நாம் இதற்கு முன் பல தடவைகளில் கேட்டிருக்கின்ற பழமொழிதானே! ஆகையால் உள்ளதைக் கூறுவதற்காகப் பிறருடைய விரோதம் வந்து சேருமே என்று நாம் கொஞ்சங்கூட பயப்படவில்லை. பயந்தால் எந்தக் காரியந்தான் நடக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

ஆகவே "அறிவுடையவர்கள்தான் சுயநலமுடையவர்களாயிருக்கிறுர்கள்; தம் நன்மைக்காக நம்பிக்கையற்ற பொய்யான காரியங்களையும் விடாப்பிடியாகச் செய்கின்றவர்களாயிருக்

கின்றார்கள்; வஞ்சகர்களாயிருக்கிறார்கள்; தகாத காரியங்களை மனத்துணிவோடு செய்யக்கூடியவர்களாயிருக்கிறார்கள். தாம் செய்த தகாத காரியங்களையும் நன்மையான காரியங்கள் என்று கூறுவதற்குத் திறமையுடையவர்களாயிருக்கிறார்கள்" என்பது தான் நாம் கூறவந்த உண்மை.

இந்த உண்மை நிச்சயமாக உண்மைதானா என்று ஆராய்ந்து பாருங்கள்! உண்மையென்று உங்களுக்கே நன்றாகத் தெரியும். அறிவுடையவனுக்குத் திறமையிருப்பதனால் தந்நலத்திற்குரிய செயல் தீமை நிறைந்ததாயிருந்தாலும் துணிந்து செய்வான். ஏனெனில் தீமை செய்யவில்லை என்று நிரூபித்துத் தப்பித்துக் கொள்ளுவதற்கு அவனுக்குத் திறமையுண்டு. சமயத்திற்குத் தகுந்தாற்போலப் பேசும் அரசியல் வாதிகளைப் பாருங்கள்! இவர்கள் அறிவுடையவர்களன்றோ? பொய்யை உண்மையாகவும், உண்மையைப் பொய்யாகவும் நம்பும்படியான திறமையுடன் பேசும் நியாயவாதிகளை எடுத்துக்கொள்ளுங்கள்! இவர்கள் அறிவுடையவர்கள் அல்லரா? பொய்க்கதைகளையெழுதும் நூலாசிரியர்களைப் பாருங்கள்! இவர்களுடைய புத்தகங்களை நாம் படிக்கும் போது துக்ககரமான நிகழ்ச்சிகளைப் படிக்குங்கால் நாமும் துக்கப் படுகின்றோம். மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளைப் படிக்கும் சமயத்தில் நாமும் மகிழ்ச்சியடைகிறோம். ஆகையால் இவர்களும் சாமர்த்தியமுடையவர்கள்; அறிவுடையவர்கள் என்பதில் தடை என்ன?

"பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே"

என்பது நாம் இளமையிற் படித்த பாட்டுக்களில் ஒன்று தானே! ஆகையால் பாமர மக்கள் அதாவது உலக விஷயம் உணராத மக்கள் அறிவுடையவர்களின் செய்கையைக் கண்டு ஏமாறுவார்களென்பதிலும், அவர்கள் பேச்சைக் கேட்டு ஏமாறுவார்களென்பதிலும், சிறிதும் ஐயமில்லை. ஏமாறுவது என்பது நமது அகராதியின்படி நம்புவது என்று இந்த இடத்தில் பொருளாகும். ஒன்றுந்தெரியாத பாமர மக்களால்—வெள்ளறிவுடையவர்களால்—அதாவது வெகுளிகளால்—திறமையான காரியங்கள் எதையும் செய்ய முடியாது. திறமையான காரியமென்பது—ஏமாற்

றக்கூடிய காரியமென்று பொருள்படும். ஆகவே ஏமாற்றக்கூடிய காரியங்களைச் செய்ய முடியாத—செய்வதற்குத் துணிவும்—திறமையும்—அறிவும் இல்லாத பாமர மக்களால்—அதாவது வெருளிகளால் ஜன சமூகத்திற்குத் தீமை செய்ய முடியாது என்று நாம் ஒருவாறு—ஏன் நிச்சயமாகவே துணியலாம்.

இதற்கு உதாரணமாக ஒரு காரியத்தைக் கூறி முடிக்கின்றோம். இந்து மதத்தினர் பெரும்பாலும் கல் மண் செம்பு முதலியவைகளால் உருவங்கள் செய்துவைத்து அவற்றைக் கடவுள் என்று வணங்குகின்றனர். இத்தகைய செயல் பாமர ஜனங்களிடம் இல்லாமல் இதை ஒரு நிமிடத்தில் நீக்கிவிட நம்மால் முடியும். ஆனால் இதற்கு எதிராக இருக்கின்றவர்கள் அறிவுடையவர்களாக இருக்கின்றார்கள். அறிவுடையவர்கள் விக்கிரக வணக்கத்திற்கு ஆதரவு கொடுப்பதனால்தான் அதை எளிதில் ஒழிக்க நம்மால் இயலவில்லை.

அறிவுடையவர்களுக்கு உண்மை தெரியும். கல்லிலும் செம்பிலும் கடவுள் இல்லை யென்பது தெரியும். "கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் கண்ணுதலே" என்னும் பாட்டும், "நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்தியே, சுற்றிவந்து மொணமொணத்துச் சொல்லுமந்த்ர மேதடா" என்னும் பாடலும் அவர்களுக்குத் தெரியாதவையல்ல. தெரிந்தும் ஏன் விக்கிரக ஆராதனத்தைப் போற்றுகின்றார்கள்; நிலைக்கச் செய்வதற்காகத்தான்; வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் என்று நாம் கூறுகின்றோம். ஒரு சமயம் நமது வார்த்தையில் நம்பிக்கையில்லாவிட்டால் ஒரு பண்டிதர் வார்த்தையைக் கூறுகின்றோம். அப் பண்டிதர் உங்களால் புகழப்படும் பண்டிதர்; கொண்டாடப்படும்பண்டிதர். அவர்தான் வேதநாயகம்பிள்ளை. வேதநாயகம்பிள்ளை அறிவுடையவர்களை நோக்கிக் கூறியதாவது:—"வைதீகர்களே! நீங்கள் பசியுடன் வந்து அன்னங்கேட்பவர்க்கு மனம் இரங்கிச் சிறிதும் அன்னம் கொடுக்க மாட்டீர்கள்! ஆனால்பசியில்லாமலிருக்கின்றஅசைவற்றவலிமையான கல் சிலைக்கு முன்னே அன்னத்தைப் படைத்துப் பின் நீங்களே அவை முழுவதையும் எடுத்துச் சாப்பிட்டுவிடுகின்றீர்கள் ஒருக்கால் அந்தக் கற் சிலைகளுக்கு உயிர் வந்து நீங்கள் படைக்கின்ற அன்னத்தில் சிறிது உண்டு விடுமாயின் பிறகு அச் சிலைகளுக்குப்

படைப்பீர்களா? (ஒருக்காலும் படைக்கமாட்டீர்கள்) அச்சிலைகள் சாப்பிடத் தொடங்கினல் அப்பொழுது அவற்றைப் பழி கூறி அவைகள் சின்ன பின்னமாகும்படி உடைக்காதிருப்பீர்களோ? (உடைத்தெறிந்துவிடுவீர்களன்றோ?) உண்மையைக் கூறுங்கள்," என்று வேதநாயகம் பிள்ளை கேட்கின்றார். இதனை,

அன்னம் பசித்தவர்க்கு ஈயீர்; பசியற்ற வன்சிலைக்கு
முன்னம் படைத்துப் பின் உண்பீர்; சிறிது அச்சிலை அருந்தில்,
இன்னம் படைத்திடுவீர்கொல்? சிலையினையேகிச் சின்ன
பின்னம் படஉடைக்கா திருப்பீர்கொல்? மெய்பேசுங்களே?

என்னும் பாடலால் அறியலாம்.

ஆகையால் விக்கிரக ஆராதனம் என்பது ஒரு சிலரின் வயிற்றுப் பிழைப்புக்காக நடந்துவருகிறதென்பதை இதன்மூலம் அறியலாம். இச்செயலை அறிவுடையவர்கள் என்பவர்களிற் பலர் ஆதரிப்பதனல் அவர்களைப்பற்றி நாம் கூறுவது முழுவதும் உண்மையென்பதையும் அறியலாம். தவருயிருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்.

---

# திருப்பதி மொட்டை.

சுமார் இருபத்தைந்து வயதுடைய வேதநாயகம் பிள்ளையென்ற ஒரு தனவந்தர் தன் மனையாளுடன் பலப்பல தலங்களுக்குச் சென்று பல நதிகள் குட்டைகள் முதலியவற்றில் மூழ்கியும் பல சோம்பேறிகளுக்கு அன்னதானம் வஸ்திரதானம் முதலியன செய்தும் பீடை பரிகாரார்த்தம் பிராமணுளுக்குத் தானங்கள்வழங்கியும் பெற்றெடுத்த ஒரு வயதுடைய தன் அருமைச் செல்விக்கு திருப்பதி க்ஷேத்திரத்தில் மொட்டையடிக்கக் கருதினர். தம்முடன், மிக்க நேசரான சிவராமபிள்ளையையும் கூட்டிக்கொண்டு திருப்பதி மலையின் அடிவாரத்திற்கு வந்தார். மூன்று டோலிகள் ஏற்பாடு செய்தார். அதன் பிறகு அங்கு வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ள தேவதைகளை நமஸ்கரித்துக்கொண்டு ஒரு டோலியில் தான் உட்கார்ந்துகொண்டு மற்றொன்றில் தன் மனைவியையும் குழந்தையையும் ஏற்றுவித்து மற்ருென்றில் நண்பரை

ஏறிக்கொள்ளச்சொன்னார். நண்பர் தம்மால் நடக்கமுடியுமென்றார். மேலும் என்ன சொ[illegible]லியும் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல் பிள்ளையவர்களுக்கு ஏறவில்லை. முடிவில் வேதநாயகம் பிள்ளையவர்களும் அவரது மனைவி குழந்தையும் டோலியில் சென்றார்கள். சிவராமபிள்ளை கால்நடையாக அவர்களைத்தொட்டு நடந்தார்.

சிவராம பிள்ளை :—என்ன பிள்ளையவாள்! உங்களுக்குக் கஷ்டமென்பதே தெரியாதுபோலிருக்கிறது. தாங்கள் தங்கள் சரீரத்தைத் தூக்கிக்கொண்டு இம்மலையின்மீது ஏறிச்செல்ல முடியாதென்றுதானே டோலியில் வருகிறீர்கள். அவர்கள் இருவரும் உங்களையும் டோலி முதலியவற்றையும் தூக்கிக்கொண்டு படிப்படியாக மேலேறிச் செல்வது எவ்வளவு கஷ்டமாகுமென்பதைச் சிறிது யோசித்துப் பாருங்கள்!

வேதநாயகம் பிள்ளை :—நாம் ஏனையா நடக்கவேண்டும்? நம் தலையில் டோலியில் ஏறிக்கொண்டு போகும்படி எழுதியிருக்கும் பொழுது நாம் நடந்து செல்வதாக நினைத்தாலும் முடியாது. அவர்கள் தலையிலே டோலி தூக்கித்தான் சீவனம் செய்யவேண்டுமென்று எழுதியிருக்கும்போது நீங்களும் நானும் இரக்கப்பட்டு யாது பயன்? நடப்பது நடந்தே தீரும்.

சிவராம பிள்ளை :—தாங்கள் சொல்வது நியாயமல்ல. விதியை மதியால் வெல்லலாம் என்ற பழமொழியைத் தாங்கள் கேள்விப்படவில்லையோ? அவர்கள் படும் கஷ்டத்தைத் தங்கள் திருக்கண்ணால் சிறிது நோக்குங்கள் என்று பரிதாபமாகக் கூறினார்.

வேதநாயகம் பிள்ளைக்கு நண்பர்மீது அருவருப்பு உண்டாயிற்று. ஆயினும் காட்டிக்கொள்ளாமல் பேசாதிருந்தார். சிவராமபிள்ளையும் டோலியின் பின்னரே போய்க்கொண்டிருந்தார். சற்று நேரத்தில் டோலிகள் இரண்டும் ஒரு தாழ்வான வழியில் இறங்கிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று வேதநாயகம் பிள்ளையின் மனையாளும் குழந்தையும் இருந்த டோலியின் ஒரு புறத்துக் கயிறு அறுந்துபோயிற்று. வேதநாயகம் பிள்ளையின் மனைவி, தன் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டிருந்தமையால் குழந்தை விழுந்து புரண்டு சென்றது. வேதநாயகம்பிள்ளை

யின் மனையாளோ டோலி சாய்வதைக் கண்டதும் குழந்தை தன் மடியிலிருந்ததைக் கவனியாது தன் பின்புறமுள்ள மற்றப் பக்கத்தின் கயிற்றைப் பிடித்துக்கொண்டாள். குழந்தை புரண்டு செல்வதைக் கண்ட சிவராமபிள்ளை வேகமாக ஓடிக் குழந்தையைக் கையில் எடுத்தார். இதற்குள் குழந்தை ஏழெட்டுப் படிகள் தாண்டிவிட்டமையால் தலையில் பல விடங்களிலும் படுகாயப்பட்டது. குழந்தையின் ஆபத்தைக்கண்ட தாய் அலறிக்கொண்டு ஓடிவந்தாள். இக்கூச்சலைக்கேட்ட பிள்ளையவாள் திரும்பிப்பார்த்தார். தம் மனைவி அழுதுகொண்டு நிற்பதையும் நண்பர் கையில் குழந்தையிருப்பதையும் குழந்தையின் உடம்பெல்லாம் இரத்தம் சொட்டுவதையும் டோலிக்காரர்கள் சூழ்ந்து நிற்பதையும் கண்டு மனம் சகிக்காதவராய் டோலியினின்றும் கீழிறங்கி ஓடிவந்தார். உடனே நண்பரும் வெகுதூரம் சென்று தம் வேட்டியால் தண்ணீர் கொண்டுவந்தார். அதனையே கிழித்துக் காயம்பட்ட இடங்களிலெல்லாம் கட்டிமுடித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அழுகை அமர்ந்தது. உடனே வேதநாயகம்பிள்ளைக்குக் கோபம் பிறந்துவிட்டது. திரும்பிப்பார்த்தார். டோலிக்காரர்கள் திரும்பிப்போய்விட்டமையால் அவர்களைக் காணவில்லை. அயோக்கியப் பயல்கள் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்களே! என்று சொல்லிக்கொண்டு, அவர்களைப் பிடிப்பதற்காக வேகமாய்ச் சென்றார். நண்பரை மனையாளுக்குத் துணையாக இருக்கும்படி சொல்லிவிட்டு வெகுவேகமாகச் சென்று, டோலிக்காரர்களில் ஒருவன் கன்னத்தில் ஓங்கி இரண்டு அறை அறைந்தார். டோலிக்காரன் இவருக்கு இளைத்தவனா? இரண்டுபேருக்கும் சிறிது நேரம் சண்டை நடந்தது. முடிவில் பிள்ளையவாள் தோற்றுப்போய்க் கீழே விழுந்துவிட்டார். நண்பர் பிள்ளையவாளுக்காக வெகு நேரம் காத்திருந்தும் அவர் வாராமையால், தேடிக்கொண்டு திரும்பினார். திரும்பி வரும் வழியில் பிள்ளையவாள் கீழே விழுந்துகிடப்பதைக் கண்ட நண்பருக்குப் பயம் உண்டாய்விட்டது. கால்கை அசையவில்லை. மூச்சு மட்டும் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டார். அதனால் பயந்தெளிந்து சமீபத்தில் தண்ணீர்ப்பந்தல் ஒன்றிருப்பதைக் கண்டு அங்கே போய் சிறிது ஜலம் கொடுக்கவேண்டுமென்று தம்முடைய குறைகளெல்லாவற்றையும் விஸ்தாரமாக எடுத்துரைத்

தார். என்ன ஆபத்து வந்தபோதிலும் இங்கு பிராமணரைத்தவிர மற்ற ஜாதியாருக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை என்று அங்கிருந்த அய்யரவர்கள் கண்டிப்பாகப் பதில் சொன்னார். ஓரிடத்திலும் தண்ணீர் அகப்படாமல் தவித்துக்கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டு அங்கு வரிசையாக உட்கார்ந்திருந்தவருள் ஒருவனாகிய பரதேசி "ஐயா தாங்கள் எங்கும் தேடியும் தண்ணீர் அகப்படவில்லை போலிருக்கிறது. நான் சாப்பிடுவதற்காக வைத்திருக்கிற இந்த ஜலத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்றான். இதைக் கேட்ட நண்பருக்கு ஆனந்தமுண்டாயிற்று. உடனே அந்தப் பரதேசியை நமஸ்காரம் செய்து " தாங்கள் இந்த ஆபத்துக்காலத்தில் உதவியதற்கு என்னால் இயன்ற உதவி செய்யத் தயாராயிருக்கிறேன்"—என்று பலவிதமான உபசார வார்த்தைகள் சொன்னார். தண்ணீரைக் கொண்டுவந்து, வேதநாயகம் பிள்ளையின் முகத்தில் தெளித்து தலையில் ஓரிடத்தில் காயம் பட்டிருந்ததையும் துணியால் கட்டிவிட்டு விசிறிக்கொண்டிருந்தார். இதற்குள் வேதநாயகம்பிள்ளையின் மனைவி இவ்விருவரையும் தேடிக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தாள். வேதநாயகம்பிள்ளையின் நிலைமையைக் கண்டு கதறத் தொடங்கினாள். நண்பர் சமாதானம் செய்தார். சற்று நேரத்தில் பிள்ளையவாளும் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். தண்ணீர் சிறிது உட்கொண்டார். சற்று நேரத்தில் வேதநாயகம் பிள்ளை வருத்தங்களெல்லாம் நீங்கி மறுபடியும் மலையின் மீதேறினார்.

வேதநாயகம்பிள்ளை :—நாம் எந்த நேரத்தில் புறப்பட்டோமோ? இவ்விதமாக அனுபவிக்கவேண்டியிருக்கிறது.

சிவராமபிள்ளை :—பிள்ளையவாள்! நாம் வருத்தப்படுவதால் யாது பயன்? நடப்பது நடந்தே தீருமன்றோ?

வேதநாயகம்பிள்ளை :—அப்படியல்ல. நாம் டோலியில் ஏறிவிட்டால் இவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்கள் ஏற்படக் காரணமில்லையே!

இவ்வாறு பேசிக்கொண்டே கோயில்போய்ச் சேர்ந்தனர். மொட்டையடிக்க இயலாமல் சுவாமியைத் தெரிசித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினர்.

ஞானகிராம்.

# மில்டேரி பிராமணன்.

(கோட்டையூர் கதி. அழகப்பன்.)

ஷண்முகம் பிள்ளை அவர்கள் மிகவும் நன்ருகப் பருத்த தேகக் கட்டுடையவர். பார்வைக்குக் கொஞ்சம்விகாரமாக இருந்தாலும் ஆசாமி பலே கைகாரப் பேர்வழி. பங்களாக்களின் முன் படர்ந்திருக்கும் வனரோஜாக்கொடிகளைப் போன்று இவரது நீல நிறமுள்ள தேகத்தைத் துணைப்பற்றித் தேமல்படர்ந்துவளர்ந்திருந்தது. நன்ருக வயிறு புடைக்கச் சாப்பிடுவதில் சமாராதனைப் பார்ப்பனர்கள்கூட இவரை மிஞ்ச முடியாது. ஆட்டின் மீதுள்ள தோலைக்கூடப் பொசுக்கிக் குழம்பு வைத்துச் சாப்பிடுவாரென்ருல் இவரைப்பற்றி நமது நண்பர்கட்கு அதிகமாக அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியமில்லை.

பொங்கற் பெருநாளன்று நமது பிள்ளையவர்கள் கையில் ஒரு கூடை யெடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குச் சென்ருர். அவ்வூரில் சாதாரணமாக முட்டைகள் கிடைப்பது துர்லபம். அன்று தினம் அதிர்ஷ்டவசமாக ஒரு கடையில் நான்கு முட்டைகள் இருந்தன. நமது பிள்ளை அவர்களின் கூரிய பார்வை அம்முட்டைகளின்மீது ஆழமாகப் பாய்ந்துவிட்டது. தெருவிற்கிடந்துழலும் வேலை செய்ய சக்தியற்ற பிச்சைக்காரனுக்கு சிங்கிள் பை கொடுக்க மனம் வராத பிள்ளையவர்கள் இருபத்துநான்கு பைசாக்கள் கொடுத்து முட்டைகளை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்ருர்.

உடனே தனது சமையற்கார ராமுடுவை அழைத்து இந்த இரண்டு முட்டைகளையும் பக்குவமாகக் குழம்பு வை யென்று சொல்லிக் கொடுத்தார். இப்பொழுது ராமுடுவை நமது நண்பர்களுக்குச் சிநேகம் செய்துவைக்க வேண்டுமல்லவா? ராமுடு பிராமணனுயிருந்தாலும் மில்டேரி சமையலில் மிகவும் கெட்டிக்காரன். கொழும்பு ஹால்டன் துரையிடம்கூட அநேக சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கிருன். அனேக வருடங்கள் பிரபலமான வெள்ளைக்காரர் ஹோட்டல்களில் வேலை பார்த்துச் சென்ற இரண்டுமாதங்களாக நமது பிள்ளையவர்களிடம் வேலை பார்த்து வருகின்ருன். நமது பிள்ளைய்வர்கள் தமது நண்பரான குப்புச்சாமி பிள்ளையை விருந்துக்கு அழைத்து வருவதாகச் சொல்லி வெளியே சென்ருர்.

நமது ராமுடு முட்டைகள் நான்கையும் குழம்பு வைத்து வழக்கம் போல் ருசி பார்த்தான். ருசி கண்ட பூனை சும்மாவிடுமா? இருந்த முட்டைகள் எல்லாவற்றையும் தீர்த்துவிட்டான் நமது ராமுடு.

பிள்ளையவர்கள் வேர்த்து விருவிருத்துப் பகல் பன்னிரண்டு மணிக்கு மிக்க ஆவலுடன் வீட்டிற்கு வந்து ராமுடுவை அழைத்து எல்லாம் தயாராகி விட்டதா என்று கேட்டார். நமது ராமுடு என்ன செய்தானென்று நினைக்கிறீர்கள்? உடனே தனது எஜமானனைப் பார்த்து எல்லாம் தயாராகிவிட்டது, வாழையில் இலை அறுத்துவந்து போட வேண்டியதுதான் பாக்கி; அதற்குக் கத்தி வேண்டும்; என்னிடமுள்ள கத்தி மிகவும் மழுங்கலாக விருக்கிறது என்றான். பிள்ளையவர்கள் அவனிடமிருந்த கத்தியை வாங்கி அங்குள்ள கல்லின்மீது தீட்ட ஆரம்பித்தார். நமது ராமுடு என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கையில் விருந்துக் கழைத்திருந்த குப்புசாமி பிள்ளை சிறிது தூரத்தில் வருவதைக் கண்டான். உடனே அவரிடம் ஓடி எங்கள் எஜமானனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. உங்களுடைய இரண்டு காதுகளையும் அறுப்பதாகச் சொல்லிக்கொண்டு கத்தியைத் தீட்டுகிறார். வேண்டுமானாலும் நீங்கள் வந்து பாருங்கள், என்று கூறினான். குப்புசாமிபிள்ளை கொஞ்சம் சந்தேகத்துடன் கதவினருகிலிருந்து நண்பரை எட்டிப்பார்த்தார். அதற்குள்ளாக நமது ராமுடு தனது எஜமானரிடம் சென்று இங்கிருந்த முட்டை இரண்டையும் எங்கள் நண்பர் இதோ தூக்கிக்கொண்டு ஓடுகிறார் என்றான். ஷண்முகம்பிள்ளையும்சந்தேகத்துடன்எழுந்துஓடினார். தனது நண்பரின் செய்கையைக் கண்ட குப்புசாமிபிள்ளையும் வெகு வேகமாக ஓடினார். இருவரும் பந்தயக் குதிரைகள் போல் ஓடினார்கள். ஷண்முகம்பிள்ளை 'எனக்கு ஒன்று போதும், இரண்டும் வேண்டாம்; ஒன்றே போதும்!' என்று கத்தினார். குப்புசாமி பிள்ளை தனது காதைத்தான் ஷண்முகம்பிள்ளை அறுக்க நினைக்கின்றாரென்றும் ராமுடு கூறியது முற்றிலும் உண்மையென்றும் நினைத்து வேகமாக ஓடி தனது வீட்டிற்குச் சென்று கதவினைத் தாள் போட்டுக் கொண்டார். ஷண்முகம்பிள்ளை மிகவும்சோர்ந்த மனத்துடன் வீடு திரும்பினார்; மில்டேரி பிராமணன் தனது தந்திரத்தை நினைத்து மகிழ்ந்தான்.

# வீண் பெருமை பேசுவதால் பயன் என்ன?

"தில்லைநாயகம்."

இந்திய நாட்டைப் புண்ணிய பூமியென்றும் ஞான பூமியென்றும், அழைக்கின்றார்கள். சிறப்பு கூறிப் பேசுகின்றார்கள். இதற்குக் காரணம் எங்கு நோக்கினும் ஒப்புயர்வற்ற தேவ ஆலயங்கள், அறச்சாலைகள், புராணப் பெருமைகள், பெரியார் அற்புதங்கள், அவதார புருஷர்கள், பற்பல திருவிளையாடல் புரிந்த கடவுள்கள், சமயசாஸ்திர உண்மைகள், நாள் தவறாத நல்லுற்சவங்கள், பாவம் போக்கும் பல் வகை நதீதீரங்கள், முத்திக்கு அனுப்பும் முயற்சியாளர்கள், ஞானத்தையே புகட்டும் ஞானிகள், பெருந்தவம் புரியும்தவசிகள், சிற்றின்பத்தைவெறுத்த சித்தர்கள், துறத்தற்கரிய யாவும் துறந்த துறவிகள், மதத்தைப்பரப்பும் மதாச்சாரியர்கள், வேத முழக்கும் செய்யும் வேதியர் கூட்டங்கள், யாகத்தை வளர்க்கும் அந்தணர் கூட்டங்கள், மநுநீதி தவறாத மாசற்ற மகா பக்தி வாய்ந்த மாபெரும் பண்டைக்கால அரசர்கள், கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கும் கற்புக்கரசிகள், நீதிநெறியாளர்கள், கடவுளன்பும் ஆஸ்திகப்பற்றும் ஒருங்கே படிந்த உத்தமர்கள் ஆகிய பலவுமே இந்நாட்டைப் புண்ணிய பூமியென்றும் ஞான பூமியென்றும் பெருமை பாராட்டக் காரணமாக இருக்கின்றனவென்று கூறப்படுகின்றது. பெருமை பாராட்டப்படும் மேற் கூறியவைகளைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

## ஒப்புயர்வற்ற தேவாலயங்கள்.

இந்தநாடு முழுவதும் வீதிக்குவீதி தேவன் வதியும் தேவாலயங்கள்இருக்கின்றன. தேவைக்குமேலாக பல லக்ஷக்கணக்கான தேவாலயங்கள் பல் கோடிக்கணக்கான பொருட்செலவில் கட்டப்பட்டும், கட்டிக் கொண்டும், கட்டி முடிக்க வேண்டிய திருப்பணிக்குப் பொருள் சேகரிக்கப்பட்டும் வருகின்றனவென்பதை எவருமறிவர். ஆனல் தேவாலயங்கள் அறிஞர்களால் எந்நோக்கத்தோடு நிறுவப்பெற்றனவோ அது சிதைக்கப்பட்டது. இன்று தேவாலயத்தினுள் பக்தியுள்ளவர்கட்கு இடமில்லை. மக்கள் வடிவம் தாங்கி ஆறறிவு பெற்ற அன்பர் கூட்டத்தினைத் தீண்டாதவனென்றும் புலையனென்றும் கூறி ஆலயவுரிமை தகையப்படு

கின்றது. ஆனால் அவ்வாலயத்தினுள்ளே மிருகங்களும் மற்றுமுள்ள ஜீவராசிகளும் [illegible] மாடுகின்றன. ஆலயத்தினுள் சோற்றுக்கடைகளும் மயிர்முடிக்கடைகளும் இன்னும்பல சில்லரைக் கடைகளும் விளங்குகின்றன. எழுத முடியாத பல அக்கிரமச் செயல்களும் அங்கு நடைபெறுகின்றன. ஆலயத்தினுள் ஆண்டவனிடம் தரிசிக்கப் போகும் அன்பர்களிடம் காணிக்கை (வரிவசூல்) வசூலிக்கப்படுகின்றது. ஆலயத்தினுள் ஆண்டவனுக்காக வரும் பிரார்த்தனைச் சொத்துகளும் அம்மன் கழுத்தில் பூட்டியுள்ள தாலியுட்பட திருட்டுப் போகின்றன. அங்குள்ள வெளிச்சமற்ற இருட்டறைகள் பல தீய செயல்களுக்கு உதவுகின்றன. மகாத்மா காந்தியடிகள் போன்ற பல கருணையாளர்களை ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (காரணம் கப்பல் பிரயாணத்தில் அயல் நாடு சென்றவர்.) காந்தியடிகளும் மனம் நொந்து "தேவாலயங்கள் யாவும் வேசியர்விடுதியாக விருக்கின்றன" என்றுமொழிந்தார். மக்கள் வாழ்வில் அறிந்தோ அறியாமலோ கண்மூடித் தனமாகப் பெரும் பொருள் செலவுசெய்யப் படுவதையும் அவ்வாலயத்திற்குள் சென்றவர்கள் சமத்துவ மின்றி சகிக்கமுடியாத கொடுமைக்கு ஆளாக்கப் படுவதையும் அறிஞர்களால் சகிக்க முடியவில்லை. சகிக்கமுடியாத கொடுமைகளை யொழிக்க வேண்டுமென்று கூறுபவர்களை நாஸ்திகர்கள் என்று கூறுவதினாலும் பயனில்லை. நாஸ்திகரென்று எவரோ கூறுவதற்காக உண்மையைக் [illegible]மறுமனு மிருக்க முடியவில்லை. உண்மையை மறைத்துவிட்டு ஒப்புயர்வற்ற தேவாலயங்கள் என்று கூறுவதிலும், பாடல்பெற்ற க்ஷேத்திர மென்று பகர்வதிலும், புண்ணியபூமி ஞானபூமி என்று பெருமைபாராட்டிப் பேசுவதிலும் பயனில்லை. வீண் பெருமை பேசுவதால் பயன் என்ன?

## அறச்சாலைகள்.

அறங்களில் சிறந்தது அன்னதான மென்று எங்கும் அன்னசத்திரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்கென அரசர்களாலும் பிரமுகர்களாலும் பெரும்பொருள் மூலதனமாக வைக்கப்பட்டிருக்கின்றது. அப் பொருளுதவி கொண்டு பசித்தவர்க்

கும், வழிப் பிரயாணிகட்கும், உணவுக்கு வகையற்றவர்கட்கும் வழங்க வேண்டுமென்று கருதிய முயற்சிகள் கைவிடப்பட்டன. பிராமணர்கள்மட்டுந்தான் அன்னசத்திரங்களில் சாப்பிடவும் தங்கவும் அருகதை யுடையவர்கள். அவர்கள் சாப்பிடுவதினுலேயே சகலமும் சித்திக்கும் என்ற உபதேசத்தால் ஒவ்வொரு சத்திரங்களிலும் சாப்பிடுவதற்கு பிராமணர்களைத் தேடுகின்றார்கள். பிராமணர்களோ, தங்கட்கு உணவு வேண்டாத நிலையில் பசியில்லாதிருப்பினும் பதார்த்தவகைகளின் "ருசியைப்பார்க்கவும்" உணவிற்குப்பின் தக்ஷிணைகிடைப்பதை எதிர்பார்த்தும் தினம் பல சத்திரங்களில் பலதடவைகள் சாப்பிடுகின்றனர். இப்படியே பல ஊர்களிலும் பல சத்திரங்களிலும் சாப்பிட்டுக்கொண்டும் வழிப்பிரயாணச் செலவும் தக்ஷிணையும் பெற்றுக்கொண்டும் இந்நாடு முழுதும் தங்கள் ஆயுள் வரை இப்படியே சுற்றித்திரிய வசதியுண்டு என்ற நம்பிக்கையில் பல குடும்பங்கள் ஆண் பெண்களோடு பிராமணர்கள் தேச சஞ்சாரம் செய்துவருகின்றார்கள். ஆனால் இன்று அறச்சாலையென்று கூறப்படும் அன்ன சத்திரத்தில் பிராமணர்கள் தவிர வேறு எவருக்கும் சோறுபோடுவதில்லை என்ற திட்டம் எங்கும் பரவிவிட்டது. பசித்தவர்கள் படும்பாடும் கண் குருடு கால் கை நொண்டி வியாதியால் வேலையற்றவர்கள் உணவிற்குப்படும் பாடும் எழுதிக்காட்டமுடியாது. சில சத்திரங்களில் இப்போது பல அறிஞர்களால் பசியினால்வாடும் எல்லா மக்கட்கும் உணவளிப்பதற்கு வேண்டிய வசதி செய்யப்பெற்றிருக்கிறது. முழுவதும் அவ்வாறே மாறல் வேண்டும். பசியிலும் கூட உயர்வு தாழ்வு கற்பித்து ஒரு கூட்டத்திற்கு மட்டும் உணவளிக்க விரும்புவது அறமாகாது? மதுரை மங்கம்மாள் தர்ம சத்திரம் இன்று வியாபார முறையில் வாடகைக்கு விடப்படுகின்றது. அதிலுங்கூட பிராமணர்கள் மட்டும்தான் தங்கலாமென்று பல கட்டிடங்கள் ஒதுக்கி அவர்கட்கு விடப்படுகின்றன. இது அறமா? வழிப்பிரயாணிகள் வசதியோடு தங்குவதற்குக் கட்டிய சத்திரங்கள் பல வியாபாரத்திற்சேர்ந்தன. மற்றும் பல பிராமணர் வசம் புகுந்தன. வேறு சில பூட்டியபடியே கிடக்கின்றன; அவற்றிற்கெனவைக்கப்பெற்ற மூலதனங்கள் சில விடங்க

ளில், நிர்வாகம் புரிபவர்களால் விழுங்கப்பட்டு விரைவில் சத்திர கட்டிடமும் விலக்கு[illegible]கப்படுகின்றன; இந்நிகழ்ச்சிகள் அறம் வளர்த்த அறிஞர்கள் வழிவந்த அன்பர்கட்குச் சில விடங்களில் விளங்கியும் விளங்காமலுமிருந்து வருகின்றன. எனவே நாட்டின் அவசியமும் மக்களின் தேவையும் வளர்ந்து அதனை யுபயோகப்படுத்துவதுதான் அறமாகுமே யொழிய வயிறுர உண்டு தொழிலின்றி சத்திரச் சாப்பாட்டையே நம்பி வாழ்கின்ற ஒரு கூட்டத்தை நாட்டில் பெருக்கிக்கொண்டு போவதுமட்டும் அறமாகுமா? அறமாகாது.

## புராணப்பெருமைகள்.

இந்த நாட்டில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் போற்றப்படும் புராணங்கட்கோ கணக்கில்லை. அப்புராணங்களின் பேரால் நடக்கும் உற்சவங்களுக்கோ அளவில்லை. அவற்றி[illegible] பெயரால் செலவு செய்யப்படும் பொருள்களுக்கும் கணக்கில்லை. மக்களின் முயற்சிகளுக்கோ குறைவில்லை. இவ்வளவும் உண்மையுணர்ந்து செய்யப்படுகின்றனவா? அல்லது கண்மூடித்தனமாகப் பழக்க வழக்கமென்ற பெயரால் முன்னோர்கள் போனவழி யென்று பின்பற்றப்படுகின்றனவா என்பதைப்பற்றி யோசியுங்கள். எல்லாம் வல்ல கடவுள் என்பவர் பேரில் எத்தனை கோடிக்கணக்கான கற்பனையும் புரட்டுகளும், இழிவும் நிறைந்த புராணங்கள்? நாட்டை யாண்ட அரசர்கள் பேரில் அவர்கள் செய்த அக்கிரமங்கட்கும் அடாத செயல்கட்கும் கடவுள் தன்மையும் அவதாரச் சிறப்பும் கூறி அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அநுபோகத்திற்கும் ஒவ்வாத பொய்யும் புரட்டுகளும் கற்பித்து வரைந்துவைத்து மக்களைக் கண்மூடித்தனமாகப் போற்றச் செய்யும் புராணங்களெத்தனை? ஓடுகின்ற நதிக்கும், கட்டுப்பட்டுக்கிடக்கும் ஊரணித் தண்ணீருக்கும், மக்கள் குடியுள்ள நகரங்கட்கும், மண் மேடிட்டுக்கிடக்கும் குன்று கட்கும், யானை, சிலந்தி, குரங்கு, பன்றி, பசு, கருடன், மான் போன்ற ஜீவராசிகட்கும், பக்தர்கள் சித்தர்கள், முத்தர்கள் துறவிகள், நாயன்மார், ஆச்சாரியர், சிவநேசர்கள், யோகீஸ்வரர்கள், தவசிகள், வேதியர்கள்,வீண் வம்

பர்கள், பொய்யர்கள், புரட்டர்கள், ராக்ஷஸர்கள், கொடியவர்கள், தாசிகள் ஆகியவர்கள் பெயரிலும் [illegible]ணங்கள் எழுதப்பட்டு வீதிக்குவீதி, திண்ணைக்குத்திண்ணை புராணம்படித்தும் அதனைப் படிக்கும் பிராமணனுக்குப்பாமரமக்களால் பலபொருள் உதவப் பெற்றும் இதுவே பிழைப்பாகக் கொண்டு தினம் ஒரு புராணத் தைப் படிப்பதாகப் பலகோடி மக்களை ஏமாற்றி முத்திக்கும் பக்திக்கும் வழியென்று காட்டும் ஆபாசப் புராணங்களெத்தனை? கோடிக்கணக்கான புத்தகங்களை எழுதிவைத்துஅவற்றின்படியே பல உற்சவங்களையும் நடத்தி வீதிக்கு வீதி புராணங்களைப் படிக்கச் செய்து பார்ப்பானுக்கு ரூபாயும் காய்கறியும் பாத காணிக்கையும் கொடுத்து பயபக்தியோடிருப்பதாகவும் நடித்து ஒவ்வொரு சமயங்களிலும் புராணக்கதைகளை எடுத்து உதார ணங்காட்டிப் பேசியும் வரும் மக்கள் மேற் கண்ட புராணங்க ளால் பெற்ற நன்மையென்ன? இனி நன்மை யடையவும் இன்ப மடையவும் வேண்டியமார்க்கங்கள் தான் என்ன கூறுகின்றன? புரா ணம்படித்தபண்டிதர்கள் புராணிகர்கள்மட்டும்புராணப்பெருமை பேசிப் புராணத்தை நம்பியே வாழ்வு நடாத்த ஆசைப் படுவதும் அதற்காக அறிவுடைய மக்களின் பகுத்தறிவைக் கட்டுப்படுத்தி விட்டுப் புராணப் பெருமை கூறிக்கொண்டிருப்ப தும் அறிவுடமையாகாது? புராணத்தை நம்பியுள்ள மக்களும்புரா ணிகர்களுமாவது உண்மையில் வாழ்க்கையிலின்பமும்ஒழுக்கமு முடையவர்களாகவாவது வாழ்கின்றார்களா! வறுமையற்றவர்களா கவும் பெருமையுற்றவர்களாகவும் திகழ்கின்றார்களா! இல்லையே? புராணம்படிப்பவனும் அதனை விற்பவனும்தானே வீதி வீதியாக அலைந்து வேதனைப்படுகின்றனர். புராணங்களைப் புராணிகர்களா வது உண்மையென்றுநம்புகிறார்களா? அவர்கள் அறிவிற்கும் ஆரா ய்ச்சிக்கும் புராணக் கூற்றுக்கள் யாவும் மெய்யெனப்படுகின்றன வா? பொது மக்களையும் பாமர மக்களையும் யேமாற்றமட்டும் வீணாகப் புராணப் பெருமை பேசுவதில் பயன் என்ன என் பதை மட்டும் யோசியுங்கள். இந்நாட்டைப் புண்ணிய பூமி யென்று கூறுவதாலும் ஞானபூமி யென்றழைப்பதினாலும் மட் டும் நாம் நாகரிகமுடையவர்களாகவும் அறிவுடையவர்களாகவும் சுதந்திர முடையவர்களாகவும் தன்னம்பிக்கையுடையவர்களாக

# பரலோக டோல்கேட்.

'ஏயஸ்'

இகலோக டோல்கேட்டுக்கே பணங்கொடுத்து முடிய வில்லையென்று எடுத்துவரும்போது பரலோக டோல்கேட் ஏற் பட்டுவிட்டால் இதற்கு எங்கிருந்து கொடுப்பது? இது என்ன புதுமை! என்று சிலர் கலக்கமுறக்கூடும். கலங்கவேண்டாம். அந்த டோல்கேட்டுகளும் ஒழியுங்காலம் நெருங்கிவிட்டது. சமீ பத்தில் சென்னை சட்டசபையில் 'சுங்க ரத்து மசோதா' வந்து நிறைவேறியிருக்கிறது. இனி வண்டிகளுக்கு ஊர்தோறும் கொடுக்கப்படும் சுங்கம் நின்றுவிடும். தங்கு தடையின்றி இனி எல்லா வண்டிகளும் சர்வ சுதந்திரத்துடன் எல்லா ரோடுகளிலும் போகலாம். முதல் சுயராஜ்யம் வண்டிகட்குத்தான்! மனிதருக்கு சுயராஜ்யம் வரவேண்டியதுதான் பாக்கி!

பரலோகத்திலும் டோல்கேட்டுகள் வைக்கவேண்டும் என்று கைலாயபுரி சட்ட சபையிலோ, தேவேந்திர சபையிலோ, அன்றி வேறு எந்தக் கடவுளர் சபையிலோ தீர்மானித்திருப்பதாகவோ, அன்றி தீர்மானிக்கப்போவதாகவோ யாரும் எனக்கு அவசரத் தந்தி கொடுக்கவில்லை; சாதாரணமாக நமது உலகத்தில் உலாவுகிற மாதிரி வதந்தியும் உலாவவில்லை. ஆனால் பரலோக டோல்கேட்டு கள் ஏற்கனவே பல்லாயிரம் ஆண்டுகளாக—அல்ல—மனிதனுக்குப் புத்தி வந்ததுமுதல் (கெட்டது முதல் என்று வைத்துக்கொண்டா லும் பொருந்தும்!)—ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. கட்டணங் கள் ஒழுங்காகச் செலுத்தப்படுகின்றன, பலர் தெரியாது செலு த்துகின்றனர்; சிலர் தெரிந்து செலுத்துகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ அனேகமாக எல்லாரும் பற்பல விதத்திலும் இந்த டொல்கேட்டுகளுக்குச் செலுத்தித்தான் வருகிறார்கள். இகலோக டோல்கேட்டுகள் ஏற்படப்போகும் காலத்தில், பரலோக டோல் கேட்டுகளையும்பற்றிச் சிறிது—மூளையின் ஒரு மூலையில் மட்டும்— ஞாபகப்படுத்தினல், அது நன்கு பரவி மூளையில் ஏறி வேலை செய் யாதா என்பதுதான் எனது கருத்து.

ஜில்லா போர்டார் ரோடுகளிலே அங்கங்கே டோல்கேட்டு களை ஏற்படுத்தி வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிக்கின்றனர். நகர

சபையார் தங்கள் தங்கள் எல்லைகளில் டோல்கேட்டுகள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இன்னும் ஏதாவது பெரிய பாலங்கள் புதிதாகக் கட்டப்பட்டிருக்குமானால் அவற்றிற்கும் டோல்கேட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் இகலோக டோல் கேட்டுகள். இவற்றில் வசூலிக்கப்படும் பணம் முழுவதும் ரோடுகள் செப்பனிடத்தான் உபயோகிக்கப்படுகின்றன. வேறு யாரும் தங்கள் வயிற்றை நிரப்ப இந்த ஏற்பாடு செய்யவில்லை. ஆனால் ஒவ்வொருவித வண்டிக்கும் இன்னின்ன கட்டணம் என்று ஏற்பட்டிருக்கிறது. எல்லாருக்கும் ஒரேவித கட்டணந்தான் வசூலிக்கப்படுகிறது. இதேமாதிரிதான் அங்கங்கே பரலோக டோல் கேட்டுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவசரப்பட்டு எங்கெங்கே யென்று கேட்டுவிடாதீர்கள். பலருக்கு விளங்கி யிருக்கலாம்; சிலருக்கு விளங்காதிருக்கலாம். இதை மாற்றி சிலரைப் பலராகவும், பலரைச் சிலராகவும் வைத்துக்கொண்டாலும் சரிதான். எல்லாருக்கும் பொதுவாக விளக்கிவிடுகிறேன். பரலோகம் என ஒன்றிருக்கிறதாம். எங்கு—நமது தலைக்கு மேலே, மேகங்கட்கு மேலே, கண்ணுக்குத் தெரிகிற தூரத்துக்குமேலே, எல்லாவற்றிற்கும் மேலே! அங்கு போவதற்கு டோல்கேட்டுகள் எங்கே—பூலோகத்தில். அதற்கும் இதற்கும் பாதை உண்டா? கிடையாது. இருந்தால் இங்கு ஏது டோல்கேட்? பாதையிலல்லவா டோல் கேட்டிருக்கும்? பாதையில்லாததால்தான் இந்த உலகத்தில் கேட் வைத்திருக்கிறார்கள். அந்த உலகத்திலும் இம்மாதிரி இருக்க வேண்டுமே? இருக்கலாம். யாராவது போனவர் திரும்பிவந்தால் கேட்டுச்சொல்கிறேன்—அல்லது நீங்களே கேட்டுக்கொண்டாலும் சரிதான். இகலோக டோல்கேட்டு சட்ட புத்தகங்கள் எதிலும் பரலோகத்திலிருக்கும் டோல்கேட்டைப்பற்றிச் சொல்லி யிருப்பதாக எனக்கு ஞாபகமில்லை. புதிய சந்தேகம் ஏற்பட்டு விட்டால், பரலோக டோல்கேட் ஆசாமிகளை விசாரியுங்கள். நான் கூறவந்தது நமது உலகத்தில் இருக்கும் பரலோக டோல் கேட்டுகளைப்பற்றி மட்டுந்தான். அனுவசியமாக சம்பந்தப்படாத விஷயத்தில் தலையிட விருப்பமில்லை.

எல்லா ஊரிலும் ஏற்பட்டிருக்கிறது. ஏற்படாது போனால் ஊரே யிருக்காது. "டோல்கேட்டில்லாத ஊரில் குடியிருக்கவேண்

டாம்" என்று நமது மூதாட்டியார் தமது சட்ட விரிவுரை நூலில் நன்கு, சுருக்கிச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்கள். ஆகவே ஊர் தோஷம் ஏற்பட்டுவிட்டது. ஊருக்கு ஒன்றல்ல, இரண்டல்ல; எத்தனையெத்தனையோ எண்ணிப்பார்த்தாற்றான் தெரியும். ஸென்ஸஸ் கணக்கில் இதையும் சேர்த்துக்கொண்டால் தான் எண்ணமுடியும்!

இந்த டோல்கேட்டுகளில் ஏன் கட்டணம் செலுத்தவேண்டும்; உண்மையாகப் பரலோகத்திற்குப் போகலாமா என்பதை இனிக் கூறுகிறேன். சாதாரண நமது இகலோக கேட்டுகள் மாதிரி கட்டாயமாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவது முண்டு; கட்டாயமில்லாமல் வசூலிப்பது முண்டு. சட்டமென்றால் எல்லாருக்கும் பொதுவல்லவா? ஏன் இந்த வித்தியாசம் என்றால், கட்டாய மின்மையினாலே பெரிய மிச்சமிருக்கிறது. யாருக்கு? டோல்கேட்டு காரர்களுக்கு!

ஒவ்வொருவருடைய அந்தஸ்துக்குத் தக்கபடி கட்டணம் செலுத்தப்படுவதினாலே, இந்த கேட்டுகளில் தினமும் லட்சக் கணக்காகச் சேர்கிறது. பணத்தை பரலோக ஸர்க்கார் பெறுவதில்லை. இந்த லோகத்தில் பார்ப்பனரும், குருக்கள்களும் இவர் போன்ற பிறரும் இதற்காகவே தோன்றியிருக்கிறார்கள். ஆகையினாலே, ஒவ்வொரு கோயிலும்—மறந்துவிட்டேன், டோல் கேட்டும்—கட்டிமுடிந்தவுடன், அதில்வரும் வசூலைச்சேகரிக்கப் பல பார்ப்பனர், குருக்கள், பண்டாரம் முதலியோர் அதைச்சுற்றி அமைக்கப்படும் அக்கிரகாரத்தில் தாபிக்கப்படுகின்றனர். இகலோக டோல்கேட்டின் பக்கத்தில் போனவுடன் எப்படி ஆள் வந்து தடுக்கிறானோ, அதேமாதிரி சாமி கும்பிடப்போகும் ஒருவன் கோயிலினுள் போனவுடன், "என்ன, அர்ச்சனை பண்ண வேண்டுமா? ஏதாவது நிவேத்தியம் போடணுமா?' என்றெல்லாம் கேள்விகள் போடுகிறான். செல்வத்துக்குத் தக்கபடி, அல்லது எண்ணத்துக்குத் தக்கபடி கொடுக்கிறார்கள். கைமேற்பலன் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் திரும்புகிறார்கள்.

டோல்கேட்டுகள் பல மாதிரி. ஒவ்வொன்றுக்கும் விதம்விதமான சிறப்புக்கள். பல சிறப்புக்களையும் பெற நினைப்பவன் பல கேட்டுகளுக்கும் கொடுத்துத்தான் தீர வேண்டும். இப்படிக்

கொடுத்து ஆண்டியான பேர் பலர். மேல் உலகத்தில் மிகச் சவு கரியமாக வாழலாம் என்ற நம்பிக்கை யிருப்பதால் மன நிம்மதி அடைகிறார்கள். பெரும்பணத்தைக் கொடுப்பவர் ஒருவேளை புஷ்ப விமானத்தில் சென்றாலும் செல்லலாம்; சிறிது கொடுப்ப வர் மாட்டின் வாலைப்பற்றித் தாவினாலும் தாவலாம்; ஒன்றுங் கொடாதவர் பையிலடைபட்டு எருமைக்கடா மீதேறிச் சென்றா லும் செல்லாம். ஒரு இடத்துக்கும் செல்லாது இங்கேயே சுற் றிச் சுற்றி வந்தாலும் வரலாம். இப்படியெல்லாம் பரலோக டோல்கேட்டுச் சட்ட புத்தகங்களில் பெரிய பெரிய வியாக்கியா னங்களுடனும், உதாரணங்களுடனும் எழுதிவைக்கப்பட்டிருக்கி றது. இது எப்பொழுது சட்டமாச்சு; எந்த சட்டசபையில்; யார் முன்பு; யார் முன்னிலையில்; எந்த தர்பாரில் என்ற விஷயங் களெல்லாம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதிரி, ஒன்றுக் கொன்று முரணாக அல்லது அரணாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டங்களைப் படித்து சிலரும், அவர்களைப் பின் பற்றிப் பலரும் இந்த பரலோக டோல்கேட்டுகளுக்குச் செலுத்துகிறார் கள். இதன்பயனாக நமது இந்தியா தேசத்திலே, எத்தனையோ கோடி ரூபாய் பாழாக்கப்படுகிறது.

கேட்டுகளில் வசூலாகும் பணத்தை இகலோக கேட்டுமாதிரி ரோட்டைச் செப்பனிடவோ அல்லது மனிதர் மூளையைச் செப்ப னிடவோ உபயோகிப்பதில்லை. எல்லா தானங்களிலும் மேலான அன்னதானத்துக்குப் பற்பல விதங்களில் செலவு செய்யப்படு கிறது. இனி கட்டாயமாக வசூலிக்கப்படும் கேட்டுகளும் இருக்கின் றன. மூலஸ்தானத்தைத் தெரிசிக்கக் கட்டணம் இவ்வளவு, சிதம் பர சக்கரத்தைத் தெரிசிக்க ரூபாய் இத்தனை, என்று ஒவ்வொரு பிரதான கோவிலிலும் ஏற்பட்டிருக்கிறது. ஆளுக்குத்தக்கபடி கூடுதலாகவும் வசூலிக்கப்படும். இதெல்லாம் கண்டிப்பாகக் கொடுத்துவிடவேண்டும். இல்லாவிட்டால் நரகத்தில் அழுந்த வேண்டியதுதான்! இவ்விதமாக பரலோக டோல்கேட்டுகளும் மனிதனது வருவாயை நாசப்படுத்தி வருவதாலே, இவற்றையும் ஒழிக்கவேண்டாமா! இகலோக கேட்டுகளை மட்டும் ஒழித்தாற் போதுமா? அந்த கேட்டுகளைவிட பரலோக கேட்டுகள் பெரும் பணத்தை விழுங்குகின்றனவே? இங்கு வண்டிக்கும், மாட்டுக்கு

மல்ல பீஸ்—மனிதர்க்கல்லவா சுங்கம் வசூலிக்கப்படுகின்றது ! எப்படி ஒழிப்பது ? பரலோ[illegible] வானில் இருக்கிறது. வானே வெறும் வெளி. ஆகவே, வெ[illegible]ம் வெளிக்குச் செல்ல அனுமதியளிக்கும் டோல் கேட்டுகளும் '[illegible]பூ' வென்று ஊதினல் காற்ருேடு காற்ருய், வானுகிப்போய்விடாதா ? சிறிது புத்தியை மட்டும் உபயோகித்தாற்போதும், அதுதான் [illegible]ழி. வேறு வழியில்லை.

---

# அருணுசல புரா[illegible]த்தின் குழறு படை.

## சில குறிப்புக்கள்.

புராணங்களில் சொல்லப்படுபவைகளில் 100-க்கு 90 புரட்டும், ஏமாந்ததனமும், அறிவுக்குப் பொருத்தமற்றதுமாகவே இருப்பதைக் காணலாம். அருணுசல புராணத்திலிருந்து சில குறிப்புக்களை இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

தீர்த்தச் சருக்கம் பாட்டு 13.

*தென்றிசைத் தருமதீர்த்த முளத்திற் செறிந்து மூழ்கிற்*
*பொன்றிகழ் வடிவமாகும் உடற்பிணி பொடிபட்டோடும்,*

(இ-ள்) மலைக்குத் தெற்கேயுள்ள யமதீர்த்தமென்று ஒன்றிருக்கிறது. அதில் முழுகினல் பொன்னிறமான வடிவமுண்டாகும். உடலிலுள்ள பிணியெல்லாம் பறந்துபோகும்.

நோயெல்லாம் போகுமா? உடம்பில் தங்க நிறம் வருமா? என்று கேட்கிறேன். இந்தியாவிலிருக்கும் மக்களில் 100-க்கு 90 நோயுள்ளவர்தான். நோயற்ற வாழ்வற்ற செல்வமாகும். இந்தக் குளத்தில் முழுகினல் எல்லா நோயும் போகுமென்று சொல்லப்படுகிறது வாய்ப் பேச்சோடு போகப்படாதல்லவா? இந்திய மக்களுக்கு வேண்டிய அளவு வைத்தியசாலைகளுங் கிடையாது. வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பணமுமில்லை. வைத்தியர்களும் பச்சைவெட்டு மருந்துகளைக் கொடுத்து வாய் வயிறெல்லாம் வேக வைத்துவிடுகிருர்கள். இந்தக் குளத்து சங்கதி வாஸ்தவமானல் இந்தியாவிலுள்ள எல்லா ஹாஸ்பிடல்களையும் ஓரே நாளில் மூடிவிடலாம். இதில் முழுகி நோயைப் பறக்கடித்துப் போடலாம். இரண்டாவது உடம்பு பொன்னிறமாகிற சங்கதியாகும். கறுப்பு

மனிதர்களாக இருப்பது பெருத்த அவமானமாக இருக்கிறது. வெளி நாட்டார் மிகக் கேவலமாகக் க[illegible]றுர்கள். வேறு எந்த வகையாலும் கறுப்பு மனிதர் பொன் மனித[illegible]ாக வழியில்லை. இந்தக் குளத்தில் முழுகியெழுந்தவுடன் பெ[illegible]ன்னிறமாவதென்றுல் இந்தியருடைய நிலை அற்புத நிலையாகிவி[illegible]ம். சுயராஜ்யம்கூடத் தந்துவிடுவார்கள். ஆனால் இந்த இரண்[illegible] சங்கதிகளும் நடக்குமா? நடக்கிறதா? நடந்திருக்கிறதா? இளி[illegible]சவாயன் யாராவது பெண்டாட்டி பிள்ளைகளை அழைத்துக்[illegible]காண்டு திருவண்ணுமலைக்கு வந்து இந்த ஆபாஸக் குளத்தி[illegible] முழுக நெருங்கினுல் கரையி[illegible]லிருந்து அகப்பட்டதைத் தட்டிப் பிடுங்கக் காத்திருக்கும் பார்ப்பான் கட்டிய கதையைத் தவிர வேறு ஏதாவது யோக்கியப் பொறுப்புண்டா என்று கேட்கிறேன். பணத்தைக் கொடுக்கட்டும் குளிக்கட்டும் நோயும் போய் நிறமும் பொன்னுக மாறினுல் சரி. இல்[illegible]ாவிட்டால் அங்கு இருக்கும் பார்ப்பானின் கன்னம் சிவக்குமானுல் அடுத்த நாள் இந்த வேலை நடைபெருதல்லவா? நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. புராணத்தில் இருப்பது சரியாக நடக்கவேண்டும். நடக்காவிட்டால் புராணத்[illegible]தக் கொளுத்தவேண்டும். அதைக்கொண்டு பிழைப்பவர்கட்குப் புத்தி புகட்டவேண்டும். "புராணமெல்லாம் பொய் யெ[illegible]கிறு[illegible]கள்; அத்தனையும் பரமசிவன் வாக்கு; எல்லாம் உண்மை"யென்று கூறும் சிவ பக்த சிகாமணிகளே! இதற்கென்ன பதில்? புராணம் பொய்யா? [illegible]ளத்தில் முழுகினுல் பொன்மயமாகு மென்றெழுதியிருப்பது மெய்யா? மெய்யாயின் நேரே காட்டுங்கள்! பக்தி நிறைந்த நீங்களாவது முழுகிப் பொன்னிறங் காட்டுங்கள்! இல்லையென்றுல் புராணம் பொய் பொய் பொய் என்று சொல்லுங்கள். உங்கள் புரட்டு இனி நிற்கா தென்பதை உணருங்கள்!

இதே புராணத்திலிருந்து இன்னும் இரண்டொன்றைக்கவனிக்கலாம். பரமசிவன் எங்கும் நிறைந்தவரென்றும் அறிவுக்கறிவாக இருந்து எல்லாவற்றையும் அறிகிறுரென்றும் சர்வக்ஞன் என்று நூல்களில் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட பெருமைக்கிலக்காக இருக்கும் பரமசிவனைச் சர்வ முட்டாளென்று அருணுசல புராணக்காரர் கூறுவதை இங்கெடுத்துக்காட்டுகிறேன்.

தீர்த்தச்சருக்கம் பாட்டு 36.

காகமுன் பலிபீடத்திற் பலிதனைக் கவரும்போதில்
ஆகமார் சிறை... ...மேழ புடைத்ததா லயத்தினூடே
ஓகையால் நமது கோயில் விளக்கிய தெனவுட்கொண்டு
பாகசா தனனூர் வாழும் பதியினைப் பரமன் ஈந்தான்.

(இ-ள்) ஒரு காக்கையானது திருவண்ணாமலைக் கோயிலி லுள்ள பலிபீடத்தில் வைத்திருந்த சோற்றைத் தின்னும்போது தன்னுடைய சிறகை விரித்து அசைத்தது. அதனைக்கண்ட பரம சிவன், சந்தோஷத்தினால் நம்முடைய கோயிலைச் சுத்தம் செய்த தென்று நினைத்து உடனே தேவேந்திரன் வாழும் உலகத்தை அதற்குக் கொடுத்தார்.

ஷை பாட்டு 37.

மூடிகமொன்று கோயில் முழையினைக் கிளறும்போது
தேடரு மணியொன்றங்கே சிதறியோர் விளக்கிற்காட்ட
ஆடிய பெருமான் தீபம் அளித்ததென் றதற்கு நல்ல
வீடுயர் நெறியுங்காட்டி விரைந்து சாலோக மீந்தார்.

(இ-ள்) ஒரு பெருச்சாளியானது கோயிலில் வளை தோண் டும்போது பறித்தெறிந்த மண்ணிலிருந்து ஒரு ரத்னமானது சந் நிதியிலே விளக்குப்போல் மின்னியது. அதனைக்கண்ட சிவபெரு மான், தீபம் போட்டதென்று கருதி அந்தப் பெருச்சாளிக்கு மோக்ஷ வழியையுங்காட்டி சாலோக பதவியையுங் கொடுத்தார்.

ஷை பாட்டு 38.

சிலந்தியொன் றொருநாள் அந்தத் திருமலையிடத்து நூலைக்
கலந்துடன் இழைக்க ஈதுகலைநமக் களித்த தென்று
நலந்திக ழரசனுக்கி அதற்குநல் லறிவுநல்கி
உலர்ந்தபின் நெடிய மாயன் உலகினை உதவினனே.

(இ-ள்) திருவண்ணாமலையில் ஒரு நாள் ஒரு சிலந்திப்பூச்சி யானது வாய்நூலால் கூடுகட்டியது. அதனைச் சிவபெருமான், நல்ல வஸ்திரத்தைச் செய்துகொடுத்ததென்று கருதி இராஜாவாக்கி நல்லறிவு கொடுத்து இறந்த பிறகு வைகுண்ட லோகத்தையும் கொடுத்தார்.

இம்மூன்று பாட்டினையும் சிறிது நோக்குதல் வேண்டும். பலிபீடத்திலிருந்த சோற்றைத் தின்னும்போது தவறி விழாமலி

ருக்கும்பொருட்டுச் சிறகை ஆட்டினுல் அதைக் குப்பைகூட்டிச் சுத்தஞ் செய்ததாக எவனுவது நினைப்பானா? பெருச்சாளி கோவிலைத்தோண்டி வளைபறித்ததில் கல் கிடந்து மின்னினுல் விளக்கேற்றியதாக நினைப்பவனைவிடப் பெரிய முட்டாள் யாராவதிருக்க முடியுமா? சிலந்திப்பூச்சி கூடுகட்டுவதைக் கண்டு வேட்டி நெய்து கொடுத்ததாகக் கருதுதல் எவ்வளவு புத்திசாலித்தனமோ? இப்படி ஏமாந்தவன் பரமசிவன் என்று புராணக்காரர் கூறுகிறுர். இப்போது உண்மையாகவே இதனை நம்பிக் குப்பை பெருக்கவும், விளக்குப்போடவும், வஸ்திரம் நெய்யுதவவும் பலர் முன்வந்திருக்கின்றனர். அவர்கட்குக் கிடைத்திருக்கும் பதவி சொல்ல வேண்டியதில்லை. இந்திரலோகமும், விஷ்ணுலோகமும், முத்திலோகமும் கிடைத்தபாடில்லை. மனம் போனபடி புராணத்திலெழுதலாமென்ற முடிவில் எழுதப்பட்டுக் கிடக்கின்றனவென்பது இதிலிருந்து ஒருவாறு விளங்கும். அறிவு மயமான கடவுள் இப்படி முட்டாள்தனமாகக் காரியங்களைச் செய்வாரா என்ற உணர்ச்சி புத்தகம் படிப்பவர்க்கு எழவில்லை. எழ வழியில்லை. அவ்வளவு வரை மக்கள் பயமுறுத்தப்பட்டிருக்கின்றனர். இவ்வளவு பயித்தியக்காரத்தனமாகப் பரமசிவன் ஏமாறுபவரானுல் அவரால் நடைபெறும் இவ்வளவு பெரிய உலகத்தை நிர்வகிக்க முடியுமா என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். எதையாவது எழுதி ஆட்களை வரவழைத்துவிடவேண்டுமெஞ்பதே அவ்வூரிலுள்ள ஐயர்களின் வேலையென்பதை இதிலிருந்து தெளியலாம். இம்மாதிரிக் குழறுபடை இப்புராணத்தில் இன்னும் பல உண்டு. வேறு புராணங்களையும் பார்க்கவேண்டியிருப்பதால் இம்மட்டில் இப்புராணத்தை விட்டுவிடுவோம். "சர்ச்லைட்"

---

ராமன்:—ஏனய்யா! சென்ற புதன்கிழமையே இரங்கூனுக்குப் புறப்படுவதாகச் சொன்னீர்களே? புறப்படாததற்குக் காரணமென்ன?

வைதீகன்:—நான் புறப்பட்டுப் போகிறபொழுது நெய் டின் எதிரே வந்தது. அதனுல் சகுனம் சரியில்லை எனத் திரும்பி விட்டேன்.

ராமன்:—எண்ணெ டின் தான் எதிரே வரக்கூடாதென்பார்கள். நெய் டின் வந்தால் என்ன?

வைதீகன்:—அந்த நெய்யில் ஒருக்கால் எண்ணெ கலந்திருக்கலாம்.

# பிள்ளை எப்படி உண்டாகும்?

ரகுநாதப்பிரபு : (...ப்புசாமி சாஸ்திரியை நோக்கி) என்ன கடவுள் நம்மை மி...ம் சோதிக்கிறார்.

சாஸ்திரி:—கட...ள் சுலபத்தில் ஒன்றையுங் கொடுக்கிறதில்லை. முழுமையும் சோதித...த்தான் கொடுப்பார். அப்படிக் கொடுப்பது தீர்க்காயுஷா இருக்...ம்.

உள்ளூருக்குப் புதித... வந்த ஒரு இன்ஸ்பெக்டர்:— இரண்டொரு தகவல் தேவை. ...பார்க்கிறதற்காக வந்தேன். ஏதோ கவலையாக இருக்கிறாப்போல ...தரிகிறது.

பிரபு:— ஒன்றுமில்லை. இதோ வருகிறேன். நாற்காலியில் உட்காருங்கள்.

சாஸ்திரி:— குழந்தையில்லை; வெகு சிரமப்பட்டுப் பலவிதமான பிரயத்தனங்கள் செய்து ஈஸ்வரன் சோதிக்கிறார்.

இன்ஸ்பெக்டர் :— இதுவரை என்னென்ன பி...த்தனங்கள் செய்திருக்கிறார்? (மனத்திற்குள் பிள்ளை பிறக்கப் பலவித பிரயத்தனங்கள் செய்வதென்றால் என்ன; அர்த்தமாகவில்லையே)

சாஸ்திரி :— அவாள்தான் ஞாபகமாகச் சொல்வார்கள். இன்ஸ்பெக்டரவாளுக்குச் சொல்லுங்களேன்.

பிரபு :— பிள்ளைக்காக ஜாதகம் பார்த்து வெகு பணம் செலவு செய்தேன். நாகப் பிரதிஷ்டை செய்தேன். புத்திர காமேஷ்டி யாகம் செய்தேன். அதற்குமட்டும் 10000 ரூபா செலவு. 90 நாள் நானும் மனைவியுமாக அரசமரம் சுற்றினோம். ...பிள்ளையாருக்கு இதுவரை 600 தடவைக்கு மேல் பொங்கல் வைத்திருக்கிறது. பழனியில் வருஷமொரு முறையில் காவடியெடுத்து வருகிறேன். நடராஜாவுக்கு வருஷமொரு முறை மகா அபிஷேகத்துக்குப் பெரும் பொருள் கொடுக்கிறேன். மதுரை, பழனி, சிதம்பரம், திருச்செந்தூர், திருவண்ணாமலை முதலிய இடங்களில் தினந்தோறும் தளுகை நைவேத்தியத்துடன் சகஸ்ர நாமார்ச்சனை நடந்து வருகிறது. காலையில் நானும் மனைவியும் தவறாமல் ஸ்நானம்செய்து பிள்ளையார் கோவிலுக்குச் சென்று 108 சிதறுகாய் உடைத்து தரிசனம் செய்துவருகிறோம். கோயில் ஜபம் நடக்கிறது. மாலையில் சுந்தரகாண்டம் வாசிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ராமேசுவரத்திற்கு மூன்றுதரம் போய் வந்துவிட்டோம். ஒன்றுங் கிடைக்கவில்லை.

இன்ஸ்பெக்டர்:—(பொறுக்கமுடியாதவராய்) இதிலெல்லாம் எப்படிப் பிள்ளை பிறக்கும்?

சாஸ்திரி:—இன்ஸ்பெக்டர்வாள்! அதென்ன அப்படி நினைக்கிறீர்கள்? கடவுள் நினைத்தால் முடியாத காரியமுண்டோ?

இன்ஸ்பெக்டர்:—சும்மா இருங்காணும்! அவருடைய பணத்தை யெல்லாம் கொள்ளையடித்துவிட்டு சமாதானம் வேறேயா? உங்களுக்கு எப்படி சார் பிள்ளை பிறக்கும்? வயதோ 50க்கு மேலாகிவிட்டது. உடம்பு பலனற்றுத் தளர்ந்து போய்விட்டது. உங்கள் மனைவி......

சாஸ்திரி:— முதல் தாரம் இறந்துபோய்விட்டது. இரண்டாந்தாரத்துக்கும் பிள்ளையில்லை. மூன்ருந்தாரம் செய்திருக்கிருர்கள். மகா உத்தமி. பதிவிரதை. என்னவோ பகவான் சோதிக்கிருர்.

பிரபு:— சாதகமெல்லாம் பார்த்துத்தான் இந்தப் பெண்ணையும் கல்யாணம் செய்துகொண்டேன். 50,000 ரூபா கல்யாணச் செலவாகிவிட்டது. பிள்ளைப்பாக்கியம் இந்தப் பெண்ணுக்கு அதிகமுண்டென்று ஜாதகம் பார்த்துச் சொன்னூர்கள். இதுவரை அனுகூலமேற்படவில்லை.

இன்ஸ்பெக்டர்:— அனுகூலம் எங்கே ஏற்படும்? பெண் உத்தமி! பிரபு கிழவன்! எதுங்காணும் பிள்ளை? அந்தப் பெண் வேறு மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் பிள்ளை பிறக்கும். இதுவரை செய்த செலவை இந்த ஐயர்மார்களிடம் வட்டியுடன் வசூல்செய்ய வழி பாருமையா! ஒரு பெண்ணையும் கெடுத்துவிட்டீரே? முந்தின மனைவிக்குப் பிள்ளை பிறக்கவில்லை யென்ருல் அந்த அம்மாளுடைய குறைவா? உம்முடைய குறைவா? யோசித்துப் பார்த்தீரா?

பிரபு:— அப்படித் தானிருக்குமோ? என் உடம்பு தளர்ந்து போய் விட்டது. வாஸ்தவம்தான். மருந்து சாப்பிட்டும் தெளியவில்லை. பரிகாரம் செய்து 15 வருஷமாக சலித்துப்போய் விட்டது. பார்ப்பான் பேச்சைக் கேட்டுப் பணம் போச்சே தவிர ஒரு பிரயோசனமும் இல்லை.

அனுபவித்தவன்.

---

# ஆசீர்வாதம்.

தீக்ஷிதர்:— "ஆசீர்வாதம்."

சிற்றம்பலம்:— "தீக்ஷிதர்வாள்! கொண்டை வாதம், பக்க வாதம், முடக்கு வாதம் என்று பல வியாதிகளை மட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆசீர்வாதம் என்ற வியாதியை நான் இது வரை கேள்விப்பட்டதில்லையே! அப்படியும் ஒரு வியாதி தங்களுக்கு............

தீக்ஷிதர்:— "ஓகோ நான் கொஞ்சம் காலை நொண்டி நடப்பதால் எனக்கு வாதரோகமென்று நினைத்துவிட்டீர்களோ? அப்படியெனக்கு யாதொரு வாத நோயுமில்லை. தங்களுக்கு ஆசி கூறினேன்."

சிற்றம்பலம்:— "தீக்ஷிதரே, போற்றிப் புகழவேண்டாம்; அதன் பதப்பொருள் வேறு; உமது மனத்தினில் ஊசலாடிக் கொண்டிருப்பது வேறு. சரி, தாங்கள் வந்த காரியமென்ன?

தீக்ஷிதர்:— "திருச் செந்தூர் ஸ்ரீ முருகப் பெருமான் சன்னிதானத்தில் தங்கள் திருநாமம்—அஷ்டோத்ர அர்ச்சனை-காணிக்கைக்கு உத்தரவு ஆகவேண்டும்."

சிற்றம்பலம்:— "அஷ்ட உபத்திரமாவது, பஞ்ச உபத்திரமாவது. ஒரு உபத்திரவமும் ஒருவருக்கும் வேண்டாம்."

தீக்ஷிதர்:— "சகல வினைகளையும் தீர்க்கும் ஸ்ரீ பெருமான் சந்நிதானத்தின் மகிமையை யாரால்தான் சொல்ல முடியும்?"

சிற்றம்பலம்:— "அந்த முருகன் தன் வினையைத் தீர்க்க இயலாதவன் அன்னியர் வினைகளை எப்படித் தீர்க்கப் போகிறான்?

தீக்ஷிதர்:— "அப்படி முருகப்பெருமானுக்கு வந்த வினை என்ன? தீர்க்க முடியாமற் போனதென்ன?

சிற்றம்பலம்:— "ஒன்றா, இரண்டா, அவைகளைப்பற்றியெல்லாம் இப்பொழுது பேசுவானேன்? நல்ல படித்தவர் என்று சொல்லப்படுகிற புராணிகர் கூறுகிறபடி அப்பெருமான் பிறந்த விதங்கள், வள்ளியம்மாளுக்கு வாயூறினது, சூரன் யுத்தத்தில் விநாயகர் துணை நாடியது, மாம்பழத்துக்கு ஏமாந்தது இவை போல்வன நகைப்பை வாராயென அழைக்கும்படி அமைக்கப்பட்டிருக்கவில்லையா? அதில் என்ன மகிமை இருக்கமுடியும்? கடவுளைக் காக்க மனிதர்கள் புறப்படும் குணத்தாலேயே............

தீக்ஷிதர்:— "உம்—கும்—தாங்கள் சுயமரியாதைக்காரர்போலும்! இந்த ஊரிலும்—ஆரம்பித்துவிட்ட...?

சிற்றம்பலம்:— "தீக்ஷதரே! தங்கள்போன்றவர்கள் மரியாதையற்றவர்களாயிருக்கச் சம்மதிப்பீர்களா! ... மரியாதையற்றவர்கள்போலும்!

தீக்ஷிதர்:— "தருக்கஞ்செய்யவாரம்...த்துவிட்டீர்கள். தருக்கஞ்செய்ய நான் தயாராயில்லை. கால...கெட்டுப்போய்விட்டது. முன்போல் சாமியில்லை, சாதியில்... கோவில் இல்லை, குளம் இல்லை, எல்லா... இதுவும் கலிகாலத்தின் போக்கு.

சிற்றம்பலம்:— "கலிகாலத்தையும் சுயமரியாதைக்காரர்களையும் நொந்தென்ன பயன்? கலிகாலத்தின் போக்குப்படியே காலமும் மாறிக்கொண்டே வருகிறது. ஆதலின் "காலம் போற் கோலம்" ஆகவேண்டியதுதானே! தருக்கம் என்னும் பதத்திற்கு யூகம், நியாயம், வாதம் எனக்கொள்ளலாம். சுயமரியாதைக்காரர்கள் செய்யும் வாதத்திற்கு யூகமும் நியாயமுமான வாதம் என்பதை அனுசரித்தே தாங்கள் ஆரம்பிப்பதிலேயே ஆசீர்வாதமென்று ஆசி கூறி விட்டீர்களல்லவா? இதுவும் கலிகாலத்தின் போக்குத்தானே! உண்மை பொய்க்குமா?"

தீக்ஷிதர் மறுமொழியில்லாமல் அதிக வருத்தத்துடன்போய் விட்டார். (இது யதார்த்தமாய் நடந்த சம்பாஷணை.)

---

# பலதிரட்டு.

## லட்சுமணன் கதியென்ன?

காதலை வருணிப்பதில் கம்பர் பெயர் பெற்றவர். ராமாயணக் கதையும் பேர்பெற்றது. ராமனும் சீதையும் சரியான காதல் ஜோடிகளாவர். "கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனுமில" என்று காதலைப்பற்றித் திருவள்ளுவர் சொன்னார். இதைக் காப்பியெடுத்து சீதை ராமருக்குமிடையில் கம்பர் காட்டியிருக்கிறார். "கண்ணினை ஒன்றை ஒன்று கவ்வி........."

என்பது கம்பர் கவியாகும். காதலில் சிறந்த சீதையோ ராமன் காட்டுக்கு [illegible] ரும்போது உடன் சென்றால்தான் உயிர் தரிப்பேன் [illegible] டிவாதம் செய்து தொடர்ந்து சென்றாள். உண்மை [illegible] ஒரு நிமிஷங்கூடப் பிரிந்திருக்க முடியாது. இந்தப்ப [illegible] சீதையும் பிரியாக் காதல்கொண்டு விளங் கினர். [illegible] ம் பேடுமாக அருகிருந்தே பொழுது போக்கினர். [illegible] முகத்தோடு முகம் பொருந்தி நித்திரை செய்தனர். [illegible] சீதையைக் கொண்டுபோனபோது, ராமன் காதலி [illegible] மரத்தையும் செடியையும் கல்லையும் மண்ணையும் பக்ஷியையும் மிருகத்தையும் நோக்கிக் கதறுகிறார். அப்படியே சீதையும் வருந்தி வருந்தி வருந்தி மாய்கிறாள். இது சரிதான். காதல் நன்றாயிருக்கிறது. இந்த ராமனோடுகூட ஒருவன் புறப்பட்டு வந்திருக்கிறானே! லட்சும ணன்! அந்த ஆளின் சங்கதி யென்ன? அவனுக்கும் ராமனுக்கும் கல்யாணம் ஆன தினத்திலேயே கல்யாணம் ஆகிவிட்டது. லட் மணன் காட்டுக்குப் போகிறபோது அவன் மனைவி அழுததாகவ [illegible] து அல்லது இந்த லட்சுமணன் கண் கலங்கினதாவது தெ[illegible] வில்லை. தன் மனைவியை அழைத்துக்கொண்டு காட்டிலும் காதல் செய்த ராமன் தன் தம்பியைப் பார்த்து உன் மனைவியையும் அழைத்து வா என்று சொல்லவில்லை. காதலின்பத்தைக் கண்ட சீதையும் லட்சுமணன் மனைவியை அழைத்துச்செல்லவில்லை. ராம னும் சீதையும் லட்சுமணன் மனைவி வருவதில் பொறுமைப்பட் டார்களா? லெட்சுமணனுக்குக் காதல் சங்கதி தெரியாதா? லட்சு மணன் மனைவி, லட்சுமணன் எங்கே தொலைந்தாலும் சரியென்று வீட்டிலிருந்துவிட்டாளா? புருஷனும் மனைவியும் ஒரு நிமிஷங் கூடப் பிரிந்திருக்க முடியாதென்று வருணிக்கும் கம்பர் லெட்சும ணன் விஷயத்தில் கண்ணோட்டஞ்செலுத்த மறந்துவிட்ட காரண மென்ன? லட்சுமணனுக்கும் அவன் மனைவிக்கும் காதலில்லாவிட் டால் ஏன் கல்யாணம் செய்துகொண்டார்கள்? கலியாணத்தைச் செய்துகொண்டு 14 வருஷம் பிரிந்திருக்க எப்படிக் காதல் மனம் இசைந்தது? ராமனும் சீதையும் தங்கள் காதலைப் பார்த்துக் கொண்டு லட்சுமணன் எப்படியாவது போகட்டுமென்று முடிவு கட்டிவிட்டார்கள் போலும்!

லட்சுமண பக்தன்.

## கைலாசத்தில் கைகாட்டும் உத்தியோகம்.

(ஒரு நிருபர்.)

கைலாசத்திற்கு இப்போது ஆட்கள் கிறார்கள். பொதுவாக இந்தியாவிலிருந்தே ஜனங்கள் கிறார்கள். மற்ற தேச ஜனங்கள் வருகிறதில்லை. " யோக்கிய தையும் தேவையில்லை; எப்படிப்பட்ட றனாலும் சாம்பல் உடலில் பட்டால் கைலாச பதவி என்று சட்டம் திருத்தப் இ —கால்பட்ட சகலரும் கை சத்துக்கு வந்து சேர்ந்துவிடுகின்றனர். மற்ற தேசங்களில் சாம்பல் எங்கும் கிடைப்பதில்லை. இந்தியாவில் தெருவெல்லாம் சாம்பல். சுடுகாட்டில் சாம்பல். அடுப்பெல்லாம் ம்பல். இத்தனை சாம்பலையும் தேடுபவர், சாம்பல் காற்றில் சியாகப் க்கும்போது உடலில் பட்டவர், கடைசி காலத்தில் காட்டில் சாம்பலோடு சாம்பலாகக் கலப்பவர் ஆகிய எல்லாம் கைலாசம் வந்து சேருகின்றனர். இந்தியாவில் பிறந்த ஆண் ண் ஆகிய எல்லாரும் சாம்பல் தங்கள் உடலில் படாமல் இருக்க எந்தவிதத்திலும் முடியாதென்பது திண்ணமாகும். ஆகவே இந்தியாவில் பிறந்தவர்கள் விரும்பாவிட்டாலும் சிவகணங்கள் அவர்களை விடுகிறார்களில்லை. கைலாயத்தில் கொண்டுவந்து தள்ளிவிடுகின்றனர். சாம்பல் தூசி மோட்டார்களிலும் படுவதால் மோட்டார்கார்களும் வந்துசேர்கின்றன. மோட்டாரும் மனிதர்களும் ஏராளமாக கைலாசத்திற்கு வந்திருக்கிறபடியால் முக்கியமான முச்சந்திகளில் நின்று கைகாட்டிக்காரர்களையும் வண்டிகளையும் ஒழுங்காகச் செல்லும்படி சொல்வதற்காகப் புது உத்தியோகஸ்தர்கள் தேவைப்பட்டிருக்கிறது. பலர் அப்ளிக்கேஷன் போட்டிருக்கின்றனர். அவர்களில் விநாயகர், சுப்பிரமணியர், பிர்மா, ராவணன் ஆகியவர்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவராவார்கள்.

விநாயகர் அனுப்பியிருக்கும் மனுவில் குறிப்பிட்டிருப்பது வருமாறு:–நான் இந்த வேலையைத் திறமையாகச்செய்யக்கூடும். நாலு வீதிகள் சந்திக்குமிடத்தில் நிற்பவர்கள் வெயிலுக்குப் பயந்து நிழல் பார்த்து ஒதுங்கி விடுவது வழக்கம். அதனால் ஆபத்துவரும்.

வதை விட்டுவிட வேண்டியதுதான். ஆயினும் எப்பக்கம் கிளி சாய்கின்றதென்பதையும் காத்திருந்து பார்க்கவேண்டியதுதான். ஆனால் சில மேதாவிகள் அக்காலத்தில் அறியாமல் சொல்லிவிட்டார்கள். அதை இப்போது கோழிபோல் ஏன் கிளறுகிறீர்கள் என்று கேட்கலாம். அவர் கேள்விக்குப் பதிலிறுக்க வேண்டியது நியாயமேயாகும். எவரேயாயினும் அறிவுக்குப் பொருந்தாத வற்றை, அக்காலத்தவைகளை அகற்றிவிடுவார்களானல், வம்பு இல்லை; வழக்கு இல்லை. எடுத்ததற்கெல்லாம் அந்த நூலைப்பார் இந்த நூலைப்பார், முன்னோர் சொன்னது, பெரியவர்கள் எழுதி வைத்தது, என்று வரட்டு வம்பு எழுப்புவதாலன்றோ, நாமும் அதை, கிண்டிக் கிளறிப்பார்க்கவேண்டிய தாயிருக்கின்றது. நிற்க பெண்களை எவ்வளவு தூரம், அடிமைப்படுத்த வேண்டுமோ அவ்வளவுதூரம் நீதிசாரமென்னும், அநீ தி சா ர ச் செய்யுள் அடிமைப்படுத்தி விட்டது. இப்போக்கொத்த செய்யுட்களைக் கொண்டே பெண்கள் சுதந்திரத்தைப் படித்தவர்களும் மறுக்கின்றார்கள். பெண்கள் கல்வி கற்று சுதந்தரத்தோடு வாழ உரிமையில்லை யென்றும், அவர்கள் அடிமை ஜன்மங்களென்றும், பகுத்தறிவற்ற மாக்கள் வலியுறுத்திக் கூறுவதற்கு, இந்நூல்களே போதிய ஆதரவைக் கொடுக்கின்றன. அறிவிலிகள் கையில் எழுதுகோல் அகப்பட்டுவிட்டதால், அவர்கள் கை போன வகையில், மண்டையில் ஏறியிருக்கும் பித்தம் திரும்பியபடி தட்டிப் பேச ஆள் இல்லாத சந்தோஷத்தால் கேட்பார் எவருமில்லாத கோரிக்கையாக, நன்கெழுதி விட்டார்கள். ஆனால், இவைகளுக்கு அழிவு காலம் கிட்டியதென்பதில் ஐயமேதுமில்லை. கூடிய விரைவில் இக்கொடுமை ஒழிய, சீர்திருத்தக்காரர்களும், கற்றறிந்த பெண்மணிகளும் துணிந்து வெளிவரவேண்டியது அவசியத்திலும் அவசியம் என்பதை இச்சமயம் வலியுறுத்திக் கூறுகிறேன். இவ்விஷயத்தில் பெண்மக்கள் ஊக்கமே பெரிதும் வேண்டற்பாலதாகும். கல்விக் கண்கள் திறக்கப்பட்ட பெண்மணிகள், இதில் கவனஞ் செலுத்தி, நிந்தனையை நீக்கி, இப்பெண்ணுலக சுதந்தரத்தை நாடுதல் பெரும் பொறுப்பும் அவர்தம் முதல் கடமையுமாகும்.

---

அன்பர்களே! இது நீதிசாரமாகும். இத்தகைய நீதிசாரங்கள் நம் நாட்டில் நிறைந்திருக்கும்போது பெண்ணுலகிற்கென்ன குறை? அவர் தம் நிலை எவ்வளவு தூரம் உயரப்பறக்கும்? இதைப் பாடியவர் வாய்க்கு நயம் அஷ்டகிராம் சர்க்கரை வீசை ஒன்றும், அதை எழுதியவர் கைக்கு வைரத் தோடாவும் (செயின்) போடவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை அக்கால ஒருவரும் உணராது போனது வருந்தத்தக்கதென்பதில் ஐயமில்லை. இக்கால அப்புண்ணியவான்களென்னெதிரில் காணப்படுவார்களாயின், மேற் கூறியதைச் செய்து விட்டே மறுவேலை பார்ப்பேன். ஆஹா! நீதிசாரச் செய்யுளை எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும், உள்ளம் எவ்வளவு பூரிப்படைகின்றது? நல்ல நீதிசாரம், போற்றத்தக்க நீதிசாரம், புகழத்தக்க நீதிசாரம், பின்பற்றத்தக்க நீதிசாரம், கொண்டாடத்தக்க நீதிசாரம், அம்மம்மா கண்ணில் இன்ப (துன்ப) நீர் கலங்கி வழிகின்றது. அறிவிலிகளே அகங்காரமே உருவெடுத்த ஆண்களே! நீதிசொல்லவந்த நியாயவான்களே! பின் வரப்போவதை முன்கூட்டித் தெரிந்து கொள்ளாமற் போனீர்களே! உங்கள் அநீதிசாரங்களெல்லாம், எங்கள் நீதி வாதத்தால், தூள்தூளாக்கப்பட்டுத் தூக்கி யெறியப்படுகின்றனவே? வாசகர்களே! நீதிசாரத்தைக் கண்ணுற்றீர்களா? உங்கள் மன நிலை இப்போதுள்ள விதம் எப்படி? 'சங்கையர் மெய்க் காலத்தும் சுதந்தர மில்லைதானே? ஆ! எக்காலத்தும் சுதந்தரமில்லை யென்னும் கொடுமையை என்னென்றுரைப்பேன்? இதுவோ நீதிசாரம்? அநீத, அநியாய, அகங்கார, அக்கிரமசாரமென்பது குற்றமில்லையே? முதலில் தகப்பனுக்கு அடிமை, இடையில் கணவனுக்கு அடிமை, முடிவில், பெற்ற புத்திரர்களுக்கு அடிமை, புண்ணிய பூமியாகிய இந்தியாவில், பெண்களுக்கிருக்கும் செல்வாக்கை மற்ற நாட்டார்கள் கவனிப்பார்களானால், குறிப்பாக, மற்ற நாட்டுப் பெண்மணிகள் கூர்ந்து நோக்குவார்களானால், பொன் விளையும் நாடாகிய, நம் இந்தியாவில் ஜனிக்கவே ஆசைப்படுவார்களோ? அப்புறம், இந்தியாவில் பெண்கள் தொகை பெருகி, நீதி நிரம்பி, வேண்டியமட்டும் மழை பெய்து நாடு செழித்தோங்கி விடுமன்றோ? இதனிடையில் சீர்திருத்தக்காரர்கள் பெண் சுதந்தரம் என்று வீண் விதண்டாவாதம் பேசு

செய்திட்ட தீங்குகள் யாதென்பதுதான் எம்போன்ரூர்க்குப் புலப்படவில்லே. அம்மா! கொடுமை! அறைதலும் கடுமை ஆண்மக்கள் அநீதி! புலவர்களாம்! பெருமான்களாம்!! படித்த சீமான்களாம்! இவர்களுக்கெல்லாம் பெண்களே நிந்தனே செய்ய வும், பெண்கள்மேல் வீண் பழி சுமத்தவுந்தான் தெரிகின்றதே யொழிய, மற்றவை யொன்றும் தெரியவில்லே. பெண்களேப் பற்றியிருக்கும் அநீதி, அநாச்சார நூல்களெல்லாம், 'நீதி சாரம்' என்று அழைக்கப்பட்டு வருவதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. இருகண்ணுமில்லா பொட்டைக் கண்ணனே செந்தாமரைக்கண் ணன் என்று அழைப்பது போலவும், பிள்ளே அனுமார் உருவமா யிருந்தாலும், பெயர் மட்டும், வண்டியில் வைத்து இழுக்கத்தக்க மாதிரி, ராஜ ராஜேஸ்வரி, சுந்தரி, இந்திராணி என தடபுடலாய் வைப்பது போலவும் அநியாய நூல்களுக்கு, நியாய நூலென்ற பெயர் நிலவுகின்றது. பெண்களே நிந்தித்துக் கவிகள் பாடுவதில் இந்தியப் பெரியோர்கள் சிறந்தவர்களாகவே காணப்படுகின்ருர் கள். அவர் தம் நோக்கம் யாவும், ஆண் மக்களுக்குப் பெண் மக்கள் அடிமைகளாயிருக்கவேண்டு மென்பதேயாகும். பெண் மக்கள் எவ்விதத்தும், எத்தகைய சிறு சுதந்திரமும், பெற்றிடக் கூடாதென்பதே அன்ஞேரின் வேணவா வாகும். பெண்கள் பிறந்ததுமுதல் இறக்கும் வரை அடிமைகளா யிருக்கவே ஆன் ரேருர்கள் (அறிவிற் சிறியோர்கள்) ஆக்ஞாபித்திருக்கின்ருர்கள். பெண்கள் எக்காலத்திலும் அடிமைகளாகவே யிருக்கவேண்டு மென்பதற்குள்ள ஒரு பாட்டை ஈண்டு குறிப்பிடுகிறேன். பெண் சுதந்தரம் பேணுபவர்கள், பெருமூச்செறியவும், அதல்லாதார் அகமகிழவும், செய்யட்டும்.

"மங்கையை வாழு நாளில்
வளமொடு பிதாவே காப்பான்;
பொங்கிய யௌவனத்திற்
பொருந்து பர்த்தாவே காப்பான்;
தங்கிய மூப்பிலே தன்
தநயனே காப்பானன்றிச்
சங்கையா மெக்காலத்தும்
சுதந்தர மில்லேதானே."

தெரியுமல்லவா? கனம் கோனுரவர்களுக்கு இப்பொழுது நஷ்ட மாகியிருப்பது குரங்கு ராமாயணத்தால் ஒரு கூரை! இந்தக் கூரை போனதை ஒரு பிரமாதமாக எண்ணுவது சரியா? என யோசித் துப் பாருங்கள் (கேளுங்கள், கேளுங்கள்). இந்தமாதிரி கோடிக் கணக்கான பொருள்கள் உங்கள் கண்ணுக்குத் தெரியாதவாறு ஏமாற்றப்பட்டு பார்ப்பனர்களால் கொள்ளையடிக்கப்படுகிறது என் பதை உணரவே இந்தக் குரங்கு ராமாயணத்தின் மூலம் தெரி வித்தேன். இதுவரை அமைதியாக இருந்த உங்களுக்கும் வெட்கப் பட்டுக்கொண்டிருந்தவரும் ராம கைங்கரியத்தை நிறைவேற்றிய வருமான எனது நண்பருக்கும் வந்தனத்தைச் செலுத்துகிறேன் என்றதும் கனம் கோனுர் எழுந்து நமது நண்பர் எனது கூரை யைக் கொளுத்தியது ஜனங்கள் மூட நம்பிக்கையிலிருந்து தப்பித் துக்கொள்ள வேண்டுமென்ற ஓர் பேரெண்ணத்தால் செய்திருப்ப தால் நான் அதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். (உணருங்கள். உண ருங்கள்) இனி நமது மக்கள் அனைவரும் மூட நம்பிக்கையைத் தொலைத்து பகுத்தறிவு பெற்று இனிது வாழுமாறு கேட்டுக் கொள்வதுடன் அனைவருக்கும் வந்தனத்தைச் செலுத்துகிறேன்" என்று கூறி முடித்தார்.

---

## நல்ல நீதி சாரம்.

(S. நீலாவதி எழுதுவது)

**பா**ழும் இந்தியாவில், பாதகர் நிறைந்த இந்தியாவில், வஞ்சக இந்தியாவில், புரட்டுக்காரர்கள் மலிந்த இந்தியாவில், ஒரு பாலுக்கொரு நீதி யுரைப்பது சர்வ சாதாரணமென்பதை நூற் றுக்குத் தொண்ணூறு பேர்கள் நன்கறிவார்கள். அடடா! ஆண்மக்கள் கைவலுத்திருந்த காலத்துப் பெண் மக்களை ஆட்டி வைத்திருக்கும் நேர்மையை நினைக்குந்தோறும், நினைக்குந் தோறும் நெஞ்சம் கொதிப்பது கொஞ்சமல்ல. சாதாரணமாக, வாழ்க்கையில் நடைமுறையில் கொடுமைப் படுத்தியது போதா தென்று, ஏடுகளிலும் எழுதிவைத்து, என்றென்றும் நிலைத்திருக் கத்தக்க சூழ்ச்சி முறையில் அமைத்து விட்டார்கள். பெண்களை இவ்வாறு கொடுமைப்படுத்துவதற்கு அவர்கள் ஆண்களுக்குச்

போம் அக்கா என்ற பெயரோடு இரண்டாவது எழுத்து, 'து' சேர்த்துக்கொண்டால் போதுமக்கா என்று பெயர் வைக்கலா மென்றும் மளமளவென்று இன்டோ—சிலோன் போட்மெயில் மாதிரி போய்க்கொண்டிருக்கையில் கோனார் புலவரை இடை மறித்து 'ஐயா நிறுத்தும்; இனி மேலேபோகவேண்டாம்; பொம் மக்கா என்ற பெயரே வைத்துவிடுவோம்' என்றார். உடனே புலவர் "போதுமக்கா என்ற பெயர் எல்லா வகையிலும் சிறப்புடைத்தாக த்தற்குத் தோற்றுகிறதே. அதை வைத்தால் தங்களுக்குக் கௌர வங் குறைந்துபோய் விடுமென்று கருதுகிறீர்களா" என்றார். கனம் கோனார் அவர்கள் "அதெல்லாம் கிடக்கட்டும்; ராமாயணத்தில் ஏதாவது கொஞ்சம்வரட்டும்" என்றார். புலவர் ராமாயணத்தில் கம்ப ராமாயணம்முதல் வம்பு ராமாயணம் வரை இருக்கின்றனவே; அவற்றில் எது தங்களுக்குப் பிடிக்குமோ என்றதும் கனம் கோனார் எத்தனைவித ராமாயணம் இருக்கிறதெனக் கேட்டார். உடனே புலவர் கம்ப ராமாயணம், கதம்ப ராமாயணம், ஆனந்த ராமாயணம், ஆகாச ராமாயணம், சோத்து ராமாயணம், சுண்டற் கடலை ராமாயணம், ஜம்ப ராமாயணம், சௌராஷ்ட்ர ராமாய ணம், குண்டு ராமாயணம், குஷால் ராமாயணம் என்று ஏகப் பட்ட ராமாயண தினுசுகள் இருக்கின்றன என்றார். மிஸ்டர் கோனா ராமாயணத்தைத் தவிர வேறென்ன தெரியுமென்றார். புலவா ராவணாயணம், குரங்காயணம், செருப்பாயணம் ஆகியவைகள் தெரியும். இன்னும் யண வகைகள் ஏராளமாக இருக்கின்றன. தங் கள் போன்றவர்களின் பண வகைகளைக் கரையேற்றுவதற்காக....' என்று கூறினார். ஸ்ரீமான் கோனாரவர்கள் புலவரைப் பார்த்து என்ன புலவரே நம்ம வம்புக்கு வந்துவிட்டீர் என்றார். புலவர் நான் அப்பொழுதே சொன்னேனல்லவா கம்பராமாயணமுதல் வம்பு ராமாயணம் வரை உண்டு என என்றார். மகா-ா-ா-ஸ்ரீ கோனார் "ஐயா அதெல்லாம் சரி" குரங்கு ராமாயணம் என ஒன்று கூறினீரே; அதெப்படி;" என்றார். புலவர் சொல்ல ஆரம்பிக்கையில் குரங்கு ராமாயணம் நடித்தால் வெகு சுவாரஸ்யமாயிருக்கும். ஏனென்றால் குரங்கு சேஷ்டை செய்வது பார்க்கத்தக்கதல்லவா? ஆகையால் தங்கள் உத்தரவுப் பிரகாரம் செய்கிறேன் என்றார். உடனே கோனார் என்ன செய்யவேண்டுமென்றார். புலவர் ஒரு

பழைய வேட்டியும் மண்ணெண்ணெய் ஒரு சீசாவும் நெருப்புப் பெட்டியுந்தான் தேவை; வேறு அதிகமாக இந்த குரங்கு ராமாயணத்திற்குத் தேவையில்லை என்று கூறியதும் மேற்படி சாமான்களை கோனூர் புலவரிடம் அளித்தார். உடனே புலவர் தமது வேட்டிகளை இறுகக் கட்டிக்கொண்டு பழய வேட்டியை கயிறு கயிறாய்த் திரித்து தமது முதுகுப்புறத்தில் செருகிக்கொண்டு தலைப்பில் மண்ணெண்ணெய்ப் பதம் போட்டுக்கொண்டு நெருப்புப்பெட்டியை எடுத்து உரசி அக்கினிபகவானை வெளிப்படுத்தி தமது வாலில் மூட்டிக்கொண்டு கனம் கோனூரவர்கள் வீட்டு கூரையின் மேல் வீசி விளையாட ஆரம்பித்தார். 10 நிமிஷங்கூட ஆகவில்லை; அதற்குள் குரங்கு ராமாயணத்தைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் ஆடவரும் பெண்டிருமாகக் கூடிவிட்டனர். குரங்கு ராமாயணம் நடக்குமிடத்தில் ஏகப்பட்ட வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஜனங்களெல்லோரும் மற்ற ராமாயணங்கள் கேட்கையில் சாந்தமாயிருப்பதுபோலல்லாமல் மிகக் கிளர்ச்சியோடு இருந்தனர். சுண்டல் வடையைப்பற்றிப் பேசுவார் கிடையாது. நாளை நம்மள் உபயமாயிருக்கட்டும் என்று கூறும் பக்தாள் யாரையும் காணோம். கடைசியாக ஜனங்களெல்லோரும் ஆத்திரங்கொண்டு புலவரைக் கண்டுபிடித்து விசாரிக்கையில் அவர் ஒவ்வொருவருக்காகச் சொல்லமுடியாதென்றும் எல்லோரும் அமைதியாக இருந்தால் சொல்லக்கூடுமென்றும் தெரிவித்தார். பின்னர் அவ்வாறே செய்யப்பட்டதும் புலவர் "சகோதர சகோதரிகளே! எனது நண்பரும் ஆத்திக சிரோமணியுமாகிய கனம்தங்கிய கோனூரவர்கள் அபிப்பிராயப்படி இப்பொழுது குரங்குராமாயணம் உங்கள் முன்பு நடத்திக்காண்பித்தாயிற்று. இனி (ஐயோ, ஐயோ) அவர்கள் சித்தம் எப்படியோ அதைச் செய்ய வேண்டியது நமது கடமையல்லவா? (ஒருவர், ஏனையா ஒருவர் வீட்டைக் கொளுத்துவதுதான் ஒழுங்கா?) இந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேண்டியது எனது கடமையாகும். மிஸ்டர் கோனூரவர்களுக்கு இருந்த பணங்களை எல்லாம் பார்ப்பனர்கள் சாஸ்திரங்களைச் சொல்லி அரிசியைத் தலையில் அள்ளிப் போட்டு அகப்பட்டவரையில் பிடுங்கிக்கொண்டு ஐ. பி வரைக்குக் கொண்டு வந்து வைத்திருக்கிற சங்கதி இந்த கூடியிருக்கும் உங்களுக்குத்

ட்டின் திதியும் ஒன்ருகச் சேர்ந்துதான் வரும். இவற்ருல் டங்குகள் தவருன காலத்தில் செய்யப்பெறுகின்றன என்பது விளங்கும். இவ்வுண்மையை புரோகிதர்களின் நெஞ்சே அறியும்.

## 13-ம் அத்தியாயம்.

### பாவச் செயல்களை உண்டுபண்ணுகின்றன.

பாவச் செயல்களுக்கெல்லாம் பிராயச்சித்தச் சடங்குகள் செய்வது வழக்கம். செய்கின்ற பாவங்களெல்லாம் பிராயச்சித்தத்தின் மூலம் மிக இலகுவாய் போக்கடிக்கப்படுவதாக நம்புவதிஞல், பாவங்கள் வளருமா, குறையுமா, என்பதை அறிவாளிகள் சிந்தித்துப் பார்க்கவேண் ம். நம்பிக்கை மோசம், சகோதர துரோகம், சிசுஹத்தி முதலிய பாவங்களெல்லாம் ராமேஸ்வரத்தில் பார்ப்பனர்களுக்கு தானம் கொடுத்து தீர்த்த ஸ்நானம் செவதால் போய்விடும் என்று ஒரு நூல் கூறுகிறது பெற்றதாயைப்புணர்ந்த பாவம் மதுரை பொற்ருமரைக் குளத்தில் மூழ்குவதிஞல் போய்விடும் என்று மற்ருெரு நூல் கூறுகிறது. இத் தீர்த்தங்கள் உள்ளவரையிலும், இத்தீர்த்தக் கரையில் சடங்குகளைச் செயப் பார்ப்பனர்கள் காத்துக்கொண்டிருக்கிற வரையிலும் இ பாவச் செயல்களும் அயோக்கியத்தனங்களும் வளர்ந்துகொண் தானே இருக்கும்? ஒரு முறை செய்த பாவங்கள் ஒரு ரூபா தட்சணையிலும் ஒரு முழுக்கு ஸ்நானத்திலும் ஒழிந்து போவயிருந்தால், மறுமுறை செய்கின்ற பாவங்களுக்கு புதுக்கணக் போடவேண்டியதுதானே! அதுவும் மற்ருெரு ரூபாய் செவில் போக்கடிக்கப்பட்டால் வேருெரு புதுக்கணக்குப் போ வேண் டியதுதானே! மனிதன் செய்கின்ற பாவங்களுக்கு கடவுள் தண்டனை விதிப்பார் என்று நம்புகிற மக்கள், மனிதன் செய்கின்ற பாவங்களை மனிதன் பணத்தைப் பெற்றுக்கொண்டு மன்னிக்க முடியும் என்பதை நம்புவது எப்படி? பிராயச்சித்தங்கள் நமது நாட்டில் உள்ளவரை அயோக்கியத்தனங்கள் இந்நாட்டை விட்டு ஒழியப் போவதில்லை. அதற்கு பதிலாக வளர்ந்து கொண்டு தானிருக்கும். இவற்ருல் சடங்குகள் பாவச் செயல்களை உண்டு பண்ணுகின்றன என்பது பெறப்படும். இவ்வுண்மைக்கு நமது நாட்டின் தற்கால நிலைமையே போதுமான சான்ருகும்.

(தொடரும்)

# வம்பு ராமாயணம்.

(ராம சுப்பிரமணியம்)

மிளகாய்ப்பட்டி மின்னப்பக் கோனாருக்கு வயது நாற்பதுக்குமேலிருக்கும். மகா வைதீகர். ராமேஸ்வரத்திற்குப் போய்ப்போய் பிள்ளை மட்டும் 12 பெற்றுவிட்டார். ராமன் ராமனாதன், ராமசாமி, ராமலிங்கம், ராமச்சந்திரன், ராமய்யா, ராமு, ராகவன், ராமேஸம், என்ற பெயருள்ள ஒன்பது ஆண் குழந்தைகளும், ராமக்கா, லட்சுமக்கா, பொம்மக்கா, என்ற மூன்று பெண் குழந்தைகளும் நா ொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக உயர வசமாகவு அகல வசமாகவும் வளரத் தொடங்கின. குழந்தைகள் 12 க்கும் ராமன் சம்பந்தமான பெயரை ஏன் மின்னப்பக் கோனார் வைத்தார் என வைதீக நண் ர்கள் கேட்கமாட்டார்கள்; என்றாலும் மற்றவர்களுக்குச் சொல் த்தீரவேண்டியது என் கடமையாகிறது. தமது குழந்தை ில் யாரைக் கூப்பிட்டாலும் அவன் சம்பந்தமான பெயர் உச்ச க்தால் வைகுண்டம் கிட்டுமென்ற செய்தி மின்னப்பக்கோனார் ளையில் ஒரு டஜன் குழந்தைக்கு முன்னரே பிரயோகிக்கப் டிருந்தபடியால் அந்த விஷயத்தில் நமது கோனாரவர்கள் ராம்ப ஸ்ட்ராங்காக" இருந்துகொண்டார். பெண் குழந்தை ல் கடைசிக் குழந்தைக்கு மட்டும் வேறு பெயராகிய பொம் கா என ஏன் வைத்தார்களென்று டூப்ளிகேட் வைதீகர்கள் மிடம் உறுமிப் பார்க்கலாம். அந்தக் குழந்தை பிறந்தவுடன் புலவர் மிஸ்டர் கோனாரவர்கள் வீட்டிற்கு வந்திருந்தார். ஸ்டர். கோனாரவர்கள் புலவரிடம் குழத்தைக்கு என்ன பெயர் வைக்கலாமென யோசித்த பொழுது, குழந்தை ஏறக்குறைய பாம்மை வாட்டமாக இருப்பதனால் பொம்மக்கா என இடு தே சாலச் சிறந்தது எனவும் இக்குழந்தை வேறொரு இடத் திற்குப் போய் வாழவேண்டியதாகையால் அதற்குப் பொருத்த மாக பொம்மக்கா என்ற பெயருக்கு முதல் எழுத்தில் ஒற் றைக் கொம்பை எடுத்துவிட்டு இரட்டைக் கொம்பைப் போட் டால் போம் அக்கா எனவும் திரு. கோனாரவர்கட்கு ஒரு டஜன் குழந்தைகள் இருக்கிறபடியால் போம் என்பதன் காரணமாக

என்னைவிட்டு ஒழியும்'' என்று கூறினன். புரோகிதர்கள் "ஐயோ அது முடியாதே!" என்றனர். உடனே கோபங்கொண்டு "அரசனுடைய தாயைத் திருப்திபண்ண முடியும்; என்னுடைய தாயை திருப்திபண்ண உங்களால் முடியாதா?" என்று கூறி ஒருவனை பழுக்கக் காய்ச்சிய குறட்டினுல் ஒரு இழுப்பு இழுத்தான். அவ்வளவுதான் செய்தி. அல்லோகல்லோலமாயிற்று. புரோகிதர்களின் நெஞ்சு பஞ்சாய்ப் பறந்தது. எல்லோரும் ஒன்றுகூடி வந்து தென்னுலிராமனிடம் மன்னிப்பு வேண்டி "அப்பா! இது வயிற்றுப் பிழைப்பு. எங்களைக் கொல்லாதே" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். "அப்படியானுல், மாம்பழங்கள் யாவும் அரசனிடம் போகட்டும்" என்றான். உடனே உயிர்ப்பிச்சை தந்தால் போதும் என்றெண்ணி புரோகிதர்கள் எல்லோரும் ஓடி அரசனிடம் யாவும் தந்து தங்களின் புரோகிதப்புரட்டு தென்னுலிராமனுல் வெளிவந்த செய்தியையுங்கூறி மன்னிக்குமாறு வேண்டினர்கள். இவற்றைக்கொண்டு சடங்குகள் எவர் நலத்தின் பொருட்டு செய்யப்படுகின்றன வென்பது ஒருவாறு உணரப்படும். இவ்வுண்மையை 'தென்னுலிராமன் சரித்திரம்' என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

## 12-ம் அத்தியாயம்.

## தவறான காலத்தில் செய்யப்படுகின்றன.

சடங்குகள் நல்ல நாள்பார்த்து, நல்ல நேரம்பார்த்து செய்வது என்பது ஒரு பழக்கம். இதற்கு பார்ப்பனர்களுக்கு ஒழிந்த நேரம் பார்ப்பது என்பதே பொருளாகும். காலை 11 மணிக்குள் திதி கொடுக்கவேண்டும் என்பது சிராத்த விதி. 12 மணிக்கு மேல் 2 மணிக்குள் தான் புரோகிதர்கள் திதி கொடுக்க வருவது வழக்கம். ஏனெனில், அதுவரையில் கருமாதி செய்யுமிடங்களில் இருந்திருந்து வரும்படி பெற்று குளிக்காமல் ஓட்டமும் நடையுமாக வந்து திதி கொடுக்க வருவார்கள். ஆபீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு மாலைப் பொழுதில்தான் திதி வரும். பணக்காரன் வீட்டுக்கு திதி வரும்பொழுது ஏழை வீட்டுக்கு திதி வரவே வராது. அடுத்த நாள்தான் வரும். இரண்டு மூன்று மைல் தூரத்திலுள்ள கிராமங்களில் அவ்வூர் கிராம முனிசீப் வீட்டின் திதியும் அதே கிராமத்தில் 13 மாதங்களுக்கு முன்பு சாகக்கொடுத்த ஒரு ஏழை

மையை திதி கொடுக்கும் ஒவ்வொரு வீட்டிலும் நன்கறிந்து கொள்ளலாம்.

11-ம் அத்தியாயம்.

## இலாபத்தைக் கருதி செய்யப்படுகின்றன.

எல்லாச் சடங்குகளும் பார்ப்பனர்களின் இலாபத்தைக் கருதியே செய்யப்படுகின்றன. சடங்கு செய்பவன் இம்மையில் கஷ்டப்பட்டு மறுமையில் நல்வாழ்வு வாழ விரும்புகிறான். சடங்கு செய்து வைக்கிற ஜாதி ம[illegible]மையில் கவலையில்லாமல் இம்மையில் நல்வாழ்வு வாழ்ந்து வருகி[illegible]து. இதைக் கண்டும் நம்மவர்கட்கு புத்தி வராவிடில் நாம் என்ன செய்யலாம்? இத்திருட்டு தனத்தை தென்னாலிராமன் என்ற ஒரு பார்ப்பனத் திருமே[illegible] தான் இவ்வளவுக்கு உணர்த்தியது. ஒரு அரசன் புரோகி[illegible] களை அழைத்து "என் தாய் மாம்பழம் கேட்டாள்; கொண்டு[illegible] வதற்குள் இறந்துபோனாள் என் செய்வேன்" என்று அ[illegible] அழுது, புலம்பினான். புரோகிதர்கள் "அஞ்சவேண்டாம்; அர[illegible] ஆயிரம் தங்க மாம்பழம் செய்து, ஆயிரம் வைரங்கள் பதி[illegible] ஆயிரம் பிராமணர்களுக்கு பூரி கொடுத்தால் இந்த மாதுர் து[illegible] கம் தங்களை விட்டொழியும்" எனக் கூறினார்கள். அரசன் [illegible] வாறே கொடுத்தான். அருகிலிருந்த தென்னாலிராமனுக்கு அ[illegible] முடியாத ஆத்திரம் உண்டாயிற்று. உடனே அத்தனை[illegible] களையும் தன்னிடத்திலும் பூரி வாங்கிப் போகும்படி அரசனுடை[illegible] அனுமதி பெற்று எதிர்வீட்டிற்கு அழைத்துச் சென்று எல்[illegible] ரையும் உள்ளே தள்ளிவிட்டான். வாயிற்படியில் நெருப்ப[illegible] சட்டியை வைத்து, பற்றுக் குறட்டை பழுக்கக் காய்ச்சிக்கொண்[illegible] ஒவ்வொருவராய் வரும்படி உத்தரவுபோட்டான். முதல்[illegible] வெகு வேகமாய் பூரிவாங்க வந்த பிராமணத் திருமேனி இதென்[illegible] பற்றுக்குறடு! என்று ஆச்சரியத்தோடு வினவினான். அதற்கு[illegible] தென்னாலிராமன்" ஒன்றுமில்லை. என் தாய்க்கு காக்காய் வலிப்[illegible] வந்தது. அருகிலிருந்தவர்கள் ஒரு சூடு போட்டால் இவ்வலிப்[illegible] நின்றுவிடும் எனக் கூறினார்கள். அப்படிக் கொண்டுவருவத[illegible] குள் என்தாய் இறந்துபோனாள். இப்பொழுது அந்த சூட்டை உங்களுக்குப் போட்டால் என்னுடைய மாதுர், துரோகம்

கேட்டான். "சுவாமி! நான் பித்தலாட்டம் பண்ணவில்லை; இச் சடங்குகளே பித்தலாட்டம் பண்ணுகின்றன. தங்களுடைய மந் திரங்களுக்கு தேங்காயையும், பழத்தையும், வெற்றிலை பாக்கை யும், சந்தனத்தையும், சூடத்தையும், பூவையும், புடலங்காயையும் உண்டுபண்ண சக்தி யிருக்கும்பொழுது, தட்சணையை உண்டு பண்ணுகிற சக்தி யிருக்காதா? என்று நினைத்தேன். அதையும் தாங்கள் "சொர்ண புஷ்பம் சமர்ப்பியாமி" எனச் சொல்ல லாமே! என்றான். வயிற்றுப் பிழைப்பு போயிற்று என்பதை புரோகிதன் அறிந்துகொண்டான். ஆனாலும் 'நாஸ்திகம் வந்த விட்டது' என்றுதான் கூறிப் [illegible]பானான். பார்ப்பனர்கட் சடங்கைப் பற்றியோ, சடங்கு செய்பவனைப் பற்றியோ இற [illegible] வர்களைப் பற்றியோ சிறிதும் கவலையில்லை. அவர்கட்கு பண[ம்] பிரதானம். பணம் கிடைப்பதாயிருந்தால், அக் கூட்டம் பி[த்த] லாட்டம் பண்ண பயப்படுவதில்லை. இவற்றால். சடங்குகள் பி[த்த] லாட்டம் பண்ணுகின்றனவென்பது புலப்படும். பணத்தை [illegible] விரைவில் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இல்லா[த] பொருள்களை மந்திரங்கள் மூலம் உண்டுபண்ணி வருகின்ற இவ் வுண்மையை பார்ப்பனச் சடங்குகளைக் கவனித்த அறிவாளிகள் அறிவார்கள்.

## 10-ம் அத்தியாயம்.

### பேராசைகொண்டு செய்யப்படுகின்றன.

[illegible] எவ்வளவு அரிசி கொடுத்தாலும், எவ்வளவு காய்கறிகள், [illegible]டகள், பஞ்சபாத்திரங்கள் கொடுத்தாலும், எவ்வளவு [illegible]ாடுத்தாலும் புரோகிதர்களின் ஆசை அடங்குவ [illegible]ம் ஏதேனுமில்லையா?" என்றே அவர்களின் [illegible] திதி கொடுத்து முடிந்த பிறகு திதி கொடுத் [illegible]ரோகிதர்கள் சில சொற்களை சொல்லும்படிச் [illegible] நாம [illegible] கொடுத்தவனும் சொல்லுவான். அச் [illegible] "நான் கொடுத்தது கொஞ்சமாக [illegible]மாக எண்ணி அனுக்ரஹம் பண்ணி ரட் [illegible]ம். இச் சொற்களே சடங்குகள் பேராசை [illegible]படுகின்றன வென்பதைக் காட்டும். இவ்வுண்

குளிர்ச்சியுள்ள நீரில் 10 நிமிஷத்திற் கொருமுறையாக 16 தரம் மூழ்கி, ஈர ஆடையுடன் சடங்குகளைச் செய்யவேண்டியிருக்கிறது. மரணம் நடந்த வீட்டில் உள்ள அனைவரும் 16 நாளைக்கு நெய் கலந்து உண்ணுமலும், எண்ணெய் முழுக்கு இல்லாமலும் இருக்க வேண்டுமாம். முடிவாகக் கூறவேண்டுமானுல் புரோகிதக் கூட்டமானது இறந்தவர்கட்குச் சடங்குகளைச் செய்வதன் மூலம் உயிரோடிருக்கின்ற சிலரையும் இறப்பதற்குத் தயார்செய்கிறது என்றே கூறவேண்டும். இதனால், இவ் வீணுன சடங்குகள் மக்களின் உடல் நலத்தைக் கெடுத்து உயிரையும் உறிஞ்சுகின்ற தன்மையை அறியலாம். இவ்வுண்மையை பெண்சாதியைப் கொடுத்துப் பின்னர் பிள்ளையையும் பறிகொடுத்தப் புண்ணியர் நன்கறிவார்கள்.

## 9-ம் அத்தியாயம்.

## பித்தலாட்டம் பண்ணுகின்றன.

ஒரு புரோகிதன் திதி கொடுப்பவனை நோக்கி தேங்காய்கள் எங்கே? எனக் கேட்டான். திதி கொடுப்பவன் வாங்கிவர மறந்து விட்டேன் என்றதும் புரோகிதன் பரவாயில்லை, மந்திரம் இருக்கிறது எனக் கூறி 'நாரிகேளரம் சமர்ப்பியாமி' என்று சொல்லி வாழைப்பழம் எங்கே? என்றுன். குழந்தை தின்றுவிட்டது என்றதும் பரவாயில்லை 'கதலீபழம் சமர்ப்பியாமி' என். கூறி வெற்றிலை பாக்கு எங்கே? என்றுன். உறவினர் போட் கொண்டார்கள் என்றதும் பரவாயில்லை "தாம்பூலம் ச யாமி'' என்று கூறி சந்தனம் எங்கே? என்றுன். கல் இ கட்டை யிருக்குமிடம் தெரியவில்லை, தேடிப்பார் வருகிறேன் என்றதும் பரவாயில்லை, 'கந்தம் ச கூறி பூ எங்கே? என்றுன். மனைவி முடித்த றதும் பரவாயில்லை, 'புஷ்பம் சமர்ப்பியாமி' எங்கே? என்றுன். தீர்ந்துபோயிற்று, ஆ தும் பரவாயில்லை, 'கர்ப்பூர நீராஞ்சனம் திதியை முடித்து தட்சணை எங்கே? என்று வர மறந்தேபோனேன் என்றதும் புரோகி கோபத்தோடு என்ன! பித்தலாட்டம் பண்

# சடங்குகள்.

திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதியது.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## 6-ம் அத்தியாயம்.

### அறியாத ஒன்றைச் செய்கின்றன.

புரோகிதன் சடங்கு செய்பவனுடைய நேரத்தையும் கொலை செய்து, பணத்தையும் பாழாக்கி, அவனைப் பட்டினியாகவும் போட்டு, "இடதுகாலை [illegible] டி போடு [illegible] தூக்கிவை, [illegible]து கையை ஊன்று, [illegible] கையை மடக்கு, குனி, நிமிர், உட்கார், எழுந்திரு." என்று கூறி கசரத் வாங்கி விடுகிறான். அப்படியே இச் செய்கைகள் வருத்தத்தையே உண்டுபண்ணுகின்றன. ஏன் இப்படிச் செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்ற உணர்ச்சியே நமது மக்கட்கு இல்லை. காலை மண்டி போட்டு, வலது கையில் பிடி அரிசி எடுத்து, இடது கையை ஊன்றி, அதன் இடுக்கில் வலதுகையை கொண்டுபோய் பார்ப்பனனுடைய இலையில் தலைகீழாக அரிசியைக் கொட்டுவானேன்? நேராக அரிசியைக் கொடுத்தாலென்ன? இப்படி எதற்காகச் செய்யவேண்டும்? என்பதை சடங்கு செய்கின்ற நமக்கு தெரியவே தெரியாது. ஆகவே, இதனால், சடங்கு நம்மை அறியாத ஒன்றைச் செய்யச் செய்கிறது என்பது பெறப்படும். இவ்வுண்மையை பார்ப்பனருக்கு மண்டிபோட்டு அரிசி கொடுக்கும் [illegible] நன்கறிவார்கள்.

## 7-ம் அத்தியாயம்.

### அதர்மத்தைச் செய்கின்றன.

இதுவரை நாம் படித்த நூல்களிலெல்லாம் பார்ப்பனர்களுக்குக் கொடுப்பதுதான் தர்மம் என்றும், அதன் மூலம் தான் மோட்சம் கிடைக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாத தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்குக் கொடுத்தால், மோட்சம் கிடைக்குமென்று சொல்லப்படவேயில்லை. அதற்குப் பதிலாக அவர்களைக் கண்ணுற்

கண்டாலே தீட்டும், சண்டாளத்துவமும் ஏற்பட்டுவிடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலேயே இந்நூல்கள் சுய நலங் கருதிய பார்ப்பனர்களால், எழுதி வைக்கப்பட்டது என்பது புலனாகும். இத்தகைய அதர்மச் செயல்களை நாம் தர்மச் செயல்களாகக் கருதி வருகிறோம். கருப்பு நிறமுள்ள ஆடுகளை 'வெள்ளாடு' என்றும், கொடிய விஷமுள்ள பாம்பை 'நல்லபாம்பு' என்றும் ஒரு காசும் கையிலில்லாத பெண்ணை 'தனலெட்சுமி' என்றும், படிப்பில்லாத பெண்ணை 'சரசுவதி' என்றும், கண் ஒன்றில்லானை 'நல்லக்கண்ணு பிள்ளை' என்றும், எருமையின் குணம் படை... 'அருமை நா...ன்' என்றும் நாம் எப்ப... அறியாமை காரணமாகக் கூறி வ...றோமோ அப்படியே ...வ... மத்தையும் 'தர்மம்' என்று கூறி செய்தும் வருகின்றோம். ... வுண்மையை தன் தாய்க்குத் தலைத்திதி கொடுக்கும் மிராசு... தனது நிலத்தில் உயிரைவிட்டு உழைக்கின்ற பரு... வாய்ந்த "தாழ்த்தப்பட்ட பெண்கள் தன் வீட்டு வாயிலில் த... மானத்தை மேலும், கீழும் மூட முடியாமல், $1\frac{1}{2}$ முழ ஆடை... உடுத்தி நிற்பதை அறிந்தும் 70 ரூபாய் பட்டுப்புடவை... உடுத்தி வருகிற ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கு 80 ரூபாய் பட்டுப் புடவையை தானம் கொடுக்கின்ற அதர்மச் செயல்கள் நன்கறிவிக்கும்.

## 8-ம் அத்தியாயம்.

## சுகத்தைக் கெடுக்கின்றன.

...ங்குகளைச் செய்வதின் மூலம் மக்களின் உடல் நலத்திற் ...ம் சூழ்கின்றன. திருமணக் காலத்தில் 3 நா... 5 நாள் ...அவஸ்தைகளை மாப்பிள்ளை ஒருவனே அறிவான். பெண் ...ம், ...யையும் ஐந்து நாட்கள் அல்லது 3 நாட்கள் குரங் ...ட்டம் ஆட்டி, அலக்கழித்து, உடலுக்கு ...சதியையும் உண்டு ...ண்ணி அன்றிரவே சாந்திமுகூர்த்தமும் செய்ய உள்ளே தள்ளி கதவடைப்பது மிகக் கொடிய செயலாகும். இதன்பொருட்டு நோய்வாய்ப்பட்டு மருந்துண்ணாத ஆணும், பெண்ணும் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். கருமச்சடங்கு செய்கின்... குழந்தைகள் மழைகாலமாயிருப்பினும், ...கோலமாயிருப்பினு...

"...தம் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
...கெடுக உலகிய ற்றியான்'' என்று கூறினர்.

அதாவது, இவ்வுலகத்தைப் படைத்தவன் மக்களிற் சிலரை முயற்சி புரிந்து ஜீவனம் செய்தலேயல்லாது பிச்சை யெடுத்துப் பிழைக்கும்படி விதித்திருப்பானாயின் அக்கொடியோன் அம்மனிதர்களைப்போல் எங்கும் அலைந்து கெடக் கடவன் என்று கூறியுள்ளார். இதிலிருந்து வள்ளுவரையும் நாஸ்திகர் என்று ஆஸ்திகர்கள் கூற முன் வருவார்களா?

இவைகளினால் சுயமரியாதைக்காரர்கள் நாஸ்திகர்கள் அன்றென்றும் சைவம் ஸ்மார்த்தம் மற்றும் ஏனைய மதங்களை யெல்லாம் தன்னுள் ளடக்கி நிற்கும் இந்துமதமே நாஸ்திக மதமென்றும்—ஏன்?—அதை விடக்கொடிய தே... மதமென்று... ...மரியாதை இயக்கமே மக்களின் அ... ...ளறிவார்களாக. சைவ... ளும் காங்கிரஸ்காரர்களும் சிறுகச் சி... ...து தங்கள் மஹாநாடு... தீர்மானங்கள் மூலமாய் ஒப்புக்கொ... ...ர்கள். இன்னும் அ... சீக்கிரத்தில் சுயமரியாதைக் கொடியி... ...று மக்களின் அடி... வாழ்க்கையை அழிக்க சமதர்மப் போர் ... ...க்கிரம் வந்து சே... போகின்றார்கள். உலகமே சுயமரியாதை ...தின் மேன்மை... அறிந்து வருகின்றது. சைவர்களே! சுயமரியாதைக்காரர்களை நிந்தி... பதை விட்டு நீங்குவீராக. சுயமரியாதை ஓங்குக! சமதர்மம் ஆ... வாழ்க!! வாழ்க!!'

---

# ...ாதாரர்களுக்கு அறிவிப்பு.

—:o:—

...ம் குமரன் மாதப்பதிப்புக்கு இந்த மாதத் ...டன் ஆண்டு முடிகிறது. முன் பணம் வராவிட்டால் அடுத்த ஆண்டு முதல் பத்திரிகை கண்டிப்பாக நிறுத் தப்பட்டுவிடும். ஆதலால் தாமதியாமல் புதுவருஷத்து சந்தா ரூ. 0—12—0 மணியார்டரிலாவது தபால் ஸ்டாம்பாகவாவது அனுப்ப வேண்டுகிறோம்.

மானேஜர்,
குமரன் ஆபீஸ், காரைக்குடி.

அவ்வியக்கம் ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிற ... யில்லை
யென்று சாதிக்கும் இந்து மதமே அவ்வாறு ஒத்துக்கொள் ... ருபொழு
தும் முடியாது. கடவுள், சமயம், வேதம் என்றெல்லாம் கூறிக்கொண்
டிருக்கும் மதங்களால் மக்கள் உலகிற்கு நன்மையில்லை. உலகத்தில்
வியாதிகளினாலும் ஏனைய வழிகளிலும் இறந்தவர்களிலும் கடவுள், சம
யம், வேதம் முதலியவைகளினால் இறந்தவர்கள் தொகை அதிகமாயிருக்
கின்றது. எனவே தான் கடவுள் வெறி, சமய வெறி, வேதப்பற்று
முதலியவைகளினால் ஜாதி வேற்றுமை மிகுந்து மக்களுலகில் வேற்றுமை
பெருகி நாளுக்கு நாள் ஜாதிப்போர் தாண்டவமாடி வருகின்றது.
ஜாதி வேற்றுமைகளை கடவுளே சிருஷ்டித்தார் என்று ஒருவர் கூறும்
பொழுது சுயமரியாதைக்காரர் ... ள் மக்களுக்குள் வேற்றுமைகள் பெருகி
ஒருவருக்கொருவர் சண்டை ... டுக்கொண்டு இறப்பதற்குக் காரணமா
கிய உயர்வு, தாழ்வு என்ற ... இக் ... வன் உண்டு
... ணி யிருந்தால் அக் ... ழுத்தில் பாரக் கல்லை கட்டி அத்லாண்
... க மகா சமுத்திரத்தில் ... வேண்டுமென்று சுயமரியாதைக்
... ரர்கள் சொல்வதில் ... ண மரியாதைக்காரர்கள் சுயமரிய
... தைக்காரர்கள் கடவுள் ... னும் கொள்கையை ஒழிக்கப் பார்க்கின்
... ர்கள் கடவுளை ... கின்றார்கள் என்று சுயமரியாதைக்காரர்க
... மேல் குறை கூறுகின்றார்கள். இவைகளெல்லாம் அன்னோர் அறிவி
மையினால் பிதற்றும் புன் மொழிகளென நாங்கள் கருதுகின்றோம்.
ஆண்டவன் ஒருவன் இருக்கும்பொழுது ஒரு சில சுயமரியாதைக்காரர்
கள் இல்லையென்று கூறிவிடவோ, அக் கடவுளை ஒழித்துவி ...
முடியுமா? அப்படி முடியுமென்னின் சில சுயமரியாதைக்காரர்களா
அழித்துவிடக் கூடிய கடவுள் இருப்பதில் பயனென்ன? இறப்ப ...
நமக்கு வருத்தமென்ன? ஆஸ்திகர்களே! உங்கள் கடவு ... யில் ...
நம்பிக்கை குறைவு கொள்கின்றீர்கள்? நீங்கள் உண்மை ...
இருக்கிறார், அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்று ந ...
சுயமரியாதைக்காரர்களின் பிரசாரத்தைக் கண்டு அஞ் ...
அவ்வியக்கப் பெரியார் ஈரோட்டு இராமன் அடிக்கடி மொழிந்து
வது உங்கள் செவியிலேறவில்லையா? தாழ்த்தப்பட்ட ... க்களின் ...
க்கு விரோதமாய் கடவுளிருக்கிறது என்று சொல்லும்பொழுது அக்
வுளை கடலில் கொண்டுபோய் அழ்த்திவிட வேண்டுமென்று யாங்க
கூறுகின்றோம். அது கடவுள் நிந்தனையாகவோ நாஸ்திகமாகவோ
ஒரு பொழுதும் ஆகாது. கடவுள் என்று ஒருவன் இருப்பானாகி
இவ்வித அநீதியான சட்டங்களை உண்டுபண்ணமாட்டான் என்று யா
கள் கொண்டிருக்கும் உறுதியான எண்ணத்தையே அது காட்டுவதா
யிருக்கிறது. இதனால் எங்களை நாஸ்திகர் என்றால், திருவள்ளுவர்
முதலிய அறிஞர்களும் நாஸ்திகர்களாகத்தானிருக்கின்றார்கள் என்பதை
நீங்களறிதல் வேண்டும். பிச்சை எடுத்துண்ணும்படியாகக் கடவுள் சி
ஜனங்களைப படைத்திருக்க மாட்டான் என்று வள்ளுவர் உலகிற்
... த்துக் கூறவுந்தபொழுது

# விபீஷணன் "அப்பீல்."

வைகுண்டம்,
2 மே 1931.

(நமது நிருபர்.)

நாரத மகரிஷியின் நவீனத் தீர்மானம் தேவலோக சட்ட சபையில் நிறைவேறிய பிறகு பிரம்மலோகமும் வைகுண்டமும் மிக பரபரப்படைந்திருக்கின்றன. எல்லா தேவர்களும் முனிவர்களும் மற்றும் சுவர்க்கம் புகுந்த பலரும் பூலோகம் "மடமட" வென்று அடைந்து கொண்டிருக்கின்ற மாற்றத்தைக்கண்டு வியப்புறுகின்றனர். கடந்த 3 மாதங்களாக எங்கும் அதுவே பேச்சாயிருக்கின்றது. சட்டசபை அங்கத்தினர்களின் மனம் தற்போது ஒருவாறு நாகரிகக்கடலை நோக்கிச் செல்லத் தொடங்கியிருக்கின்றது. அவர்கள் பிரமா, விஷ்ணு, சிவன் ஆகிய தேவர்கள் அடங்கிய ஒரு பிரிவிக் கவுன்ஸில் ஏற்படுத்தவேண்டுமென்று யோசனை செய்து வருகின்றார்கள். இனி வருகிற சட்டசபையில் அதாவது ஜூன் மாதம் கூடுகின்ற சபையில் அத்தீர்மானம் நிறைவேறுமென்று நினைக்கின்றேன்.

சென்ற வியாழக்கிழமை காலை, நான் "ந்யூஸ்" திரட்டுவதற்காக வைகுண்டத்தை நாடியபோது பாலாழிக்கரையில் ஓர் பெரிய ஜனக்கூட்டம்—இல்லை தேவர் கூட்டம்—காணப்பட்டது. ஒவ்வொரு தேவனும் வியப்பும் திகைப்பும் பொருந்திய முகத்தோடு ஏதோ உணர்ச்சி ததும்பப் பேசிக்கொண்டு நின்றான். நிமிஷம் செல்லச்செல்ல ஏராளமான தேவர்கள் மடையுடைந்த வெள்ளம்போல் வந்துகொண்டிருந்தனர். புஷ்ப விமானத்தில் வருவோரும், இரதத்தில் வருவோரும், வெள்ளை யானையில் வருவோரும், பறவைகளில் வருவோரும், குதிரைகளில் வருவோருமாக ஏராளம் தேவர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களிடையே அத்திரி, அங்கிரஸ், கிரது, புலஸ்தியன், புலஹன், மரீசி, வஸிஷ்டன் முதலிய சப்தரிஷிகளும், வால்மீகி போன்ற புராண முனிவர்களும், ஏனாதி நாயனார், மூர்க்க நாயனார், நக்க நாயனார் முதலிய நாயன்மார்களும், கூரத்தாழ்வார், திருமங்கையாழ்வார் முதலிய ஆழ்வார்களும் பிறரும் காணப்பட்டனர்; இவர்களுடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இவ்வளவு

பரபரப்பையும் கண்டவுடன் நான் விஷயமென்னவென்று அறிய ஆவல்கொண்டவனாய்க் கூட்டத்தை நோக்கி ஓடினேன். அங்கு நாரதர் முதலிய சில தேவலோகப் பிரமுகர்கள் யாரோ ஒருவரோடு "ஷேக் ஹாண்டு" செய்துகொண்டிருந்தார்கள். ஆ! ஆங்கில நாகரீகம் எவ்வளவு பரவி விட்டது! என்று வியந்து "ஷேக் ஹாண்டு" க்கு உரியவர் யார் என்று பார்த்தேன். வெகு நேரம் பார்த்தபிறகு விபீஷணரென்று தெரிந்தது. விபீஷணர் முகம் வாடி யிருந்தது. உடம்பு பலநாள் நோயுண்டிருந்தாற்போல இளைத்திருந்தது. இவ்வளவு நண்பர்களைக் கண்டும் முகம் புன்னகையைக் காட்டவில்லை. முற் காலத்தில் ஸ்ரீராமனால் சூட்டப்பட்டதாகிய கிரீடம் தலையிலில்லை; கையிலிருந்துகொண்டிருந்தது. அவருடன் வேறு உத்யோகஸ்தர்கள் எவரும் காணப்படவில்லை. நான் காண்டற்கரிய விபீஷணனை வைகுண்டத்தில் கண்டதும் அளவிலா வியப்பெய்தி சமீபத்தில் சென்று "குட்மார்ணிங் சார்" என்று வாயால் கூறி கையால் சலாம் செய்துவிட்டு "நான் குமரன் பத்திரிகையின் தேவலோக நிருபர்; தாங்கள் இங்கு என் வந்திருக்கின்றீர்களென்பதனை அறிய ஆசைப்படுகிறேன்." என்று ஆங்கிலத்தில் மொழிந்தேன். அவர் கொளும்பு சம்பந்தம் உடையவராகையினாலே "நல்லது; சந்தோஷம். காலம் மாறிவிட்டதல்லவா? எனது ஆட்சி உரிமை சம்பந்தமாக சிலவற்றை மகாவிஷ்ணுவிடம் முறையிட வந்திருக்கின்றேன்." என்று ஆங்கிலத்திலேயே விடை பகர்ந்தார். அத்தருணம் முதல் நாங்களிருவரும் நண்பர்களாகிவிட்டோம். அவர் கூடவே பலநாளாயிருந்து வருகிறேன். அவருக்கு எங்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்படுகின்றன. பல தலைவர்கள் பேட்டிகாண்கின்றார்கள். பூலோக ஆட்சி முறையைப் பற்றியும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியும் பல விஷயங்கள் கேட்கப்படுகின்றன. அவர் அவற்றிற்குத் தகுந்த விடையை யளித்து வருகின்றார். (அவைகளைப்பற்றி அப்பால் எழுதுகின்றேன்.) இங்குள்ள சட்டசபை மெம்பர்கள் அவருக்கு ஓர் உபசார விருந்து அளிக்கவேண்டுமென்று நிச்சயித்தார்கள். ஆனால் ஒருவரிருவர் புதிய தலைவர் விநாயகருக்கு ஒரு விருந்தளிக்கவேண்டுமென்று நிச்சயித்திருப்பதுபற்றி இரண்டையும் ஒன்றாய் நடத்துவது சிறப்புடைத்தாகு

படிப் பணித்தாய். எனவே நான் சிரஞ்சீவியாகி இலங்கையை ஆண்டுவந்தேன். அதுகாலை என்னைப் பலர் புகழ்ந்து என் பக்தர்களாகி என்னைப் போற்றினர்கள். நானும் சீரும் சிறப்பும் பெருக பல வருஷங்களாண்டுவந்தேன். ஆனல் அந்தோ! இப்போதிய நிலை.........கூறும்போதும் இருதயம் வேகின்றது; நாணத்தால் தலை குனிகின்றது; வெட்கம் மேலிடுகின்றது. வெட்கித்தென்ன பிரயோசனம்?" கூறுவதைக் கூறினல் தானே கவலை ஒழித்து வாழமுடியும். இப்போது நான் மிகக் கேவலமான நிலையிலிருக்கின்றேன். என்னை உலகில் ஒருவரும் கவுரவிப்பதில்லை. நாளேற ஏற விபீஷணனென்ற ஒருவனிருக்கின்றானென்ற ஞாபகமே மக்கள் மனதைவிட்டு மாறத் தொடங்கிவிட்டது. எனது நூல்களையும் சரித்திரத்தையும் பொய்யென்று எண்ணத் தொடங்கி விட்டார்கள். பலர் நான் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவனென்றும், கோடரிக்காம்பென்றும், சகோதரனைக் காட்டிக்கொடுத்தவனென்றும், கோழையென்றும், கும்பகர்ணனைப்போல வீரனக யுத்தஞ்செய்து இறக்கப் பயந்தவனென்றும் கூறுகிறார்கள். சிலர் "விபீஷணனைப் பிடித்துத் தந்தால் 1 லட்சம் ரூபாய் இனும்" என்று விளம்பரம் செய்து கேலி செய்கின்றார்கள். சிலர் என்னை அவமதித்து நூல்களெழுதுகின்றனர். பள்ளிக்கூட மாணவர்கள் ஆராய்ச்சி மேடையில் விபீஷணன் நல்லவனு கெட்டவனு வென்று வாதம் செய்கின்றார்கள். இவ்வளவு அவமானமும் எனக்கெதற்கு? இந்த இருபதாம் நூற்றாண்டிலே சுயமரியாதை இயக்கம் பரவிவருகின்ற இக்காலத்திலே நான் மானம் கெடுவதானல் எவ்வாறு சகிக்கக்கூடும்? ஒரு நாளிருந்து ஒருநாளிறந்தாலும் மானத்தோடன்றே இருக்க வேண்டும்? ஒரு காலத்தில் இராமாயணப் புண்ணிய புருஷரெனப்பட்ட யான், இராவணனது பிறந்த தேயத்திற்கு அரசனுயமர்ந்த யான் இவ்வாறு மானங்கெட்டு மதிப்புக்கெட்டு மாள்வதென்றால் உயிர் வாழவும் போகுமோ? ஒருக்கால் இந்த அவமானம் பொறுது இறந்தொழிவதென்றாலும் சிரஞ்சீவிப் பட்டம் குறுக்கிட்டு உயிர் போகின்றதில்லை. ஹே! லக்ஷ்மீபதே! தேவர் கோவே !!

மென்று அபிப்பிராயப்பட்டதால் விபீஷணர் விருந்து ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. (அது நடந்தேறியதும் விகிதமெழுதுகிறேன்.)

நேற்று முன் தினம் விபீஷணர் மகாவிஷ்ணுவைச் சென்று தரிசித்தார். அவர் பாற்கடலை கடப்பதற்காக ஒரு தோணி சித்தம் செய்யப்பட்டிருந்தது. விபீஷணர் விஷ்ணுவைப்போய்ப் பார்க்கின்றாரென்றறிந்ததும் கணக்கில்லாத உத்தியோகஸ்தர்கள் விஷ்ணு சபையில் பிரசன்னமாகிவிட்டார்கள். சிவனும் ஆஜரானார். அப்போது விபீஷணர் விஷ்ணுவைப் பணிய அவர் புன்னகையால் வரவேற்றார். பின் விபீஷணர் அடியில் வருமாறு முறையிடலானார்:—

ஹே! பரந்தாமா! தீனதயாளு! ஆபத் பாந்தவா!! அநாத ரக்ஷகா !! பாலாழி சயனா !!! அடியேன் குறையைத் தீர்த்தருள்வாயாக. நான் கிருத யுகத்திலே உந்தன் ஆணைப்படி விபீஷணனென்ற பெயரோடு விசிரவசின் புதல்வனாக இலங்கையில் அவதரித்தேன். ராவணன், கும்பகர்ணன் என்போர் என் சகோதரர்களாய்ப் பிறந்தார்கள். அவர்களில் ராவணனென்கின்ற கொடியோன் மூவுலகையும் அடிமைப்படுத்தி சர்வ தேவர்களையும் அஷ்டதிக் பாலகர்களையும் ஏவலாளராகக்கொண்டு கொடுங்கோல் செலுத்தினன். அது காலை துன்பம் பொறுதவர்களாகிய தேவர்கள் உன்பால் முறையிட நீ ஸ்ரீராமனாக அயோத்தியின் கண்ணே திருவவதாரம் செய்து உன் மனைவியாகிய சீதையை ராவணனால் கவரச் செய்து அக்குற்றத்தைக் காரணமாகக்கொண்டு ராவணன் மீது படையெடுத்துச் சென்றாய். அதுகாலை அடியேன்—பிறப்பு முதலே விஷ்ணு பக்தியில் தலைசிறந்து விஷ்ணுவென்ற நாமத்தையே எனது ஊணும் உறக்கமும் உயிருமாகக்கொண்டு காலந்தள்ளிய யேதுவால் உன்பால் பக்தி கொண்டு உனக்கு ஆவன செய்தேன். அதுவுமன்றி என் சகோதரனும் சுற்றமும் அழிந்தொழியுமாறு அவனது இரகசியங்களை உனக்குப் போதிக்கவுஞ் செய்தேன். அக்காரணம் பற்றி நீ யெனக்கு இலங்கையை அளித்து, அதற்கு என்னை சர்வாதிகாரியாக்கி "காருள்ளளவும் கடல் நீருள்ளளவும், பாருள்ளளவும்" என்னை ஆண்டுவரும்

ஸ்மார்த்த சமயம் அல்லது இந்து மதத்தின் ... பத்தி லொன்றான பிராமண சமயம் ஒரு சமயத்தின் தன்மை... ஆராய விரும்புபவர்கள் முதலானவர்கள் இவ்வுலக உற்பத்தியைப் பற்றி அச்சமயம் என்ன கூறுகின்றது ...ன்று ஆராயக் கடமைப்பட்டுள்ளார்கள். அவ் வாறே இந்த ஸ்மார்த்த ...தத்தை ஆராய்ந்தால் பிரம்மமானது மாயா சம்பந்தப்பட்டு இவ்வுலகி... பல்வேறு உயிர்களாகத் தோன்றியிருக்கிறது. இவ்வுயிர்களாகியநாம் இன்... இந்த மாய்கையினின்று விடு...போமானால் கடவுளாய் ஆய்விடுவோம் ... தாகும். இதே கொள்கையைக்கொண்டு தான் சுவாமி விவேகானந்த... ...தலிய அறிஞர்கள் மேலை... ...ங்கும் சாரம் செய்து வந்தார்கள். ... தப்பற்றித் "த... ளின் சுருக்க வரலாறு" என் ... நூலில் "... ...க் கொள்கையான ...

...ரே பிரம்மத்தில் ... ...பதும் பிரம்மத்த... ...ருரு பொருளும் உ... ...இல்லையென்பதும் அவர்கள் (ஸ்மா... ...ள்) கொள்கைகள் ... ...ா என்பது இன்னதென்று சொல் ...ணத மாயையில் ... ...ணப்படும் பிரமத்தின் பிரதிபிம்பு ...பதே அவர்க... இக் கொள்கை சில உபநிடதங்களில் ...ணப்படுகின்றன ... ...மா பிரமத்தின் சாயலே யன்றி உண்மை ...ல் இல்லாத பொரு...ளின் அதன் உறுதியைப்பற்றிப் பேச இட ...ல்லை. அது பிரமத்தின் பகுதியெனில் அதுவும் பிரமமே. ...ரமும் தன்னை வழி பட வேண்டியதுமில்லை. ஆதலால் தன்னை ...மென்றறிபவன் யாதொன்றையும் வழிபட வேண்டுவதில்லை ... சங்கரர் நூலின் முடிந்த கொள்கை." எனக் கூறப்பட்டி...றது. சமயக் கொள்கைப்படி நாமே கடவுள் என்றேற்படுவ... ...டறிஞர் ஒருவர் இவர்களைப்பற்றி கூறும்பொழுது "தா... ...றிடும் பாதகத்தவர்" என்று கூறியுள்ளார். வடமொழி ... மற்றோர் அறிஞர் "......சங்கரமதத்தை (ஸ்மார்த்த மதத்... புத்தமதம் (வைதீகப் போர்வையைப் போர்த்த நாஸ்திக மதம சொல்வார்கள். இதனால் பௌத்த சமயக் கூற்றுவ... ...ருந்த பௌத்த...களின் தத்துவ நூற்களை வடமொழியில் எ... உபநி... என்ற பெயரைக் கொடுத்தார் என்று எண்ணவிருக்கிறது" என... கூறுவதிலிருந்து பகிரங்க நாஸ்திக மதமாகிய புத்தமதக் கொள்கையே ஸ்மார்த்த மதமா... பரிணமித்திருக்கிறது என்பது நன்கறியக்கிடக்கின் றது. மேலும் ஸ்மார்த்த மதத்திற்கு ஆதாரம் நாலு வேதம் ஆறு சா... திரம் பதினெண் புராணங்களும் மற்றும் பல நூல்களுமாம். இவ்வாறு சாஸ்திரமாகிய நியாய சாஸ்திரம், வைசேஷக சாஸ்திர..., சாங்கிய சாஸ்திரம், மீமாம்ச சாஸ்திரம், யோக சாஸ்திரம், ...த சாஸ்திரம், ...ன்பவற்றில் மீமாம்ச சாஸ்திரமானது ஜெய முனி...ால் உண்டுபண்ண ...பட்டது. உலகம் கடவுளால் உண்...ாக்கப்ப...வில்லை என்று கூறு ...து. இன்பதுன்பங்கள், சுகதுக்கங்கள், ...ாக்கிய நிர்பாக்கியங்கள் ... சகல ... ...ல் உண்ட... ... ...சொல்லு...

ச ... ாதப் பதிப்பு.

வ ... வஞகவும் ஆகிவிடுகிருன் என்று சொல்லப்பட்டு
து. ... லகத்திற்கு ஆதியந்த மில்லையென்றும் மலைகளும் கடலும்
ப்போதும் உளதென்றும் ஜடங்கள் உருவா குவது சிறிய அணுக்களால்
ன்றும் கூறுகிறதாம். சாங்கிய சா ... திரமும் ஆண்ட
ன் படைக்கிறதில்லை யென்றும் சகலவஸ்து ... ளும் பிரகிருதியினுல்
டண்டாகிறதென்றும் அதாவது பிரகிருதி மு ... காரணமென்றும் பிர
சமென்றும் சகல படைப்புகளும் அநாதி ... னவை யென்றும் சொல்
ப்படுகிறது. இன்னும் எந்த வஸ்துவும் அழிந்துபோகும் என்பதை
க்கின்றது. இச் சாஸ்திரம் ஒரு வ ... நாஸ்திகத்தைப் போதிக்கி
... மதம் ஆஸ்திக மதம் ... று சாதித்த சேலம் பகடால
... கூட "மத ... ஷம்" என்னும் தம் நூலின்
... ஸ்மார்த்த மத சா ...
... வற்றுளும் நாஸ்திக ... த ... ச ... ன்றது என்பது
முடியாத உண்மையாகும்.

மேலும் ஸ்மார்த்த மதக் கொள் ... நாமே பிரமம் (கட
ன்றேற்படுகிறபடியால் நம்மைத் தவ ... கிடையா ...
றற்படுவதால் கடவுள் வணக்கமும், கோயில் ... ணி முதவியவை
ளும் அவசியமில்லை யென்பதோடு மக்களைத் ... லைக்கும் இட்டு
செல்கிறது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் ஒரு கதையே தக்
... ம்:—

ஒரு ஊரில் ஸ்மார்த்த குரு ஒருவர் இருந்தார். அவரிடம்
ரு பிர ... ரியான வாலிபன் ஸ்மார்த்த மத வேதாந்தங்களைப்
... ருந்தார். எல்லாம் பிரம்மம் என்னும் கொள்கை அவர்
... பதிந்துவிட்டது. இஃது இவ்வாறிருக்க, குருவினுடைய
... யருக்கும் இப் பிரமச்சாரியான வாலிப சிஷ்யருக்கும்
... ண்டாய்விட்டது. வாலிப பிரமச்சாரி குருவின் மனை
... சேர்வதைக் குற்றமாக எண்ணினனில்லை. ஏனென்றால்
... ரமம், ... பெண்ணும் பிரமம்; இரண்டு பிரமமும் ஒன்றாய் கலந்
... ப்பதால் தவறு ஒன்றுமில்லையே என்ற தத்துவப் பொருளை ... குஆரா
... நதே இவ் விஷயத்தில் இறங்கியுள்ளான். ஒரு நாள் குருவின்
மனைவியும் சிஷ்யனும் ஓரிடத்தில் சரச சல்லாபங்களைப் புரிந்து ஈருட
... ம் ஒருயிரும் என்னக் களிப்புற்றிருக்கையில் குருவானவர் கண்டு சிஷ்
யனை நோக்கி "அடே பாதகா! அங்கு என்ன செய்கிருய்" என்று அதட்
டிக் கொண்டு கையில் ஒரு தடிக் கம்புடன் செல்ல சிஷ்யன் குருவை
நோக்கி "சுவாமி யான் தவறென்றும் செய்துவிடவில்லையே. உலகத்தி
லுள்ள எல்லா உயிர்களும் பிரமம் என்று கற்பித்திருக்கின்றீர்களே.
அவ்வாருனல் த ... மனைவியும் பிரம்மமன்றோ? அப்பிரமமும் (குருவி
னுடைய மனைவியும்) இந்தப் பிரமமும் (சிஷ்யனும்) ஒன்றாய்க் க ...
... ல் பக்தி ... மற்ற பிரமத்திற் ... என்ன அ ...
அதனால்

களில் ...ள மிக மிகத் தீயவர்கள்; அன்னோர் நூல்களை வாசித்தலும், அவர்களின் பிரசங்கங்களைக் கேட்கச் செல்வதும், அவர்களுடன் பழகுவதும் தீதென்றும் பொது ஜனங்கள் யாவரும் கூறி விடுவர்.

மேலும் இன்று யான் ஆஸ்திகன், கடவுள் நம்பிக்கையுடையோன் என்று கூறித் திரியும் மக்களில் எத்தனை பே...க்கு உண்மையில் கடவு ...ளிருக்கிறார் என்ற நம்பிக்கை உண்டு என்று வினவுகின்றோம்? இன்று ...ஆஸ்திகர்கள் என்று கூறும் மக்களில் பலர் கோர்ட்டுகளில் வாதியாக ...வோ, பிரதிவாதியாகவோ, சாட்சியாகவோ பலமுறையும் வந்து ஆண் ...வன் பேரில் சத்தியஞ் செய்து தாம் உண்மையைச் சொல்லுகிறோம் ...என்று சத்தியம் பண்ணியே வாக்கு மூலம் கூறுகின்றார்கள். ஆனால் கடவுள் நம்பிக்... ...ங்கிரு... ...ட்...ர் அங்கு சொல்வது முழு வதும் பொ... இன்னும் ஆ... ...னிருக்கின்றான் ... இவர்கள் நம்புவார்களாயின் தாழ்த்த... ...ளுக்கு ஆலயப் பிர...சம் அளிக்க மறுப்பதுடன் தெரு... ...ட்டாமலும் பொது ...கிணறுகளில் தண்ணீர் இறைக்கவொ... தாழ்த்தப்பட்ட பெ...ள் சேலையால் மார்பை மூடக் கூடத்... ...ரியோர், வலி...ன்றார் முதலியோர்களுக்கு அளவிடற்கரிய ... புரிந்தும் வரு...தோடு பெண் மக்கள் விதவையானால் அவர்கள் ...றுமணஞ் செய்தல் கூடாது, பெண்களுக்கு சொத்துரிமை கூடாதென்றெல்லாம் மக்க...டங்களேற்படுத்தி யிருப்பார்களா? ஆண்டவன் ஒருவன் உண்டென... அவன் நம் குற்றங்களுக்குத் தக்க தண்டனையளிப்பான் என்ப...தையும் உலக மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் உலகில் கொலையேது ...ளவேது... ...யேது, சண்டையேது? எங்கும் சாந்தம், எங்கும் அமைதி ...இன்ப மயமாயன்றோ விளங்கும்? எனவே இன்று உலக ...ரும் கடவுள் நம்பிக்கை யில்லாதவர்களா யிருக்கின்றார்கள் ... பிரத்தியட்சத்தால் காணும் உண்மையாகும். மேலும் ...றக்கும் ஒவ்வொரு குழந்தையுமே நாஸ்திகமாய்த்தான் ...றது. ஆண்டவன் ஒருவனிருக்கிறான் என்று பின்னர் தாய் ... ஆசிரி...கள் கற்பித்த பின்னரே ஆண்டவன் என்ற வார்த்தை ...யைக் கூட அறிய ஆரம்பிக்கின்றது.

ஆனால் சுயமரியாதைக்காரர்களோ, கடவுள் ஒருவர் உண்டா? இல்லையா? என்று மக்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டாமென்றே கூறு...ன்றார்கள். காணமுடியாத கடவுளைக் காண மக்கள் முயன்று தங்கள் வாழ்நாளை வீணாக்க வேண்டாம். வேண்டுமானால் செல்வம் கொழிக்கும் அமெரிக்கர்கள் கடவுளைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கட்டும். சராசரி ஒரு நாளைக்கு ஒரு நேரத்திய உணவிற்கும் வழியற்ற இந்திய நாட்டு மக்கள் அவ்விதப்பயனற்ற ஆராய்ச்சியில் தலையிட வேண்டாம். ஆண்டவனிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நல்லவனாய் நட; நன்மை செய் என்றே சுயமரியாதை இயக்கம் கூறுகின்றது. ஆனால் சுயமரி...தை இயக்கத்தாரிடம், எக் காலத்தில... ... கடவுள்... என்... ...ரத்தி... ச பிரமாண...

பிரம்மமென்னும் தவருன தத்துவத்தின் தீமை... அதை விட்டு நீங்கிவிட்டார். இஃது பண்டைக்காலம் முதல் ந... நாட்டில் வழங்கி வரும் ஒரு கதையாகும். இவைகளினுல் ஸ்மார்த்த மதம் ஆஸ்திக மதமா? நாஸ்திக மதமா? என்னும் உண்மைகள் தெளிவாய்த் தெரிவ தோடு அம் மதக் கொள்கைகளினுல் வரும் கேடுகளும் நன்கு விளங்கும்.

இந்த மதத்தின் ஒரு கிளை மதமான சார்வாக மதம், பிரத்தியட்ச பிரமாணங்களைத் தவிர மற்... பிரமாணங்களை நம்புகிறதில்லை. ... பிருதிவி (மண்) அப்பு (ஜலம்) தேயு (அக்கினி) வாயு (காற்று) என நான்கு பூதங்கள் மாத்திர மு...டென்றும் ஆகாய மென்... யென்றும் ஆன்மா என்ற ஒரு வஸ்துவே கிடை... கூடிச் சேர்வதால் பிராண... உண்டாகிற... ...கயென்றும் மற்று... ...தி ...னவைகளுண்டெ...வது மூடத்தனமென்றும் இறப்பே ...த்தியென்றும் இறந்த...ளாலாகிய தேகங் ஷடி பூதங்களாக ...றிவிடுகிறபடியால் ஒ...ன்றும் கூறுகிறது.

மற்ெருரு ... லோகாயத மதம். இவ்வுலக சுகமே ...ந்த சுக மென... இவ்வுலகத்தை விட்டு மேலுலகங்களிற் போ... அனுபவிக்கும் சுகம் ...றபனம் போல் என்றும் கடவுளும், நரகமும் சொர்க்கமும் இல்லையென்றும் சாதிக்கின்றது.

பஞ்சபூத தத்வ வாதிகள் கொள்கையோ, பஞ்சபூதங்களு ஒரு கடவுள் இல்லை யென்றும் இப் பூதங்களின் பரிணமிப்புகளா தேகாதி பிரபஞ்சங்களுண்டென்றும் கூறுகிறது.

இன்னும் சாங்கிய மதம், பிரகஸ்பதி மதம், சூன்ய... இந்திரியாத்மவாதிகள் மதம், பௌத்த மதம் முதலிய ம... இந்து மதங்களாயிருந்தும் அவைகளெல்லாம் கடவுள்... கூறும் பகிரங்க நாஸ்திக மதமே யாகும்.

நம் நாட்டில் இன்று குற்றுயிராய்க் கிடக்கும் சை... சமய... பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை ஒப்புக்கொள்ளும் ... சமயமாகும். அதாவது கடவுள், உயிர், மாயை இம் மூன்றும் அ... யாகவுள்ளது என்று சொல்லுகிறது. இச் சமயக் கூற்றுப்படி மனித னுடைய ஆவியானது கடவுளால் உண்டாக்கப்படவில்லை; கடவு... என்று தோன்றியுள்ளாரோ அன்றே உயிரும் தோன்றியுள்ளது என... தோடு கடவுள் உயிர்களைத் தன்னேடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்... கருணை மேலீட்டால் இவ் வுடலை உயிர்களுக்கு நல்கினன் என்பது சைவர்களின் சித்தாந்தம். உடலோ மனிதன்,—மனுஷி சேர்க்கையால் மக்களாலே உண்டாக்கப்படுகிறது என்பது நமது பிரத்தியட்ச அனு பவமாகையினுல் உடலும் கடவுளால் உண்டாக்கப்படுகிறதில்லை என... ...து தெளிவாகிறது. உடலும், உயிரும் கடவுளால் உண்டாக்கப்பட... ...ன்பது ... கொள்கை என்று ...பா... ...க்கள் ந... ...யென்று பகி...

என் குறைகளைத் தீர்த்தருளல் வேண்டும். அவசியமானால் ஒரு அவதாரங்கூட வெடுத்து பகைவரை யோட்டி இலங்கையை மீட்டுத் தரவேண்டும். அது உங்கள் கடமையும் கருணையும் மெய்மையுமாகும்.''

இவ்வளவு நீண்ட உருக்கமான அப்பீலைக் கேட்ட திருமால் வெட்கமும் நாணமும் வருத்தமும் எய்தினர். சிவன் பூமியை நோக்கித் தனக்குள்ளேயே நகைத்தார். நாரதர் முதலியவர்கள் இரங்கினார்கள். சில தேவர்கள் உலகத்தின் போக்கைக்கண்டு கோபம் கொண்டதோடு விபீஷணனைத் தேற்றினார்கள். இந்திரன் முதலியோர் "உம் தலைவிதி இப்படியாயிற்று; யாருக்கு என்ன செய்ய முடியும்?'' என்றார்கள். பெரும்பாலும் அங்கு நின்றோரனைவரும் விபீஷணனின் பரிதாபத் தோற்றத்தைக்கண்டு உள்ளம் உருகினார்கள். கடைசியில் விஷ்ணு:—ஹே! பக்தா! கலங்காதே; ஆவனவற்றைச் செய்வோம். நாம் இனி எடுக்கப்போகின்ற அவதாரத்தில் (கல்கியில்) புத்தர்களை யெல்லாம் அழிப்போம்; அழித்து உன் நாட்டை உனக்கே தருவோம்.

விபீஷணன்:—அதுவரையிலும் எப்படிச் சும்மாவிருக்க முடியும்? எனக்குப் பூவுலகிற்குப் போகவே மனம் பதறுகின்றது. ஏனெனில் என்னைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றும் அதன் மூலம் ராமாயணத்தை மெய்ப்பிக்க வேண்டுமென்றும், பலர் கங்கணங் கட்டித் திரிகின்றார்கள். நிற்க, நீங்கள் கல்கியவதாரத்தில் புத்தர்களை ஒழிப்பதால் எனக்கு நலனேற்பட்டுவிடாது. இப்போது எனது நாட்டைக் கைப்பற்றி இருப்பவர்கள் ஆங்கிலேயர்களாம். அவர்களிடமிருந்தே நாட்டை மீட்கவேண்டியிருக்கிறது.

போகர்:—இந்த விடத்தில் எனக்குக் கொஞ்சம் பேச விடம் கிடைக்குமானால் என்னபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாமென்று நினைக்கின்றேன். தேவர் திருவுள மெப்படியோ?

விஷ்ணு:—நன்றாகத் தெரிவிக்கலாம். எப்படியும் பொதுத் தேவர்கள் (பொது ஜனங்கள் என்பதற்குச் சரியான தேவலோகப் பதம்) கருத்தை அறிந்தே எதுவும் செய்யப்போகின்றோம். யதேச்சையாக காரிய நிர்வாகம் செய்யும் காலம் மாண்டுவிட்டதல்லவா?

மேற் சொன்னவைகள் எனது சொந்த நாட்டாரிடமிருந்து வருகின்ற அவமானமாம்; ஆகவே அதனை மறந்து விடுமோமென்றாலும் இன்னொரு வழியில் வருகின்ற அவமானமும் நஷ்டமும் ...ன்னால் பொறுக்கமுடிகின்றதில்லை. அதாவது நான் இலங்கையை ...ன் நாடு என்கிறேன்; நீங்களும் என் நாடென்றுதான் தாரை ...ார்த்தீர்கள். ஆனால் இப்போது அதனை ஆள்கின்றவர்கள் ...ங்கிலேயர்களாம். அவர்கள் கெஜட்டும் ஏனைய ரிக்கார்டுகளும் ...வத்து தங்கள் நாடு என்று ஆட்சி புரிகின்றார்கள். பலடிப் ...ார்ட்டுமெண்டுகளை அமைத்திருக்கின்றார்கள்; உத்தியோகஸ்தர் ...ளை ஏற்படுத்தியிருக்கிறார்க...; நீதி நியாயக்கோடுகள் இயற்றி ...ருக்கின்றார்கள். அவர்களுடைய சட்டமும் நீதியுமே செலுத் ...ப்படுகின்றன. எனக்களித்த ஒரு நாட்டை அவர்கள் இவ்வாறு ...ள்வதென்றால் அது எவ்வளவு கொடுமை? என் பிரஜைகளை அவர் ...ள் தம் பிரஜைகளென்று பட்டம் சூட்டி அடிக்கவும் தொந்தரவு ...சய்யவு செய்கின்றார்கள். இலங்கை வருவாய் முழுதையும் அவர் ...ளே எடுத்துக்கொள்கின்றார்கள். எனக்குச் செலவுக்குப் போது மான பணம் எங்கிருந்து வருமோ தெரியவில்லை. இது எவ்வளவு பெரிய அநீதி பாருங்கள். ஒருவன் வீட்டில் இன்னொருவன் புகுந்து வேலைக்காரர்களை எஜமானன்போல் கட்டளையிடுவதானால் அதனை என்னென்பது? இவ்வாங்கிலேயர்களை துரத்தியடித்து நாட்டைக் கைப்பற்றி விடலாமென்றால் அவர்களிடம் துப்பாக்கியிருக்கிறது; குண்டிருக்கிறது; பீரங்கி யிருக்கிறது; பறவைக்கப்பல் நீர் மூழ்கிக் கப்பல் இவைகளிருக்கின்றன. அஃதோடு Man of war, என்ற ...ல கப்பல்கள் தீவைக் காவல் செய்து வருகின்றன. அவை சுற்றி வரும்போது எனக்குப் பார்க்கவே நடுக்கமெடுக்கின்றது. இப்படிப்பட்ட ஆங்கிலேயர்களிடம பண்டைக்காலத்து அம்பையும் வில்லையும் வைத்திருக்கின்ற என்னால் எவ்வாறு போர்செய்ய முடியும்? ஒருக்கால் வழக்காடலாமென்றால் அவர்கள் இலங்கையை 1800-ம் வருஷம் டச்சுக்காரர்களிடமிருந்து விலைக்கு வாங்கினார்களாம். டச்சுக்காரர்கள் புத்த—இந்து அரசர்களிடமிருந்து போரில் ஜயித்தார்களாம். இவ்வாறு எனக்குச் சொந்தமான நாட்டை பலர் ஆள்வதானால் என்ன அருத்தம்? எனவே எல்லாம் வல்ல எம்பெருமானே! நீங்கள் அடியேன்பேரில் கருணை கூர்ந்து

போகர் :—அப்படியானால் எமது மக்களாகிய ஆங்கிலேயர் கையிலிருந்து நாட்டை எடுப்பது சரியல்ல. அவர்கள் டச்சுக் காரர்களிடமிருந்து பரிவர்த்தனையாக இலங்கையைப் பெற்றிருக் கின்றார்கள்.

விஷ்ணு:—டச்சுக்காரர்களோ ?

போகர் :—அதனைப்பற்றியே சிந்திக்கவேண்டா மென்கின் றேன். ஏனெனில் எவர் உலகில் எதைச் செய்தாலும் எல்லாவற் றிற்கும் காரணபூதர் நீங்கள்தானே. ஒரு விஷயத்தைச் செய்யும் படித் தூண்டிவிட்டு அப்பால் செய்தவனைத் தண்டிப்பதென்றால் முறையல்ல. உலகச் சட்டப்படி அது குற்றகரமாகும்.

(இவ்வார்த்தைகளைக் கேட்டதும் எல்லோரும் விழித்தார் கள். விஷ்ணு சிவனாதியோர் முகமிருண்டது.) கடைசியாக விஷ்ணு :—பக்த சிரோமணி! இந்த நிலையில் என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை. சமீபத்தில் ஓர் பிரிவுக் கவுன் சில் ஏற்படப் போகிறது. அதில் இந்த பிரசினையைப் பற்றி யோசிக்கிறோம். அதுவரையிலும் இங்கேயே இரு. உலகிற் சென்றால் யாரேனும் பிடித்துவிடுவார்களோ வென்ற பயம் வேண்டாம்.

* * *

(இப்போது தேவலோகம் முழுதும் இவ்விஷயமே பேசப் பட்டு வருகிறது. எஞ்சியவற்றை யப்பால் எழுதுகிறேன்.)

(E. S

---

# பங்கஜத்தின் பரிதாப மரணம்.

பங்கஜமும், விசாலாட்சியும் பால்ய சிநேகிதிகள். ஒருவ மேல் ஒருவருக்கு அளவிடற்கரிய அன்பு முதிர்ந்த அபிமானம் இருவரும் ஒத்தவயதினர்; ஒத்த தன்மையினர்; அவ்விரு பெண் மணிகளும் பூப்பெய்தியதும், இல்லறத் தலைவியராக ஆக்கப்பட் டதுங்கூட ஏறக்குறைய ஒரேகாலத்தில்தான்!

மார்கழித் திருநாளின்போது, இருவரும் நல்ல அணிபணி பூண்டு, மகிழ்பூத்த உள்ளத்தினராய், தத்தம் கணவருடன், "தில்லைக்கப்பால் நின்று சேவித்தாலும் ஜெனனம் எல்லைக்கப்பால்

போகுமே" என்று புகழ்ந்து கூறும் சிறப்பினை வாய்ந்ததாகக் கருதப்படும் சிதம்பரம் சென்று, 'ததிங்கிணத்தோம்' எனத் தாண்டவமாடும், தாண்டவ மூர்த்தியைத் தரிசித்துப் பேரானந்தமடைந்து, பின்பும் சந்நிதானத்தை விட்டகல மனமிலராய், பதிகங்கள் பாடி, நெஞ்சு நெக்குருகி ஆனந்தக்கண்ணீர் வடித்து அஞ்சலியஸ்தராய் நின்றனர். அவ்விரு நல்லாரின் கணவன்மாராய கனகசபாபதிப் பிள்ளையும், பொன்னம்பலம் பிள்ளையுந் தங்கள் கரங்களைச் சிரமீது கூப்பி ஒரு காலைத்தூக்கி, ஆடிப் பாடித் தங்கள் மெய் பக்தியை நடராஜப் பெருமானுக்கு வெளிப்படுத்தினர். கடைசியாகக் கோவில் குருக்கள் தீபாராதனைத் தட்டைமேலே தூக்கி, சுவாமியின் முகத்துக்கு நேராகப்பிடித்து வெளியில் கொடிமரத்தினருகில் நின்று மேளம் வாசித்துக்கொண்டிருந்த நாகசுரம் சின்னச்சாமியின் இசைக்கிசைந்த வண்ணம் மேலுங்கீழுமாக ஆட்டினர். சந்நிதியில் நின்றுகொண்டிருந்த பக்தர்களின் கன்னங்கள் தங்களுக்கேற்பட்ட அடிகளைக் குறைவின்றிப் பெற்றன. அதுவே தக்கசமயமென எண்ணி அருகில் நிற்கும் பெண்டிரின் மேல் விழுந்து நெருக்கித் தள்ளும் சிலரின் செய்கையையும், அதனாலேற்படும் கஷ்டத்தையும் சிறிதும் சட்டை செய்யாமலும், தாங்கள் நின்றுகொண்டிருப்பது "சுவாமி" சந்நிதியில் என்பதை மறந்தும், "அம்மா! தாயே! ஈஸ்வரி! காப்பாத்தம்மா; ஒம்பேரு வளங்கப் புள்ளேகுட்டிகளே யெல்லாம் நோய் நொடியில்லாமல் நல்ல நெலமையில் வையய்மா" எனத் தோத்தரித்து நின்றனர் பெண்டிர். இக்கூட்டத்தில் நின்ற பங்கஜமும் விசாலாட்சியுங்கூட இப்படியே பிரார்த்தனை பண்ணிக் கொண்டார்கள்! சிறிது விவரமாகக் கூறினால், பங்கஜம், தான் 85 வயது வரையில் இருந்து "பெத்துப் பெருகி" வாழ்ந்து அதன் பின்னர் "சுமங்கிலிக் கழுத்தோடு" கைலாயஞ் சேரவேண்டுமென்றும், விசாலாட்சி, அப்பொழுது தன் வயிற்றிலிருக்கும் சிசு ஆண் குழந்தையாக இருக்கவேண்டுமென்றும், அப்படி ஆணாகப் பிறந்தால் நடராஜன் என்று பெயரிடுவதாகவும் பிரார்த்தனை பண்ணிக்கொண்டார்கள். பின்னர் சகஸ்ரநாம அர்ச்சனையுட்பட சகலவும் ஐதீகப்படி செய்து முடித்தனர். பூசாரிகளும் அளவுக்கதிகமாகவே காசு பெற்றனர். மடப்பள்ளிச் சாதம்

விலைக்கு வாங்கி ஏழைகளுக்குத் தானமாக அளிக்கப்பட்டது. கடைசியில் 'திருவாதிரைக் களி'யில் தலைக்கு 2 ரூபாய்க்குப் பெற்றுப் பத்திரம் செய்துகொண்டு பயணம் செய்ய ஆயத்தமாயினர். கோவில் பெரிய பட்டரான நீலகண்ட தீக்ஷிதர், அவர்கள் புறப்படுஞ் சமயத்தில் அவர்களிடம் பல்லைக்காட்டி எட்டணு பெற்றுக் கொண்டு, மகிழ்பூத்த உள்ளத்தினராய்த் தன் இரு கைகளையும் உயரத்தூக்கி வாயைப் பிளந்த வண்ணம் "மகாராஜனுயிருங்கள்" என்று இரு ஆடவரையும் வாழ்த்தி, இரு மடந்தையரையும் நோக்கி "தீர்க்க சுமங்கலீபவ" என்று அட்சர சுத்தியாகக் கூறி ஆசீர்வாதமும் செய்தார். அதே சமயம் கெவுளியுங்கூட ஈசானிய திக்கில் "கலகல" வெனச் சப்தித்து அவரது ஆசீர் வாதத்தை ஆமோதித்ததாகக் கேள்வி.

எல்லாம் ஆயிற்று; மறுநாள் விசாலாட்சியும் அவள் கணவரான பொன்னம்பலம் பிள்ளையும் திருநெல்வேலிக்கும், பங்கஜமும் கனகசபாபதிப்பிள்ளையும் சீயாழிக்கும் பிரயாணமாயினர்.

மறுதினம் மாலை 5-30 மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயில்வண்டி திருநெல்வேலி ஸ்டேஷனை அடைந்தது. உடனே நமது தம்பதிகள் தங்களது மூட்டை முடிச்சுகளுடன் வண்டியினின்றும் கீழிறங்கி, ஜட்கா ஒன்றை வாடகைக்கமர்த்திக்கொண்டு டவுண் தெற்குப் புதுத்தெருவிலுள்ள தங்கள் வீட்டையடைந்தனர். காக்கி உடையுடனும், சிகப்பு வர்ண ஸைக்கிள் வண்டியுடனும் காணப்பட்ட தந்திச் சேவகன் ஒருவன் தங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, "ஐயா, ஐயா" என்று கத்திக்கொண்டிருந்ததைக் கண்ட பொன்னம்பலம்பிள்ளை நகைத்தவண்ணம் அவனைக் கூப்பிட்டுக்கொண்டே அருகில் சென்றார். அவன் மஞ்சள் வர்ணக் கவர் ஒன்றை அவரிடம் கொடுத்துத் தனது கைப் புத்தகத்தில் அவரது கையெழுத்தை வாங்கிக்கொண்டு சென்றான்.

"நாம் வீட்டுக்கு வருமுன்னே தந்தி எங்கிருந்து வந்திருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்தாள் விசாலாட்சி. பொன்னம்பலம்பிள்ளை தந்தியைப் பிரித்துப் படித்துப் பார்த்துத் திடுக்கிட்டு மறுபடியும் ஓர் முறை தந்தியைத் தனக்குள் படித்துப் பார்த்தார். தலையைச் சொறிந்துகொண்டு பெரு

மூச்சு விட்டார். "என்ன சமாச்சாரம் சீக்கிரம் சொல்லுங்களேன்" என்று அவசரப்படுத்தினள் அவரது மனைவி. "சொல்லுவதென்ன இருக்கிறது. நேற்று நம்முடனிருந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டுச் சீயாழி சென்ற கனகசபாபதிப்பிள்ளை, "வாய்வு" உபத்திரவத்தால் இன்று காலை திடீரென்று இறந்துவிட்டாராம்" என்று கூறினர் பிள்ளை. "என்ன! கனக சபாபதிப்பிள்ளை இறந்துவிட்டாரா? நன்றாகப் பாருங்கள் தந்தியை" என்று படபடப்புடன் கூறினள் பேதையான விசாலாட்சி. அவரும் தந்தித்தாளை மறுபடியும் மறுபடியும் படித்துப்பார்த்தார். அது வேறு விதமாக இருந்துவிடப்படாதா என்று எண்ணி ஆர்வத்துடன் தன் கணவரின் முகத்தைப் பார்த்தவண்ணம் நின்றாள் விசாலாட்சி. அவள் என்ன எண்ணியும், பொன்னம்பலம்பிள்ளை எத்தனை தடவைதான் படித்துப் பார்த்தும், அந்தப் பொல்லாத தந்திக் காகிதத்தில், 'கனக சபாபதிபிள்ளை, இறந்துவிட்டார்' என்ற செய்தி தான் காணப்பட்டது! அதன் பின்னர் அங்கு நடந்தவற்றை விவரிக்கத் தேவையில்லை.

மறுதினம் மாலை சுமார் 4 மணிக்கு, சீயாழியிலுள்ள பங்கஜத்தின் வீட்டெதிரில் ஜட்கா ஒன்று வந்து நின்றது. விசாலாட்சி அதிலிருந்து இறங்கி வீட்டினுள் சென்றாள். அங்கு அவள் எதைக் கண்டிருப்பாள்? இரண்டு தினங்களுக்கு முன் நடந்த திருவாதிரை உற்சவத்தின்போது, மஞ்சள் குங்குமத்துடனும், அணிபணிகளுடனும், மகிழ்பூத்த உள்ளத்துடனும் சுமங்கிலியாய் விளங்கிய பாவை பங்கஜம், வெள்ளைப் புடவையுடனும் தலைவிரி கோலத்துடனும் அமங்கிலியாய் வீட்டின் ஓர் மூலையில் பிரேதம் போன்று விழுந்து கிடந்த பரிதாபகரமான காட்சியைக் கண்டாள்!

"பங்கஜம்! உனக்கும் இக்கதி வந்ததா?" என்று ஓலமிட்டாள் விசாலாட்சி.

"அக்கா! பாழாய்ப்போன சாமிக்கு நேற்றுத்தானே கடன்பட்டுப் பஞ்சாமிர்த பாலபிஷேகங்கள் செய்துவைத்தேன்; இன்று என்னை இப்படியாக்கி விட்டதே! அந்தத் தெய்வத்துக்குக் கண் பொட்டையாய்ப் போய்விட்டதே" என்று கதறினள்

பரிதாபமிகுந்த பங்கஜம்!—இந்தக் கண்றுவியை அதிகமாய் வளர்த்த நாம் விரும்பவில்லை கடைசியாக "என்னவோ உன் தலைவிதி இப்படி" என்று ஆறுதல் கூறிவிட்டு விசாலாட்சி பிரிந்தாள். 'கோவிலில் நடந்த அர்ச்சனை அபிஷேகங்களும், பட்ட ரின் வாய் நிறைந்த வாழ்த்துதலும், கௌளியின் சாட்சியமுங் கூட பங்கஜத்தின் விஷயத்தில் பயனற்றனவாய்ப் போய்விட்ட னவே' என விசாலாட்சி எண்ணமிட்டுக்கொண்டு சென்றதில் ஒரு மிகைப்பாடும் இல்லையே!

அதிலிருந்து மாதம் 6 சென்றது. இக்காலங்களில் பாவம்! பங்கஜம் என்னென்ன பாடுகள் பட்டிருப்பாளென்பதை நாம் கூறுவதெனில் மிக விரியும். எங்ஙனமாயினும், மறுமணம் மறுக் கப்பட்டிருக்கும் சமூகத்தில் தோன்றியவளான நமது பங்கஜத் தின் நிலைமை மிகமிகப் பரிதாபகரமானதே என்பதை நேர்மை யுடைய எவரும் மறுக்க இயலாது.

நேயர்களே! கடைசியாக இன்னும் ஒரு செய்தியும் கேட்டு விடுங்கள். திருநெல்வேலியில் பொன்னம்பலம்பிள்ளை ஓர்நாள் மத்தியானம் சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வந்தபோது தினசரிப் பத்திரிகை யொன்றைக் கொண்டுவந்து தன் மனைவியிட மீந்து, அதிலிருந்த ஓர் விஷயத்தைச் சுட்டிக்காட்டிப் படிக்கும்படி கூறி னார். அவ்விஷயத்தைப் பத்திரிகையிலிருந்தபடியே கீழே தரு கின்றோம்.

## சீயாழியில் கொடுங்கொலை.

### சகோதரியைக்கொன்ற சகோதரன்.

சீயாழி, செப் 18.

இன்று காலை, இவ்வூர் மேலவீதியின்——லக்கமுள்ள வீட் டில் தூக்கிட்டுக்கொண்டு மாண்டிருந்த ஓர் பெண்ணின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது.

விவரம் பின் வருமாறு:—

இறந்தப்பெண் தொண்டைமண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்தவள். வயது 17. பெயர் பங்கஜம். அவளது கணவர் சில மாதங்களுக்கு முன்னர் காலமாகிவிடவே அவள் விதவையானாள்.

விதவைகள் எனப்படுவோர் அனுசரிக்கவேண்டுமென ஏற்படுத்தப் பட்டிருக்கும் சட்டதிட்டங்களை யெல்லாம் அவள் ஒழுங்காகவே அனுசரித்து வந்தாள். நேற்றிரவு இவ்வூர் மிராசுதாரின் வீட்டில் நடந்த கல்யாண ஊர்வலம் மேலவீதியிலுள்ள அப்பெண்ணின் வீட்டருகில் வந்தபோது, தெருவை நோக்கியவண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் ஓர் சிறிய ஜன்னல் வழியாக ஷை விதவைப் பெண் பங்கஜம் என்பாள் வீட்டினுள்ளிருந்த வண்ணம் அவ்வூர்வலக்காட்சியைக் கவனித்தாள். வீதியில் வந்து கொண்டிருந்தவர்களில் இரண்டொருவர் அதனைக் கண்டார்களாம். இதனையறிந்த அப்பெண்ணின் தமையன் கோவிந்தசாமி யென்பவன் மனம் பொறாது, அன்றிரவு அவள் அயர்ந்து தூங்குகையில் அவள் வாயில் துணியை அடைத்துக் கழுத்தில் கயிற்றைச் சுருக்கிட்டு மாட்டித் தூக்கிட்டுக் கொன்றுவிட்டான். கொலையாளி கைதியாக்கப்பட்டான். இன்ஸ்பெக்டரிடம் அவன் கொடுத்த வாக்குமூலத்தில், தன் தங்கை கைம்பெண்ணின் கட்டுப்பாட்டிற்கு மீறி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தது தகாததும், தனது குடும்பத்தின் நற்பெயருக்குப் பங்கம் விளைவிக்கத்தக்கதுமாகுமெனக் கருதியதால் அவளைத் தூக்கிட்டுக் கொன்றுவிட்டதாகக் கூறினனும். விசாரணை நடைபெறும்.

அச் செய்தியைப் படித்தவுடன் விசாலாட்சி, மாதர் மறுமணத்தைப் பற்றி என்ன முடிவுக்கு வந்திருப்பாளென்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்ள விட்டுவிடுகின்றோம்.

ஐயோ! வைதீகமே! ஐயோ! வைதவ்வியமே!

---

# படுக்கையறையில் சீர்திருத்தம்.

தற்போது எல்லா சிவாலயங்களிலும் பரமசிவனுக்கென்று ஓர் படுக்கையறை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. அதில் இரவு சாப்பாடு, தாம்பூலம் தரித்தல் ஆகியவை முடிந்ததும் பூசை செய்கின்ற ஐயர் கருணை கூர்ந்து எம்மாண்டவனாகிய பரமசிவனையும் பார்வதியையும் கூட்டிக்கொண்டு அடைக்கின்றார். அடைப்பதோடு நில்லாமல் தாம்பூலம், புஷ்பம், பழம், பன்னீர் முதலிய

பொருள்களும் வைக்கப்படுகின்றன. இதனை நூற்றுக்கணக்கான வருஷங்களாக எல்லா சிவன்களும் ஏற்று வந்தார்கள். ஒருவரா வது போதுமென்றோ போதாதென்றோ கூறவில்லை. ஆனால் நனி நாகரிகம் சுடர்விட்டுக் கதிர் பரப்பி மிளிர்கின்ற இந்த இருபதாம் நூற்றாண்டிலே எத்தனையோ வித விதமான அபூர்வ சாமான்கள் கிடைக்கின்ற இந்தக்காலத்திலே சாதாரணமான வெற்றிலை பாக்கு சந்தனம் புஷ்பம் இவற்றைக்கொண்டு திருப்திப்படுவது இய லுமா? ஆகவே ஆசை பிடித்த ஒரு தென்னாட்டுச் சாமி இரவு அதன் தரும கர்த்தாவின் கனவில் தோன்றி "ஏ! பக்தா! என்னு டைய படுக்கையறைக்கு இப்போது வைக்கின்ற பொருட்கள் போதாது. அவைகளெல்லாம் பல நூற்றாண்டுகளாக வைக்கப் படுகின்றவைகளாம். எப்போதும் ஒருவன் ஒரு பொருளையே உப யோகப்படுத்திக் கொண்டிருக்க முடியாது? மேலும் விதவிதமான பல மேனாட்டுச்சாமான்கள் கிடைக்கும்போது ஏன் பழைய சாமா ன்கள் வேண்டும்? ஆகவே இனிமேல் எமது படுக்கையறையில் ஒரு எலக்டிரிக் விசிறி, பாரிஸ் ஸெண்டு 1 புட்டி (பெரும்பாலும் ஹெய் கோ அல்லது பாம்பையாவாயிருக்க வேண்டும்.) ஒரு பெரிய நிலைக் கண்ணாடி, ஒரு சீப்பு, ஒரு புட்டி காமனீய ஆயில், ஹிஸ் மாஸ் டேர்ஸ் வாய்ஸ் கிராமபோண் (போர்ட்டபிள். சிங்காரம் ததும்பும் "மானே உன் மேல் மையலானேன்" "கட்டாணி முத்தே என் கண்ணாட்டியே" "மோகலாகிரியானதினாலே நான்" "காமசுந்த ராங்கி உனது" என்பவை போன்ற பிளேட்டுகளுடன்) 2 சைனு டிஷ் நிறைந்த தண்ணீர், நல்ல சூரத்துப் பன்னீர், சலவைக் கல்லி னால் செய்த சில நிர்வாணப் பதுமைகள் முதலியன வைக்க வேண் டும். எனது இந்த விருப்பத்தை 3 நாட்களுக்குள் நிறைவேற்றி வைக்காவிட்டால் உன்னை மூச்சைப்பிடித்துக் கொன்றுவிடுவேன் என்று கூறினராம். அந்த தர்ம கர்த்தா இங்கிலாந்துச் பிரான்ஸுக்கும், சூரத்துக்கும் ஏ லை ய விடங்கட்கும் கொடுத்திருக்கிறார். இதனைக் கண்டு தென்னிந்தியாவி சாமிகளும் தத்தம் அறைகளையும் சீர்திருத்தம் செட் மென்று வற்புறுத்த நிச்சயித்துள்ளனராம். மணமா ணக்கமிப்படியிருக்க பிரம்மசாரிகளான சாமிகளும், களாக அம்மன்மார்களும் என் செய்வார்களோ? (

---

# பலதிரட்டு.

## சிவபெருமான் சுயமரியாதையில் சேர்ந்துவிட்டார்.

(நாரதர் எழுதுகிறார்.)

கைலாசத்தில் குடியேறியிருக்கிற ஜனங்களின் நிலைமையைப் பற்றி நண்பர் ஒருவர் கேட்டார். கைலாசத்தில் இன்ன ஜாதியென்பதில்லை; இன்ன மதமென்பதில்லை. இந்தியா தேசத்தில் எத்தனை பேதமுள்ளவர் இருக்கின்றனரோ அப்படியேதான் அங்கு மிருக்கின்றது. சிவபூசை செய்கிறவர்களும் அங்கு குடியேறு கிறார்கள்; கள்ளுப் பீப்பாயைக் க[illegible]விசெய்கிறவர்களும் அங்கு வருகிறார்கள். பார்ப்பனரும் வருகின்றனர்; பறையரும் வரு கின்றனர். இவர்களெல்லாரும் அங்கு குடியேறி இருக்கிறார்க ளாயினும் எல்லாரும் ஒன்றாகத்தானிருக்கவேண்டும்; ஒன்றாகத் தான் எல்லாம் விபூதி பூசியோ தருமம் செய்தோ சிவபூசை செய்தோ ருத்ராக்ஷம் கட்டியோ அல்லது தெருவிற்கிடக்கும் சாம்பல் தூசி பட்டோ சிவா என்று சொல்லியோ முக்திக்கு வந் தவர்களாதலால் ஒருவரைப்போல மற்றவர் இல்லை. என்றாலும் முக்தியுலகத்தில் வித்தியாசமில்லை யென்று சட்டமிருப்பதால் இவர்கள் எல்லாரையும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வாக நட த்த முடியவில்லை. இப்போது புதிதாகக் குடியேறிய ஆஸ்திகர் களும் காங்கிரஸ் வாலாக்களும் ஜாதிவித்தியாசம், ஒழுக்க வித்தியா சம், ஆசார அனுஷ்டான வித்தியாசத்துடன்தான் இங்கு நடத் தப்படவேண்டுமென்றும் இல்லாவிட்டால் சத்தியாக்கிரகம் செய் வோமென்றும் கூறுகிறார்கள். ஆனால் புதிதாக வந்திருக்கும் சுய மரியாதைக்காரர் இந்தியாவிலேயே இருக்கும் வித்தியாசங்களை [illegible]ழித்துச் சம உரிமை வேண்டுமென்று பெரும் போராட்டம் [illegible]க்கிறபோது இங்கிருக்கிற உரிமையை விடக்கூடாதென்று [illegible] பிடிக்கின்றனர். சிவபெருமான் "முக்தி யுலகத்தில் வித்தி[illegible] [illegible]டையாதென்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். [illegible]ரும் சரிநிகர் சமானந்தான்; வித்தியாசமில்லை" என்று [illegible] கூறிவிட்டார். இதனால்தான் சிலர் சிவபெருமான் [illegible]தக் கட்சியில் சேர்ந்துவிட்டாரென்று சொல்கிறார்கள். [illegible]நாட்டில் சுயமரியாதை இயக்கம் வர வர உரம்பெற்று

வருவதற்கு சிவபெருமான் அருள்சுரந்து வருகிறபடியாலும் அவர் இதில் சேர்ந்துவிட்டாரென்று பலர் கருதுகிறார்கள்.

## கடவுளுக்கு ஊட்டி வாசம்.

சென்னை கவர்ண்மெண்டார் கோடைகாலத்தில் வெப்பம் பொறுக்கமாட்டாமல் ஊட்டிக்குப் போகிறார்கள். இந்தியா கவர்ண்மெண்டார் சிம்லாவுக்குப் போகிறார்கள். பர்மா கவர்ண்மெண்டார் மேய்மோவுக்குச் செல்கிறார்கள். பொது ஜனங்கள் கொடைக்கானல், குற்றாலம் போன்ற இடங்கட்கு ஓடுகிறார்கள். கோவில்களிலிருக்கிற கடவுள்கட்கு வசந்தோற்சவம் கொண்டாடப்படுகிறது. வசந்தோற்சவத்திற்குச் செலவு ஏராளமாக ஆகிறது. என்றாலும் அதிகமான குளிர்ச்சிக்கு மார்க்கமில்லை. ஒரு வாரம் பத்துநாள் தான் வசந்தோற்சவத்தில் சுகம் இருக்க முடிகிறது. ஆதலால் இந்த சுவாமிகளை யெல்லாம் கார்களில் ஏற்றி ஊட்டிக்கு அனுப்பி வெயில்காலத்தை கழித்துவிட்டு வரும்படி செய்யலாம். தரும கர்த்தாக்களும் பக்தர்களும் இதற்கொரு ஏற்பாடு செய்தல் நல்லதல்லவா? பங்குனிச் சித்திரை வைகாசி ஆனி வரை நான்கு மாதங்களில் சுவாமிகள் எல்லாம் ஊட்டிக்கு அனுப்பப்படவேண்டும். அப்பால் அதனதன் யதாஸ்தானத்துக்கு வந்துவிடலாம். மனிதரைப் போலத்தானே கடவுளும். மனிதருக்கு சுகவாசம் தேவைப்படுவதுபோலவே கடவுளுக்கும் தேவையிருக்கும். ஆனால் அவருக்கு வாயில்லாதபடியால் கேட்கமாட்டார். உண்மையான பக்தர்கள் ஊட்டியில் பங்களாக்களைப் பிடித்து சுவாமிகளைக் கொண்டுபோய் வைத்து வென்னீர் முதலிய அபிஷேகங்களைச் செய்து காப்பாற்றிக்கொண்டு வரலாம்.

## பெருமாள் எந்த நாமம் போட்டிருந்தார்?

தமிழ் நாட்டிலிருக்கிற முக்கியமான கோயில்களில் பெருமாளுக்கு எந்த நாமம் போடுகிறதென்பதில் சண்டை ஏற்படுவதும் கோர்ட்டுக்குப் போய் வழக்காடுவதும் வடகலை நாமத்தை அழித்துத் தென்கலை நாமம் போடுவதும் தென்கலையை அழித்துவிட்டு வடகலையைப் போடுவதுமாக நடைபெற்று வருகிறது. இதனால் கோர்ட்டுகட்கும் பெருங் கஷ்ட மேற்பட்டு அனாவசியமாகப் பல

வேலைகளேற்படுகின்றன. இதற்கு ஒரே தீர்ப்பாக பரமபதத்தில் பாம்பின் மேற் படுத்திருக்கிற பெருமாளை நேரில் பார்த்து அவர் எந்த நாமம் போட்டிருக்கிறாரென்பதைத் தெரிந்துகொண்டு வரும்படி ஒரு கமிஷன் ஏற்படுத்தினால் நன்மையாக இருக்கும். இதற்கு ஆகும் செலவை திருப்பதி, சீரங்கம் போன்ற கோவில்களின் தலையில் போட்டுவிடலாம். ஷை கமிஷனில் திருவாளர்களான சத்திய மூர்த்தி, எம். கே ஆச்சாரியார், ராஜா பகதூர் கிருஷ்ணமாசாரியார் ஆகியோர்களின் பெயர்களையும் சேர்க்க வேண்டுமென்று சிபார்சு செய்கிறோம்.

## கடவுளின் கல்யாண ஊர்வலம்.

கல்யாணம் நடக்கிறபோது ஊர்வலம் நடப்பது வெகுநாளைய வழக்கம். பழய காலத்தில் ரதங்களில் வைத்து ஊர்வலம் நடத்தினார்கள். பிறகு ரதங்களிலும் குதிரை சாரட்டிலும் வைத்து நடத்தினார்கள். இப்போது கல்யாண ஊர்வலங்கள் யாவும் அழகான மோட்டார்களில் வைத்து நடத்தப்பெறுகின்றன. இந்த முறை சிவபெருமான் சுப்பிரமணியர் முதலிய தெய்வங்களின் கலியாணங்களில் கையாளப்படாத காரணமென்ன? கோயில்களில் வருஷந்தோறும் சுவாமிகட்குக் கல்யாணங்கள் நடைபெற்று வருகின்றன. நகைகள் விளக்குகள் நடைமுறைகள் முதலியவற்றில் நவீன முறைகள் கையாளப்பட்டாலும் கல்யாணம் முடிந்தவுடன் சுவாமி—அம்மன் ஊர்வலத்தில் பழய முறைதான் கையாளப்படுகின்றது. நல்ல நல்ல மோட்டார் கார்கள் வந்திருக்கின்றன. அதில் சுவாமிகளை வைத்து நன்றாக அலங்காரம் செய்து ஊர்வலத்தை நடத்தலாமல்லவா? தேர்களைப் பெரிதாகச் செய்துவைத்துக்கொண்டு இழுப்பதற்கு ஆளகப்படாமல் திண்டாடுகின்றனர். திருவண்ணாமலையில் தேரிழுக்க ஆளகப்படுவதில்லை. ஆனால் அந்த ஊர் போலீசுக்காரர் வீதியில் போகிறவர்களையெல்லாம் விரட்டிப் பிடித்துத் தேரிழுக்கச் சொல்கிறார்களென்று சொல்லப்படுகிறது. இதற்காகப் பணச் செலவும் கஷ்டமும் பலவிடங்களிலும் உண்டாகின்றன. சாமி தூக்குவதற்கு அநேக இடத்தில் ஆளே அகப்படுவதில்லை. மோட்டார்கார்களில் வைத்தே அலங்காரம் செய்துவிட்டால் துன்பம் ஒருவாறாக ஒழிந்து

விடக்கூடும். நவீன முறையாகவும் சுலபமாகவும் இருக்கும். இம் முறையை தருமகர்த்தாக்கள் கையாள முன்வருவார்களா?

## அரசமரத்துக்குப் பிள்ளை எங்கே?

“அரசமரம் ஆண். வேப்ப மரம் பெண். இவ்விரண்டுக்கும் கலியாணம், செய்து வைத்தால் செய்துவைப்பவர்களுக்குக் குழந்தை பிறக்கும்; வீட்டில் கல்யாணங்கள் நடைபெறும்; செல்வம் பெருகும்; இன்னும் சொல்லப்பட்ட எல்லா நன்மைகளும் பெருக உண்டாகும்” என்பது ஐயரின் உபதேசம். இதை நம்பியாகிவிட்டது. ஐயருக்கும் சோமன் ஜோடி தக்ஷிணையெல்லாம் வழங்கிக் கல்யாணங்கள் நடைபெறுகின்றன. வீட்டிலே பிள்ளைக்குக் கல்யாணம் செய்யவகையில்லை. 30,000—35,000வேண்டியிருக்கிறது. மரம் மாதிரி மனிதன் வளருகிறுன். கல்யாணத்துக்கு வகையில்லை. மரத்துக்குக் கல்யாணம் செய்ய மனிதன் முன் நிற்கிறுன். அதில் எனக்கொரு சந்தேகம் தோன்றுகிறது. அரசமரத்துக்கும் வேப்ப மரத்துக்கும் கல்யாணம் செய்தார்களே அவற்றுக்குப் பிள்ளை பிறக்கவில்லையே. கல்யாணம் செய்யுமுன் இருந்த நிலையிலேதானே இரண்டு மரமும் இருக்கின்றன. இந்த இரண்டு மரங்களையும் இராமேசுவரத்திற்கு அனுப்பித் தீர்த்தமாடச் செய்வது நல்லதல்லவா? ஏன் அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் செய்துவைத்த பணக்கார பிரபு இரண்டு மரத்திலும் இரண்டு வாதுகளையாவது வெட்டி ராமேசுவரம் கோடிக் கரைக்குக்கொண்டு போய்த் தீர்த்தமாடச் செய்யக் கூடாது.

## கல்யாணத்தைப் புதுப்பித்தல்.

கிறிஸ்துமதம் மகமதிய மதம் புத்தமதம் போன்ற மதஸ்தர்கள் கல்யாணம் செய்து கொள்வதும், பிடிக்காவிட்டால் விலக்கிக் கொள்வதும் சாதாரண வழக்கமாகக் கொண்டிருக்கிறுர்கள். ஹிந்துக்களில் இவ் வழக்கமில்லை. ஆனல் மற்ற மதக் கடவுள்களுக்கு அவர்கள் உயிருடனிருந்தபோது செய்துகொண்ட கல்யாணந்தானுண்டு. இந்துக் கடவுள்களுக்குச் செய்த கல்யாணம் வருஷந்தோறும் கான்சலாகி வருகிறது. ஆதலால்தான் கோயில்களில் வருஷந்தோறும் சாமியையும் அம்மனையும் வைத்துத் திருக்கல்யா

ணம் செய்கிறார்கள். வருஷந்தோறும் தாலி செய்து கட்டுகிறார்கள். சுவாமிகளின் கல்யாணம் தானாகவே ஒரு வருஷத்தில் கான்சலாகிவிடுகிறது. உடனே புதுப்பித்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் அந்த சாமியின் மனிதர்களுக்கு மட்டும் கட்டிய தாலி செத்தால்தான் ஒழியும். கழற்றி யெறிய இஷ்டப்பட்டாலும் கல்யாணம் கான்சலாகாது. இதன் ரகசியம் என்ன? மனிதருடைய கல்யாண விலங்கை வெட்டிக்கொள்ள முடியாததால் புருஷன் மனைவியர் படும் பாடு பலவிடங்களில் கொஞ்சமல்ல. பரீக்ஷார்த்தமாகப் பன்னிரண்டு வருஷத்திற்கொருதரமாவது செய்து கொண்ட கல்யாணத்தைக் கான்சல் செய்து பார்த்தால் நிலைமை தெரியவரும். அநேகமாகப் பிரிந்த ஜோடி மறுபடியும் சேராது. அவ்வளவு தூரம் பொருத்தம் பார்த்து ஹிந்துக் கல்யாண ஜோடிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

## ஸ்தல யாத்திரை.

மகா-௱-௱-ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலிய அடியார்களின் சரித்திரங்கள் ஒவ்வொரு கோயிலிலும் அந்தந்த ஊர் தலபுராணங்களின்படி ஐவேசுக்குத் தக்க வகையில் நாடகரூபமாக நடித்துக் காண்பிக்கப்படுவதை யாவரும் அறிந்திருக்கலாம். திருவிழாக்கள் பெரும்பாலும் இதை யொட்டித்தான் நடைபெறுகிறது. காவிரிபூம்பட்டினத்தில் பட்டணத்தார் விக்கிரகத்தைக் கடற்கரைக்குக் கொண்டுபோய் அவர் கப்பல் யாத்திரை செய்ததாகக் கப்பலுங் கட்டி ஓட்டுகின்றனர். இந்த மாதிரி திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு சீகாழியிலிருந்து அவர் சென்று யாத்திரை செய்த ஊரெல்லாம் சுற்றி ஒரு பெரிய திருவிழா செய்யலாம். ஏமாந்த ஜனங்களிடம் பொருளும் கொள்ளையடிக்கலாம். ஏன் இந்தப்பணிக்கு ஆளகப்படவில்லை? பணக்கஷ்டமான நேரத்தில் இம்மாதிரி திருவிழாக்களால் சாம்பல் பித்தர்கள் சுகமாக வாழ வழிபார்ப்பதற்கு யோசித்துக் கொண்டிருப்பதாக ஒருவர் சொல்கிறார். எவ்வளவு தூரம் உண்மையோ?